DIGITIZED

Q7w
N12
12087

பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்.

இஃது,

# நாலிமாம்கள் பிரபந்தம்.

கீழக்கரை அல்ஆலிமுல்பாழிலு மௌலானா செய்யிது
முஹம்மது மாப்பிள்ளை லெப்பை ஆலிம்சாஹிபு
றஹிமஹுல்லா அவர்களால் கோர்வை செய்யப்
பட்டுள்ள மறுகிபுல் மவாஹிபு என்னும்
அறபுத்தமிழ் கித்தாபை

மேலப்பாளையம் கா. ஹஸனலிப்புலவர்
அவர்களால்,

தமிழ் லிகிதத்தால்
எழுதிவித்து,

மதறாஸ், திருவல்லிக்கேணி.
மொ. அ ஷாஹுல்ஹமீது லெப்பை,
அவர்களாற்றமது,
ஷாஹுல்ஹமீதிய்யா அச்சியந்திரசாலையில்,
பதிப்பிக்கப்பட்டது.

1912.

விலை. ரூ. 1—8—0

ரிஜிஸ்ட்ர் காப்பிரைட்டு.

97ம
N/2

120871

779
297.2

இந்த நாலிமாம்கள் சரித்திரமென்னும் புஸ்தகத்தி
லடங்கி யிருக்கின்ற பாடங்கள், பிரிவுகள்
ஹிக்காயத்துகள் ஆகிய, இவைகளைக் காட்டும்

# அட்டவணை.

—:*:—


1 உரைசெய்த வரலாறு.

4 முதலாவது பாடமாகிறது இமாம் அபூஹனீபா றலியல்லாகு அன்குவுடைய பிரசங்கத்திற் பேசுகிறது, அதிற் பனிரெண்டு பிரிவுண்டும்.

5 அதில், முதற்பிரிவு, அவர்கள் பிறப்பும், வயதும், வபாத்தும்

6 இரண்டாம்பிரிவு - அவர்க ளவதாரம்.

8 மூன்றாம்பிரிவு - அவர்கள் உஸ்தாதுமார்கள், சீடர்கள்.

16 நான்காம்பிரிவு - அவர்கள் மதுகபுண்டாக்கியதும், அவர்க ளாளியகருத்தும்.

18 ஐந்தாம்பிரிவு - அவர்களை மற்றும் உலமாக்கள் துதித்தது.

30 ஆறாம்பிரிவு - அவர்கள் தெண்டிப்பிலும், இபாதத்துகளிலும்

34 ஏழாம்பிரிவு - அவர்கள் வறஉம், ஸுஹுதும்.

40 எட்டாம்பிரிவு - அவர்கள் நன்கொடையிலும், சிந்தையின் தயாளத்திலும்.

42 ஒன்பதாம்பிரிவு - அவர்கள் நிறம் குணம் விடுமொழி

53 பத்தாம்பிரிவு - தாமதமன்றி சுவாலுக்கு பாபுகொடுத்தல்.

62 பதினோராம்பிரிவு - சிலராஜாக்களின் அனியாய வில்லங்கத்திலே துன்பத்தை யனுபவித்தல்.

[illegible] பனிரெண்டாம்பிரிவு - அவர்கள் வபாத்திலும், அதின் பின்னால் நடந்ததிலும்.

74 இரண்டாம்பாடம் - இமாமாலிக்கு றலியல்லாகு அன்குவின் பிரசங்கத்தைப் பேசுகிறது; அதில், ஒன்பது பிரிவுண்டும்.

௭௫ முதற்பிரிவு அவர்கள் சிறப்பும், வயதும், வபாத்தும்.

76 இரண்டாம்பிரிவு - அவர்கள் வம்மிஷத்திற் பேசுகிறது.

௭௭ மூன்றாம்பிரிவு - அவர்கள் உஸ்தாதுகளிலும், சீடரிற்பேரிலும்.

78 நான்காம்பிரிவு - அவர்களை மற்றும் உலமாக்கள் துதித்தது.

84 ஐந்தாம்பிரிவு - அவர்கள் ஹதீதுடைய இல்மை வலுப்பமாக்கி வைத்தல்.

86 ஆறாம்பிரிவு - அவர்களுடைய வரிசைகளிலும், சங்கையான சீலங்களிலும்.

90 ஏழாம்பிரிவு - அவர்கள் நன்கொடையிற் பேசுகிறது.

91 எட்டாம்பிரிவு - ஹாரூன் றஷீதுடைய கிலாபத்திலோ ருத்தியகார மனுடனால் அவர்களுக்கு நேரிட்ட துன்பம்.

102 ஒன்பதாம்பிரிவு - அவர்கள் வபாத்திலும் அதற்குப்பின்னால் நடந்த சிறப்பிலும்.

105 மூன்றாம்பாடமாகிறது, இமாம் ஷாபிஇய்யி றலியல்லாகு அன்குவின் பிரபந்தத்திற் பேசுகிறது, அதில். இருபத்தொரு பிரிவுண்டும்.

106 முதற்பிரிவு - அவர்கள் நாட்டுவளப்பம், வயது, வபாத்து.

110 இரண்டாம்பிரிவு - அவர்கள் தலைமுறையில்.

118 மூன்றாம்பிரிவு - அவர்களுடையிலும், மோதிரத்தின் நக்ஷிலும், கோலமும், குணமும் அழகாயிருப்பதிலும்.

120 நான்காம்பிரிவு - அவர்கள் மனைவி மக்களில்.

122 ஐந்தாம்பிரிவாகிறது - அவர்கள் குறுஆன் ஓதினதிலும், இல்மு படித்ததிலும்.

127 ஆறாம்பிரிவு - அவர்கள் உஸ்தாதுகள், சீடர்கள்.

141 ஏழாம்பிரிவு - அவர்கள் மாலிக்கு இமாமிடம் இல்முபடித்தது.

149 எட்டாம்பிரிவு - அவர்கள் யமன்ராச்சியத்துக்குப் போனதும் அவ்விடத்திற் சில கோளர்களால் ஹாறூனுர்றஷீதிடம் இருக்குராச்சியத்திற்குத் தளைபோடப்பட்டவர்களா யேகினதும்.




MADRAS


164 ஒன்பதாம்பிரிவு - அவர்களுக்கும், காஜீமுஹம்மதிபுனில் ஹசனுக்கும் நடந்த சுஆல்-ஜவாபிலும் சிலஹிக்காயத்துகளிலும்

188 பத்தாம்பிரிவு - அவர்கள் இருக்கிற் பள்ளிக்கூடப்போட்டோதிக்கொடுத்தது.

192 பதினோராம்பிரிவு - அவர்கள் கோர்வைசெய்த கித்தாபுகளுமதின் பெயர்களும்.

207 பனிரண்டாம்பிரிவு அவர்களை மற்றும் உலமாக்கள் துதித்தல்

216 பதின்மூன்றாம்பிரிவு - அவர்களின் கீர்த்தி மேலாம்பரமாயிருப்பதில்.

240 பதினாலாம்பிரிவு - அவர்களின் அக்கீதாவில்

255 பதினைந்தாம்பிரிவு - அவர்களால் இல்மின்வரிசைகளிலேதுலங்கிய சொற்களிலும், அவர்கள் ஹுக்குது வறஉ வஹ்து சற்குணங்கள் இவைகளிலும்.

272 பதினாறாம்பிரிவு - அவர்கள் வைத்தியம், நட்சேசத்திரக்கணிதங்களில்.

279 பதினேழாம்பிரிவு - அவர்களின் முகக்குறி யுண்மையால் சரிவொத்துச் சமைந்தது.

287 பதினெட்டாம்பிரிவு, அவர்கள் அற்புத வாக்குகளிற் சிலது.

291 பத்தொன்பதாம்பிரிவு - அவர்களின் திகாயத்தில்.

202 இருபதாம்பிரிவு - அவர்கள் சொன்ன பைத்துகளிற் சிலது.

300 இருபத்தோராம்பிரிவு - அவர்கள் மரணவியாதியிலும், வாய்மொழியிலும்.

313 நான்காம்பாடமாகிறது - இமாம் அஹ்மதுபுனு ஹன்பல் றலியல்லாகு அன்குவுடைய பிரபந்தத்தைப் பேசுகிறது அதிலெட்டுப் பிரிவுண்டும்.

314 முதற்பிரிவு அவர்கள் பிறந்ததிலும், வபாத்திலும், வயதின் கணக்கிலும்.

315 இரண்டாம்பிரிவு-அவர்களின் வங்கிஷத்திற் பேசுகிறது.

316 மூன்றாம்பிரிவு-அவர்கள் உஸ்தாதுமார்களிலும், சீடர்களிலும்

18 நான்காம்பிரிவு - அவர்களை மற்றும் உலமாக்கள் துதித்தது

24 ஐந்தாம்பிரிவு - அவர்களுடைய வறஇலும், ஸுஹ்துதிலும்,

0 ஆறாம்பிரிவு - அவர்களின் தகுதி வலுப்பமா யிருந்ததில்.

338 ஏழாம்பிரிவு - குறுஆனைப் படைப்பென்று சொல்லும்படி யந்நா ஸிராஜாக்க ளவர்களை வம்பித்தது.

350 அவர்கள் வபாத்திலும் பின்னும் விழிப்பிலும், மனுமிலும், அவர்களுக்கு நடந்த சிறப்பிலும், மற்றப் பேர்கள் கண்டதிலும் பேசுகிறது.

369 மதுகபுகளைத் துபர்வதி னிபந்தனை.

அட்டவணை - முற்றிற்று.

இந்தப் புத்தகம் தேவையானவர்கள் பெற்றுக்கொள்ளுமிடம்.

இங்ஙனம்:

மொ. அ. ஷாஹுல்ஹமீது கம்பெனி.

எம். எ. ஷாஹுல் ஹமீதிய்யா பிரஸ்.

நெ. 93 பள்ளப்பன் தெரு,

திருவல்லிக்கேணி, மதறாஸ்.

பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்.

# நாலிமாம்கள் பிரபந்தம்.

## முகவுரை

எல்லாப்புகழும் அல்லாஹுத்தஆலாவுக்காயிருக்கும் அவன் எப்பேர்க் கொத்தவனென்றால் நபிமார்களுடைய இல்முகளை அவர்களில் நின்றும் விடுமுதலாக்கி அந்த இல்மைக் கொடுக்கப்பட்டவர்களை அல்லாஹுத்தஆலா சுவர்க்க லோகத்தில் எழுநூறு தறஜாவாலுயர்த்துவானென்றும் தன்னுடைய மகிமைதங்கிய குறுஆனீ மஜீத், புறுக்கானீ ஹமீத் என்னும் திருவசனத்தில் திருவுளமானபடிக்கு அந்தப் பறக்கத்துடையவர்களில் நின்றுமவர்களுடைய பதவியை யுயர்த்துவானே அப்படிப்பட்ட நாதாக்களுக்கு அவ்விடுமுதலை அனந்தரமாக்கிவைத்தானே அப்பேர்க் கொத்தவனுமிருக்கும்.

இன்னுமவனுடைய திருத்தூதராகிய முஹம்மது நபிஸலல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் தங்கள் திருவாயால் தங்கள் உம்மத்திலுள்ள உலமாக்களாகிறவர் முன்னுள்ள நபிமார்களைப் போலாயிருக்குமென்று திருவுளமாகிய தங்கள் பூராயமான திருவசனத்தினுண்மையாளரான நமக்கெல்லாம் நாயகமாகிய முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவ ஸல்லமவர்கள் மீதும், சொல்லிலும் செயலிலும் உண்மையாளர்களாகிய அவர்களுடைய கிளையார்கள் மீதும், குறுஆனுடைய தலீல் களைக்கொண்டு அத்தாட்சி தேடும்படியான அவர்களுடைய தோழர்கள் மீதும், குறுஆனைக்கொண்டு ஈமான்கொண்டவர்களை நேர்வழிகாட்டும் தாபிஈன்களென்னும் நபிநாயகமவர்களைத் தொடர்ந்தவர்கள் மீதும் அல்லாஹுத்தஆலா ஸலவாத்தும் சலாமும் சொல்லுவானாகவும், இன்னும் அல்லாஹுத்த ஆலா அவர்களுடைய பறக்கத்தினாலும், இதனடியில் பிரஸ்தாபிக்கிற பிரபந்தத்துக்குடைய நான்கு இமாமவர்களுடைய பறக்கத்தினாலும் நம்மனைவர்களையும் ஜெயம்பெற்றபேர்களில் நின்றும் கியாமத்தில் இல்லி

னென்னும் சுவர்க்கத்தைக் கொண்டு பாக்கியம் பெற்றபேர்களா டாக்குவானாகவும் ஆமீன் வல்ஹம்துலில்லாஹிறப்பில் ஆலமீன்.

இஃதாகிறது நமக்கெல்லாம்நாயகமாகிய முஹம்மதுமுஸ்தபா றசூல்ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் திருவாயால் தங்கள் உம்மத்திலுள்ள உலமாக்களாகிறது முன்னுள்ளநபிமார்களைப் போலாயிருக்குமென்றருளிச்செய்த திருவசனத்திற்கும், நபிமார்களுடைய பூராயங்களுக்கு அனந்தரகாரர்களாயிருக்குமென்ற அருள் வாக்கியத்திற்கும் பொருள் பொருந்திய மகாத்துமாக்களில் நின்றும் மகாமகிமையும் வலுப்பமும் சிறந்த நான்குமதுஹபுகளையுடைய நான்கு இமாம்களாகிய நாயகம் இமாம் அபூஹனீபா றலியல்லாஹு அன்ஹு 1, இமாம் மாலிக்கு றலியல்லாஹு அன்கு 2, இமாம் முஹம்மதிபுனு இதிரீஸுஷ்ஷாபிஇய்யி றலியல்லாஹு அன்ஹு 3, இமாம் அஹ்மதிபுனு ஹன்பல் றலியல்லாஹு அன்ஹு 4, இந்தநான்கு இமாம்களாகிய நாயகமார்களுடைய மகாமாட்சிமைதங்கிய அற்புதமான நடவடிக்கைகளைப் பேசிவரும் நாலிமாம்கள் பிரபந்தமென்னும் புஸ்தகமாயிருக்கும். வஸல்லல்லாஹு அலாசையிதினா முஹம்மதின் வஆலிஹி வஸஹ்பிஹி அஜ்மஈன் வல்ஹம்து லில்லாஹி றப்பில் ஆலமீன்.

பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்.

இஃது

### மருகிபுல் மவாஹிபு பீ, மனாகிபிஉலில்மதாஹி பென்னும்

## நாலிமாம்களுடைய பிறபந்தம்.

(*)

எழுசீர்க் கழிலடி யாசிரிய விருத்தம்.

பாலுடன்கலந்த பழங்கற்கண்டு வப்பாய்ப்
 பணியுமல்ஹம் துலில்லாஹி
மாலுடன் சலவாத்துடனே சலாமு
 மகுமூது நபிக்கு மந்நபியி
னாலுடனசுஹாபு கட்குமேயுரைத்தே
 யவர்கட்குப்பின் மதுஹபுக
ளாலுடனிலங்கு நாலிமாம்களினேர்
 நடப்பினற்புதங்களை நவில்வாம்.

முகத்தமா.

மதுஹபுகளுடைய இமாம்களின் கீர்த்திகளை விபரிப்பதில் அபேட்சையாக்கப்பட்ட நன்கொடைகளென்று பெயருள்ள இந்தக் கித்தாபால் நமக்கு நாயகமார்களாகிய இமாமுல்அஃலம் அபூஹனீபா றலியல்லாஹு அன்ஹு, இமாமுல் மதீனாஇமா மாலிக்ஹு றயலில்லாஹு அன்ஹு, இமாமுல் முத்தலிபிய்யிஷ் ஷாபிஇய்யி றலியல்லாஹு அன்ஹு இமாமுல் அவ்றசனல் ஹன்பலிய்யி றலியல்லாஹு அன்ஹு ஆகிய, இந்த நாலு இமாம்களினுற்பத்தியையும், பிறப்பையும், வளர்ந்ததையும், கீர்த்திகளையும் சுருக்கமாக அறிந்துகொள்வதற்கு, அறபுப் பாஷையிலிருப்பதல்லாமற் றமிழ்ப்பாஷையில் அதிக விபரமாய்க் காணப்படாதிருப்பதைப்பற்றி, அதிக அபேட்சையுடன் இதை யுரைசெய்யவேண்டுதல் செய்யப்படுகிறதால், அதற்காக ஏர்ப்பாடாக்கப்பட்ட (தபக்காத்துல்புக்கஹா, றவ்லுல்பாயிக்) இப்பேர்பட்ட கித்தாபுகளிற் றெளிவாகிய இமாம் ஹசன்றஹிமஹுல்லாவுக்குடைய (மஃதினுல்யவாகீதுல்முல்தமிஆ, பீமனாஹிபில் ஹஇம்மதில் அர்பஆ)

என்கிற கித்தாபிலும், இன்னும் சிலவுறுதியான மன்கூலாத்திலும், தேவையானமட்டில் உரைசெய்வதிலே விரித்தியுரையாய்ச் செய்யாமற்பதங்களையும், அவைகளின் கருத்தையு மாத்திரம் சொல்லி வருகின்றனம். (இன்ஷா அல்லா)

நாலு இமாம்களுக்கும், நாலுபாடமொழிந்து, அதிலொவ்வொருபாடங்களிலும், தேவையானமட்டிற் பிரிவு பிரிவாகச் சொல்லுகின்றனம். அதில், முகத்திமாவென்ற ஒருமுன்மொழியைக் கூறுகின்றனம் (முகத்திமா) அல்லாஹுத்தஆலா குறுஆனிலே திருவுளமாஞன், அந்த நபிமார்களுடைய வாலாறுகளைப் பேசிவருவதிற் புத்திமான்களுக் குறுதியுண்டுமென்பதாம், ஆனபோதே, அந்த நபிமார்களை யனந்திரங்கொண்ட வுலமாக்கள், அவுலியாக்களுடைய வரலாறுகளைப் பேசிவருவதிலும், அவ்விதமென்று துலங்குகின்றன.

இதற்கு அத்தாட்சி யாகின்றது. சூபிய்யாக்களுக்கு உஸ்தாதாகிய அபுல்காசிமில் பஹுதாதிய்யி றலியல்லாஹு அன்ஹு சொன்னதாவது, அவுலியாக்களுடைய வரலாற்றைச் சொல்லுவதால், அல்லாவுடைய றஹுமத் திறங்கும், அல்லாவை திக்கிறு செய்வதால் கல்புகள் வசப்பட்டொடுங்குமென்று, அல்லாஹுத்தஆலா குறுஆனில் றசூல்மாரிற் சிலரைக்காணச் சிலரைத் தறஜாவாயுயர்த்தியாக்கின்றதாய்ச் சொன்னதுபோலே, யுலமாக்களுடைய தறஜாத்தையு முயர்த்தியாக்குவதாய்ச் சொல்லுகிறுன். (இஃலம்) அறி, லட்சத்திருபத்து நாலாயிரம் அன்பியாவில் நின்றுமொருவராகுதல் பானியாகிய துன்யாவிலுள்ள ஒரு வஸ்துவையாகுதல் மக்களுக்கு அனந்திரமாக்கிவிட்டுப் போகவுமில்லை, அவ்விதமனந்திரங்கொள்ளவுமில்லை, அவ்வித மனந்திரங்கொள்வது ஹறுமென்று பிக்ஹுகு ஹகித்தாபிற் சொல்லப்படுகிறது, அஃதேதனென்றல்.

அவர்கள் அனந்திரங்கொள்வது ஹாமென்றுவருமாகில் அனந்திரகாரரி லொருவர் அவர்கள்மவுத்தை ஆசைவைக்க வேண்டியதாய்வரும், நபிமார்மவுத்தை ஆசைவைத்தா லவர்களுடனே காபிராகிவிடுவார்கள் (நவூதுபில்லாஹிமின்ஹா) சக்கரிய்யா அலைஹிஸ்ஸலாம் அல்லாஹுத்தஆலாஇடம் தங்களை அனந்திரங்கொள்ளும் பிள்ளையைக்கேட்டு துஹா இரந்ததெல்லாம் இல்மையும், நுபுவ்வத்தையும் அனந்திரங் கொள்வதற்கல்லாமல் வேறி



ல்லை, அவ்விதம், அன்பியாக்களை அனந்திரங்கொள்ளும் உலமாக்கள் கியாமத்துநாள் வரையிலும் உண்டாகியே வருவார்கள்.

அவர்களில் (முஹக்கிஹு என்றும் - முஜ்தஹிது என்றும்) சிலருண்டாகுவார்கள், அவர்களிற்சிலர் உலமா வுத்துன்யாவென்றும், சிலர் உலமாவுல் ஆகிறுஎன்றும் உண்டாகுவார்கள், இவர்களில், உலமாவுத் துன்யாவில் யாதொரு பேச்சும் கிடையாது. ஆனபோதே, சஹாபாக்களுடைய சமானுக்குப்பிறகு உலமாவுல் ஆகிறுவில், முஹக்கிஹு, முஜ்தஹிதாகிய உலமாக்களில் வந்தவர்களடங்கலில் நின்றும் ஏற்றமாகிய குறித்த நாலுபேர்களல்லாதவர்களைத் துயர்வது ஜாயி சல்லவென்பதைப் பின்னல் எழுதப்படும் (இன்ஷா அல்லாஹுத் தஆலா,)

இந்த நால்வர்களுடைய மதுஹபுகளைத்தொடர்ந்தவர்கள் யாதொருஷக்கன்றியே நேர்வழியானவர்களென்று இஜ்மாவாய்ச் சொல்லப் பட்டிருக்கிறது, இதில், ஒருவரைக்காண ஒருவரை ஏற்றமாக்கிப்பேசுவதும், அதற்காக சில மஸ்அலாக்களில் ஹுஜ்ஜத்தைத்தேடுவதும் (தஹஸ்ஸுபாத்தென்கிற) வம்புத்தனம், கறடுபேசித்திரிவதும் ஜாயிசல்ல, ஆனபோதே, அல்லாஹுத்தஆலா நம்மனைவரையும் அவர்களை முஹப்பத்து வைத்து வலுப்பமாக்கிவைக்கும் சாலிஹீன்கள் கூட்டத்திற் சேர்ப்பாஞகவும் ஆமீன்.

றஹுதுல் பாயிக் கென்கிறகித்தாபில் ஒரு பெரியவரைத்தொட்டும் பேசிவரப்படுகிறது, அவர் சொல்கிறுர் நான் சொர்க்கத்திலிருக்கக் கனவுகண்டேன், அதினடுவில் ஒளிவினுல் ஒருதூணிற்கிறது. அதில் நான்கு ஆண்பிள்ளைகள் நான்கு திசையில் நின்று ஒளிவினுல் நான்கு சங்கிலி வடம்பூட்டி யிழுக்கிறுர்கள்.

அந்தத்தூண் ஒரு அணுப்போலும் நகரவில்லை, அப்போது நான், என்மனதில், ஆ. இஃதென்ன புதுமை இந்த நால்வரும் ஒரு திசையில் நின்றிழுப்பார்களாகில் இலேசாக இழுபடுமேயென்றெண்ணியவ்விடமிருக்கு மலக்குகளில் நின்றுமொருவரிடம், அந்தத் தூணென்னவென்றும், அந்த நால்வர்களாரென்றும் கேட்டேன், அதற்கவர்கள், அந்தத்தூண் தீனில் இஸ்லாமென்றும்,

அந்தநால்வரும் நாலு இமாம்களென்றுஞ் சொன்னார், அப்போது நான் கண்விழித்தேனென்று சொல்லி யுடனே நாலுபயித்துஞ் சொன்னார்கள், அந்தபயித்தின் பொருளாவது.

அபூஹனீபா றஹ்மதுல்லாவாகிறவர்கள் மற்றும் இமாம்களுக்கான முந்தினவர்களாய் இருப்பதற்காய் மற்றோர்களின் இல்முமும், அவர்களின் சொற்களும், இவர்களின் இல்மையும் சொற்களையும், முந்தாது, உன்னும், மாலிக் றஹிமஹுல்லா அவர்களுக்கு அலைகளை யுடையலாகிய ஆழிய கடலைப்போல் யாதொரு மட்டில்லாத இல்முகளைக் கொடுக்கப்பட்டது, இன்னும், ஷாபிஇய்யி றஹிமஹுல்லா அவர்களுக்கு கல்க்குகளுக்கிடையிற் பிரகாசிக்குமே அப்பேர்ப்பட்ட இல்முகளும், தொடர்ச்சையாகிய புகழுமுண்டும், அஹ்மதுபுனுஹன்பல் றஹிமஹுல்லா அவர்களின் உண்மை வாக்குத்திட்டமாக்கப்பட்டதா யிருக்கிறவேளையில் ஹதீதுகளை றிவாயத்துச் செய்ததற்காய் இல்முகளை அவர்களுக்குச் சேர்க்கப்பட்டது.

## முதலாவது பாடமாகிறது.

இமாமுல்அஃலம் அபீஹனீபத்துல் கூபிய்யி றலியல்லாஹு
அன்ஹு அவர்களுடை பிறபந்தம்.

நேரியமறையின் முறையையுமுணர்ந்தே
நிலமிசை நபியவரொழுகும்
காரியங்களையும் விதவிதப்பொருளாய்க்
கனித்தெடுத்த மைத்திடுமறிவா
ராரியர்களிலே யருளுமிமாமுல்
அகுலமென்றெவர்க்கு மேவிளங்கும்.
பேரியமணியாம் ஹனபியிமாமின்
பிரபந்தங்களைப் பகர்ந்திடுவாம்.

## இதிற் பனிரண்டு பிரிவுண்டும்.

அதில் முதலாவது பிரிவு, இமாம் அபூஹனீபா றஹிமஹுல்லாகியவர்கள் பிறப்பும், வயதும், உபாத்துமாயிருக்கும், இரண்டாம்பிரிவு அவதாரம், மூன்றாம்பிரிவு உஸ்தாது மார்கள், சீஷர்கள் நான்காவது பிரிவு மதுஹபு உண்டாக்கியதும், அவர்களின் ஆழியகருத்தும் ஒழுங்கும், ஐந்தாம் பிரிவு மற்றும் பாரவான்க



ளாகிய வுலமா, மஷாயிகவர்களைத் துதித்ததும், ஆறும்பிரிவு தெண்டிப்பும், நடைபழக்கலும், ஏழாவது வறவும், சுஹ்தும், எட்டாவது கொடையும், நற்குணமும், ஒன்பதாவது, விடுமொழிகளும் சைக்கினைவாக்கும், பத்தாவது விரைவாய் ஜவாபு கொடுப்படும், முகக்கோட்டாவாய் நேர்கொடுக்குதலும், பதினொன்றாவது அந்நாளிலிருந்த இராஜாக்களின் விரோதங்களால் துன்பப்பட்டதும், பனிரண்டாவது மவுத்துடைய சமாசாரத்திலும், அதற்குப்பின்னும் நடந்த சிலசங்கதிகளுமாம்.

## முதற்பிரிவு.

அவர்களுடைய பிரசங்கத்தில் பேசப்பட்டதாயிருக்கும்.

இமாம் அபூஹனீபா றலியல்லாஹு அன்ஹுவுடைய பிறப்பும் வயதும், வபாத்தும் கூறுவது, திகதியாற்கணக்கைக் கூறுகின்றஹாபிலு ஜமாலுத்தீன் நஃதீபுல் கமாலிலும், அபுல் அப்பாஸ் அஹ்மதுபுனு குல்லகான் அவர்தாரீஹு என்னும் கித்தாபிலும் பேசிவருகிறார்கள், இமாம் அபூஹனீபா றஹிமஹுல்லா கிஜுறத்து எண்பதாம் வருடத்திற் கூபாராச்சியத்திற் பிறந்தார்களென்றும் ஒரு சொல்லில் அன்பாறென்கிற பல்குராச்சியத்தைச் சேர்ந்த ஊரிற்பிறந்தார்களென்றும். கிஜுறத்து ஒரு நூற்றி யைம்பதாம்வருடம் றஜபுமாதம் பகுதாதில் உபாத்தாகினார்கள் காலிவேலைபார்க்கும்படி, அந்நாளில் இருந்த ராஜாவானவர் அவர்களை வம்பித்துச் சிறச்சாலையிலிட்டு அவ்விடத்திலே தான் வபாத்தாகினார்கள்.

இன்னும், ஒரு ஹசதுக்காரர் அவர்களுக்குப் பாஷாணத்தை யூட்டி அதின் வீறினால் பீஸபீல் மவுத்தாக மவுத்தாகினார்களென்றுச் சொல்லப்படுகிறது, ஜனாசாவுக்குவந்து கூடியஜனங்கள் மட்டடங்காதிருந்ததற்காய் ஐந்து விடுத்தமாகத்தொழு விக்கப்பட்டது, கடைசியில் அவர்கள் குமாரர்ஹம்மாது றஹிமஹுல்லா இமாமாகநின்று தொழுவித்தார்கள், குளுப்பாட்டினது காலில் குலாத்ஹசனுபுனு இமாத்தென்ற இமாமும், இன்னும் சில பெரியோர்களுமாய்க் குளுப்பாட்டித் தீர்மானத்தில் அவர்கள் திருமுகத்தைநோக்கி மிகுந்து சலித்தவர்களாய்ச் சொல்லுகிறார்கள். அல்லாஹுத் தஆலா அவன் றஹ்மத்தையும், மஃபிறத்தை

யும் உங்களுக்குத் தருவானாகவும். முப்பது வருடகாலம் ஒரே தொடுப்பாய் நோன்பு பிடித்தீர்கள், நாற்பது வருடகாலம் இரவில் உங்களிருகண்ணும் உறங்கியிராது உங்களிருபாகமும் தலைகானியை யறியாதவர்களாயிருந்தீர்கள், உங்களுக்குப் பின்வரும் ஆபிதீன்களையும் 'காரிகளையும் உங்கள்போல் வணங்கவும், ஓதவும் ஏலாமையாக்கிவித்துப் போட்டீர்களென்று, அவர்கள் இபாதத்தும், ஓதலும், இன்னவிதமென்றுபின்வரும் (இன்சா ஹல்லா) அவர்களுடைய கபுறு பகுதாதில் கைசறுனென்னும் கபறுஸ்தானில் சிறப்பாகிய குப்பாக்கட்டி யெக்காலமும் கூட்டங் கூட்டமாய்ச் சியாறத்து நடந்துகொண்டே வருகிறது.

இரண்டாவது பிரிவாகிறது
அவர்கள் அவதாரத்திற் பேசப்படுகிறது.

அவர்களுடைய பேராகிறது நுஃமான் என்கிறது, ஹனீபா என்றொரு குமாரரிருந்தபடியாற் சங்கைக்காக அந்தக் குமாரரைச் சுட்டி அபூஹனீபா றஹிமஹுல்லா என்றுபெயர் சொல்லியழைக்கப்பட்டது, இறாக்கு ராச்சியத்திலுள்ள பேரடங்கலிலும் றொம்பவும் விளக்கவாளியாகவும், மதுஹபுடைய இமாம்களுக்கெல்லா முன்னிலையானவர் திருநாமமாவது, நுஃமான், அவர் தகப்பனார் தாபித்து, அவர் தகப்பனார் நுஃமான், அவர் தகப்பனார் மிர்சுபான் என்னும் பாரிசு தேசத்திற் றலைமைத்தனம் பொருந்தியவரென்றும், பிந்தின நுஃமானாகிய இமாமுடையபாட்டனார் இமாம், அலிய்யின் றலியல்லாஹு அன்ஹுவுக்காகவொருபெருநாளில் வட்டிலப்பம் வரிசையனுப்பினதில் உவந்து கொண்டார்களென்றும், இமாமுடைய மகன் பிள்ளையாகிய இஸ்மாயீலுபுனு ஹம்மாதிபுனி அபீஹனீபா றஹிமஹுல்லா பேசிவந்தார்கள்.

இந்தறிவாயத்தால், தாபித்துடைய தகப்பனார் சௌதா என்றும், அவர் காபுல்தேசத்திலுள்ளவரென்றும். காமூஸ்முதலிய கித்தாப்பிற்சொன்னதும், அஃமதுபுனு அப்துல்லாஹில் இஜலிய்யி றஹிமஹுல்லா முகம்மதிபுனு இஸ்ஹாக்கு றஹிமஹுல்லா சொன்னதும்இட்டோட்டாகிறது, இமாமுடைய தகப்பனார்தாபித்தென்கிறவர்கள் ஒரு ஆற்றின் ஓரத்தில் நடந்து போகும்போது அவ்வாற்றில் ஒரு பழமிதந்துவந் தடைந்ததைக் கண்டெடுத்துப்



புசித்தார்கள், பின்னர் அவர்களுடைய பேணுதலில் கடுமையினால் மனதில் இந்தப் பழத்தை நாம் தின்டது ஜாயிசல்ல இதையுடையவர்களிடம் ஹாலால் தேடினால் அல்லாதென்றெண்ணி, அது மிதந்துவந்ததை யெதிர்த்துப்போய்த் தேடி அக்கனியையுதிர்த்திய விருட்சத்தைக்கண்டு பின்னர் உடையவரிடம்போய் ஹாலால் தேடியதில் அவர் மிகுந்த ஆச்சரியமாகி மனதில் இவர்போல் ஒரு பேணுதலுள்ளவரை நாமெந்தக்காலங் காண்போமென்றெண்ணி நம்மிடத்தில மிகுந்த பத்தினியாயும், இபாதத்துடையவராயு மிருக்கும்.

நமது குமாரத்தியை யிவருக்கே விவாகஞ்செய்து கொடுக்கத் தகுதியென்றெண்ணி தாபித்தவர்களைப்பார்த்து, உமக்கு நான் அந்தக்கனியை ஹலாலாக்குகிறதில்லை நம்மிடத்தில் ஊமையாகிய, குருடாகிய, செவிடாகிய கைகால் சூகையாகிய ஓர் பெண்ணிருக்கின்றது, அந்தப்பெண்ணை நீர் நீக்காகுசெய்து கொண்டேயல்லாமல் என்று சொன்னார், அதுகேட்டு தாபித்தவர்கள் ஆகிறத்துடைய துடர்ச்சியை மிகவும் கொடியதாகவும், துனியாவின் சுகியை பிழப்பது மிகவும் நலமாகவும் காணுகிற ஸாஹிதீன் களிலுள்ளவர்களானதால் உடனே நிக்காகைச் சாலிஹீன்கள் களரியில் நடப்பிவித்து அக்கனிகையை ஹலாலாக்கி யவருடைய கையைப் பிடித்தபோது அவர் மிகவும் அழகுள்ளவராயும், முன் அவர் தகப்பனார் வன்னித்த எக்குற்றமும் அற்றவராயுமிருக்கக் கண்டு உடனே தமதிருகண்ணையு மூடிக்கொண்டு எடி பெண்ணே யெனக்கு வன்னிக்கப்பட்டது நீதானா என்றுகேட்டார், அதற்கப் பெண் குறுஞ்சிரிப்புச் சிரித்தவளாய் தாபித்தவர்களைப் பார்த்து ஹறாமான பார்வை கேள்வி பேச்சு பிடி நடை இவைகள் அடங்கலைவிட்டும் குருடு செவிடு ஊமை சூகைத்தனம் பாவித்தவள் நான்தான், என் தகப்பனார் உண்மை சொன்னாரென்று சொன்னார் உடனே இருவரும் தங்கள் தங்களுக்கு வாய்த்த நிகுமத்தின் பாரதூரத்துக்காய் அல்லாசுபுஹானஹுத் தஆலாவை மட்டில்லாத சுக்குறுசெய்தார்கள்.

இவ்விதமான, துப்புரவாகிய முதுகந்தண்டில் நின்றும் வெளியாகித் துப்புரவாகிய கெர்ப்பத்தி லுர்பத்தியாகினார்களென்றும் இந்தறிவாயத்திற் பெலக்கேடுண்டு மென்றுஞ் சொல்லப்பட்டா

னும் அவர்களுடைய மேலான மறுத்தபாவுக்கு இவ்விதமான சிறப்புகளைச் சொல்லவே கல்பு ஆசையாகிறது, அல்லாஹுத்த ஆலா அவர்களுடைய பறக்கத்துகளைக்கொண்டு நம்மெல்லோருக்கும் கிருபை செய்கிறவனாக இருக்கப்போதுமானவன்,

மூன்றும்பிரிவாகிறது, அவர்களு ஸ்தாதுமார்களையும்
சீஷர்களையும் பேசிவரப்படுகிறதாயிருக்கும்.

பததாகளவிற் சேர்க்கப்பட்ட கதீபுக்குள்ள தாரீக்கென்கிற சித்தாபிற் சொல்கிறார்கள், இமாம் அபூஹனீபா றலியல்லாஹு அன்ஹு நாலு அசுஹாபிமார்களை யெத்தி அவர்களால் இல்மையும், பறக்கத்தையும் பெற்றார்கள், அனசுபுனுமாலிக்ஹு றலியல்லாஹு அன்ஹு அப்துல்லாஹிபுனு அபீஹவுபா றலியல்லாஹு அன்ஹு ஆகிய, இவ்விரண்டு அசுஹாபிமார்களையும் கூபாவென்னும் தேசத்திலேயே சந்தித்து பறக்கத்தப் பெற்றார்கள், சஃலு புனு சஹிதிஸ்ஸா இதிய்யி றலியல்லாஹு அன்ஹுவை மதீனாவிலும், அபுத்துபைலி ஆமிறுபுனுவாதிலா றலியல்லாஹு அன்ஹுவை மக்காவிலும் சந்தித்தார்கள் இந்தநால்வரெல்லாம் மிகுந்த அசுஹாபிமார்களைச் சந்திததார்களென்று சொல்வது தாரீக்குக்கித்தாபுகளிலே தரிபட்டு வரவில்லை, ஆனால்.

அஹுமதுபுனு முகம்மதில் பறுக்கானியயி றஹிமஹுல்லா றவுலத்துல் உலமாவென்கிற கித்தாபிற் சொல்கிறார்கள், அபூஹனீபா றஹிமஹுல்லா சொல்கிறார்கள் எனக்குப் பதினாறு வயது நடக்கும்போது ஹிஜுறத்துத் தெண்ணூற்றாறும் வருடம் என்தகப்பனாருடன் மக்கத்துக்கு ஹஜ்ஜிசெய்யவந்தபோது அவ்விடத்தில் ஒரு பெரியோர் சிறப்பானவர் இருக்கிறார் அவரை மிகுந்தமனுடர்கள் கூடிச்சூழ்ந்திருக்கிறார்கள் நான் இவர்களாரென்று கேட்டேன், அவர்கள் ஹயாத்திற்றானே சொர்க்கத்தைக் கொண்டு நல்மாராயம்பெற்ற பத்துப்பேரி லொருவரான சுபைர் றலியல்லாஹு அன்ஹுவுடைய குமாரர் அப்துல்லா என்று சொன்னார்கள்.

அதுகேட்டு, நானவர்களைச் சந்திப்பதற்கு ஆசையாகிறேனென்று சொன்னேன், அப்போது, மனுடர் எனக்காக அகற்றி யென்னை முடுகிவித்துச் சொன்னார்கள் நான் றசூல் சல்லல்லாஹு



அலைஹிவசல்லம்சொல்லக்கேட்டேன், ஆராவதுதீனிலுள்ள பிக்ஹுடைய இல்மைப் படித்தால் துன்யா ஆகிறத்திலுள்ள வேண்டிய காரியத்துக்கு அல்லாஹுத் தஆலா அவனுக்குப்போதுமாயிருப்பான், தேடாப் புறத்தினால் ரிஸ்கையும் கொடுப்பானென்று இன்னும், தாரீக்கு பகுதாது என்கிற கித்தாபில் வருகிறது.

அபூஹனீபா றஹிமஹுல்லாபிக்ஹுடைய இல்மைப் படித்த உஸ்தாதுகளாகிறது, ஹம்மாதுபுனு அபீசுலைமான், அதாவுபுனு அபீறபாஹு, அபீஇசுஹாக்கிஸ்ஸு ஐபிய்யி, இன்னும், அனேகபார தூரமாகியதாபிஈன்கள், இன்னும் அவர்கள் படித்துக்கொடுத்த சீஷர்களாகிறவர்கள், அப்துல்லாஹிபுனுமுபாறக்கு, வகீஉபுனுல் ஜற்றாஃ, காலீ அபூயூசுபு, முகம்மதுபுனுல் ஹஸனிஷ்ஷைபானிய்யி, தாவுதுத்தா இய்யி, புலைலுபுனு இயாலு, பிஷ்றுல் ஹாபீ, இபுறாகீமுபுனு அதுஹம் இன்னும், அனேக மகாத்துமாக்களாகிய இமாம்களும், குத்புமார்களும் அவர்களையெல்லாம் எண்ணியெண்ணிச் சொல்வதானால் கித்தாபு விரிவாகும்.

பதாவிஸ்ஸிறு ஜிய்யாவென்கிற கித்தாபிற் சொல்லுகிறார்கள் அபூஹனீபா றஹீமஹுல்லா அவர்கள், தங்கள் கணக்கில்லாத உஸ்தாது மார்களிடத்தில் ஓதியிருப்பதில், பிக்ஹுடைய இல்மை ஹம்மாதிபுனி அபீசுலைமானிடத்தில் நின்றும், அவர்கள் இபுறாஹீ மின்னுகஇய்யி இடத்தில் நின்றும், அவர்கள் அல்கமா றலியல்லாஹு அன்ஹு, அஸ்வது றலியல்லாஹு அன்ஹு, காலீஷுறைஹு றலியல்லாஹு அன்ஹு, இம்மூவரிடத்தில் நின்றும், இம்மூவரும் அப்துல்லாஹிபுனு உமர், அப்துல்லாஹிபுனு மஸ்ஊது இடத்தில் நின்றும், இவர்களிருவரும் றசூல் சல்லல்லாஹு அலைஹிவஸல்லம் இடத்தில் நின்றுமெடுத்தார்கள்.

இன்னும் இமாம் அபூபக்ரின்ன் ஜீபில்காலி றஹிமஹுல்லா சொன்னார்கள், பிக்குஹுடைய இல்மென்னும் பயிரை அப்துல்லாஹிபுனு மஸ்வூது விதை தூவினார்கள், அல்கமா றலியல்லாஹு அன்ஹு அதற்குத் தண்ணீர் புகட்டினார்கள், இபுறாஹீமுன்னுக இய்யி கதிராறுத்தார்கள், ஹம்மாதுபுனு அபீசுலைமான் சூடடித்தார்கள், அபூஹனீபா அதை மாவாக்கினார்கள், அபூயூசுபு அந்தமாவைக்குழைத்தார்கள், முஹம்மதுபுனுல் ஹசனி, அதை றொட்டி

யாக்கினார்கள், மற்றும் இமாம்கள் அதை விருந்துக்கோப்பாக்கினார்கள். நாமெல்லோருமதை வஜீபனிக்கிறோம், இன்னும், கலபுல்னு ஐயூபுல் பல்கிய்யி றஹிமஹுல்லா சொன்னார்கள், அல்லாஹுத் தஆலாவாகிறவன் இல்மென்கிற அமானிதத்தை நபிலல்லல்லாஹு அலைஹிவஸல்லமுக்குப் பிறகு அஸ்ஹாபிகளிலாக்கினான், பின்னர், தாபிஈன்களிலாக்கினான்.

பின்னர் அபூஹனீபாவிலும் அவர்கள் அஸ்ஹாபிகளிலுமாக்கினான், அதைக்குறித்து நானுண்மையான வாக்குரைத்தேன், நாடினவன் சம்மதிக்கட்டும், நாடாதவன் சடைந்துகொள்ளட்டும், இன்னும் அலிய்யுபுனு முஹம்மதில் பிஸ்தவிய்யி சொன்னார்கள், இமாம் அபூஹனீபா றஹிமஹுல்லாவுடைய அஸ்ஹாபிகள் தான் முந்தியவர்கள், அவர்களுக்கு மேலான தறஜாவும், மறுத்தபாவும், ஷரீஅத்தின் இல்மிலுண்டும், குறுஆனையும், ஹதீதையும் அறிவதில் உலமாவுன் றப்பானிய்யூன் என்னும் நாயனையறியும் தன்மையுள்ளவர்களென்றும், ஹதீதையும், அதின் விளப்பத்தையும். யோசிக்குதலைபு முடையவர்களென்று சொல்லப்படும்.

இன்னும் ஸாப்று றஹிமஹுல்லா சொல்லுகிறார்கள், இமாம் அபூஹனீபா றஹிமஹுல்லாசொல்ல நான்கேட்டேன், அதாவது அகீதா நேராகிறதைப் பற்றியுள்ள அத்தாட்சிகளைப்படிக்கிற இல்முல்கலாமில் நான் தீர்மானமான துறையை யெற்றினவனாக இருக்கும்போது, ஒருநாள், உஸ்தாது ஹம்மாது றஹிமஹுல்லாவுடைய மஜ்லிசில் நானிருக்கும்போது. ஒருபெண்பிள்ளை யென்னிடமுடுகி யொருவருமறியாமற் கேட்டாள், ஒரு புருடன் தன் பெண்சாதியைத் தலாக்குச்சொல்வதில், மார்க்கத்திற் குற்றம்வாராமல் தலாக்குச் சொல்லும்பரி செப்படி யென்று கேட்டதில் எனக்கு ஜவாபு கொடுக்க மாதிரியில்லாமல், நானவளைப்பார்த்து நீ ஹம்மாது றஹிமஹுல்லாயிடம் இதைக்கேட்டு எனக்கும் அறிவித்துப்போட்டுப் போவென்று சொன்னேன், உடனேயவளவர்களையடுத்துக்கேட்டாள்.

அதற்கவர்கள் சொன்னார்கள். பெண்பிள்ளை துப்பரவாயிருக்கும்போது, ஜமாகுசெய்யாமல் ஒரு தலாக்குமட்டும் சொன்னாற் பின்பு இரண்டு (ஹைலுவந்து) துப்புரவு கண்டு குளித்தவுடன்



யாருக்கும் வாக்கப்படலாம், இதுதான்,பித்அத்து, கருஹத்தில்லாத தலாக்கென்று ஜவாபுகொடுத்தவுடன், நான்மனதில் நினைத்துக்கொண்டேன், இல்முல்கலாமில் எனக்கு ஹாஜத்தில்லை யென்று, பிருகென்னும் இல்மைக்கொண்டு தான் காரியமென் றெண்ணி உஸ்தாது ஹம்மாது றஹிமஹுல்லாவுடைய மஜ்லிசைச்சேர்ந்து பிருகைப்படிக்க தொடுத்தேன், ஒருநாளைக்கு யித்தனை மஸ்அலாப்பாடம் சொல்வதென்று திட்டமாக்கிப் படித்து வருங்காலத்தில் மறுநாட்பாடங்கேட்டும், பாடங்கொடுத்தும் வருவேன், மற்றும் பிள்ளைகள் அதிலே பிழைவிட்டு விடுவார்கள், அதைக்கண்டு, உஸ்தாது, என்பேரில் சந்தோஷமாகி யென்னை அவர்களுக்குநேரே யிருத்திக்கொள்வார்கள்.

பின்னர், என்னுடைய சிந்தையென்னும் நபுசில்வந்தது. நாமொரு மதுரசாவென்னும் பள்ளிக்கூடம் வைத்துக்கொள்ள வேணுமென்று, பின்னர், அந்த ரியாஸத்தென்னும் அகம் பெருமை நமக்கு வேண்டியதில்லையென்று, அவர்கள் மஜ்லிசைத்தான் பூண்டுகொண்டேன், பின்னர், அவர்களுக் குரித்தான ஓர்மனுடன் பஸறாராச்சியத்தில் மௌத்தான சங்கதி வந்ததுக்காய், அவர்கள் அவ்விடம்போய் இரண்டு மாசமட்டும் நின்றார்கள். அந்த நாட்களில் என்னிடம் அறுபது மஸ்அலா மட்டில்வந்தது அடங்கலுக்கும் ஜவாபு கொடுத்தேன். பின்னர், அவர்கள்வந்து நான் கொடுத்த ஜவாபைப்பார்த்து நாற்பது ஜவாபை யேந்துகொண்டார்கள், பின்னர், நான் மனதிலே சத்தியம்போலே சொல்லிக்கொண்டேன், அதாவது, மௌத்தாகும்வரையில் அவர்களைப் பிரியப்படாதென்று,

இன்னும், அபூமுஸ்லிம் பேசிவருகிறார், இமாமுல் அஃலம் சொல்லுகிறார்கள், நான், ஹம்மாது றஹிமஹுல்லா இடம் கித்தாபு ஓதினபிறகு பஸறாராச்சியத்துக்கு போனேன், அங்கே நம்மிடம் எந்த மஸ்அலாவைக் கேட்கப்பட்டாலும் ஜவாபுகொடுக்கலாமென்றெண்ணியிருந்தேன், அப்போது, பஸறாவிற் சில மஸ்அலா வந்தது, அதற்கு ஜவாபு என்னிடமில்லை, இனிமேல், உஸ்தாது ஹம்மாது அவர்களை ஒருக்காலும் பிரிகிறதில்லையென்

றெண்ணி, அவர்களிடம் இருபதுவருடம் இல்மு படித்தேன், நான் எந்த நேரந் தொழுதாலும் தொழுகைக்குப் பிறகு, எனக்கும், என் மாதா பிதாவுக்கும். என் உஸ்தாதவர்களுக்கும் துஆச் சொய்து வருகிறேனென்று சொன்னார்கள்.

இன்னும், றவுலுல் பாயிகு என்கிற கித்தாபில், அபூயூசுபைத் தொட்டும் பேசிவரப்படுகிறது, இமாமுல் அஃலம் சொல்லுகிறார்கள், நான் இல்மைப்படிக்க நாட்டம்வைத்து, அந்தந்த இல்மின் குலாசாவென்னும் சுத்தத்தையும், அதனால் வாய்க்கும் பலனையும் கேட்டதில் எனக்குச் சகல இல்மிலும் இல்முல் பிகுகைத்தெரிந்துகொள்ள நாட்டம் வந்தபடியாலதைத்தெரிந்து கொண்டேனென்று சொன்னார்கள், இதில், நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் திருவுளமான ஹதீதையும் அருளினார்கள், அதாவது.

எல்லா வஸ்துவுக்கும் ஒவ்வொரு ஆதாரமுண்டும், அதுபோல் தீனுக்கு ஆதாரம் இல்முல் பிகுஹென்று ஷாபிஇய்யி றஹிமஹுல்லா, இல்முடைய வரிசையைப்பற்றி இரண்டு பைத்துச்சொன்னார்கள், அதின் பொருளாகிறது, இல்மைக்கொண்டு சிறப்புப் பெற, இல்மையுடைய வனுடினாற் சிறப்புப்பெறுவதுகொண்டு இல்முல்பிகுகு மிகவும் பாத்திரமாக இருக்கும், வீசும் வாசமெல்லாம் கஸ்தூரிபோலும், பறக்கும் பட்சியெல்லாம் இராஜாளிபோலுமிராதென்று.

இன்னும். அபூஷகூரின் றஹிமஹுல்லா தம்ஹீது என்கிற கித்தாபிற் சொல்லுகிறார், இமாம் அஃலமுடைய குமாரர் ஹம்மாது றஹிமஹுல்லா, தமது தகப்பனார் அவர்களிடம் அகீதா துறபிடியாகிற இல்முல் கலாமைத்தொட்டும், அதின் ஹுஜ்ஜத்துகளையும், தலாயில்களையும் படிக்கிறதைத்தொட்டும் கேட்டு, நான் அதைப்படிக்காவிட்டாற் றங்கட முண்டோவென்று கேட்டபோது, யாதொரு முகத்தினாலும்மைத் தங்கடம் செய்யாது, ஏனென்றால்.

அல்லாஹுத் தஆலா வும்மை ஏன் படிக்கவில்லையென்று கேளாதபுறத்தினால், இன்னும் ஒரு முகத்தினாற் றங்கடம் செய்யும், அஃதேனென்றால், மனுடனுடன் கலந்துறவாடுவதால், அவர்



களுடன் பேசுகிறது, இன்னவிதம், தாத்தின்கருமத்தில் இன்னவிதம், சிபாத்தின் கருமத்தில் இன்னவிதமென்று விவரித்து அவர்கள் அகீதாவை நேராக்கவேணும், ஏனென்றால், அல்லாவுடைய கருமத்தில் நேரானதில், உவப்புவைப்பதும், மாற்றயானதிற் கோபமாவதும், ஈமானுக்குப் பிடிகயிறாகவிருக்கும், இவைரெண்டையும் பிரித்தறியா விட்டால் ஹலாக்கில் விழவேண்டியதாய் வரும்.

இதற்கு வமை, ஒரு ஆழிய கிணற்றின் வாயைமூடி மறைத்து வைத்திருந்தால் வழி நடக்கிறவன் அதையறியாமல் அதற்கு நேராக நடந்தால், அக்கிணற்றில் விழுந்து ஹலாக்காவான், ஆனால், றசூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களுடைய அஸ்ஹாபிமார் அந்த இல்முல் கலாமைப் படிக்கவில்லையேயென்று சொல்வாயாகில் அந்நாளிலில்லாத பித்அத்து என்ற நூதனங்களெல்லாம் இந்நாளிலுண்டாகி அந்த பித்அத்தென்னும் நூதனங்களென்ற பகையன் பித்அத்தென்ற நூதனவாலை யுருவிக்கொண்டு நம்முடைய வீட்டின் தலைவாசலில் வந்து நிற்கும்போது நாமெவ்விதம் கண்ணை மூடிக்கொண்டிருக்கிறது.

ஆகையால், அந்த பித்அத்தைத் தட்டுவதற்குள்ள, இல்முல் கலாமைப் படிக்கவேணுமென்றார்கள், இன்னும், அலிய்யுபுனு முகம்மது றஹிமஹுல்லா சொன்னார்கள், இமாமாகிறவர்கள், தௌஹீதுடைய இல்மிலும், சிபாத்துடைய இல்மிலும், பிகுகுல் அக்பறென்னும் கித்தாபையும், கித்தாபுல் ஆலிமி, வல்முத்த அல்லிமி யென்கிற கித்தாபையும், கித்தாபுற்றிசாலாவையும் கோர்வை செய்தார்கள். இதைத்தான் தங்களுடைய தில்மீது உதுமானுல் புஸ்திய்யி றஹிமஹுல்லா அளவில் அனுப்பிவைத்தார்கள்.

இன்னும், மஃதினுல் யவாகீது, என்கிறகித்தாபு கோர்வை செய்த ஹசன் றஹிமஹுல்லா சொல்லுகிறார்கள், இமாம் அஃலமுடைய சீஷர்களானவர், அனேகரிருக்கிறார்கள், அதில், மிகுந்து பிரஸ்தாபமாக்கப்பட்டவர்கள், காலீ அபூயூசுபும், முகம்மதுபுனுல் ஹஸனிஷ்ஷைபானிய்யி இவர்களாயிருக்கும், அபூயூசுபு றஹிமஹுல்லாவுடைய திருநாமமாகிறது, எஃகூபுபுனு இபுறாஹீமிபுனு, ஹபீபுபுனு, சஃதுபுனு குசைமத்தல் அன்சாரிய்யி என்றுசொ

ல்லப்படும், அவர்கள் ஹாறானுற்றஷீதுபாத்துஷாவுடைய நாளையில் பகுதாதில் காலியா இருந்து வயது தொண்ணூற்றுறில், ஹிஜுறத்து, நூற்றியெண்பத் திரண்டாம்வருடத்தில், குறித்த, பாத்துஷாவுடைய நாளிற்றுனுபாத்தானார்கள், அவர்கள் குமாரர் யூசுபு றஹிமஹுல்லாவென்கிறவர்கள் பகுதாது, மேல்நாட்டிலே தகப்பனார் ஹயாத்திற்றுனே காலியாயிருந்து ஹிஜுறத்துநாற்றி எழுபத்திரண்டாம் வருடத்திலுபாத்தாகினார்கள்

கிசானத்துல் ஜலாலிய்யாவென்கிற கித்தாபிற் சொல்லுகிறார்கள் அபூயூசுபு றஹிமஹுல்லா சிலகாலம் வியாதியாக இருந்தபோது இமாம் றஹிமஹுல்லா நஸல் வினவப்போயிருந்ததில், அபூயூசுபே உம்முடைய ஓதலெல்லாம் நினைவாசயிருக்கிறதா என்று கேட்க அதற்கு, அவர், ஓதல்மறந்து அதினுட்பொருளெல்லாம் நினைவிலே தரிபாடாயிருக்கிறதென்று சொன்னார்.

இன்னும், அந்தக்கித்தாபிற் சொல்லுகிறார்கள், இமாம் றலியல்லாஹு அன்ஹு சொன்னதாக, அல்லாஹுத் தஆலா எனக்கு இந்ததுஆவை ஓதிவந்தபறக்கத்தால் இல்மைத்தந்தானென்று அதாவது (அல்லாஹும்ம இன்னு நஸ்தஈனுபிக அலா தாஅத்திக்க) என்று, இன்னும் சொல்லுகிறார்கள், செய்யிது ஜலாலுத்தினில் புகாரிய்யி சொன்னதாக ஆறுகிலும், இந்த துஆவை பறுலானதொழுகை அடங்கலுக்குப்பின்னர் ஆதத்தாக ஓதிவந்தால், அல்லாஹுத்தஆலா அவனுக்கு இல்மென்கிற வாசலைத்திறபிடியாக்கிச், சோம்புதலைத் தட்டிவிடுவானென்று.

இன்னும் இமாமுல் அஃலம் அபூஹனீபா றஹிமஹுல்லா திருவுளமானார்கள், அல்லாஹுத் தஆலாவை மனுமில் ஆயிரந்தடவை நான் கண்டு அவ்வாயிரந்தடவையிலும், ஈமான் சலாமத்தாய் நான் மவுத்தாவதற்கு ஒரு அமலைப்படித்துத் தரவேணுமென்று கேட்டதில், ஆயிரம்தடவையும் இந்த துஆவை ஓதிவரச்சொன்னான், அதாவது, (அல்லாஹும்ம அஹ்யினீ அலல்கித்தாபி வஸ்ஸுன்னத்தி வத வப்பனீ அலல்ஈமானி வத்தவ்பத்தி அல்லாஹும்ம சல்லி அலாரசூலிக்க செய்யிதனா முஹம்மதின் வஆலிஹி வசல்லிம் வப்அல்பினா தாலிக்கவபிஜமீஇல் முஸ்லிமீன்) என்கிறதா யிருக்கும்.



முஹம்மதுபுனுல் ஹஸனிஷ் ஷைபானிய்யி றஹிமஹுல்லாவாகிறவர்கள் கூபாராச்சியத்தில் ஹிஜறத்து நூற்றி முப்பத்திரண்டாம் வருடத்திற் பிறந்து, இயாம் அஃலம் றலியல்லாஹு அன்ஹு இடத்தில் இல்மைப்படித்து ஐம்பத்தினலாம் வயதில் ஹிஜறத்து நூற்றி யெண்பத்தெட்டாம் வருடத்தில் வபாத்தாகினார்கள் ததுக்கிறத்துல் மஷாயிகு எனகிற கித்தாபிற் வருகிறது, முஹம்மதுபுனுல் ஹசன் றஹிமஹுல்லா திருவுளமானார்கள், எனக்கு அதபும் இல்மும் படித்துத்தந்ததில் முந்தினவர்கள் அபூயூசுபு றஹிமஹுல்லாவென்று.

அதாவது, நான்பாலிகில்லாதநேரம், இஷாத்தொழாதிருந்து படுத்துறங்கிச் சஹர்நேரம் புலுக்காகியுடனேகுளித்துவந்து இமாமுடைய பள்ளியைநாடி வந்தவுடன், இமாம் அபூஹனீபாஆரென்று பேர் சொல்லிக் கேட்டேன், உடனே அபூயூசுபு றஹிமஹுல்லா, என்னைப் பார்த்து வாலிபனே, அதனைப்பேணிக் கொள்ளென்றார்கள், இமாமின்னொன்று சைபிக்கினையா யறிவித்துந் தந்தார்கள், உடனே, நிரப்பமான அதபோடு சமுகத்தில் நின்றுகேட்டேன், இமாமே ஒருசிறுபிள்ளை ஒருவத்தின் துவர்க்கத்தில் புலூக்கிலா திருந்து அதினெடுக்கத்திர் புலூக்காகினால், அந்தவக்தின் தொழுகை விதிக்குமா வென்று கேட்டேன், அதற்கவர்கள் விதிக்குமென்று சொன்னார்கள்.

உடனே, இஷாத்தொழுதேன், அப்போதவர்களென்னைக் கடைக்கண்ணாலே பார்த்து இந்தவாலிபனில்நோர்வழி யுண்டாயிருக்கிறது, இவரால், வெகுநலவான காரியமெல்லாம் முண்டாகுமென்று சென்னார்கள் (சுபுஹானல்லா) அந்தச்சொல்லுடையபறக்கத்தால் அவர்கள் மனுடருக்கெல்லாம் இமாமானார்கள், அவர்களுடைய கலாமாகிறது, ஷரீஅத்தில் உலமாக்களுக்கிடையில், அதைத் தலீலாகவும், ஹுஜ்ஜத்தாகவும் எடுத்துப் பேசப்படுகிறது, அவர்களுக்குடைய (ஆதாபுல்காலீ) என்கிற கித்தாபிற் சொல்லுகிறார்கள், வசனம் செவ்வுற்றுவராது யோசனை கொண்டேயல்லாது, யோசனை செவ்வுற்றுவராது, ஹதீதுடைய இல்முகொண்டேயல்லாது, வசனத்தை அல்லது, ஹதீதுடைய இல்மை அழகாக்காதவன்

யோசனையும் அழகாக்கமாட்டான், யோசனையை அழகாக்காதவன் காலீவேலைக்கித் திராணிபெறுனென்று, இவ்விதம் சித்திரமான கலாம்கள் அனேகமவர்கள் சொல்லியிருப்பதை யுலமாக்கள் டங்கலும் தலீலாக்கிக் கொள்வார்கள்

## நாலாம்பிரிவாகிறது.

இமாம்-அஃலம் அபீஹனீபா றஹிமஹுல்லா அவர்கள் மதுஹபுண்டாக்கியதையும், அவர்கள் ஆளிய கருத்தையும் பேசுகிறதாயிருக்கும்.

பதாவீசிறாஜிய்யாவென்கிறகித்தாபிற்சொல்லுகிறார்கள், இமாம் தங்களுடைய மதுஹபைவைத்தது உதுமான் றழியல்லாஹு அன்ஹுவுடைய கிலாபத்தை யெவ்விதம் உசாவுதற்கொண்டு தரிபடுத்தப்பட்டதோ அவ்விதம் உசாவுதல் கொண்டுவைத்ததல்லாமற்றுங்களாய் த்தனித்துக்கொள்ளவில்லை, ஒருமஸ்அலாவை, அல்லது, அதின் ஜவாபை, ஒவ்வொன்றாக வுலமாக்களுக்கிடையில் எடுத்துக்காட்டி, அதிலே தங்கள் விளக்கத்தையும், மற்றவர்களின் விளக்கத்தையும் குறுஆன். ஹதீதை யொத்து இரண்டாலொன்றைத்தரிபடுத்திவைப்பார்கள், அதைமற்றவர்களும் சரிகாண்பார்கள், இதை யுடனைக்குடன் காலீ அபூயூசுபு றஹிமஹுல்லா பிகுகுக்கு அஸ்லாகத் தரிபடுத்தியெழுதிக் கொள்வார்கள்.

அலிய்யுபுனுல் முகம்மதில் பிஸ்தமிய்யி றஹிமஹுல்லா சொல்லுகிறார்கள், நான் இமாமுடனே. ஆறுமாதம் வரையிலே குறுஆன் அல்லாவுடைய படைப்பென்று சில பிதுஅத்துக்காரர்கள் சொல்லுகிறசங்கதியில் எதிற்றுத் தற்கஞ்செய்தேன், அவர்களுடைய யோசனையும், என்னுடைய யோயனையும் ஒரே விதமாய் ஒத்துநின்றது, குறுஆன் படைக்கப்பட்டதென்று சொன்னவன் சக்கன்றியே காபிராவானென்றார்கள்.

பதாவீசிறாஜிய்யா என்கிற கித்தாபிற், சொல்லுகிறார்கள் இமாம் றழியல்லாஹு அன்ஹுவுடை விளக்கத்தினாலே பாரவானகளான புத்திமான்களான வுலமாக்களெல்லாம், விளங்கிக் கொள்ள



முடியாமற் போய்விட்டதின் உள்ரங்கங்களை யெல்லாம் எத்திக்கொண்டார்கள் முகம்மதுபுனுல் ஹசன் றஹிமகுல்லா வுடைய யோசனையை ஆலமெல்லா மெச்சிக் கொண்டதாயிருக்க, அவர்கள் மிகுதமும் அபரூபமாயோசிக்கும் ஒருசங்கதி இமாம் றழியல்லாஹு அன்ஹு தினைத்திடாமற் கொடுக்கும் ஜவாபுபோலிருக்குமென்று பிஷ்று றஹிமஹுல்லா சொல்லுகிறார்கள்; காலீ அபூயூசுபு சொன்னார்கள், இமாமுடைய இல்மில் என்னுடைய இல்மாகிறது, உவமையில் பிரமாண்டமான ஆலாவிருட்சத்தின் பலகொப்புகளிலுண்டாகின்றன மிகுதியிலைகளில் நின்றும் ஒருசிறிய இலைபோலாகுமென்றார்கள், பிஷ்று றஹிமஹுல்லா சொன்னார்கள், காலீ அபூயூசுபுடைய இல்மில் என்னுடைய இல்மாகிறது, அவ்விதமாயிருக்குமென்றார்கள்.

ததுக்கிறத்துல் மஷா இகுஎன்கிறகித்தாபிற் சொல்லுகிறார்கள், இமாம் அஃலமாகிறவர்கள், இராவிற் படுக்கையிலே திரும்பித்திரும்பியே படுக்கிறது ஆதத்தாக இருந்தார்கள், வலது பாகம் படுக்கும்போது ஒருமஸ்அலா வுண்டாக்குவார்கள், இடதுபாகம் திரும்பிப் படுப்பார்களாகில் அதுக்குச் ஜவாபை யுண்டாக்குவார்கள்.

விடிந்தபிறகு பள்ளியில்வந்து சுபுஹு தொழுது தங்கள் மஜ்லிஸில் வந்திருந்தார்களாகில், தபுசீறுஇல்முடையவர்கள் வலது பாகத்திலும், ஹதீது இல்முடையவர்கள் இடது பாகத்திலும், மஷாயிகுமார் பெரியோர்கள் நேரிலுமிருந் துண்டாக்கிய மஸ்அலாவைத் துவர்க்கமாய்த் தபுசீறுகளிலும், ஹதீதுகளிலும் அவர்களெல்லாரும் ஒத்துப்பார்த்து ஒத்துமைவெளியானவுடன் இமாம் றழியல்லாகு அன்கு தங்கள் சத்தத்தை யுயர்த்தித் தக்குபீறு சொல்வார்கள்.

பின்னர், மஜ்லிசில் ஹாலிறாகியவர்களடங்கலும் தக்குபீறு சொல்வார்கள், அந்தச் சத்தம் கேட்டவுடன் அடுத்த கடையிலுள்ளவர்களெல்லாரும் தக்குபீறு சொல்லுவார்கள், அவர்கள் தக்குபீறுச் சத்தம் ஊரடங்கலிலுள்ளவர்களும்கேட்டு அவர்களும் சொல்

வார்கள், பட்டணமடங்கலும் ஒரேகாம்பீரமாய்த் தக்குபீறு முழங்கும், அதை யறிந்து அவர்க ளின்றைதினம் இமாமவர்கள் சொன்னமஸ் அலாவில் உலமாக்க ளடங்கலும் ஒத்துமையானார்க ளென்ற அருட்சி அறிந்து சோபனமடைவார்கள்.

இந்தத் தக்குபீறுடைய சங்கதியில் சூபிய்யாக்கள் இதை அத்தாட்சிபிடித்து தீனுடைய காரியத்திற்சந்தோஷங்கிடைத்ததாகில், தக்குபீறு சொல்வதை முஸ்தவப் பாகக் கண்டார்கள், அஃதேனென்றால், உலமாக்க ளாகிறவர்கள் அன்பியாக்களுடைய அனந்தர காரரென்றும், அவர்கள் தான் அகுலுஸ்ஸுன்னத்தி, வல்ஜமாஅத்தி யென்றும், அதற்கு விரோத மானவர்கள்தான பிதுஅத்துடைய கூட்டமென்றும் சொல்லப்பட்டிருக்கிறது, அல்லாகுத்தஆலா நம்மனைவரையும் இப்பேர்பட்ட சாலிஹீன்கள் உலமாக்கள் கூட்டத்திற் சேர்ப்பானாகவும்.

## ஐந்தாம் பிரிவாகிறது.

மற்றும் பாரவான்களாகிய உலமா, மஷாஇகுகள், இமாம் அஃலம் றலியல்லாஹு அன்ஹுவைத்துதித்ததைப் பேசுகிறதாயிருக்கும்.

தஃதீபுல் கமால்என்கிற கித்தாபில் ஹாபிலென்கிறவர், அப்துல்லாஹிபுனு தாவுதைத் தொட்டும் பேசி வருகிறார்கள், இமாம் அஃலமுக்கு அல்லாஹுத்த ஆலா இடம் துஆக் கேட்கவேண்டியது இஸ்லாமான பேர்கள்பேரில் விதியாயிருக்கு மென்று, அஃதேனென்றால், அவர்களுக்காய், மார்க்கத்தையும், பிகுகுடைய இல்மையும்கெண்டித்து வெளியாக்கி பிதுஅத்துடையவர்கள் சொல்லப்பட்ட அனேக மோசமாகிய சொற்களை யெல்லாம், றத்துச்செய்து தீனை நிறுத்தாட்டின இமாமானதாலென்று.

முகமதுபுனு ஈசா றஹிமஹுல்லா சொல்லுகிறார்கள், றவ்ஹுபுனு உப்பாதா றஹிமஹுல்லா சொல்லக்கேட்டேன், நான் இபுனுஜுறைஹு றஹிமஹுல்லா இடமிருந்தேன், ஹிஜுறத்து



நூற்றி ஐம்பதாம்வருடத்தில், அப்போது இமாமுல்அஃலம் அபூஹனீபா றலியல்லாகு அன்கு வபாத்கான செய்திவந்தது, உடனே (இன்னாலில்லாகி வஇன்னாஇலைகி றாஜிஊன்) என்றுசொல்லி மிகுதி நொம்பலமும், கவனமும் அடைந்து அபுரூபமான இல்மல்லோ போய்விட்டது என்று சொன்னார்கள், அந்த வருடத்திற்றான் இபுனுஜுறைஹு றஹிமஹுல்லாவும் வபாத்தாகினார்கள்.

யஹ்யபுனுநஸ்று றஹிமஹுல்லா சொல்கிறார்கள், நான்யஸீதுபுனு ஹாறூன் றஹிமஹுல்லா இடம் கேட்டேன், இமாம் அபூஹனீபா றஹிமஹுல்லா வுடைய சொல் உங்களுக்கு உகபபாயிருக்குமா, அல்லது, ஸுபுயான் றஹிமஹுல்லாவுடைய சொல் உகப்பா யிருக்குமாவென்று, அதற்கவர்கள் சொன்னார்கள், அபூஹனீபா றஹிமஹுல்லாவுடைய சொல்லாகிறது நூறு ஸுபுயான்போற் கொத்தவர்கள் சொல்லைக்காண எனக்கு உகப்பாகுமென்று, பின்னும்சொன்னார், நான்மிகுந்த வுலமா, மஷாயிகைக் கண்டிருக்கிறேன், இமாம் அபூஹனீபா றஹிமஹுல்லாவைப் போலே புத்தியாலும், நுணுக்கத்தாலும், வரிசையாலுமிகைத்தவரை நான் காணவில்லையென்று.

பிஷுறுபுனு சுறதுறஹிமஹுல்லா சொன்னாகள், யஸீதுபுனு ஹாறூன் றஹிமஹுல்லா இடம் இமாம் அபூஹனீபா றஹிமஹுல்லாவைத்தொட்டும், இமாம் ஸுபுயான் றஹிமஹுல்லாவைத்தொட்டும் கேட்கப் பட்டபோது, ஸுபுயான் றஹிமஹுல்லா மிகுந்த ஹதீது பாடமுள்ளவர்கள், அபூஹனீபா றஹிமஹுல்லா மிகுந்த பிகுகுடையவர்களென்று சொன்னார்கள், அப்துல்லாஹிபுனு முபாறக்கு றஹிமஹுல்லா சொன்னார்கள், அல்லாஹுத் தஆலா இமாம் அபூஹனீபாவைக்கொண்டும், ஸுபுயானுதவ்ரியைக்கொண்டும் எனக்குதவி தராதிருந்தானாகில் நான் மற்றும் அவாம் கல்க்குகளைப்போல் மடையனாகிப் போவேனென்று.

முகம்மதுபுனு மஸாஹிம் றகிமஹுல்லா சொன்னார்கள், அப்துல்லா கிபுனுல் முபாறக்கு றஹிமஹுல்லா சொல்லக்கேட்டேன், மனுடரில் மிகுந்த இபாதத்துடையவரையும், மிகுந்த வறகு

டைய வரையும், மிகுந்த இல்முடையவரையும், மிகுந்த பிகு குடைவரையும் கண்டேன், அவர்களில், மிகுந்த இபாதத்துடையவர் அப்துல் அஸீஸுப்னு அபீதாவூது, வறஉடையவர் புலைலுப்னு இய்யாலு, இல்முடையவர் ஸுப்யானுத்தவ்ரிய்யி, பிகு குடையவர் அபூஹனீபா றலியல்லாஹு அன்ஹு என்றும், பிக்கில் அவரைப்போல நான் காணவில்லையென்றும், பின்னிரண்டுபேரும் ஒரு காரியத்தில் ஒத்துச்சொன்னால் அதுதான் பெலப்பென்றும், ஒருவர் தம்முடைய யோசனைப்படி சொல்லத் தகுமாயிருக்குமென்றும் வருமாகில், இமாம் அபூஹனீபாதான் தகுமாயிருக்குமென்றும சொன்னார்கள்.

முகம்மதுப்னு அகுமதுப்னி யஃகூபு றஹிமஹுல்லா சொன்னார்கள், என்னுடைய பாட்டனார் சொல்லக்கேட்டேன், நம்முடைய தோழன்மாரிலொருவர் அப்துல்லாகிப்னுல் முபாறக்கு றஹிமஹுல்லா, இமாம் அபூஹனீபா றஹிமஹுல்லாவைச் சில பைத்துகளாற் புகழ்ச்சி செய்தார்களென்று. அதின பொருள்களைக் கருத்துரையாய் எழுதப்படுகின்றது, அதாவது, இமாம் அஃலமைக்கண்டேன், அவர்களெந்நாளும் வருசையாலும், கைறுலும் அதிகமாகி நேரான சொல்லையேசொல்லி யதையே தெரிந்துகொள்ளுகிறார்கள், அவ்யவகாரர், ஞாயப்பிழை சொல்லும்நேரம், அவர் மூச்சுகளென்னும் இரத்தினங்களில் நின்றும் விளைவான அபரூபமான ஹுக்கும்களெல்லாம் அதிலுண்டும், ஆனதால், ஆரைத்தானவருக்குச் சமானமாக்குவீர், உஸ்தாது ஹம்மாது றஹிமஹுல்லாவை நாமிழந்தவிசனத்தை மாற்றினார்கள், பொல்லாதவண்டர்விச்சித்திரச் சொல்லடங்கலையும் கட்டிவிட்டார்களென்றதாயிருக்கும்.

ஸக்கரிய்யாவுல் கஸ்வீனிய்யி றஹிமஹுல்லா, ஆதாறுல் பிலாது வஅகுபாறுல் இபாது என்கிற கித்தாபிற் சொன்னார்கள், அப்துல்லாகிப்னுல் முபாறக்கு றஹிமஹுல்லா, இமாம் அபூஹனீபா றஹிமஹுல்லாவைப் புகழ்ந்து சில பைத்துகள் சொல்லுகிறார்கள், அதின் பொருளாகிறது, பட்டணங்களையும், அதிலுள்ளவர்களையும், முஸ்லிம்களுக்கு இமாமாய்வரும் அபூஹனீபா றஹி



மஹுல்லா அவர்கள் அலங்காரமாக்கினார்கள், அஃதெதினாலெனில், குறுஆன் ஆயத்துகளாலும், ஹதீதுகளாலும், பிகுகுடைய விழப்பத்தாலும், ஸபூரவேதமற்றும் கடுத்தங்களை மேலிட்டதாயிருக்குறதுபோல்.

இன்னும், சூரியன் காரிக்கும் துறையான மாரிகோடை இரண்டு மகுரிபிலும், இவைகளுக்குள்ளடங்கிய தலங்களிலும், இன்னும், முஸ்லிமானவர்கள் காறுல் ஹிஜ்றுவென்றும், பட்டணமுடைய கூபார்ருச்சியத்திலும், அவர்களுக்குச் சமதிகிடையாது, இன்னும், இஸ்லாமார்கத்தில் நடப்பவருக்கு நேர்வழியைத் தலைக்கு மொளிவாகிய இமாமாகவும், றசூல் சல்லாஹு அலைகிவசல்லம், அபூபக்கர் சித்தீக்கு றலியல்லாஹு அன்கு, உமறுப்னு கத்தாபு றலியல்லாஹு அன்கு, மற்றும் குலபாக்களின் அமானத்துகளைச் சுமந்து சிமந்ததுபோல் எத்திவிக்கு நம்புதலையுடைய விசுவாசியாகவும் ஆகிவிட்டார்களென்று.

இன்னும், அநேகம்பேர்கள் பலபலவிதமான சிறப்புத் தங்கிய பைத்துகளையெல்லாம் சொல்லிப் புகழ்ந்தார்கள், உலமாக்களிலொருவர் சொல்லுகிறார், ஒருபோது, அந்நாளையிலுள்ள இராஜா இடம், ஒரு அவசர காரியத்துக்காய் இமாம் அபூஹனீபா றஹிமஹுல்லா நாடிப்போய், இராஜனுத்திரவை வழிபார்த்து அரண்மனை வாசலில் நிற்கும்போது ஒருமனுடன் வெளிக்கிட்டான் அவனோடு மனேகங் கோமாளிகளும் சிறுபையன்களு மேளதாளம், கிண்ணரி, தம்பூரு சுமந்தவர்களாய்க் கண்டவுடன், இவனாரென்று கேட்டார்கள், அதற்கு, இவன் அமீறுல்மூமினீனுடைய விகடகவிக்காரனென்று சொல்லப்பட்டது.

அதுகேட்டடனே இமாம், மாலை மாலையா யழுது சில பைத்துச் சொன்னார்கள், அதன் பொருள், இல்முடையவர் மனுடரிற் பழுதானவர்களாயும், ரோசமென்பது பாழாக்கப்பட்டதாயுமிருப்பது கண்டு சலிப்பது சகல சலிப்புகளுக்கும் போதுமாயிருக்கும், இன்னும் இராஜாக்களிடம் இராக சங்கீதம் பாடிக் கேளிக்கையாடினவனல்லாது மற்றியாரும் பேறுபெருமலிருப்பதும்போதும், இன்னும், அவர்கள் மேளவாத்தியங்கள் அஃதஃதினேத

ளங்களுடன் பரி பாரமாக்கப் பட்டதாயிருக்க, அவர்களுடைய
மிஃறுபுகள் பாழான காடாக மனுடரைவிட்டும் ஒழிந்ததா யிரு
க்கும் ஹாலில், அவர்களுடைய மாயை ஒத்துநடக்காதனத மாற்
றி யவர்கள் கருத்தைப் பிடித்துக் குற்றமற் குற்றியுபதேசிக்கிற
பாவனையாகியவுணர்ச்சை பூட்டுகிறார்கள்.

நானும், அவர்களிற் சேர்ந்து கூத்தாடி யாகவேண்டினதே
நான் சேகரித்த இல்மினால் தோஷியாகாதிருக்க வேண்டினதே
யென்று, இது வஃஹுகளென்னும் அச்சம் பூட்டுகிறதிலெல்லா
மெத்தவும் கல்பிற்பட்டுருகும் அம்பைக்காணக் குணபாடுள்ளதா
யிருக்குமென்று (மஃதினுல்யவாகீத்து) என்கிற கித்தாபுக்சார
ணர் சொல்லுகிறார்.

உலமாக்களி லொருவர் சொல்லும்படியாய்க் கேட்டேன், மி
குதி நேரங்களில் இமாம் அஃலம்றஹிமஹுல்லா இந்தபைத்தைச்
சொல்வார்களென்று, அதின்பொருள், ஸாலிஹீன்களைப் பிரிசங்
கொண்டேன், நானும் அவர்களிலுள்ளவ னல்லாதிருக்க, அல்லா
ஹுத்தஆலா எனக்கு அவர்களைப்பிரிசங்கொண்ட பறக்கத்தினால்
சாலிகுத் தனத்தைத் தருவானென்பதை ஆசைவைத் ததுக்காக
வென்று, இன்னும், இமாம் றலியல்லாஹுஅன்கு சொன்னபைத்தி
லுள்ளது அதின்பொருளாவது நீ இல்மைப் படித்துக்கொள், ஒரு
மனுடன்இல்மைப் படித்தவனாகப் புறப்படவில்லை, இல்மை யுடை
யவன் ஜாஹிலைப்போலல்ல, மனுடர்களில், இல்மில்லாத, பெரிய
மனுடனாகிறவன், மஜ்லிசுகள் அவன்பேரிற் பொதிந்த நேரத்தில்
அவன் சிறியவனாக இருக்கும்.

இன்னும், இமாம் றஹிமஹுல்லா பைத்துச்சொன்னார்கள்
அதன் பொருள், ஜாஹிலானவர்கள் அவர்களுடைய முதல்
மிகுத்தாலும், இல்மையும், அதையுமுடையவர்களுக்குச் சரியாக
மாட்டார்கள், நாய்களுக்கு நீ, பொன்னு லாபரணதிகளைப் பூட்
டினாலும் அது யாதொரு நகையும் பூனைபுலிக்குச் சமானமாகா
தென்று, இபுனு தாவூது றஹிமஹுல்லா சொல்லுகிறார்கள், வற
ஐயும், ஹதீதையும், மூதுரைகளையும் அறிய நாடுவாயாகில், இமாம்



அபூஹனீபா றஹிமஹுல்லா இடத்திற்போவென்று, முஹம்மது
புனு பிஷ்று றஹிமஹுல்லா சொல்லுகிறார்கள், நான் இமாமி
டத்திலும் சுபுயான், றலியல்லாஹு அன்ஹு, இடத்திலும் போ
க்குவரத்தாயிருந்தேன், இமாமிடமிருந்து ஸுபுயான் றலியல்
லாஹு அன்ஹு இடம் போனால், உலகத்தார் சகலரிலு மிகுந்த
பிகுகாளிபிடத்தால் வந்தீரென்றும், அவர்களிடத்தில் நின்றும்
இமாமளவில் வந்தால் நீர் அல்கமா அஸ்வது றலியல்லாஹு அன்
ஹு ஹயாத்தாக விருந்தால் அவர் இல்டளவில் ஹாஜத்தாகிவிடு
வார்களே அப்படிக்கொத்த ஆலிமிடத்தால் வந்தீரென்று ஒரு
மலையை யொரு மலைபறிகிறவாறொத்துச் சொல்வார்கள்

அப்துல்அஸீஸ் ஸித்தாரு வறுதிய்யி றஹிமஹுல்லா சொன்
னார், இமாம அஃலமும், இமாமாலிக்கு மதீனத்து ஹறத்தில் இஷா
வுக்குப்பிறகு, இல்மிக்பேச்சைத் தொடுத்து அன்று சுபுகு அவ்வி
டத்திற்றானே நாங்களெல்லோரும் அவர்களுடன் தொழும்வரையு
மழைபொழிவதுபோற் பேச்சைப் பொழிந்து ஒருவர்பேச்சு நிற்
பாட்டவும், மற்றவர்கள் தொடுத்து ஒருவர்கொருவர் யாதொரு
சோனுதலும், வாட்டமும் இல்லா திருந்தார்கள், இடையிலுள்ள
வர்கள் அவர்கள் மதாம்பொருந்திய இல்முகளைக் கேட்பதறகு
இரவுவிடியா திருந்த தில்லையே என்று ஆசிக்கிற வரையும், யஹ்யபு
னுல் கத்தான் றஹிமஹுல்லா சொன்னார்கள், அல்லாகுத் தஆ
லாவி னனை இமாம் அஃலமுடைய யோசனையைக்காண அழகான
தை நான்காணவில்லையென்று.

யஹ்யபுனு முஈன் சொன்னார், இமாம் அபூஹனீபா றஹிம
ஹுல்லா, ஹதீதுடைய இல்மில் மிகவு முறுதியுள்ளவர்களாயும்,
பாடமானதைக் கொண்டே யல்லாமல் ஹதீ துரைப்பதில்லையெ
ன்று, அப்துல்லா ஹிபுனுல் முபாறக்குசொன்னார்கள், இமாம்
அபூஹனீபா வைக் காண வறவுள்ளவர்களை நான் கானவில்லையெ
ன்றும், அவர்களை காலிவேலை பார்க்கும்படி இபுனு ஹுபைறு
வென்கிற ஊட்சிதக்காரனார், முதல்களால் ஆசை பூட்டியும், சாட்
டைகளால் அடித்தும், வம்பித்ததிற் கொஞ்சமும் சம்மதிக்கவில்
லை, சாட்டையால் இருபதுஅடி யடித்தாரென்று, இஹ்யாஉலூ

முத்தீனில் வருகிறது, இமாம் ஷாபிஈசொன்னார்கள், இமாம்மாலி
க்கு இடம் கேட்கப்பட்டது நீங்கள் இமாம் அபூஹனீபாவைக்
கண்டீர்களாவென்று, உடனே யவர்கள் மெய்தான். இவர்களை
மிகவும் பாராதூரமான ஆண்பிள்ளையாகக் கண்டேன், அவர்களு
டைய, இல்மின் விச்சிரத்தினால் இந்தவுத்திரத்தைப் பொன்னாக்க
வேண்டுமென்று நாடினாலும் அவ்விதமாகி விடுமென்று.

தாரீகுல் கத்தீபுஎன்கிற கித்தாபில் வருகிறது, ஹறுமலதுப்
னு யஹ்யா இமாம் ஷாபிஈறஹிமஹுல்லாவைத்தொட்டுபேசிவரு
கிறார்கள் இமாம் ஷாபிஈசொன்னார்கள் மனுடரங்களும் இந்த
அஞ்சுபேருடை குஞ்சுகுழைந்தைளா யிருப்பார்களென்று, பிகு
குடைய இல்மில் ஆலியவராக நாடில்இமாம் அபூஹனீபா வுடைய
கற்றுக்குட்டிதானென்றும், புலமைபாடுவதில் கஃபுடைய பிதா
ஸுகைறுடைய கற்றுக் குட்டிதா னென்று, சாமர்த்திய வார்த்
தைகளிலும், நொடிகளிலும், முகம்மதுபுனு இஸ்ஹாக் குடைய
கற்றுக்குட்டியென்றும், நஹ்றவென்கிற இல்மில் கிஸாஈறஹிமஹு
ல்லாவுடை யகற்றுக் குட்டிகாவென்றும், சொன்னார்கள்.—ஐந்
தாவது.

ஹதீதுடைய இல்மில் இமாம்மாலிக்கிபுனு அனஸ்றலியல்
லாஹு அன்ஹுடைய கற்றுக்குட்டியாயிருக்குமென்று சொல்
வதற்கு இடமாகிறதென்று சொன்னார்கள், அல்லாஹு அஃலம்,
ஜஃபறுபுனு றபீஉ றஹிமஹுல்லா சொன்னார்கள், அஞ்சுவரு
டம். இமாம் அபூஹனீபா கூடவேயிருந்து பார்த்தேன், அவர்க
ளைப்போல் மிகுந்து வாய்மூடி யிரிப்பவரைக் காணகிலேன், இல்
முடைய கலாம்வந்தால் மடைதிறந்து வெள்ளம் பாய்வதுபோற்
பேசுவார்களென்று, ஸுபுயானுதவ்ரியிடம்கதீபுல்பக்தாதிய்யி கே
ட்டார்கள், இந்த அபூஹனீபா றஹிமஹுல்லா ஒருபோதாவது
தம்முடைய பகையனைத் தொட்டுமாகிலும், புறம்பேச நான் கேட்
கவில்லையே; அதின்ஸபபு என்னவென்றபோது, ஜவாபு சொன்னார்
கள், அவர்கள் ஆழிய புத்தியுள்ளவர்களானபடியால், தங்களம
லென்னும் பயிரை மூட்டோடே பிடுங்கும் சூறுவளியான, புறம்
பேசலைச் சாட்டார்களென்று.



அலிய்புபுனு ஆசிம்சொன்னார்கள், அபூஹனீபா றலியல்லாஹு
அன்ஹுடைய அக்குலையும்லோகத்தாரடங்கலுடைய அக்லையும்சீர்
தூக்கிபூர்த்தால் அரைவாசிப் பேர்களுடைய அக்லஇமாமின் அக்
லுமிகைத்திடுமென்று, முகம்மதுபுனுல் ஹஸனில்லைதிய்யி சொன்
னார், நான்சிறுபிள்ளையாயிருக்கும்போது, கூபாவுக்குப்போய்இந்த
ஊரில் மிகுந்து இபாத்தத்துடையவ ராரென்று கேட்டேன், அப்
போதெனக்குச் சொல்லப்பட்டது, இமாம் அபூஹனீபாதானெ
ன்று, பின்னர்கிழவனாகியபோது அவ்வூருக்குப்போய் மிகுந்த
அறிவுடையவ ராரென்று கேட்டேன், அப்போதும், அவர்களை
த்தான் அறிவிக்கப் பட்டது, உலமாக்களிற் சிலர்சொல்லுகிறார்
கள், தீனுல் இஸ்லாமின் தூண்களெல்லாம் பிலவந்தமாகவே யிரு
க்கும், மூன்று திரையுண்டா யிருக்கும்காலமெல்லாம், அதாவது
கஃபாவும் அப்பா ஸிய்யாக்களுடைய ராஜாங்கமும், அபூஹனீபா
றஹிமஹுல்லாவுடைய மதுஹபின்படி பத்வா நடக்கு தலுமெ
ன்று.

கஸ்ஸாலிய்யி றஹிமஹுல்லா சொன்னார்கள், திடனாக இமா
ம் அபூஹனீபா றஹிமஹுல்லா இல்மிலும், இபாதத்திலும், மஃ
ரிபத்திலும், வறஇலும், ஸுகுதிலும் தீர்மானமாகிய துறையை
யெற்றினவர்களாயிருந்தார்கள், தம்முடைய,இல்மைக்கொண்டு அ
ல்லாஹுத் தஆலா தன்னையே நாடினதல்லாமல்மற்றயேதொருவ
ஸ்துவையும் நாடவில்லையென்றும், இன்னும், மிகுந்தபுகழெல்லாம்
சொன்னார்கள்.

ஹாக்கிமுபுனுஹிஷாம் சொன்னார்கள், நான்ஷாமிலிருக்கும்
போது,எனக்கறிவிக்கப்பட்டது,இமாம்அபூஹனீபா றஹிமஹுல்
லாவுடைய வுண்மையும், நம்புதலு மிகுந்து பிரஸ்தாபமா யிருப்
பதை, அந்நாளையி லிருந்த பாத்துஷா அறிந்து இமாமிடம் சகல
கஸானாக்களின் திறவுகோல்களை ஒப்பிவிக்கத்தேடினதில் அவர்
கள் சம்மதிக்கவில்லைப் பின்னால், ஆசைபூட்டியும், அச்சம்பூட்டி
யும் பார்த்ததில் கபூல்செய்யாம லிருந்ததால், அனேகம் அடிபிடி
அதாபுகளை வருத்தினர், இமாம்றஹிமஹுல்லா அவர்கள் அல்லா
குத் தஆலா வுடைய அதாபைக் காணஇந்த துன்யாவுடைய ராஜா
ஙின் அதாபைத் தெரிந்துகொண்டார்கள், ஜுறைறஹு றஹிம
ஹுல்லா சொல்லுகிறார்கள்,இந்த கூபாவிற் பிறந்த நுஃமானு

புனு தாபித்து என்பவர், அல்லாகுத் தஆலாவை மிகுந்த பயப்பாடுள்ளவரென்று, ஷுஜைறகுன் ஷுகஇய்யி சொல்கிறார், அபூஹனீபா மனுடருடன் மிகுந்துபேசாமலும், வாய்மூடிதலதிகமாயும், இல்மில் யோசிப்பு மிகுதமாயுமிருந்தார்களென்று.

மபுஸூத்து என்கிறகித்தாபுடையவர் சொல்லுகிறார், ஷாபிஇய்யி இமாமுடைய முகத்தமான தில்மீதென்னு மாணாக்கர் ஷுஹைறஹுல் காலீயென்கிறவர்களிடத்திற் சொல்லப்பட்டது, இன்ன மனுடன், இமாம் அபூஹனீபா றஹிமஹுல்லாவைத் தொட்டும் புறம்பேசுகிறானென்று, உடனே அம்மனுடனைத் தருவித்து, எடா மனுடனே, ஆலத்திலுள்ள இல்முகளில் முக்காப்பங்கு இல்மைக் கொடுக்கப்பட்ட இமாமைத் தொட்டுமா புறம் பேசுகிறாய் மற்ற வுலமாக்களுக்குக் காற்பங்கு இல்மைத்தான் கொடுக்கப்பட்டதென்று.

அப்துல்லாஇபுனு முபாறக்கு றஹிமஹுல்லா சொன்னார் துன்யா அடங்கலுடைய வாழ்வையும், ஒருமனுடன்பேரிலெடுத்துக் காட்டப்பட்டு, அம்மனுடன் அதைவிட்டும் புறக்கணிக்கிறது, இந்தஅபூஹனீபா வானதால் அவரையா ஐபுசொல்லுறதென்று, கஃபுல் அஹ்பாறு றலியல்லாஹு அன்கு சொன்னார்கள் தௌறாத்துவேதத்திற்கண்டோம்,பின்னால்முகம்மதுசல்லல்லாஹு அலைஹிவசல்லமுடைய வும்மதில் ஒரு வொளியுண்டாகும், அதற்கு, அபூஹனீபா என்றுசொல்லப்படுமென்று, இதை, ஜாமிவுல் முறுமுறுத்தென்கிற கித்தாபிற் பேசிவந்தார்.

ஷைகுஅத்தாறு றஹிமஹுல்லா ததக்கிறத்துல் அவுலியா என்கிற கித்தாபில் (அலிய்யு றலியல்லாஹு அன்ஹுவைத் தொட்டும் பேசிவந்ததாகச் சொன்னார்கள், அலியார்சொல்லுகிறார்கள், என்னைக்கண்டவர்களுக்கும், கண்டவர்களைக் கண்டவர்களுக்கும் சோபனமே சோபனமென்று, நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் திருவுளமானார்களென்று, ஆனபோதே,இமாம் அபூஹனீபா நாலு அஸ்ஹாபுமார்களைக் கண்டார்களென்றும்,



(முன்யத்துல்முஸல்லீ) என்கிற கித்தாபிற் சொல்லுகிறார்கள், இமாம் ஏழு ஸஹாபாவில்நின்றும் ஹதீதைக் கேட்டிருக்கிறார்களென்று, ஜவாயிதுல்லியாவென்கிற கித்தாபில், இருபது அஸ்ஹாபிகளைக் கண்டிருக்கிறார்களென்றும், (ஜவாகிறுல் அக்காயிது) என்கிற கித்தாபில், அல்லாமத்து ஷம்ஷுத்தீன் முஹம்மது ஷாஹுல் அன்சாரிய்யி றஹிமஹுல்லா எட்டு அஸ்ஹாபிமார்களைக் கண்டார்களென்றும் சொல்லுகிறார்கள், அனஸுபுனு மாலிக்கு சொல்லுகிறார்கள் நபியுல்லா சொன்னார்கள், என்னுடைய வும்மத்திலொருவர் வருவார் அவர் நாமம் நுஃமான் இடுகுறிப்பேர், அபூஹனீபா, அவர், என்னுடைய வும்மத்தில் இலங்கும் தீபமாயிருப்பாரென்று.

இன்னும், அனசுபுனு மாலிக்கு சொல்லுகிறார்கள், நபியுல்லா என்னை,அனசேயென்று கூப்பிட்டுஅந்த அபூஹனீபாவை நீர் எத்திக்கொண்டீராகில், அவருக்கு என் சலாத்தைச்சொல்லி யென்னுடைய அமானதத்தைக் கொடுமென்றார்களென்று. சொல்லப்பட்டிருக்கிறது, அந்த அமானதமாகிறது, நபியுல்லா அருந்திய ஈத்தம் பழத்தில் நின்றுமிஞ்சியஒரு சுளையென்றும்;இன்னும், ஒரு றிவாயத்திற் சொல்லப்பட்டது, அந்த, அமானதமாவது, நபியுல்லா அவர்கள் அனஸுடைய வாயில் உமிழ்ந்து அந்த வுமிழ்நீரை அனசு ஒரு துண்டுப் பிடவையிலூட்டி யுலர்த்தி யதைப் பதனமாக வைத்திருந்து, இமாம் அபூஹனீபாவை யெத்தி அந்த அமானதத்தை ஒப்பிவித்து இமாம் அதைத் தின்றவுடன் அவர்கள் கல்பென்னும் பூமியில் இல்மென்னும் ஆறுகளுண்டாகி அதனாற் பூராயமென்னும் வாய்க்கால் வரம்பினால் இபாதாத்தென்னும் விருட்சாதிகள் தளிர்த்து வறகு ஸூகுது, மஃரிபா இலைகள், பூக்கள், கனிகளுண்டாகி அதனாற் சகலர்களும் இன்பம் பெறுகிறார்கள் (ஜஅலனல்லாகுமிம்மன் அஹப்பூஹு.)

(முகத்தமா) ஷறஹு அபில்லைதில். ஒரு ஹதீது பேசிவரப்படுகிறது, நபியுல்லா திருவுளமானார்கள், ஆதம் அலைகிஸ்ஸலாத்துக்கு நான்பிள்ளையாக விருந்ததால்என்னைக்கொண்டுமலாயிக்கத்துகளைப் பெருமை பாராட்டினார்கள், நான்பெருமைபாராட்டு

கிறேன் என்னுடைய வும்மத்தில்வரும் நுஃமான் அபூஹனீபாவைக் கொண்டும், இன்னும், அன்பியாக்களெல்லாரும். என்னைக் கொண்டுபெருமை யடிக்கிறார்கள், நான் அபூஹனீபாவைக்கொண்டு பெருமையடிக்கிறேனென்றும், என்னைப் பிரியங் கொண்டவன், அவரைப் பிரியம் கொள்வான், என்னைக் கோபமாக்கினவன் அவரைக்கோபமாவானென்றும்.

ஜூர்ஜானிய்யி றஹிமஹுல்லா ஸஃதுபுனு அப்தில்லாஹித் தஸ்தரிய்யி றஹிமஹுல்லா வைத்தொட்டும் பேசிவருகிறார்கள், அவர்கள் சொன்னார்கள், மூசாநபி, ஈஸாநபி இவர்கள் உம்மத்தில் இமாம் அபூஹனீபாவைப்போல் ஒருவர் உண்டாகியிருந்தால் அவர்களில் யகூதிகளும், நசாறாக்களும் உண்டாகிறதில்லை யென்றும், இபுனுல்ஜவ்சிய்யி றஹிமஹுல்லா, இமாம்அஃலமுடையகீர்த்திகளில் (அல்இந்திசாறு) என்றுபேர் வைத்து ஓர்கித்தாபு இரண்டு பாகமாய்க்கோர்வை செய்தார்கள், அதின்தொகையாகிறது றசூல்ஸல்லல்லாஹு அலைஹிவசல்லமுடைய முஃஜிஸாத்தில் இந்த இமாமுண்டாகினது பாரதூரமான முஃஜிஸாத்தில்நின்றுமாயிருக்குமென்றும், அவர்களுடைய மதுஹபு ஆலமெல்லாம் பரந்திருப்பது அத்தாட்சியானதுக்குப் போதுமென்றும், பின்னாளையில் ஈசாஅலைகிஸ்ஸலாம் நான்கு மதுஹபுகளுக்கு மொத்தமாய்த் தெண்டிப்பதுடன், அபூஹனீபா றஹிமஹுல்லாவுடைய மதுஹபைக் கொண்டு ஹுக்கும் செய்வார்களென்றும் சொல்லுகிறார்கள்.

இன்னும், சொல்லுகிறார்கள், பாரவான்களான இமாம்கள் குதுபுமார்கள், அவுலியாக்கள் அவர்கள் மதுஹபைத் துயர்ந்து நடந்திருக்கிறார்கள். இபுறாஹீமுபுனு அதுகம் ஷக்கீக்குல் பல்கிய்யி மஃறூபுல் கர்கிய்யி, அபூயஸீதுல் பிஸ்தாமிய்யி, புலைலுபுனு இயாலு, தாவுதுத் தாஇய்யி, அபூஹாமிதுல் லப்பாபு, கலபுபுனு ஐயூபு, அப்துல்லாகிபுனுல் முபாறக்கு, வக்கீஉபுனுல் ஜற்றாஹ், அபூபக்ரில்வற்றாக்கு றலியல்லாஹு அன்ஹும், இன்னும், அநேகர்களும் துயர்ந்து நடந்து பலம் பெற்றார்கள்.



தரீக்கத் துடைய (இல்மில் முகத்தமான) உஸ்தாது அபுல்காசிமில் குறைஷிய்யி சொன்னார்கள், அபூஅலிய்யித்தக்காக்கு சொல்லிகிறார்கள், இந்ததரீக்கத்தை அபுல்காசிம் நஸறாபாதிய்யி யென்கிறவர்களில்நின்று மெடுத்தேன், அவர்கள், ஷைகுஷிபுலிய்யி றஹிமஹுல்லாவில்நின்றும், அவர்கள், ஸரிய்யுஸ்ஸிக்திய்யில் நின்றும், அவர்கள், மஃறூபுல்காகிய்யில்நின்றும், அவர்கள், இமாம் அபூஹனீபாவில்நின்றும் எடுத்தார்களென்றும் சொன்னார்கள், ஆனபோதே, மன்கூலிலும், மவுக்கூலிலும், உசூலிலும், புறூஇலும், ஷரீஅத்திலும், தரீக்கத்திலும், லாகிறிலும், பாத்தினிலும், உஸ்தாதாகினார்கள்.

இன்னும், இமாம் ஷாபிஇய்யி றலியல்லாஹு அன்ஹு சொன்னார்கள், அல்லாவி றுஹ்ணானபிக்குடைய இல்மை அபூஹனீபா றஹிமஹுல்லாவுடையை தில்மீதாகிய முகம்மதுபுனுல் ஹஸனிஷ் ஷைபானிய்யி யுடைய கித்தாபைக்கொண்டேயல்லாது படிக்கவில்லையென்று, இஸ்மாஈலுபுனு அபீறஜாஇன் றஹிமஹுல்லா சொன்னார்கள், நான் காலீ முகம்மதுஷ் ஷைபானிய்யை மனாமிற் கண்டு அல்லாஹுத்தஆலா வுங்களுக்குக்கென்ன செய்தானென்றுகேட்டதற் கவர்கள்சொன்னார், அல்லாஹுத்தஆலா என்பிழையைப் பொறுத்துமுகம்மதே யும்மை அதாபுசெய்யநாடுவேனாகில். உம்மில் இந்த இல்மைவைக்க மாட்டேனென்று சொன்னானென்று, பின்னர், அபூயூசுபு எங்கேயிருக்கிறார்களென்று கேட்டேன், நம்முடைய மாளிகைக் கிரண்டு தறஜாவுக்கு மேன் மாளிகையிலிருக்கிறார்களென்று சொன்னார்கள்.

பின்னர், இமாம் அபூஹனீபா றஹிமஹுல்லா எங்கேயிருக்கிறார்களென்று கேட்டேன், அவர்கள் இல்லிய்யீன் என்கிற சொர்க்கத்தின் மேன்மாளிகையிலிருக்கிறார்களென்றுஞ் சொன்னார்கள் (நபஅனல்லாஹுபிஹிம்ஜமீஆ) சமக்ஷரிய்யி றஹிமஹுல்லா தவாபிவுல் கலிம் என்கிற கித்தாபிற் சொல்லுகிறார்கள், பூமியை மலைகளைக் கொண்டு முளையாகத் தரிபாடாக்கப்பட்டதுபோல் ஹனீபிய்யத்தான மார்க்கத்தை அபூஹனீபாவின் இல்மென்னும் முளைகளாற் றரிபடுத்தப் பட்டதென்று (றலியல்லாஹு அன்ஹு.)

## ஆறாம் பிரிவாகிறது.

இமாம் அபூஹனீபா றஹிமஹுல்லாஹு அவர்கள் தெண்டிப்பிலும், ஹக்குடைய வழிபாட்டில் அவர்கள் திருமேனியை நடை பழக்கியதிலும் பேசுகிறதாயிருக்கும்.

கஸ்ஸாலிய்யி றஹிமஹுல்லா சொல்லுகிறார்கள், இமாம் அபூஹனீபா றலியல்லாஹு அன்ஹு அவர்க்கத்தில் இரவையிற் பாதியை இபாதத்தினால் ஹயாத்தாக்கிக்கொண்டே வருங்காலத்தில், ஒரு வழிப்போக்கான மனுடனிவர்களைப்பார்த்துச் சைக்கினையாய் இன்னொருவரிடம் இந்த அபூஹனீபாவாகிறவர், இராவடங்கலும், விழித்துக்கொண்டே வணங்குவாரென்று சொன்னது, இவர்கள் காதிலே றவும், நான் அல்லா இடத்தில் நாணுகிறேன், என்னில் இல்லாத வன்னிப்பைக்கொண்டு சொல்லப்படுவதாலென்று சொல்லிப் பின்னர் இரவுமுழுதும் வணங்கினார்கள்.

(ஷெய்கு அத்தாறு றஹிமஹுல்லா) ததிக்கிறத்துல் அவுலியாவிற் சொல்லுகிறார்கள், அபூஹனீபா இமாம் அவர்க்கத்தில் முந்நூறு (றக்அத்து) எந்த இரவிலும் தொழுதுகொண்டுவரும் நாளில் வழிப்போக்கில் ஒரு பெண்பிள்ளை இவர்களைப்பார்த்துச் சைக்கினையாய் இன்னுமொரு பெண்பிள்ளையிடம், இவர் ஒரு இரவில் ஐந்நூறு றக்அத்துத்தொழுவாரென்றாள், பின்னர், ஐந்நூறு றக்அத்தை ஆதத்தாய்த் தொழுதுவருங்காலத்திற் சிறுபிள்ளைகள் ஒருவருக்கொருவர் சைக்கினையாய் இவர் ஒரு இரவில் ஆயிரம் றக்அத்துத் தொழுவாரென்று சொன்னார்கள், அதைக் கேட்ட நாள்முதல் ஆயிரம் றக்அத்துத் தொழுவதை ஆதத்தாக்கிக்கொண்டார்கள்.

இன்னும், குறுஆனில் அவர்கள் செய்யாத நன்மைகொண்டு புகழப்படவுவப்பார்களென்று கெட்ட மனுடருடைய வன்னிப்பிற்சொன்ன தாழ்மையில் நானாகிப்போறதைப் பயந்திருக்கிறேனென்றும் சொல்லிக்கொண்டார்கள், பின்னர், அவர்கள் பாகத்தைத் தரையில் வைக்கவில்லை, இஷாவிற் செய்த வுழுவினால், நாற்



பதுவருஷகாலம் சுபுஹு தொழுதார்கள், அவர்களிரண்டு முழங்தாளும் ஒட்டகையின் முழந்தாள்போற் காய்த்துபோயிருந்தது, சுஜுதினிருப்பின் மிகுத்ததால் (றலியல்லாஹு அன்ஹு.)

தாவுதுத்தாஇய்யி றஹிமஹுல்லா சொல்லுகிறார்கள், இமாமை இருபதுவருடம் சேர்ந்து கூடவேயிருந்து பார்த்தேன, அதிலே அவர்கள் ஒருநாளாவது கால்நீட்டி யிருக்கவும், தலைதிறக்கவும் காணேன், தனித்தயிடத்திலும், கூட்டத்திலும் காணவில்லையென்று, ஒருபோது இமாம் அவர்களிடம் சொல்லப்பட்டது தனித்த நேரத்திற் காலைநீட்டிக்கொண்டு கொஞ்சம் ருஹத்துப்பெறுங்களென்று. இவ்விதம் சொல்லியபோது அவர்கள் சொன்னார்கள், தனித்த இடத்தில் அல்லாவுடன் அதபாயிருப்பது மிகவுமேற்றமென்று.

இன்னும், ஒரு ரிவாயத்தில் அவர்கள் ஒரு குழிதோண்டி அந்தக் குழியிக்குள்ளாலே காலை நீட்டிக்கொள்வார்கள், அதைக் கேட்கப்பட்டபோது, சொன்னார்கள், எந்தக் கோணத்திலாவது (குறுஆன் முஸ்ஹபுகள்) உண்டாயிருக்குமல்லவா அதனாலேதான் இவ்விதம் செய்கிறேனென்று சொன்னார்கள்: அஸதுபுனு அம்று சொல்லுகிறார்கள், இமாம் அபூஹனீபா றலியல்லாஹு அன்ஹு அல்லாஹுத் தஆலாவைப் பயந்து இரவையில் அழுகிறசத்தம் கேட்டு அயல்பாகக்காரரெல்லாம் இறங்குவார்களென்று.

முஷ்இறுபுனுகிறும் சொல்லுகிறார், இமாமாகிறவர்களெ தண்டிப்பிலும், துன்யாவை வெறுத்ததிலு மஷ்கூறாயிருந்தார்கள், அவர்கள் மஜ்லிசில் காலை நேரமேபோய், அவர்கள் செய்யும் கருமங்களைப் பார்த்துக்கொள்ள வேணுமென்று நாடித்தரிபட்டேன், ஸுபுகுதொழுது (அவுறாது வலாயிபு) ஓதி முடித்தவுடன் கித்தாபுகள் ஓதிக்கொடுத்தார்கள் ளுகறுமட்டிலும், பின்னர், ளுகறு தொழுது முடித்து; அஸறுவரையிலும் இல்மைக்கொண்டுதான் பாராக்கானார்கள், பின்னர், மகரிபுவரையிலும் அவ்விதமிருந்து இஷாத் தொழுதார்கள், அப்போது, என்மனதில் நினைந்தேன்

இவர்கள் இபாதத்துச்செய்ய எப்போதனிப்பார்களென்றுபார்க்க
நாடி அந்தபள்ளியிற் றனிருந்துகொண்டேன் (ஸுபுஹானல்லா)
ஊருங்காலமும் ஒடுங்கினவுடன் தாங்கள் வந்து பள்ளிக்குள் நு
ழைந்து கிழக்கு வெளுக்கும்வரையில் ஒரே தொழுகையாகத்
தொழுதார்கள், இவ்விதம், மறுநாளும் பார்த்தேன், அவ்வித
மாகத்தா னிருந்தார்கள், அப்பொழுது நான் நற்கருத்து வைத்
துக்கொண்டேன் இவர்களை யொருபோதும், பிரியாமலிருக்க
வேணுமென்று.

இபுனு அபீமஆதுற ஹிமஹுல்லா சொல்லுகிறார்கள்குறித்த
முஷுஇறுபுனு கிறும் ஆகிறவர், இமாம் அஃலமுடைய பள்ளி
யில் அவர் தொழுதார், அதில் சுஜூதிற்றனே, அவருடைய றா
ஹை வாங்கப்பட்டதென்று, தஃதீபுல் கமால் என்னுங் கித்தா
பில், இமாமுல் ஹாபிது முஷுஇறுபுனு கிறுமைத்தொட்டும்
பேசிவருகிறார்கள், ஒரு இராவையிற் பள்ளியிற்போனேன், அங்கே
யொருமனுடன் தொழுகைநிலையில் நின்று குறுஆன் ஓதுகிறார்,
இவர் எந்தசூறத்தில், எந்தஜுசுவில் முடிக்கிறார் பார்க்கலாமெ
ன்றே நானும்அந்த ஓதலுடைய தறுத்தீலையும், தறுத்தீபையும்,
அழகையும் ஆசையாய்க் கேட்டுக்கொண்டேயிருந்தேன், அப்போ
தவர் குறுஆன்முழுமையும் ஒரு றக்அத்திற்றனே முடித்துப் பின்
னர், தொழுது சலாம் வாங்கின வுடன் அவர் முகத்தைப் பார்த்
தேன், பார்க்கும்போது, அவர்கள் இமாம் அபூஹனீபா என்று
அறிந்து கொண்டேன்.

இபுனுமசுஅபு றஹிமஹுல்லா சொல்லுகிறார்கள், ஒருறக்
அத்தில் குறுஆன் முழுமையும் ஓதித் தமாமாக்கினது, இமாம்
களில் நின்றும் நாலு பேர்களென்று, உதுமானுபுனு அப்பான்
தமீமுத்தாரிய்யு, சஃதுபுனுஜுபைர், அபூஹனீபா றலியல்
லாஹு அன்ஹுமென்று, எஃயபுனு நஸ்ரின் றஹிமஹுல்லா
சொன்னார்கள், இமாம். அபூஹனீபா றஹிமஹுல்லா றமலானில்
இரவில் ஒருகத்தமும், பகலில் ஒருகத்தமும், இந்தவிதம் குறுஆன்
முப்பதும் அறுபது தரம் தமா மாக்குவார்களென்றும்.

ஹபுசுபுனு அப்துற் றஹ்மான் றஹிமஹுல்லா சொன்னார்
கள்; இமாம் றலியல்லாஹு அன்ஹு முப்பது வருடகாலம் ஒரு



றக்அத்தில் குறுஆனைத்தமாமாக்கி இரவெல்லாம் ஹயாத்தாக்கிற
வர்களாயிருந்தார்களென்று, ஷெய்கு அத்தாறு றஹிமஹுல்லா
தது க்கிறத்துல் அவுலியாவிற் சொல்லுகிறார், இமாம் அபூஹனீபா
றஹிமஹுல்லா. திருவுளமானார்கள், ஒருபோது, ஒருஈமானுக்குத்
தாழ்ச்சினை, அவர் ஈமாந் தனத்துக்காய்ச் செய்தேன், அந்தத்
தோஷத்தினால், குறுஆனை ஆயிரம் தரம் தமாமாக்கி அதற்குத்
தெண்டகுற்றமாக்கினேனென்று, இன்னும், றலியல்லாஹு அன்
ஹு திருவுளமானார்கள்ஒருமஸ்அலாஎனக்குப்பிசகிக்கொண்டால்
குறு ஆனைநாற்பது தரம் தமாமாக்குவேன், அல்லாத்த ஆலா அ
ந்த பறக்கத்தால் அந்தமஸ்அலாவை வெளியாக்கித் தருவானெ
ன்று.

றவுலுல் பாயிக்கென்கிறகித்தாபிற் சொல்லுகிறார்கள், அபூஹ
னீபா றஹிமஹுல்லா தங்கள் மரண தினத்தில் குறுஆனைஏழாயி
ரம் தரம்தமா மாக்கினார்களென்று. காசிமுபுனுமிஃதான் றஹிம
ஹுல்லா சொன்னார்கள், அபூஹனீபா றஹிமஹுல்லா குறுஆ
னில் ஓராயத்தைமடக்கிமடக்கி ஓதிச் சாளயப்பாடாய் அழுது
கொள்வார்களென்று, அதின் மஃனா வாகிறது. கியாமத்து நாளா
கிறது. அவர்களுக்கு வாக்குக் கொடுத்தநாளா யிருக்கும்.
அது மிகவும் கசப்பாகவும், முசீபத்துடைய தாகவும், இருக்குமெ
ன்று, இபுனு றுபிதுறஹிமஹுல்லாசொல்லுகிறார் ஒருபோது,
நான்இமாமுடன் இஷாத்தொழுது மனுடரெல்லாம் போனபின்
னர், அவர்களிடம் ஒருமஸ்அலாக் கேட்டறிந்து கொள்ளவேண்
டித் தனித்துநின்றேன், ஆனால், என்னை அவர்கள் அறியார்கள்,
அவர்கள் தொழுது (வவக்கானா அதாபஸ்ஸமூம்) என்கிற ஆயத்
தில் வந்துசேரவும், அதைத் தானே மடக்கிமடக்கி விடிகிறவரை
யும் ஓதினார்கள். (அதின் மஃனா) விஷம்பொருந்திய நஞ்சுக்காற்
றானநரகத்தின் அதாபைவிட்டும் நம்மைக் காப்பாற்றினானென்ப
தாம்.

இன்னும்ஒருபோது, கறுபாக்களில்நின்று மொருபள்ளியில்
இமாம் அபூஹனீபா றஹிமஹுல்லா தொழும்போது றுக்கூஇலா
னவுடன் முகட்டில் நின்றும ஒரு பாரதூரமான பாம்பு அவர்
கள் மேலில் விழுந்தது அவர்கள் தொழுகையைவிட்டும் கொஞ்ச

மாவது சறுகவில்லை பின்னர், அந்தப் பாம்பை அடித்துப் பார்க்குமிடத்தில் ஒரு ஆளுடைய சுமைக்கிக் காணுமாயிருந்தது, (தன்பீஹான்) உணர்ச்சையை வருத்திவிக்கிறது.—இமாம் 'அஃலமுடைய தொழுகையின். றக்அத்துத் தொகைகள்போலும்,. அவர்கள் ஓதிய கத்தமுடைய தொகைபோலும், ஒருவலீமார்களும்செய்யக்காணவில்லை, அல்லாஹுத்த ஆலா அவர்களை அதற் காகத் தானேபடைத்திருப்பதால், அவர்களுக்கு மிகவும் லேசாக இருக்கும்.

இன்னும், அவுலியாக்களுக்குக் காலமும். தலமும் சுருட்டப்படும்போல் (ஹருபுகளும்) செயல்களும், சுருட்டப்படும், ஓதலில் அவர்களுக்கு ஷத்து, ஸபர், சேர், பேஷு, திருத்தும்; தலம்; அன்னத்து இவைகளில் யாதொன்றும் தப்பாது, ஆகையால், உடற்பிறந்தானே, அந்த இமாம்களான அவுலியாக்களைக்கொண்டு மெண்ணத்தைக் கெடுதியாக்குகிறதால், ஓடுக்கம் கெட்டமுத்திரை போடப்படும், அல்லாஹுத் தஆலா அதைவிட்டும் நம்மனைவரையும் காப்பானாகவும்.

## ஏழாம் பிரிவாகிறது.

இமாம், அஃலமுடைய பேணுதலிலும், துன்யாவை வெறுக்குதலிலும் பேசுறதாயிருக்கும்.

ஷக்கீக்குபுனு இபுறுகீம்சொல்லுகிறார்கள், அபூஹனீபாறஹிமஹுல்லாவுக்கு யாபாரத்திற் கூட்டாயிருக்கும் (பிஷ்று)என்கிறவர் மிசுறுக்கு வியாபாரஞ்செய்யப்போயிருந்தார், அவர்பேருக்கு ஒரு காகிதமும், எழுதி, எழுபது பட்டுப்பிடவையு மனுப்பினார்கள், அக்காயிதத்திற்றானே யெழுதினார்கள், இன்னமார்க்குள்ளபட்டில் ஒரு பழுதிருக்கிறது, அதை வாங்கிறவர்களுக்கு அந்தப்பழுதைத்து லாம்பரமாய் வெளியாக்கி வில்லுமென்று.

பின்னர், அந்த (பிஷ்று) என்கிறவர் பிடவையெல்லாம் ரொக்கமாக விற்றுப்போட்டுக் கூபாவுக்குவந்து இமாமிடம்விற்றுமுதற் பணத்தைக்கொடுக்கும்போது, இமாம், அவரைப்பார்த்து, நீர் இன்ன பிடவையிலுள்ள பழுதை நானெழுதியபடி வெளியாக்கி வித்தீரா வென்று கேட்டார்கள், அதற்கவர், நான்மறந்தல்லோ விற்றுப்போட்டேனென்று கைசேதப்பட்டார், அப்போது, இமாமவரோடும், அதை வாங்கினவரை அறிந்து அவருடைய கொள்கிறயத்திற் பழுதுக்காய் விலையைத் தள்ளிக் கொடுக்கவேணுமாவென்று கேட்டதற்கு, ஒரு விதத்திலும் அவர் இன்னாரென் றறிந்து கொள்ள முடியாதென்று சொன்னபடியால், இமாம் றலியல்லாஹு அன்ஹு, உடனே அந்தக் கைச்சவடத்தின் விற்று முதற்றொகை முழுமையும்(சதக்காச்)செய்துபோட்டார்கள், அதிலே இலாப முப்பத்தினாயிரம் வெள்ளிக்காசா யிருந்தது (இமாம்) சொன்னார்கள் அதுபிசகுதலானமுதலாகிப்போனதால்அதனளவில் எனக்கு ஹாஜத்தில்லை யென்று சொல்லிப் போட்டார்கள், இவ்விதம் (பதாவில்மத்லபு) என்கிற கித்தாபிலும் வருகிறது,



(தஅக்கிறத்துல் அவுலியாவிற்) சொல்லுகிறார்கள், ஒருமனுடன் இமாம் அஃலமுக்குச் சில முதற் கடன்கொடுக்க வேண்டியவராயிருந்தார், அவர்தெருவில் இமாமுடைய வொருசீஷர் மவுத்தான தற்காய் அவர் ஜனாஸாவுக்கு இமாமவர்கள் ஹாசிறுனார்கள், அப்போது வெயில் அகோரத்தினால் மனுடரெல்லாம் நிழல்தேடி நின்றார்கள், அந்த லெக்கில் அந்தக் கடன்காரமனுடன் வீட்டின் தாவாரத்தி னிழலல்லாமல் வேறில்லை, இமாமவர்களை அந்த நிழலளவில் அழைக்கப் பட்டவுடன் எனக்கு, அந்த நிழலுடையார் கடன்தர வேண்டிய திருப்பதால், அந்த நிழற்கொண்டு பிரயோசனம் பெறுவது ஹலாலல்ல,. அதுவட்டியாகும், ஏனென்றால், பிரயோசனத்தை இழுக்கும் கடனடங்கலும்வட்டியென்று நபிசல்லல்லாஹு அலைகிவசல்லம் திருவுளமா யிருப்பாதா லென்று சொல்லி வெயிலிலேயே நின்றார்கள்.

இன்னும், அந்தக் கித்தாபிற்றான் வருகிறது, கூபாவில் ஒரு ஆடு களவுபோனதை இமாம் அவர்கள் அறிந்து அவ்வூரில் அவர்கள் ஆட்டிறச்சி சுத்தமாய்த் தின்னவில்லை, மிகுதிவேளையிலும் ஆடு எவ்வளவு காலம் ஜீவித்திருக்குமோ அத்தனைநாட்செல்லும் வரையிற் றின்னவில்லை, ஒருநேரம் அந்த ஆட்டின், இறச்சியாயிருந்து விடப் போதுமென்பதைப் பயந்ததுக்காகவேண்டி, இன்

னும், அந்தக் கித்தாபில் வருகிறது, இமாமவர்களை, காலீ வேலை பார்க்கும்படி அந்நாளிருந்தராஜா வம்பித்ததில் விலகிக்கொண்டதற்காய் அன்னீதமாய் ஜயில்கானவிற் போட்டிருக்கும்போது ஒரு அன்யாயகார சிபாய் ஒரு கலம் கொண்டுவந்து சீவிக்கேட்டதற்கு, இமாம் விலகிக்கொண்டார்கள், அவன் மிருதமெல்வாம் அலுக்கொடுத்துத் தொந்தறைசெய்தும், ஒரேபிடியாய் பாட்டேனென்று சொல்லிப் போட்டார்கள், பின்னர், இமாமை இது காரியத்திற் கேட்கப்பட்டவுடன் சொன்னார்கள், அல்லாஹுத்தஆலா குர்ஆனிலே திருவுளமாயிருக்குறான், கியாமத்துநாளிற் சொல்லபபடும், மலக்குகளே நீங்கள் சேகரியுங்கள், அன்யாயகாரரையும், அவர்களுக்குதவியானவர்களையுமென்று ஆனதினால் அந்தக்கூட்டத்தில் னின்றும் நான் ஆகிவிடுவேனென்பதைப்பயந்தேனென்று சொன்னார்கள்.

இன்னும், அந்தக் கித்தாபில் வருகிறது, இமாம் அவர்கள் ஒருபாதையில் நடக்கும்போது, அந்தப் பாதையிலுள்ள சேற்றுக் கழியண்ணில் னின்றும் ஒருநகத் தளவுபோல் அவர்களுடுமானத்திறெறிந்தபோது (திஜிலா) என்கிற ஆற்றுக்குப்போய் உடனே, அதைக் கழுகிப்போட்டார்கள், அவ்விடம் இருந்தவர்கள் இமாமே நீங்கள் குறித்தகதரின் மட்டும் நஜீஸு உடுமானத்திற் பட்டாற் பொறுக்கப்படுமென்று (மதுகபு) வைத்த நீங்கள் இந்தச் சொற்ப(கத்று)கழிமண் தெறித்ததுக்காய் இத்தனை தூரம் போய்க் கழுகினீர்களென்றபோது, (தில்க்கபத்வாய வஹாதாதக்வாய) அஃதென்னுடைய பத்வாவாகும், இஃதென்னுடைய தக்வா வாகுமென்று எழுகம் சொல்லுகிறார்கள் காணவில்லையா, நபிசல்லல்லாஹு அலைஹிவசல்லம் (முஅத்தின்பிலால்) தமக்காய் ஒருமிணறுத் தண்ணீரையாவது தங்கறிப்புச் செய்யவேண்டாமென்று விலக்கி அவர் பெண்சாதிகளுக்கு ஒருவருஷத்தின் வஜீபணத்தைத் தங்கரிக்க ஆமாக்கினார்களென்பதை யுதாரணமாக்கினார்கள்.

இன்னும், அந்தக் கித்தாபில் வருகிறது, அவர்கள் சிஷராகிய முகய்மதுபுனுல் ஹசன் றஹிமஹுல்லா, மிகுந்து முகவஜீகரமுள்ளவர்களாயும், முகவரைகிரு வாலிபராயுமிருக்கக்கண்டார்கள், பின்னர், அவர்கள் கித்தாபு ஓதும்போதெல்லாம் அவர்கள்



(மத்றசா)விலுள்ள தூண்மறைவில் இருந்து ஓதிக்கொள்ளும்படி கற்பித்து அவர்களுக்குத்தாடி முளைக்கும்வரையில் அவர்கள் முகத்தைக் காணாதவர்களா யிருந்தார்கள், இன்னும், அந்தக் கித்தாபிலும், மற்றதிலும் வருகிறது, சிலபேர்கள் கூடி ஒரு பள்ளிகட்ட நாடிப் பணமெடுத்ததில் இமாமிடத்திலும் வந்து அதற்காக ஈவு கேட்டதில் யாதொரு ஜவாபும் சொல்லாமல் மௌனமும் விடுத்தத்தில் மிகுந்து சலிப்பாகச சொல்லுகிறார்கள், நான் (பகீல்) தனத்துக்காகத் தாதிருக்கவில்லை, என்கிலும், ஹலாலான முதலைக் கழிமண்ணிலும், சாந்திலும், தண்ணீரிலும் செலவாக்கப் படுகிறதில்லை யென்று வருவதால், நம்முடைய முதலில் ஏதோவொரு (ஷுபுஹத்து) என்னும் பிசகுதலானமுதற் புகுந்து இருந்ததால், அதற்கு இவ்விதமான செலவு நேரிட்டிருக்கிறதென்று கவனித்ததல்லாமல் வேறில்லையென்றும், பின்னர், இது வீண்சிலவல்லவே, பள்ளி கட்டுவதாகல்லோ கேட்கிறோமென்று சொன்னவுடன், இமாம் சொன்னார்கள், பள்ளிகள் மிகுந்து தொழுகிறவர்கள் குறைவது கியாமத்தடையாளமென்று வருவதுடன், இந்த வூரில் ஜமாஅத்தில்லாமல் எத்தனையோ பள்ளி பாழாய்க்கிடப்பதுடன் புதியதாகவும் பள்ளிகட்ட ஆரம்பித்தீர்களென்றுசொல்லி திரப்பமான பொருந்தக் கேட்டுடன் ஒருகட்டிப் பொன் கொடுத்து விட்டார்கள்.

பின்னர், சிலநாட்சென்றபோது, அவர்கள், அந்தக் கட்டியைக்கொண்டுவந்து இதின் மாற்றுக் குறைத்தலாலெடுபடவில்லையென்று மடக்கிக் கொடுத்துவிட்டார்கள், அதனாற் சந்தோஷமாகினார்கள், சில கித்தாபுகளில் வருகிறது (அபூஜஃபறுல்மன்சூறு) என்கிற ராஜாவானவர் இமாம் றலியல்லாஹு அன்ஹுவை பத்வாக்கள் கொடுக்கவேண்டாமென்று விலகியிருந்தார்கள், இவ்விதமிருக்கும்போது, இமாம் தங்கள் குமாரத்தியுடன் மாலை வஜீபனம் பகியாறினபோது, அந்தக் குமாரத்தியானவர்கள் பற்குத்தினதிற் கொஞ்சம் இரத்தம் பிறப்பட்டது, உடனே தகப்பனிடத்தில் இதனால் (உலுவு) முறியுமோ என்று கேட்கவும், நீயுன் தமையனிடம் கேட்டறிந்துகொள், என்னை ராஜாவானவர் பத்வாச்சொல்ல வேண்டாமென்று விலகியிருக்கிறாரென்று சொன்

னார்கள் (சுபுஹானல்லா) தங்கள் நபுசைத் தங்கள் ஸமானிலுள்ள சுல்தானுடைய சொல்லுக்குமாற்றம் செய்யச் சம்மதிக்கவில்லை அஃதேனென்றால்.

அல்லாஹுத் தஆலா குறுஆனில் உங்களில் நின்றுமுள்ள ராஜாக்களுக்கும்வழிபட்டுக்கொள்ளுங்களென்றுஏவியிருப்பதால், இதில் நீகேட்பியாகில், இராஜாவுடைய ஏவலுக்காய் (காலீ) வேலைக்கி ஏவ்வற்பட்டாரகளில்லையென்று இதற்குச் ஜவாபு அநேகமிருப்பதில், அந்த வேலையார் சங்கடங்களும், தொல்லைகளு முண்டாகிறதிலே தங்கள்பேரிற் பறுலு ஐனாகாத்ததாயும், தங்களைப்பாத்திரமானவர்க ளல்லையென்றென்னும் பெருந் தன்மையு முண்டாயிருப்பதால் (றவுலுல் பாயிகு) என்கிற கித்தாபில், வருகிறது, இமாமுடைய நாளையிலுள்ள சுல்தானாகிறவர், இமா மவர்களுக்கும் இபுனு அபீதுவைபு றலியல்லாஹு அன்ஹுமாவுக்கும் சில முதல், ஹதியாவாக அனுப்பினார்.

இபுனுஅபீ துவைபு சொன்னார்கள், நான்இந்த முதலை அந்த இராஜாவானவர் தான்புசிக்கவே சம்மதிக்க மாட்டேன், அவ்விதமிருக்க என்தனக்கு நான் எப்படிப் பொருந்துவேனென்று, இமாம் சொன்னார்கள், அந்த முதலில் நின்றும் ஒருதம்படியையாவது என் கையினாற் றொடச்சொல்லி என்னை அடிக்கப்பட்டாலுந்தொடமாட்டேனென்று தஃதீபுல் கமாலென்னும் கித்தாபில் (காரிஜத்துபுனுமச்அபு) சொல்லுகிறார் (அபூஜக்பறுல்மன்சூறு) என்னும் இராஜ அபூஹனீபா றஹிமஹுல்லாவுக்காகப் பதினாயிரம் வெள்ளிக்காசை நன்கொடை கொடுப்பதற்காக, இமாமையழைத்து வரும்படியொரு ஆளையனுப்பினார், இமாம் உடனேயென்னிடம் வந்து யோசித்துச் சொன்னார்கள், இந்த ராஜாவுடைய நன்கொடையை வேண்டாமென்றாற் கோபமாவார், அதையொப்புக்கொண்டால் என்னுடைய தீனில் நான்பொருத்தக் கேடான வஸ்துவந்து நுழைந்திட்டது, இதையாதாமொரு நோவுமில்லாமற் றட்டிவிட வேணுமே, இதற்கு வழியென்னவென்று வுசாவினார்கள்.



அதற்கு நான்சொல்லிக்கொடுத்தேன் வந்ததூதனிடம்சொல்லி யனுப்பும்படி, அஃதென்ன விதமென்றால், நான்ராஜாவுடைய நன்கொடையின்பேரில்ஹாஜத்தில்லாதவனென்று சொல்லும்படி, இவ்விதமாய்ச் சொல்லியதைத் தூதன்போய்ச் சொன்னவுடன் ராஜாதன்மனதில் இந்தப்பதினாயிரத்தைப் பெரிதாயென்னியல்லோ அழைத்தோம், இதின்மேனத்தை அவரறியாமற்போனபடியாற் கொடுக்கக் கூடாதென்று தன்னுடையபெருமையை யோசித்து நிறுத்திப்போட்டார், இமாம் அவர்கள் இதையறிந்து அல்லாவை (ஸுக்று) செய்துகொண்டார்கள்.

(இஹ்யாவுலூமுத்தீன்) என்கிற கித்தாபில், கஸ்ஸாலிய்யி றஹிமஹுல்லா சொல்லுகிறார்கள், முகம்ம துபுனு இஸ்ஹாக்கு அவர் கூட்டாளி மாரிலொருவரைத் தொட்டும் சொல்லுகிறார், அவர் இமாமைப் பார்த்து உங்களுக்கு அமீறுல் மூமினீன் மன்சூறு பாத்துஷா பதினாயிரம் வெள்ளிக்காசு ஒருபையிற் கட்டிவைத் திருக்கிறார், அஃ திந்த நாளில் வருமென்று அந்தக் குறிப்பின்படி அந்தமுதல்வரும், அரபமறிந்து, சுபுஹுதொழுதவுடன் துப்பட்டிக்கொண்டு போர்த்தி யொரு வார்த்தையும் பேசாமல் இருந்துவிட்டார்கள் உடனே ராஜாவின், தூதரான, (ஹுசைனு புனுகஹதபத்து) குறித்த தடயத்தைக் கொண்டுவந்துஇமாமிடத்தில் வைத்துப்போட்டுப் பேசத்தொடுத்தார், இமாம் பேசாதிருப்பதால், அவர்மனது வருத்தமாகுமென்பதைப் பற்றி யிருந்த மனுடர்கள் சொன்னார்கள் இவர்களின் ஆதத்து இதுவாயிருக்குமென்று, அதுகேட் டுடனே யவர்போய்விட்டார்.

பின்னர், அந்தத் தடையத்தை ஒருபெட்டியிற்போட்டு விட்டு மூலையில் வைத்திடும்படி சொல்லித் தங்கள் மகனாரிடம் சொன்னார்கள் இந்தப் பணத்தைப் பதனமாக வைத்திருந்துநான் மவுத்தாகிநல்லடக்கம் செய்தபிறகு, நீ அப்பணத்தை யெடுத்துக் கொண்டுபோய் (ஹுசைனுபுனு கஹ்தபத்து) இடம் அவர்தந்த அமானிதமென்றுசொல்லி வொப்பிவித்துப்போடென்று வசிய்யத்துசொன்னார்கள் பின்னர், அவர்கள்மகனார் சொல்லுகிறார்கள்,

தகப்பனார் வபாத்தான போது அந்த முதலைக் கொண்டுபோய் (ஹஸைனுப்னுகஹ்தபத்து) இடம் ஒப்பிவித்தார், அதற்கவர் சொன்னார், அல்லாஹுத்தஆலா வுடைய றஹ்மத்து உம்முடைய தகப்பனார் பேரிலுண்டாவதாகவும், அல்லாவினுடைய அவர்கள் தீனின்பேரில்மிகவும்பூண்டஅவேட்கை யுடையவர்களாயிருந்தார்களென்று.

(ததிக்கிறத்துல்மஷாயிகு) என்கிற கித்தாபிற் சொல்லுகிறார்கள் (அபூஜஃபறுத்தவானிக்கிய்யி) என்கிற ராஜா தன்மந்திரியிடம் ஒருபட்டுப்புடவை அதின் அகலம் இன்னது, நீளமின்னது என்று குறித்து, அஃதென்னவிலையாயிருந்தாலுங்கொடுத்துவாங்கி வரும்படி சொல்லியனுப்பினார், மந்திரியானவர் எங்கும் விசாரித்ததில்இமாம்றஹிமஹுல்லா அவர்முட்டுப்படுவதைஅறிந்துஅநதவன்னிப்புள்ளதுஎன்னிடமிருக்கிறதென்று சொல்லியெடுத்துக் காட்டியதில்அவருக்குமிகவும்பிடித்ததாய்க்கண்டுஅதின்விலையைக் கேட்க, அந்த இனத்திற் பத்துப்பிடவை வாங்கியொன்பதும் விற்றுப்போய் இதவொன்றுமிருக்கிறதென்று, அதின்அசல் வாங்கினது இன்ன விலை, இப்போதென்னவிலைதான் பெறுமென்று சொல்லி அவர்நினைத்த விலையிற் குறைபக்கொடுத்து அதிகம் கொடுத்ததைவேண்டாமென்று தட்டிவிட்டு உம்முடைய (முறாது) அதாவது முட்டுப்பாடு நிறைவேறுவதுதானென்னுடைய நாட்டமென்றார்கள்.

## எட்டாம் பிரிவாகிறது.

இமாம் அவர்களின்கொட்டைகளிலும், சிந்தையின் தயாளத்திலும் சொல்லுவதாயிருக்கும்.

(றவுலுல்பாயிக்) என்கிற கித்தாபிற் சொல்லுகிறார்கள், அபூஹனீபா றஹிமஹுல்லா தங்கள் வீட்டுக் குஞ்சுகுழந்தைகள் பேரில் எவ்வளவு சிலவழிப்பார்களோ அதுபோலே மிஸ்கீன்களுக்கு சதக்காவும் செய்து போடுவார்கள், தங்கள் ஒருபுதியவுடுமானம் அணிவார்களாகில் அதின்விலையுடைய மட்டுக்கு முடுமானம் உலமாக்களுக் கொடுத்துப் போடுவார்கள், வஜீபனங் கொண்



டுவந்து தங்கள்முன்பாக வைக்கப்பட்டாற்றுங்கள் தின்ற மட்டுப்போலே பாத்திரத்தில் ஒருபங்கு வைத்து (பக்கீர்மிஸ்கீன்) ஹாஜத் துள்ளவர்களுக்குக் கொடுத்துப் போடுவார்கள்.

(கைஸுபுனூற் றபீவு றஹிமஹுல்லா) சொன்னார்கள், இமாம் அவர்கள் செய்யும் யாபாரத்திற் கிடைப்ப தெல்லாத்தையும் சேகரித்து உலமாக்களுக்கும், மஷாயிகுமார்களுக்கும். எளியோர் களுக்கும். ஹாஜத் துள்ளவர்களுக்கும் உடுமானம் சுமதியாய்வாங்கிக்கொடுத்து அல்லாஹுத் தஆலாவைப் புகழ்ந்து கொள்ளுங்கள், அவன் தான் உங்களுக்குத் தந்தவன், எனக்கு உடமையென்பது மில்லை, நான்தரவுமில்லை யென்றுசொல்வார்கள், இன்னுஞ் சொல்லுகிறார்கள், அபூஹனீபா றஹிமஹுல்லாவிடம் ஆராவதுவந்திருந்தால் வந்தவரிடத்தில்உம்முடைய ஹாஜத்தென்னவென்று கேட்பார்கள் அவரி லெளிமைத்தனம் வெளியானால் உடனே நன்கொடை செய்வார்கள், இப்படி வழமையாய் நடந்துவரும் காலம்.

ஒருமனுடன் மிகவும் பழமையாகிய வுடுமான மணிந்து கொண்டு வந்திருந்தார். அதைப்பார்த்து மனதில் இரக்கம்வைத்து அவ்விடமிருந்த மனுடரெல்லாரும்போய்அவரும், இமாமுந்தனித்தவுடன், இந்தமுஸல்லாவின் கீழாலே ஆயிரம் வெள்ளிக்காசிருக்கிறது அதை நீரெடுத்துக்கொண்டு போய் உம்முடைய கோலத்தைமாற்றி யும்முடைய ஹாஜத்திற் சிலவுசெய்துகொள்ளுமென்று சொன்னார்கள், அப்போது, அவர்சொன்னார், நான் மிகுந்த நிஃமத் துள்ளவன், நான் சுஆலைநாடி வரவில்லை யென்று சொன்னார், உடனே, இமாம் சொன்னார்கள் நீர்ஹதீது கேட்கவில்லையா அல்லாஹுத்தஆலா அவனுடைய அடிமைக்கிக்கொடுத்த நிஃமத்தின் அடையாளத்தை அவன் பேரிற் காணப் படுதலை யுவப்பானென்று, ஆனபோதே மனுடனே நீர் உம்முடைய ஹாலைப் பேதலிக்காதிருப்பது உமக்கு விதியாயிருக்கும், அஃதேனென்றால், உம்மைப் பார்த்து உம்முடைய சினேகிதன் துக்கத்திலாசாதிருக்க வேண்டியென்று சொன்னார்கள்.

## ஒன்பதாம் பிரிவாகிறது.

இமாம் அபீஹனீபா றஹிமஹுல்லாவுடைய நிறம், குணம், விடுபேச்சி, கீர்த்தி இவைகளிற் பேசுகிறதாயிருக்கும்.

தஹக்கிறத்துல் அவுலியா என்கிற கித்தாபில், இமாமுடைய தகப்பனார் தாபித்து என்கிறவர்கள் இமாமுடைய தாயாரை விவாக முடித்தசங்கதியைப் பேசிவருவதில் இந்தக் கித்தாபின் துவக்கத்தில் வேறே வசனமாகக் கூறியதிற் சொச்ச சமாசாரமாவது, அவர்களிருவரும் (கல்வத்து) என்னும் தனிப்பிலானபோது, புருஷனாரிடம் கேட்டார்கள், அல்லாஹுத் தஆலா அக்லையும், ஷஃவத்தென்னு மோகத்தையும் எத்தனை பங்காக்கினான், அவைகளில், ஆணில் அதிகமென்ன, பெண்ணில் அதிகமென்னவென்று கேட்டுப், பின்னர், தாங்களே ஜவாபுஞ் சொல்லுகிறார்கள் அஃதென்னெனில்.

அக்லைப் பத்துப்பங்காக்கி ஆணிற்பங்கொன்பது, பெண்ணிற் பங்கொன்றும், இச்சையென்னு மோகத்தைப் பத்துப்பாங்காக்கிப் பெண்ணிற் பங்கு ஒன்பதும், ஆணிற் பங்கு ஒன்றுமாக்கினான் இவ்விதமிருப்பதுடன், நான் ஆசையை அடக்கி, இன்றிரவில் இருவரும் இபாதத்துச் செய்துகொண்டிருப்போமென்று சொல்லி, அல்லாஹுத் தஆலாவை மிகுதமெல்லாம் துதித்து இபாதத்தே செய்து, பின்னர், அன்றிரவிற்றானே இமாமை ஹமலானார்களென்று.

இன்னும், ஓர்பைத்துச் சொல்லப்பட்டிருக்கிறது, அதின் மஃனா ஒருமனுடனுடைய அடிமூடுமணமாயிருந்தால், அதின் பணறெல்லா மணமாகவேயிருக்குமினியாவண்ணத்தினாற்புட்பங்களை முள்ளுப்பொருந்திய கொப்பென்னும் கைகள்கொண்டு வருமென்று (இபுனு குல்லக்கான்) உடைய (தாரீகு) என்கிற கித்தாபிற் பேசி வரப்படுகிறது, இமாம் அஃலமாகிறவர்கள் தண்டி யொத்த மேனி யுடையவர்களாகவும், புதுநிற மாகவும், முகவஜீகரமுடையவர்களாகவும், சமாளமுடையவர்களாகவும் எதிர்மொழிபேச வந்தவர்கள் பிரியப் பிறியங்கொள்ளாதவர்களாகவும் குரலோசை மிகவும் அழகானவர்களாகவு மிருந்தார்களென்று.



(பதாவிஸ் விருஜிய்யா, றவுனுல்பாயிக்) என்கிற இருகித்தாபிலும் சொல்லுகிறார்கள், இமாமிடம் கேட்கப்பட்டது, நீங்கள், எது கருமத்தினால் இந்த இல்மையெல்லாம் பெற்றீர்களென்று, அப்போது, இமாம் சொன்னார்கள், விளங்கிக்கொடுப்பதிற் றுமதங்கொண்டும் விளங்கிக்கொள்வதில் நாணாதிருக்கிறது கொண்டுமென்று சொன்னார்கள். (தஹக்கிறத்துல் அவுலியாவிற்) சொல்லுகிறார்கள், இமாமவர்கள் சிறிய வயதிற்றானே, துன்யாவை வெறுத்துப்போட நாடிக்கம்புளியை யணைந்து கல்க்குகளடங்கலையும் விட்டு நீங்கிக் கானகஞ் செல்லநாடியிருக்கும்போது, நபி சல்லல்லாஹு அலைஹிவசல்லத்தை மனாமிற்கண்டார்கள், அவர்கள் திருவுளமானார்கள், அபூஹனீபாவே அல்லாஹுத் தஆலா வும்மைப் படைத்திருக்கிறான் என்னுடைய மார்க்கத்தை ஹயாத்தாக்கி வைக்கிறதற்காகவேண்டி, ஆசையால், நீர் கல்க்கைவிட்டும் நீங்குதலை நாடாதிருமென்று.

(யூசுபுபுனுறவீன்) இமாமைத்தொட்டும் பேசிவருகிறார்கள், இமாம் சொல்லுகிறார்கள், நான் மனாமில் நபிசல்லல்லாஹு அலைஹிவசல்லமுடைய கபுறைத் தோண்டி அதிலிருந்த வெலும்புகளையெல்லாம் எடுத்துக் கழுக்கட்டில் இடிக்கிக் கொள்ளும்படி கண்டு பதறிவிழித்து (இபுனுவலீறீன்) றஹிமஹுல்லாவிடம் சென்று (தஃபீறு) கேட்டதில் அவர்கள், இமாமைப்பார்த்து, நீர் நபிய்யுடைய ஷரீஅத்தை ஹயாத்தாக்குவீரென்று சொன்னார்கள் (யூஸுபுபுனுஸ் ஸப்பாகு) சொல்லுகிறார்கள், எனக்கு ஒருமனுடன் சொன்னார், நானொரு மனாம்கண்டேன், அதாவது, இமாம் (அபூஹனீபா) போய் நபியுல்லாவுடைய கபுறைத் தோண்டி எலும்புகளையெல்லாம் எடுக்குகிறார்கள், பின்னர், விழித்து (இமாமுபுனு சீறீன் றஹிமஹுல்லா) இடம்போய் இந்தமனாமை அபூஹனீபா என்னும் பெயர் குறிக்காமல் ஒருமனுடன் தோண்டினார் என்று கேட்டேன்.

அப்போது, அவர்கள் (தஃபீறு) சொன்னார்கள், அந்த கபுறைத் தோண்டின மனுடன் கபுறுடையவர்கள் (தீனை) ஹயாத்தாக்குவாரென்று (தஃபீறுற்றுஉயா) வென்கிற கித்தாபில் அபூஹனீபா றலியல்லாஹு அன்ஹு சொல்லுகிறார்கள், நான்மனாமில் மனு

டர், ஆண்பெண் சகலருடைய அபங்களையென் கையினாற்பொத்தி மூடக்கண்டு விழித்தவுடன் நானாக வெட்கித்து ஒருவரிடமும் சொல்லாமற் பின்னர், எனக்கு உரித்தான ஒருதோழனிட் மிகுதி நாணமாக அறிவித்துஇதற்கு(தஃகுபீறு) செய்யிதுல் முஅப்பிரீன் அல்இமாமுபுனுஸீரீன் இடம்போய் மனாம்கண்ட தின்னாரென்று குறியாமற் கேட்டுவந்து சொல்லுமென்றேன், அதின்படி அவர் போய்க்கேட்டதில், அவர்கள் இந்த மனாம் காணுவதற்குத் தகும் தாபித்துடைய மகன் நூஃமான், அதாவது, அபூஹனீபாவல்லாது வேறே ஆருமில்லை என்றும், ஏ, மனுடனே நீர் அந்த நூஃமானிடம்போய் என்சலாம்சொல்லி நீர் எல்லாருடைய மானத்தையும் காப்பாற்றிநரக வழிசெல்லாமல் நலத்தின்வழிசெல்லும்படி செய்வீரென்றும் சொல்லி அறிவிய்புமென்று சொன்னார்கள்.

முன்னேரில் ஒருவர்சொல்லுகிறார், இமாமிடம் (அல்கமா றலியல்லாஹு அன்குவைத்தொட்டும். அசுவது றலியல்லாஹு அன்குவைதொட்டும்) இவர்களிருவரும் உங்களுக்கு உஸ்தாதாச்சுதே, அவர்களில் ஆர் ஏற்றமானவர்களென்று கேட்கப்பட்டபோது சொன்னார்கள், அல்லாவினாணை நான் அவர்களை நினைக்கும்போதெல்லாம், இருவருக்கும் துஆச்செய்வதல்லால் ஏற்ற மாற்றம் என்றுசொல்லேனென்று, இவ்விதம் றவுலுல் பாயிக்கு என்கிற கித்தாபில்வருகிறது, இன்னும், அந்த கித்தாபில் வருகிறது, இமாமவர்கள் சொன்னார்கள், றசூலுல்லா சொன்னதாக, ஒரு ஹதீதுவந்தால் அதை கபூல்ச்செய்து கண்மீதும், தலைமீதும் வைத்து அதன்படியே ஹுக்கும் சொல்வேன் (யஃனீ) அவர்கள் சொல்லை விட்டும் கடக்க மாட்டேன், அசுஹாபிகள் சொன்னதாய் வந்தவைகளில் ஒன்றுக்கொன்று விரோதிக்கக் கண்டால் குறுஆனையும், ஹதீதையும் ஒத்துப்பார்த்துப் பெலத்தசொல்லையெடுத்துக்கொள்வேன், அவர்களுக்குப் பின்னுள்ள தாபிஈனைத்தொட்டும் வந்தால், அதில், ஆராய்ந்துஎடுத்துக்கொள்வேன், அஃதல்லாத்ததைத் துயரேனென்று.

தஃதீபுல்கமால்என்னுங்கித்தாபில்முந்தினசொல்லைக்குறித்து. சுபியானு தவுரிய்யி றலியல்லாஹுஅன்கு இடம்) சிலர்போய்சுவால் நடத்தி ஜவாபுசொல்லி இபுறுஹீமுன்னகஇய்யி) ஷுஅ



பிய்யி, இபுனுஸீரீன், அதாவு சஊதுபுனுல் முசய்யபு, இன்னும், அனேகர்களும் சரிகண்டார்கள், ததுகிறத்துல் அவுலியாவென்னுங் கித்தாபில் வருகிறது, இமாமவர்கள், ஒருபாதையில் நடந்து போகும்போது, அங்கேஓர்பையன் சேற்றில் நடக்கவேண்டித் தரிபட்டு நிற்கக்கண்டு அவனைப்பார்த்து, ஏபிள்ளையே நீ யுன் காலைத்தரையில் நன்றாகப்பதித்து நடவென்று சொன்னார்கள் அந்தபிள்ளை திரும்பி இமாமைப் பார்த்துச் சொன்னதாவது, யாதேனில் நான் சறுகி விழுவது மிகவும் லேசானது, நீங்கள் சறுகிவிழுந்தால் முசுலி மானவர்களெல்லாம் சறுகி விடுவார்களென்று, இவ்விதம் பையன் சொன்னபோது, இமாமவர்கள் பார்த்து, அந்தபைய்யனுடைய அகுலின் கூர்மையால் மிகவும் ஆச்சரீகமாகி அழுதார்கள்.

பின்னர், அசுஹாபிகளுக்குச் சொன்னார்கள், நான்சொன்ன மஸ்அலாக்களில் மாற்றமாக வுங்களுக்கு தலீல் குறுஆனிலாவது,ஹதீதிலாவது வெளியானால் என் சொல்லை விட்டுவிடுங்களென்று, (சுபுஹானல்லா) இந்தச் சொல்லாகிறது, அவர்கள் நீதம் நிறப்பமா யிருப்பதின்பேரில் அறிவிக்கும் அத்தாட்சியாக இருக்குமென்று சொல்லப்பட்டது காணவில்லையா.

காலீயூசுபும்,காலீமுகம்மதுபுனுஹசனும்,சுபறுபுனுஹுதைலும்,மிகுதிமஸ்ஆலாக்களிற் கிலாபு சொல்லி இருப்பதைஎன்றும் (ததுக்கிறத்துல் மஹாயிகு) என்னும் கித்தாபில் வருகிறது, ஒருபோது, இமாம் றஹிமஹுல்லா இடம் ஒரு அல்லாமத் தானவர் வந்து இமாமே எப்போதாவது, நீங்கள் ஒரு பதுவாக் கொடுத்துப், பின்னர், அதன்பேரிற் கைசேத மானதுண்டா என்று கேட்டார், அதற்கவர்கள், மெய்தான் ஒருபோது ஒருபெண்பிள்ளை வயிற்றிற்பிள்ளையிருக்க மரித்ததாயும், பிள்ளை துடிக்கிறதாயும் கேட்கப்பட்டது, அப்போது, நான் வயற்றைப் பிளந்து பிள்ளையையெடுத்து, மையித்தை அடக்கப்பதுவாக் கொடுத்துப் போட்டேன்.

பின்னர் அந்தமையித்தை வருத்தப்படுத்தும்படியாகவல்லோ சொல்லிப்போட்டோமென்று கைசேதமாகிறேனென்றும், அந்தப் பிள்ளைபிழைத்ததோ, மரித்ததோ அறியேனென்றுஞ் சொன்னார்கள், அப்போது, அல்லாமத்துச் சொல்லுவார், இமாமே, நீங்கள் சலிக்காதிருங்கள், அந்த மைத்துத்தான் என்தாய், நான்தான் அந்தப்பிள்ளை யுங்களுடைய பறக்கத்தினால் அல்லாகுத்தஆலா என்னை மையித்துடைய வயிற்றால் வெளிப்படுத்தி இல்மைக்கொண்டு மென்னைச் சிறப்பாக்கினானென்று சொன்னார், அது கேட்டு, இமாமவர்கள் மிகுந்து அல்லாகுத் தஆலாவைச் சுக்குறுசெய்தார்கள்.

இன்னும் அந்த கித்தாபிற் சொல்லுகிறார்கள், இமாம் றலியல்லாஹுஅன்குவைத் தாவுதுத் தாஇய்யி றலியல்லாஹுஅன்ஹு இருபது வருடம் பற்றிப் பூண்டிருந்து இல்மைப் படித்துபின்கேட்டார்கள், இமாமே இதற்குப் பின்னர் நான்எதைக்கொண்டு பராக்காவேனென்று கேட்டபோது, நபுசை மடக்கியடக்கியாண்டு அமலைக்கொண்டு பராக்காயிருமென்று சொல்லி அமலில்லாத ஆலிமாகிறது உயிரில்லாத வுடல்போலென்றும், நபுசை மடக்கிறது பெரிய பீஸபீலென்றும் சொன்னார்கள்.

யாபிஈறஹிமஹுல்லா சொன்னார்கள், தாவுதுத்தா இய்யி தங்கள் வீடடங்கித் தனித் திருப்பதைநாடினபோது, இமாம் றலியல்லாவுடைய மஜ்லிசுக்குமட்டும் போய் வரும் உலமாக்களுக் கிடையிலிருந்து யாதொரு கலாமும் பேசாதிருக்க நற்கருத்துவைத்து அவ்விதம், ஒருவருஷமிருந்து பின்பு தனித்து விட்டார்கள்.

ஹயாத்துல் ஹயவானென்கிற கித்தாபில், அபுல் அப்பாசு அகுமதுபுனுல்காசீ தங்கள்கித்தாபிற் பேசிவந்ததாய் வருகிறது இமாம் றலியல்லாஹு அன்ஹு ஒரு பெண்பிள்ளை தன் புருஷன் அடித்ததிற்சத்தம்போட் டழுகிறதைக் கேட்டவுடன் சொன்னார்கள், அந்தபுருஷனுக்குக் கழுல்ச்செய்யப் பட்டசத்தக்காவும், எழுதப்பட்டநன்மையு முண்டுமென்று சொன்னார்கள், அதெப்படியென்றுகேட்கப்பட்டபோது, இமாம் சொன்னார்கள், நபியுல்லா திருவுளமானார்கள், ஜாஹிலை அதபு வருத்துதல்



சதக்காவாக இருக்குமென்று நான் அந்தப் பெண்பிள்ளையை ஜாகிலத்தென்றறிவேனென்று (தாரீகுபுனுகுல்லக்கான்) என்னும் கித்தாபில் அப்துல்லாகிபுனுல் முபாறக்கு றலியல்லாஹு அன்ஹுவைத்தொட்டும் சொல்லப்படுகிறது, அவர்கள், நான் அபூஹனீபாவை அவர்கள் கூட்டாளிமாருடன் மக்கத்துக்குப் போறபாதையிற் கண்டேன் அவர்களுக்குக் கொழுத்தவொரு காளைக் கன்றை அறுத்துச் சுட்டுவைத்திருக்கிறது, அதைச் சிலுக்காவுடன் தின்ன ஆசைகொண்டு அதை யூத்திவைக்கப் பாத்திரமில்லாமற் றடுமாறியிருக்கும்போது, இமாம் அவர்கள் அவ்விடத்தில் ஒருகுளிகெல்லி அதில்ஸுபுறுவை வைத்தபோது மிகவும் இணக்கமாச்சுது, அப்போது, அவர்கள் இமாமைப் பார்த்துச் சொன்னார்கள், அல்லாஹுத் தஆலா வுங்களை யெங்களெல்லாரையுங் காண தீனுடைய காரியத்தில் மேலாக்கியதுபோல் துன்யாவுடைய காரியத்திலுள்ள சகல ஹிக்குமத்தையும் அறிவித்துத் தந்திருக்கிறானென்று ஆதித்தார்கள்

(தஃகிபுல்கமால்) என்கிற கித்தாபில், ஸுபியானுபுனு வகீஇத்தொட்டும் பேசிவரப்படுகிறது, அவர்சொன்னார் என் தகப்பனார் சொல்லுகிறார்கள், நான் அபூஹனீபா றஹிமஹுல்லா இடம் போனேன். அவர்கள் தலையைக் கவிழ்ந்துகொண்டு ஏதோவொரு ஆலோசிக்குதலின்பேரிலிருந்த விதமாய்க் கண்டேன், என்னைப் பார்த்து எங்கேயிருந்து வருகிறீரென்று கேட்டார்கள் (ஷுறைக்கு) என்பவரிடமிருந்து வருகிறேனென்று சொன்னேன், உடனே தலையையுயர்த்திரண்டு பைத்துச்சொன்னார்கள், அதின் கருத்தாவது, என்னை ஹசதுவைத்தவர்களை, நான்பழிக்கிறவனல்ல, முன்னுள்ள பாரவான்களெல்லாரையும் ஹசதுவைக்கப்பட்டது, ஹசது வைத்தவர்கள் பொறுமையால் முடிக்குவிடுகிறதல்லாமல் அல்லாஹுத் தஆலா ஒருவருக்குக் கொடுத்த நிஃமத்தை மாற்றிப்போடத் தருணிபெறார்கள்.

(வகீஉ)சொல்லுகிறார்கள், அந்த (ஷுறைக்கு)என்பவர் இமாமை ஹசதுவைத்தவரிலுள்ளவரென்று எண்ணிக்கொண்டேனென்று(இபுனுகல்லக்கானுடைய)தாரீகுஎன்கிற கித்தாபில் வருகிறது, இமாம்றலியல்லாஹுஅன்ஹுவுடைய அடுத்த வீட்டில் ஒரு செம்

மானுண்டாயிருந்தார் அவர் பகலெல்லாம் வேலைசெய்து கள்ளும், இறச்சியும், அல்லது, மீனை வாங்கிவந்து, அதை ஆக்கி, யல்லது; அதைச்சுட்டுக் கள்ளில் தொட்டுத்தின்று மிஞ்சியகள்ளைக் குடித்து லகிரிமேற் கொண்டவுடன், பைத்தச் சொல்வார், அதின் சருத்தாவது, நான்மிகுந்து கெட்டியான வாலிபகாரன், என்னைப் பழுதாக்கிப் போட்டார்களென்றே புலம்புவார், இரவில், இது ஆதத்தாயிருப்பார், நித்திரை வந்தவுடன் விடியுமளவும் உறங்குவார், இமாமவர்கள் இரவையிற்றெழும்போதெல்லாம் அவர் புலம்பலைக்கேட்பார்கள், ஒருபோது கிறுக்கு அதிகமாகி வெளிக்கிட்டுப் போகும்போது சேவகர்கள் அவரைப் பிடித்து ஜெயிலிற் போட்டுவிட்டார்கள்.

பின்னர் சிலநாள் இமாமவர்கள் மேற்படியார்சத்தம்கேளாதலைப் தொட்டும் கேட்டபோது, நடந்ததை அறிவிக்கப்பட்டது, உடனே தங்கள்வாகனத்தின்பேரிலேறி இராஜாவின் அரண்மனையடுத்து இராஜாவுடைய பேட்டிக்காக வொருதூதனுப்பி யுத்தரவு தேடியவுடன், இராஜாமிகவும் சங்கையாய் அரண்மனைக்குள் வாகனத்துடன் விரிப்புகளையெல்லாம் பறக்கத்துக்காகச் சவட்டி வரும்படி கட்டளைசெய்தார், அவ்விதம் இமாம்மவர்கள் போய் பேட்டியானவுடன், இராஜா இமாமவர்களைப் பார்த்துத் தாங்கள் வந்த ஹாஜத்தென்னவென்றுகேட்க, அடுத்த வீடுச் செம்மானுடைய சமாசாரம் சொன்னார்கள், சொன்னவுடனே இராஜா அவரை விடுதலாகி விட்டதுந்தவிர, இந்த மனுடன் பிடிபட்டநாள்முதல் இன்றையவரையும் ஜெயிலில் எவ்வளவுபேர் விழுந்தார்களோ அவ்வளவுபேரையும் இமாமுடைய சங்கைக்காக விடுதலையாக்கினார்.

பின்னர், இமாமவர்கள் வாகனத்திலேறிச் செம்மானையும் கூட்டிக் கொண்டு போகும்போது இமாமவர்கள் அவரைப்பார்த்து, ஒய், வாலிபனே யுன்னைப் பழுதாக்கினதாய் பைத்தச்சொல்லிப்புலம்புவீரேயென்றுசொன்னார்கள், அதுகேட்டவர், இமாமை



மைப்பார்த்து, நீங்கள் அயல்வீட்டுக் காரனுடைய ஹக்கை மிகவும் பேணினீர்களென்று அதிகம் வாழ்த்திப் போற்றி யவர்களுடைய கையைத் தொட்டுக் கட்குடியைவிட்டுத் தவ்பாச்செய்து சாலிஹானவராகிவிட்டார்.

(ததுக்கிரத்துல்மஷாயிகு) என்கிற கித்தாபில் வருகிறது, இமாம் றஹிமஹுல்லாவுக்கு அடுத்தவீட்டில் ஒரு (யகூதி) யுண்டாயிருந்தார், அவர் வீட்டுச்சாக்கடை நாற்றமான தண்ணீரெல்லாம் இமாமுடைய வீட்டு வாசலில் வந்து கட்டி மனுடரை நோவினை செய்யும்படி செய்துகொண்டிருந்தது. இமாமவர்களுடைய வழக்கம் இரவையிற்றனே யோர் பாத்திரம் கொண்டுபோய்த் தண்ணீர் வரும் துறையில்வைத்து நிரம்பினவுடன், தங்கள் கையினால் அதை யெடுத்து அப்புறங் கொண்டுபோய், ஊற்றி, விடுவார்கள், இச்செய்கை யாருக்கும் தெரியாது, ஒருநாள், அந்த (யகூதி) இமாமை இவ்விதம் கொண்டுபோகும் நேரம் கண்டு இமாமே நீர் முதலைக் கொண்டு பகீல்தனம் அடித்ததுக் காகவேண்டியா ஒரு வேலைக்காரனை முதலாற் சம்பாதித்து, இவ்விதமான வேலையைச் செய்விக்காமல் நீராகச் செய்கிறீரென்று கேட்டான், அத்ற்கிமாமவர்களவனைப்பார்த்து நீர் இந்த நஜாசத்தைத்தொட்டும் கேளாதிருந்தீராகில்ஒருக்காலும்நான் அதுவரும்துறையைத்தொட்டும்அறிவிக்கிறதில்லை, அப்படியறிவித்தால், உம்முடைய மனதுவருத்தப்படும், ஆகிலும், நீர் வாருமென் றழைத்துக் கொண்டுபோய், அந்த நஜீசு, வரும் ஜெலதாரையைக் காட்டினார்கள் உடனே அந்த யகூதி மிகவும் நாணி இமாமே தாங்களிதை யென்னிடமறிவிக்க வேண்டினதே யென்று சொன்னான், அதற் கிமா மவனைப்பார்த்து, மார்கத்தில் ஒருவுபகாரமும் உனக்குச் செய்ய நான் கடவு காணாதபடியால் இதைத்தான், நான் பொருத்துக் கொண்டேனென்று சொன்னார்கள் அதுகேட்டந்த யகூதி இமாமவர்களைப்பார்த்து சொன்னார், அல்லாவினாணை யுங்களுடைய தீன்யென்னும்மார்க்கம் ஹக்கானது பிறரின் மார்க்கத்திலுள்ள மனுடனுடைய நோவினையைக் கூடப் பொறுத்துக்கொள்ளுகிறீர்களே, ஆகையால் யானுங்களுடைய மார்க்கத்தில் ஆகிவிடுகுறேனென்று,

சொல்லியுடனே இஸ்லாமாகினர், இமாமவர்களின் அமர்த்திசற் குணா சங்கதியாமென்று.

(தது ககிறத்துல் அவ்லியா என்கிற) கித்தாபில் வருகிறது ஒரு வர்த்தகன் எந்நேரமும், அமீறுல் மூமினீன் உதுமானபுனி அப்பான் றலியல்லாஹு அன்குபேரிற் கோபமாகவே யேசிக்கொண்டு யகூதியென்று சொல்லிக்கொண்டு ஒருவருக்குமஞ்சாம லிருந்தார், இது சமாசாம் இமாம் றலியல்லாஹு அன்குவுக்கு எத்தினபோது, அவரைத் தேடிப்போய்க் கண்டு ஓய், மனுடரே வும்முடைய மகளுக்கு இன்ன யகூதியை மாப்பிள்ளையாகப் பேசிக் கல்யாண முடித்துக் கொடுக்கநாடி யிருக்கிறேனென்றார்கள். உடனே அந்தமனுடன் இமாமைப்பார்த்து நீங்கள் முஸ்லிமானவர்களுக் கெல்லாம் இமாமா யிருந்துகொண்டு ஒருமுஸ்லிமுடைய மகளை யகூதிக்குக் கல்யாண முடித்துக்கொடுக்க வெவ்விதம் ஆமாக்கிவைப்பீர்களென்று சினத்துடன் கேட்டார் உடனே இமாமவர்கள் (சுபுஹானல்லா) இதென்னபுதுமை நீருமுடைய மகளை யகூதிக்குக்கல்யானம் முடித்துக் கொடுக்கச் சொன்னதில் இவ்வளவு ஆத்திரங்கொண்டு ஆமாக்கி வைக்காதநீர் (செய்யிதுல் முர்ஸலீன் அபுலதுல் கல்க்கி அஜ்மயீன்,) அவர்களுடையஇரண்டு மகளையுங் கல்யாணஞ்செய்திருந்த அமீறுல்மூமினீன் உதுமானபினிஅப்பானை யெவ்விதம் யகூதியென்று சொல்வீரென்று சொன்னார்கள், அது கேட்டு, அம்மனுடன் குடுமாறி யுடனே இஸ்திஃபாறுசெய்து மீண்டார்.

இன்னும், அந்தக் கித்தாபில் வருகிறது, இமாமவர்கள் ஒருபோது, வெந்நீர்ப்புரைக்குப் போனதில், ஒருமனுடன் உரியானைநிற்கக்கண்டதில், அந்த மனுடனை அகீதாப் பேதலித்தவனென்று சொல்லப்பட்டது, இமாமவர்கள் அவரைக் கண்டவுடன், கண்ணைமூடிக்கொண்டார்கள், அந்த மனுடன் அதைக்கண்டு இமாமேயும்முடையபார்வையை அல்லாஹுத் தஆலாஎப்போபோக்கினனென்று சொன்னான், உடனே, இமாமவர்களவனைப்பார்த்து (ஓய்) மனுடனே யுன்னுடைய திரையைக் குலைத்து உன்வயானை



யெப்போ போக்கினனோ அப்போதென்று சொன்னார்கள், உடனே அந்த மனுடன் மறுமொழி கொடுக்க வேலாமையாகி விட்டான்.

இன்னும், அந்தக் கித்தாபில் வருகிறது, இமாம் அவர்கள் சொன்னார்கள் நான் பகீலனுடைய சாட்சியை யேற்கமாட்டேன், ஏனென்றால், அவனுடைய பகீற்றன மாகிறது நிரைவேற்றுதலில் வட்டு றுக்க மாக்கி விக்குதலின்பேரில் எழுப்பி விடாது, வாங்கிறதிற் றன்னுடைய ஹக்கைக் காண அதிக மெடுக்கிற தின்பேரிலும், அது சுமத்தாட்டு மெனகிறதுக் காகவென்று சொன்னார்கள்.

(றவுதுல் பாயிக்கு) என்கிற கித்தாபில் வருகிறது, ஒருபோது மனுடரெல்லோரும் கூடி யிருக்கையில் இமாம் அவர்களுடைய மடியில் ஒரு, பெரும் பாம்பானது விழுந்தது, சகலரும் விரண்டோடி விட்டார்கள், இமாம் அவர்கள், அதை யுதறிவிட்டு, அவ்விடமிட்டுக் கொஞ்சமும் நகரா திருந்தார்கள், ஓர் கடுகளவும் அசையவும், பேதலிக்கவு மில்லை, யசீதுபுனுல் குமைத்தென்ற முஅத்தினர் சொல்லுகிறார். அபூ ஹனீபா றஹிமஹுல்லா அல்லாஹுத் தஆலாவை மிகவும் பயந்தவர்களா யிருந்தார்கள், ஒருபோது, அலியிபுனுல் ஹசன்றலியல்லாஹு அன்ஹு இஷாத் தொழுவித்தார்கள், அதில் (இதாசுல் சிலத்து) என்ற சூரத்தை ஓதினார்கள், இமாமவர்கள் (மஃமூமாக) நின்று தொழுதார்கள், தொழுது முடிந்து, மனுடரெல்லாம் போன வுடன், இமாமவர்கள் அவ்விடத்தைவிட்டும் எழும்பா திருந்து ஏதோவொன்றை யோசித்துக்கொண்டேவியாரத்காற் பெரு மூச் சறைந்துகொண்டிருந்தார்கள்.

அப்போது நான், வழமைபோல் விளக்கை அமத்துகிற தற்காகப் பார்த்தேன், அதி லெண்ணை ஒரு கடுகளவுதா னிருந்தது. அதற்காக நூற்காமல் அவ்விடம்நின்று அவர்களைப் பராக்காக்கப்படாதென்றுபோய்ப் பின்னர், பஜ்றனபோது வந்து பார்த்தேன் இமாமவர்கள் நிலையிலேயேநின்று தங்கள் தாடியைப் பிடித்தவர்களாய்ச்சொல்லுகிறார்கள், ஆர்ப்புமட்டு நன்மைக்கு, தவாபையும், ஆர்ப்புமட்டு தீமைக்கு அதாபையும் கூலிகொடுக்கும்

நாயனேயென்று கூப்பிடுகிறார்கள், இன்னும், உன்னுடைய அப்து நுஃமானை நரகத்தைவிட்டும் காத்து உன்னுடைய றஹ்மத்தின் விஸ்தீனத்திலென்னைப் புகுத்திவியென்று, தன்னினைவு மாறினவர்கள் போல் யாதொரு அருட்சியு மில்லாமல் நிற்கிறார்கள், முன்னேரத்தின் விளக்கும் ஒரேபிரகாசமாய் எரிகிறது, நான் வாங்குசொன்னேன், பின்னர், என்னைக் கண்டார்கள், நான் பள்ளியினுள்ளே நுழைந்து அடுத்துநின்றேன், தங்கள் நினைவில் முன்னேரமென்றிருந்த படியாலே யென்னைப்பார்த்து விளக்கெடுக்க நாடுகிறீர்களோ வென்று கேட்டார்கள், அப்போது, நான் சொன்னேன் சுபுஹுக்கு வாங்கு சொல்லிவிட்டேனென்று, நல்லது, என ஹாலை மறைத்துக்கொள்ளுமென்று சொல்லி இரண்டு (றக்அத்து நபுலு) தொழுதார்கள், பின்னர் (பறுலு) தொழுதார்கள், இரவு துவக்கத்திற்செய்த வுலுவினாலேதான் பஜ்றுந் தொழுதார்களென்று.

(தநிக்கிறத்துல்மஷாயிகு) என்கிறகித்தாபில்வருகிறது, இமாம் றஹிமஹுல்லா மக்காவுக்குப்போய் ஹஜ்ஜுசெய்து, பனீஷைபாக்களிடம் கஃபாவின் திறவுகோலைத் தேடி கஃபாவைத்திறந்து உள்ளே புகுந்து கஃபாவின் நிலத்தைத் தங்கள் திருமுகம் கன்னத்தினாற் பெருக்கிப், பின்னர், கிழக்கு வெளுக்கும்வரையும் குறுஆன் ஓதித் தொழுதுகொண்டே (சுஜூது) சமாமாக்கினார்கள், சலாம் வாங்கினவுடன், நாயனே யுன்னுடைய அப்து, நுஃமான் திட்ட வட்டமான வணக்கமாய், உன்னை வணங்கவுமில்லைத் திட்ட வட்டமான அறிவாக வுன்னை அறியவு மில்லையென்று முனாஜாத்துச் செய்தவுடன். உருத்தோற்றாவன்றியே ஒருசத்தம் நுஃமானே திட்டவட்டமான வணக்கமாகவும்என்னை வணங்கினீர் திட்டவட்டமான அறிவாகவும் அறிந்தீர் ஆதலாலுமக்கும், உம்முடைய மதகபின்பேரில் இருந்து உம்மைத் துயர்ந்து நடந்தவர்களுக்கும் கியாமத்து நாள்வரையிலும் அவர்கள்சகலர்களுக்கும்பிழை பொறுத்தேனென்று இந்தச் சோபனச்சொல்லைக் கேட்டார்களென்று.



(இபுனு குல்லக்கானுடைய) தாரீக்குஎன்கிற கித்தாபில் வருகிறது இமாம் றஹிமஹுல்லா இடத்தில் மிருந்த அமானிதமான பணம், உடமை, இருந்தது, அவையடங்கலையும் தாங்கள் வபாத்தாகும்நேரம் தங்கள் குமாரர் ஹம்மாது றஹிமஹுல்லா இடம் அதின்ஹக்காளிகளுக்குச் சேர்ப்பிவிக்க வசிய்யத்துச் செய்துபோட்டார்கள், அவர்கள் அஃதடங்கலையும் அந்தநாள் (காலீ) இடம் ஒப்பிவித்து இன்ன தின்ன தென நிறையாலும், எண்ணிக்கையாலும் கணக்குப்படுத்தி அதநின் ஹக்காளிகள் பேருங்கண்டு சறஇன்படி யொப்பிவித்து துன்யாவிலும், கியாமத்திலும், யாதொரு துடர்ச்சையுமில்லாமற் செய்துபோட்டார்கள்

## பத்தாம்பிரிவாகிறது.

இமாம் அவர்களிடம் கேட்கப்பட்ட கேள்விக்கி விரைவாய் ஜவாபு கொடுத்ததிலும், முகக்கோட்டரவாற் சொன்னதுபோல் நேரானதிலும் பேசப்படுகிறதாயிருக்கும்.

(றவுலுல்பாயிக்) என்கிற கித்தாபில் வருகிறது, இமாம் றஹிமஹுல்லா தங்கள் மஸ்ஜிதில் சிலமனுடர்கட்கிடையில் இருக்கும்போது, ஒரு பெண்பிள்ளை ஒரு கொழுவிஞ்சிப் பழத்தைக் கொண்டுவந்து இமாமுடைய சமுகத்தில் வைத்தாள், அதினிறம் ஒருபாக மஞ்சளும், ஒருபாகம் சிவப்புமாயிருந்தது, அதை, இமாம் எடுத்து இரண்டுபாதியாகப் பிழந்தார்கள், அந்தப் பெண்பிள்ளை அதைப் பார்த்துக்கொண்டு எழும்பி நடந்துவிட்டாள், கூடவிருந்தவர்கள் அவள் (முறுதை) அறியவில்லை, அதின் அந்தரங்கத்தைத்தொட்டும் அவர்கள் இமாமிடம் கேட்டபோது, இமாம் சொன்னார்கள், அவள் தன் (ஹைலை) ஒருவிடுத்தம் சிவந்ததாயும் ஒருவிடுத்தம் மஞ்சளாயும் காணுகிறாள் அதற்கு(ஹுக்கும்) என்னவென்று கேட்டாள் அதற்கு,அதைப்பிழந்து அதினுள்ளைப் போல் ஒரே மாதிரியாய் வெள்ளையைக்கண்டால் துப்பரவாகினாளென்று ஜவாபு சொன்னேனென்றார்கள்.

இன்னும், அந்தக் கித்தாபில் வருகிறது, இமாம் றஹிமஹுல்லா தங்கள் பள்ளியிலிருக்கும்போது (காரிஜீன்களில்) தலைமையான சிலர்கள் (அதாவது, அஃலுல் பைத்துபேரில் மஹப்பத்து

வைக்கிறதைவிட்டும் பிறப்பட்டவர்கள் சிலர்கள்) கைகளில் உரிவியவாளுடன் வந்து அபூஹனீபாவே நாங்கள் உம்மிடம் இரண்டு (மஸ்அலாக்) கேட்போம், அவ்விரண்டுக்கும் நீர் சரியான (ஜவாபு) தந்தாலாமே, இல்லாதிருக்கில் இந்த வாளினுலும்மை வதைத்துவிடு வோமென்றூர்கள், இமாம் சொன்னூர்கள் நீங்கள் வாள்களை யுறைகளிற்போடுங்கள், அதைக்காண்பதால் (கல்பில்) யோசிக்கவராதென்று, சொன்னபோது, நாங்கள். இந்த வாள்களை யும்முடைய கழுத்தில் பாட்டுகிறதால் பிருதி நன்மைக்கிப் பாத்திரவாளியாகிப் போறதால் வாளையுறையிற் போடோமென்றார்கள், இமாம் றஹிமஹுல்லா அதைக் கேட்கச்சொன்னூர்கள், உடனே கேட்டார்கள், இரண்டு (ஜனசா) வீட்டுவாசலிற் கிடக்கிறது, அதில், ஒன்று கட்குடித்ததில் விக்கிக்கொண்டதால் மரித்தவன், மறது (சினவில்ஹமலாகிப்)பிள்ளைபெறயேலாமல் மரித்தவள், இவர்களிருவரும் காபிரோ, அல்லது, மூமினோவென்று கேட்டார்கள்.

அந்த (காரிஜு)களுடைய (மதுஹபாகிறது) பாவத்தினூற் காபிராகி விடுகிறது அதுதான் அவர்களுடைய (அகீதா)வாயிருக்கும், அப்போது, இமாமவர்கள் அவர்களிடங்கேட்டார்கள், அந்த இரண்டு மய்யித்தும் யகூதியில் நின்றுமுள்ளதோ, மஜூஸியில்நின்று முள்ளதோ வென்று, அதற்குச்சொன்னூர்கள், அவ்விதமல்ல என்கிலும, முஸ்லிமீன்களில் நின்றுல் உள்ளவர்களென்று, அது கேட்டுடனே இமாம் அவர்கள் சொன்னூர்கள், உங்கள் சொற்கொண்டே ஜவாபு வந்துவிட்டதென்று.

அஃதெவ்விதம்மென்று அவர்கள்கேட்டற்க்கு, இமாம் சொன்னூர்கள், உங்கள்வாயினுல் அவர்க ளிருவரு முஸ்லிமீன்களிலுள்ளவர்களென்று விண்ணப்பம் செய்துவிட்டபடியாலென்று ஆனுல், முஸ்லிமானவனை யெவ்விவம் காபிராக்குவீர்களென்றூர்கள், பின்னர், கேட்டார்கள், அவர்க ளிருவரும் சொர்கத்திலோ, அல்லது, நகரத்திலோவென்று, அப்போது, இமாம் சொன்னூர்கள், இபுருகீம் அலைகிஸ் ஸலாமும், ஈசா அலைகிஸ்ஸலாமும், மேர்குறித்த இருவரைக் காணவும் கொடிய பாவிகளானவர்களி



ன் சங்கதியிற் சொன்னதுபோற் சொல்லுகிறேன், அதின் கருத்தாவது, பாவிகள் பிழைபொறுப்பதும், பொருக்காமல் அதாபு செய்வதும், அல்லாவுடைய நாட்டத்திலுள்ளதென்றூர்கள்,உடனே வாள்களைக் கீளே போட்டுவிட்டெல்லாரும் இமாமிடம் பொருப்புத் தேடித் தௌபாச்செய்து மீண்டார்கள்.

(ஆசிரியோரின் ஆச்சரியச்சொல்) சுபுஹானல்லா இதென்ன புதுமையான மடக்கேள்வியாயிருக்கிறது,(ஷறஇல்)பாவஞ்செய்தவனைக் காபிரென்று சொல்லக்கூடாது, அப்படிச் சொல்லாவிட்டால் அவர்கள் வெட்டிப் போடுகிறதிலே தப்பில்லை, ஆகையால் அவர்களையும் நேர்காட்டவும் வேணும், இவ்விதமானசங்கடங்களுக்கும், பயத்துக்கும் இடையி லிருந்துகொண்டு இமாமவர்கள் தம் இல்முடைய ஆளத்தினுலும். ஹிக்மத்துடையகூர்மையினுலும் ஜவாபுகொடுத்து மையித்தையும் தொழிவித்து வந்தவர்களையும் திருத்தி நேர்வழியிலாக்கி அநேகதவாபைக் கொள்ளைகொண்டார்கள்.

ஜாமிவும் முஹுமறுத்து என்கிற கித்தாபில் வருகிறது, றசூல் சல்லல்லாஹு அலைஹி,வசல்லமுடைய திருப்பேரனாகிய(ஜஃபறுஸ்ஸாதிக்கு றலியல்லாஹு அன்ஹுவர்கள்)இமாம் அபூஹனீபா றஹிமஹுல்லா அவர்களிடம் கேட்டார்கள், இமாமே, நீர் உம்முடைய கியாசினுல்ஹுக்கும்களையுண்டாக்கி,என்னுடையபாட்டனருடைய ஹதீதுகளை விட்டு விடுகிறீரென்று கேள்வி யாகிறது, அஃதென்ன வென்று கேட்டபோது, இமாம் சொன்னூர்கள், றசூலுடைய குமாரரே நான், ஒருபோதும் அவ்விதம் சொல்லமாட்டேன் உங்களிட மூன்றுமஸ்அலாக் கேட்குகிறேன்,அதில்

ஒன்றூவதுதொழுகை ஏற்றமோ நோன்பு ஏற்மோஎன்று கேட்டார்கள், அதற்கவர்கள் தொழுகைதான் ஏற்றமென்றூர்கள், அதற்கவர்கள் மெய்தானென்று ஒப்பி நான்கியாசுகொண்டுசொல்வதானூற் பெண்பிறந்தவள் (ஹைலை) விட்டும் துப்புரவாகினுளாகில் ஏற்றமானதொழுகையையல்லோ(கலாச்)செய்யும்படிசொல்வேன்,அவ்விதம் சொல்லாமல் ஹதீதைத் தொடர்ந்துநோன்பை(கலாச்) செய்யச்சொன்னேனேனல்லாதுவேறில்லைஎன்று சொன்னூர்கள்,

இரண்டாவது (மனீ) நஜீசானதாகவும், அருவருப்பானதாகவும் இருக்குமா, அல்லது, மூத்திரம் நஜீசானதாகவும், மிகுந்த அருவருப்பானதாகவும் இருக்குமாவென்று கேட்டபோது சிறுநீர்தான், நஜீஸும், அருவருப்பானதுமாக இருக்குமென்று சொன்னார்கள் அதுகேட்டுடனே இமாம்சொன்னார்கள், நம்முடைய கியாசு கொண்டு சொல்வதானால் மிகுந்த கனமான சிறுநீர்புறப்பட்டால் முழுக்கு வாஜிபென்று சொல்லிப் போடுவோம், அவ்விதம் சொல்லாமல்(நஸ்ஸுக்கு) நேராக (மனீயிலேதான்) முழுகவேணுமென்று சொன்னேனென்றார்கள்.

மூன்றாவது ஆண்பிள்ளை பெலம் குறைந்தவனோ, அல்லது, பெண்பிள்ளை பெலங்குறைந்தவளோ வென்று கேட்டபோது பெண்பிள்ளைதான், பெலங்குறைந்தவளென்று சொன்னார் அதற்கு, இமாம்சொன்னார்கள், கியாசினாற் சொல்வதானால், அனந்திரத்திற் பெலங்கெட்டவளுக் கல்லோ அதிகம்கொடுக்க வேணுமென்று சொல்வோம், அவ்விதம் சொல்லாமற் குறுஆனிற் சொல்லியபடி யொரு தகப்பனுடைய மக்களில் ஆண்பிள்ளைக்குப் பங்கு ரண்டும், பெண்பிள்ளைக்குப் பங்கு ஒன்றுமென்று சொன்னோமென்றும், குறுஆனிலும், ஹதீதிலும், பின்னர், அசுஹாபிகள் சொல்லிலும், ஒரு மஸ்அலாவுக்கு ஜவாபு காணவில்லையாகில் கியாசினாற் சொல்வோமென்றார்கள், உடனே, இமாமை மிகுதமாய்ச் சங்கித்துக் கண்ணழிவு தேடினார்கள்.

(குறறுல் மலாஹீக்) என்குற கித்தாபில் இபுனுல் ஜவ்ஸிய்யி சொல்குறார், ஒருமனுடன் இமாமிடம் சுண்ணாம்பு, போடாத (நபீதைக்) கொண்டுவந்து கொடுத்து, இமாமே இது ஹலாலென்று நீர் சொன்னீராகில் இதை இந்தப் பள்ளியிலிருந்து குடியுமென்றார், அதற் குடனே, இமாம் கேட்டார்கள், உம்முடைய பெண்சாதியுமக்கு ஹலாலா ஹறுமாவென்று, அதற்கவர் ஹலாலென்றார், நீர் இவ்விடமிருந்து அவளை (ஜமாகு) செய்வீராகில் நானும் குடிக்கிறேனென்றார்கள், அதுகேட்டுடனே, அம்மனுடன் தனது முகத்தை மாறவைத் தோடிவிட்டான், * (நபீது) ஹலாலென்றும், அதனால் (உலூ) சிஹத்தென்றும் அபூஹனீபா றஹிமஹுல்லா

* நபீது-திராட்சப்பழத்தின் ரசம்.



சொல்லியுமறு றலியல்லாஹு அன்ஹு, அதைக் குடித்திருக்கிறார்கள், அவர்களை (அபூஹுவுலுஅது) என்கிற மஜ்ஹபுசிகொன்ற நேரத்திலென்கிறதுகொண்டும் (தலீல்) தேடியிருக்கிறார்கள்.

ததுக்கிறத்துல் அவுலியாவென்கிற கித்தாபிற் சொல்லுகிறார்கள், சிறுபிள்ளைகள் பந்தெறிந்து விளையாடும்போது இமாமுடைய மஜ்லிசிற் பந்துவந்து விழுந்தது. பிள்ளைகளெல்லாம் பந்தையெடுக்கச் செல்வதற்கு நாணமாய் நிற்கும்போது ஒருபையன் கொஞ்சமும் நாணமற்போ யெடுத்தான், அவனைப்பார்த்துஇமாம் சொன்னார்கள், இவன் ஹறுமிலே பிறந்திருப்பானென்று, பின்னர், விசாரிக்கும்போது, அவர்கள் சொற் சரியாயிருந்தது, அதனால், எல்லோரும் இமாமிடத்தில், அந்தப்பையன் பிறப்பை எவ்விதமா யறிந்தீர்களென்று கேட்டதற்கு, ஹறுமிற் பிறந்தபிள்ளைக்கு வெட்கமும், சங்கையும் இராதென்றார்கள்.

(ஆதாறுல் பிலாது) என்கிற கித்தாபில் காலீநஹறுவானைதொட்டும் பேசிவருகிறது, ஒருமனுடன் கூபா ராச்சியத்தில், இன்னொரு மனுடனிடம் சில முதலை அமானிதமாக வைத்துப்போட்டு (ஹஜ்ஜுக்குப்போய்) அவர், மீளவந்து அவர்கொடுத்த அமானிதத்தைக் கேட்டார், அதற்கவர், இங்கேயுமுண்டுமா, ஏது, எவ்விடமென்று அல்லற் றட்டினார், ஆனால் கொடுத்தவரிடம், சாட்சி, தஸ்தாவேஜு யாதொரு ருசுவும் கிடையாது.

அந்தமனுடன் இமாமிடம்வந்து முறையிட்டழுதார், உடனே இமாமவரைப்பார்த்து, நீரிதைக் குறித்தொருவருடனும் பேசாதிருமென்று சொன்னார்கள், அவர் போனபிறகு, அமானிதம், பெற்றவரைத் தருவித்து முந்தின வளமைபோல் வேறேபேச்சுகள் பேசியிருந்து, பின்னர், சொன்னார்கள், ஏ, மனுடனே, இந்தக் கூட்டத்தார் என்னிடம்வந்து (காலீ) வேலைக்காக வொருவரை நியமிக்கத் தேடுவதால், உமக்கு அந்தவேலைபார்க்கப் பிறியமுண்டா வென றுகேட்டார்கள், அதற்கவர், சந்தோஷ மில்லாதவரைப்போற் பாவித்துப் பின்னர், சம்மதித்தார், இமாமவரைப் பார்த்து, நல்லது நீர் போய்வாரும் சொல்லுகிறேனென் றனுப்பிவிட்டுப் பின்னர், அமானிதம், வைத்தவரைத் தருவித்துஓ,மனுடா இன்னமொரு விடுத்தம் அவரிடம்போய்த் தங்களிடம், இந்நாள் இந்நேரத்திலல்லவா தந்தேன் தாருங்கள் வைத்தவிடத்தை மறந்துவிட்டீர்கள், இன்ன மொருவிடுத்தம் பார்வையிட்டால் நல்ல

தென்று சொல்லுமென்றார்கள், அவ்விதம் அவர் போய்ச் சொல்லக்கேட்டுடனே அவர் வீட்டுக்குட்புகுந்து அமானிதப் பொருளை யெடுத்துக்கொண்டு வந்து கொடுத்துவிட்டார்.பின்னர் அவர் மிகவும் சந்தோஷமாய் இமாமிடம் அறிவித்துப்போய்விட்டார்.

அப்போது, அந்த மனுடன் (காலீ) வேலையை மேலெண்ணம் கொண்டு, இமாமிடம், வந்ததற்கு, இமாம் அவரைப்பார்த்துச் சொன்னார்கள், உம்முடைய தகுதியில் நாளேட்டமிட்டதில், அந்தத் தகுதியை இந்த (காலீ) வேலையைக்காணப் பெரிய வேலை கொண்டு உம்மை உயர்த்த நாடுகிறேனென்றார்கள், அதின் கருத்தாவது. (காலீ) வேலைக்கி யேற்படாதிருப்பது, ஏற்படுவதைக் காணப் பெரிய வேலையாயிருக்குமென்றது.

(தஃதீபுல் கமாலில்,தாரீகுபுனு குல்லக்கான்) என்கிற இரு கித்தாபிலும் வருகிறது, இமாமுடைய குமாரரான ஹம்மாதின் குமாரர் இஸ்மாயீல் றஹிமஹுல்லா சொல்லுகிறார்கள், எங்கள் பாட்டனார்,இமாமுடைய அயலில்ஒருதுஸ்மனான(றாபிளீ)உண்டாயிருந்தான், அவன் ரண்டுகோவேறு கழுதை வாங்கி யொன்றுக்கு அபூபக்று என்றும், மற்றதற்கு உமறு என்றும் பேர்போட்டுத், தாழ்மையாக்கிக் கொண்டே யிருந்தான், ஒருயிரவையில் ஓர்கழுதையிலேறிப் போனான், அஃதவனைத் தூக்கிக் கீழேபோட்டுக் காலாலெறிந்துகொன்று போட்டது, இந்தச் சமாசாரம்,இமாமவர்களிடம் எத்தினபோது, அவனைக் கொன்றது உமறென்னும் பேர்போட்டானே அஃதாகத்தா னிருக்குமென்றார்கள், பார்க்கும்போது அந்தப்பிரகாரமாகவே யிருந்தது

தாரீகுபினு குல்லக்கானில்வருகிறது, அபூயூசுபு றஹிமஹுல்லா சொன்னார்கள் சுல்தான் (ஜஃபறுல்மன் சூறிடத்தில்) (றபீகு) என்று, சொல்லப்பட்ட மனுடன் இமாமை வழக்காகக் கூட்டி வந்தார், அவர் சொல்வார் ராஜாவே இந்த அபூஹனீபா வாகிறவர் உங்கள் பாட்டனார் அப்துல்லாகிபுனு அப்பாஸ் றலியல்லாஹுஅன்ஹுமாவுக்கு விரோதம்,கிலாபு சொல்லுகிறார்,அவர்கள் சொன்னார்கள், ஒருமனுடன், ஒரு வஸ்துவுபேரிற் சத்தியஞ்செய்து இரண்டொருநாட்பின்னிட்டு அதிற்சிலவற்றை நீக்கினால்.ஆகுமென்று சொல்லி யிருக்க, இவர்சொல்லுகிறார், நீக்கிப்பேசினது சத்தியத்துடன் சேர்ந்திருந்தாற்றான் கூடுமென்கிறாரென்றுசொன்னார்,அதற்கு,இமாம்றலியல்லாஹுஅன்குமெய்தான்,ராஜாவேயுங்களுக்கு எத்தனையோபேர்கள் ராஜாங்க, கிலாபத்தை யுங்கள் முக



தாவில் ஒப்புக்கொண்டு பிரமாணித்துப், பின்னர், அவரவர் வீட்டிற்போய், அதற்கு விரோதமாய் நீக்கிப் பேசினாற் சரிதானென்று ஏர்த்துக்கொண்டால், உங்களுக்கு ராஜாங்கமேது, இந்த (றபீஉ) உடைய விழப்பத்தால் உங்களுக்கு ரராஜாங்கமில்லையென்று சொன்னபோது, (மன்சூறு) என்கிற ராஜாசிரித்து (றபீஉ) இந்த இமாமுடன் இட்டோட்டுக் கொடாதேயு மென்றார், பின்னர், இமாம் அவ்விடத்தாற் பிறப்பட்டு வெளிக்கிட்டபோது, (றபீஉ) சொன்னார் இமாமே ராஜாவென்னுடைய இரத்தத்தை ஓட்டிவிக்கவா கதைசொன்னீரென்று சொன்னார், அதற்கு, இமாம் சொன்னார்கள் (றபீஉ) நீர்தா னல்லோ என்னுடைய இரத்தத்தையோட்டிவிக்கும்படி இவ்வளவெல்லாம் இழுத்துவிட்டீர், நான் சொன்ன விழப்பத்தால் உம்மையும் நிவாரணையாக்கி யென்னையும் நிவாரணையாக்கினே னென்றார்கள் (சுபுஹானல்லா) உபகாரம் செய்பவருக்கும், அபகாரம் செய்பவருக்கும் உபகாரம் செய்வது மிகவும் வள்ளலான குணமானதால்,இமாமவர்கள் அந்தக் குணத்தை ஆதத்தாக்கிக் கொண்டார்கள்.

யூசுபுனு அப்துல் லதீபவர்களைத் தொட்டும் பேசிவரப்பட்டிருக்கிறது, ஒருசாலிஹான வாலிபன் மிகுந்து மிஸ்கீனானவர், இமாம் அவர்களிடத்தில் வரத்துப் போக்கா யிருந்தார், அவர் ஒருபோது, இமாமிடத்தில், இமாமே, எனக்கு நிக்காஹின்பேரில் ஹாஜத்திருக்கிறது, கைவிஸ்தீரண மில்லாதவனாகவும், சபுறு இல்லாதவனாகவும் இருக்கிறேனென்றார், உடனே இமாம் உத்தரவு செய்தார்கள் இன்ன வியாபாரி யிடத்தில், ஒருகும ரிருக்கிறது, அஃதுமக்குச் சமானமா யிருக்கும், அந்தப்பெண்ணைப்பேசிப் பாரும், அல்லாஹுத் தஆலா உமக்கு அவளைஜோடாக்க நாடியிருந்தானேயாகில் நடக்குமென்றார்கள், அவ்விதம் அந்த வாலிபன் பேசியவுடன் அவர் நல்லதென்று சொல்லி யும்முடைய ஹாலை இந்த வூரில்யாரும், அறிவார்களாவென்று கேட்டார், அதற்கிவர், இமாம் அபூ ஹனீபா றஹிமஹுல்லாதான் அறிவார்களென்று சொல்லிப்போட்டு, உடனே இமாமிடம் வந்து அறிவித்துப்போட்டார், அப்போது, இமாம் சொன்னார்கள் ஏ, வாலிபனே துன்யாதாரிகளுடைய ஆதத்து வங்ஷத்தை

யும், நன்னடைத்தையும், நோட்ட மிடுவதைகாண நீங்கிப் போற பணுவாறு பொருளைத்தா னோட்ட மிடுவார்கள், இவன்கையில் எஃதிருக்கிறதென்று வியாரணை செய்வார்கள், ஆகையால், அந்தப் பெண்ணுக் குருத்தானவர்கள் வியாரணைக்காய் இவ்விடம் வரவும் போதும், அவ்விதம் வரும்போதும் நீர் அதபாக நம்மெதிர்ப்பில் பிஸ்மிக்காலி லிருந்து உமது கையை இரண்டு தொடைக்கிடை முற்புறத்திற் பரத்தி யவரைப்போ லிருமென்றார்கள்.

பின்னர், அந்த வுருத்தாளி இமாமிடம்வந்து இந்தவாலிபனுடையஹாலைத்தொட்டும்கேட்டார்கள், அவரில்நாம்நலவேயல்லாது அறியோமென்றார்கள், பின்னர், அவர்கையிலுள்ளதொன்றும் தரிபடாது சிலசில நேரங்களில் இவர்கையில் விலைமதிக்க முடியாததுன் யாவுக்குந் தேவையான வஸ்துவுமுண்டாயிருக்கும், சிலநேரம்இராதென்றார்கள், உடனே, அவர்கள் தேடிய கருத்துச்சரிதானென்றெண்ணிக் கல்யாண முடித்துக் கொடுத்துச்சிலநாட்சென்று அந்தவாலிபனாகிய புதுமாப்பிள்ளை தன்னிடம்எதுமில்லாத தாழ்வையும், தன்பேரில் இதற்கு முன்விதித்த கடன்காரரையும், மனைவிக்கி(நபகாச்)செலுத்தி வராதிருக்கின்ற சங்கடத்தையும்நினைத்துநாணயமா யிருப்பதை முறையிட்ட மாத்திரம், இமாம் றஹிமஹுல்லா அவரை ஒருவொட்டகைவாடகைக்கிப் பிடித்துப் பெண்வீட்டுவாசலிற் கட்டவேண்டும், இதேதெனென்றுபெண்ணுடையதகப்பன்கேட்டாற் பெண்ணையென்னுடையவூருக் கழைத்துக்கொண்டு போறேனென்றும் சொல்லவேவினார்கள்.

அவ்விதமவர் செய்தபோது, உடனே யந்த வர்த்தகன் இமாமிடம் வந்து, இமாமே, யென்மகளை நாங்கள் பிரியப் பிறிய மில்லாதவர்களா யிருப்பதால், அவருக்கு, இந்தமாப்பிள்ளைபேரில் விதிக்கும் (நபகா கிஸ்வத்து) முழுதும் நானேர்த்துக்கொண்டேன், அவருக்கும் தேவையான முதல் என்னிட மிருக்கிறதென்று சொன்னார், அதுகேட்டவர்கள், மாப்பிள்ளையை வருத்தி அப்பிரகாரம்நடத்தி மாமனுக்கும், மருமகனுக்கும் யாதொரு வித்தியாசமில்லாமல் வாழ்ந்துண்டிருக்கும்படிபொருத்தி யிருவரின் புகழ்ச்சியும்வர்த்துக்கொண்டார்கள்.



இபுனு குல்லக்கானுடைய தாரீகுளன்கிற கித்தாபில்வருகிறது (அபுல்அப்பாஸுத்தவ்சீ) என்கிறவர்இமாம் றஹிமஹுல்லாவுடைய காரியத்திற் பொல்லாங்கையே நாடி யிருந்தார், அந்தக் காலத்தில் ஒருபோது, இமாம் றஹிமஹுல்லா எதோவொரு கருமத்துக்காய்(ஜஃபறுல்மன்ஸூறு) இடம்வந்தார்கள், இதை யறிந்துடனே யந்த(தவ்சீ) யென்கிறவர் மிகுந்த பெரியதனுமாக இன்றையதினம் இந்தஅபூ ஹனீபாவைக் கொல்லும்படி செய்து விடுவேனென்று சொல்லிக்கொண்டு அந்த இராஜனுடைய சபையில் மிகுந்த ஜனங்கள் கூடி யிருக்கும்போது, இமாமைப்பார்த்து, அபூ ஹனீபாவேஇந்த அமீறுல்மூமினீன்நம்மி லொருவரை அழைத்து இன்னமொருவரைக் கொல்லும்படி கட்டளை செய்கிறார்கள், அவ்விதம், செய்வது சரியாவென்று கேட்டார், அதற்கு, உடனே இமாம்அவரைப்பார்த்து, (அபுல்அப்பாசே) இந்தராஜா நீதங்கொண்டு ஏவுவார்களோ, அல்லவோவென்று கேட்டபோது, நீதங்கொண்டுதானே, ஏவுவார்களென்றார், அப்போது, இமாம் சொன்னார்கள் நீத மெங்கே யிருந்தாலும்செலுத்துவார்கள், நீரதைத்தொட்டும்கேளாதேயு மென்றார்கள், இந்தமனுடன் என்னை விழுத்தாட்டநினைத்தார், நான் அவரைக் கட்டிப் போட்டேனென்று.

(பதாவிசிறாஜிய்யாவில்) வருகிறது, ஒரு(அறபி) இமாமிடம்வந்து இரண்டு * (வாவு) கொண்டோதவேணுமோஒரு(வாவு) கொண்டோத வேணுமோவென்று கேட்டார், உடனே இரண்டு (வாவு) கொண்டு ஓதவேணுமென்றார்கள், பின்னர், அந்த மனுடன் இமாமைப் பார்த்து அல்லாஹுத்தஆலாவும்மில்பறக்கத்துச்செய்வானாகவு மென்று துஆச் செய்து போய்விட்டார், இந்தச்சொல் அவ்விடத்திலுள்ளோர்கள்யாவர்களுக்கும் விளங்காமற்றட்டளிவிலாகிக்கேட்டார்கள், அந்தமனுடன். (அத்தஹிய்யாத்தில் வஸ்ஸலாத்துவத்தய் யிபாத்து) என்று ரெண்டு (வாவு) கொண்டோதவோ, அல்லது (அஸ்ஸலாத்துவத்தய்யிபாத்து) என்று வொரு(வாவு) கொண்டோதவோவென்று கேட்டதற்காக (ஹதீதில்) இரண்டு (வாவு)வருவதால் அந்தப்படியோதச் சொன்னேனென்றும். அவர் (பறக்கத்துக்)கொண்டு (துஆச்)செய்தாரென்றும் சொன்னார்கள்.

* (வாவு) அரபிலோரட்சரம்.

## பதினோராம் பிரிவாகிறது.

அந்நாளிலுள்ள இராஜர்களின் விரோதத்தாற் றுன்பங்களை
யனுபவித்ததிற் பேசுகிறதா யிருக்கும்.

தாரீகுபுனுகுல்லக்கானில்வருகிறது,பனீவுமய்யாக்களின்இரா
ஜங்கத்தின் கடைசியான, மறுவானுடையபேரன் முகம்மதுபுனுல
ஹர்க்கமுடைய இராஜாங்கத்தில் இருக்குந்தேசத்தின் பாட்சாவான
அம்றுபுனு குபைறாவென்கிறவர் கூபா ராச்சியத்துக்குஇமாம்
றலியல்லாஹு அன்ஹுவை (காலியா) யிருக்கும்படிவம்பித்துத்
தெர்ந்தறைசெய்ததிலே பத்துநாள் ஒவ்வொரு நாளைக்கிப்பத்துப்
பத்து அடியாய் நூறுஅடிவரையிற் சாட்டையினா லடித்ததிலும்,
விலகிக்கொண்டு சொன்னார்கள் (காலீ) வேலைக்கி நானேர்ப்பட்
டுச் சகல சள்ளையையும் சுமந்து என்னுடைய இபாதத்தையும்
இல்மையுங்)கொண்டு பராக்காகி றதும்போய்ச் சகல கேள்விக்கும்
ஜவாபுதாரியாகி (ஆகிறத்தில்)மகாபாரதூரமான சாட்டை யடிக்கி
ப்பாத்திரமாகிப் போறதைப் பார்க்கிலும்,துன்யாவுடைய சாட்
டை யடியெனக்கு மிகவும் இலேசென்று சொல்லிப் புறக்கணி
த்து விட்டார்கள், அந்த அடியினால் அவர்கள்திருமுகமும், தலை
யும், மிகுதம்வீங்கியிருந்தன, அதற்குச் (சபுறு) செய்துகொண்டா
ர்கள்.

இபுனுகுல்லக்கானுடைய தாரீகிற் பேசி வருகிறார்கள், முந்
தின இராஜாவுடைய காலத்திற் பகுதாதென்கிற பட்டணத்தை
மிகவும் பார தூரமாய்ப் பஸ்தியாக்கி (மஸ்ஜிதுற் றலாபா) என்
கிற பள்ளியும் கட்டி, அவ்விடத்திற்றானே விடுதிசெய்து இமாம்
றலியல்லாஹு அன்ஹுவைக் கூபாவி லிருந்து தருவித்து (பகு
தாதில்காலீயா) யிருக்கும்படிசொன்னார், இமாம் விலகிக்கொண்
டார்கள், உடனே அவர் சத்தியம்செய்து நீர் (காலீ)வேலை பார்
க்கத்தான் வேணுமென்றார், இமாம் அவர்கள்சத்தியம்செய்து
நான்பார்க்க மாட்டேனென்றார்கள், பின்னர், இமாம் றலியல்
லாஹு அன்ஹுபேரிற் பொல்லாங்கா யிருந்த (றபீஉ) என்கிற
வர் சிண்டுமூட்டி விரோதித்துப் பேசினார், அப்போது, இமாம்



சொன்னார்கள் (றபீஉ) இராஜவுடைய சத்திய மாறிப் போறத
ற்கு என்னைத்தெண்டகுற்ற மாக்கிவிடுவதின்பேரில் எனக்குத்
திராணியுண்டு மென்றுசொல்லி விலகிக்கொண்டார்கள், பின்னர்,
அவர்களை ஜயிலிற் போடப்பட்டது. (றபீஉபுனு யூசுபு) சொல்லுகி
றார்கள், மன்சூறென்கிற இராஜவும் இமாமவர்களும் (காலீ) வேலை
யிற் பிணங்கிக்கொள்ளுந் தோறெல்லாம் இமாம் அவர்கள் இரா
ஜாவைப் பார்த்து இராஜவே நீர் அல்லாவைப் பயந்து கொள்
ளும், உம்முடைய அமானிதத்தினால், அதாவது (காலிப்) பட்டங்
கொடுப்பதில் அல்லாவைப் பயப்படுகிறவர்களல்லாமல் மற்ற
யாரையும் நம்பவேண்டாம், நான் குணமாயிருக்கும் போதே நம்
புத லானவனல்ல, அவ்வித மிருந்தாற்கோபத்தி லெவ்விதம் நம்பு
தலாயிருப்பேனென்றுதன்னைப் பழித்துப்பேசினார்கள், நீரெ
ன்னை யெவ்விதம் செய்தாலும் இந்த (புறாத்து) என்கிற ஆற்றில்
என்னைத் தாழ்த்திப் போட்டாலும், அதைத்தான் தெரிந்து
கொள்வே னென்றார்கள், நான் அந்தக் (காலீ)வேலைக்கித் தகும
ல்ல வென்று சொன்னதற்கு இராஜா பொய் சொல்லுகிறீரெ
ன்றார், உடனே இமாம் சொன்னார்கள் இராஜாவே யும்முடைய
வாயினால் நான்பொய் சொன்னதாய்த் தீர்ப்புச்சொன்னபடியாற்
பொய்சொல்லுகிறவன் காலியாயிருக்கத் தகுமல்ல வென்றார்கள்.

கதீபு என்கிறவர் ஒரு (ரிவாயத்திற்) பேசிவருகிறார், மன்
சூறு இராஜா இமாம் றலியல்லாஹு அன்ஹுவை வம்பாய்ப்பிடி
த்து காலியா யிருத்தாட்டி இரண்டுநாளிருந்தார்கள், ஒருவரும்
வழக்குகள் கொண்டு வரவில்லை, மூன்றாம்நாள் ஒருகன்னானும்,
இன்னமொரு மனுடன் வாதியும், பிரதிவாதியுமாக வந்து வாதி
யான கன்னான் சொல்வார், இமாமே இம்மனுடன் எனக்குக்
காளைக்கன்று விலையில் இரண்டு திர்ஹமும், நாலுதீவானியும். தர
வேணுமென்று சொன்னார், அதற்கு மற்றவர், இமாமே, அவ்வி
தம் இந்தக் கன்னானைச் சத்தியம் செய்யச்சொல்லுங்கள் கொடுப்
பேனென்றார், இமாம் சொன்னார்கள் அவரைப்பார்த்து அவ்வி
தம்செய்யுமென்றுடனே அந்தகன்னான்சத்தியஞ்செய்ய ஆரம்பித்
தபோது,இமாம்அவர் வாய்யைப்பொத்திச்சத்தியம்செய்யவிடாமற்
றங்கள் ஜேபுக்குள் கையையிட்டு இரண்டு(திர்ஹம்)மட்டும் கனமா

ணதாய் எடுத்துக் கொடுத்து உன் கன்றுடைய விலைக்காக இருக்
குமென்று சொல்லி யனுப்பிவிட்டார்கள், பின்னர், இரண்டுநாளிரு
ந்து தங்களுக்கு வியாதியா யிருந்ததை முறையிட்டு நீங்கி வியாதி
ஆறுநாளிருந்து வபாத்தாகினார்கள்,

(நவாவீ றஹிமஹுல்லாவுடையபதாவாவில் வருகிறது, நாலு
இமாம்களில் ஒருவராகுதல் ஒருநாள்மட்டிலாவது (காலீ) வேலை
யை யொப்புக் கொள்ளவில்லையென்று (அஹ்மதுபுனு ஹன்பல்)
றலியல்லாஹு அன்ஹுவை (குறுஆன்) படைக்கபட்டதென்று
சொல்லும்படி வம்பித்து அடித்து ஜயிலிற்போடப்பட்ட காலத்
தில் இமாம் அபூஹனீபா அவர்கட்கு வந்த துன்பத்தை நினைத்து
மிகுத மெல்லாம் இமாம் அவர்களுக்கு (துஆச்) செய்து கொள்
வார்கள் (றவுலுல் பாயிக்கில்) வருகிறது, அந்நாளை இராஜா இமாம்
அவர்களைத் தருவித்து இமாமே ஒருஆண்பிள்ளைக்கி யெத்தனை
பெண்சாதி ஆமாயிருக்குமென்று கேட்டதற்கு நாலுபெண்ணென்
றார்கள், உடனே இராஜா தன்பெண்சாதியைக் கூப்பிட்டு அடிபெ
ண்ணே இமாம் சொல்வதைக்கேட்டையா வென்று சொன்னார்,
அதுகேட்டு, இமாம்சொன்னார்கள், இராஜவே யுமக்கு ஒருபெண்
தான் ஹலாலென்றார்கள், உடனே, இராஜா இமாமைப்பார்த்து
இப்பதானே நாலுபெண் ஹலாலென்று சொன்னீர்களென்று
கேட்டதற்கு, இமாமவர்கள், மெய்தான், நீர் உம்முடைய இந்தப்
பெண்சாதிக்கி நீதம் செய்யாதவரா யிருந்தசங்கதியாற்றான் அந்
தப் பெண்பிள்ளையை நீர்கூப்பிட்டு நான்சொன்னதை ரூபித்தீ
ரென்று சொல்லி குறுஆன் ஆயத்தை யோதி அத்தாட்சி கொடுத்
தார்கள், அதின்பொருளாகிறது.

பெண்பிள்ளைகளில் நின்றுமுங்களுக்கு ஹலாலாகி விட்டதே
யவர்களை யிரண்டு ரண்டாகவும், மும்மூன்றாகவும், நவ்வாலாகவும்
விவாகஞ்செய்து கொள்ளுங்கள், அவர்களில் (நபக்கா) கொடுக்கி
றது கொண்டும், பங்கிடுகிறது கொண்டும்நீதமாகா திருக்கிறதைப்
பயந்தீர்களானால், அவர்களிலொருத்தியை விவாகஞ்செய்துகொள்
ளுங்கள், அல்லது, வெள்ளாட்டிகளில் நின்று முடையதாக்கிக்
கொண்டீர்களே யந்தவொருத்தியின்பேரிற் சுருக்கிக் கொள்ளு
ங்கள், அதாவதுசுர்ரிய்யத்துக் கொள்ளுங்களென் —



பின்னர், இமாம் றஹிமஹுல்லா புறப்பட்டுப் போன
போது இராஜாவுடையபெண்சாதி ஆயிரந்தங்கக்காசு(ஹதியவாக)
அனுப்பினார், உடனே இமாம் அவர்கள் சொன்னார்கள், நான்பண
த்துக்காய்ச் சொல்லவில்லை, என்கிலும், அல்லாவுக்காக அவன்
வேதகட்டளையைச் சொன்னபடியால் எனக்குக் கூலி அவன்
தான் தருவான், நீஇந்த ஆயிரந் தங்கக்காசையும் கொண்டுபோ
ய்க் கொடுத்துப் போடென்று சொல்லி யதனைத் திருப்பிவிட்டார்
கள்.

ததுக்கிறத்துல் அவுலியாவில்வருகிறது, இமாம் அபூஹனீபா
றஹிமஹுல்லாவுடையஉஸ்தாது ஸுஅபீறஹிமஹுல்லா (காலீ)
யாகவும், முதிர்ந்த வயதுடையவர்களாகவு மிருந்தார்கள், அவர்
களை (காலீ) வேலையை விட்டு நீக்கப்பட்டது, இமாமுடைய சபபி
னாற்றான், அதாவது. மன்சூறு ராஜன் தன்னுடைய அடிமைகளிற்
சிலருக்குச் சிலதோட்டங்களைச்சொந்தமாகவும், சிலருக்கு வக்பா
கவும் இனும்செய்து அதற்காகவேண்டி ருஜுவாகச் சிலதஸ்தாவே
ஜுகள் பிறப்பித்து (காலீ) ஷுஅபீ இடம் அந்த தஸ்தாவேஜு
களை அனுப்பி ஊரிலிருக்கப் பட்ட வுலமாக்களிடம், அவர்கள்
ஷாகிதாகக் கையெழுத்துவைக்கச் சொல்லி வாங்கிக் கொடுக்கும்
படி கற்பித்தார், அவர்களவ்விதம் நடத்திச் சகலவுமாக்களும்
சாட்சிவொப்பம் போட்டார்கள், பின்னர்.

அந்த தஸ்தாவேஜு இமாமிடம் கையெழுத்து வாங்கவந்த
போது மாட்டேனென்று விலக்கிக் கொண்டார்கள், அஃதேனெ
ன்றுகேட்டபோது, சொன்னார்கள், சாட்சிக்கிக் காட்சி, ஷறுத்
தாயிருக்கும் ராஜஅவர்கள் இனும்செய்ததை நான் காணவுமில்
லைக், கேட்கவுமில்லை அவரை யென்னிடம் ஹாலிருக்கிக் கொள்ள
வும், கேட்கவும், என்னாலேமுடியாதென்று சொல்லிப்போட்டார்
கள், அப்போது, வந்ததூதன் சொல்வார், வயதால்முதிய வுலமா
க்களெல்லாம், கையெழுத்து வைத்திருக்க நீர்பேச்சுப் படித்த
வாலிபனா யிருக்கிறீரேயென்று கோபமாய்ச் சொன்னார், அது
கேட்டுடனே, இமாம்றஹிமஹுல்லா அந்தந்த (நபுசு) செய்த
நலமும், இடறும் அதுக்குத்தான், ஒருநபுசுடைய குற்றத்தை,
இன்னொரு, நபுசுசுமக்காதென்றுஞ் சொன்னார்கள், உடனே இந்

தச் சமாசாரம் இராஜாவிடம்போனபோது, அவர் (காஜீஷாஅபியையத்தரிசித்து) அந்த அபூஹனீபா சொன்னஹாக்கும் சரிதானென்று கேட்டதற்கு, அவர்கள், சரிதானென்று சொன்னார்கள், உடனே இராஜா அவரைப்பார்த்து, நீரேன் அந்தப்பிரகாரம் சொல்லவில்லையென்று கேட்டதற்கவர்கள், சொன்னார்கள், இராஜாவே யும்மைநான் அழைத்துக் கேட்கத் தருணிபெறவு மாட்டேன், இந்த வேலையும்முடையது தானென்று நம்பிக்கொண்டேனென்று.

இவ்விதம் (காஸீ) சொன்னதுகேட்டு உடனே இராஜா சொன்னார், (காஸீ) நீர்சொன்னது நீதிக்குச் சரியல்லவென்றுசொல்லி, காஸீவேலையை நீக்கிவிட்டார், அதற்குப் பின்னால் அந்த இராஜா தன் மந்திரிமாரிடம் காஸிவேலைக்குத் தகுந்தவர்களை விசாரித்து இன்னாரென்றுதமக் கறிவிக்கும்படி கட்டளை செய்தார், அவர்கள் இமாம் அபூஹனீபா, ஹாறைக்கு, சுபுயானு தௌரீ, முஷ் இறு புனுக்கிறும், றலியல்லாஹு அன்ஹும் இந்த நான்கு பேர்களையும் தெரிந்து சொன்னார்கள் உடனே யிந்த நான்கு பேர்களையும் அழைத்து வரும்படி கட்டளை யிட்டார்கள்? அவ்விதம் அழைத்து வரும்போது சுபுயானு தௌரீ, றலியல்ஹு அன்ஹு அவர்கள் ஒழித்தோடி ஒருகப்பலிலேறி மறைந்துக்கொண்டு அந்தக் கப்பல்க்காரனிடம் என்னை மறைத்துக் காப்பாற்றிக் கொள், ஏனென்றால் என்னை அறுத்துக் கொன்றுவிட நாடியிருக்கிறார்களென்று நபியுல்லாவுடைய சொல்லைக் கொண்டு சொன்னார்கள் அதுபோலந்தக் கப்பல்க்காரன் அவர்களை யொழித்துக் கொண்டான், மற்ற மூன்று பேர்களையும் இராஜாவினிடம்ஹாஸிருக்கப்பட்டது.

அப்போதந்த இராஜாவானவர் இமாமவர்களை நோக்கிக்காஸி வேலைக்கு ஏற்படும்படி சொல்லவும், இமாமவர்கள் நான் சாதாத்துகளிலுள்ளவனல்லவே நான காஸியாயிருந்தால் சாதத்துகள் என்னுடைய கட்டளைக்கு உள்படமாட்டார்களே யென்றார்கள் அதற்கு இராஜா இமாமவர்களைப்பார்த்து கலாவத்துவேலையானது இல்லைமைப்பற்றி யதல்லாமல் வங்கிஷத்தைப்பற்றி யதல்லவென்று சொன்னார். அப்போது இமாமவர்கள் நான் காஸிவேலைக்குத் தகுமல்லவென்றார்கள், உடனே இராஜாவானவர் இமாமவ



ர்களைநோக்கிநீர்பொய் சொல்லுகிறீரென்றார், அதற்கு இமாமவர்கள், இராஜாவே பொய்சொல்லுகிறவனை உமக்குகலீபாவாக்காதேயும், மனுடர்களுடைய அமானிதப் பொருள்களில் பொய்யை நம்பாதேயுமென்று சொன்னார்கள், அப்போதிராஜவாயை மூடிக்கொண்டார்.

அப்பால் முஸ்இறாபுனுக்கிறுமென்பவர்கள் தங்களுக்குப் பைத்தியம்போல் பாவித்தெழும்பி யிராஜாவையடுத்துக் கையைப்பிடித்து ஈதாறு இராஜா, உன் சுகமெப்படி, உன்னுடைய பிள்ளைகுட்டிகளின் சுக மெப்படி யென்று வாயில் வந்ததை மெல்லாம சேட்கவும் பேசவு மானார்கள், அப்போதிராஜாவானவர் இந்த மனுடன் பைத்தியக் காரனாயிருப்பதால் இவரைத் துரத்திவிடுங்களென்று கட்டளை செய்துவிட்டார் அவ்விதமாகவே துரத்தி விட்டார்கள்.

பிறகு ஷுறைக்கு றஹிமஹுல்லாஹ் அவர்களை, இராஜா நோக்கி நீர் தான் காஸி வேலைக்கேற்படு மென்று சொன்னார், அதற்கவர்கள் நான் பித்தக் காந்திக் காரனாயிருப்பதாலென்னால் முடியாதென்று சொன்னார்கள், உடனே யிராஜாவானவர் அந்தக் காந்தி தணியும்படி மருந்துபரிமாறிக்கொள்ளுமென்று சொன்னார். அப்போதந்த இராஜாவைப்பயந்து ஷுறைக்கு றஹிமஹுல்லாஹ் அவர்கள் இராஜாவுடைய சொல்லைக் கபூல்ச்செய்து காஸிவேலை பார்த்தார்கள், அதற்குப்பின்னால் இமாம் றஹிமஹுல்லாஹு அவர்கள் காஸீ ஷுறைக்கென்பவர்களை வெறுத்து அவர்களுடன் அறவே பேசாதிருந்துவிட்டார்கள்.

(ததுக்கிறத்துல் மஷாயிகில்) வருகிறது ஜஃபறுத்தவானிக்கீ யென்கிற இராஜாவுக்கும், இமாம் அபூஹனீபா றலியல்லாஹு அன்ஹு அவர்களுக்குமிடையில் இமாமவர்கள் கலாவத்து வேலைக்கேற்படாத சங்கதியால் நெடுநாளாக பொல்லாங்காயிருந்தது, அப்படி யிருக்குங்காலத்தில் அந்த இராஜாவினுடைய மந்திரியைத் தொட்டும் ஒரு கோட் சொல்லப்பட்டது, அஃதென்னவெனில் இராஜாவே உம்முடைய மந்திரி யெந்நாளும் இமாம் அபூஹனீபாவுடைய மஜ்லிஸுக்குப் போக்குவரத்தாயிருக்கிறாரென்று கோட் சொல்லப்பட்டது, உடனே யிராஜாவானவர் தன்

னுடைய மந்திரியை நோக்கி ஓய் மந்திரியே நீராகிறவர் இல்மும், தக்வாவும், ஸுஹ்தும், கொடையும், சுத்தவீரத்தனமுமுள்ளவர்களைச் சிநேகிதஞ் செய்யாமல் அந்தக் கோழையான அபூஹனீபாவை யேன் தோழமைத்தனம் செய்கிறீரென்று கேட்டார், அதற்கு மந்திரியானவர் இராஜாவே தாங்களிப்போது தொகுத்துச் சொன்ன வருணிப்புகளெல்லாம் அந்த அபூஹனீபா இமாமவர்களில்த்தானிருக்கிறது அவைகளை யெல்லாம் பிரிவு, பிரிவாக விபரித்துச் சொல்லும்படியாக வுத்தரவானால் சொல்லுவேனென்றார், உடனே இராஜாவானவர் மந்திரியை நோக்கி நீரவரில் கண்ட சுத்த வீரத்தனத்தைச் சொல்லுமென்றேவினார், அதற்கு மந்திரி இராஜாவைப்பார்த்து ஒருபோது ஒரு பள்ளியிலிருந்து நானும் இன்னஞ் சில ஜமாஅத்துகளுமாக இமாம் அபூஹனீபா றஹிமஹுல்லாஹ் அவர்களுடன் தொழும்போது ஒரு பெரிய பாம்பானது முகட்டிலிருந்து இமாமவர்களுக்கடுக்க விழுந்தது அதைக் கண்டவுடன் ஜமாஅத்துகளெல்லாந் தொழுகையை விட்டுக் கலைந்தோடிப் போய்விட்டார்கள், அப்போது இமாமவர்கள் அந்தத் தொழுகையில் நின்றுக்கொண்டு தானே அந்தப் பாம்பினிடுப்பைச் செருப்பை யெடுத்தடித்து ஒடித்து ஓடாதபடி செய்துவிட்டுப் பூருவுந்தொழுது சலாம் வாங்கினதின் பிறகு அதை முழுதுமடித்துச் சாவடித்துப் போட்டார்களென்று சொன்னார். இவைகளைக் கேட்டுவிட்டுஇராஜா வாயை மூடிக்கொண்டார்.

ஸலாத்துல் இமாமென்கிறதில் வருகிறது அந்தப் பாம்புடைய் கனமாகிறது பதிமூன்று மன்பாரமென்றும், பத்தொன்பது மன்பாரமென்றும், வருகின்றது.

உயூனுல் மஜாலிஸில் அபிநஜுறைத்தொட்டும் வந்திருக்கிறது அபூஜஃபறுத்தானிக்கீ யென்ற இராஜாவானவர் இமாம் அபூஹனீபா றஹிமஹுல்லாஹ் அவர்கள் பேரில் எப்போதாகிலும் ஒரு குற்றம்வரும் அதைசாட்டுதலாக வைத்துக் கொண்டு அவர்களைக் கொல்லவேணுமென்று கருவமான எண்ணத்துடன் இமாமவர்களுடைய ஹாலைநோட்டமிட்டவராக இருக்கும்போது அந்த இராஜாவினுடைய மந்திரியானவர் நானதற்குஒருதந்திரம் செய்கிறேனென்று சொல்லிவிட்டு ஒருபெண்பிள்ளையை அழைத்து ஓய்



பெண்பிள்ளையே நீ இமாமவர்களிடத்திற் போய் ஒருமஸ்அலாக் கேட்டுவரவேணுமென்று சட்டங்கட்டி விட்டார்கள்.

அதாவது என்னுடைய புருடன் சுத்தவீரராயிருந்தார், அவர் மௌத்தாகும்போது அவருடைய குதிரையை கிலாபத்துக்கு யார் பாத்திரமாய் வருவார்களோ அவர்களுக்குக் கொடுத்துவிடென்று வஸியத்துச் செய்திருக்கிறார். ஆகையாலந்தக் குதிரையை யாரிடங்கொடுக்கவென்று கேளென்றேவினார்கள்.

அவளது போல் இமாமவர்களிடத்தில் போய்க்கேட்டாள். அதற்கு இமாமவர்கள் அவளைப்பார்த்து ஓய் பெண்பிள்ளையே உன்னுடைய புருடன் இராஜாங்கத்திற்குப் பாத்திரமானவர்களுக்குக் கொடுக்கும்படிக்கேவினதே தவிர இராஜாவுக்குக் கொடுக்கும்படிக் கேவவில்லை ஆகையாலதற்குப் பாத்திரமாயிருக்கிறது இமாம் ஹுஸைன் றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய பேரனான இமாம் ஜஃபறுஸ்ஸாதிக்கு றலியல்லாஹு அன்ஹு அவர்கள்தான் பாத்திரமாயிருககிறார்கள், ஆனதால் நீ யந்தக் குதிரையை அவர்களுக்குத்தான் கொடுத்துவிடென்றுத்தரவு செய்தார்கள்.

அதுகேட்டந்தப் பெண்பிள்ளை இமாமவர்களின் சமுகத்தைவிட்டு வெளியிற் புறப்பட்டுப்போனதின் பிறகு இமாமவர்கள் யோசித்துப்பார்த்ததில் இந்தப் பெண்பிள்ளைவந்து கேட்ட கேள்வியானது ஏவலாயிருப்பதுபோல் தோற்றுகிறதென்று தங்களுடைய மகன் ஹம்மாது றஹிமஹுல்லா அவர்களை யழைத்து நீர் சீக்கிரம் ஓடிப்போய் அந்தப் பெண்பிள்ளையைத் தேடிப்பார்த்தழைத்துவாரும் ஏனெனில் ஹசதாளிகள் மூட்டியனுப்பி மோசஞ்செய்ய எத்தனித்ததுபோல விளங்கிறதென்று சொல்லி அனுப்பினார்கள்.

உடனே அவர்கள்தேடிப்பார்த்ததில்காணவில்லையென்றுசொல்லிவிட்டார்கள் அதுகேட்டு இமாமவர்கள்வியாகுலத்திலிருந்துவஸிய

தெழுதித் தங்களுடைய குமாரரளவிற் கொடுத்துப்போட்டு இந்த ஸாஅத்தில் அபீஜஃபறு இராஜாவிடமிருந்து கூப்பிட்டாள் வருஞ் சக்கில்லாமலென்னைக் கொன்று போடுவாரென்று சொன்னார்கள்.

இது போலிந்தமஸ்அலாவைக் கேட்கும்படி அதாவுபுனு அபீறபாஹின் றலியல்லாஹு அன்ஹு அவர்களிடமும் மாலிக்குபுனு அனஸின் றலியல்லாஹு அன்ஹு அவர்களிடமும் அந்தப் பெண்பிள்ளையைச் சட்டங்கட்டியனுப்பியிருந்தார், அந்தச்சமாசாரம் இமாமவர்களுக்குத் தெரியாதிருந்தும் அதையும் தங்கள் மகனாரிடத்தில் சொல்லிக்கொண்டும் இராஜாவுடைய ஆள் வருவதை வழி பார்த்துக்கொண்டுமிருந்தார்கள், இன்னம் சொன்னார்கள் அவ்விருவர்களும் நான் சொன்ன பிரகாரம் தான் சொல்வார்கள், அவர்களிடம் தான் துவக்கமாய்க் கேட்பார், அவர்கள் ஜவாபு சொல்லித் தப்பிக்கொள்வார்கள், நானுமவ்விதமே சொல்லிக் கொள்கிறேனென்று விபரித்துப் பேசிக் கொண்டுமிருந்தார்கள், அவ்விதமிருக்கும் நேரத்தில் மேற் கூறிய அவ்விருவர்களையும் இராஜாசமுகத்தி லழைத்துவைத்துக்கொண்டு இமாமவர்களையும் கூப்பிட்டாள் வந்தது அப்போது இமாமவர்களும் இராஜாவினிடம் சென்றபோது அவர்களிருவரையுங் கேளாமல் இராஜாவானவர் இமாமவர்களை நோக்கித் துவக்கமாய்க் கேட்டார் அதாவது ஓய் இமாமே உம்மிடத்தில் ஒரு பெண்பிள்ளை வந்து கேட்டவொரு குதிரையுடைய சங்கதியில் நீரதை ஜஃபறுஸ்ஸாதிருக்குத்தான கொடு அவர்தான் இராஜாங்கத்திற்குப் பாத்திரமென்று நீர் சொன்னதுண்டாவென்று கேட்டார், அதற்கு இமாமவர்கள் மெய்தான் அவர்கள் றசூலுடைய பிள்ளையாகவும், தக்வாவுடையவர்களாகவும், ஆலிமாகவுமிருப்பதால் உம்மைப் பார்க்கிலுமவர்கள் தான் மிகவும் பாத்திரமானவர்கள், நீர் தக்வாவுடையவருமல்ல. ஆலிமுமல்ல, இராஜாங்கமாகிறது தக்வாவுடையவர்களுக்கும், இல்முடையவர்களுக்குந் தருமேயல்லாது வேறில்லையென்று சொன்னார்கள்.

அப்பாலி ராஜாவானவர் மாலிக்கு அதாவுறஹிமஹுமல்லாஹு அவர்களை நோக்கி அந்த மஸ்அலாவைக் கேட்டார். அதற்கவர்களிருவர்களும் இமாம் றலியல்லாஹு அன்ஹு அவர்கள்



சொன்ன ஜவாபு போல் சொன்னார்கள், அவ்விதமவர்களுஞ் சொல்லவே இராஜாவானவர் ஏதும்பேசாமல் வெருட்சி பிடித்தவராக இருந்துவிட்டு மூன்று பேர்களையும் போகும்படி சொல்லிவிட்டார் அது போல் மூன்று பெக்களும் வெளியிற் புறப்பட்டு வரும்போது இமாம் அபூஹனீபா றஹிமஹுல்லாஹு அவர்களுடைய வாகனத்தின் அங்கவடியை அதாஉபுனுறபாஹன்றஹிமஹுல்லாஹு அவர்கள் பிடித்தவர்களாக வந்தார்கள், அந்நேரத்தில் இமாம் றலியல்லாஹு அன்ஹு அவர்கள் வாலிபமாகவும், அதாஉறஹிமஹுல்லாஹ் அவர்கள் வயதாளியாகவுமிருந்தார்கள்.

பின்பந்த இராஜாவானவர் அது முதல் இமாம்றலியல்லாஹு அன்ஹு அவர்கள் பேரில் ஒரே கெடும்பும், விரோதமுமாகவேயிருந்து கொஞ்சநாட் சென்றதின்பிறகு இமாமவர்களை யழைத்து மத்தியஸ்தமாயிருக்கும்படி சொன்னார், அதற்கும் இமாமவர்கள் சம்மதியாததால் மிக வெல்லாம் தொங்கரித்து முந்தின இராஜா அடித்தது போல் பத்து நாளும் அடித்துவம்பித்தார்.

(கஸானத்துல் பவாயிதில்) வருகிறது மேற்படி யிராஜாவானவர் இமாமவர்கள் காலீ வேலையை விலக்கிக் கொண்ட மாத்திரத்தில் ஒரு குடிப்பில் நஞ்சைக் கலந்து வைத்துக்கொண்டு இமாமவர்களை யழைத்து அதைக் குடிக்கும்படியாகவும், அல்லது கலாவத்தைக்கபூல்ச் செய்யும்படியாகவும், அவ்விருவிதமுஞ் செய்யாத விஷயத்தில் அறுத்துக் கொன்று போடுவதாகவும் சொன்னாரென்றும் அதற்கு இமாமவர்கள் உடனே யந்தக் குடிப்பைக் குடித்துவிட்டார்களென்றும், அந்நேரத்திலது யாதொரு சங்கடமுஞ் செய்யாதிருந்து சிலகாலஞ் சென்றதின் பிறகு அந்தப் பாஷாணத்தின் வீறுதாவி இமாமவர்கள பீஸபீல் மௌத்தாக ஷஹீதானார்கள். (றலியல்லாஹு அன்ஹு வறஹமஹுல்லாஹுறஹ்மத்தன் தாம்மதன்) இமாம் றலியல்லாஹு அன்ஹு அவர்கள் ஷஹீதான இருபத்தோராவது நாளில் அந்த இராஜாவுடைய திரேகத்திற் பிளவையுண்டாகித்து யரத்திற் கிடந்தழுந்தினாரென்றும் வருகிறது பின்பு அல்லாஹுத்த ஆலாவுடைய கேள்விக்கு அந்த இராஜா என்ன ஜவாபு கொடுப்பாரோ வல்லாஹு அஃலம்.

## பனிரண்டாம் பாடம்.

பனிரண்டாம் பஸ்லாகிறது இமாம் றலியல்லாஹு அன்ஹு
அவர்களுடைய வபாத்து வேளையிலும், அதற்குப் பின்னடந்த
தில் சிலதிலும்சுருக்கமாய்ப் பேசுகிறதாயிருக்கும் (அப்துல்ஹமீ
திபுனு அப்திர் றஹ்மான்) சொல்லுகிறார்கள் நான் மனுவில்
ஒரு நட்சத்திரம் எரிந்து விழக்கண்டு இஃதென்ன புதுமையெ
ன்று கேட்டதில் இதுதான் இமாம் அபூஹனீபா றலியல்லாஹு
அன்ஹுவென்று சொல்லப்பட்டது, பின்னுமொரு நட்சத்திர
மெரிந்து விழுந்தது அஃதென்னவென்று கேட்டதில் இதாகிறது
முஸ்இறு புனுக்கிறும் றலியல்லாஹு அன்ஹுவென்றுசொல்லப்
பட்டது, அப்பாலுமொரு நட்சத்திரமெரிந்து விழுந்தது, அதைக்
குறித்துக் கேட்டதில் இதுதான் ஸுபுயானு தௌரீ றலியல்
லாஹு அன்ஹு வென்று சொல்லப்பட்டது பின்பு நான் முழி
த்துவிட்டேன அதின் பிறகு சொற்பநாளில் இமாம் அபூஹனீபா
றலியல்லாஹு அன்ஹு அவர்களும், அதற்கடுத்து இமாம் முஷ்
இறுபுனுக்கிறும் றலியல்லாஹு அன்ஹு அவர்களும், அதற்
கடுத்து ஸுபுயானு தௌரீறலியல்லா அன்ஹு அவர்களும் ஆக
இம் மூன்று பேர்களும் நான்கனவிற் கண்டதற்றீபின்படி வபாத்
தானார்களென்று.

(கலபுபுனுஸாலிம்) சொல்லுகிறார்கள் மஷ்ஹூறான பெரி
யோரென்றும் உண்மையுடையவரென்ற யட்டம தரித்த ஸாதிக்
குல் மகாபிரிய்யியவர்களெனக்குக் சொன்னார்கள். இமாம் அபூ
ஹனீபா றலியல்லாஹு அன்ஹு அவர்களை கைறு ஸன்னு
வென்கிற சபுறுஸ்தானில் அடக்கப்பட்டதின் பிறகு மூன்று இர
வுகளாகத் தொடுத்து பைத்துச் சப்தங்கேட்டேன்.

(அதின்பொருளாவது) பிக்ஹுபோய்விட்டதுஉங்களுக்குபிக்
ஹுகிடையாது ஆகையாலந்த பிக்ஹாளியிடம் படித்த பிக்ஹின்
படி அல்லாவைப் பயந்துகொண்டு அவர்களுக்குப் பகரமாயிருங்
கள். நுஃமானென்கிறவர்கள் வபாத்தானார்கள் ஆனால் இர
வின் இருள்கவிந்த வேளையில் இரவு முழுவதையும் நாற்பது வரு
டக்காலம் இபாதத்தைக்கொண்டு ஹயாத்தாக்கிவைத்தது இவர்
கள்போல் யாருண்டு என்றிவ்விதமாக வுருத்தோற்றமின்றி சப்
தங்கேட்டேனென்று.



ஜஃபறுபுனு ஹஸன் றஹிமஹுல்லாஹ் அவர்கள் சொல்லு
கிறார்கள் நான் இமாம் அபூஹனீபா றஹிமஹுல்லாஹ் அவர்க
ளைக்கனவிற்கண்டு அல்லாஹுத்தஆலா வுங்களுக்கென்ன செய்தா
னென்று கேட்டேன், அதற்கவர்களுடனே மனமகிழ்ச்சிகொண்ட
வர்களாக என்னை நோக்கி அல்லாஹுத்தஆலா என் பிழையைப்
பொறுத்தானென்று சொன்னார்களென்று.

நவ்புலுபுனுஹையான் றஹிமஹுல்லாஹ் அவர்கள் சொல்
லுகிறார்கள் இமாம் அபூஹனிபா றஹிமஹுல்லாஹ் அவர்கள்
மௌத்தானபொழுது நானவர்களைக்கனவிற்கண்டேன் அஃதெப்
படியானால் சகலகல்குகளையும் எழுப்பிமஹ்ஷற் வெளியில் நிறுத்
திக் கேள்வி கணக்குக்கேட்க ஆரம்பமாயிருக்கிறது, அப்போது
நபிஸல்லல்லாஹு அலைஹிவசல்லமவர்கள் நிலையில் நிற்கிறார்கள்,
அவர்களுக்குச்சூழ்தலாக, மஷாயிகுமார்கள், இமாம்கள், இவர்
களெல்லாம் அணியணியாக நிற்கிறார்கள், அவர்களில் அபூஹ
னீபா றஹிமஹுல்லாஹ் அவர்கள் முன்னாலே நிற்கிறார்கள் அப்
போதவர்கள் கையில்க் தண்ணீர்க்கரகம் வைத்துக்கொண்டு சகல
ர்களுக்கும் புகட்டுகிறார்கள், அதுபோலெனக்குந் தண்ணீர் கொடு
ங்களென்று கேட்டேன் அதற்கவர்களென்னை நபியுல்லாவிடம்
உத்தரவு தேடச்சொன்னார்கள் அதுபோல் நானுத்தரவுதேடவே
நபிஸல்லல்லாஹு அலைஹிவசல்லமவர்கள் உத்தரவு செய்தார்கள்,
அப்போதெனக்கும் ஒருபாத்திரத்தில்த் தண்ணீர் கொடுத்தார்கள்
அதில் நின்றும் நானுங்குடித்தேன், அப்போதென்னுடன் சிலகூட்
டாளிமார்களுண்டாயிருந்தார்கள் அவர்களுக்குங் குடிப்பாட்டி
னேன் அவ்விதமாக நாங்களெல்லோர்களுங் குடித்தும் அதில் நின்
றுங் கொஞ்சமும் குறையாதிருந்தது அப்பால் நான் இமாம் அபூ
ஹனீபா றஹிமஹுல்லாஹ் அவர்களை நோக்கி நாயகமே நபிநாய
கம் அவர்களின் வலதுபுறத்தில் நிற்கிறது ஆரென்றும், இடதுபுறத்
தில் நிற்கிறது ஆரென்றுங் கேட்டேன் அதற்கவர்கள் வலதுபுறத்
தில் இபுறாஹீம் கலீலுல்லா அவர்களும், இடதுபுறத்தில் அபூபக்
கர்ஸித்தீக்கு றலியல்லாஹு அன்ஹு அவர்களும் நிற்கிறார்க
ளென்று சொன்னார்கள், பின்பு அவ்விடத்தில் நிற்பவர்களைக்குறி
த்து ஒவ்வொருவரையுங் கேட்டேன் அதற்கு இமாமவர்கள் ஒவ்
வொருவரையும் இனங்குறித்து ஜவாபு சொல்லிவந்தார்கள் அவ்வி

தமவர்கள் ஒவ்வொருவரைத்தொட்டும் இனத்துக்காக ஒவ்வொரு விரலைமடக்கி யெண்ணினவர்களாக காட்டும்போது எழுபதிலக்க மானவுடன் நான் முழித்துவிட்டேன் அப்போதென்னுடைய விரலை யெழுபதிலக்கத்துக்காக மடக்கிப் பிடித்திருப்பதுபோற் பிடித்தவனாக இருந்தேனென்றார்கள்.

ஆகையால் இப்பேர்ப்பட்ட இமாம் அஃலம் வஹுமாம் அக்தம் றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய பறக்கத்தால் அல்லாஹுத்தஆலா நம்மனைவர்களுக்கும் பிழை பொறுத்து றஹ்மத் தருள்வானாகவும் ஆமீன், ஆமீன், வல்ஹம்துலில்லாஹி றப்பில் ஆலமீன், வஸல்லல்லாஹு வஸல்லமவபாறக்க அலா கைரி கல்க்கி ஹிஸையிதினா முஹம்மதின் வஆலிஹிவஸஹ்பிஹிவத்தாபி ஈஹி அஜ்மயீன்.

ஹனபி யிமாமவர்கள் பிரபந்தம்

முற்றிற்று

பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்.

——(*)——

இ ஃ து.

## மாலிக்கி இமாமவர்கள் பிரபந்தம்.

கலிவிருத்தம்.

காலிக்கென்றெவருங் கருத்தினுட்பொருத்துங்
கடவுளைத்துதித் திறையவனாற்
பாலிக்கும் பலனைப் பெறப்பலமுறையைப்
பரிசுத்தப்படுத்தியே புவியிற்
றாலிக்குங் குருமாரெவர்களும் புகழுந்
தொனிப்புடன் பிறந்து நற்றகையார்
மாலிக்கிமாமின் பிரபந்தங்களையிம்
மகியினில் மகிமையாய் மொழிவாம்.



## இரண்டாம் பாடம்.

இமாமாலிக்கு றஹிமஹுல்லா

அவர்களுடைய பிரசங்கத்திற் பேசுகிறதாயிருக்கும்.

இதில் ஒன்பது பிரிவுண்டு, அதின் விபரமாவது, முதலாம் பிரிவும் அவர்கள் பிறந்ததும், வயதும், வபாத்தும், இரண்டாம் பிரிவு அவர்கள் வங்கிஷத்திற் பேசுகிறது, மூன்றாம்பிரிவு, அவர்கள் உஸ்தாதுகளிலும், சீஷரிற் சிலரிலும்பேசுகிறது, நான்காம் பிரிவு, அவர்களைமற்றும் உலமாக்கள் துதித்ததைப் பேசுகிறது, ஐந்தாம்பிரிவு அவர்கள் ஹதீதுடைய இல்மை வலுப்பமாக்கி வைத்ததிற் பேசுகிறது, ஆறாம்பிரிவு அவர்களுடைய வரிசைகளிலும், சங்கையான சீலங்களிலும் பேசுகிறது, ஏழாம்பிரிவு அவர்களுடைய நன்கொடையிற் பேசுகிறது, எட்டாம் பிரிவு ஹாறான் றஷீதுடைய கிலாபத்தில் ஒருவுத்தியகார மனுடனால் அவர்களுக்கு நேரிட்ட துன்பத்தைக் கூறியது, ஒன்பதாம் பிரிவு அவர்கள் வபாத்திலும் அதற்குப்பின்னாலும் நடந்த சிறப்பிலும் பேசுகிறதாயிருக்கும் அதிலே

முதலாம் பிரிவாகிறது, பாரவான்களுக்கெல்லாம் ஷெய்காகிய மதீனத்திலுள்ள இமாமாகிய அபூஅப்துல்லா என்று குன்யத்துப்பேருள்ளமாலிக்குபுனுஅனஸுறலியல்லாஹுஅன்ஹுடைய வரலாற்றைக் கூறுகிறதாயிருக்கும்.

தபக்காத்துல் புக்ககாவில் யாபிஈ றஹிமஹுல்லா சொல்லுகிறார்கள், மாலிக்கு இமாமாகிறவர்கள், கிஜுறத்துத்தொண்ணூறும் வருடம் பிறந்து-கிஜுறத்து ஒருநூற் றெழுபத்தொன்பதாம் வருடம் றபீவுல் அவ்வல் மாதம் பதினாலாம் நாள் சுபுஹு நேரத்தில் வபாத்தாகினார்கள், அனபோதே அவர்களுக்கு வயது தொண்ணூறாயிருக்கும், அவர்கள் பிறந்ததும், வபாத்தானதும், மதீனாத்திலாயிருக்கும், ஜன்னத்துல் பகீஆயென்கிறதானத்தில் அடக்கம் செய்யப்பட்டது அவர்கள் ஹாறானுர்றஷீதுடைய இராகங்கத்தில் வபாத்தானார்கள் அவர்கள் வபாத்தான சமாசாரம் இருக்கிராச்சியம் எத்தியபோது அவ்வூர்முழுதும் துளும்பி நடுநடுங்கிக் கணக்கிலடங்காத துக்கத்தை அணைந்தார்கள்.

வாக்கிதீ றஹிமஹுல்லா சொல்லுகிறார்கள், மாலிக்கு றஹிமஹுல்லா தங்கள் தாயார் வயிற்றில் மூன்று வருடம் தரித்திருந்தார்களென்று, இஸ்மாயீலுபுனு அபீஉவைஸு றஹிமஹுல்லா சொல்லுகிறார்கள், நான் மாலிக்கு றஹிமஹுல்லாவுடைய வபாத்துநேரம் என்ன சொன்னார்களென்று அவர்கள் வபாத்திடத்தில் ஹாஸிறாயிருந்தவர்களிடங் கேட்டேன், அவர்கள் சொன்னார்கள், ஷஹாதத்துக் கலிமாவை திரப்பமாகச் சொல்லி முன்னும், பின்னும் காரியமடங்கலும் அல்லாவுக்குடையதென்று இந்தச் சொல்லைச் சொன்னார்களென்று.

(பாயிதா) இமாம் ஷாபிஈ றலியல்லாஹு அன்ஹு திருவுளமானார்கள்; முஹம்மதுபுனு அஜ்லான் என்கிறவர்கள் தாயார் வயிற்றில் நாலு வருடமிருந்தார்களென்று. மாலிக்கு றஹிமஹுல்லா சொல்லுகிறார்கள் நம்முடைய அயல்வீட்டிலொரு பெண்பிள்ளை முஹம்மதுபுனு அஜ்லானுடைய பெண்சாதி மூன்று விடுத்தம மூன்று சூல்ஹமலானார்கள், அதில், ஒவ்வொரு சூல் நவ்வாலு வருஷமிருந்ததென்று.

குதைபீ சொல்லுகிறார்கள் அப்துல்மலிக்குபுனு மற்வானென்கிற இராஜாவானவர் தன்னுடைய தாயார் வயற்றில் ஆறுமாதம் தரிபட்டிருந்தாரென்றும் ஆனபோதே ஹமலில் தீர்மானமாகிறது நாலுவருடமென்றும், ஹமலில் குறைந்த காலமாகிறது ஆறுமாதமென்றும் சொன்னார்கள், இதைப்பத்ஹு தையானிலும் பார்த்துக்கொள்ளுங்கள்.

இன்னம் (யாபிஈ) றஹிமஹுல்லாஹ் அவர்கள் சொல்லுகிறார்கள். இமாம் மாலிக்கு றஹிமஹுல்லாஹ் அவர்கள் உயர்ந்த நீளமானவர்களாயும், திரேகங் கண்டித்தவர்களாயும், உச்சந்தலை கொஞ்சம் பெரிதானவர்களாயும், விலையேறப்பெற்ற வுடையணிந்தவர்களாயும், உடுமானம் அழகானவர்களாயும், தலைப்பாகின் தொங்கலை யிரண்டு புயத்துக்கிடையிற் சோரவிட்டவர்களாயிருந்தார்களென்று.

## இரண்டாவது படாம்.

இரண்டாம் பஸ்லாகிறது அவர்களுடைய வங்கிஷத்திற்பேச்சிறதாயிருக்கும் (தஹ்தீபுல்கமாலில்) அபுல்ஹஜ்ஜாஜ் றலியல்லாஹு அன்ஹு அவர்கள் பேசிவருகிறார்கள் இமாம் மாலிக் றஹிமஹுல்லாஹ் அவர்களுடைய தகப்பனார் அனஸு, அவர் தகப்பனார் மாலிக்கு, அவர் தகப்பனார் ஆமிற், அவர் தகப்பனார் உமற், அவர் தகப்பனார் ஹாரிது, அவர் தகப்பனார் உதுமான், அவர் தகப்பனார் ஹைதல், அவர் தகப்பனார் அம்று, அவர் தகப்பனார் அஸ்பஹீயில் ஹிம்யரீயெனும் வங்கிஷத்தளவிற் சேர்க்கப்பட்ட அபூஅப்தில்லாஹில் மதனீயெனும் பட்டப்பெயர் தங்கிய ஹாரிதென்பவர்களாயிருக்கும் ஆனபோதே அவர்கள் வங்கிஷம் ஹிம்யரீக்கிளையிற் சேர்ந்தது ஹிம்யரீயாகிறது வங்கிஷங்களிற் சிறப்புத்தங்கியவங்கிஷமாயிருக்கும்.



## மூன்றாவது பாடம்.

மூன்றாம் பஸ்லாகிறது இமாம் மாலிக்கு றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய உஸ்தாதுமார்களையும், அவர்களுடைய சீஷரிற் சிலர்களையுங் குறித்துப் பேசுகிறதாயிருக்கும் அபுல் ஹஜ்ஜாஜென்பவர்கள் தஹ்தீபுல்கமாலில் பேசிவருகிறார்கள், இமாம் மாலிக்கு றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய மஷாயிகுமார்களாகிறது, இபுறாஹீமுல் முக்கத்திஸீ, இபுறாஹீமுபுனு இஸ்ஹாக்குபுனு அப்தில்லாஹி, இஸ்மாயீலு, ஹக்கீம், ஜஃபறுபுனு முஹம்மதிஸ்ஸாதிக், வஹபிஃ, ஸஃதிபுனு அபீவக்காஸின் மகள் ஆயிஷா, றலியல்லாஹு அன்ஹும் இவ்வளவு பேர்களால் ஹதீதைப் பேசிவந்தார்கள். இன்னம் முஹம்மதிபுனுஷிஹாபிஸ் ஸுஹ்ரிய், றபீ அத்திபுனு அப்திர் றஹ்மானு, பக்கீஹி அஹ்லில்மதீனா, யஹ்யபுனு ஸஃதில் அன்ஸாரீ, மூஸபுனு அக்கபா றலியல்லாஹு அன்ஹும் இவர்களிவ்வளவு பேர்களால் இல்மைப்படித்தார்கள்.

இன்னம் சீஷர்களில் மஷ்ஹூறானவர்கள் இபுறாஹீமுபுனுத் தஹ்மஸானிய்யி, இபுறாஹீமுபுனு அப்தில்லாஹிபுனு பறக்கமுல் அன்ஸாரிய்யி காலியல் மதீனா ஹபீபுபுனு அபீஹபீப், ஸஃதுபுனு மன்ஸூறு, ஸுபுயானு தௌரிய்யி ஸுபுயானுபுனு உயைனா அப்தில்லாஹிபுனு முபாறக் அப்துர் றஹ்மானுபுனு உமறு, அவ்ஸாஇய்யி, அப்துல்க் கரீம்புனு அப்துல் அஸீஸ், லைதுபுனு ஸஃது, முஹம்மதிபுனு இதுரீஸுஷ்ஷாபியீ, றலியல்லாஹு அன்ஹும்

இவர்களாயிருக்கும். இவர்களில் எல்லா வொவ்வொருவர்களுடைய பாரதூரமான கனதைகள் கணக்கிலடங்காதிருக்கிறது,

## நான்காவது பாடம்.

நான்காம் பஸ்லாகிறது உலமாக்களும், மஷாயிகுமார்களும் இமாம் றலியல்லாஹு அன்ஹு அவர்களைத் துதித்ததிற் சிலதைக் கூறுவதாயிருக்கும்.

ஹாபிழு அபூஅம்ரிபுனு அப்தில்பர்ரியென்பவர்கள் கித்தாபுல் இன்ஸானில் பேசிவருவறார்கள், இமாம் மாலிக்கிபுனு அனஸ் றலியல்லாஹு அன்ஹு அவர்கள் தாறுல் ஹிஜ்றாவென்ற மதீனத்துடைய இமாமாக இருந்தார்கள், அவர்களுக்கு ஆலிமுல் மதீனாவென்கிற பட்டப்பெயரைக்கொண்டு கூப்பிடப்பட்டது. இன்னம் மதீனத்துடைய சிறப்புகள் எந்தெந்த விடங்களிலெல்லாம் பிரஸ்தாபமாயிருக்கிறதோ, அந்தந்தவிடங்களிலெல்லாம் இமாமவர்களுடைய பிரஸ்தாபமுண்டு, இன்னம் பற்பல விடங்களிலுமிருந்து அவர்களுடைய இல்மளவில் ஹாஜத்தாகி மனுடர்கள் வாகனங்களிலும், கால் நடையாகவும் வந்துவந்து பெற்றுக்கொண்டு போவார்கள்; இன்னமவர்கள் பதினேழுவயதுப் பிராயமுதல் எழுபதையே சில்வானம் வருடம் வரை மத்றஸாவைத்து ஓதிக் கொடுத்தார்கள் தாபியீன்களில் நின்றும் மிகுதம் பேர்களெல்லாம் அவர்களுடைய பிக்ஹையும், ஹதீதையும் கனதையாய்ப் பாராட்டுதலாய்ச்சாட்சி சொல்லுவார்கள்.

றவ்ழு பாயிக்கில் வருகிறது திருமிதிய்யி றஹிமஹுல்லாஹ் அவர்கள் பேசிவந்த ஹதீதில் நபிஸல்லல்லாஹு அலைஹிவசல்லமவர்கள் தங்களுடைய உம்மத்துகளுக்கு ஆலிமைக்கொண்டு சோபனஞ் சொன்னார்களே அந்த ஆலிமாகிறது மாலிக்குபுனு அனஸின் றலியல்லாஹு அன்ஹு அவர்களாயிருக்குமென்று.

(ஹதீது) இல்மாகிறது பற்றற்றுப்போகும், ஆனால் மதீனத்திலுள்ள ஆலிமைக்காணப் பாக்கியாயிரார்களென்று, இன்னம் அபூஹுறைறா றலியல்லாஹு அன்ஹு அவர்கள் பேசிவந்த ஹதீதில் மனுடர் மிகுந்த தொலைதூரங்களிலிருந்து ஒட்டகை மீதிலேறி வுலமாக்களைத்தேடி அலைவார்கள் அவர்கள் மதீனத்து ஆலிமைக்காண அறிவாளியைக் காணமாட்டார்களென்றுஸுபு



யானுபுனு உயைனத் றலியலியல்லாஹு அன்ஹு அவர்கள் சொல்லுகிறார்கள் மனுடர்களடங்கலும் ஒற்றுமையாய்ச் சொல்லியிருக்கிறார்கள், குறித்த இரண்டு ஹதீதிலும் கூறிய ஆலிமாகிறது இமாம் மாலிக்கே யல்லாது வேறில்லையென்று, இன்னம் அப்துர் றஸ்ஸாக் றலியல்லாஹு அன்ஹு அவர்கள் சொன்னார்கள். இந்தக் குறிப்பைக்கொண்டு வெளியானது இமாம்மாலிக்கே யல்லாது வேறில்லை ஒட்டகை வாகனங்களால் மனுடர்கள் கூட்டங்கூட்டமாக அவர்களை நாடி வந்ததுபோல் ஒருவரளவிலும் வரவில்லையென்று.

இபுனு முஸ்அபு சொன்னார்கள் இமாம் மாலிக்கு றஹிமஹுல்லாஹ் அவர்களுடைய வீட்டு வாசலில் மார்க்கங்கள் கேட்டு வரும் ஜனங்களுடைய கூட்டத்தால் நெருக்கத்திலகப்பட்டவர்கள் அடிபிடிகளுமுண்டாகிவிடும் என்கிலும் உடனேக்குடனே பொறுக்குதலுக் தேடிக்கொள்வார்களென்று.

யஹ்யபுனு மஷ்அபா றலியல்லாஹு அன்ஹு அவர்கள் சொல்லுகிறார்கள் நான் ஹிஜிறத்தி ஒருநூற்றி நாற்பத்திநாலாம் வருடத்தில் மதீனத்திற்குப் போனேன் அப்போது இமாம் மாலிக்கு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் தலை, தாடி யிவைகளில் நரையொன்றுமில்லாத வாலிபரைப்போற் கனம் பொருந்தி மத்றசாவிலிருந்து மனுடர்களுக்கு இல்மைப் புகட்டுகிறார்கள். சகலர்களும் அதபுஹுறுமத்தாகச் சூழ்ந்து ஒருவரும் வாய்திறந்து பேசாதிருக்கிறார்கள் நானுமர்களை முடுகியிருந்தேன் எனக்கும் ஹதீது சொன்னார்கள், பிறகு இன்னம் கொஞ்சம் சொல்லுங்களென்றேன் பின்னுமதிகமாகச் சொன்னார்கள், அப்போதவ்விடமிருப்பவர்களென்னைச் சாடை பண்ணினார்கள் நான் வாய்மூடிக் கொண்டேன், மதீனத்துப்பள்ளியில் இமாமவர்களுடைய ஸமானில் அவர்களைத்தவிர ஒருவரும் பத்வாக்கொடுத்ததில்லை.

இபுனுமஸ்அபின் றஹிமஹுல்லாஹ் அர்வகள் சொல்லுகிறார்கள் இமாம் மாலிக்கு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் சொல்லும்படி நான் கேட்டிருக்கிறேன், அதாவதென்னவெனில் நான் பத்வாக்கொடுக்கத் தொடுக்கவில்லை யென்னைப் பத்வாக் கொடுக்கப் பாத்திரவாளியென்று எழுபது மஷாயிகுமார்கள் சாட்சி சொல்லியே யொழியவென்று, இந்தப்படி யாபியீ றஹிமஹுல்லாஹ் அவர்களும் (தபக்காத்துல் புக்கஹாவில்ச் சொல்லியிருக்கிறார்கள்.

இன்னம் இமாம் ஷாபியீ றலியல்லாஹு அன்ஹு அவர்கள் சொல்லுகிறார்கள். இமாம் மாலிக்கு றலியல்லாஹு அன்ஹு ஸுபுயான் றலியல்லாஹு அன்ஹு இவர்களிருவருமே யில்லாதிருக்கில் ஹிஜாஸுத்தேசத்தில்இல்முதூர்ந்து போகுமென்று. இமாம் ஷாபியீ றலியல்லாஹு அன்ஹு அவர்களிடத்திற் கேட்கப்பட்டது இல்மிற் சிறந்தவர்கள் மாலிக்குபுனு அனசைப்போலாரையுங் கண்டீர்களாவென்று அதற்கவர்கள் இல்மிலும், வயதிலும் நம்மை முந்தினவர்கள் சொல்லக்கேட்டிருக்கிறோம் இமாம் மாலிக்கு றலியல்லாஹு அன்ஹு அவர்களைப்போல் நாம் காணவில்லையென்று சொல்லும்படியாக அப்படியிருக்க நாங்களெப்படியவர்களைப்போற் கொர்றவர்களைக் காண்போமென்று சொல்லிவிட்டார்கள்.

இன்னம் இமாம் ஷாபியீ றலியல்லாஹு அன்ஹு அவர்கள் திருவுளமானார்கள் இமாம் மாலிக்கு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் ஒரு ஹதீதில் ஒரு ஹறுபிலாவது சந்தேகம்வைத்தார்களேயானால் அந்த ஹதீது முழுவதையும் விட்டு விடுவார்களென்று இன்னம் இமாம் ஷாபியீ றலியல்லாஹு அன்ஹு அவர்கள், இமாம் மாலிக்கு றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய சொற்களை யெடுத்துப் பேசிவரும் நேரங்களிலெல்லாம் இந்தச்சொற்களாகிறதுநம்முடையஉஸ்தாதவர்களுடையசொற்களாயிருக்குமென்று மகாகனதையாக்கிப் பேசுவார்கள். இவைகளை யெல்லாம் இமாம் பகுறுத்தீன்றாஸீ மனாக்கிபுஷ் ஷாபியிய்யில்பேசிவருகிறார்கள்.

ஹம்மாதுபுனு ஸலமா றலியல்லாஹு அன்ஹு அவர்கள் சொல்லுகிறார்கள் முஹம்மது நபிஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் உம்மத்துகளுக்குஇணக்கமான பாத்திரமான இமாமாகவும், மாலிக்குபுனு அனசு றலியல்லாஹு அன்ஹுவைத் தான் காண்பேனென்றார்கள், ஹம்மாதுபுனு ஸெய்து றஹிமஹுல்லா இடம் ஒருமனுடன் பலபேரும் விதற்பஞ்சொல்லப்பட்டவொரு மஸ்அலாவைக் கேட்க வந்தவருக்குச் சொன்னார்கள், உம்முடைய தீன், சலாமத்துப் பெற நாடுவீராகில் இதை மதீனத்து ஆலிமான மாலிக்கிடம் கேட்டுக் கொள்ளுமென்றார்கள்.



அப்துர்றஹ்மானிபுனில்காசிம்றஹிமஹுல்லா சொல்லுகிறார்கள் என்னுடையதீனில்இரண்டுமனுடரைத்துயருவேன் இல்மில்மாலிக்குபுனு அனசு றலியல்லாஹு அன்ஹுவையும், வறஇல்கலேமானுபுனுல் காசிமையுமென்று சொன்னார்கள், முஹம்மதுபுனு றுமுஹு றஹிமஹுல்லா சொல்லுகிறார்கள், நான் பராயமெத்தாத சிறுபிள்ளையாயிருக்கும்போது என் தகப்பனருடன் ஹஜ்ஜுக்குப் போயிருந்து, நபியுல்லாவுடைய பள்ளியிற் படுத்துறங்கினேன். அப்போது, நபியுல்லாவைச் சங்கையான கபுறில் நின்றும் எழும்பி அபூபக்று றலியல்லாஹு அன்ஹு பேரிலும், உமறு றலியல்லாஹு அன்ஹு பேரிலும் கைபோட்டவர்களாய் நடக்கும்படி மனாம்கண்டேன், உடனே, நான் எழும்பிநின்றுசலாம் சொன்னேன், எனக்கு ஜவாபு சொன்னார்கள். அப்போது நான், அவர்களைப்பார்த்து; யாறசூலல்லா தாங்களெங்கே யெழுந்தருளியாகிறீர்களென்று கேட்டேன் அப்போது நபியுல்லா திருவுளமானார்கள், மாலிக்கென்கிறவருக்குச் சிறுத்தல் முஸ்தகீமை நிலைநிறுத்தாட்டி வைக்கப் போகிறேனென்றார்கள். அப்போது நான் கண்விழித்துவிட்டேன் அப்போதுதான், மாலிக்கு றஹிமஹுல்லா (முவத்தா) என்கிற கித்தாபைக் கோர்வை செய்து துவக்கமாய்க் கொண்டுவந்து மிருந்த மனுடர்களுக்கிடையிலிருந்து விழப்பம் செய்கிறார்களென்று.

முஹம்மதுபுனு அப்துல் ஹக்கம் றஹிமஹுல்லா சொன்னார்கள். நான் முஹம்மதுபுனுஸ்ஸரிய்யில் அஸ்கலானிய்யி றஹிமஹுல்லா சொல்லக்கேட்டேன், அவர்கள் சொல்லுகிறார்கள், நான், நபிசல்லல்லாஹு அலைஹிவசல்லத்தை மனாமிற்கண்டு றசூலே, நாயகமே, எனக்கொரு ஹதீதைச் சொல்லவேணும், அதை, தாங்கள் சொன்னதாக நான் பேசிவரவேணுமென்று கேட்டேன், அப்போது, நபியுல்லா என்னைப்பார்த்துச் சரிய்யுடைய மகனே, நான் மாலிக்களவில் ஒரு புதையலைக்கொண்டுங்களெல்லோருக்கும் பிரித்துத் தரும்படி வசிய்யத்துச் செய்திருக்கிறேன், அந்தப் புதையற்றான் (முவத்தாவென்னும்) அவர்களுடைய கிதாபென்றார்கள், இன்னும், சொன்னார்கள், கலாமுல்லாவுக்குப் பிறகு என்னுடைய ஹதீதில் மிகவும் அசஹ்ஹான ஹதீது முவத்தாவைக் காண்ச்சரியானதில்லை, ஆகையால், அதைக் கேட்டுப் பிரயோசனம் பெற்றுக்கொள்ளுமென்றார்கள்.

பின்னர், விழித்து விட்டேன், தாறுவர்த்திய்யி றஹிமஹுல்லா சொல்லுகிறார்கள், நான் மனாமில் நபிசல்லல்லாஹு அலைஹிவசல்லத்துடைய பள்ளியிற் புகுந்து நபியுல்லாவை. மனுடருக்கு வஃலு சொல்லுகிறவர்களாகக் கண்டேன், அப்போது, இமாமாலிக்கு றஹிமஹுல்லா வந்து நுழைந்தார்கள், உடனே நபியுல்லா அவர்களை பார்த்து மாலிக்கே யென்கிட்டவாரும் வாருமென்றழைத்தார்கள், அப்போது, மாலிக்கு றஹிமஹுல்லா நபியுல்லாவை யடுத்தமாத்திரம், நபிஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் தங்கள் திருக்கையிற்கிடந்த மோதிரத்தைக் கழட்டி மாலிக்கு றஹிமஹுல்லா வுடைய சின்னிவிரலிற் போட்டார்கள். அப்போதுநான், கண்விழித்து விட்டேனென்று சொன்னார்கள்.

அதற்குத் தஃபீறு, இல்மென்று அந்த தாறுவர்திய்யி றஹிமஹுல்லா சொன்னார்கள், இபுனு லஃயஅத்து றஹிமஹுல்லா சொல்லுகிறார், ஹிஜ்றத்து ஒருநூறு முப்பத்தாறும் வருடம், அபுல் அஸ்வது றஹிமஹுல்லா மதீனத்திலிருந்து வந்தார்கள், அப்போது, அவர்களிடம் நாங்கள் கேட்டோம். மதீனத்தில் பத்வாக் கொடுக்கத் தகுந்தவர்கள் ஆருண்டுமென்று, அப்போது சொன்னார்கள், அசுபஹீக் கிளையில் ஒரு வாலிபக்காரனாருண்டும், அவருக்கு மாலிக்குபுனு அனசென்று சொல்லப்படும், இல்மில் அவருக்குச் சரியானவர்கள் ஆருமில்லை யென்று சொன்னார்கள்.

அப்பாசுபுனு முஹம்மது சொல்லுகிறார்கள், எங்களுக்கு ஹாரிதுபுனு மிஸ்கீன், ஹதீதுபேசி வருகிறவர்களி லொருவரிடம் கேட்டதாகச் சொல்லுகிறார். வகீஉ றமஹ்ஹுல்லா எங்களுருக்கு வந்தார்கள், அப்போது, தாபித்து பேசி வருகிறதாய்ச் சொன்னார்கள் நாங்கள் தாபித்தென்கிறதுவொருமனுடன்பேராயிருக்குமென் றெண்ணிக்கொண்டு அவராரென்று கேட்டதில் தாபித்தென்கிறது இல்மிற் றரிபாடானவர், அவர்தான் மாலிக்குபுனு அனசென்றார்கள், ஹாறூனுபுனு இஸ்மாயீல் சொல்லுகிறார்கள், நான் ஹன்பலீ இமாமிடம் கேட்டேன், சுபியானுத் தவ்ரீ ஹதீதால் அளகானவரோ. மாலிக்குபுனு அனசு அழகானவரோவென்று. இவ்விதம். கேட்டபோது. மாலிக்குமிகுந்து இல்மிலே தரிபாடுள்ளவர்களென்றார்கள், யூனுசுபுனு அப்தில் அஃலா சொல்லுகிறார்கள், இமாம்



ஷாபிஇய்யி றஹிமஹுல்லா சொல்லக் கேட்டேன், ஹதீதுடைய இல்முவந்ததானால்மாலிக்குபுனு அனசாகிறவர், நட்சத்திரமாயிருக்குமென்றார்கள்.

கலபுபுனு அம்று றஹிமஹுல்லா சொன்னார்கள், நான் மாலிக்குபுனு அனசு றலியல்லாஹு அன்ஹுடை மிருக்கும்போது, மதீனத்துக் காரியாகிய, இபுனு குதைறு றஹிமஹுல்லா வந்து ஒரு கடுதாசி கொடுத்தார்கள், அதை மாலிக்கு றஹிமஹுல்லா வாங்கிப் பார்த்துக்கொண்டு தங்கள் முசல்லாக்குங் கீழாலே வைத்துக் கொண்டார்கள், பின்னர், அந்தக் கடுதாசியைத் தந்தார்கள், அதைப்பார்த்தேன் அதில் அந்தகாரீ யெழுதி யிருக்கிறார்கள், இன்றிரவையில், றசூல் சல்லல்லாஹு அலைஹிவசல்லத்தை மனாமிற் கண்டேன், அதாவது.

மனுடர் சொல்லுகிறார்கள் நபியல்லா பள்ளியில் வந்திருக்கிறார்களென்று, அதுகேட்டு நான் ஓடிப்போய்ப் பார்த்தேன் பள்ளியின் தலம் விஸ்தாரமாகி நபியுல்லா நடுவிலும், மற்ற மனுடர்கள் நான்கு பக்கங்களிற்சூழ்ந்துமிருந்து சொல்லுகிறார்கள், அல்லாவுடைய றசூலே யெங்களுக்கு ஏதேனுமோர் கட்டளை யிடுங்களென்று கேட்டதற்கு, நபியுல்லா சொன்னார்கள், இந்த மின்பறின் கீழாலே ஒரு புதயலை அமைத்திருக்கிறேன், அதற்குமாலிக்கை யேவியிருக்கிறேன், அந்தப்புதயலை யெடுத்து உங்களுக்குப் பங்கிட்டுத் தரும்படியாக வென்றும், மாலிக்கிடம் போங்கள் என்றும் கட்டளை செய்தார்கள், உடனே, மனுடரெல்லாரு மீண்டு போகும்போது, ஒருவருக்கொருவர்கேட்டுக்கொள்கிறார்கள் மாலிக்குஎங்களுக் கேது கட்டளை செய்வாரென்று. இவ்விதம் கேட்கும்போது, அவர்களிலொருவர் சொல்லுகிறார், றசூலுல்லா ஏது காரியம்கொண் டேவுவார்களோ. அந்தப் பிரகாரம் ஏவுவாரென்று. பின்னர், நான் கண்விழித்து விட்டேனென் றெழுதி யிருந்தது.

பின்னர், (கலபு)சொல்லுகிறார், இதில்நபியுல்லா பேரைக்கேட்டவுடனே மனதுருகி யழுதுகொண்டிருந்தார்கள், அவர்கள் அந்த ஹாலி லிருக்கும்போது நான் போய்விட்டேனென்றார்கள், யஹ்யபுனுசகது றஹிமஹுல்லா சொல்லுகிறார்கள், சுபியானுத் தவ்ரிய்யி, சுபியானுபுனு உயைனா இவர்களில் இமாமாலிக்குடைய ஹதீ

தைக்காண அசஹ்ஹான ஹதீ தில்லையென்று. அப்துர்றஹ்மா
னிபுனுல்மகுதியி றஹிமஹுல்லா வொருபோதுஇமாமாலிக்
கைக்காணவொருவரையும் இல்மில் முற்படுத்தாதவர்களா யிருந்
தார்கள், லைதுபுனு சஃது றஹிமஹுல்லா சொன்னார்கள், அல்லா
விறுடைய பூமியின்கண்ணே எனக்கு மிகவும்உவப்புள்ளவர்கள் இமா
மாலிக்கைக் காணயாருமில்லை. இவ்விதம், சொல்லிக்கொண்டு
அல்லா இடத்திலே துஆக் கேட்பார்கள்; நாயனே என்னுடைய
வாணுளில் நின்றும் சிலதை யெடுத்து மாலிக்குடைய வாணுளிற்
சேர்த்து அவருக் கதிகமாக்கென்று.

பகுறுத்தீனுர்ருசியும்,யாபிஇய்யும்பேசிவருகிறார்கள்முஹம்
மதுபுனுல் ஹசன் றஹிமஹுல்லா இமாம் ஷாபிஇய்யி றலியல்
லாஹு அன்ஹுஇடம் கேட்டார்கள், எங்களுடைய சாகிபு அறி
வில் மிகுத்தவரோ வென்று. அப்போது, இமாம் ஷாபிஇய்யி றலி
யல்லாஹு அன்ஹு நீதமாய்ச்சொல்லைத் தேடுகிறீர்களோ
வென்று கேட்டதற்கு, அவர்கள் ஆம் என்றார்கள், அப்போது,
ஷாபிஇய்யி றலியல்லாஹு அன்ஹு, நீங்கள்தான் சொல்லுங்க
ளென்றார்கள், அவர்கள் உங்கள் சாகிபுதா னென்று சொன்னார்
கள்.

## ஐந்தாம்பிரிவாகிறது.

இமா மாலிக்கு றலியல்லாஹு அன்ஹு இல்மையும், ஹதீ
தையும், வலுப்பப் படுத்தி வைக்கிறவர்களா யிருந்ததிற் பேசுகிற
தாயிருக்கும்.

றவுலுல் பாயிகில் சொல்லுகிறார்கள்,மாலிக்குறலியல்லாஹு
அன்ஹு தீனுடைய இல்மைச் சங்கையாக்கி வலுப்பப்படுத்து
வதில் மிகுந்த கடப்பா யிருந்தார்கள், அதாவது, ஹதீது சொல்ல
நாடினால் அவர்கள் உலுச்செய்து இரண்டு றக்அத்துத் தொழுது
மஜ்லிசிணடுவிற் சங்கையாயிருந்துசிறப்பான வுடையாகச் சட்டை,
தலைப்பாகையணிந்து, சீப்புக்கொண்டு தாடியை வார்ந்து, பணம்
பூசி யிருப்பார்கள், இன்னும், தாங்கள் சொல்லிக்கொள்வார்கள்,
இதுகொண்டு றசூல்சல்லல்லாஹு அலைஹிவசல்லத் துடைய
ஹதீதைவலுப்பப் படுத்தாதலை நாடி யிருக்கிறே னென்று.முஸ்
இஅபுனு ஈசா றஹிமஹுல்லா சொல்லுகிறார்கள், மாலிக்கு றலி



யல்லாஹு அன்ஹு ஹதீதுசொல்ல நாடுவார்களாகில் குளித்து
மணம் பூசிக் கொள்வார்கள், ஹதீது சொல்லும்நேரம், ஆராவ
து இரைந்து பேசிக் கொண்டார்களாகில் அவர்களைப்பார்த்து ஓர்
ஆயத்தை யோதிக் காட்டுவார்கள், அதன் பொருள், மூமினனவர்
களே யுங்களுடைய சத்தங்களை நபியுடைய சத்தத்துக்கு மேலே
உயர்த்தா தீர்களென்று, இன்னும், சொல்லுவார்கள், நபியுடைய
ஹதீதைச் சொல்லும்போது ஒருவன் தன்சத்தத்தை யுயர்த்துவா
னாகில், நபியிட மிருந்து அதபில்லாமற் சத்தத்தை யுயர்த்தினவ
னைப் போலேயா யிருக்குமென்று.

அப்துல்லா கிபுனுல் முபாறக்கு றஹிமஹுல்லா சொல்லுகி
றார்கள், நான் ஒருபோது மாலிக்கு றலியல்லாஹு அன்ஹுஇட
மிருந்தேன், அவர்கள், ஹதீது சொல்லும்போது ஒரு மஜ்லிசிற்
பதினாறு தடவை நட்டுவக்காலி கொட்டினது. அதனால், முகமும்
பேதலித்து மஞ்சணித்துப் போயினது, அப்படியிருந்தும் தாங்கள்
அந்த ஹதீதை நிற்பாட்டவில்லை, அப்போது, நான்கேட்டேன்,
அபூ அப்துல்லாவே இன்றையில்நான் உங்களில்நின்றும் கண்ட
புதுமை போல் ஒருக்காலும் காணவில்லையென்று அப்போது,
சொன்னார்கள், நபியுல்லாவுடைய ஹதீதை வலுப்பப் படுத்தினதற்
காய்ச் சபுறு செய்தே னென்றார்கள், சஃபுபுனு அப்தில்லா
சொன்னார்கள், மாலிக்கு றலியல்லாஹு அன்ஹு நபியுல்லாவு
டைய சமாசாரத்தைப் பேசி வந்தார்களாகில் நிறம்பேதலித்துச்
சரீரம் நெளிந்து ஒடுங்குவார்கள்' இது அவர்களுடனே இருப்பவர்
களுக்கு வருத்தமாகும் இது, அவர்களுக்கு வழமையா யிருக்கும்,
அப்படி யிருக்கும் நாட்களி லோர்போது, இது காரியத்தைத்
தொட்டும் அவர்களைக் கேட்கப் பட்டபோது சொன்னார்கள்,
அந்தநேரங்களில் நான் காணும் காட்சியை நீங்கள் காணுவீர்களா
கில் என்னைப் பொருத்தங் கெட மாட்டீர்களென்று. இவ்விதஞ்
சொன்னார்கள்.

உலமாக்களிற் சிலர் சொல்லுகிறார்கள், மாலிக்கு றலியல்
லாஹு அன்ஹு நபியுல்லாவுடைய ஹதீதைப் பாதை வழியி
லும், நின்ற நிலையிலும், ஓடுகிற வோட்டத்திலும் சொல்வதைப்
பொருத்தங்கெடுவார்கள், இஃதெல்லாம் சங்கைக்கிப் பற்றாதென்

பார்கள், இமாம்ஹசன் றஹிமஹுல்லா சொல்லுகிறார்கள், முன்னுள்ள வுலமாக்களாகிறவர்கள் ஹதீதையும், இல்மையும் இவ்விதம் சங்கையாக்கின தற்காய் அல்லாஹுத் தஆலா அவர்களுடைய சங்கையை மேலாக்கி யவர்களைக் கண்டவுடன் மனுடர்களும், இராஜாக்களும் அடிமைகள்போல் அடி பணியும்படியாய் அல்லாஹுத் தஆலா நடப்பிவிக்கின்றான். ஆகையால், அறி, தாலிபானவனே, பூமியிலுள்ள புழுகி யடைந்த மண்ணானது தாழ்மையாகி யுள்ளங்கால்களுக்குச் சவட்டும் தரையாகி யிருந்ததை அல்லாஹுத் தஆலா அந்த மண்கொண்டே தயம்மும் செய்வதில் முகத்தை (மஸ்ஹு) செய்யும்படி யாக்கினான்.

## ஆறாம் பிரிவாகிறது.

இமா மாலிக்கு றலியல்லாஹு அன்ஹுவுடைய வரிசைகளிலும் புகழ்தங்கிய சீலங்களிலும் பேசுகிறதா யிருக்கும்.

றபுலுல் பாயிக் கென்கிற கித்தாபிற் சொல்லுகிறார்கள், உலக சக்கர வர்த்திகளா யிருக்கும் இராஜாக்களும், (ஷகன்ஷாகு) பாத்து ஷாக்களும், இமாம் றலியல்லாஹு அன்ஹுவுக்குவழிப் பட்டு அவர்கள் இல்மைக் கொண்டு கட்டளைகள் நடத்தி யவர்கள் மதுகபைத் துயர்ந்து நடந்தார்கள்.

பிக்குஹுவுடைய இல்மில், அல்லது, ஹதீதுடைய இல்மிலோர் நுணுக்கமான மஸ்அலாவை யவர்களிடம் கேட்கப்பட்டால் திரும்பிக்கேளாமற்கேட்கிறவர்களுடைய கருத்துகளில், கேட்கவேணுமென்று ஊசாடியதுக்கெல்லாம் தலீல்கொண்டு ஜவாபுசொல்லிப் போடுவார்கள், ஸஹறு நேரத்தில் குறுஆனும் சலவாத்தும்திக்றுகளும், தகஜ்ஜுதும் எந்நாளும் வழமையாகச் செய்து வருவார்கள். இன்னும், நபியுல்லாபேரில் மதஹு செய்திருக்குறார்கள் அந்தமதஹுபோல் நாகரீக மானதும், இன்பமானதும் ஒரு வருண்டாக்க வில்லை. அஃதெல்லாம் இந்தச் சுருக்கமான கித்தாபிலடங்காது.

முனப்பிபுனு ஈசாறஹிமஹுல்லா சொல்லுகிறார்கள். நான் மாலிக்குறலியல்லாஹு அன்கு சொல்லக் கேட்டேன், நான் ஒரிரவிலாவது றசூல் சல்லல்லாஹு அலைஹிவசல்லத்தை மனாமிற் காணாதிருந்ததில்லை யென்று, கஸ்ஸாலிய்யு றஹிமஹு



ல்லா கவாமென்கிற கித்தாபிற் சொன்னார்கள் ஸூபுயானுத் தவ்ரிய்யி றலியல்லாஹு அன்ஹு, இமாமாலிக்கு றலியல்லாஹு அன்ஹுவுடைய வீட்டுக்கு வந்து வீட்டினுள்ளே வரவேணுமென் றுத்தரவு தேடினபோது. உத்தரவு கொடுத்துச் சலாம்சொல்லிச் சுபுயானுத் தவ்ரிய்யி றலியல்லாஹு அன்ஹு இமாமைப்பார்த்து, அபூஅப்தில்லாவே நான் றசூல் சல்லல்லாஹு அலைஹிவசல்லத்தை மனாமிற் கண்டேன், அவர்கள் கையிலிருக்கிற மோதிரத்தைக் கழட்டி யுங்கள் வாயிற் போட்டார்கள், ஆனதால், அது காரியத்தில் அல்லாஹுத் தஆலாவைத் தக்வாச் செய்துகொள்ளுங்களென்று சொன்னார்கள் அதுகேட்டவர்கள் அழுதார்கள், பின்னர், சுபுயானுத் தவ்ரிய்யி றலியல்லாஹு அன்ஹு, மாலிக்கு றலியல்லாஹு அன்ஹுவுக்கு எந்த ஹாலிலும் தரிபாட்டுக்குத் துஆச்செய்துகொண்டு வெளியிற் புறப்பட்டார்கள்.

றவ்லுல் பாயிக்கிற்சொல்லுகிறார்கள், மாலிக்குறலியல்லாஹு அன்ஹு அவர்கள் ஹதீதிற் கோர்வையாக்கி யிருக்கும் கித்தாபுக்குப் பேர் இன்னவிதம் வைக்கலாமென்று யோசித்துக்கொண்டிருக்கும்போது, ஒருநாள் நித்திரையில் நபியுல்லாவை மனாமிற் கண்டார்கள், நபியுல்லா மாலிக்கு இமாமைப்பார்த்து, இந்த இல்மை மனுடருக்காக நோக்கப் பட்டதாக்குமென்ற கருத்தைப் பொதிந்தவோர் அறபுச்சொல்லைச் சொன்னார்கள், பின்னர் அந்த இல்முடைய ஹதீதுக் கித்தாபுக்கு நபியுல்லாமனாமிற் சொன்ன சொல்லினின்று மெடுத்து (முவத்தா) என்று பேர் வைத்தார்கள், அதற்கு, மஃனா குறுஆனுக்கும், ஹதீதுக்கும் நோக்கப் பட்டது, அல்லது, ஒத்துமை யாக்கப்பட்டதென்பதாம்.

யூனுசுபுனு அப்தில்அஃலா சொல்லுகிறார்கள், இமாம் ஷாபியி றஹிமஹுல்லா சொல்லக்கேட்டேன். பூலோகத்தில் இல்மிலும், கார்மானத்திலும், அதைப்பிடித்துப் பேசுவதிலும் (சவாபால்) மிகுத்த கித்தாபுபோலொன்று மில்லையென்று தஃதீபுல் கமாலில்வருகிறது, மாலிக்கு றலியல்லாஹு அன்ஹுக்கு எழுத்துவேலையாயிருந்த ஹபீபுனால் வர்க்கு சொல்லுகிறார்கள், தாறுவர்திய்யு இபுனு அபீஹாசிம் இபுனுகினானா இம்மூவரும் எனக்கோர் தங்கக்காசு தந்து மாலிக்கு றலியல்லாஹு அன்ஹு

இடம், மூன்று மஷாயிகுமாருடைய ஹாலைத்தொட்டும் கேட்கும்
படி சொல்லி அவர் தருணமல்லாதநேரம் சென்று கேட்டதற்கு,
அவர்களிது வக்தல்லவே யென்று சொன்னார்கள், உடனே தம்
முடைய வீட்டில் யாதொரு புகலும் இல்லா திருப்பதையு முறை
யிட்டதற்கு (ஒகே) ஹபீபே, உமக்குப் புகலிடம் உண்டாவது
எனக்குச் சந்தோஷந்தானென்று சொல்லி தலையை யுயர்த்தி
(மாஷாஅல்லாகு லாகுவ்வத்த இல்லா பில்லாகி) என்று தங்கள்
வழமைபோற் சொல்லிக்கொண்டு ஜவாபு சொல்லுகிறார்கள், றசூ
லுல்லாவுடைய அஸ்ஹாபியர்களிடம் ஹதீதைக் கேட்டு ரிவா
யத்துச் செய்யும், மஷாயிகுமார்களில் எழுபதுபேரை இந்தப்
பள்ளியிற் சந்திக்கிறேனென்று எண்ணியெண்ணிச்சொன்னார்கள்.

இன்னும், இல்லை, அதற்குப் பாத்திரவாளிகளாற் பெற்றுக்
கொள்ள வேணுமல்லாமல் வேறில்லை யென்றார்கள், இன்னும்,சில
பேர்கள் ஹதீதைப்பேசிவந்த பேர்களைப் பேரைக்குறித்துக் குறி
த்து நீக்கினார்கள்,வாக்கிதீ றஹிமஹுல்லா சொல்லுகிறார்கள் மாலி
க்கு றஹிமஹுல்லா தங்களுடைய காரியத்தின் துவக்கத்திலெ
ந்தவேளையும் பள்ளியில் வரத்துப் போக்காய் ஜமாஅத்துக்கும்,
ஜும்ஆவுக்கும்ஜனாஸாவுக்கும்ஹாஸிறுகிநசலாளிகளைமினவிஹக்கு
களையிறுத்து உபதேசங்களைப்பெருப்பித்துக்கொண்டே யிருந்தா
ர்கள், பின்னர், மனுடருடைய கூட்டமும், சந்தடியு மிகுந்தவுடன்
தங்களுக்கு * கல்வத்திலுள்ள, திக்று, பிக்று, முறாக்கபா, முஷா
கதா இப்பேர்ப்பட்ட ரியாலாத்துக்கும், அமலுல் பாறினுக்கு
முட்டுப்பாடு வந்தவுடன இவைகளுக்கெல்லாம் வீட்டைவிட்டும்
வெளிக்கிடாமற்றுய் பிள்ளைகளி லொருவர் மவுத்தாகினாலும், மை
யித்துடையவர்கள் இமாமிடம் வருவார்கள், அவர்களை இமாம்
சலிப்பாற்றுவார்கள்.

தபக்காத்துல் புக்கஹாவில்யாபிஈறஹிமகுல்லாசொல்லுகிறார்
கள், மாலிக்கு றலியல்லாகு அன்கு சொல்லுகிறார்கள், அல்லாகுத்
தஆலா எனக்குத் தந்த நிஃமத்திலுள்ளது எனக்கு வோதிததந்த
வுஸ்தாதுமாரிற் சிலர்கள் என்னிடம்வந்து மூட்டுப்பாடுள்ள மஸ்

* கல்வத்து, தனித்திருந்து நிஷ்டைபுரிதல், திகுறு, நினைக்குதல் பிகு
று, ஆலோசித்தல், முறாக்கபா, நோட்டமிடுதல், முஷாகதா, தெரிசித்தல்,
ரியாலாத்து, நபுசை நடைபழக்கல்.



அலாவை விளங்கிக்கொள்வதும், எனக்கு துஆச்செய்கிறது மென்
று இவ்விதம் சொல்லி, இது, அல்லாவுடைய நிஃமத்தை,ஷுக்றை
நாடிச் சொல்வதல்லாற். பெருமையைநாடிச் சொல்வதல்லவென்
றுஞ்சொன்னார்கள்.

இப்னுஷாதில், யாபிஈறஹிமஹுல்லா சொல்கிறார்கள், எஹ்ய
புனு ஸைது றலியல்லாகு அன்கு மாலிக்கு றலியல்லாகு அன்கு
வுக்கு ஒரு கடிதாசி எழுதினார்கள், அதில், வருகிறது, மாலிக்கே
எனக்குச் சமாசாரம் வந்திருக்கிறது, நீர் மிருதுவான உளுணைவிரு
ம்பி மெல்லினமான வுடையை அணிந்து, அழகான விரிப்புகளி
லிருந்து உம்முடைய வீட்டின் வாயலிற் காவற்காரனையும் நிறுத்தி
இல்முடைய மஜ்லிசென்று வொருதலத்தைக் குறித்துக்கொண்டு,
மற்று மனுடர்கள் உம்மை இமாமாக வாக்கிக் கொண்டார்க
ளென்று, இதிலெல்லாம் கொஞ்சம் பெருமை அனுசரிப்பதால்,
அல்லாகுத்த ஆலாவைத் தக்குவாச் செய்துகொள்ளு மென்றெழு
தினதற்கு. ஜவாபெழுதினார்கள், மெய்தான் நாங்களிவையெல்லாம்
ஹலாலாகவிருப்பதாற் செய்துகொண்டு இஸ்திஃபாறு செய்து
கொள்வோமென்று எழுதி, குறுஆன் ஆயத்தையோதி அத்தா
ட்சி கொடுத்துக் கடைசியில் எழுதினார்கள், குறித்த சுகண்டிகளிற்
புகுதாறதைக்காணப்புகுதா திருப்பது நைருக விருக்குமென்று
திட்டமா யறிந்திருக்குறேனென்றும் எழுதினார்கள், மேற்சொ
ன்ன ஆயத்தின் பொருளாகிறது, முஹம்மதே நீர்சொல்லும், அல்
லாகுத்தஆலா தன் அடியாருக்கு வெளியாக்கி வித்த ஆமான அல
ங்காரத்தையும், ரிஸ்கில் ஹலாலானதையும், ஹறுமாக்கி வித்தாரெ
ன்று. என்கிறதா யிருக்கும்.

கஸ்ஸாலிய்யி றஹிமஹுல்லா சொல்லுகிறார்கள்,இமாமாலிக்கு
றஹிமஹுல்லா வுலமாவுல் ஆகிறவில்நின்றுமகாபாரதூரமானவ
ர்களாயிருந்தார்கள், தங்கள் நபுசானது குறித்த நசீஹத்தையும்
ஒப்புக்கொண்டு குறுஆனுடைய முறுதின்படி (ஷற்அயும்) வெளி
யாக்கி வைத்ததென்று,தமீர்றஹிமஹுல்லாஹயாத்துல் ஹயவான்
என்கிற கித்தாபிற் சொல்லுகிறார்கள், மாலிக்கு றலியல்லாகு அன்
குவுடைய மஜ்லிசில் மிகுந்த ஜனங்கள் கூடி ஹதீது சொல்லிக்
கொண்டிருக்குப்போது, ஒருமனுடன் வந்து யானைவந்து நிற்கு

தென்று புதினமாகச் சொன்னான், அந்நாளில் அந்த இராச்சியத்தில் யானை யென்கிறபேர் கேட்ட தல்லாமல் யானையைக் கண்டதில்லை, ஆனதால், அந்தப் புதுமையைப் பார்க்க நாடிச் சகலபேர்களும் போய்விட்டார்கள், அப்போது, யஹ்யல் உன்துலிசிய்யி றஹிமஹுல்லா மட்டும்போகாதிருந்தார், அவரைப்பார்த்து இமாம் றலியல்லாகு அன்கு கேட்டார்கள், இந்தப் புதுமையான படைப்பை நீர்பார்க்கப் போகவில்லையா வென்று, அதற்கவர், சொன்னார், நான் தூரமான உன்துலிசென்னும் பட்டணத்தில் நின்றும் இவ்விடம் வந்தது உங்களுடைய இல்மைக் கேட்டுப் பிரயோசனம் பெறவேயல்லாது யானையைப் பார்க்க வரவில்லையென்று. இந்தச் சொல் இமாம் றலியல்லாகு அன்குவுக்கு மிகவும் சந்தோஷமாகிப் புதினப்பட்டு அவருக்கு உன்துலிசுடையவர்களிற் புத்திவானென்று, இப்பொருட்கொண்ட அறபுமொழியாற் பெயர் வைத்துப் போட்டார்கள.

## ஏழாம் பிரிவாகிறது.

இமாமாலிக்கு றலியல்றாஹு அன்ஹுவுடைய கொடையிற் பேசுகிறதாகவிருக்கும்.

றலுலில்பாபிக்கு, என்கிறகித்தாபிற், சொல்லுகிறார்கள், இமாம் றலியல்லாஹு அன்ஹுவுடைய இல்மின் பாரதூரமும், அமலுடைய பெருப்பமும், உலகமெல்லாம் பரந்து பிறஸ்தாபமான பொழுது, அந்தந்தத் தேசங்களால் இராஜாக்கள், சீமான்கள், அநேக முதல்களையும், உடைகளையும், வாகனங்களையும் ஹதியாவாக இமாம்றலியல்லாஹு அன்ஹுவுக்கு அனுப்பி விக்கிறவர்களாயிருந்தார்கள், இமாம் றலியல்லாஹு அன்ஹு அவைகளையுடனே மிஸ்கீன்களுக்கும் கூடயிருக்கிறவர்களுக்கும் பங்கிட்டுப் போடுவார்கள், அவர்களும் அதை நலவின்முகத்தின்பேரிற் பிரித்துவிட்டு விடுவார்கள், இமாம் றலியல்லாஹு அன்ஹு சொல்லிக்கொள்வார்கள், ஸுஹுதென்னும் வெறுக்குதலாகிறது முதல்களை யிழப்பதல்ல, என்கிலும், ஸுஹுதாகிறது (கல்பு) அதை விட்டுப்பராக்கொழிகிறதென்பார்கள்.

இமாம் ஷாபிஇய்யி றலியல்லாஹு அன்ஹு திருவுளமானார்கள். இமா மாலிக்கு றலியல்லாஹு அன்ஹுடைய வீட்டின்



வாசலிலே குறசான் தேசத்திலுள்ளபஞ்சகல்யாணிக் குதிரைகள் அவர்களுக்கு ஹதியவாக அவரவரேயனுப்பியகுதிரைகள்நின்றது அதுபோல் முகம் அழகான குதிரையை நான் காணவில்லை, அதில் ஒருகுதிரையை எனக்கு ஹதியாவாகத் தந்தார்கள், நான்கேட்டேன், தங்களுக்குச் சவாரிக்காக வொன்றை வைத்துக் கொள்ளுங்களென்று, அப்போது, அவர்கள் சொன்னார்கள், நபிசல்லல்லாஹு அலைஹிவசல்லமவர்களுடைய திருமேனியடங்கி யிருக்குமதீனமென்கிற பட்டணத்தில் நான் குதிரையேறி யந்தக்குதிரையின் காற்குளம்பு அதின் தறையைச் சமட்டுவதினால் நான் அதபில்லாதவனாகிவிடுவேனென்கிறதை . அல்லாஹுத் தஆலாவில்நின்றும் காணுகிறேனென்று இவ்விதஞ் சொன்னார்கள்.

இபுனு குல்லக்கான், என்கிறவர்கள் தாரீகுஎன்கிற கித்தாபிற் பேசி வருகிறார்கள், இமாமாலிக்கு றலியல்லாஹு அன்ஹு தாம்முதிர்ந்த வயதாய் விர்த்தாப்பியமாய் மிகுந்த துலைதூரம் நடக்க ஏலாதவர்களாயிருந்தும் நல்லஇணக்கமான வாகனமெல்லாம் உண்டாகி யிருப்பதுடன் மதீனத்தில் ஒருபோதும் வாகனமேறவில்லை, நபியுல்லாவுடைய அதபுக்காக வேண்டியென்று இவ்விதஞ் சொன்னார்கள்.

## எட்டாம் பிரிவாகிறது.

இமாமாலிக்கு றலியல்லாஹு அன்ஹுவுக்கு அந்நாளில், இருந்த ஹாறூனுற்றசீது இராஜாவுடைய பாத்துஷாவான அப்பாசிய்யாக்களில் நின்றும் முள்ள ஒருவரால் விதித்த. துன்பங்களிற் சிலதைச் சொல்வதாயிருக்கும்.

கஸ்ஸாலிய்யி றஹிமஹுல்லா கவாசென்கிற கித்தாபிற் சொல்லுகிறார்கள், மாலிக்கு றலியல்லாஹு அன்ஹு வோர்பத்வாக் கொடுத்தார்கள், வம்பிக்குதலில் அகப்பட்டு தலாக்குச் சொல்வதும், அவன் செய்யும் லேவா தேவியும், ஒப்புதலும் கூடாதென்று, இதை, பனில் அப்பாசில் நின்றும் ஒருபாத்துஷாமதீனத்தில் இருந்தவர் அறிந்து இந்த மாலிக்கு கொடுத்த பத்வாவினால் ஹாறூனுற்றசீதுடைய கிலாபத்து வம்பிக்குதலால் ஒப்புனதாயும் ஞாயமாய் அந்தகிலாபத்து அலியாருடைய பிச்சளத்துக் கல்லோ

சேருமென்கிற சைக்கினையா யிருக்குதென்று விச்சித்திரமாய் விளங்கி மாலிக்கு இமாமைப் பார்த்து நீர்இப்பேர்ப்பட்ட பத்வாக் கொடுக்கக் கூடாதென்று சொன்னதற்கு, இமாம் திருவுளமானார்கள், மார்க்கத்தில், தெற்றுதற்கிடையாது, திடனாக அறிந்திருக்கிறேன். நபிசல்லல்லாஹு அலைஹிவசல்லம் திருவுளமானார்கள், (* முக்றகு) உடைய தலாக்கு விஷயமாகமாட்டாதென்று அதை நான் விஷய மாகுமென்று சொன்னால், வழிதப்பி றசூலுடைய சொல்லுக்கு மாற்றஞ் செய்தவனாகி விடுவவேனென்று சொன்னார்கள்.

பின்னர், அந்தபாத்துஷா, மீளவும் நீரந்தச்சொல்லை விட்டு மீண்டுவிடும் உமக்கு கைறாயிருக்குமென்று சொன்னார். அதற்கு, இமாம் சொன்னார்கள், நான் றசூலுடைய சொல்லைவிட்டும் ஒருக்காலு மீளமாட்டேனென்று. அதுகேட்டுடனே யந்தபாத்துஷா கோபமாகி இமாம் றலியல்லாஹு அன்ஹுவைக் கையைப்பிடித்து நீட்டிச் சாட்டைகளால்முதுகிலும், விலாவிலும்அடிக்கும்படி கட்டளை செய்து அடிக்கப்பட்டது, அதனால், தங்கள்தோளின் பூட்டுக் கழண்டு பிசகி அடியினுடைய கொடூரத்தால், புண்ணுண்டாகி வாடைகள் பேதலித்து, அதனால், வெளியிற் புறப்படாமலும் பள்ளிவாசலுக்கு, இமாம் ஜமாஅத்துக்கு ஹாலிறாகாமலும் வீடடங்கியிருந்தார்கள்.

பின்னர். அவர்களுக்குக் காவலாளும்போட்டு வைத்தார், பின்னர், மாலிக்கு றஹிமஹுல்லா முன்னாற்கண்டிருக்கிற பேர்கள் இப்போது கண்டாற் சுரூபந் தெரியாமல் மயங்குவார்கள் அதற்காக இமாம்சொல்லிக் கொள்வார்கள் நான்தான் அனசுடைய மகன் மாலிக்கு, நான்தான், றசூலுடைய சொல்லைச் சொன்ன நான் வம்பிக்குதலில் அகப்பட்டவனுடைய ஒப்பந்தம், கொடுக்கல், வாங்கற் பொருத்தம் யாதொன்று சிஹத்தல்லவென்று சொன்னது நான் தானென்று சொல்வார்கள், இந்தச்சொல்லை அந்த பாத்துஷா கேட்டவுடன் யாதொன்றும் சொல்லாமல் விடுதலாக்கி விட்டார்.

* முக்றகு-வம்பிக்கப்பட்டது.



இபுனு குல்லக்கான் தாரீகு என்கிற கித்தாபிற் பேசி வருகிறார்கள், மாலிக்குறலியல்லாஹு அன்ஹுவுடைய தறஜாவும், உயர்த்தியும், முன்னிருந்ததைக்காண அடிபட்டபிறகு நாளுக்குநாள் அதிகமாகிக் கொண்டேஇருந்தது, ஒவ்வொரு சாட்டை யடியானது, ஒவ்வொரு ஆபரணதியாகி விட்டது, பின்னர், ஹாறூனுர்றசீது மதீனத்துக்கு வந்தபோது சகலரும் அவரைப்போய்க் கண்டுகொண்டார்கள், மாலிக்கு றலியல்லாஹு அன்ஹு அவரைக் காணவு மில்லை, சலாம் சொல்லி அனுப்பவுமில்லைப், பின்னர், அவர்தானே இமாமைக் காணவேண்டி அவர்கள் வீட்டுக்கு வரவும் வாசலை அடைத்துக் கொண்டார்கள், உடனே, காவற்காரன் இமாமைப் பார்த்து அபூ அப்துல்லாவே அமீறுல் மூமினீன் வந்து உங்கள் வாசலில் நிற்கிறார்கள் அவர்களுக்கு ஜவாபு சொல்வது உங்களின்மீது பறுலாகவும், விரோதிக்குதல் ஹறாமாகவும் இருப்பதாற் கதவைத் திறவுங்களென்றுசொன்னார்.

பின்னர், மிகுந்த நேரம் சென்று தங்கள்கையின் பத்துவிரலையும் குறுஆனிலுள்ள காபு-ஹா-யா-ஐன்-சாத்து-ஹா-மீம்-ஐன்சீன்-காபு-என்கிறபத்து ஹறுபையும் ஒன்றொன்றாகஎண்ணி வலதுசின்னி விரலில் நின்றும் துவக்கிப்பொத்தி, இடது சின்னிவிரல் வரையும் பொத்தினவர்களாகக் கதவைத் திறந்து ஹாறூனுர் றசீதைப் பார்த்துப் பொத்தின விரலைத் திறந்தார்கள், பின்னர், வந்த மனுடரைச் சங்கையாக்கி மெல்லினமானபேச்சாகப் பேசினார்கள், பின்னர், ஹாறூனுர் றஷீது சொன்னார், அபூ அப்துல்லாவே நாம் உம்மிடம் வராவிட்டால் நீர் நம்மிடம் வருகிறதில்லை, நாமாக வந்தாலும் திரைபோட்டு நம்மை விட்டு மறைந்து கொள்குறீரென்று.

அப்போது, இமாம் சொன்னார்கள், உங்களுடைய காவற்காரன் தாங்கள்வந்து நிற்பதைச் சொல்லிக் கதவு தட்டியவுடன் நம்மிடத்தில் ராஜாவுக்குத்தேவையானது நபியுல்லா வுடைய ஹதீது தவிர வேறே என்ன இருக்கிறது, அந்த ஹதீதைச் சொல்வதற்க்காக வுலுச்செய்வதுகொண்டும்உடை அணியுதல்கொண்டும்பராக்காக இருந்ததிற் சுணங்கிவிட்டதென்று.

பின்னர், ஹாறூனுர் றசீது சொன்னார், அபூ அப்துல்லாவே யென்னுடைய பாட்டனாரின் தமயன் மகனாரான நபியுல்லா சொன்ன சொல்லைச் சங்கையாக்கி வைக்குதல் மிகவும் வேண்டியதென்று சொல்லியதிற் சிலதை விழப்பம் செய்தார்கள், பின்னர், ஹாறூனுர் றஷீது, சொல்வார்கள், உங்கள்பேரில் இராமையாய் நடந்த அன்னியாயத்தைச் சொல்லுங்கள் எனக்கு அது தெரியாது, அஃதென்னுடைய வேலையுமில்லை, எனக்குப் பொருத்தமு மில்லை, இப்பதானே யும்முடைய சமுகத்தில் அந்தஅன்னீதஞ் செய்தவனைப் பகரம் செய்துபோடுகிறே னென்றார்கள்.

அப்போதுடனே, இமாம் றலியல்லாஹு அன்ஹு சொன்னார்கள், என்மேலில் ஒவ்வொரு அடி சாட்டையா லடித்துச் சாட்டையை யுயர்த்துந் தோறெல்லாம் உம்முடைய இனத்தாராகிய என்னை யடித்த பாத்துஷாவை ஆகிறத்தில் எனக்கும், அவருக்கும் யாதொரு துயர்ச்சை யில்லாமல் ஹலாலாக்கிப்போட்டேன், அஃதேனென்றால், றசூல்லாவுடைய வங்கிஷமென்னும், மரத்தில் நின்றும் அவர் ஒரு கொப்பாக இருப்பதாலென்றும். இன்னும், ஒரு றியாவத்தில், ஆகிறத்தில் றசூலுல்லாவுடைய வங்கிஷத்தாரை எனக்கு வழக்காளியாக்கிக் கொண்டு அவர்கள் முகத்தில் விழிப்பதற்க்கு வெட்கமா யிருக்குமென்றுஞ் சொன்னார்கள்.

ஹறுமலத்துபுனு யஹ்யா றஹிமஹுல்லா சொன்னார்கள், இமாம் ஷாபிஇய்யி றலியல்லாஹு அன்ஹு சொல்லக்கேட்டேன், மாலிக்கு றலியல்லாஹு அன்ஹுவை அடித்தவர் எனக்குத்தெரியும், அவருக்கு பக்காறு ஸ்ஸஹு டைரிய்யுவென்று சொல்லப்படும், அதின் சபபாகிறது, ஒருபோது, மாலிக்கு றலியல்லாஹு அன்ஹுடைய பிச்சளத்தாரையும் இலாபத்துடையபை அத்லைத் தொட்டுங் கேட்கப் பட்டதில் இரத்தத்தில் முங்கினவர் பிச்சளத்தை, முங்காதவர் பிச்சளம் போலாக்கேனென்று சொன்னார்கள்.

இந்தச்சொல் அந்த பக்காறுக்கு எத்தினவுடன் தோள் மூட்டுவிடும் வரையும் அடித்தாரென்று. இந்தச் சமாசாரம் ஹாறூனுர் றஷீதுக்கு எத்தியவுடன் அவர் மதீனத்திற் பாத்துஷாவேலை பார்த்தவரை மாற்றிப் போட்டாரென்று. பின்னாலே மாலிக்குறலியல்



லாஹு அன்ஹு அவர்கள்கைமூட்டு விட்டுப்போ யிருந்தபடியால் அந்தக்கைகொண்டு கைலியை, வேட்டியை யணையவேலாதவர்களா யிருந்தார்கள்.

ஷிபாஉ என்கிற கித்தாபிற் காலீஇயாலுறஹிமஹுல்லாசொல்லுகிறார்கள், ஜஃபறுபுனு சுலைமா னென்கிற இராஜா இமா மாலிக்கு றலியல்லாஹு அன்ஹுவை யடித்தபோது, அடியுடைய வருத்தத்தால் நினைவு மயங்கிக் கீழே விழுந்தார்கள், பின்னர், அவ்விடத்தில் மனுடர்கூடித் தூக்கி யெடுத்து மயக்கம் தெளிந்த போது, இமாமனுடர்களைப் பார்த்து நீங்கள் சாக்ஷியிருந்து கொள்ளுங்கள், என்னை யடித்தவரைகியாமத்துநாளில் எனக்கு யாதொருதுயர்ச்சி யில்லாமல் ஹலாலாக்கிப் போட்டேனென்று சொன்னார்கள பின்னர், கேட்கப்பட்டதிற் சொன்னார்கள், நபியுல்லாவுடைய குடும்பத்தில் ஒருவர் என்னுடைய சபபினால் நரகம் புகுதுகிறதைப் பயப்படுகிறேன் வெட்கிக்கிறேனென்று.

இபுனுல் ஜவ்சிய்யி றஹிமஹுல்லா சொன்னார்கள், இமாமாலிக்கு றலியல்லாஹு அன்ஹு ஒருபத்வாக் கொடுத்த சங்கதியில் சுல்தானுடைய கருத்துக்குவிரோதமாயிருந்தபடியால்மிகுதிதொந்தறைசெய்து அடித்தார், அடித்தநாள் கிஜுறத்து ஒருநூற்று நாற்பத்தேழாம் வருடத்திலென்று மகாயாத்துல் ஹக்கமாயி யென்கிற கித்தாபில் வருகிறது.

ஹாறூனுர் றஷீது ஹஜ்ஜுசெய்து மதீனத்துக்கு வந்தபோது, மாலிக்கு றலியல்லாஹு அன்கு இடம் ஒருஆளனுப்பி நீங்கள் கோர்வைசெய்த கித்தாபைக் கொண்டு வாருங்களென்று சொல்ல அவர்கள்சொன்னதாவது, என்கித்தாபாகிறது இல்மாகவிருக்கும். இல்மை யெவரும்போய்க் கண்டுகொள்ள வேணுமேயல்லாது, இல்முதான் போய் இன்னமொருவரைக் கண்டுகொள்ளா தென்று சொல்லிப் போட்டார்கள், உடனே, தூதன்வந்து அவ்விதஞ் சொன்னான், அப்போது, றஷீதுடைய மஜுலிசில், காலி அபூயூசுபு இருந்தார் அவர்கள் சொன்னது இராஜாவே, இநதமாலிக்கு தங்களுக்கு விரோதஞ் செய்தசங்கதியை இருக்கி ராச்சியத்துடையவாகள் அறிந்ததால்,தங்களை இலேசாக வெண்ணிப் போடுவார்

கள், ஆகையால் அவ்வித வெண்ணத்துக்கு இடம்வைக்காமல் நற்கருத்துவைத்துக் கொள்ளுமென்றார்கள்.

பின்னர், அவர் பலபல யோசிப்பிலுமிருந்த போது, மதீனத்திலிருந்த பெரிய மனுடர் சிலர்கூடி மாலிக்கு றலியல்லாஹு அன்ஹு இடம் போய்ச் சொன்னார்கள், மாலிக்கே, இந்த இராஜாவானவர் பொல்லாத வம்பராயிருக்கும், அவருடைய ஊச்சிதத்துக்கிடம் வைத்துக் கொள்ள வேண்டாம் வாருங்களென்று நல்வார்த்தை சொல்லி யழைத்ததற் கவர்கள், நல்லது, என்னையுதைத் தாழ்மையாக்குவே னல்லாது, என்னுடைய இல்மைத் தாழ்மை யாக்கேனென்று தங்களுடையயணைந்துகொண்டுகித்தாபை யெடுக்காமல் வந்தார்கள், இராஜா கிட்டவரவும் சலாம்சொல்லி யிருந்தார்கள்.

அப்போது, இராஜா கேட்டார், ஒகே, அபூஆமிறுடைய மகனே நானும்மைக் கூப்பிட்டனுப்பினதுக்கு ஏன வராதிருந்தீரென்று. இவ்விதங் கேட்டபோது, இமாம் றலியல்லாஹு அன்ஹு சொன்னார்கள், அமீறுல் மூமினீனே யுங்களுக்குச் சிறப்புண்டானது றசூல்சல்லல்லாஹு அலைஹிவசல்லமவர்களினாலேதானெனக்குஸாஃபீ என்கிறவர். ஹாரிதத்துபுனு யஸீது புனுதாபிதது அன்அபீகி, றசூலுல்லாகி சல்லல்லாஹு அலைஹிவசல்லமுடைய காத்திபா யிருந்தவர். வஹ்யுவந் திறங்கினவுடன் றசூலுல்லா சொன்னதை யுடனேக்குடனே யெழுதிப் பிடித்துக் கொள்ளுகிற வரைத் தொட்டும் பேசி வரப்பட்டிருக்கிறது, மூமினானவர்களில்நின்றும் பீஸபீலுக்குப் போறவர்களுக்குப் போகாதிருந்தவர்கள் சரியாகார்களென்று ஆயத்திறங்கினது.

அப்போது கண்ணில்லாத இபுனு உம்மி மக்தூம் வந்து அல்லாவுடைய றசூலே பீஸபீலில் வரப்பட்ட தவாபெல்லாமெனக்குக் கிடையாமற் போய்விடுகிறதே யென்று சலிக்கவும், பின்னாலேவஹ்யுவந்து நபியுல்லா யஸீதுபுனு தாபித்தைக் கூப்பிட்டுத் தங்கடத்தை யுடையவரைத் தவிர வென்றெழுதச் சொன்னார்கள், அமீறுல்மூமினீனே இந்த ஒருசொல்லுக் காக ஜிபுரீலும், மீக்காயீலும், அஞ்சுலெட்சம் வருஷத்தின்தொலைதூரம் போய்வந்திருக்கிறார்கள் அதுவும் தங்கட முள்ளவர்களுக் காகவேண்டி யல்லாது வேறில்லை, மேலும், இல்மைத்தேடிப் போகிறது பீஸபீலுக்குப்போற



தைக்காண வேற்றமென்றும் வருகிறது, என்னுடைய கித்தாபிலெத்தனையோ ஹதீதுகள் இல்முகளை யெல்லாஞ் சேகரித்திருக்கிறேன், ஆனதால், உங்களை அல்லாஹுத் தஆலா வுயர்த்தி யாக்கி யிருக்கிறான், அந்த வுயர்த்துதலை இல்மைத் தாழ்ச்சி யாக்கின சங்கதியாலே தாழ்த்தியாக்கிக் கொள்ள வேண்டாமென்றார்கள், உடனே ஹாறூனுர் றஷீது சொன்னார், நல்லது, நானும்முடைய வீடுதிக்கி வந்து கேட்டுக்கொள்கிறேனென்று சொல்லிக் குதிரையிலேற நாடினார்.

அப்போது, மாலிக்கு றலியல்லாஹு அன்ஹு சொல்வார்கள், இபுனு உமறைத் தொட்டும், நாபிஉ வென்கிறவர் எனக்கு விசகள மறிவித் திருக்கிறார்கள், நபிசல்லல்லாஹு அலைஹிவசல்லம் திருவுளமானார்கள் திடனாக மலக்குகளாகிறவர்கள், இல்மைத்தேடித் தாழ்மையாய்ப் போகிறவர்களுக்குத் தங்கள் சிறகுகளைத் தாழ்த்திக் கொடுப்பார்கள், இல்மைக் கொண்டு பொருந்தினதுக்காகவென்று. இந்த ஹதீதைச் சொல்லிக் காட்டி அமீறுல் மூமினீனே கால்நடையாக நடந்து, வாருங்களென்றார்கள், நடந்து வீட்டையடுத்தவுடன் கொஞ்ச மிவ்விட மிருங்கள் நான்முந்திப்போய் ஹதீதுக் காக ஆயத்த மாக்கிக் கொண்டுங்களைக் கூப்பிட்டுக் கொள்ளுகிறேனென்று வீட்டுக்குள்ளே புகுந்து தங்கள்வளமைபோல் உலுச்செய்து உடையணிந்து, மணம்பூசித், தொழுது பின்னர், இராஜாவை வீட்டினுள்ளே அழைத்திருத் தாட்டினார்கள்.

பின்னர், சொல்வார்கள், உங்கள் கூடயிருக்கிற காவலாள், விருது இராஜா மோடி சகலதையும் தூரமாக்கென்றார்கள், அஃதேனென்றால், எனக்கு இபுனு உமறு றலியல்லாஹு அன்ஹுவைத் தொட்டும் ஒரு ஹதீது பேசிவந் திருக்கிறார்கள், இல்முக்காக ஒருவர் தாழ்ச்சிசெய்தால் அல்லாஹுத் தஆலா அவர்களையுயர்த்தி யாக்குவாரென்று, ஆகையால், அவ்விதம் இராஜாவே நீரும் இருமென்றார்கள், உடனே இராஜாவை ஆளோடேயாளாக வைத்துத் தங்களுடைய மூவத்தாவென்கிற கித்தாபையோதி விளப்பம் செய்து கொண்டிருந்தார்கள், முடிவானவுடன், இந்தக் கித்தாபுக்குப் பேரை கேட்டு மிகவும் சந்தோஷ மாகினார்கள், பின்னர், சலாம்சொல்லிக்கொண்டு போய், ஒரு குதிரையும், ஒருகோவேறு கழுதையும், சில தட்டமும் அனுப்பினார்; அதில் சிலதை

கபூல்செய்துகொண்டு அதையும்,பலருக்கும்பங்குவைத்துப்போட்டார்கள்.

மகாமாத்தில் வருகிறது ஹாறூனார் றஷீது மதீனத்தைவிட்டும் பயணமானபோது சகல பெரியோர்களும் வந்துகண்டு; வைத்தாகவும், பதக்கட்டாகவும் நாகரீகமான சொல்லாகவும், புகழ்ச்சியான கவிதைகள், பாடல்கள், புதிது புதிதாகக் கோவையாக்கிப் பயணம் அனுப்பினார்கள், அப்போது, இமா மாலிக்கு றலியல்லாஹு அன்ஹுவந்து பயணம் அனுப்புகிற நேரத்தில் இராஜாவேயுமக்கு ஹதீதிலுள்ள பிரகாரம் பயணமனுப்புகிறது,பிறியமா, அல்லது, புதிதாக நாகரீகமான பேச்சுக்கொண்டு அனுப்புறது பிறியமாவென்று கேட்டார்கள், அதற்கு, இராஜர் ஹதீதின்படி பயணம் சொல்லி யனுப்புகிறதுதா னெனக்குப் பிறியமென்று சொன்னார்கள், அப்போது, அல்லா இடத்தில் உம்முடைய தீனையும், விசுவாசத்தையும், உம்முடைய அமல்களின் ஒடுக்கங்களையும் அமானதமாக்கினேனென் றனுப்பி விட்டார்கள்.

றவுஹுல்பாயிக்கு என்கிற கித்தாபில் வருகிறது, ஹாறூனார் றஷீது இமாமாலிக்கிடம் உமக்கு வீடுண்டாவென்று கேட்டார், அதற்கில்லையென்றார்கள், உடனே யவர், மூவாயிரந் தங்கக் காசு கொடுத்தார், இதைக்கொண்டு நீர் வீடுவாங்கிக் கொள்ளுமென்று அதை யவர்களொப்புக்கொண்டு செலவாக்காமல் வைத்திருந்தார்கள், இன்னும், வருகிறது, றஷீது பகுதாதுக்கு யாத்திரையை நாடியபொழுது, இமாமாலிக்கிடம் சொன்னார், நீங்களென்னுடன் புறப்பட்டு வருவீர்களாகில் மனுடரடங்கலையும் இந்த முவத்தாவென்கிற கித்தாபிற் சொல்லியபடி நடக்கச்சுமத்தாட்டிவிடுவேன், உதுமான் றலியல்லாஹு அன்ஹு மனுடர்களை குறுஆனின் பேரிற் சுமத்தாட்டியதுபோலென்றும், உம்முடைய மதுகளைக் கொண்டல்லால் மற்ற மதுகளைப்பற்றியும் நடக்காதிருக்கச்செய்வேனென்றும் சொன்னார், அதுகேட்டுடனே, மாலிக்கு றலியல்லாஹு அன்ஹு சொன்னார்கள், எல்லாரையும், முவத்தா என்கிற கித்தாபின்பேரிற் சுமத்தாட்டுவேனென்று சொல்வதில் எனக்கிட்டமில்லை, அஃதேதெனால்,



அஸ்ஹாபிமார்கள் பலபல தேசங்களிலும் போய் ஹதீதுகளை யறிவித் திருப்பதால், எல்லா தேசங்களிலும், இல்முண்டும் நபியுல்லா திருவுளமாயிருக்கிறார்கள், என்னுடைய வும்மத்தில் ஹுக்கும்களில் கிலாபு சொல்வதே றஹ்மத்தென்று சொல்லியிருப்பதாலுமென்று. ஆதலால், நானும் முடனே வருகிறதற்கு இடமில்லை, யேனானால் நபியுல்லா திருவுளமானார்கள், மதீனமாகிறது, அதில் வருபவர்களுடைய கெடுதியைப் போக்கி விடும், இரும்பின் கறையைத் துருத்தி நீக்குவதுபோலென்று. இவ்விதம் சொல்லியிருக்கிறார்கள், ஹாறூனே, நீர்தந்த தங்கக்காசு இதோ இருக்கிறது. நாடுவீராகில் எடுத்துக்கொள்ளும், நாம் நன்கொடை செய்தும் வரமாட்டேனென்று சொல்லிப் போட்டேனென்று மனதிலே தோற்றவேண்டாம், நான் நபியுல்லாவுடைய மதீனத்தைக் காணதுன்யா அடங்கலையும் தெரிந்து கொள்ள மாட்டேனென்றார்கள், மக்காமாத்துல் ஹுக்கமாவென்கிற கித்தாபிற் சொல்லப்பட்டிருக்கிறது, ஹாறூனார் றஷீது மக்கத்துக்குப்போய் ஹஜ்ஜு செய்த வருஷம், மக்கத்தில் ஸுபுயானுபுனு உயைனா றஹிமஹுல்லாவைக் கூப்பிட்டு ஆளனுப்பி யும்முடைய இல்மென்கிற கித்தாபையும் கொண்டுவாருமென்று இவ்விதம்,ஆளனுப்பியவுடன், அவர்கள் கித்தாபை யெடுத்துச் சுமந்து கொண்டு போய் விழப்பஞ் செய்தார்கள்.

பின்னர், ஹாறூனார் றஷீது, இமாமாலிக்கு றலியல்லாஹு அன்ஹுவும், ஸுபுயானுபுனு உயைனா றலியல்லாஹு அன்ஹுவும் நடந்ததை மனதில் வைத்துக்கொண்டே யிருந்து, பின்னர், தம்முடைய இராஜா கெடித்தலமான இறக்கு ராச்சியத்துக்குப் போய்ச்சேர்ந்தவுடன் சொன்னார், அல்லாஹுத் தஆலா இமாமாலிக்குக்கு றஹ்மத்துச் செய்வானாகவும், நாம், இமாமாலிக்குக்கு ஒத்து நடந்து அவரிடம் கேட்ட அறிவினாற் பிரயோசனம் பெற்றேமென்று புகழாய்த் துஆச்செய்து பின்னர்,அல்லாஹுத் தஆலா ஸுபுயானுக்கு றஹ்மத்துச் செய்வானென்று சொல்லி துஆமட்டும் செய்தார்கள்,

கஸ்ஸாலியிப்பி றஹிமஹுல்லா கவாஸ்ஸு என்கிற கித்தாபிற் சொல்லுகிறார்கள், ஹாறூனார் றஷீது, மாலிக்கு றலியல்லாஹு

அன்ஹுவை வருவித்து அவர் மஜ்லிசிற் புகுந்தவுடன் (பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம், றப்பிஅத்கில்னீ-முத்கல-சித்கின்-வஅக்ரிஜ்னீ-முக்றஜ-சித்கின்-வஜ்அல்லீ-மின்லதுன்க-சுல்தானன்-நசீறு) என்றோதினார்கள், அதன் பொருளாகிறது, என்னு நாயனே யென்னை யுண்மை புகுதப்பட்டவனைப் புகுத்திவைத்து உண்மை புறப்படப் பட்டவனைப் புறப்படுத்தி யுன் சமீபத்தில், எனக்கு உபகாரஞ் செய்யு மென்னைத் தக்க சுல்தானாக வாக்கிவிடென்பதாம் பின்னர், அவர்களை றஷீது கண்டவுடன் (மறுஹபா) வென்று சோபனஞ் சொன்னார்கள்.

அந்த மஜ்லிசில் காலீ-அபூயூசுபு றஹிமஹுல்லா இருக்கிறார்கள், அவர்களொரு பாகத்திலும், மறுபாகத்தில் அவர் குமாரன் அமீன், அல்லது, மவ்மூனும் இருக்கிறார்கள், மாலிக்கு றலியல்லாஹு அன்ஹு கேட்டார்கள், அமீறுல் மூமினீனே நானெவ்விட மிருப்பேனென்று. அச்ச மற்றவர்களாகத் தானே கேட்டார்கள் அப்போது, இராஜா தன் வலது பாகத்தில், அவர் மகனுக்கும் தனக்குமிடையி லிருத்தாட்டிச் சொன்னார் இவ்விடத்தில் என் குமாரனுக்கு, நேருமல்லாமல் ஆருமிருந்த தில்லையென்று. இமாம் றலியல்லாஹு அன்ஹு சொன்னார்கள், இராஜாவே நீர் மணமான பறக்கத்தான குல்மென்கிற மரத்தில் நின்றுமுள்ளவரானபடியால், உம்மில்நின்று பணமானதுதான் வெளியாகுமென்று.

மகாமாத்துல் ஹக்கமாவென்கிற கித்தாபில் வருகிறது ஹாறூனுர் றஷீது, இமா மாலிக்கையும், கலீபா அபூயூசுபையும், இல்மிற்கேள்வி கேட்கும்படியாயும், ஜவாபு சொல்லும்படியாயும், யாவையுமேவியபொழுது, மாலிக்கு றஹிமஹுல்லா காலீ அபூயூசுபு றஹிமஹுல்லா இடம், றசூலுல்லாவின்பிதுருவுடைய மரக்காலெத்தினை றத்தலு கொண்டதெனக் கேட்டார்; அப்போது, ஆறு றத்லென்றார்கள், இயாம், ஐந்து றத்லென்றார்கள், உடனே மதீனத்தார்களிடம் றசூலுல்லாவுடைய நாளையிலுள்ள மரக்காலிருந்தது; அவர்களெல்லா மொவ்வொருவரும் தன்னுடைய பாட்டன்மார் சொன்னதாக நாங்கள், றசூலுல்லா நாளில் பித்றவை இந்த மரக்காலாற்றான் அளந்து றசூலுல்லா இடங்



கொண்டுபோய்க் கொடுத்தோமென்று சொன்னதாய்ப் பேசிவந்தார்கள், அதை, ஹாறூனுடைய சமூகத்தில் நிறுத்துப் பார்க்கும்போது, இமாம் சொன்னபடி ஐந்து றத்தல்தான் இருந்தது, உடனே, காலீ, அபூயூசுபு தங்கள் சொல்லைவிட்டு மீண்டு இமா மாலிக்குடைய சொல்லளவிலே திரும்பிச் சொன்னார்கள், மாலிக்கே, இப்போது, நான் கண்ணாலே கண்டதுபோல் மற்றவர்கள் கண்டார்களாகில் உம்முடைய சொல்லளவில் மீண்டிடுவார்களென்று.

சஸ்ஸாலிய்யி றஹிமஹுல்லா, கவாஸ்ஸு என்கிற கித்தாபிற் சொல்லுகிறார்கள், காலீ அபூயூசுபு றஹிமஹுல்லாவும் இமா மாலிக்கு றலியல்லாஹு அன்ஹுவும், ஹாறூனுர் றஷீதுடைய மஜ்லிசில் இருக்கும்போது, காலீ அபூயூசுபு றஹிமஹுல்லா இமாம்மாலிக்கு றஹிமஹுல்லாவினிடம் கேட்டார்கள், ஹஜ்ஜுக்கு இஹ்றாம்கட்டிக் கொண்டிருக்கிறவன் தன்னுடையசட்டைக் கையினால் அதாவது, சட்டையணிந்த கையினால் மானுடைய சட்டிப்பல்லை யடித்துடைத்தானாகில் அவன் என்ன தெண்டங் கொடுக்கவேணுமென்று கேட்டபோது, இமாம் றலியல்லாஹு அன்ஹு ஒரு ஆடறுத்துக்கொடுக்கவேணுமென்றார்கள், காலீ அபூயூசுபு கேட்டார்கள், இஹ்றாம் கட்டினவன் சட்டையும் போடுவானோ, மானுக்குச் சட்டிப்பல்லு முண்டோவென்று.

அதற்கு, இமாமாலிக்கு றலியல்லாஹு அன்ஹு சொன்னார்கள், அமீறுல் மூமினீனுடைய மஜ்லிசில் நீர் பரியாசம் பண்ணமாட்டீரென்று நானெண்ணித்தான் ஜவாபுசொன்னேனென்றார்கள், மேலும், கேட்கவில்லையா. இஹ்றாம் கட்டினவனுக்குச் சட்டையே யல்லாது, தையலில்லாது உடுமானம்இல்லையென்றமுட்டுப்பாட்டுக்குச் சட்டையிட ஆகுமென்றும், மனுடர்கையில் ஆறுவது விரலையும், அதிகமான சிலவுறுப்பையும், அல்லாஹுத்தஆலா படைப்பதுபோல் மானுக்குச் சட்டிப் பல்லையும் படைக்கத் தத்துவமுள்ளவன் தானென்று அறியவில்லையோ, ஆனால் அவ்விதம் இரண்டும் உண்டாவது, இடம் பாடாயிருப்பதால். அதற்கு ஹுக்கும் சொன்னேன், ஆதலால் நீர் எண்ணின வெண்ணஞ் சரியல்லவென்றார்கள்.

அஸ்றக்கீ யென்கிறவர்கள் சொன்னார்கள், ஹாறூனுர் றஷீது இமா மாலிக்கிடம் கேட்டார். கஃபாவைமுன் இபுனுஸ் ஸு

யை று கட்டியவிதமாப்க் கட்டிப்போட லாமாவென்று. இவ்விதங்
கேட்டபோது, அமீறுல் மூமினீனே இந்த யைத்துல்லாவை இரா
ஜாக்களுக்கு வஜீபனமாக்கி விடாதையும், வருகிற வருகிற இரா
ஜாக்கள் ஒவ்வொருதரும் இதை யுடைக்கவும், கட்டவும்ம நாடுவா
ர்கள் அப்படிச் செய்கிறதால், அதின் சங்கையும், கனமு, மனுட
ருடைய கல்புகளை விட்டும் நாளுக்குநாட் குறைந்து கொண்டே
வருமென்றுபோதித்துக்காட்டினபோதுநிறுத்திப்போட்டார்கள்

ஷிபாவென்கிறகித்தாபிற்காலீஇயாஹுற்ஹிமஹுல்லா சொல்
லுருர்கள், ஹாறானுர் றஷீது, இமாமாலிக்கிடம் கேட்டார், நபி
சல்லல்லாகு அலைஹிவசல்லத்தை யொருவன் வைதால், அவனை
இருக்கு ராச்சியத்து புக்கஹாக்களெல்லாம் ஹத்துச்செய்யச்சொ
ல்லி யிருக்கிருர்கள், நீங்களென்ன சொல்லுகிறீர்களென்று கேட்
டபோதுமாலிக்குறஹிமஹுல்லாகோபமாகச்சொன்ஞர்கள், அமீ
றுல் மூமினீனே நபிசல்லல்லாகு அலைகிவ சல்லத்துக்குப் பிற்கா
லம், உம்மத்துமார்கள் நபிமாரை யேசுதலைவிட்டும் பாரரட்ட மா
ட்டார்கள், அவ்விதம் வைகிற வர்களுக்கு, ஹுக்கும், வேறேயிருக்
கிறது, றசூலுல்லா வுடைய, அஸ்ஹா பிகளை வைதவனுச்குத்
தான் இருக்கு ராச்சியத்து புக்க ஹாக்கள் சொன்னதுபோல்ஹத்
தடிக்க வேணுமென்ருர்கள்.

## ஒன்பதாவது பிரிவு.

இமா மாலிக்கு றலியல்லாகு அன்கு வபாத்தானதிலும், வபா
த்துக்குப் பின்னுல் அவர்களுக்காய்ப் பேசிவரப்படும் சிலசங்கதி
யிலும், பேசுகிற தாயிருக்கும்.

தஃதீபுல் கமால், மஆரிபு என்கிற இந்த இரண்டு கித்தாபி
லும். பேசிவருகிருர்கள், ஹிஜுறத்து, ஒருநூற்றி யெழுபத்தொ
ன்பதாம் வருடம், றபீஉல் அவ்வல் மாதம் பதிஞலாந் தேதி சுபு
ஹுடைய வக்தில், ஹாறானுர் றஷீதுடைய கிலாபத்து நாளில்
மதீனத்தில் வபாத்தாகினுர்கள், அவர்களுக்கு வயதுதொண்ணூற்
ருறு யிருக்கும்போதில், அபுல்காசிம்றஹிமஹுல்லாசொல்லுருர்,
நாங்கள் மாலிக்கு றலியல்லாகு அன்கு வபாத்தாகிற வியாதியில்
அவர்களிட மிருந்தோம், அப்போது, இபுனுத் தாருவறுதிய்யி



றஹிம்குல்லா வந்து இமாமாலிக்கைப் பார்த்து அபூ அப்துல்லா
வே இன்றிரவு மனமில் ஓர்மனுடன் வானத்திலிருந் திறங்குகிருர்,
அவர் பேரிற பசிகத வுடமான மூண்டா யிருக்கிறது, அவர்கையி
லொரு கடிதம் உண்டாயிருக்கிறது, அதை வானத்துக்கும், பூமிக்
கும், இடையில் விரித்துப் பரத்துகிருர், இவ்வித மூன்றுவிடுத்தம்
பரத்திச் சொல்லுகிருர், இதாகிறது மாலிக்கு றலியல்லாகு அன்
குவை நகரத்தைவிட்டும் உருமையாக்கப் பட்ட வுருமைச் சீட்டா
யிருக்கும், இந்த விதம் நான்பேசிக்கொண்டிருக்கும்போது, அவர்
களிடம் இராஜாவுடைய தூதன் வந்து சொல்லுவார், மதீனத்துப்
பள்ளிவாசல். முஅத்தினும் இதுபோலொரு மனம் கண்டாரெ
ன்று, இவைகளையெல்லாம் கேட்டவுடன் (வல்லாகுல் முஸ்தஆன்,
மாஷா அல்லாகு கான்) என்றுசொன்ஞர்கள், இவ்விதம், றவுலுல்
பாயிக்கு என்கிற கித்தாபில் விவரமாய் வருகிறது.

ஜிதுவத்துல் முகுத் தபிசு, என்குற கித்தாபில், குஜபிய்யிற
ஹிம குல்லாவைத் தொட்டும் பேசி வரப்படுகிறது, அவர் சொல்
லுகிருர் நாம் மாலிக்கு றலியல்லாகு அன்கு வபாத்தாகிற வியாதி
நாளிற் போயிருந்தேன், அவர்களை மிகுந்து அழும்படி கண்டு,
அபூ அப்துல்லாவே எதுவஸ் துங்களை யழும்படி வருத்தின தென்
று கேட்டேன், அப்போது சொன்ஞர்கள, நான் அழாதிருப்ப
தற்கு என் புத்தியால் கொடுத்த பத்வா அடங்கலுக்கும் ஒவ்
வொரு மஸ்அலாவுக்கு ஒவ்வொரு தரம் சாட்டையி னடிபெற்றுக்
கொள்ள வுவந்திருக்குகிறேன் என்றும், நான் என்னுடைய யோ
சனை கொண்டு பத்வாக் கொடுக்காமலிருக்க வேண்டினதே யென்
றுஞ் சொன்ஞர்கள்.

பக்றுபுனு குதைறு சொலலுகிருர்கள், இமாம் ஷாபிஇய்யி றலி
யல்லாகு அன்கு சொல்லுகிருர்கள், எனது மாமியார் சொன்ஞர்
கள், இன்றிரவு முழிப்பில் ஒரு சத்தம் கேட்டேன், இன்றையில்
பூமியிலுள்ள அறிவாள ரடங்கலிலும், மிகுதி யறிவாள ரானவர்
மௌத்தாகி விட்டாரென்று. நாங்கள் அதைக்கேட்டுப் பயந்திருந்
திருந்தோம், பின்னுலே வெளியானது, அந்த யிரவிற்றன் இமா
மாலிக்கு மவுத்தாகினுர் களென்று.

யூனு ஸுபுனு அப்தில்அஃலாசொல்லுகிறார், பிஷ்றுபுனுபக்ரின் றஹிமஹுல்லா சொல்லக் கேட்டேன், அவர் சொல்லுகிறார், மனாமில் இமாம் அவ்ஸஇய்யை மிகுந்த வுலமாக்களுடன் சொர்க்கத்திற்கண்டு மாலிக்கு றலியல்லாஹு அன்கு ஈங்கே யிருக்கிறார்களென்று உடனே யென்னைத் தலையையுயர்த்திப் பார்க்கச்சொன்னார் நான் பார்த்தேன், மேன் மாளிகையில் மாலிக்கு றலியல்லாஹு அன்குவைக் கண்டேன், அவர்களைப் பார்த்து, உங்களுக்கு அல்லாகுத்த ஆலா என்னசெய்தானென்று கேட்டேன், அதற்கவர்கள், எனக்குப்பிழைபொறுத்தானென்றார்கள், அஃதென்ன அமலினாலென்று கேட்டேன், அப்போது, சொன்னார்கள், உதுமான் றலியல்லாகு அன்குவைத் தொட்டும் நமக்கு வந்தெற்றினதேயந்த ஓர்கலிமாவை நான் ஜனஸாவைக் காணுந்தோறெல்லாம் வழமையாய்ச் சொல்லி வந்தனே அந்தக் கலிமாவுடைய சபபினாலென்றார்கள், அந்தக் கலிமா ஏதா யிருக்குமென்று கேட்டதற்கவர்கள் (ஸுப்ஹானல் ஹய்யில் கய்யூ மில்லதீ லாயமூத்து) என்றதா யிருக்குமென்றார்கள், அல்லாகுத்த ஆலா அந்த இமாமைத் தொட்டும்பொருந்தி யவர்களுடைய பறக்கத்தால் நம்மெல்லோர்களுக்கும்கிருபை றஹ்மத்துச் செய் தீடேற்றிக் கொள்வானாகவும் ஆமீன் ஆமீன் யாறப்பல் ஆலமீன்.

மாலிக்கிமாம் பிரபந்தம் முற்றிற்று.

——(*)——

பிசுமில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்.

இஃது.

# ஷாபிஇய்யி இமாம் பிரபந்தம்

கலிவிருத்தம்.

கோபியென்றெவருங் குறிக்கவொண்ணாத
குணத்துடன் பிறந்த நன்மறையோர்
பாவியுமவரின் பகரைக் கேட்டிடிலோ
பவமழிந்திறை யிடந்திரும்பி
ஆயாயிருப்பாரவ்வித வறிவைத்
துலக்கிடுங்கித்தாபு களிசைக்கும்
ஷாபியீயெனும் பேர்தரித்த இமாமின்
சரித்திரங்களைப் புகழ்ந்துரைப்பாம்.

மூன்றும்பாடமாகிறது

முத்தலி பிய்யிக் கிளையிற் சேர்க்கப்பட்ட இதிரீசு றஹீம குல்லா வுடைய குமாரரான இமாம் ஷாபிஇய்யி றலியல்லாகு அன் குடைய பிரபந்தத்திலும், வரலாற்றையும், பேசுகிறதா யிருக்கும், அதில், இருபத்தொருபிரிவுண்டும், அப்பிரிவுகளில், முதலாம் பிரிவு, அவர்கள்நாட்டுவளப்பத்திலும்2-ம்பிரிவு பிறந்ததிகதியிலும் பேசுகிறதாயிருக்கும். மூன்றாம்பிரிவு. அவர்களுடைய வுடையிலும் மோதிரத்தி னகுஷென்னும் வண்ணத்திலும் பேசுகிறதாயிருக்கும், நான்காம் பிரிவு, அவர்களுடைய, பெண்சாதி பிள்ளை குட்டிகளிற் பேசுகிறதாயிருக்கும், ஐந்தாம் பிரிவு, அவர்கள் குறுஆன் ஓதினதிலும், இல்மு படித்ததிலும் பேசுகிறதாயிருக்கும், ஆறும்பிரிவு, அவர்களுடைய வுஸ்தாதுகளிலும், சீஷர்களிலும் பேசுகிறதாயிருக்கும், ஏழாம்பிரிவு, அவர்கள், மதீனத்துக்குப்போய் இமாமாலிக்கிடம் முவத்தாயென்னும் கித்தாபு ஓதினதிற் பேசுகிறதாயிருக்கும், எட்டாம்பிரிவு, அவர்கள் எமன் ராச்சியத்துக்குப்போனதும், அவ்விடமிருந்து இறுக்கி ராச்சியத்துக்கு விலங்குபோடப்பட்டவர்களாய்க் கொண்டுபோனதும், ஹாறூனுர் றஷீதுக்கும், அவர்களுக்கும் இடையில் நடந்த சுஆல், ஜவாபிலும் பேசுகிறதாயிருக்கும், ஒன்பதாம்பிரிவு, அவர்களுக்கும், காலீ முஹம்மதுபு

னுல் ஹசனுக்கும் இடையில் நடந்த சுஆல் ஜவாபிற் பேசுகிற
தாயிருக்கும், பத்தாம்பிரிவு, அவர்கள், இராஜாமவுமு னுடைய
நாளில் இருக்கி ராச்சியத்துக்குப் போய் கல்க்குகள் அவர்கள்
இல்மினுற் பிரயோசனம் பெற்றதிலும், பின்பு, இருக்கி ராச்சியத்
தில் நின்றும் மிஸ்றளவில் யாத்திரையானதிலும், அவ்விடங் தரி
பட்டிருந்ததிலும் பேசுகிறதா யிருக்கும், பதினோராம் பிரிவு
அவர்கள் கோர்வைசெய்த கித்தாபுகளிற் பேசுகிறதாயிருக்கும்,
பனிரண்டாம் பிரிவு, மற்றும் உலமாக்கள், அவர்களைத் துதித்த
திற் பேசுகிறதாயிருக்கும், பதின்மூன்றும் பிரிவு. அவர்கள் மே
லான கீர்த்தியிலும், பிரசங்கத்திலும், பேசுகிறதா யிருக்கும், பதி
னைாம்பிரிவு, அவர்கள் மேலான இஃத்திக்காதிற் பேசுகிறதாயி
ருக்கும், பதினைந்தாம்பிரிவு, அவர்கள், இல்முடைய வரிசையிலும்
அதில் அவேட்சைபூட்டும் கருமத்தில், அவர்கள் ருளினதிற் பேசு
கிறதாயிருக்கும், பதினாரும்பிரிவு, அவர்கள் நுஜூமுடைய இல்
மிலும், வைத்தியத்துடைய இல்மிலும் அவர்கள் தேர்ந்தவர்களா
யிருந்ததிற் பேசுகிறதாயிருக்கும். பதினேழாம்பிரிவு, நலமான
சொற்களிலும், முதுமொழிகளிலும், அவர்களால் வெளியானதி
லும் பேசுகிறதாயிருக்கும்; பதினெட்டாம்பிரிவு, அவர்கள், முக
க்குறியாயும், திடகூறுயும், ஜவாபு கொடுத்ததிற் பேசுகிறதாயிருக்
கும், பத்தொன்பதாம் பிரிவு, அவர்கள் கொடையிலும், சாந்த
குணமயாளத்திலும் பேசுகிறதாயிருக்கும், இருபதாம்பிரிவு, அவ
ர்கள் வட்டிவருக்கமாய்ச் சில சித்திரச்சொற்களிற் அருளியதாயி
ருக்கும், இருபத்தொன்றும்பிரிவு, அவர்கள் வசிய்யத்திலும்,வபா
த்துவேளையில் நடந்ததுகளிலும். பேசுகிறதாயிருக்கும், ஆகப்
பிரிவு. (உக.)

முதலாம்பிரிவு, இமாம்ஷாபிஇய்யி றலியல்லாஹு அன்கு
நாட்டு வளப்பத்திலும், உதித்த திகதியிலும் பேசுகிறதாயிருக்கும்
தவாரீகு என்னும் திகதியால் குறிப்புக் கணக்குப் பேசி வரும்,
உலமாக்கள் ஒத்துமையாகச் சொல்லுகிறார்கள், இமாம்ஷாபி
இய்யி றலியல்லாஹு அன்கு, ஹிஜுறத்து ஒரு நூற்றி ஐம்ப
தாம் வருடத்திற் (குஸ்ஸா) வென்கிற ஊரிற்பிறந்தார்கள், அந்த
குஸ்ஸாவாகிறது மிசுறுக்கும், ஷாமுக்குமிடையிற் பலஸ்தீனென்
னும் தேசத்தலத்தைச்சார்ந்த அஸ்கலானென்கிற ஊருக்கு ஆறு



நாழிகைத்தூரத்தில் இருக்கிறது. அந்த பூமியானது பைத்துல்
முகத்திஸுக்கு இரண்டு நாளைத் தூரத்தி லிருக்கிறது, அதினு
டைய விஷயத்தில், அதைச் சூழவுள்ள தலத்தைப் பறக்கத்தாக்
கினேமென்று குறுஆனில், அல்லாஹுத் தஆலா வருணித்தானே
அந்தப் பூமிதான்.

இன்னும், நபிசல்லல்லாஹு அலைஹிவசல்லம் அஸ்ஹாபிக
ளைப் பார்த்து நானுங்களுக்கு இரண்டு கல்யாணியைக் கொண்டு
சோபனம் சொல்லுகிறேனென்று சொன்னார்களே யந்தப் பூமி
தான், அதாவது, குஸ்ஸாவும், அஸ்கலானுமா யிருக்கும், பின்
னர். நபியுல்லா சோபனித்ததுபோல், உமறுபுனு கத்தாபு றலி
யல்லாஹு அன்ஹுவுடைய கிலாபத்தில் மஆவியா றலியல்லாஹு
அன்ஹு போய் அந்த இரண்டு ஊரையும் பிடித்தார்கள், அத
ற்கு ஷாம் தேசத்துக் கல்யாணியென்பார்கள், எந்தக் காலமும்,
அவ்விதமே சொல்லப்பட்டு வருகிறது, ஆனபோதே, ஷாம் தேச
த்திற் சபாவென்கிற ஊரைப்பற்றி மணமான பட்டணமென்று
வன்னித்ததால் அந்த பூமியின் சீதளத்தால் அதில் நடக்கிறவன்
மேனியிற் பேனும் பிடியாது, மறுதலத்திற் பிடித்தபேனும் அவ்
வூரி லெய்தினாலுஞ் செத்துப்போகும்.

இன்னும், வெறுங்கூடைகளைத் தலையில்வைத்து நடப்பவன்
தன்னுதிரும் கனிகளால் அந்தக் கூடை நிரம்புகிற தாகவும் ஆகி
விட்டதுபோல் அந்த பூமியைச் சேர்ந்த இந்த பூமியில் அல்லா
ஹுத் தஆலா பறக்கத்தைச் செய்ததாக வன்னித்த படியால் எந்த
நாளும் பறக்கத் தானதாகவே கல்யாண மாப்பிள்ளைபோலிருக்கு
மென்கிறதுடன், இந்த இமாம் அந்தத் தலத்திலுதித்த சிறப்பும்
அதற்குப் போதும்போதும்,

பகுறுத்தீனுர் ருசிய்யி றஹிமஹுல்லாவும்,யாபிஇய்யி றஹி
மஹுல்லாவுஞ் சொல்லுகிறார்கள், இமாம் அஃலம் அபூஹனீபா
றஹிமஹுல்லா வபாத்தான அன்றையிலேதான், இமாம் ஷாபி
இய்யி றலியல்லாஹு அன்ஹு பிறந்தார்கள். இதனால், ஷாபி
இய்யாக்களுக்கும் ஹனபிய்யாக்களுக்குமிடையிற் சந்தோஷத்து
டன், ஒரு வினோதம் சொல்லப்படும் அதாவது, ஹனபிய்யாக்கள்

சொல்லுகிறது, எங்கள் இமாம் இருக்குமளவும், உங்கள் இமாமறைவாகவிருந்தார்களென்று ஷாபியிய்யாக்கள் சொல்லுகிறதானங்கள் இமாம் வெளியாகவும் உங்கள் இமாமறைந்துவிட்டார்களென்று ஆனால் இதில் இருவருடைய சங்கையும், பாராதாரத்தன்மையும் யோசித்துப் பார்க்க வெளியாகிறது. யாதெனில், அல்லாஹுத்தஆலா அவர்களைக் கெர்ப்பத்தி ஊர்ப்பத்தியாக்கியிருக்கும் காலத்திற்றானே அதபுடையவர்களாக இருந்ததற்கு இதுவே யெழுகமாகிறது,

இமாம் அஃலம் அபூஹனீபா றஹிமஹுல்லாவுடைய பாரதூரத்தை அவர்களுக்கு அறிவித்துக் கொடுத்திருந்தபடியால் அவர்கள் (ஆலமுல் ஊகூறிலும்) இவர்கள் (ஆலமுல் கைபிலும்) இருக்கும்போதே யவர்களுடன் அதைப் பேணினார்கள், அஃதேது போலானால், இவர்கள் (ஆலமுல் ஊகூறிலும்) அவர்கள் ஆலமுல் கைபிலும்) இருக்கும்போது, அதைப் பேணியதுபோல், அஃதாவது, இமாம் ஷாபிஇய்யி றலியல்லாஹு அன்ஹு பகுதாதுக்குப்போய் இமாம் அபூஹனீபா றஹிமஹுல்லாவுடைய தறுகாவில் இராத்தங்கிச் சியாறத்துச செய்தார்கள், அன்று சுபுஹிலே தொழுவித்தவர்கள் (பிஸ்மில்லை) இரைந்தோதவில்லை, குனூத்து ஓதவுமில்லை, தொழுதபின்னர், இமாம் ஷாபிஇய்யி றலியல்லாஹு அன்ஹு இடம் நீங்கள் (பிஸ்மில்லை) பறுலாக்கிச் சத்தமிட்டோதுவதை சுன்னத்தாக்கி குனூத்தை அபுஆது சுன்னத்தாக்கி அதை யோதாமல் விட்டால் சஜதா சகுவுசெய்யச் சொன்னீர்களே, இப்போது விட்டதென்னவென்று கேட்கப்பட்டதில், இமாம் அபூஹனீபா றஹிமஹுல்லாவுடைய சமுகத்திலிருந்து அவர்கள் சொல்லுக்கு மாற்றம் செய்யாமல், அதைப் பேணி நடந்ததற்காக வேண்டியென்றார்கள்.

தவாரீகுடைய வுலமாக்கள் சொல்லுகிறார்கள், இமாம் ஷாபிஇய்யி றலியல்லாஹு அன்ஹுவுக்கு வயது அன்பத்திநாலெத்திய போது, ஹிஜுறத்து இருநூற்றுநாலாம் வருஷம், றஜபுமாதம் கடைசிவெள்ளிக்கிழமை யிரவு வபாத்தாகி விடிந்தபின்னர் பகல் அசறுக்குப் பின்னாலே மிசுறில் குறுபத்தஸ்ஸகுறுவென்னு மூரிதுள்ள முகத்தம் என்கிற மலையருகில் அடக்கப்பட்டார்கள், அதில், ஒரு



பாரதூரமான குப்பாவு மெடுக்கப்பட்டு சதா காலமும் இரவும், பகலு மோயாமல் ஸியாறத்து நடந்து கொண்டே யிருக்கிறது, அன்றையில் இமாமவுத்தாகின கவனத்தால் மிஸ்றிலுள்ள மதுரசாக்களெல்லாம் கித்தாபு, குறுஆன் ஓதுகிறது நிறுத்தப்பட்டுப் போயிற்று, அன்றுமுதல் எந்தக்காலமும் எந்தவூர்களிலும் முஸ்லிமான பேர்கள் பள்ளிக் கூடங்களையும், மதுரசாக்களையும் வெள்ளிக்கிழமைதோறும், ஓதலைவிடுகிறது ஆதத்தாகி விட்டது.

ஷாபிஇய்யி றலியல்லாகு அன்குவுடைய தில்மீதாகிய முகம்மதுபுனு அப்துல் ஹக்கம் சொல்லுகிறார்கள், ஷாபிஇய்யி இமாம் சொல்லுகிறதாக, நான் குஸ்ஸாவிற் பிறந்து மதலையாயிருக்கும்போது, என தகப்பனார் வபாத்தாகி யெனக்கு இரண்டுவயது எத்தியபிறகு எந்தாயார் என்னை அஸ்கலானென்கிற வூரிற் கொண்டுபோய்ப், பின்னர், கொஞ்சநாட்சென்று எந்தாயார் என்னை மகனேயென்று கூப்பிட்டு உம்முடைய குடும்பத்தாருடன் மக்கமாநகரம் போய்ச் சேர்ந்து அறிவுபடிப்பது நல்லதென்று சொல்லி மக்கத்துக்குக் கொண்டுவந்து சேர்த்தார்கள், அவ்விடத்தில் நான் ஓதுகிறதை நாடியபோது என் தண்டித் தோழன்மார்கள் என்னைப் பார்த்து மெத்தவு மிஸ்கீனாயிருக்கிறீரே வயிற்றுப் பிழைப்புக்கான காரியம் படியுமென்றார்கள், நானதை யொப்பாமல் ஓதலைக் கொண்டு பராக்காகினேன், அல்லாகுத்த ஆலா எனக்குத் தந்ததெல்லாந் தந்தானென்று.

தாரீகுபுனு குல்லக்கானென்கிற கித்தாபிற்சொல்லுகிறார்கள், ஷாபிய்யிஇமாம் குஸ்ஸாவென்கிற வூரிற் பிறந்த சபபாகிறது, அவர்கள் முன்னோர்களான குறைஷிகளாகிய பாட்டன்மார்கள் அந்தக்காலங்களில் மக்கநாட்டிலிருந்து வர்த்தகத் தொழிலுக்காக குஸ்ஸாவெங்கிற வூருக்கே வரத்துப் போக்காகப் புழக்கப் படுத்திக் கொண்டிருந்ததில், அவ்விடத்திற்றானே ஷாபிஇய்யி றஹிமகுல்லாவுடைய பாட்டனாருக்கு ஹாஷிமீக் கிளையிலுள்ள ஒருபெண்பிள்ளையை முடிக்கப் பட்டது, அதில் வந்தவர்களென்றார்கள், வகைபு றஹிமகுல்லா பேசிவந்த ரிவாயத்தில் இமாம் ஷாபிஇய்யி றஹிமகுல்லா யமனிற் பிறந்தார்களென்று வருகிறது, சிறுபிள்ளையில் யமனிலிருந்ததைச் சொன்னது போலிருக்கிறது. (அல்லாகு அஃலம்.

## இரண்டாம் பிரிவாகிறது.

இமாம் ஷாபிஇய்யி றலியல்லாகு அன்குடைய அவதாரத்
திற் பேசுகிறதா யிருக்கும்.

அவர்களுக்குத்தாய் தகப்பன்மார் இட்டபெயராகிறது, முகம்
மது என்றது, லோகத்தாரிட்டபெயராகிறது, அபூஅப்தில்லா வெ
ன்கிறது, உலமாக்களிட்ட பெயராகிறது, ஆலிமு குறைஷின் என்
கிறது, அவர்களாகிறது, இதிரீசுடைய மகன், அவர் அப்பாசுடைய
மகன், அவர் உதுமானுடைய மகன், அவர் ஷாபியீயுடைய மகன்,
அவர் சாயிபுவுடைய மகன், அவர் உபைதுடைய மகன், அவர்
அப்து யசீதுடையமகன், அவர் ஹாஷிமுடையமகன், அவர் அப்
துல் முத்தலிபுடைய மகன், அவர் அப்து மனாபுடைய மகன்,
இதில், உபைதுடையமகன் சாயிபு என்கிறவர்தான் பதுறுப்
படையில் இஸ்லாமாகினார்.

அவருடைய மகன் ஷாபிஉ என்பவர் அளவிலேதான் இமாம
வர்களைச் சேர்த்து ஷாபிஇய்யி யென்றுபட்டம் சொல்லப்பட்ட
து. சாயிபு என்பவர் தான் ஹாஷிமீக் கிளையாருடைய வெற்றி மா
ராயக் கொடியென்னும் டக்கயத்தை யுடையவராக இருந்தார், அ
வர் நபியுல்லாவுக்குப் படைகோலத்திலும், சூறத்திலும், ஒப்பாக்
கப் பட்டவராக இருந்தார், அந்தச் சாயிபு என்பவரை பதுறுப்
படையில் சிறைவாரப்பட்டுப் பின்னர், தனக்காய்ச் சிலமுதல்
முஸ்லிமானவர்களுக்குப் பித்யாலாகக் கொடுத்துத் தன்னை மீட்
டிப் பின்னர், இஸ்லாமானார், அவரிடம் முதல்கொடுக்க முன்பாக
நீர் என் இஸ்லாத்தில்வராதிருந்தீரென்று கேட்கப்பட்டதில் அவ
ர் சொன்னார், முஸ்லிமானவர் என்னில் நின்றும் அபேட்சைவை
த்திருந்த முதலைவிட்டும், அவர்களைப் பேறுகெடுக்குதலை நான் பிரி
யங் கொள்ளவில்லை யென்றார்கள், அவர் இஸ்லாமானபோது, அவ
ருடைய மகனார் ஷாபிஉம் இஸ்லாமாகினார், இன்னும், பேசிவரப்
பட்டிருக்கிறது, பதுறுப்படையிற் சாயிபையும், அப்பாசு றலிய
ல்லாகு அன்குவையும், நபியுல்லா இடம் கொண்டுவரப்பட்ட
போது, நபியுல்லா சாயிபைப்பார்த்துச் சொன்னார்கள், இவராகிற
து. என்னுடைய தம்பியா யிருக்கும், நாலவருக்குந் தமையனா
யிருக்குமென்று.



பகுறுத்தீனார் றசீறஹிமகுல்லா மனாக்கிபுஷ்ஷாபிஇய்யி யென்
கிற கித்தாபிற் சொல்லுகிறார்கள், ஹனபிய்யாக்களில் நின்றும்
ஒரு பிக்குக்கை யறிந்த ஆலிம ஜூறுஜானிய்யி றஹிமஹுல்லா
இந்த வங்கிஷத்திலே குற்றப்பாடு பேசி மாலிக்கு றஹிமஹுல்
லாவுடைய அசுஹாபிகள் ஷாபிஇய்யி இமாமுடைய கோத்திரம்
குறைஷியல்லவென்றும், ஷாபிஇய்யி றலியல்லஹு அன்குடைய
பாட்டனார் ஷாபிஉ என்கிறவர் அபீலகபுடைய மவுலாவாக இருந்
தாரென்றும், உமறுப்னுல் கத்தாபு றலியல்லாஹு அன்குடைய
நாளில்வந்து அவர் தன்னை குறைஷியுடைய மவுலாக்களில் நின்
றும் ஆக்குவதற்குத் தேடியதில் அவர்கள் சம்மதிக்காமற் பின்
னர், உதுமான் றலியல்லாகு அன்குடைய நாளில் அவர்களிடம்
தேடியதில் அவர்கள் அவரை அவ்விதம், மவுலா வாக்கினார்களெ
ன்றும் இந்தச் சங்கதியால் ஷாபிஇய்யி றலியல்லாஹு அன்கு
குறைஷியில் நின்றுமுள்ளவர்களென்று சொல்லக்கூடாதென்
றும், மாலிக்கு இமாமுடைய அசுஹாபி இளைத்த சொல்லாகச்
சொன்னதாக எழுகம் கொடுத்துத்தாம் குற்றப்பாடு பேசியிருப்
பதெவ்வளவும் உபயோகமற்ற சொல்லென்றும், அது, தம்மு
டைய பொறுமையாற் சொல்லதென்றும், இமாம் அபூஹனீபா
றலியல்லாஹு அன்குடைய வங்கிஷத்தில் இவ்விதம் ஒரு குற்றப்
பாட்டுக்கு இடமிருப்பதைப்பற்றி ஷாபிஇய்யாக்கள் ஒருகுற்றப்
பாட்டைச் சொல்லப் போதும், அதற்கு, அடையாக, இதைச்
சொல்லட்டுமென்று பொய்க்கட்டாய் விளைத்த தல்லாமல் வே
றில்லையென்றும், அனேக அத்தாட்சியுடன் அதைத் தட்டி, றத்
தாக்கினார்கள்.

மேலும், சொல்லுகிறார்கள், அது, எவ்வளவானாலும், பிலக்
கேடான தலையாவது, அனுசரித்த சொல்லா யிருக்குமானால்
இவரைப் பார்க்கிலும், இல்மில் மிகுந்த காலீ அபூ யூசபு றஹிம
ஹுல்லாவும், காலீ முகம்மது புனுல் ஹஸனிஷ் ஷைபானிய்யும்,
இமாம் ஷாபிஇய்யி றலியல்லாஹு அன்குடன் மிகுந்த பொல்
லாங்கா யிருந்தும், அஹ்றக்காமுடைய இருத்திலாபாய் குற்றப்பா
டாய்ப் பேசினதல்லாற் குறைஷிய்யி யென்பதிற் கிலாபு சொல்ல

வில்லை, மேலும், அமீறுல் மூமினீன் ஹாறூனிடம் ஷாபிஇய்யி றலியல்லாகு அன்கு தன்னைக்குறைஷி யென்று பாராட்டி யவருடன் உறவு கொண்டாடும் நேரம் குறித்த யிருவரும் ஹாஷீறுகவே யிருக்கிறுர்கள், அவர்கள் யாதொரு குற்றப்பாடும் வங்கிஷத்திற் பேசவில்லை.

இன்னும், இந்தப் பொய்க் கட்டை மாலிக்கு இமாமுடைய அசஹாபி யளவிற் சேர்க்கிறுர், அவர்களில் ஒருவராகுதல் இந்த வங்கிஷத்திற் குற்றப்பாடு பேசினதாக ஒருகித்தாபிலும் வரவில்லை; பாலிக் கிய்யாக்களி லுள்ள சொந்த மானவர்கள் முதல், அடைய் வளைத்தலானவர்கள் தாழ்ந்தவர்கள் வரையிலும் ஷாபிஇய்யைக் குறைஷியென்று ஒப்பா திருக்கக் காணவில்லை, க்தீபு என்குகிறவர் தாரீகு பகுதாது என்கிற கித்தாபில் பேசி வருகிறுர், சாயிபுடைய குமாரர் ஷாபிஉ என்று சொல்லப்பட்டவர், றசூல்சல்லல்லாஹு அலைஹிவசல்லத்தை இசுலாம் கொண்டு சந்திக்கும் போது, தத்தழ்வைத்து நடந்தோடிக் திரியும் நசன் அப்போதே சேர்த்துக் கொண்டார்களென்று.

முகம்மதுபுனு அப்துல் ஹிக்கமுல் மாலிகிய்யி றஹிமஹுல்லா வாகிறவர்கள், ஷாபி இய்யி றஹிமஹுல்லா வுடைய கீர்த்திகளில் ஒரு கித்தாபு கோர்வைசெய்து, அதில், அவர்கள் வங்கிஷத்தை மேலாம்பரமாகவும், தூய்மையானதாகவும், பேசி வந்திருக்கிறுர்கள், இன்னும், அநேக * முசன்னிபீன்களும், முகம்மதுபுனு இஸ்மாஈலுல் புகாரிய்யி றலியல்லாஹு அன்கும், இவர்கள் இருவருடைய சஹீஹு வென்கிற இரண்டு கித்தாபிலும், இமாம் ஷாபிஇய்யியுடைய வங்கிஷத்தை இவ்விதம் பேசிவந் திருக்கிறுர்கள், இவ்விதம், * தவாத்துறுன செய்திகளெல்லாம் வந்திருப்பதை அறிந்தும், ஹனபி இமாம் றலியல்லாஹு அன்குடைய சொல்லிலே தவாத்துறுன சமாசாரமிருக்கத், தவாத்துறல்லாத சமாசா

* முசன்னிபீன் - கித்தாபுகள் கோர்வைசெய்வோர்கள்,

* தவாத்துறு - மடங்கி மடங்கி வரும் சமாசாரம்.



ரத்தை யெடுத்து ஹூக்கும் செய்வது தட்டுப்பட்டதென்றும், அறிந்தும், அவர்தாமும் ஹனபி இமாமைத் தயர்ந்து அவர்தாமுங் கித்தாபுகோர்வை செய்கிறவராயிருக்க, அவர்தம்முடைய இமாம் அபூ ஹனீபா றலியல்லாஹு அன்குசொல்லப்பட்ட ஹூக்குமென்னும், அடிமுட்டை மறந்து இந்த விதம், இந்தச்சிறப்பான முத்தலிபிய்பிஷ்ஷாபிஇய்பி, இன்னும் ஹாஷிமிய்யான இமாமுடைய கோத்திரத்தில் ஒரு குற்றப்பாட்டையுண்டுபண்ணிப் பேசின்து மிகவும் ஆச்சரியமாயிருக்கிறது. ஆகிலும், அவர் ஒரு முஸன்னிபா யிருப்பதால், அவர் இந்தச் சொல்லைவிட்டும் பின்னாலே மீண்டிருப்பா ரென்றே அவரைக் கொண்டு எண்ணத்தை யழகாக்குவதே யழகு, ஸமகுஷரீ றஹிமஹுல்லா முந்தின எண்ணத்தை விட்டும் மீண்டு விட்டதுபோலே பைகக்கிய்யு றஹிமஹுல்லா சொல்லுகிறுர்கள், இமாம், ஷாபி இப்பி றலியல்லாஹு அன்குவாகிறவர்கள். தகப்பனுடைய புறத்தால் முத்தலிபிய்யாகவும், பாட்டன்மாருடைய புறத்தால் ஹாஷிமிய்யாகவும், தாயுடைய புறத்தால் சங்கை கூர்ந்த அஸ்திய்யாகவும், அதாவது, முத்தலிபுக் கிளையிற் சேர்க்கப் பட்டவர்களாயும் ஹாஷிம்கிளையிற்சேர்க்கப்பட்டவர்களாயும் அஸ்துக்கிளையிற் சேர்க்கப்பட்டவர்களாயும் இருந்தார்கள்.

நவுபலீ றஹிமஹுல்லா திருவுளமானார்கள், நபியுல்லாவை கனவிற்கண்டேன் அப்போது இமாம் ஹிசனீயவர்கள் நபியுல்லாவுடைய பாகத்தில், இருக்கிறுர், இருக்கச்சே, நபியுல்லா திருவுளமானார்கள், ஷாபிஇய்யாவிற் சேர்க்கப் பட்டவர் சொன்னுரென்றும், முத்தலிபிய்யாவிற் சேர்க்கப்பட்டவர் சொன்னுரென்றும், அப்போது, இமாம் ஹிசனீ நபியுல்லாவை நோக்கி அந்த ஷாபிஇய்யாகிறவர், ஹதீதிற் சிலதைவிட்டுவிட்டாரென்று சொல்ல, நபியுல்லா அவருடைய சொல்லளவிலே திரும்பிப் பாராமல் முத்தலிபுக் கிளையிற் சேர்க்கப்பட்ட ஷாபிஇய்யி சொன்னுரென்று சொன்னுர்கள், பின்னர், நான் விழித்துவிட்டேனென்றுர்

பின்னர், அந்த நவுபலீ றஹிமஹுல்லா சொல்லுகிறுர், இமாம் ஷாபிஇய்யை முத்தலியுக் கிளையிலுள்ளவர்களென்று நான் அறிந்தது நபிசல்லல்லாஹு அலைஹிவசல்லமவர்கள் கனவில்

ஷாபிஇய்யனவிற் சேர்க்கப்பட்டவர் சொன்னார் முத்தலிபியனவிற்சேர்க்கப்பட்டவர் சென்னாரென்று சொன்ன சொற்கொண்டு தான், என்றார்கள், அவர்கள் ஹாஷிமிய்யா இருப்பதாகிறது, பைகவிய்யும், கதீபும் சொல்லுகிறார்கள், அப்து மனாபுடைய மகனார் ஹாஷிமளவில் ஷாபிஇய்யைச் சேர்ப்பது மூன்றுவிதமாயிருக்குமென்றார்கள், அதாவது, சாயிபுடைய தாயாகிறது, ஷிபாவென்கிறவர்கள் அப்துமனாபுடைய மகன் அறுக்கம் அவர்மகள் ஷிபாவாக இருக்கும், ஷிபாவுடைய தாயாகிறவர் அப்து மனாபுடைய மகன், ஹாஷிம் அவர்மகன், அஸது. அவர் மகள் கலீதாவாக இருக்கும், அப்து யஸீதுடைய தாயாகிறவர் அப்து மனாபுடைய புத்திரரான ஹாஷிமுடைய குமாரத்தி ஷிபாவாக இருக்கும், முத்தலிபியாகிறவர் தம்முடையம்கன் ஹாஷிமென்பவருக்கு அப்துமனாபுடைய மகன் ஹாஷிம் அவருடைய மகள் ஷிபாவைச் கல்யாணம்செய்துகொடுத்து அதில் அப்து யஸீது பிறந்தார், ஆனபோதே.

ஷாபிஇய்யி ஆகிறவர் நபியுல்லாவுக்குப்பெரிய தகப்பனார்மகனாகவும், மாமி மகனாகவுமாச்சுது, ஷிபாவென்கிறவர்கள் அப்துல்மனாபுடைய மகனார் ஹாஷிமுக்கு மகளாகவும், முத்தலிபுக்கு உடற்பிறந்தாளாகவும், நபியுல்லாவுக்கு மாமியாகவு மாச்சுது, இந்த முகத்தினால் இமாம் ஷாபிஇய்யி றலியல்லாஹு அன்கு ஹாஷிமிய்யாக இருந்தார்கள், முத்தலிபுடைய மூதுகள் தண்டில் நின்றும் வெளிக்கிட்டவர்களாயிருக்கிலும்சரி (வேறொருவிதம்) அப்து மனாபுக்கு நாலு ஆண்மக்களுண்டும் ஹாஷிம், முத்தலிபு, அப்துஷம்ஷு, நவ்பலு, ஹாஷிமாகிறவர் றசூலுடைய பாட்டனார், முத்தலியாகிறவர் இமாம் ஷாபிஇய்யி யுடைய பாட்டனார், அப்து ஷம்ஷாகிறவர் உதுமானுபுனு அப்பான் றலியல்லாஹு அன் குடையபாட்டனார், நவ்பலாகிறவர், ஜபீறுபுனு மதுஅம் றலியல்லாஹு அன்குடைய பாட்டனார். அந்த ஜாகிலிய்யா வுடையகாலத்திலேயே, ஹாஷிமும், முத்தலிபும், ஒருவர்க்கொருவர் உதவியான வர்களாயும், அப்து ஷம்ஷும், நவ்பலும் ஒருவருக்கொருவர் உதவியானவர்களாகவும், இவர்களிருவரும் அவர்களிருவரை விரோதித் தவர்களாகவுமே யிருந்தார்கள்.



இதனால் விளங்கப்படுகிறது, தகப்பமாருடைய சிநேகிதமாகிறது, மக்களை முடுகுதலாக்கி வைக்குமென்று, ஆனபோதே, நபி சல்லல்லாஹு அலைஹிவசல்லமுடைய தீனென்னுமார்க்கத்துக்கும் ஹதீதுக்கும், இமாம்ஷாபிஇய்யி றலியல்லாஹு அன்ஹு வுதவியாகவே வந்தார்கள், பகுதாதிராச்சியத்தில் இமாம் ஷாபிஇய்யி றலியல்லாஹு அன்ஹுவுக்கு (நாசிறுல்ஹதீது) ஹதீதுக் குதவியானவர்களென்கிறபேர் சொல்லித்தான் கூப்பிடப் படுகிறது, ஜபீறுபுனு மதுஅம் றலியல்லாஹு அன்ஹு பேசி வருகிறார்கள், கைபறுப் படையிலுள்ள கொள்ளை முதலை றசூல் சல்லல்லாஹு அலைஹிவசல்லம் பங்கிட்டதில் (தவில்குறுபா) என்னும் நபிக்கி அன்னசுத்தத்தாருக்கு விதியாக்கப் பட்டபங்கைப் பிரித்து ஹாஷிம் பிச்சளத்தாருக்கும், முத்தலிபுப் பிச்சளத்தாருக்கும் பங்கிட்ட நேரத்தில்.

ஜபீறுபுனு மதுஅம் றலியல்லாஹு அன்ஹு சொல்லுகிறார்கள், நானும், உதுமானுபுனு அப்பான் றலியல்லாஹு அன்ஹுவும் போய் றசூலுல்லாவே ஹாஷிம் பிச்சளத்தார்தான் உங்களுடற்பிறந்தான் மார்களென்று பங்கு கொடுத்தீர்கள், முத்தலிபு பிச்சளத்தாருக்கும் பங்கு கொடுத்தீர்களே, யவர்களும் நாங்களும் உங்களுக்கு ஒரு பதவியிலுள்ளவர்கள்தானே யெங்களுக்கும் பங்கு தாருங்களென்று கேட்டதற்கு, நபிசல்லல்லாஹு அலைஹிவசல்லம் திருவுளமானார்கள், நாங்களும், பனுல் முத்தலிபும் ஒன்றுதானென்று சொல்லி யிரண்டு கையயும் கோர்த்து ஒன்றாக்கி இப்படிப் போலென்றும், அவர்கள் எங்களை ஜாகிலிய்யாவுடைய காலத்திலும், இப்போது, இஸ்லாமுடைய காலத்திலும் பிரியவில்லை, உங்களிருவருடைய முன்னோர்கள் எங்களை யெந்த நாளும் விரோதித்துப் பொல்லாங்காகவே யிருந்த சங்கதியால் உங்களுக்குப் பங்கு தரமாட்டேனென்று சொல்லிப் போட்டார்கள், ஆனபோதே, நபிநாயகம் பனுல்முத்தலிபை அன்னசுத்தத்தார் பங்கிற் சேர்த்துச் சக்காத்துமுதல், பிதுறு முதல், மனுடருடைய வூற்றையானதால், அவர்களுக்கு ஹறாமென்றாக்கினார்கள்.

இவ்விதமாய் அப்து ஷம்ஷுடைய மக்களையும், நவ்பலுடைய மக்களையும் ஆக்கிக்கொள்ளவில்லை, ஆனபோதே, குறித்த சிறப்

பில் நம்முடைய இமாம் ஷாபிஇய்யி றலியல்லாஹு அன்ஹுவும்
நுழைந்திட்டார்கள்.

இன்னும், சலவாத்தில் (வ அலா ஆலி முஹம்மதின்) என்று
வருவதிலுள்ள (ஆல்) என்பதற்கு அர்த்தம் கிளைஞர் என்றது,
தப்சீறுடைய உலமாக்கள் ஆல் என்பதின் பொருளை, அதாவது,
கிளைஞர் என்பதை ஹாஷிம் முத்தலிபுக்கிளைஞர் பேரிலே சுமத்
தாட்டியிருக்கிறார்கள், சில வுலமாக்கள் தீனுல் இஸ்லாமுடைய
வர் அனைவர்பேரிலும் சுமத்தாட்டினார்கள் (பாயிதா) ஷாபிஇய்யி
றலியல்லாஹு அன்ஹுவுடைய தாயாராகிறது, பிரஸ்தாபமான
சொற்படி (அஸ்துக்)கிளையில் நின்றுமாயிருக்கும், அந்த அஸ்துக்
கிளையில் மிகுந்து வரிசைப்பாடும் சங்கையுமுண்டுமென்று மிகு
ந்த ஹதீதுகள் வந்திருக்கிறது, அதில் நின்றுமுள்ளது, பைகக்
கிய்யி றலியல்லாஹு அன்ஹு, அனசுபுனு மாலிக்கு றலியல்லா
ஹு அன்ஹுவுடைய ஹதீதில் நின்றும் பேசிவந்தது, அதாவது
நபிசல்லல்லாஹு அலைஹிவசல்லம் திருவுளமானார்கள், அஸ்துக்
கிளையாகிறது, பூமியில் அல்லாவுடைய புலியாயிருக்கும், மனுட்டர்
கள் அவர்களை தகாழ்த்தியாக்கநாடுவார்கள், அல்லாஹுத்தஆலா
அவர்களை யுயர்த்தியாக்க நாடுவானென்று.

இன்னும், ஆமிறுபுனு அபீஆமிறு பேசிவந்திருக்கிறார்கள்.
நபியுல்லா திருவுளமானார்கள், அஸ்துக்கிளையாரும், அஷ்அரிக்
கிளையாரும் நல்லவர்கள், அவர்களை அளவில் மட்டிட்டு நிறுக்க
முடியாது. நான் அவர்களில் நின்றும் அவர்கள் என்னில் நின்று
முள்ளவர்களாயிருக்குமென்றும் இன்னும் இரண்டாவது சொல்
லாகிறது இமாம் ஷாபிஇய்யி றலியல்லாஹு அன்ஹுவுடைய
தாயாகிறது அலிய்யு றலியல்லாஹு அன்ஹுவுடைய குமாரர்
ஹுசைன், அவர்கள் குமாரர் ஹசன் அவர்கள் குமாரர் அப்
துல்லா, அவர்கள் குமாரத்திதான் பாத்திமத்து என்று சொல்லப்
படுகிறது, இந்த ரிவாயத்தை ஹாபிலு, அபூஅப்துல்லா பேசிவந்து,
அவர்கள்தான் இமாமை யெமனுக்குச் சுமந்துகொண்டுபோனவர்
களென்றும் சொல்லி இந்த ஹிக்காயத்தைப்பேசி வந்தவர்களாற்
புதுமையானேனென்றும், ஏனென்றால், ஹுசைனருக்கு ஆறு



ஆண்பிள்ளை ஒன்றாவது, அலிய்யு அக்பர், அவர் தகப்பனருடன்
ஷஹீதானார்.

(இரண்டாவது) அலிய்யு ஸெய்னுல் ஆபிதீன், மூன்றாவது.
அலிய்யு அசுகர். (நாலாவது முஹம்மது அஞ்சாவது (அப்துல்லா)
அவர்களும் தகப்பனருடன் ஷஹீதானார்கள், ஜஃபறு ஒன்று, பெண்
பிள்ளை மூன்று. ஸைனபு சக்கீனத்து, பாத்திமத்து இவர்களில்
இமாம் ஹுசைனுக்கு, ஹசனென்று ஒருபிள்ளையைக்காண வில்லை
யேயென்று (முசன்னிபு) புதுமையானதைக்கீழக்கரையில் மறை
ந்திரானென்ற, நம்முடையஷைகுனா அல்லாமத்துல் ஹிந்திய்யி சத
கத்துல்லாஹில் வலிய்யவர்கள் சொல்லுகிறார்கள் புதுமையெல்லாம்
இந்தமுசன்னிபிலே தானல்லாது, வேறில்லை ஏனென்றால், அவர்கள்
இந்தரிவாயத்தைப் பேசி வந்தவர்களிடம் கேட்கவில்லை, யெங்கி
லும், எழுதுகிறவர்கள் ஹசனை, ஹுசைனென்று பிழையாகஎழுதிப்
போடவும் போதும். எங்கிலும் இந்த ரிவாயத் தாகிறது ஹசன்
றலியல்லாகு அன்குவுக்கு ஹசனுல் முதன்னா வென்றும் முஹம்
மதென்றும் இரண்டு குமாரருண்டும்.

ஷாபிஇய்யி றஹிமகுல்லாவுடைய தாயாராகிறது, பாத்தி
மத்து அவர்கள் தகப்பனார் அப்துல்லா, அவர்கள் தகப்பனார் ஹச
னுல் முதன்னா. அவர்கள் ஹசனுடைய மகன், அவர்கள் அலிய்யு
றலியல்லாகு அன்குவுடைய மகனென்று சொல்கிறார்கள், நான்
அபூநசுறு என்கிறவர் சொல்லக் கேட்டேன், யூனுசுபுனு அப்தில்
அஃலா சொல்லுகிறவர்களாயிருந்தார்கள்; மனுட்டரில் தாயும், தக
ப்பனும், ஹாஷிமிய்யிக் கிளையிற் சேர்க்கப்பட்டவர்களா யிருப்
பது, இமாம் அலிய்யு றலியல்லாகு அன்குவையும், ஷாபிஇய்யி றலி
யல்லாகு அன்குவையும், தவிர நாமொருவரையும் அறிய வில்லை
யென்றும், அலியாருடைய தாயாராகிறது ஹாஷிமுடைய மகன்
அசது, அவருடையமகள் பாத்திமத்தாக இருக்கு மென்றும்,
இமாம் ஷாபிஇய்யியுடைய தாயாராகிறது பாத்திமத்து ஹஸனுல்
முதன்னாவுடைய மகன் அப்துல்லா, அவருடைய மகள் பாத்திம
த்து என்றார்கள்.

## மூன்றும் பிரிவாகிறது.

இமாம் அவர்கள் உடையிலும், மோதிரத்தின் (நக்ஷு) என்னும் வண்ணத்திலும், அவர்கள் கோலமும், சீலமும் அழகாயிருப்பதிலும் பேசுகிறதாக விருக்கும்.

அபூ சைதில் கருத்தீபிய்யி சொல்லுகிருர்கள், இமாம் ஷாபி இய்யி றலியல்லாகு அன்குவை யுயர்ந்த ஆண்பிள்ளையாகக் கண்டேனென்று. றபீஉ றஹிமகுல்லா சொல்லுகிருர்கள், இமாம் றலியல்லாகு அன்குவை முக வஜீகரமான சர்க்குணமுடைய சாந்தார்க்குச் சந்தனம் போலிருந்தார்கள், மிஸ்றிலுள்ள இராஜாக்கள் பிக்குகுடைய வுலமாக்கள், கைச்சவடக்காரர்கள், சகலர்களும் இமாமிடம் வந்து அதபாக அவர்களை வலுப்பப் படுத்தி வைப்பார்கள், காலீ மிஸ்ருகிய கஸ்வீனிய்யு பேசிவந்ததாக, அப்துல் வாகிது சொல்லுகிருர்கள், காலீ மிஸ்று றபீஉ என்பவர்களிடம் இமாமுடைய உடுமான மென்ன விதமாக இருந்ததென்று கேட்டதில்; அவர்கள், சொன்னுர்கள், நடுத்தரமாக இருந்ததென்றும், இன்னும், மிருதுவானவுடையையும்கித்தானுடையையும்,பருத்திப்போர்வையையும் அணிவார்களென்றும், நடுத்தரமான தொப்பியும் போடுவார்களென்றும், தலைப்பாகையையும், கால்மேசையு மிகுதியாயணிவார்களென்றும், முகம்மதுல் மகுரூமிய்யி றஹிமகுல்லா சொல்லுகிருர்கள், இமாமை மக்கத்துஹறத்திற் கண்டேன், தாடியை மருதோன்றியாற் செவப்புக் காய்ச்சினவர்களாக வலுப்பமானவர்களாகக் கண்டு இராஜாவென்று நினைத்தேனென்று.

அபூ அப்தில்லாகி சொல்லுகிருர்கள், அப்துல்லா ஹிபுனு வகபு றஹிமகுல்லாவும், இமாம் ஷாபிஇய்யி றஹிமகுல்லாவும், தாடிக்குக் கப்புக் காய்ச்சுவார்களென்று, வாசித்தி றஹிமகுல்லா சொல்லுகிருர்கள், இமாமைத் தலைமுடி, தாடிமுடியை ஹதீதைத் துயர்ந்த கப்புக் காய்ச்சினவர்களாகக் கண்டேனென்று.

இஸ்ஹாக் குபுனு ருகவைஹி சொல்லுகிருர்கள், ஹறமில் இமாம் ஷாபிஇய்யை தீனின்பேரி லிருக்கக் கண்டேனென்றும், அந்த இடத்தில் அவ்வித மிருப்பது. மகா கனம்பொருந்திய வுலகமெய்த்த சங்கைவா னல்லாது வேறில்லையென்றும், முகம்மது புனு இஸ்ஹாக்கு றஹிம ஹூல்லா சொல்லுகிருர்கள், நான் றபீஉ றஹிமகுல்லா சொல்லக்கேட்டேன், அவர்கள் இன்னமொரு மனுடனுக்குச் சொல்லுகிருர்கள், இமாம் ஷாபிஇய்யையும், அவர்கள் சற்குணத்தையும், அவர்கள் தூய்மையையும், நாகரீகத்தையும் கண்டீர்களாகில் மிகுந்த ஆச்சரியப்படுவீர்கள், அவர்கள் பேசும் நாகரீகங்கொண்டு அரபுப் பாஷையால் அவர்கள் வாக்குப்படியோர் கித்தாபு கோர்வைசெய்யப் படுமாகில் ஒருவராலும் விளங்கிக்கொள்ளமுடியாதென்று.



இன்னும், சொன்னுர்கள், அவர்களுடைய வலுப்பத்தாலும், அமளியாலும், அவர்களை யெதிட்டுப் பார்ப்பவன் பயந்து போவான், மகுகு முபுனு அப்தில்லா சொல்லுகிருர், உலமாக்களில் இமாம் ஷாபி இய்யைக்காண அதிகமாக ஒருவரையும் நான்காணவில்லை, தூரமானவன் பயப்படவும், முடிகினவன் சந்தோஷம் பெறவும், நன்றிபெறவும் பரதேசியானவன் தன்மைபெறவு மென்று. ஹறுமலத்து றஹிமஹூல்லா சொல்லுகிருர்கள், ஷாபிஇய்யி இமாம் தங்கள் நாக்கை நீட்டுவார்களாகில் அஃதவர்கள் மூக்கிலே தொடுமென்றும், அதுபேச்சுடைய நாகரீகத்தினபேரில் அறிவிக்குமென்றுஞ் சொல்லுகிருர், அஹ்மதுபுனு சாலிஹு றஹிமஹூல்லா சொல்லுகிருர்கள், ஷாபிஇய்யி இமாமுடைய சத்தமாகிறது வெங்கலமணி, அல்லது, வெண்டயத்தின் ஓசைபோலிருக்குமென்று.

சக்கரிய்யா வுஸ்ஸாஜிய்யி றஹிமஹூல்லா சொல்லுகிருர்கள் மக்கத்தில் ஒருஜனாசாவுக்கு மிகுந்த பெரியோரெல்லாம் வந்து கூடினுர்கள், நாங்களும் போனேம், இமாம் ஷாபிஇய்யும் அந்தக் கூட்டத்தினடுவிலாகி இருக்குற வேளையில் ஜனாஸாவைத் துயர்ந்து சகலரும் போகும் போது இமாம் ஹதீது சொல்லிக்கொண்டு போகத் தொடுத்தார்கள், அந்தச் சொல்லுடைய நாகரீகத்தையும் சத்தத்துடைய இன்பத்தையும் காண அழகானதை நான்கேட்கவில்லை, நடக்கும் வழியின்னம் நீளமா யிருக்கவேண்டியதே, இன்னும், கேட்கலாமென்று நாங்கள் ஆசைவைத்தோம்.

அஹ்மது இப்னு ஷைபா றஹிமஹுல்லா சொல்லுகிறார்கள், இமாம் ஷாபிஇய்யைக் காண நாகரீகமான பேச்சுடையவர்களையும், வாய்மொழியில் மதுரம் பொருந்தியவர்களையும் நான் காணவில்லையென்று, றபீஉ சொல்லுகிறார், இமாம் ஷாபிஇய்யி றலியல்லாஹு அன்குடைய மோதிரத்தின் கிண்ணியில் (அல்லா குதிக்கத்து முஹம்மதிபுனி இத்ரீஸ்) என்றெழுதியிருந்தது. (நஃம்) றஹிமஹுல்லா சொல்லுகிறார்கள், நான் றபீஇடம் கேட்டேன் இமாம் ஷாபிஇய்யி மோதிரம் வலதுகையிற் போடுவார்களோ, இடதுகையிற் போடுவார்களோவென்று, அப்போது சொன்னார்கள் இடதுகையிற்றான் போடுவார்களென்று.

## நான்காம், பிரிவாகிறது.

இமாம் ஷாபிஇய்யி றலியல்லாஹு அன்குடைய மனைவி மக்களிற் பேசுகிறதாயிருக்கும் (இல்லம்.)

அறி, ஷாபிஇய்யி றலியல்லாஹு அன்குவுடைய வீட்டுக்காராகிறவர்கள், உதுமான் றலியல்லாஹு அன்ஹுடைய பிச்சளத்திலுள்ளவர்களாயிருக்கும், அவர்கள் பேராகிறது, (ஹம்தத்து) என்பதாயிருக்கும், உதுமான் றலியல்லாஹு அன்குவுடைய மகனார் உமறு, அவர் மகனார் அனசது. அவர் மகனார் நாபிஉ, அவர் மகளார் ஹம்தத்து. சககரிய்யா வஸ்ஸாஜிய்யி றஹிமஹுல்லா சொல்லுகிறார்கள், ஷாபிஇய்யி றலியல்லாஹு அன்குடைய மகனுடைய மகனார் சொன்னார், என்தகப்பனார் சொல்லக் கேட்டேன் மக்கத்திற் பஞ்சம்பிடித்து மனுடர்கள் பலபல தேசங்களுக்குப், பஞ்சம்பிழைக்கப் போய் மீண்டார்கள்.

அப்போது, சிலரெல்லாம் அவ்விடங்களிற் கல்யாண முடித்துக் கொண்டார்கள், அதிலே எங்கள் பாட்டனார் இமாம் ஷாபிஇய்யி றலியல்லாஹு அன்கு (சன்ஆ) ராச்சியத்தில் உதுமான் றலியல்லாஹு அன்குடைய பிச்சளத்தில் எங்கள் பாட்டியார் ஹம்தத்துவைக் கல்யாணஞ் செய்து கொண்டு வந்தார்கள், அப்போது, மனுடர்களெல்லாஞ் சொல்லத் தொடுத்தார்கள், பஞ்சம்



பிழைக்கப்போன மனுடரெல்லாம் பேறுகுறைந்து வந்தார்கள், இந்த ஷாபிஈ குறைஷி குலத்தில் ஒருமுத்தைக்கொண்டு வந்தாரென்றும், மிகுந்து புகழ்ச்சியாகப் பேசிக்கொண்டார்கள், அந்த ஹம்தத்து நச்சாசியாரில் நின்றும் இமாம் றலியல்லாகு அன்குவுக்குப் பிறந்தது ஒருஆண்பிள்ளையும், இரண்டுபெண்பிள்ளையும், ஆண்பிள்ளையாகிறது. அபூஉதுமானி முகம்மதுபுனி முகம்மதுபுனி இதிரீசு றலியல்லாகு அன்கு, பெண்பிள்ளையிரண்டு மாகிறது பாத்திமத்துவும் சைநபுவுமென்றார்கள்.

அபுல் ஹசனில்ஹாசிமிய்யி சொல்லுகிறார்கள். அபூவுதுமானாகிறவர், ஷாம்தேசத்தில் ஹலபுஎன்கிற வூரில் (காஸீ) வேலை பார்த்தார்களென்று ஹஅசபுனு அபித்தாலிபி சொல்லுகிறார், பகுதாதில் காஸீ வேலை பார்த்தார்களென்று, சபுக்கி றஹிமகுல்லா தபக்காத்தில் புக்ககாவிற் சொல்லுகிறார்கள், இந்தச் சொற்சரியல்லவென்றும், சரியான சொல்லாகிறது *ஜவீறாவிலும், அதைச்சார்ந்ததலத்திலுமென்று. ஷாபிஇய்யி றலியல்லாகு அன்குவுடைய மகனுடைய மகன்; அபூமுகம்மது சொல்லுகிறார்கள், எந்தகப்பனாவர்கள் சொன்னார்கள். ஷாபிஇய்யி றலியல்லாகு அன்கு, தங்கள் மகனார் அபூ உதுமானுக்கு (வஸிய்யு) சொல்லும்போது வம்பித்துச் சொன்னார்கள் மகனே குளிர்ச்சியான தண்ணீரைப் பரிமாறுவதுனனுடைய ரோசத்தைக் குறைத்துப் போடுமென்றறி வனேயானுற் சுடுதண்ணீரல்லாமற் குடியேனென்று சொன்னார்கள், நீரும் உம்முடைய ரோசத்தைக் குறையாதையுமென்றார்கள்.

(சுத்திபு) சொல்லுகிறார், அபூஉதுமான் றஹிமகுல்லா ஜவீறாவில் ஹிஜ்றத்து, இருநூற்றுநாலாம்வருடம் வபத்தானார்கள், பைகக்கிய்யி றஹிமகுல்லா சொல்லுகிறாகள், ஷாபிஇய்யி றஹிமகுல்லாவுக்கு இன்னமொரு மகனுண்டும், அவருக்கு அபுல்ஹசனென்று சொல்லப்படும், அவராகிறது, இமாமுடைய சுர்றிய்யத்து (கனீறு) என்று பெயருள்ள பெண்பிள்ளை பெற்றதாயிருக்கும், அவர் மதலையா யிருக்கும்போது, இமாமவர்களை வபாத்தாக்கப்பட்

* ஜவீறாவிலு.

டூ முகம்மதுபுனு அப்தில்லாஹி, சொல்லுகிறார், இமாம் ஷாபிஇ
ய்யி றலியல்லாகு அன்கு சொல்லக்கேட்டேன் மனுடரெல்லோரும்
இருக்குதேசத்தின் தண்ணீர் நல்ல தண்ணீரென்று, நியத்துக்
கொள்ளுகிறார்கள், ஆனால் மிசுறுடைய ஆற்றின் தண்ணீர்போல்
துன்யாவிலில்லை, நான் மிசுறுக்குவரும்போது குவ்வத்துக்குறைத்த
வரனா, விதையடிக்கப் பட்டவர்போல், உசும்பாதிருந்தேன், பின்பு
மிசுறிற் சில்நாட்டரிபட்டிருந்தே னென்னுடைய சுர்றிய்யத்து
(தனாஸீறு) எனக்கு அபுல் ஹசன் என்கிற பேர் பிள்ளையைப்
பெற்றாளென்று.

இமாம் சுபுக்கீ றஹிமகுல்லா சொல்லுகிறார், அந்த அபுல்
ஹசனென்கிறபிள்ளை கிஜ்றத்து இருநூற்று முப்பத்தோராம் வரு
ஷம் வபாத்தானாரென்று (ஷாரிஹால்ஹாவீ சாஹிபுல் மிசுபா
ஹ் லியாஉத்தீனித்தவ்சிய்யி) றஹிமகுல்லா சொல்லுகிறார்கள்,
இமாம்ஷாபிஇய்யி றஹிமகுல்லாவிடம் சொல்லப் பட்டது: ஓர்
பெண்பிள்ளைக்கு இரண்டு தலையுண்டாயிருக்கிறதென்று அதுகேட்
டபோ, இமாம் றலியல்லாகு அன்கு அந்தப் பெண்பிள்ளையை
நூறு தங்கக்காசு மகராக நிக்காஹ்செய்து பார்த்துக்கொண்டு
தலாக்குச் சொல்லிப் போட்டார்கள்.

## ஐந்தாம் பிரிவாகிறது.

இமாமவர்கள் குறாஆன் ஓதினதிலும், இல்முகள் படித்ததி
லும், நடந்தவரலாற்றைப் பேசுகிறதாயிருக்கும்.

இமாம் பகுறுத்தீனுர் றூசிய்யி றஹிமகுல்லா சொல்லுகிறார்
கள். இமாம் ஷாபிஇய்யி றலியல்லாகு அன்கு துவக்கத்தில் பக்கீ
ருக யாதொரு சொத்தும் இல்லாதவர்களாயிருந்தார்கள், பள்ளி
யில்வைத்து ஓதிக்கொடுக்கிற லெப்பைக்குக் கொடுக்கக்கூடியா
தொன்று மில்லாதவர்களாயிருந்தார்கள் அதனால், லெப்பையும்,
பிள்ளைக்கு நல்லாகவோதிக்கொடுக்காமலும், பாடங்கேளாமலுமிரு
ந்தார், என்கிலும் இவர்களுடைய ஆதத்தாகிறது மற்றும்
பிள்ளைகட்கு லெப்பை வோதிக் கொடுக்கும்போது அதை நல்லா
தக்காதாரக்கேட்டு மனனம் செய்துகொண்டு லெப்பை பிறகே



வெளிக்கிட்ட வுடன் அந்தப பிள்ளைகளுக்கு ஓதிக் கொடுக்கிறது
லெப்பைவந்து பிள்ளைகளைப் பாடம் கேட்டால் அந்தப்பிள்ளைக
ளுக்கு நல்ல பாடமா யிருக்கிறது, அதை லெப்பை கேட்டாற்பிள்
ளைகள் சொல்லுகிறது இந்த ஷாபிஇய்யி ஓதித் தருகிறாரென்று
இதை லெப்பையறிந்தவுடன் மிகுந்த சந்தோஷமாகி ஷாபிஇய்
யைப் பார்த்துச் சொல்வார் நீர் நமக்குச் செய்யும் உதவியும்நம்மு
டைய வேலையை மாற்றிக் கொள்வதும் உம்மிடம் கூலி யெடுக்கிற
தைக் காண அதிகமாயிருக்குமென்றுசொல்லிப்போட்டார்.

றபீஉ றஹிமஹுல்லா சொல்லுகிறார்கள் லெப்பை ஷாபிஇ
ய்யி றஹிமஹுல்லாவைப் பார்த்து உம்மிடம் ஜுலூஸ்பணம்,
கிழமைக்காசு வாங்குகிறது எனக்கு ஹலாலல்லவென்று; முகம்ம
துபுனு அப்துல் ஹக்கம் சொல்லுகிறார். இமாம் ஷாபிஇய்யி றலி
யல்லாஹு அன்கு சொல்லக் கேட்டேன், நாங்கள் லெப்பைக்கி
ஈத்தமரத்தின் ஓலையையும் அதின் களிவான மட்டையையும் சுமந்
து கொண்டுபோய்க் கொடுக்கிறவர்களா யிருந்தோமென்று.

மைகக்கிய்யி றஹிமஹுல்லா சொல்லுகிறார்கள், ஷாபிஇய்யி றலி
யல்லாஹு அன்குசொன்னதாகச் சொல்லுகிறார்கள், நான் குறு
ஆனை ஹிப்லாகத் தமாமாக்கினேன், ஏழுவயதுநிரப்பமாயிருக்கும்
போதிற் பின்னர், உலமாக்களிடம் பள்ளிகளிலும் மதுறசாக்களி
லும போயிருந்து ஹதீதுகளையும பிக்குகுடைய ஹுக்கும்களை
யும்கேட்டுப் பாடமாக்கிக் கொண்டு அவைகளை யென்கையாலெ
ழுதி வைத்துக் கொள்ளக் கடுதாசி வாங்க வேண்டி, யென்தாயாரி
டம் காசில்லாத படியால், ஆட்டிலுள்ள புட்டியின் அகலமான
எலும்பையெடுத்து அதில் நிரம்ப வெழுதிக்கொண்டு அதுபாட
மானவுடன் வேறே எலும்பில் வேறே ஹுக்கும்களெழுதிக்கொ
ள்வேன், இவ்விதமாய்ப் புறக்கிப் புறக்கி யெழுதின வெலும்புகள்
எங்கள் வீட்டில் ஒருசாடி நிரம்பி விட்டதென்று (றபீஉ) றஹிம
ஹுல்லா சொல்லுகிறார்கள், ஷாபிஇய்யி றஹிமஹுல்லா சொல்
லுகிறதாக, என் தாயாரிடம் சல்லியில்லாதமுட்டுப்பாட்டினாற்கடு
தாசி விலைக்கி வாங்கிக் கொள்ள முடியாமல் உடைந்த ஓடுகளிலும்,
மெதுவான தோலிலும் ஈத்தன்ஓலையிலும் ஒட்டகை மூண்டியெ

லும்புகளிலும் அதன்தோளெலும்புகளிலு,மெழுதிக்கொள்வேன், ஹதீது சொல்பவர்களிடத்திற் பழம் பிடவைகளை நன்கொடை பெற்று எழுதிக்கொள்வேனென்று,

அபூ நசுரில் லக்தான் றஹிமஹுல்லா சாஜீ றஹிமஹுல்லா இடங்கேட்டு அவர், றபீஉ றஹிமஹுல்லா இடங்கேட்டு, அவர் இமாம் றலியல்லாஹு அன்கு இடங் கேட்டதாகச் சொல்லுகிறார்கள், இமாம் றலியல்லாஹு அன்கு சொல்லுகிறார்கள், நான் மக்கத்திலிருக்கும்போது, குதைற் கிளையாருடைய நாகரீகத்தைக் கேள்வியாகி, அவ்விடம்விட்டுப் (பாதியா) வென்னும் குதைலுடைய வூரெத்திச் சிலநாள் அவர்களுடைய சொற் சித்திரத்தையும் நற்சீலத்தையும் படித்தேன். அவர்கள், எவ்விடம் ஏகினாலும, திரிந்தாலும. அவர்களைப் பூண்டிருப்பது போதுமான மட்டிற் பெற்றுக்கொண்டு, மீண்டு மக்கத்துக்கு வந்து முன்மொழிகளையும், பைத்துகளையும், சொல்லிக் காட்டிக்கொண்டிருக்கும் நாளில், ஸுபைறுக் கிளையில் நின்றும் ஒருமனுடன் என்னைக்கண்டு சங்கையாக அபூ அப்தில்லாவேயும்முடைய நாகரீகத்தைப்பிரயோசனம் செய்யும், இல்மிற் செலவுசெய்தால் நன்மையென்று சொன்னார், அதுகேட்டு, நான் நல்லது, இப்போதிருக்கிற உலமாக்களில் நின்றும் யாரை நாடிப்போய் இல்மு படிக்கலா மென்றேன், அதற்கவர் மதீனத்தில் மாலிக்குபுனு அனசு றலியல்லாஹு அன்குதானென்றார், அஃதென் சிந்தையிற் பட்டது.

றபீஉ றஹிமஹுல்லா சொல்லுகிறார்கள், இமாம் றலியல்லாஹு அன்கு பிக்குகைப் படிக்கத் தொடுத்த சப பாகிறது, ஒருபோது, இமாம் றலியல்லாஹு அன்கு ஒருவாகனத்தின்பேரிலேறிக்கொண்டு போகையில் அவர்களின் முதுகுக்குப் பிறத்தே (உபைது) என்கிறவருடைய கணக்கப்பிள்ளைவருகிறார், அப்போது, இமாம் றலியல்லாஹு அன்கு ஓர்பைத்துச் சொல்லிநாகரீகமான குரலால் உவமை சொன்னார்கள். உடனே யந்தக்கணக்கப்பிள்ளை இமாமைப் பார்த்து உமக்கு எவ்விதம் வாகனத்தின்பேரி லேறி இராகம் பாடிக்கொண்டு போகிறதால் ரோசமில்லாமற் போகும், ஆகையால், பிக்குகுடைய இல்மைப் படியுமென்றுசொல்லித் தன்



கையிலிருந்த சாட்டையால் மெதுவாக ஒரு அடியும் அடித்தார், அது தங்கள் மனதிற்றேற்றி மக்கத்தில் * முபுத்தியாயிருந்த ஸன்ஜிய்யுபுனு காலிது றஹிமஹுல்லாவுடைய மதுரசா வந்துசேர்ந்து, சிலநாளைக்கிப் பிறகுமதீனத்தில் இமாமாலிக்கு றலியல்லாஹு அன்ஹுவிடம் சேர்ந்தார்கள். (ஸக்கரிய்யாவுபுனு யஹ்யஸ் ஸாஜிய்யி) றஹிமஹுல்லா" இமாமுடைய மகனின்பிள்ளை, அஹ்மதுபுனு முஹம்மதைத்தொட்டும் இமாம் றலியல்லாஹு அன்ஹு சொன்னதாகப் பேசிவருகிறார்கள், ஒருநாள், பைத்துச் சொல்லுகிற காரியத்தில் நோட்ட மிட்டுக்கொண்டே யிருக்கும்போது (மினா) பாலாறுடைய கடவையிலேறினேன். அப்போது, என் முதுகுக்குப் பின்னாலே நின்றும், (அலைக்கபில்பிக்குஹி) என்றொரு சத்தம் கேட்டேன். ஆனால், அவ்விடத்தில் ஒருவருமில்லை, அதின்கருத்து, பிக்குஹுடைய இல்மைப்பற்றிப் பிடித்துக்கொள்ளுமென்றது.

அபூபக்ரில் ஹுமைதிய்யி றஹிமஹுல்லா இமாம்சொன்னதாகச் சொல்லுகிறார்கள், நான் நஹ்வுடைய இல்மையும் அதபுடைய இல்மையும் படிக்க நாடிப்புறப்பட்டபோது, என்னை முஸ்லிம்புனு காலிது றஹிமஹுல்லா சந்தித்து நீர்யார், எந்தக் குடும்பம், எவ்விடத்தில்நின்றும் வருகிறீரென்று கேட்டார், நான் அப்துல்மனாபுடைய பிசகளத்தில்நின்று முள்ளவன், மக்கத்தில் (ஷிஃபுல்கைபில்) என்கிற தானத்தில்நின்றும் வருகிறேனென்று சொன்னேன், உடனே எனக்குச் சோபனஞ்சொல்லி, அல்லாஹுத்தஆலா வும்மை துன்யாவிலும், ஆகிறத்திலும் சிறப்பாக்கி வைத்திருக்கிறான். உம்முடைய இந்த (பகுமை) பிக்குஹில் நிராக்கிக்கொள்ளவேண்டியதே யென்றார், அஃதுமக்கு மெத்தவும் அழகாயிருக்குமென்றார், இமாம் சொல்லுகிறார்கள், நான் அதுகாரியத்தில் யோசினையாகவிருந்து, அன்றிரவையில் உறங்கும்போது மனையில் ஒருவர் வந்து, அபா அப்தில்லாவே நீர் பைத்துச் சொல்வதால் ரோசமுண்டாகவும், குறையவும் போதும், மெய்தான், ஆண்பிள்ளை நடுவயதெத்தினால் (பிக்குகு) தான் அழகென்று சொன்னார். நான் விழித்து வபதீதை யெழுத முன்னேக்கினேன்.

* முபுத்தி-தீர்ப்புச்செய்வோர்.

(றபீஉ) றஹிமஹுல்லா சொல்லுகிறார்கள், இமாம் ஷாபிஇய்யி றலியல்லாஹு அன்ஹு சொல்லக் கேட்டேன், அவர்கள் சொன்னார்கள், நபிசல்லல்லாஹு அலைஹிவசல்லத்தை நான் பாலிகாக முதற் கண்டேன், பிள்ளையேயென்று கூப்பிடவும் (லப்பைக்கயாறசூலல்லா) அல்லாஹுத் தஆலாவின் தூதரே, நானுங்களுக் கடிபணிந்தேனென்றேன், நீர் எந்தக்கூட்டத்தி லுள்ளவரென்றார்கள். உங்கள் கூட்டத்தில்நின்றுமுள்ளவனென்றேன், கிட்ட அடுத்துவாவென்றார்கள், உடனே யடுத்தேன், அவர்கள் கையாலென் வாயைத்திறந்து, அவர்கள் உமிழ்நீரை யெடுத்து என்னுவிலும், வாயிலும், உதட்டிலும் தடவி நீர்போம். அல்லாஹுத் தஆலா வும்மிலே பறக்கத்துச்செய்வானென்று (துஆச்) செய்தார்கள், பிறகு நான் விழித்துவிட்டேன்.

ஹறுமலத்து றஹிமஹுல்லா சொன்னார்கள். நான் இமாம் றலியல்லாஹு அன்ஹு சொல்லக்கேட்டேன், அவர்கள் சொன்னார்கள், நான்சிறுபிள்ளையாய் மக்கத்திலிருக்கும்போது ஓர்மனம் கண்டேன். அதாவது நான் நபியுல்லாவை ஹறத்தில் இமாமத்துச் செய்யக்கண்டேன், அவர்கள் தொழுது சலாம் கொடுத்தவுடன் மனுடர்களை நோக்கி யறிவுபடித்துக்கொடுக்கிறார்கள், அப்போது நான் முடிகி அல்லாவுடைய றசூலே எனக்கும் படித்துத் தாருங்களென்றேன். உடனே, தங்கள் சட்டையின் கையில்நின்றும், ஓர் தராசையெடுத்து இதுதான் உமக்கென்றார்கள், அதை வாங்கிக்கொண்டேன். பின்னர், விழித்துவிட்டேன், அவ்விடத்தில் மனமுக்கு (தஃபீறு) சொல்லுகிற ஓர் மனுடனுண்டாயிருந்தார். அவரிடத்தில் இந்த மனமைச்சொல்லித் தஃபீறு கேட்டேன், அவர் சொன்னார், நீர் இல்மில் இமாமாகிவிடுவீர் உம்முடைய பாதை தராசுநிறையாய்ச் செவ்வுற்றிருக்குமென்று.

பகுறுத்தீனுர்ருசிய்யிசொல்லுகிறார்கள்இமாம்சொன்னார்கள்நான் மனமில்அலிய்யுறலியல்லாஹு அன்ஹுவைக்கண்டேன்அவர்கள் என்மீது கைதொட்டுச் சலாம்சொல்லி அவர்கள் மோதிரத்தைக் கழட்டி யென்கையிற் போடும்படி கண்டு விழித்துவிட்டேன், அவ்விடத்தில் எனக்கொரு சிறிய தகப்பனார் தஃபீறுடைய இல்மறிந்தவர் இருந்தார், அவரிடத்தில் என்மனமைச் சொல்லிக்கேட்டதில் கைதொட்டதும், சலாம் சொன்னதும் யாதொரு தீங்கும் வராமற் சலாமத்தாகிறத்தின்பேரி லறிவிக்குமென்றும், மோதிரமிட்டது அலிய்யு றலியல்லாஹு அன்ஹுவுடைய திருநாமம் மஷ்ரிக்கு, மகுரிபு எங்கும் பிரசங்கமானதுபோல் உம்முடைய பேரும் பிரசங்கமாகுமென்றார், முஹம்மதுபுனுல் ஹக்கம் றஹிமஹுல்லா சொல்லுகிறார். ஷாபிஇய்யி றலியல்லாஹு அன்ஹுவுடைய தாயார் ஹமலாயிருக்கும்போது, ஒருமனம் கண்டார்கள். அதாவது தங்கள்வசத்தில் நின்றும் (முஷ்தரீ) யென்கிற நட்சத்திரம் புறப்பட்டு நீண்டு அதில்நின்றும் கதிர்க்கிரணங்கள் பலதேசங்களிலும் விஷயமாகும்படி கண்டு விழித்துவிட்டார்கள். பின்னர், அந்தமனமுக்கு (தஃபீறு) சொல்லுகிறவர்கள் சொன்னார்கள். அந்தப்பெண்பிள்ளை பாரதூரமான ஒரு ஆலிமைப் பெறுவார்களென்று.



## ஆறும் பிரிவாகிறது.

இமாம் ஷாபிஇய்யி றலியல்லாஹு அன்ஹுவுடைய வுஸ்தாதுமாரிலும், தில்மீதுமார்களென்னும் சிஷர்களிலும், பேசுகிறதாயிருக்கும்.

ஹஸன் றஹிமஹுல்லா சொல்லுகிறார்கள். இமாம் ஷாபிஇய்யி றலியல்லாஹு அன்ஹு தங்களின் உள்ளழகிலும், வெள்ளிபழகிலும் சேகரமாயிருந்த சிறப்புப்போல் முன்னோர்கள், பின்னோர்களான வுலமாக்கள், இமாம்கள், இவர்களிலொருவரிலும் சேகரமாகவில்லை, அதில் (முதலாவது) வங்கிஷத்தின் சிறப்பு. (இரண்டாவது) தீனும், இஃதிக்காதும் சஹீஹாகிறது, (மூன்றாவது) மனத்தினுடைய தயாளம், (நாலாவது) ஹதீதுடைய திறம், திறக்குறைத்தலை யறிகிறது, ஹதீதில் முந்தினது, பிந்தினது, மாற்றினது, மாற்றபபட்டதை யறிகிறது; இதில் அஹ்மதுபுனு ஹன்பல் றலியல்லாஹு அன்ஹு சொல்லுகிறார்கள். நாங்கள் ஹதீதில் * காஸ்ஸு ஆம்மு, நாசிஹு, மன்சூஹு இவைகளானது இன்னவிதமென்று தெரியாதிருந்தோம், இமாம் ஷாபிஇய்யி றலியல்லாஹு அன்ஹு இடம் வந்திருக்கும் வரையுமென்று (ஆறு

* காஸ்ஸு-சொந்தம், ஆம்மு-பொது, நாசிகு-மாற்றினது, மன்சூஹு-மாற்றப்பட்டது.

வது) குர்ஆனையும், ஹதீதையும், மனனமாக்கியிருக்கிறது; (எழாவது) றசூலுல்லாஹ்வுடைய வரலாறு, நடைமுறைகளையும், பின் குலபாக்களுடைய வரலாறு, நடைமுறைகளை விவரமாயறிகிறது; (எட்டாவது) தங்கள் சொல்லுக்கு கிலாபான சொல்லுடைய மேற்பூச்சை வெளியாக்குதல் (ஒன்பதாவது) தங்கள் சொல்லில் * கதீம் இன்னது! ஜதீது இன்னதென்று கிதாபுகள் விவரமாய்க் கோர்வை செய்திருக்குதல் () (பத்தாவது) உஸூலுல் பிக்குஹுடைய இல்மை விவரிக்குதல் (பதினொன்றாவது) அறபிய்யத்தான உவமானங்களும், நாகரீகமான மதுரம்பொருந்திய வட்டு வழக்கமான சொற்களும், இவர்களிற் சேகரமாகியதுபோல் மற்றவர்களிற் காணப்படவில்லை.

ஸியாவுத்தீன் வாலிதில் இமாம் பகுறுத்தீனுர் றுவிய்யி சொல்லுகிறார்கள், ஷாபிஇய்யி இமாமுடைய உஸ்தாது மார்களாகிறது அனேகம்பேர்களுண்டும். அதிகப் பிரஸ்தாபமானவர்கள், பத்தொன்பதுபேர் மக்கத்திலும், ஆறுபேர் மதீனத்திலும், நாங்குபேர் யமனிலும், நாங்குபேர் இறாக்கிலும், ஆக முப்பத்துமூன்றுபேராயிருக்கும். மக்காவிலுள்ள உஸ்தாதுமார்களில், மக்காவுக்கு இமாமாகிய (ஸுப்யானுப்னு உயைனா) றஹிமஹுல்லா அவர்களெப்படிக்கொத்தவர்களானால், ஸுப்யான் றஹிமஹுல்லாவே யில்லாதுபோனால், ஹிஜாஸுக்கட்டில் இல்மு போய்விடுமென்று, ஷாபிஇய்யி றலியல்லாஹு அன்ஹு சொன்னார்களே, அப்படிக்கொத்தவர்கள், இன்னம் மக்காவில் !! (முபுத்தி)யாகிய முஸ்லிமுப்னு காலிதிஸ்ஸன்ஜிய்யி றலியல்லாஹு அன்ஹுவுமாயிருக்கும். அவர்கள்தான் இமாமுக்கு இருபதுவயது எத்தமுதல் அபூஅப்தில்லாவே, ஷாபிஇய்யே உமக்கு பத்துவாக்கொடுக்கத் தகுந்த பருவமெற்றிக்கொண்டதென்று சொன்னவர்கள். மற்றவர்களை இவ்வுரையிற் சொல்லவில்லை, மதீனத்திலுள்ள உஸ்தாதுமார்கள் மக்கா, மதீனா இவ்விரண்டு ஹறமிலுள்ளவர்களுக்கும் இமா

* கதீம்-ஷாபிஇய்யிமாம் பகுதாதில் சொன்னசொல். ! ஜதீது-அவர்கள் மிசுறில் சொன்னசொல். () உஸூலுல்பிக்குஹு-பிக்குஹின் இல்முக்கடிமூடானது. !! முபுத்தி-பத்துவாக்கொடுக்கிறவர்.



மாகியமாலிக்குப்னு அனஸ் றலியல்லாஹு அன்ஹுவும், இபுறாகீமுப்னு ஸஃதுல் அன்சாரிய்யும், அப்துல் அஸீஸிப்னும் தாறுவர்திய்யும், முகம்மதுப்னு இஸ்மாஈலுப்னு பதீக்கும், அப்துல்லாஹிப்னு நாபிஉ றஹ்மத்துல்லாஹி அலைஹிம், இவர்களாயிருக்கும்.

இன்னும் * (முஃத்தஸிலா)க்களிற் சேர்ந்த இபுறாகிமுல் அஸலமிய்யி யிடம் பிக்குகையும், ஹதீதையும் ஓதினதல்லாமல், தீனுக்கடிமூடாகிய (அக்கீதா)வுடைய இல்மையோதவில்லை, அவருடைய அக்கீதாப் பிசகுதலானது, இமாம்ஷாபிஇய்யி றலியல்லாஹு அன்ஹுவைத்தங்கடம் செய்யாது. யமனிலுள்ள உஸ்தாதுகளாகிறது முத்தரிக்குப்னு மாஸின், காஸீசன் ஆஉ, ஹிஷாமுப்னு யூசுபு, அம்ருப்னு அபீசல்மா, சாஹிபுல் அவ்ஸாஇய்யி, யஹ்யப்னு ஹஸ்ஸான் றஹ்மத்துல்லாஹி அலைஹிம், இறாக்கிலுள்ள உஸ்தாதுகளாகிறது, வக்கீஉப்னுல் ஜர்றாஹும், அபூஉஸாமத்த ஹம்மாதுப்னு உஸாமத்த றஹிமஹுல்லா இவர்களிருவரும் இறாக்கைச் சேர்ந்த கூபாவிலுள்ளவர்களாயிருக்கும், இஸ்மாஈலுப்னு உலையத்த, அப்துல் அஸீஸின் குமாரர் அப்துல் வஃகாபு றஹிமஹுல்லாவுமாயிருக்கும், இமாம் றலியல்லாஹு அன்ஹு இடம் ஓதியபேர்கள் இத்தனைபேர்களென்று இந்த உரையில் ஆயிரத்தி லொருபங்காவது மட்டிட முடியாது, அவர்களுடைய சிறப்பையும் பாரதூரமான தன்மையையும் அறிய நாடினால் ஸுபுக்கி இமாமுடைய தபகாத்து என்கிற கிதாபிலும், பைகக்கீ இமாமுக்குடைய மனாக்கிபுஷ் ஷாபிஇய்யி யென்கிற கிதாபிலும், பகுறுத்தீனுர் றுவிய்யி இமாமுக்குடைய மனாக்கிபிலும் இன்னும், அனேக கிதாபுகளிலும் பார்த்துக் கொள்ளவும், அதில் நாவினுக் கினித்ததும், நயனங்குளிர்ந்ததும், சிந்தை இச்சித்ததும் சகலதுமுண்டும் இந்த உரையில் அவர்களில் நின்றும் ஐந்துபேரைச் சொல்லுகின்றனம், அவர்கள்யார் யாரெனில்.

முந்தினவர்களாகிறது, ஹதீதுகளைப் பேசி வருகிறவர்களுக்கு இமாமான அஹ்மதுப்னு ஹன்பல் றலியல்லாஹு அன்ஹு, மகனே நானென்ன சொல்வேன், இமாம் ஷாபிஇய்யி றலியல்லாஹு அன்ஹுவுடைய சிறப்பானதை, மதுகபுடைய ஒரு இமா

* முஃதஸிலா-நேரைவிட்டும் சறுகியவர்கள்.

17

முக்குச் சீடராகவும். இன்னும், மதுகபுடைய ஒரு இமாமுக்கு உஸ்தாதாகவு மிருந்ததை நீபார்க்கவில்லையா (அதாவது) மாலிக்கு இமாமும், ஹன்பலீ இமாமுமாயிருக்கும், பைகக்கிய்யி றஹிமல்லா, இபுருகீமுபுனு இஸ்ஹாக்கு றலியல்லாஹு அன்ஹுவைத் தொட்டும் பேசிவந்தார்கள், அவர்கள் சொன்னார்கள் இமாம் ஷாபி இய்யாகிறது இரண்டு உஸ்தாதுக்கிடையிலுள்ள உஸ்தாதாயிருக்குமென்று, ஸக்கரிய்யா உஸ்ஸாஜிய்யி றஹிமஹுல்லா சொன்னார், நான், ஸஃபருனிய்யி றஹிமஹுல்லா சொல்லக்கேட்டேன் நான், இமாம் றலியல்லாஹு அன்ஹு இடம் இல்மு படிக்கப் போகுந்தோறெல்லாம் எனக்கு முந்தி அஹ்மதுபுனு ஹன்பல் றலியல்லாஹு அன்ஹுபோய் ஓதிக்கொண்டிருப்பார்களென்றும், ஒருபோதாவது, நான் ஓதுந்தோறெல்லாம் ஹன்பலீ இமாம் ஹாலிறுகா திருந்ததில்லையென்றும்.

பைகக்கிய்யி றஹிமஹுல்லா சொல்லுகிறார்கள், ஹன்பலீ றஹிமஹுல்லா (முவத்தா) என்கிற கித்தாபை மிகுந்த வுலமாக்களிடம் ஓதிப் பின்னும், ஷாபிஇய்யி றலியல்லாஹு அன்ஹு இடம், மடக்கியோதினதில புதுமையாகி மிகவும் புகழ்ந்து கொண்டார்கள், ஸாபுக்கிய்யி றஹிமஹுல்லா தபக்காத்துல்புக்ககாவில் இமாமிடத்தில் ஓதினபேர்களில், மிசுறிலுள்ளவர்களையும் பகுதாதிலுள்ளவர்களையும் விவரமாக அவர் தலைமுறை, வயது, சிறப்புகள் சகலதையும் பேசி வந்ததில் ஹன்பலீ இமாமையும், அதில், எண்ணி யிருக்கிறார்கள், ஸக்கரிய்யா உஸ்ஸாஜிய்யி றஹிமஹுல்லா அபீ தாவுதுஸ்ஸஜஸ் தானிய்யி இடம் இமாமுடைய மாணாக்கர்களைத்தொட்டும் கேட்டதில் அவர்கள் சொன்னது, மாணாக்கர்களில் முந்தினவர்கள் ஹுமைதிய்யி றஹிமஹுல்லா, பின்னர், இமாம் ஹன்பலிய்யி, பின்னர், புவைத்திய்யி, பின்னர், அபூதவ்று, பின்னர், றபீஉ, பின்னர், வபுனுல் ஜாவறுத்திய்யி, பின்னர், ஸஃபருனிய்யி, பின்னர், கறுயீ ஸிய்யி பின்னர், முஸ்னீ, பின்னர், ஹறுமலத்து றஹிமஹுல்லா ஆக இவ்வளவுபேரும் இல்மில் கடந்தவர்கள்.

ஹுமைதிய்யி றஹிமஹுல்லா மக்கத்திலுள்ளவர்கள், ஷாபி இய்யி இமாமிடம்போய் மிசுறிலிருந்தோதினார்கள், இமாம் வபாத்தான பிறகு, மக்கத்தில் மீளவும்வந்து கிஜுறத்து இருநூற்றுப்



பதிதொன்பதாம் வருடம் வபாத்தாகினார்கள், அவர்களுடைய வருசைப்பாடும், சிறப்பு, மிகுதமுண்டும், ஹன்பலீ இமாமுடைய வரலாறுபின்னாலே சொல்லப்படும்.

புவைத்திய்யாகிறவர்கள் மிசுறுநாட்டில் புவைத்து என்கிற வூரிலுள்ளவர்கள், அவர்கள் பேராகிறது, யூசுபுபுனு யஹ்யாவென்றும், பட்டப்பேர் அபூயஃகூபென்றும் சொல்லப்படும், சுபுக்கியயி றஹிமஹுல்லா சொல்லுகிறார்கள், புவைத்திய்யி றஹிமஹுல்லா பேரில் இமாம் றலியல்லாஹு அன்ஹு மிகவும் உவப்பாயிருப்பார்கள், புவைத்திய்யாகிறவர்கள் எந்த நாளும் நோன்பாகவும், குறுஆனை மிகுந்து ஓதுகிறவர்களாகவும், ஒருநாளைக்கொரு (கத்மு) தமாமாக்கிறவர்களாகவும், தொழுகையை நீளமாக்குகிறவர்களாகவும் இருந்தார்கள், (றபீஉ) றஹிமஹுல்லா சொல்லுகிறார்கள், நான் பராயமறிந்த நாள்முதல் ஒருநாளாவது புவைத்திய்யை காணவில்லை அவர்களுடைய வுதட்டை திக்கிறைக்கொண்டு, அல்லது, குறுஆனைக்கொண்டு எந்த நேரமும் உசுப்பினவர்களாகவே யல்லாதில்லையென்று.

இபுனு அபில் ஜாறு வறுதிய்யி றஹிமஹுல்லா சொல்லுகிறார்கள், புவைத்தீ றஹிமஹுல்லாவுடைய வீடு என்வீட்டு அயலிலாயிருந்தது, இரவில் எந்தநேரம் விழித்தேனே யானாலும் அவர்கள் தொழவும், குறுஆனோதவும் தான் கேட்பேனென்று, பைகக்கிய்யும், றபீஉம் சொல்லுகிறார்கள், நான் மிகுந்த நேரங்களில் புவைத்தீ றஹிமஹுல்லாவைக் கண்டேன், இமாம் ஷாபிஇய்யி றலியல்லாஹு அன்ஹுபேரிற் சலிக்கத் தக்கதாக, அப்போதெல்லாம் கேட்டேன், நீங்கள், இமாமுடன் மிகுதி நாளாய்ப்புழங்கி மிகுந்த இல்மைப் பெற்றுக்கொண்டவர்களாயிருக்க எதுகாரியம் தப்பிப் போச்சுதென்று சலிக்கிறீர்களென்று இவ்விதம் கேட்டதில் அவர்கள் சொன்னார்கள், நான் ஷாபிஇய்யி றலியல்லாஹு அன்ஹுவுடைய தாழ்மையையும், சற்குணத்தையும், மெல்லினத்தையும், நன்றாக அறிவேன், அவ்விதமிருக்க ஏதாவது, இல்மில் நான் அவர்களுடன் பேச்சுக்கொடுத்து என்னைத் திரும்பிப் பார்த்து ஜவாபு சொல்வார்களாகில், அல்லாவினாணை யவர்கள் பயங்க

ரத்தால் நான் நடுங்கி ரோமக்காலெல்லாம் சிலுசிலுத்துப் பயந்து விடுவேனென்பார்கள்.

இபுனு கறம் என்கிற இராஜாவும், அவர் காலத்திலுள்ள வம்பர்களெல்லாரும் இமாம் றலியல்லாஹு அன்ஹுவுடைய * ஹைபத்தினாற் பயந்து விடுகிறார்களென்று இபுறாகிமுபுனு கீறியாது றஹிமஹுல்லா சொல்லுகிறார்கள், நான், புவைத்திய்யி றஹிமஹுல்லா சொல்லக்கேட்டேன், இமாம் ஷாபிஇய்யி றலியல்லாஹு அன்ஹு வபாத்தானபிறகு ஷாபிஇய்யி இமாமுடைய அசுஹாபிகளான நாங்கள் அவர்கள் மஜ்லிசிற் சிலநாட் புழங்கியிருக்கும்போது மாலிக்கு றஹிமஹுல்லாவுடைய மதுகபைத் துயர்ந்த சிலர்கள் எங்களைத்தொட்டும் பொல்லாங்காய் சுல்தானிடம் கோட்சொல்லத் தொடுத்தார்கள், நாளுக்குநாள் அந்தப் பொல்லாங்கு முற்றிச்சகலரையு மஜ்லிசைவிட்டும் பிரித்துப் பின்னர், ஆயிரம் தங்கக் காசு நான் கடன்வாங்கிச் சிலவு செய்து, அவர்களை யெல்லாம் வருத்தி முன்போலொத்த மருகுதலாயிருந்தோம் (அல்ஹம்துலில்லாகி)யென்றார்கள்.

இபுறாகீ முபுனுவியாது றஹிமஹுல்லா சொல்லுகிறார்கள், புவைத்தீ றஹிமஹுல்லா சிலகாலம் இமாம் ஷாபிஇய்யி றஹிமஹுல்லாவுடைய மஜ்லிசிலேயே தரித்து அவர் மதுகபுக்கு உதவியாயிருந்து பிதுஅத்துக் காறருக்கெல்லாம் விச்சித்திரங்களாலும், குறுஆன் ஹதீது இமாமுடைய சொற்கொண்டும், அத்தாட்சிகொடுத்து மதுகபை மிகவுமுக்கியப்படுத்திவருங் காலத்தில், சுல்தான்வாதிக் பில்லாகியென்கிற கலீபாவின் கிலாபத்தில் இவர்களை யழைத்து குறுஆன் அல்லாவுடைய படைப்பென்று சொல்லும்படி வம்பித்து விலங்குபோட்டு அந்த விலங்குடனே பகுதாதுக்குக் கொண்டுபோய் வருத்தப் படுத்திப் பார்த்ததில் ஒரு விதத்திலும் அந்த மோசமான சொல்லைச்சொல்ல மாட்டேனென்று சொல்லிப் போட்டார்கள், அந்த விலங்கிலேயேயிருந்து ஹிஜ்றத்து இருநூற்று முப்பத்தொன்றாம் வருடம் வபாத்தாகினார்கள்.

* ஹைபத்து-பயங்கரம்.



முகம்மது புனுல் ஹுசைன் றஹிமஹுல்லா பேசி வருகிறார்கள், றபீஉ றஹிமஹுல்லாவைத் தொட்டும் அவர் சொல்லுகிறார், நானும்,புவைத்தியும்,முஸனிய்யும், முகம்மதுபுனு அப்தில் ஹக்கமும் இமாம் ஷாபிஇய்யி றலியல்லாஹு அன்குடைய மரணவியாதி நேரத்திற் போனோம், அவர்கள் எங்கள் நால்வரையுமுகத்தை நன்றாகப்பிருந்தி நேரம்பார்த்து ஒவ்வொருவராய் கூப்பிட்டு அபூயஃகூபுல்புவைத்தியேநீர்இரும்புவிலங்கில் மவுத்தாவீரென்றும், முஸனிய்யே மேலக்கியுமக்குச் சோபனங் கிடைக்கும், இன்னும் ஒருகாலம் வரும் அதிலுள்ள வுலமாக்களில் நீர் மிகவும் கியாஸுடையவராவீரென்றும், றபீஉ நீர் கித்தாபுகளைப் பரத்துகிறதாற் பிரயோசனமுடையவராவீரென்றும், முகம்மது புனுல் ஹகமே நீரும்முடைய தகப்பனார் மதுகபில் மீண்டிடுவீரென்றுஞ் சொல்விபுவைத்தியைப்பார்த்துநீரெழும்பும் சலாம் சொல்லுமென்றார்கள், இந்த நாலு பேரிலும் அவர்கள் சொல்லிய மாதிரியே அல்லாகுத்தஆலா நடத்தினனென்றும்,புவைத்தீறஹிமஹுல்லாவை பகுதாதுக்குக் கொண்டுபோகும்போது கழுத்திலும், காலிலும் நாற்பதுறாத்தற் பாரமுள்ள விலங்கு மாட்டியோரிரும்புச் சங்கிலியை யஃகிரண்டுக்கிடையிற் போட்டு ஒருகோவேறு கழுதையிலேற்றிக்கொண்டு போகப்பட்டது, அதிலேதான் அவர்கள் வபாத்தானார்களென்றும், வழியிற் போகும்போதுஇவ்விதமானதுன்பத்துக்காய்ச் சபுறு செய்யவேண்டித்தானம்மைப் படைக்கப் பட்டதென்றுஞ் சொல்லிக் கொள்வார்களென்றார்கள்.

றபீஉ றஹிமஹுல்லா சொல்லுகிறார்கள், புவைத்தீ றஹிமஹுல்லாவை விலங்கிட்டபோது சொன்னார்கள், அல்லாஹுத்தஆலா கல்க்குகளைப் படைத்தது (குன்) என்கிற சொற்கொண்டு அந்தச்சொல் மகுலூக்காயிருக்குமானால், மகுலூக்கானது, மகுலூக்கை யெவ்விதம் படைக்குமென்று றபீஉ றஹிமஹுல்லா சொல்லுகிறார்கள் புவைத்தீ றஹிமஹுல்லா விலங்கிற் கிடக்கும்போது (ஜும்ஆ) வுடைய (வாங்குச்) சத்தம் கேட்டால் உடனே மறியல்வீட்டுக்குள்ளேதான் குளித்து உடையணிந்துஎழும்பி மெள்ளமெள்ள நடந்து வாயலை யடுத்தவுடன் காவறகாரன்

னங்கே போறீரென்று கேட்பான், அப்போது. அல்லாவுடைய கூப்பிடுதலுக்கு ஜவாபு சொல்லப்போறேனென்பார்கள், உடனே, காவற்காரன் சொல்வான், அல்லா வும்மை ஆபியத் தாக்குவான். உள்ளே போய்விடுமென்பான், அப்போது, சொல்வார்கள், நாயனே யுன்னுடைய கூப்பிடுதலுக்கு ஜவாபுசொல்ல வந்தேன் என்னை விலக்கிப் போட்டார்களென்றுசொல்லிக்கொள்வார்கள், யைகக்கிய்யி றஹிமஹுல்லா சொல்லுகிறார்கள், தீனை நிலை நிறுத்தாட்டுகிறதின்பேரில் வருந்துன்பங்களை யின்பமாய்க் கண்டு சபுறுச்செய்து தறஜாத்துப்பெற்றுப்போனஇமாம்களில்புவைத்தீ றஹிமஹுல்லாவும், எண்ணப்பட்டவர்களா யிருக்கும். ஹன்பலிய்யி இமாமும் அஹ்மதுபுனு நசிரில் குஸாஇய்யியும்அந்தயெண்ணிக்கையி லகப்பட் டவர்கள் தானென்று.

முஹம்மதுபுனு அப்துல் ஹக்கம் என்கிறவருக்கு மனதிலோர் சடைவு நெடுநாளாக வுண்டாயிருந்த சங்கதியால் அவருடைய தகப்பனாருடைய மதுகபில் திரும்பி விட்டார், அதாகிறது மாலிக்கு மதுகபு, அந்தச் சங்கதி யாகிறது. ஷாபிஇய்யி றஹிமஹுல்லா வியாதியாய் வீட்டிலேயே யிருக்கும் நேரம், அவர்கள், மதுரசாவிலேதான் ஓதிக் கொடுக்க நாடி யிருந்ததை யவர் மனதுபோல் நடக்க விடாமல் (புவைத்தீ) றஹிமஹுல்லாவை நிறுத்தாட்டி வைத்தார்கள் இதுதான் அந்தமதுகபை விட்டு மாலிக்கு மதுகபளவிலே திரும்பின சங்கதி யல்லால் வேறில்லை, அவ்விதம் இருந்தும், இமாம் ஷாபிஇய்யி றலியல்லாஹு அன்குவை மிகுதி வனுப்பப் படுத்திக்கொண்டு அவர்கள் கோர்வை யாக்கியகித்தாபுகளை யோதிக் கொடுக்கிறவர்களா யிருந்தார்கள், அவர்கள்ஹிஜுறத்து இருநூற்றி அறுபத் தெட்டாம் வருடம்வபாத்தாகினார்கள், அவர்களுக்கு வயது எண்பத் தாறு

முஸ்னிய்யி றஹிமஹுல்லா வாகிறவர்கள். இபுறாகீ முபுனு இஸ்மாயீ லிபுனி யஹ்யல் முஸ்னிய்யில் மிசுரிய்யி மிகவும் பாரதூரமான ஆலிமாகவும், ஸாகிதாகவும், ஆபிதாகவும், ஷாபிஇய்யி மது கபுக்கு வொத்தாசையாய் அதைக் கொண்டு நடத்துகிறவர்களா யிருந்தார்கள் ஹிஜுறத்து ஒருநூற்று யெழுபத் தைந்தாம் வருடம் பிறந்து இரு நூற்றி அறுபத்திநாலாம் வருடம் வபாத்தாகினார்கள். அவர்களைத்தொட்டும் இபுனு ஹுசைமா சஹாவிய்பு, ஸக்கரிய்யா உஸ்ஸாஜீ இவர்களும், இன்னம் அனேகர்களும் அவர்களாற் பல இல்மையும் பெற்றிருக்கிறார்கள். இல்மில், மலையாகவும், கடலாகவுமிருந்தார்கள். இமாம் ஷாபிஇய்யி றலியல்லாஹு அன்ஹு முஸ்னீ றஹிமஹுல்லாவை வன்னித்து திற் சொல்லியிருக்கிறார்கள். இந்த முஸ்னீயிடம் இபுலீஸு வந்து தற்கித்தாலும் இபுலீசை மிகைத்திடுவா ரென்று, ஏனென்றால், தற்கிக்கிறத்தில் இபுலீசைப்போல் அதபுகுறைந்தவன் யாருமில்லை அவன், (ஹக்குத்தஆலாவின்) சமுகத்தில்நின்று தர்கித்து முனிவுபெற்றபடியால் இவ்விதஞ் சொன்னார்கள்.

முஸ்னீ றஹிமஹுல்லா வாகிறது (துஆகபூல்ச்) செய்யப்பட்டவர்களாகவும், எவருடைய (ஜனாஸா)வுக்கும் ஹாஸிறாகித் தாங்கள் தானே குளிப்பாட்டுவார்கள். இதனால் என்னுடைய (கல்பு) மிருதுவாகுமென்று சொல்லிக்கொள்வார்கள். பைகக்கிய்யி றஹிமஹுல்லா சொல்லுகிறார்கள். புவைத்திய்யி றஹிமஹுல்லாவில் நடந்த ஆபத்து நடந்தபின் ஷாபிஇய்யி மதுஹபில் இமாம்முஸ்னிய்யைப்போல் யாரும் கடப்பாயிருக்கவில்லை, ஷாபிஇய்யி றஹிமஹுல்லாவுடைய (கதீம்) ஆகிய சொல் (ஜதீது) ஆகிய சொல் சகலதையும் ஒரு * முகுத்தசர் கபீறு என்றும் முகுத்தசர் 0 சகீறு என்றும் இரண்டு கித்தாபுகோர்வை செய்திருக்கிறார்கள். அதனால் முஸ்லிமானவர்களெல்லாம் பிரயோசனம் பெறுகிறார்கள. (மன்சூறுபுனு உம்மாறு) றலியல்லாஹு அன்ஹு அந்தக் கித்தாபைத் துதித்து ஓர் பைத்துச் சொல்லுகிறார்கள். அதன்பொருளாகிறது, எனதிரு கண்ணும், என் காதும், இமாம் முஸ்னிய்யுடைய கித்தாபைக்காணக். கோர்வையா லழகானதைக்காணவும், கேட்கவுமில்லையென்று.

முஹம்மதுபுனு இஸ்ஹாக்குறஹிமஹுல்லா சொல்லக்கேட்டேன், என்கித்தாபை எட்டுத்தடவை கோர்வைசெய்தேன், அது முடிய இருபது வருடம் சென்றதென்றும், ஒருதரம் கோர்வை

* முகுத்தசர்-சுட்டுவெறுக்கம். !| கபீறு-பெரிது. 0 சகீறு-சிறிது.

செய்யத் தொடக்கும்போது, அதற்குமுன் மூன்றுநோன்பு படிப்பேன் இத்தனை (றக்அத்துத்) தொழுவேனென்றார்கள். இன்னுஞ் சொல்லுகிறார்கள், இஸ்லாமிலேபிரயோசனத்தாலும், பறக்கத்தாலுமிருந்த கித்தாபு இமாம் முஸ்னிய்யுடைய கித்தாபுபோல் நாமறியோமென்றும்.

அபுல் அப்பாஸிபுனு ஷுறைஹு றஹிமஹுல்லா சொல்லுகிறார்கள், நான் முஸ்னிய்யி இமாமுடைய முகுத்தசறு என்கிற கித்தாபைப் பார்வையிடுந்தோறெல்லாம், புதிது புதிதாக வொவ்வொரு பாயிதா வாய்த்துக்கொண்டேயிருந்ததென்று, அம்றுபுனு உதுமானுல் மக்கிய்யி றஹிமஹுல்லா சொல்லுகிறார்கள், நான் மக்கத்திலே தரிபாடாயிருப்பவர்களிலும், வருஷாவருஷம் ஹஜ்ஜுக்கு வருகிறவர்களிலும், நான் போய்ப் பார்த்த வூர்களிலும், இஸ்கந்தரிய்யாவிலு மற்றும் நாடுகளிலுமுள்ள இபாதத்துச் செய்யுந் தலங்களிலும், ஷாமிலும் இந்த முஸ்னிய்யைக் காணத் தெண்டிப்பிற் கடிசானவர்களையும், இபாதத்தில் நேமமானவர்களையும் இல்மையும், இல்முடையவர்களைச் சங்கிக்கிறதிலுமிருந்து சடிசானவர்களையும், தன்னுடைய நபுசின்பேரிற் கிட்டுமை செய்து மற்று மனுடருக்கு விஸ்தீனமாகக் கொடுக்கிறதிலும், இந்த இமாம் முஸ்னிய்யைப்போல் அதிகமுள்ளவரைக்காணவில்லையென்றும், தாங்கள் சொல்லிக்கொள்ளுகிறது, நான் இமாம் ஷாபிய்யி றஹிமஹுல்லாவுடைய எத்தனையோ வள்ளலான குணத்திலின்றும் நாமொரு குணத்துடையவனென்று.

யூசுபுபுனு அப்தில்அஹதில் குட்னிய்யி சொல்லுகிறார். நான் ஒரு மாரிகாலத்தில் இமாமுஸ்னிய்யி றஹிம்ஹுல்லாயிடமிருந்தேன். ஒரு இரவில் அவருக்குக் கண்வலி தொட்டது. அவர்கள் ஆததிலுள்ளது உலுவின்பேரில் உலுவைப் புதுப்பிவிக்கிறது அந்தக்கண் வலியுடனே ஒரு இரவில் எழுதடவை யுலுவைப் புதிப்பித்தார்கள். ஹாபிது அபூஅப்துல்லா சொல்லுகிறார் நான் அபூமுஹம்மது றஹிமஹுல்லா சொல்லும்படி கேட்டேன். முஸ்னிய்யி றஹிமஹுல்லாவாகிறது (வறஇலும், ஸுகுதிலும்) அந்நாளில் இருந்த இமாம்களில் மிகைத்தவர்களாயிருந்தார்கள். கோ



டையிலும் மாரியிலும் வெண்கலக் கூசில் நின்றுந்தான் தண்ணீர் குடிப்பதல்லால், அவ்வூரிற்புழங்கு மண்கூஜாவிலே தண்ணீர்குடிக்காதிருந்தார்கள், அதைத் தொட்டும் கேட்கப் பட்டபொழுது, இந்த வூர்க் குயவர்கள், சாணிகலந்து கூஜாச் செய்து பின்னர் சூளையில் வைப்பதால் நெருப்பு அதைத் துப்புரவாக்காதென்றார்கள், இன்னும், மிசுறுஜாமே ஆப்பள்ளியிலிருந்து நீலாற்றிற்குப் போய் உலுவைப் புதிப்பித்துக்கொண்டு வருவார்கள், அஃதிரண்டுக்குமிடையில் தலைதூரம் கொஞ்ச முண்டும்.

ஜம்ஷாதிய்யி றஹிமஹுல்லா சொல்லுகிறார்கள், இமாம் முஸ்னிய்யி றஹிமஹுல்லா எப்போதும் இமாம்ஜமாஅத்தாகவே தொழுவார்கள், எப்போதாவது, ஒருவேளை நீலாற்றுக்குப்போய் வருகிற தாமதத்திற் பள்ளியில் ஜமாஅத்துத்தொழுது தீர்ந்துபோனால், அந்தவக்துத்தொழுகையை யிருபத்தைந்து விடுத்தந்தொழுதுகொள்வார்கள் அபூயூசுபுல்குட்னிய்யி றஹிமஹுல்லா எத்தனையோ வருஷக்காலம், தங்கடப்பட்டவனுடையவணக்கமாக வணங்கினார்கள், (அதாவது) தண்ணீரில்லாமற் றங்கடப் பட்டவன் தண்ணீரைக் கண்டவுடன் எவ்வளவு சந்தோஷமாய்க் குடிப்பானோ அவ்விதம் வணக்கத்தின் பேரிற் சந்தோஷமாவார்களென்று.

முஸ்னிய்யி றஹிமஹுல்லா மிகுந்த சுன்னத்தானதொழுகையெல்லாம் தொழுவார்கள், ஓதுகிற பிள்ளைகள் அந்த நேரங்களில் ஒன்றுக்கொன்று ஹக்குக்களில் நல்லாகவிளங்கிக்கொள்ளவேண்டித் (தக்றாறு) செய்து இவர்கள் தொழுது தீருமளவும் வழிபார்த்துக்கொண்டிருப்பார்கள், இவ்விதம், நடக்கும் நாட்களில், ஓர் நாள் பிள்ளைகள் சொன்னார்கள், இமாமே நீங்கள் சுன்னத்தான தொழுகைகளை நீளமாக்கிறதைக் காண எங்களுக்கு (இல்மைப்) படித்துத் தந்தீர்களாகில், அதின் பிரயோசனம் அடையவளோந்திருக்குமேயென்று கைக்கினை செய்தபோது, மிகுந்த சுன்னத்தான வணக்கங்களை விட்டுவிட்டு இல்மைப் படித்துக் கொடுக்கிறதிலானார்கள், முஸ்னிய்யி றஹிமஹுல்லாவுடைய இல்முடைய பாரதூரத்தில் மிகுதமெல்லாம் உரையாக்கினால் உரைநீளுமென்று சுருக்கப்பட்டது.

அபுத்தய்யிபிபுனு சுலைமானில் மிசுரிய்யி சொன்னார்கள், முஸ்னிய்யி றஹிமஹுல்லா ஹிஜ்றத்து இருநாற்று அறுபத்துநாலாம் வருடம் வயது எண்பத்தேழில் வபாத்தாகினார்கள், அவர்கள் ஜனாசாவை அப்பாசுபுனு தைலூன் என்கிறவர்கள் இமாமாக நின்று தொழுவித்தார்கள், அபூமுகம்மது சொல்லுகிறார்கள், முகம்மதுபுனு றையானல் மிசுரிய்யி றஹிமஹுல்லா சொல்லக்கேட்டேன், அவர்கள் சொல்லுகிறார்கள், என்னுடைய மாமனார் இமாம் முஸ்னிய்யுடைய ஜனாசாவில் நின்று மீண்டுவந்து என்னைக் கூப்பிட்டுச் சொன்னார்கள், மகனே இன்று ஒரு புதுமைகண்டேன், அதாவது ஒரு வெள்ளை நிறங்கொண்ட பட்சி பறந்துவந்து முஸ்னிய்யி றஹிமஹுல்லாவுடைய ஜனாசாவின்பேரில் சிறகடித்துக்கொண்டு விழுந்து, தன்னுடைய றாஹைப் போக்கிக்கொண்டது, பின்னர் அதைக்காணப்படவில்லையென்றும், அது சிறகடித்துக்கொள்ளும் போது (றபீஉபுனு சுலைமான்) றஹிமஹுல்லா சொன்னார்கள் அந்தப் பட்சியைவிரட்டாதேயுங்கள், இவ்விதம் இந்தப்பட்சியைப்போலொரு பட்சியானதை (துன்னூனுல் மிசுரிய்யி) றஹிமஹுல்லாவுடைய ஜனாசாவிலும் கண்டோமென்றார்கள்.

## நாலாவது தில்மீதாகிறது.

இமாம்ஷாபிஇய்யி றலியல்லாஹு அன்குவுக்கு மிகுந்த கிதுமத்துச் செய்திருந்த றபீஉபுனு சுலைமான் றஹிமஹுல்லா வாகவிருக்கும்,

பைஹக்கிய்யி றஹிமஹுல்லா சொல்லுகிறார்கள் துன்யாவுடைய வெண் கோணங்களில் நின்றும் பலபல மனுடர்களும். றபீஉ றஹிமஹுல்லா இடத்தில் இமாம் ஷாபிஇய்யி றஹிமஹுல்லாவுடைய கித்தாபை யோதுகிறதற்காக வந்து வந்தோதிக்கொண்டு போவார்கள், சில ஹக்கும்களில் இமாம் ஷாபிஇய்யைத் தொட்டும் றிவாயத்துத் தப்பியிருந்தால், அந்தத் தலத்தில் இமாம் புவைத்திய்யைத் தொட்டும் பேசிவருவார்கள், அவர்களைத் தொட்டும் அதாவது).



றபீஉ றஹிமஹுல்லாவைத் தொட்டும், அசுஹாபுஸ்ஸுனனையுடைய அபூதாவூது நஸஇய்யி, இபுனு மாஜா, ஹதீது பேசிவந்திருக்கிறார்கள், திருமதீ றஹிமஹுல்லா றிவாயத்தும் செய்து இஜாஸாவும் பெற்றிருக்கிறார்கள், ஆனபோதே, ஹதீதில் பிரபலமான இமாம்கள், ஆறுபேரில், நாலுபேர் அவர்களுடைய தில்மீதாகிவிட்டார்கள், றபீஉ றஹிமஹுல்லாவுடைய மதுரசா மிசுறில் ஜாம்ஆப் பள்ளியில் இருந்ததென்றும். அவர்கள் ஹிஜ்றத்து ஒரு நூற்றெழுபத்து நாலாம் வருடம் பிறந்து இருநூற்றெழுபதாம் வருடம் சவ்வால் மாதம் வபாத்தானார்களென்றும் வருகிறது.

அபுல் ஹசனில் ஆசிமிய்யி றஹிமஹுல்லா சொல்லுகிறார்கள், றபீஉ றஹிமஹுல்லா இருநூற்று நாற்பதாம் வருடம் ஹஜ்ஜுக்காக மக்காவுக்கு வந்து அலிய்யில் ஸம்பருனிய்யி றஹிமஹுல்லாவைக்கண்டு ஒருவருக்கொருவர் சலாம் சொல்லிக்கொண்டு இல்மிற் பேசிக்கொண்டார்கள், உடனே, றபீஉ றஹிமஹுல்லா சொன்னார்கள், அபா அலிய்யே நீங்கள் (மஷ்ரிக்கில்) இருக்கிறீர்கள், நான் (மகுரிபில்) இருக்கிறேன் இமாம் ஷாபிஇய்யி றஹிமஹுல்லாவான நம்முடைய வுஸ்தாது அவர்களுடைய இல்மு தரிபட்டிருக்கிறதைப் பார்க்கவில்லையாவென்று புதுமையானார்கள்.

யூனுஸுபுனு அப்தில் அஃலா றஹிமஹுல்லா சொன்னார்கள், ஷாபிஇய்யி றஹிமஹுல்லா சொன்னதாக, எனக்கு இந்த றபீஉ (கிதுமத்துச்) செய்ததுபோல் ஒருவருஞ் செய்யவில்லையென்றும், இன்னும், அவர்பேரிலுள்ள சந்தோஷத்தாற் சொல்வார்கள் இல்மை வஜீபனம்போல் ஊட்டத் தரானி பெறுவேனேயானால், உமக்கு இல்மையெல்லாம் ஊட்டிவிடுவேனென்று ஆசிமிய்யி றஹிமஹுல்லா றபீஐத்தொட்டும் பேசிவருகிறார்கள், நான் ஷாபிஇய்யி றலியல்லாஹு அன்ஹு தங்களுடைய வீட்டுச் செலவுக்குச் சகல சாமானும் அவர்களுடைய முதலாற் செலவு செய்து கணக்கெழுதிக்கொள்வேன், ஒருபோது, அந்தக் கணக்கை யவர்களிடங் காட்டினதில், என்னிடம் இந்தப் பாரக்கைக்கொண்டு வாராதையுமென்றார்கள்.

முகம்மதுபுனு இஸ்ஹாக்கு றஹிமஹுல்லா சொல்லுகிறார்கள் றபீஉ றஹிமகுல்லா சொல்லுகிறதாய் நான் தாகித்திருந்தால் ஷாபிஇய்யி றலியல்லாஹு அன்ஹு என்னைப் பார்த்துக்கொண்டிருக்கத் தண்ணீர் குடியேனென்று அபூபக்ரிபுனு சஃதான் றஹிமஹுல்லா றபீஇத் தொட்டும் சொன்னார்கள், ஷாபிஇய்யி றலியல்லாஹு அன்ஹு என்னைப் பார்த்து றபீஉ மார்க்கத்திற் கேள்விகளுக்கு ஜவாபு சொல்லும், ஒருவரும் திருந்துகிறதில்லை (கத்தா)வாகியே யல்லால் ஆனதால், வெட்கப்படாதேயு மென்றார்கள்.

அப்பாசுபுனு யஃகூபு சொல்லுகிறார்கள், ஒருபோது, றபீ இடம் கேட்கப்பட்டது (குறுஆன்) படைப்பல்லவென்று நீர் சொன்னீராவென்று, உடனே மெய்தானென்றார்கள், இதில்(ஷக்கு) வைப்பதாரென்றும் சொல்லி இமாம் புவைத்திய்யி றஹிமஹுல்லா சொன்ன அத்தாட்சியைச் சொல்லிக் காட்டாக்கினார்கள், (ஈமான்) என்கிறது என்னவென்று கேட்கப்பட்டபோது, ஒரு சொல்லும், செயலுமென்றும் கூடும், குறையுமென்றும் சொன்னார்கள், அது சொல்லும் செயலு மென்றதற் கத்தாட்சியாகிறது, நபிஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் (தவாபு) செய்கிறநேரம் (ஈமானன்பிக்க வதஸ்தீக்கன் பிக்கித்தாபிக்க) உன்னைக்கொண்டு ஈமான் கொண்டதற்காயும், உன் வேதத்தை புண்மையாக்கி வைத்ததற்காயும் நான் தவாபு செய்தேனென்று சவாபென்னுஞ்செயலை ஈமானிற் சேர்க்கப்பட்டது, ஆனபோதே, அமலடங்கலும் ஈமானில் நின்றுமாயிருக்குமென்று சொன்னார்கள்.

## ஐந்தாவது தில்மீதாகிறது.

ஹறுமலத்துபுனு யஹ்யா றஹிமஹுல்லா அவர்களாயிருக்கும்.

அவர்கள் ஹிஜுறத்து ஒருநூற்றறுபத்தாறும் வருடம் பிறந்து, இருநூற்று நாற்பத்து மூன்றும் வருடம் வபாத்தானார்கள் இன்னும், இமாம் ஷாபிஇய்யி றலியல்லாஹு அன்ஹுவுடைய அசுஹாபுகளில் முந்தினவர்களில் நின்றுமாயிருக்கும், ஸுபுக்கி றஹிமஹுல்லா சொல்லுகிறார்கள், ஹறுமலத்து றஹிமஹுல்லாவாகிறவர்கள், இமாம் ஷாபிஇய்யி றலியல்லாஹு அன்ஹு இடமும்



(வகபு) இடமும் ஓதி றிவாயத்துச் செய்திருக்கிறார்கள், அவர்களிடத்தில் ஹதீதுக்கு இமாமாகிய (முஸ்லிமும், இபுனுமாஜாவும்,) இன்னும் அநேகம், பேர்களு மோதியிருக்கிறார்கள்.

## ஏழாம்பிரிவாகிறது.

ஷாபிஇய்யி இமாம் மதீனத்துக்கு இமாம் மாலிக்கு றலியல்லாஹு அன்குஇடம் போய், இல்மு படிக்கப்போனதிற்பேசுகிறதாயிருக்கும்.

பகுறுத்தீனுர் றாஸிய்யி றலியல்லாஹு அன்கு மிகுந்த வுலமாக்களிடம் இல்மைப் பிரயோசனம் பெற்றிருப்பதில்இமாமாலிக்கு றலியல்லாஹு அன்குஇட மிகுதிபெற்றிருக்கிறார்கள், மாலிக்கு றஹிமஹுல்லா நாபிஉ றலியல்லாஹு அன்கு இடத்தில், அவர்கள் றசூல்சல்லல்லாஹு அலைஹிவ சல்லமிடத்திற் பெற்றிருக்கிறார்கள், இதில், இமாம் றலியல்லாஹு அன்குவுக்கும், றசூல் சல்லல்லாஹு அலைகிவசல்லத்துக்கும் இடையில் மூன்று துயர்ச்சையாகுதே யல்லாமல் அதிகமில்லை.

ஷாபிஇய்யி றலியல்லாஹு அன்கு சொன்னார்கள், நான் துவர்க்கத்தில் பிக்குகுடைய இல்மை ஒதினது முசுலிமுபுனு காலிது றலியல்லாஹு அன்கு இடத்தில், பின்னர், மதீனத்தில் முசுலிமானவர்களுக்கு இமாமாகிய அனசுடைய குமாரர்மாலிக்குறலியல்லாஹு அன்கு இருக்கிறார்களென்று கேள்வியாகி அவர்களிடம் போய் இல்மு படிக்கவேண்டுமென்று நாடி மக்கத்தில் ஒருவருடம் நின்று அவர்கள் கோர்வைசெய்த (முவத்தா) என்னுங் கித்தாபைக் கேட்டு இரவலாக வாங்கி முகபாடமாய்ப் பாடமிட்டுக்கொண்டு பின்னர், மக்கத்தில் ஷரீபா யிருக்கு மனுடனிட மதீனத்து ஷரீபுக்கும், மாலிக்கு றலியல்லாஹு அன்குவுக்கும் இரண்டு கடுதாசி வாங்கிக்கொண்டு மக்காவை விட்டும் புறப்பட்டுமதீனத்துக்குப் போய்ச்சேர்ந்து ஷரீபிடம், அந்த ஷரீபுடைய காயிதத்தைக் கொடுத்தேன், மதீனத்து ஷரீபு எனக்கு உறவினுள்ளவர்தானென்று சொல்லி, அவர் அந்தக் கடுதாசியை வாசித்துப் பார்த்

துச் சொன்னார் (ஒசே) வாலிபரே மதீனத்துப் பூமியி னுள்ளாலே
தொடுத்து மக்காப் பூமியி னுள் வரையிலும் செருப்பில்லாமற்
கால் நடையாக நடந்து போறது எனக்கு மிகவும்லேசாயிருக்கும்
இந்த மாலிக்குடைய வாசலிற்போய் நிற்கிறதைப் பார்க்கிலும்என்
றும், நான் அவர் வீட்டின் வாசலிற் றரி படுவதைச் சின்னமாய்க்
காணவில்லை யென்றுஞ் சொன்னார்.

அப்போது, நான்சொன்னேன் தங்கள் யோசினைப் படி யவ்
விடஞ் சென்றீர்களாகில் இமாம் ஹாலி ருவார்களென்று, அவர்
சொன்னார், தூரம் தூரம் நானும் என்னுட னிருக்கும் சகலரும்
இந்த (அக்கீக்குடைய) மண்ணெல்லாம் எங்களைத் தொடும்படி
யாய் வாகனங்களில் ஏறி அவர் வீட்டின் வாசலிற் போய் நின்ற
னும், எங்களுக்காய்க் கதவைத் திறந்து எங்கள் ஹாஜத்தை நிறை
வேற்றி யனுப்புவா ரென நானறியவில்லை யென்று சொல்லிப்பின்
னர், வாகனத்திலேறினார், நாங்களெல்லாரும்துயர்ந்துபோனோம்
ஒருமனுடன் முந்திப் போய்க் கதவைத் தட்டினார், அப்போது,
ஒரு கறுத்த வெள்ளாட்டிவந்து கதவைத் திறந்தாள், அப்போது
(ஷரீபு) சொன்னார் (ஓய்) வெள்ளாட்டியே யுன்னுடைய நாயனாரி
டம் நான்வந்து நிற்கிறதா யறிவிப்பா யென்று அதைக்கேட்டுள்
ளேபோன வெள்ளாட்டி மிகுந்து தாமதித்துப் பின்னர், வந்து
என்னுடைய செய்தி சொல்லுகிறார்கள், நீங்கள் வந்தது மார்க்
கம்கேட்பதற்காயிருந்தால் உங்கள் கேள்வியை ஒரு துண்டிற்கு
றித்துத் தந்தால் உடனே ஜவாபுஎழுதித்தாறதாயும் வேறே காரி
யமாக இருந்தால் அவர்கள் வெளிக்கிட்டுவந்து மஜ்லிசிலிருக்கிற
நாள் உமக்குத் தெரியுமாம் அப்போதையிற் பேசிக்கொள்ளலா
மாம் என்றுசொன்னார்கள்.

உடனே (ஷரீபு) சொன்னார், என்னுடன் மக்கா(ஷரீபு)உடை
ய கடுதாசி யொன்றிருக்கிறது, அவர்கள் முகதாவிற் கொடுக்கவே
ணுமென்று சொல்லியனுப்பினார், பின்னர், அதை யவள்போய்ச்
சொன்னதில் அவள் கய்யி லொரு புட்டுவமுண்டாயிருக்கப் பிறப்
பட்டாள், அந்தப் புட்டு வத்தைப் போட்டாள், பின்னர், மாலிக்கு
றலியல்லாஹு அன்கு வந்திருந்தார்கள், அவர்களைப் பார்த்தால்
மிகுந்து பயங்கரத்தை யுடைய (ஷைகாக) உயர்ந்த மனுடராக



முக்காடு போட்டவர்களாக இருக்குறார்கள், (ஷரீபு) கொடுத்த
காகிதத்தை வாசித்ததில் இமாம் ஷாபிஇய்யி இன்னாரினியார் அவ
ருக்கு நல்லாக ஓதி கொடுக்க வேணுமென்றசமாசாரத்தைக்கண்
டவுடன கடுதாசியைக் கீழே வீசியெறிந்து விட்டுச் சொன்னார்கள்
(யாஸுபுஹானல்லா) றசூல் சல்லல்லாஹு அலைஹிவசல்லமு
டைய இல்மை மனுடருடைய சிபாரிசு கொண்டா தேடப்படு
மென்று சொன்னார்கள், அந்த (ஷரீபு) இமாமுடன் பேசிக்கொள்
ளப் பயபட்டார், உடனே, நான் முன்சென்று என்னுடைய ஹா
லையும், முறுதையும் அறிவித்தேன் என்னுடைய (கலாமைக் கேட்
டவுடன் எனமுகத்தை மிகுதிநேரம் பார்த்து வும்முடைய பே
ரென்ன வென்றார்கள், நான் முகம்மதென்றேன், பின்னர், சொ
ன்னார்கள், முகம்மதே அல்லாவைத் (தக்குவாச்) செய்துகொள்
ளும், பாவங்களைத் தவிர்ந்து கொள்ளும், உமக்குப் பாரதூரமான
சிறப்பும், காரியமுமுண்டாகுமென்றார்கள்.

(அபீஹாத்தம்) உடைய ரிவாயத்தில் வருகிறது, மாலிக்கு
றலியல்லாஹு அன்கு ஷாபிஇய்யி றலியல்லாஹு அன்குவைப்
பார்த்து அல்லாஹுத தஆலா வும்முடைய (கல்பில்) ஒளிவைப்
போட்டிருப்பதால்அதுபத்திப்பாய்க்கொண்டிருக்கிறது அதைப்
பாவஞ் செய்வது கொண்டு நூற்றுப்போடாதேய மென்றார்கள்.
பின்னர், ஷாபிஇய்யி றலியல்லாஹு அன்ஹுவுடைய சொல்லு
க்கு மிகவுந் தலைசாய்த்து ஒப்புகொண்டேன், பின்னர், நாளைவா
ரும் (முவத்தா) என்கிற கித்தாபை வாசிக்கிறதற்கு ஆளும், வரு
மென்றார்கள், நான் சொன்னேன் ஆள்வேணு மென்கிறதில்லை
நான் (முவத்தாவைப்)பாராமல்ஒதிபாடமாக்கியிருக்கிறேனென்
றேன், மற்ற நாள் காலைநேரமே போய்க் கித்தாபை யோதத்தொ
டுத்தேன், பின்னர், மிகுந்த நேரம் ஓதினேற் சடைவார்க ளென்ப
தைப் பயந்து ஓதலை நானிறுத்துந்தோ றெல்லாம் வாலிபரே இன்
னங்கொஞ்சம் வாசியும் என்றேசொல்வார்கள்.

என்னுடைய வாசிப்பைமிகவும் பிறியங் கொள்வார்கள், பின்
னர், சொற்ப நாளில் (முவத்தா) என்கிற கித்தாபை யோதி முடிக்

கும்படி அல்லாஹுத் தஆலா வுதவி செய்தான், மாலிக்கு றஹிம ஹுல்லா வபாத்தாகிற வரையிலும் நான் மதீனத்திலேதான் இருந்தேனென்றார்கள், ஹறுமலத்து றஹிமஹுல்லா பேசி வருகிறா கள், நான் இமாம் ஷாபிஇய்யி றலியல்லாஹு அன்கு சொல்லக் கேட்டேன், அவர்கள சொன்னார்கள், நான் பதின்மூன்று பராயத்தில் இமா மாலிக்கு றலியல்லாஹு அன்கு இடம்(முவத்தாவை) யோதிக்கொண்டிருக்கும் நாளில் அவர்களுக்கு என்பேரில் மிகவும் கிருபையும், சந்தோஷமு முண்டாகி யென்னிடம் ஒரு (மஸ்அலாக்) கேட்டார்கள், அதற்கு நான் ஜவாபு சொன்னேன், பின்னர், வேறே யொரு மஸ்அலாக் கேட்டார்கள், அதுக்கும், நான் ஜவாபு சொன்னேன், இவ்வித மூன்று மஸ்அலாக் கேட்டுமூன்றுக்கும் நான் ஜவாபு கொடுத்ததைப் பார்த்துச் சொன்னார்கள், நீர் காலீ வேலை பார்க்கத் தகுந்த (இல்மை) எத்திக்கொண்டீரென்று.

முகம்மதுபுனு அப்துல் ஹக்கம் சொன்னார்கள், ஷாபிஇய்யி றலியல்லாஹு அன்கு மாலிகு றலியல்லாஹு அன்குவுடைய சொல்லைப் பேசிவந்தால் இந்தச் சொல் நம்முடைய (உஸ்தாது) உடைய சொல்லென்று சங்கையாகச் சொல்லிக் கொள்வார்கள், யூனு சுபுனு அப்துல் அஃலா பேசி வருகிறார்கள், இமாம் ஷாபிஇய்யி றலியல்லாஹு அன்கு சொல்லக் கேட்டேன், பூமியில் மாலிக்கு இமாமுடைய (முவத்தா) என்கிற கித்தாபைக் காண கார்மானத்திலும், (துருஸ்திலும்) மிகவும் நேரான கித்தாபு கிடையாதென்று. இமாமிடம் மாலிக்கு இமாமைப் போல் இல்மிற் பாரதூரமானவர்களைக் கண்டீர்களா வென்றபோது, நாங்களெப்படிக் காண்போம் நமக்கு மூத்தமனுட ரெல்லாம் காண்கவில்லையென்று சொல்லும்போது என்றார்கள்.

ஹறுமலத் துபுனு யஹ்யா பேசி வருகிறார்கள், ஒருபோது, இமாம் ஷாபிஇய்யி றலியல்லாஹு அன்கு இடம் சொல்லிக்காட்டினேன் (ஹதீது) ஓதுகிறபிள்ளைகள் அதபில்லாமற் சிரிப்பும், வீண் பராக்குமா யிருக்குறார்களே யென்று. உடனே புதுமையாகி (யா சுப்ஹானல்லா) அவர்கள் சொல்லுகிற சொற்போல் நடப்புமிருக்குமாகில் சகலர்களும் (ஆகிறத்து) உலமாக்க ளாக ஆகிவிடுவார்க



ளென்று சொல்லிப் பின்னர், எங்களைப் பார்த்துச் சொன்னார்கள் நான் (குறுஆனும்) மற்றும் (நஹ்வு, சறுபு, ஹதீது, பிக்குகு) முதலிய பிரயோசனப் பட்ட (இல்மும்) ஓதிப்போ தெல்லாம் நீர் அவர்களிற் சொல்லிய (ஜபான) குற்றங்களைத் தவிர்ந்தேதான் ஓதினேன், என்கிலும், இமாமாலிக்கு றலியல்லாஹு அன்குவினிடம் வந்ததின் பிறகு (அதபும்) ஹுறுமத்தும்) அதிகமாச்சுது, அவர்கள் சமுகத்தி லிருக்கும் போது, கித்தாபிலே தாளைப்போடும் போது கூட மெள்ளச் சத்தங் கேளாமற் போடுவேனென்றார்கள்..

பதுலுத்தீனர் ருசிய்யி றஹிமஹுல்லா சொல்லுகிறார்கள், இமாம் மாலிக்கு றலியல்லாஹு அன்குவுடன் இமாம்ஷாபிஇய்யி றலியல்லாஹு அன்கு தீர்மான மான அதபுடையவர்களாகஇருக்க சில (ஹுக்கும்) களில், அவர்கள் சொல்லுக்கு மாற்றமா சொல்லவும், அது பெலக்கேடென்பதற்கு, அத்தாட்சி தேடி வந்தமுகாந்திரமென்ன, அதனால், மனம் நோவுண்டாகுதே யென்று கேட்கப் படுமானால், அதின் ஜவாபாகிறதும், முகாந்தரமாகிறதும்மென்னவேயானால் (உந்துலிசுப்) பட்டணத்தில், இமா மாலிக்கு றஹிம ஹுல்லாவுக் குடையவோர் தொப்பி யுண்டாயிருந்தது, அந்த, வூரில் நசல்,நோய்,வியாதிக்காரர் அந்தத்தொப்பியைப் பறக்கத்துக்காய்த்தலையிற்போட்டமாத்திரம்அல்லாஹுத்தஆலா ஷிபாதி பெருக்கும் சுவாத்திய மாக்கிறது, அந்தவூராருக்குறசூல்சலலல்லாஹு அலைகிவசல்லம் சொன்னார்க ளென்று சொல்லப் படுமாகில், அவர்கள் மாலிக்கு சொன்னார்களென்று சொல்லுகிறது ஆதத்தாய்) நடந்து வருவதை இமாம் ஷாபிஇய்யிறலியல்லாஹு அன்கு அறிந்து சொன்னார்கள், மாலிக்காகிறவர்கள், ஆதமிய்யாகிய மனுடரோ யல்லால் வேறில்லை, சிலநேரம் (சுத்தாவும்) வந்துவிடும் (நபிமாரில்) சுத்தா வராது என்று சொல்லி நான் இதைப் பொருத்தங் கெடுகிறேன், இதில் மார்க்கத்தைக் கைறு தேடுகிறேனென்றும் சொல்லிப் பின்னர், தான், ஹதீதுடைய பொருள்விளப்பத்தை வெளியாக்கத் தான் கித்தாபுகேர்வை யாக்கினமுகாந்தரமென்றார்கள்.

றபீஉ றஹிமஹுல்லா திருவுளமானார்கள், இமாம் ஷாபிஇய்யி றலியல்லாஹு அன்குவைத் தொட்டும் அவர்கள் சொன்னார்கள் நான் மிசுறுக்கு முன்னோக்கி வந்து அவ்விடத்தில் அனேகம்ஹதீதுகளைக் கண்டேன், அதில் இமாமாலிக்கு றலியல்லாஹு அன்குவுடைய கித்தாபுக்கு விகற்பமானது பதினாறு (ஹதீது)மட்டும் தான், அதில் (அசுலைச்) குறித்துப் பேசுவார்கள் (அசுலை) விட்டுவிடுவார்கள் வேறில்லையென்று.

பகுறுத்தீன் றஹிமஹுல்லாசொல்லுகிறார்கள்(அறஸ்தாதாலீஸு) என்று சொல்லப்பட்ட ஹக்கீமாகிறவர் (அபுலாதூனுல்க்கீம்) இடத்தில் நின்றும் அநேக (ஹிக்குமத்தைப்) படித்தாரானார், சில காரியங்களில் அவருக்கு விரோதித்துச் சில ஹிக்குமத்தை யுண்டுபண்ணினார், அப்போதுள்ளவர்கள் அவரிடம்விரோதித்துச் சொன்ன சங்கதியைத் தொட்டும்கேட்டதற்கு, அவர்சொன்ன ஜவாபாகிறது, என்னுடைய (உஸ்தாதும்)எனக்குஉண்மைத் தோழன் (ஹக்கென்று) சொல்லப்பட்ட நிஜமும், இவர்களிருவரும்ஓர்சங்கதியில் விரோதித்தார்களாகில் நிஜமென்று சொல்லப்பட்ட வுண்மைத்தோழனை முற்படுத்துதல் தான் வேண்டியதாயிருக்கும் மேலும், உஸ்தாதுடைய ஏவலும் நிஜத்தைத் தன்னுடைய சொல்லைக் காணமுற்படுத்தும்படிதானென்றார்கள்

(ஸுபுஹானல்லா) இமாம் அபூ ஹனீபாறலியல்லாஹுஅன்குவுடைய மனுக்கியிலும், இதுபோற்கொதத, சமாசார முற்றிவிட்டது. பைகச்கிய்யி றஹிமஹுல்லா பேசிவருகிறார்கள் இமாம்ஷாபிஇய்யி றலியல்லாஹு அன்குவாகிறவர்கள், இமாமாலிக்கு றலியல்லாஹு அன்குவுடைய சொல்லைச் சிலதில் விரோதித்துகித்தாபுக்கோர்வைசெய்யவும் மாலிக்கு மதகபுக் காரர்களிற் சிலபேர்கள், சுல்தானிடம்போய்ப் பலவிதமானசொற்களைச்சொல்லிஅவர் ஒப்புக்கொள்ளும்படி போதித்து ஊரைவிட்டும் ஷாபி இய்யைத்



தூரப்படுத்தும்படி திட்டம் செய்து போட்டார்கள், அந்தச் சுல்தானும் சம்மதித்திருக்கும்போது, இமாம் தாங்களும் (ஹாஷிமீ, குறைஷியின்) கோத்திரத்திலுள்ள சிலர்களும் இந்த ராஜாவிடம் சென்று மன்னிப்புத் தேடினதில் சம்மதியாமற் சொன்னார், அந்தக் கூட்டத்தார் பட்டணத்திலென்பேரில் (பித்துனவை) யுண்டு பண்ணிப் போடுகிற மனுடராயிருக்கிறார்கள், ஆகையாலுமக்கு மூன்று நாள் தவணையில் இந்த வூரைவிட்டும் அப்புறப்பட்டுப் போய்விடுமென்று மிகவும் கண்டிப்பான சொல்லாகச் சொல்லிப் போட்டார், அந்தப் பிரகாரம் சம்மதித்து வந்தபோது அன்று தொடுத்த மூன்றுநாள் இரவில் அந்த ராஜாவானவர் மவுத்தாகிப் போனார், அல்லாஹுத் தஆலா இமாமை அவர் தீங்கைவிட்டும் காத்துக்கொண்டான், (றலியல்லாஹு அன்ஹு வவக்கானு பிபறக்கத்திகி ஆபாதித்தாறைனி) பின்னர், மிசுறிலே தானே தரிபட்டிருந்து கல்க்குகளை நேர் வழிகாட்டி (ஹசதுக்) காரருடைய தீங்கைவிட்டும் அச்சமற்றிருந்தார்கள்.

றபீஉ றஹிமஹுல்லா சொல்லுகிறார்கள்,இமாம் ஷாபிஇய்யி றலியல்லாஹு அன்ஹுவாகிறது, இமாமாலிக்கு றலியல்லாஹு அன்ஹுவிடமிருந்து கித்தாபு ஓதிக்கொண்டிருக்கும்போது ஒரு மனுடன் இமாமாலிக்கு றலியல்லாஹு அன்ஹு இடம் வந்து முறையிட்டார் இமாமே நான் புறா வளர்த்து விற்கிறவன், அதைச் சத்தம் போடும்படி செய்து பழக்கிவித்துச் சீவனம் நடத்துகிறவன், இன்றையதினம், அவ்விதமான பழக்கத்துடைய புறாவொன்றை ஒருமனுடனுக்கு விற்றேன், அவர் வாங்கிக்கொண்டு போய், இப்போது வந்து நீர் சத்தம் போட்டுக் கூவிக்கொண்டிருக்குமென்று சொன்ன பிரகாரம் கூவாதிருந்திட்டதென்று சொன்னார், உடனே, நாங்களிருவரும் தர்க்கித்துக்கொண்டோம்,பின்னர் சொன்னபிரகாரம்ஓயாமற் கூவாதிருந்தால் என்பெண்சாதி தலாக்கென்றும்சொல்லிப்போட்டேன்என்றார் உடனேஇமாம்மாலிக்கு றலியல்லாஹு அன்ஹு சொன்னார்கள், மனுடனே உம்முடைய பெண்சாதி தலாக்காகிப் போனாளென்று இந்தச் சொல்லை அம்மனுடன் கேட்டுச் சலித்தவராய் வெழிக்கிட்டார், அந்நேரம், இமாம் ஷாபிஇய்யி றலியல்லாஹுத அன்ஹுவுக்குப் பதினான்கு

வயது நடக்கிறது, அப்போது அம்மனுடன் புறப்பட்டவுடன், ஷாபிஇய்யி றலியல்லாஹு அன்ஹுவும் புறப்பட்டுப் போய் அவரைக் கூப்பிட்டு மனுடனே அந்தப் புறுவான துகூவுகிறது அதிகமோ, கூவாதிருக்கிறது அதிகமோ வென்றார்கள், கூவுகிறதுதானதிகமென்றார்.

உடனே: இமாம் ஷாபிஇய்யி றலியல்லாஹு அன்ஹு சொன்னார்கள், உம்முடைய பெண்சாதி தலாக்காக மாட்டாளென்று சொல்லிவிட்டுப் பின்னர். மதுரசாவில் வந்து ஆளோடாளாக இருந்துகொண்டார்கள், பின்னர், அம்மனுடன் மீண்டு இமாம் மாலிக்கு றலியல்லாஹு அன்ஹு இடம் வந்து இமாமே என் காரியத்தில் நன்றுயோசித்துச் சொல்லவேண்டும் அல்லாஹுத் தஆலா வுங்களுக்கு அதிக தவாபைத் தருவானென்றார், அப்போது மாலிக்கு றலியல்லாஹு அன்ஹு உமக்கு ஜவாபு முன் சொன்னது தானென்றார்கள், அப்போது, அவர் சொன்னார் இமாமே அது தலாக்காகாதென்று சொல்லுகிறவர் உங்களுடைய மதுரசாவிலிருக்கிறாரென்றார், உடனே, அது, ஆரென்றுகேட்டதற்கு, இவர்தானென்று ஷாபிஇய்யைச் சயிக்கினை செய்தார், மாலிக்கு றலியல்லாஹு அன்ஹு இமாம் ஷாபிஇய்யி பேரிற் கோபமாகி உமக்கு எவ்விதம் இந்த ஜவாபு சொல்லும்படியாய் வந்ததென்று கேட்டதற்கு ஷாபிஇய்யி றலியல்லாஹு அன்ஹு சொன்னார்கள், நான் அவரிடம் அந்தப் புறுவானது கூவுகிறது மிகுதமோ வாய் மூடுதல் மிகுதமோவென்று கேட்டேன், கூவுகிறதுதான் மிகுதமென்றார், அதனாலேதான் அவ்விதம் தலாக்காகாதென்றேனென்றார்கள், உடனே மாலிக்கு றலியல்லாஹு அன்ஹு இந்த தலீல் மிகுந்த கெடுதியானது, அதின் கூவுதல் மிகுந்திருக்கிறதிலும் வாய் மூடல் சுருங்கி இருக்குறதிலும் ஏது தலீலிருக்குறதென்றார்கள் ஷாபிஇய்யி றலியல்லாகு அன்கு சொன்னார்கள் இமாமே தாங்கள் தானே, எனக்கு ஒரு ஹதீது சொன்னீர்கள் தாங்கள், அப்துல்லாஹிப்னியசீது. அன் அபீசல்மத் திப்னி அப்திர் றஹ்மானி அன் பாத்திமத்தி பிந்தி கைஸ் இவர்களைத்தொட்டும் பேசிவந்தீர்கள், அதாவது, கைசுடைய மகள் பாத்திமாவந்து நபியுல்லாவினிடம் சொன்னார்கள், அல்லாவுடைய றசூலே அபூஜஹ்மின் என்கிற அசுஹாபியும், மஆவியாவென்கிற அசுஹாபியுமென்



னைப் பெண்பேசிவந்திருக்கிறார்கள். அவர்களிருவரில் எவருக்கு நான் வாழ்க்கைப்படவென்று கேட்டதற்கு நபிசல்லல்லாஹு அலைஹிவசல்லம் சொன்னார்கள், பெண்பிள்ளையே நீ அறிந்துகொள் மஆவியாவாகிறவர் தன்னுடைய தண்டாயுதத்தைத் தன்றோளை விட்டுக் கீழே வைக்கமாட்டாரென்றார்களே, நபியுல்லாவுக்குத் திடனாகத் தெரியத்தான் செய்யும், அவருறங்கும்போதும், வஜீபனிக்கும் போதும் தோளிலே தண்டாயுதம் வைக்க மாட்டாரே, அது, ஆகத்திலுள்ளதல்லவே, அப்படியிருக்கத் தந்தோளைவிட்டும் கீழே வைக்கமாட்டாரென்று சொன்னதெல்லா மிகுதத்தைப் பற்றிச் சொன்னதாகிறது, அதுபோல், இந்தப் புறுவின் கூவுதல் மிகுதமாயிருப்பதால் அதுகொண்டுதான் ஹுக்குமல்லாது குறைந்ததைப் பார்க்கக்கூடாதென்றும், இந்த மனுடன் பெண்சாதி தலாக்காக மாட்டாளென்றும் விதித்தது சரிதானென்றும் சொன்னேனென்றார்கள். உடனே மாலிக்கு றலியல்லாஹு அன்ஹு இதைக் கேட்டு மிகுந்துபுதினமாகினார்கள். இதற்குப்பிற்பாடு ஷாபிஇய்யி றலியல்லாஹு அன்ஹுவுடைய சொல்லில் மாலிக்கு றலியல்லாஹு அன்ஹு யாதொரு குத்துப்பாடும் அறவே சொல்லவில்லை.

## எட்டாம் பிரிவாகிறது.

இமாம் ஷாபிஇய்யி றலியல்லாஹு அன்ஹு யமன் ராச்சியத்துக்குப்போனதும், பின்னர், அவ்விடத்தில்நின்றும் சிலருடைய கோள்களால் ஹாறான் றஷீதுடைய நாளில் விலங்கு போடப்பட்டவர்களாய் இறாக்கிராச்சியத்துக்குப்போகப்பட்டதும், அந்த ராஜாவின் மஜ்லிசில் நடந்த தற்சமும் ஆகிய, இவைகள் முதலான (சுஆல்,ஜவாபிலும்) பேசுகிறதாயிருக்கும். அதிற்பலபல (ரிவாயத்துகள்)உண்டாயிருப்பதில், அதின் கருத்தெல்லாமொன்றாய் முடிவதால், மூன்று ரிவாயத்தைமட்டும் பேசிவரப்படுகிறது.

இமாம்ஷாபிஇய்யி றலியல்லாஹு அன்ஹு திருவுளமானார்கள். நான் யமனிலிருந்து நலவான கருமத்தில் ஏவல்செய்து தீங்கான கருமத்தில் விலகல் செய்துகொண்டிருக்கும் நாளில் (ஹசதுக்)காரிற் சிலர் நம்மை யெவ்விதங் கொண்டாவது அகமடிப்பில்

விழுத்தாட்டுவதுக்குச் சருத்துக்கொண்டிருந்தார்கள். யமனிலிருக்கும் (ஸாதாத்துகளில்) யஹ்யபுனு அப்துல்லா இபுனில், ஹஸனிபுனில், ஹுஸைனிபுனி அலிய்யிபுனி, அபீத்தாலிபு றலியல்லாஹு அன்ஹும், அவர்களைச்சேர்ந்த சாதாத்துகளும் சிறப்புடையவர்களானபடியா லவர்களிடம் போக்குவரத்தாயிருந்தேன். யமனிலிருக்கும் (ஹம்மாதுல்பறுபரிய்யி)யென்று சொல்லப்பட்ட மனுடன் ஹாறூனுர் றஷீதுடைய வேலைபார்க்கும் அதிகாரியாயிருந்தார். அவருக்கு மனதில் இந்தச் சதாத்துகளைத்தொட்டும் பயங்கரமுண்டாகியே யிருக்கிறது. அதனால், இறாக்கி ராச்சியத்திலிருக்கும் ஹாறூனுர் றஷீதுக்குக் கோட் கடிதாசி யெழுதினர், அதின் கருத்தாவது.

இந்தச் சாதாத்துகள் தங்களுக்குத் தான் இராஜாங்கமும்(கிலாபத்து) முடையதென்று வழக்குச் சொல்லுகிறார்க ளென்றெழுதி, அக்கடிதத்திலேயே குறைஷிய்யில் நின்றுமொரு மனுடன் முகம்மதுபுனு இதிரீசிஷ் ஷாபிஇய்யி யென்கிறவரும், அவர் தமக்குடையதாய்ப் பேசுகிறாரென்றும், மற்றவர்களுக்கு ஆயுதங்கள் இரும்பிலுள்ள வாள்களாயிருந்தால் இவருக்குஆயுதமானது இவருடைய நாவாகவிருக்கிறது. இவரைப்பேசி வெல்வது அரிதாயிருக்குமென்றும், (ஹிஜாசுத்) தேசம் உம்முடைய கைவசமிருக்கநாடினால் அவர்களையும், இவரையும் பிடித்துத் தங்கள்சமுகம் கொண்டு நாடியதைச் செய்யவேண்டியதென் றெழுதினர். அந்தக் கடிதம் வந்தெத்தினவுடன் பாளையம் (யமன்) அளவில் அனுப்பி அந்தச் சாதாத்துகளையும், என்னையும் பிடித்து அரிகண்டங்கள் மாட்டிச் சுமந்துகொண்டு போகும்படி யேவினார்கள். அந்நேரம், என் கய்யில் நகமும், தலையில் ரோமமு மிகுதமுண்டா யிருந்ததைத் தலையிறக்கிக் கொள்ளவாவது இடம் தந்தார்க ளில்லையென்றுஞ் சொன்னார்கள்.

அப்துல்லாஹிபுனு முஹம்மதில் ஸலவிய்யி றஹிமஹுல்லா சொல்லுகிறார்கள், இமாம்ஷாபிஇய்யிறலியல்லாஹு அன்ஹுவை காலில்விலங்குமாட்டி இறாக்குக்குக் கொண்டுபோனது, ஹிஜ்றத்து ஒருநூற்று எண்பத்து நாலாம் வருடம், ஷவ்வால்மாதமென்று



முகத்தசி றஹிமஹுல்லா தம்முடைய தாரீகிற்சொல்லுகிறார்கள், ஹாறூனுர் றஷீதும் அவர் சகோதரர் (மூசல்ஹாதியும்)சாதாத்துமார்களைக் கொல்லுகிறதில் மிகவும் அபேட்சையுடையவராயிருந்தாரென்று மற்றும் ராஜாக்களைப் பார்க்கிலு மிகுதி அபேட்சையுடையவரென்றும், ஹாறூனு மரணகாலத்தில் நபிசல்லாஹு அலைஹிவசல்லத்தைத் தெரிசிக்கிற கியாமத்து நாளில் என்னுடைய வெட்கத்தின் பாரதூரதையென்ன சொல்லப்போகிறேனென்று சொல்லி மாணித்தாரென்று.

ஷாபிஇய்யி றலியல்லாஹு அன்கு சொன்னார்கள், எங்களை (இறாக்குக்குக்) கொண்டுபோய் ஹாறூனிடம் பத்துப்பத்துப்பேராக ஒரு இரவு நடுச்சாமத்தின் பிறகு, பகுதிவிக்கப் பட்டது, இவர்களில் ஒவ்வொருவராக நிறுத்தித் திரைக்கப் புறம் நின்று பேசி ஒவ்வொருவராகக் கழுத்தையறுத்துக்கொண்டுவரும்போது என்னளவிற் காரிய முடிவான பொழுதுநான் அமீறுல்முமினீனே இராஜாவே யுங்கள் (காதிமாகிய) இந்த அடிமை முகம்மதுபுனு இதிரீசிஷ் ஷாபிஇய்யி நிற்கிறேனென்று சொன்னேன், உடனே தலையாரியைக் கூப்பிட்டு என்னையும், வெட்டிப் போடசசொல்லிக் கட்டளை செய்து போட்டார், உடனே, சொன்னேன் இராஜாவே நீங்கள் நாடியதை நிறைவேற்றுதல் தப்பிப்போகாது, உம்முடைய கை விரிவை யுடையது, உம்முடைய சுல்தான் தனம் தயாரப்பட்டது, ஆகிலும், நான் ஒரு வார்த்தை சொல்லுகிறேன், அதைக் கேட்டுக் கொண்டு எதுவேனுஞ் செய்யுங்களென்று, அப்போது, அவ்விடங் கொஞ்சம் தாமதம் கிடைத்தது, உடனே, சொன்னேன் இந்தச் (சாதாத் துளவில்) நான் சேர்ந்து கொண்டு அவர்களுடைய ராஜாங்கத்தை யொப்பக்கொண்டு தங்கள் ராஜாங்கத்துக்குக் குத்துப்பாடுபேசி யிருப்பேனென்கிற சந்தேகம் உங்களுக்குத் தோற்றமானதுபோ லிருக்கிறது, ஆனால், அந்த சாதாத்துமாருக்கும், உமக்கும், என்னிடம் இருக்கும் உருத்தைக்குறித்து ஒருவுவமை சொல்லுகிறேன், அதற்கு மறுமொழி தாவேணும், அதாவது.

நீங்களும், குறைஷீ, அவர்களும்குறைஷிய்யீன், நானும்குறைஷீ ஒருமனுடனுக்குச் சித்தப்ப னுடைய இரண்டு மகனுண்டும்,

அதிலொருவர் அந்த மனுடனைத் தன்னுடன் சேர்த்துத் தன்னைப்போலெண்ணியவருடைய முதலை அவருடைய வுத்தாரமன்றித் தன்பேரில் ஹறாமாக்கியவர்மகளையும், அவருடைய வுத்தரவுகொண்டு கல்யாணஞ்செய்கிறவராயுமிருக்கிறார், மற்றவொருவர், அவரைத் தன்னைக்காணத் தாழ்வாகவெண்ணியவருடையமுதலைக்கொள்ளை முதல்போலெண்ணியவருடையமகளைத் தனக்கு வெள்ளாட்டி போலாக்கி (நிக்காஹு) இல்லாமல் (ஹலாலாக்கிக்) கொண்டிருக்கிறார், அவ்விதமாகவிருந்தால், ராஜாவே யிவர்களிருவரில் அந்த மனுடன் யாரளவிற்சாய்வார், யாருடைய வேலையைப் பார்ப்பார், இவ்விதமாகத்தான் இராஜாவே, உமக்கும்சாதாத்துகளுக்குமிடையில் நானிருப்பதென்றேன், இதை நல்லாகக் கேட்டுக்கொண்டு மடக்கியும், சொல்லச் சொன்னார் சொன்னேன், மூன்றுவிடுத்தமும்; கருத்தொன்றாகவும், சொல்வேறாகவும், சொன்னேன், இதைக்கேட்டுக் கொண்டு வெட்டுகிறதை நிற்பாட்டிச் சிறுகுற்றக் காரரைப், போடுகிறஜெயில் வீட்டில் என்னையும்போட்டுவைக்கும்படி கட்டளைசெய்தாரென்றார்கள்.

இன்னுமொரு ரிவாயத்தில் வருகிறது, ஷாபிஇய்யி றஹிமஹுல்லாவின இல்முடைய பாரதூரம் வெழியாகி மிகுந்தவுலமாக்கள் மஷாஇகுமார்கள் ஒப்புக்கொண்டிருக்கும் நாளில் இமாம் அபூ ஹனீபா றலியல்லாஹு அன்குடைய தில்மீதாகிய (காளீ) அபூயூசுபும், முகம்மதுபுனுல் ஹசனிஷ் ஷைபானிய்யும், மூஃத்தசிலாக்களிற் சிலரும், ஹாறூனுர் றஷீதிடத்திற் சங்கை பெற்றவர்களாயும், சொற் செல்லுகிறவாகளாயுமிருந்தார்கள், அவர்களிடத்தில் இமாம் ஷாபிஇய்யியானவர்கள். இமாம் அபூ ஹனீபாவுடைய சொல்லிற் சிலவற்றிற்குக் (கிலாபென்னும்) மாற்றம் சொல்லுகிறார்களென்று பிறஸ்தாபமாய்விட்டது, உடனே, அவர்கள் ஹாறூனிடம் யமன் ராச்சியத்தில் ஒரு மனுடன் (அலவிய்யாக) வெளியாகி இருக்குறாராம், அவரின்னொரின்னொருடன் சேர்ந்துகொண்டிருக்குறாரமென்று மூட்டினார்கள், உடனே, நடந்ததெல்லாம் நடந்ததென்றும் வருகிறது, அந்தச் சாதாத்துடன் இமாம்ஷாபிஇய்யும் இருக்கிராச்சியம் போய்ச்சேர்ந்து, நடந்து இமாம்ஜயிலி



லாவுடன் (காளீ) அபூயூசுபும், முகம்மது றஹிமஹுல்லாவும், ஹாறூனிடம்போய்ப் பேட்டியாகி ஹாறூனைப் பார்த்து வாழ்த்துகிறார்கள், பகைத்தவர் அளிச்சாட்டியகாரரான அடியாருடைய கழுத்துகளையெல்லாம் உமக்கடிபணியும் படிசெய்து, பட்டணங்களையெல்லாம் உமக்கிடம்பாடாக்கித் தந்த நாயனுக்கெல்லாப் புகழ்ச்சியும் இப்போது பிடிபட்ட அப்துல்லாகிபுனில்ஹசனுடைய கூட்டத்தில் மூகம்மதுபுனு இதிரீசு என்கிறவொரு மனுடன் அவர்களெல்லாருக்கும் பகரமாயிருப்பார், அவராலே யும்முடைய (கவுலத்துக்குக் தங்கடத்தைப் பயந்திருந்தேன், அவர் வயதுக்குத் தகுமல்லாத பேச்செல்லாம் பேசுவாராம், அல்லாஹுத்தஆலா யாதொரு பொல்லாங்கும் உமக்கு வாராமற் காப்பானாகவுமென்று பேச்சைமுடித்தார்.

பின்னர், றஷீதாகுறவர் (காளீ) அபூ யூசுபிடம் சொன்னார், இராஜாவே இந்த முகம்மது உண்மைசொன்னவராயிருக்குமென்றே, பின்னர், இமாம ஷாபிஇய்யி றலியல்லாஹு அன்ஹுவைக் கொண்டுவரும்படி கட்டளை செய்தார், உடனே, விலங்கு மாட்டப் பட்டவர்களாகவே கொண்டுவரப்பட்டது, அப்பொழுது, மூட்டிய கவுமுகளெல்லாம், இமாமை நன்றாகப்பார்த்துக்கொள்கிறார்கள், அவர்கள், இராஜன் சமுகம் எத்தினவுடன் (அஸ்ஸலாமு அலைக்கயா அமீறல் மூமினீன். வறஹ்மத்துல்லாகி வபறக்காதகுகு என்றார்கள்) அப்போது, ஹாறூனுர் றஷீது (வஅலைக் கஸ்ஸலாம் வறஹ்மத்துல்லாகி வபறக்காத்துது) என்று ஜவாபுசொல்லி ஷாபிஇய்யி வும்மை நிமுக்காட்டும்படி யேவப்படாத சுன்னத்தைத் தொடுத்தீர் நாம் விதிக்க (பறுலை) ஜவாபாக்கினோமென்று சொல்லினீர் நம்முடைய மஜிலிசில் நம்முடைய யேவலில்லாமற் பேசினது புதுமையிலுள்ளதாயிருக்குமென்றுஞ் சொன்னார்.

உடனே, இமாம் ஷாபிஇய்யி றலியல்லாஹு அன்ஹு (வஅதல்லா குல்லதீன) என்கிற ஆயத்தைஓதி நாயனைப் புகழ்ந்து நான் பயந்திருந்ததின் பின்னாலே அச்சந்தீர்த்து வித்தானென்றும், இன்னும், இராஜாவே எனக்குச் சமாசாரம் வந்தி

ருக்கிறது உங்களுடைய (சவுமைத்) தலையிற் போட்டுக்கொல்ல மாட்டார்களென்றும், எதுமொரு கண்ணழிவு தேடுகிறவர்களைப் பொய்யாக்கி வைக்கமாட்டார்களென்றும் அறிந்திருக்கிறேனென்றார்கள்; அப்போது ஹாறான் சொன்னார் உம்முடைய சாஹிபான அலவிய்யானவர் நம்மை விரோதித்து அளிச்சாட்டியஞ் செய்து அவருடன் சிலரெல்லாம் சேர்ந்துகொண்டு தாமும், அதில் தலைவராயிருந்த சமாசாரம் நமக்குத் துலாம்பரமாகப் படிப்படியாக வந்ததின் பின்னாலே உமக்கு என்ன (உத்று) சொல்லப் போகிறீரென்றார், அப்போது, இமாம் றலியல்லாஹு அன்ஹு சொன்னார்கள், என்னிடத்திற் சமாசாரங் கேட்டீர்களாகில் நீதம் போலே சொல்லுவேன், என்கிலும், இந்த விலங்குடைய கனத்தினாற் பழக்கம் பேசிக்கொள்வது வருத்தமாகிறது ஆகையால் விலங்கை வெட்டிவிடும்படி தயவுசெய்தால் உங்களுடைய பிதாக்களிடம், எங்களுடைய பிதாக்கள் சங்கைபெற்றுப் பேசிக்கொண்டதுபோல் நானும் பேசிக்கொள்வேன், அவ்விதஞ் செய்யாவிட்டால் உங்களுடைய கைமேலும், எங்களுடைய கைகீழுமாயிருக்கும் அல்லாவாகிறவன் சிமானாகவும் புகழப்பட்டவனாகவுமிருக்குமென்றார்கள், உடனே, ஹாறான் தம்முடைய பயலை விளித்து (சிருஜே) என்று கூப்பிட்டு இவருடைய விலங்கை வெட்டிவிடு என்று சொன்னார். அவன் அந்தப்படியே செய்தான்.

பின்னர், அவர்கள் விலங்கைவிட்டும் கழண்டவுடன் தங்கள் இருமுழங்காலின்பேரில் (பிஸ்மிக்காலில்) இருந்துகொண்டு இராஜாவே யென்னை அல்லாஹுத்தஆலா அலவிய்யாக்களிலுள்ள அப்துல்லாகிபுனுல் ஹசன் உடைய கொடியின் கீழாலே சேகரிப்பதாகிறது உங்களுக்கு விரோதம் செய்யும் காரிஜியான (குதுரிய்யிபுனுல் புஜ்அதுல்மாசினிய்யி) உடைய கொடியின் கீழாலே சேகரிப்பதைக்காண எனக்கு மிகவும் உவப்புத்தானென்றார்கள், உடனே, இராஜா சரிதானென்று ஏர்த்துக்கொண்டார், இந்தச் சொற்கொண்டு முந்தின முறிப்பினைப் பேச்சை மெதுவாக்கினார்கள், ஏனென்றால், குதுரிய்யின்பேரில் ராஜாவுக்கு மிகுந்த சினமுண்டும் ஒருவேளை அந்த முறிப்பினைக் காரர் இமாமைக்குதுரிய்யுடன் சேர்த்துப் பேசிமுடிப்புண்டாக்கி விடுகிறார்களோ வென்றுவருஞ் சந்தேகத்தினாலுள்ள பயங்கரம் அற்றது.



பின்னர், ஹாறான் இந்தச் சொல்லைக்கேட்டுச் சந்தோஷமாயிருந்துகொண்டு ஷாபிஇய்யே குறைஷிகள் அடங்கலும் இராஜாக்களாயிருக்கத் தகுமென்றும், நீரும் குறைஷியென்றும் சொல்வதாய்க் கேள்வியாயிருக்கிறோம், அதற்கத்தாட்சியென்னவென்றார். உடனே, இமாமவர்கள் குர்ஆன் ஆயத்தை யோதினார்கள். (அதன் கருத்து) ஒரு பாசிக்கானவன் ஓர் சமாசாரங் கொண்டுவந்தால் தீர்க்கவிளங்கித் தீர்ப்பு செய்யுங்கள், தீர்க்க விளங்காமற் செய்தாற் செய்த வேலையின்பேரிற் கைசேதப்படுவீர்களென்றது. இதைப் போதித்து நானவ்விதஞ் சொல்லாமல் அல்லாஹுத்தஆலா காத்துக்கொள்வானாகவும், அல்லாவினாணை கோட்சொன்னவன் பொய்சொன்னான், பாவியானான். அமீறுல்முஃமினீனே எனக்கு உங்களில் இஸ்லாமென்னும் சங்கையுடன் வங்குஷமென்னும் உருத்தும் உண்டாயிருக்கிறது. அல்லாஹுத்தஆலாவுடைய கட்டளையை யெடுத்து நடத்துகிறவரில் மிகவும் பாத்திரவாளியாயிருப்பது றசூல் சல்லல்லாஹு அலைஹிவசல்லமுடைய சிறிய தகப்பனார் மகனாகிய தாங்கள்தான், அவர்கள் தீனுக்கு இடங்கேடு வராமல் உம்மத்துகளுக்கு மரியாதையைக் காப்பாற்றி நடத்துகிறது தாங்கள்தானென்றார்கள், உடனே இராஜாவுடைய முகம் சமாளமாயினது. பின்னர் சொன்னார், ஷாபிஇய்யே யும்முடைய மனத்துட் பயங்கரம் நீங்கிச் சந்தோஷமாயிருமென்று சொன்னார், உம்முடைய வங்குஷத்தின் உரிமையையும், உம்முடைய இல்முடைய சங்கையையும் பேணுவோமென்றார்.

இன்னும், ஒரு ரிவாயத்தில் இமாமைப் பார்த்து ஹாறான் கேட்டார், உம்மில் அந்த மனுடர் சொன்னதுபோற் கிலாபத்திற் பிணங்க வேணுமென்று நாடியிருந்த அலவிய்யாவளவிற் சார்தலாக விருக்கக் கருத்துண்டா யிருந்ததோ இல்லையோவென்று கேட்டிருந்தபோது சொல்வார்கள். இராஜாவே பூமியில் ஒரு அலவிய்யாகுதல் தன்னைக்காண மற்றவரைக் கீழாக வெண்ணுகிருப்பவருண்டோ, அவ்விதம் எண்ணுகிறவர்களுடன், நான் சேர்ந்து என் (நபுசை)யவர்கள் தாழ்மையாக்கிக்கொள்ளும்படியேன்வருத்திக்கொள்வேனென்றார்கள், உடனே யேர்த்துக்கொண்டார்கள்.

ஹாறானூர் றஷீது இமாமைப்பார்த்து, நீர் குறுஆனில் யாது இல்
மு அறிவீர், குறுஆனைக்கொண்டுதான் கேள்வியில் துவக்கஞ்செய்
யவேணுமென்றூர். அப்போதுஇமாம்சொன்னூர்கள். அல்லாஹுத்
தஆலா குறுஆனையென்(கல்பில்)சேகரித்திருக்கிறான். குறுஆனில்
இல்மாகிறது கணக்கிலடங்காதிருக்கிறது, அதில்எது இல்மைத்தொ
ட்டுக்கேட்கிறீர்*நாசிகு! மன்சூகு என்பதைத்தொட்டுமா, அல்லது
0 முஹ்க்கம் :: முத்தஷாபிகு என்பதைத் தொட்டுமா, அல்லது,
அதில் ஹுக்கும் தரிபட்டு ஓதலே யுயர்த்தப்பட்டதா, அல்லது,
ஓதல் தரிபட்டு ஹுக்கும் உயர்த்தப்பட்டதா, அல்லது அதில்வ
ரும் உவமானங்களா, அல்லது உறுதிப்பாடுகளா, அல்லதுஆகமங்
களா, அல்லதுஹுக்கும்களா, அல்லது மக்கத்திலிறங்கிய ஆயத்து
களா, அல்லது மதீனததிலிறங்கிய ஆயத்துகளா, அல்லது இரவி
லிறங்கிய ஆயத்துகளா. அல்லது பகலிலிறங்கிய ஆயத்துகளா,
அல்லது சபரிலிறங்கிய ஆயத்துகளா, அல்லது ஊரிலிறங்கிய
ஆயத்துகளா. அல்லது சூறத்துகள், ஆயத்துகள், ஹறுபுகள், கலி
மாக்களுடைய யெண்ணமா, அல்லது இஃறுபுகளுடைய முகங்
களா, அல்லது ஓதல்களுடைய முகங்களா, அல்லது இவைபோற்
கொத்தவைகளால், எது இல்மைதொட்டும் கேட்கிறீரென்று
எழுபத்திமூன்று வகையை யெண்ணிக்கேட்டார்கள்.

அப்போது, இராஜா புதுமையாகி இத்தனை இல்மையும் ஒரு
மனுடன் பாடமாக்கிக்கொள்ள வேலுமோவென்றூர், அப்போது
இமாம் சொன்னூர்கள், இத்தனையும் பாடமாக்காதவனை (ஹாபிலு)
என்று சொல்லப்படுமோ வென்றூர்கள். அப்போது ஹாறான்
கேட்டார்கள், பாத்திஹாவில் எத்தனை (ஹறுபுகள்) என்று அப்
போது இமாம் கேட்டார் (பிஸ்மியைச்) சேர்த்தோ சேராமலோ
வென்று ஹாறான்சேராமலென்றூர். அப்போதுஇமாம்சொன்னூர்
கள், நூற்றிருபத்தெட்டு ஹறுபென்றூர்கள். உடனே ஹாறான்
தலையைக் கவிழ்ந்து சட்டைக்கைக்குள்ளே தன்கையைப் புகுத்து

* நாசிகு-மாற்றிவைத்தது ! மன்சூகு-மாற்றப்பட்டது. 0 முஹ்க்கம் மறு
பொருளுக் கிடமில்லாத்தது. :: முத்தஷாபிகு-பிசகுதலானது, அதாவது
ஈரருத்தமுள்ளது.



எண்ணிப் பார்த்துக்கொண்டது போலிருக்கிறது, பின்னர், ஹா
றான் ஷாபிஇய்யிடம் நீர் குறுஆனில் நின்றும் பாரதூரமான இல்
மையெல்லாம் பெற்றுக் கொண்டீரே, இவ்விதமான இடங்கேடு
உமக்கு ஏன் வந்ததென்று கேட்டார், அதற்கவர்கள், ஆலிம்பே
ரில் மூசிபத் தாகிறது பொன்னின்பேரில்நெருப்பைப்போல்அதை
யறவைக்க வைக்கயாற்றேறுமென்று சொன்றூர்கள்.

இன்னும். ஒருரிவாயத்தில் வருகிறது, கலா முல் லாவைத்
தொட்டும் உமமுடைய அறிவெப்படியென்றுகேட்டபோது, சொ
ன்னூர்கள், அல்லாவுடைய கலாமென்கிறதும்(கித்தாபுல்லா)வென்
கிறதும் நூற்றிநா லிருக்கிறது, அதில், ஆதம் அலைகிஸ்ஸலாமின்
பேரில் அன்பது, ஷீது அலைகிஸஸலாம்பேரில் இருபது, இதிரீசு
அலைகிஸ்ஸலாம்பேரில் இருபது, இபுறாஹீம் அலைகிஸ்ஸலாம் பே
ரிற் பத்து, ஆக இந்த நூற்றுடன்தௌறாத்து, இன்ஜீல், சபூறு,
புறுக்கான், ஆகஇவைகளில் எதைத் தொட்டும் கேட்கிறீ ரென்று
கேட்டதற்கு, அவாசொன்னூர், நான் கேட்டதெல்லாம் என்பாட்
டனூருடைய சிறிய தகப்பனின் குமாரரான முகம்மதுர்றசூலுல்
லாஹிசல்லல்லாஹு அலைகிவசல்லம் பேரில் இறக்கிவைக்கப்பட்ட
புறுக்கானைத்தொட்டும் தான் கேட்கிறேனென்று அதற் காகத்
தான் முன்குறித்த ஜவாபு நடந்ததென்று சொன்னூர்கள்.

அப்போது, றஷீது கேட்டார், றசூலுல்லாவுடையஹதீதைக்
கொண்டு நீரறிந்த அறிவெப்படி யென்று. அதற்கு,இமாம்சொன்
னூர்கள், அதில் நின்றும் (வாஜிபுடைய) முகத்தின்பேரில் வெளி
யானதை விடக்கூடாது, விலக்குடைய முகத்தின்பேரிற் வெளியா
னதைச் செய்யகூடாது தனதான முகத்தின்பேரில்வெளியானதை
அதில் ஆதலாத்தது கூட்டகாது,அடையவனைத்தலுடைய முகத்
தின்பேரில் வெளியானதில் அடங்கலும் நுழைந்திடும், இவ்விதம்,
மிகுந்த இல்மெல்லாம் சொன்னூர்கள், அப்போதிராஜா மிகவும்மெ
ய்ச்சிக்கொண்டார், பின்னர், இமாம் அல்லாஹுத் தஆலாவைப்
புகழ்ந்து அவனுடைய வரிசைக்கட்டளையினால் இந்த அறிவுபெற்
றேனென்றூர்கள், அதற்கு றஷீது, அறபுப்பாஷையில்உம்முடைய

இல்மு எப்படியென்றார், அப்போது, இமாம் சொன்னார்கள், நம்முடைய நாவு அதுகொண்டு வய்யாளி போடும், நம்முடைய குணகுணமே அதிலேதான் முந்தும்; குறுஆனே அதுகொண்டு (ஷாகிது) சொல்கிறது; அதின் கருத்தாகிறது, அல்லாஹுத் தஆலா திருவுளமாயிருக்குகிறான், நாம் ஒரு றசூலையாகுதல் அனுப்ப வில்லை அவருடைய கவுமுகளின் பாஷை கொண்டு பேசுகிறவ ராகவே யொழியவென்று. ஆனதினால், இராஜாவே நீரும் நானும், அந்தக் கவுமில் நின்றுமாயிருக்கும், மரத்தின் அடிமூடு மிருந்து பெலமுடையதாயும், கொப்பு அதற்கடுத்த தாயு மிருக்கும், நீர் அடிமூடும், நான் கொப்புமா யிருக்குமென்று சொன்னார்கள், அதுகேட்டவுடனே, றஷீது (பாறக்கல்லாஹு பீக்க) என்று அவர்கட்கு (துஆச் செய்தார்,) அதன் கருத்து அல்லாஹுத் தஆலாவுமக்கு பறக்கத்துச் செய்வானாகவு மென்றது.

பின்னர், றஷீது கேட்டார், பைத்துகளுடைய சட்டங்களை யறிவீரோவென்று அப்போது, சொன்னார்கள், ஜாகிலிய்யா நாளிலுள்ள பைத்தும், ஜாகிலிய்யாவும், இஸ்லாமுங் கலந்த வுடைது அஸ்வது போலொத்த *ஷாஇருக்களின் பைத்தும், அதில் தவீல் காமில், ஸரீஉ, முஜ்தத்து, பஸீத்து, கபீபு, றஜ்ஸு ஹஸ்ஜு இப்பேர்ப்பட்ட இராகங்களும். இதில் ஹிக்குமத்தும், நொடியும் உவமையிற் சொல்லப் படுகிறதும் சந்தோஷக் களரியிற் சொல்லுகிறதும். அனந்தோஷத்திற் சொல்லு மறுநிப்பாக் களும், தஃஸிய்யத்துச் செய்யும் பைத்துகளும், புகழ்ச்சிகளும், வங்கிஷங்களிற் சொல்லுகிறதும், மற்றும் பைத்துக ளடங்கலு மறிவே னென்று.

அப்போது, றஷீது இமாமைப்பார்த்துக் கேட்டார், ஷாபிஇய்யே ஹுக்குங்களைக் கொண்டு நீரறிந்த தெப்படியென்று. உடனே, இமாம் கேட்டார்கள். இபாதத்துகளிலுள்ள ஹுக்குங்களையோ, அல்லது வியாபாரத்தி லுள்ளதையோ அல்லது நிக்காஹு தலாக்கிலுள்ளதையோ, அல்லது அடிபிடி ஞாயந்தீர்ப்பு வஸீபுணங்கள், குடிப்புகள் இவைகளில் எதிலே சொல்லவேணுமென்று அப்போது றஷீது கேட்டார் நுஜூமுடைய இல்மு தெரியு

* ஷாஇருக்கள்-பைத்தென்னும் பாடல்களைப் பாடும் வித்துவான்கள்



மாவென்று, இமாம் தெரியுமென்று சொல்லிப் பின்னர், கேட்டார்கள், சுற்றியாடு மண்டலம், ஓடியடையும் நட்சேத்திரம். அதின் கூடுகள், கிரகங்கள், அதிலே தண்ணீரின் குணகுணமுள்ளது, அக்கினிக் குணகுண முள்ளது, அதனாற் கடலிலும், கரையிலும், குறிபபறியும் பெர்றிகள், உத்தம், குற்றம், வகுத்துகளை யறிகிறது, எதைக்கொட்டும் கேட்கிறீரென்று. பின்னர், றஷீது கேட்டார், உமக்கு வைத்தியம் தெரியுமாவென்று, அப்போது, இமாம் கேட்டார்கள், றாமிகள் சொல்லும் ஹுக்கமாக்களுடைய வைத்தியமா அறஸ்தா தாலீஸ், புகுறாத்து, ஜாலீனூஸு, கறுக்கூரியூஸு, அபந்தகுலீஸு, இவர்கள் போல், அல்லது, அறபிலுள்ள பரிகாரிகள், ஹிந்தியிலுள்ள பலாசியர்களும், பேசிவந்தார்களோ, அல்லது, பாரிசு தேசத்திலுள்ள ஹுமாசிபு, சாஹம்றது, பஸ்றஜம்கறு பேசிவந்ததா வென்றார்கள்.

பின்னர், றஷீது கேட்டார் பேரான அறபுக்கிளையாருடைய வங்குஷங்கள் தெரியுமாவென்றார், அதற்கிமாம சொன்னார்கள், அந்த அறிவை அறியாதிருக்க முடியாது, ஜாகிலிய்யாவுடைய காலத்தில் குபிர் அலைமோதிப் பின்னர், தீனுல் இஸ்லாம் வந்து அதின் இருளை நீக்கியிருப்பதிற் றலைமுறை யறிந்துகொள்வதும், இஸ்லாத்தில் இத்தனை தலைமுறை யாச்சுதென்பதும், ஒன்றுக்கொன்று சரிசமானம் பார்த்துக்கொள்ளுகிறதும், சிறப்பான வங்கிஷம் என்பதும் அல்லவென்பதும், அதனாற்றானே யறியப்படும். ஆகையால், அதை யறிந்துதானிருப்பேனென்பதில் இராஜாவே யுங்களுடைய சிறப்பான கோத்திரமும் என்னுடைய சிறப்பான கோத்திரமும் அறிவேனென்றார்கள் அதுகேட்டு றஷீது, எழுந்து இருந்துகொண்டு சந்தோஷமாக, இமாமைப் பார்த்து ஷாபிஇய்யே நீர் என்பார் வையிற் பந்தூரமானவராகி யென் (கல்பிற்) கிருபைக் குரித்தாகிவிட்டீர், ஆகையால், யாதொரு தாமசமன்றி முன்பின் யோசிக்காமல் எனக்கு உபதேசம் சொல்லுமென்றார், அப்போது இமாம் சொன்னார்கள், அதற்குச் சில (ஷறுத்துகள்) செய்யவேணுமென்று அப்போ, றஷீது, அஃதென்ன ஷறுத்தென்று கேட்டார், இமாம் சொன்னார்கள், பெருமைத்தனமென்னும் பரிவட்டத்தை உம்முடைய தோளைவிட்டும்

இறக்கி அமளியையும், வெட்கத்தையும் எடுத்தெறிந்து உபதேசத்தைப் பரிதாய்க்கண்டு, உம்மில் நடந்த பாவதோஷத்தை மனதுக்குள் ளாராய்ந்து (நபுசை) ஆண்டவன் சமூகத்திலே தாழ்மையான மிஸ்கீனை வாக்கிக் கொள்ளவேணும், ஆக இம்மாத்திரமும் ஒப்புக்கொண்டு செய்வீராகில் (நசீஹத்துச்) சொல்வே னென்றார்கள்.

அதுகேட்டு, உடனே றஷீது, அவ்விதமே சம்மதியானேன் நசீஹத்துச் சொல்லுமென்றார் (ஸுபுஹானல்லா) உடனே நாகரீகமாகச் சில (வஃலுகள்) சொல்லுகிறார்கள், அதைக்கேட்டால், கல்லைப்போலுறைந்த கல்புமு உருகிப் பாகாக வோடிப்போகும், கண்ணாலே போடும் கண்ணீருக்குப் பகரமாய் இரத்தத்தையோட்டவேண்டியதாய்வரும், துன்யாவின் இராஜாங்கமும்(தௌலத்தும மேலெண்ணமும்) கண்ணைவிட்டு மறைந்து, ஆகிறத்தின் அமளியும், மஹ்ஷறின் பலபல தொல்லைகளும், துன்பங்களும், கண்ணின் முன்பாய்த் தெரிந்து (மலிக்குல்முலூக்கு ஷதீதுல் இக்காபாகிய) வம்பரையெல்லாம் இராஜாக்களையெல்லாம் அடக்கி யாளும் ஆண்டவன் (ஜல்ல ஜலாலுஹு)சமூகத்தில் முன்னெற்றி ரோமத்திற் காலைப்பிழுத்துக் கட்டிப் பார்வைகளெல்லாம் ஹறச் சொருகினதாய் நிற்பதைத் தோற்ற வாக்கிக் கொள்ளுமென்றும், இன்னும், அனேக வஃலுகளும் சொன்னார்கள்.

அதுகேட்டவுடனே ஹாறூன் சத்தமபோட்டழுதார், அப்போது, அவ்விடமிருக்கும் வன்னெஞ்சுடைய (ஷாமாஷிகளிற்) சிலர் இமாமைப்பார்த்து நீர் வாயை மூடுமென்றார்கள், இராஜாவுடனே யவர்களைக் கோபித்து இமாமை வஃலு சொல்லும்படி தேடினார், இமாமவர்களைத் திரும்பிப்பார்த்து, ஓய், அனியாயத்தின் அடிமைகளே, அளிந்து, இறந்து, உக்கிப்போகும் துன்யாவென்னுங் கூளத்துக்காய் அடிமைப்படு, என்றைக்குந்தரிபாடுள்ள ஆகிறத்தை மறக்குமானுடரே யுங்களுக்கு முன்னிருந்த இராஜாவெங்கே, அன்யாயகாரரெங்கே, யவர்கட்குதவி யானவர்களெங்கே யென்று மட்டிலடங்காத வஃலுகளெல்லாம்சொல்லிஇராஜாவைப்



பார்த்துச்சொன்னார்கள், அறிந்திரும் பத்துப்பேருக்காவது, ஒருவன் தலைமையாயிருந்து அவர்கள்காரியத்தில்முதாண்மையாயிருந்தவன் கியாமனாளில் அல்லாஹுத் தஆலாவுடைய சமூகத்தில் வருவான், அவனிரண்டு கையையும் கழுத்திற்சேர்த்து மாட்டியிருக்கும், அவன் துனியாவிற் செய்திருந்த நீதமேயல்லாது ஒருவஸ்தும் அந்தத் தளையை யவிழ்த்து மீட்டாதென்று வருவதால் நீதமாய் நடந்துகொள்ளு மென்றார்கள்.

இவ்விடத்தில்ஹாறூனுடைய அழுகை மிகவும் கடிசாயினது உடனேயவர் இமாமை யெதிர்த்துச் சொன்னார் உம்முடைய நாவெங்கிறவாளை யென்கல்பென்னும் சரீரத்தில் நடத்திக் கண்டங் கண்டமாக்கிவைத்தீர், அல்லாஹுத் தஆலாவும்முடையஇல்மைக் கொண்டு முஸ்லிமானவர்களுக்குப் பிரயோசனஞ்செய்வானாகவும், ஷாபிஇய்யே எனக்கு ஈடுமீட்சிக்கி வழிசொல்லித்தாருமென்றார், உடனே இமாம் சொன்னார்கள். இனிமேல் மக்கா மதீனாவுடைய (ஹறத்தைப்) பரிபாரஞ்செய்து பாதைகளில் யாவர்களும் அச்சமற்றிருக்கும்படி செய்து சில்லறை இராஜாக்கள், மணியக்காரர் ஒருவரும் ஒருவனையும் அன்யாயங்கள் செய்யவிடாமற் கட்டளை செய்து அந்தந்தஹக்காளிகளுக்கு அவரவர் ஹக்கைச்சேர்ப்பித்துக் கொள்ளைமுதலில் முஹாஜிரீன்கள், அன்சாரீன்களுடையபிள்ளைகளுக்கு அவரவர் உருத்தானதுபோற் கொடுத்து தீனுக் குதவியாக நடந்து ஏவப்பட்டதை யெடுத்து, விலக்கப்பட்டதைத் தவிர்ந்துவருவீராகவென்றார்கள்.

இந்தரிவாயத்தைப் பேசிவந்தவர் சொல்லுகிறார், நான்(காழீ) முஹம்மதுபுனு யூசுபு றஹிமஹுல்லாவுடைய முகத்தைப் பார்த்தேன், அவர்பேதலித்தவராகஇருந்தாரென்று, ஹாறூன் இமாமைப் பார்த்து, நானுமக்கு நன்கொடைசெய்கிறேனென்றார், உடனே அல்லாவினாணை நானொப்புக்கொள்ளேன். நான் பணத்துக்காகப் வஃலை விற்றுக் கியாமத்திலென்முகத்திற் கரியைப் பூசிக்கொள்ள நாடவில்லை யென்றும், நான் அல்லாவுக்கு வார்த்தைப்பாடு செய்திருக்கிறேன் பெருமையடிக்கும் எந்தஇராஜாவுக்கும் வஃலு சொல்லி நேருணர்ச்சை பூட்டுவேனென்றும், அறுதி செய்திருக்

கிறேனென்றும் சொல்லியுத்தரவு பெற்று வெளியிற் போய்விட்டார்கள்.

இந்த ரிவாயத்தைப் பேசிவருகிற அமாறத்துப்னு, ஸய்து றஹிமஹுல்லா வென்கிறவர்கள் சொல்லுகிறார்கள். இமாம் ஷாபிஇய்யி றலியல்லாஹு அன்ஹு இராஜாவின் மஜ்லிசிலிருந்து வெளிக்கிட்டவுடன் இராஜா (காலீ) அபூயூசுபையும், மூஹம்மதையும் பார்த்து நீங்களிருவரும் பெரும்பிழை செய்தீர்கள். இப்பேர்ப்பட்டவர்களைக் கொண்டா எனக்கு அபேட்சை மூட்டி விலங்கு போடும்படியாயும், மற்றவைகள் நடத்தும்படியாயும் செய்தீர்களென்று கோபித்துக்கொண்டார்கள்.

அமாறத்து றஹிமஹுல்லா சொன்னார்கள், மறுதடவையில் இமாம் றலியல்லாஹு அன்ஹு இராஜாவிடம்வந்து புகுந்தார்கள், உடனேயவர்களுக்கு மிகுதமெல்லா மரியாதைசெய்து எந்த நாளும் வரத்துப்போக்கா யிருக்கும்படி வேண்டுதல்செய்தார், பின்னர், ஷாபிஇய்யே யுமக்குத் தேவையானது சொல்லுமென்றார், இமாம் சொன்னார்கள், எனக்கு யாதொன்றும் தேவையில்லையென்கிலும், மிசுறி லிருக்கப்பட்டவர்களில் றசூலுல்லாவுடைய பிச்சளத்தார் உண்டாயிருக்குறார்கள். அவர்கட்குக் கிடைக்க வேண்டிய ஹக்குகளைக் கொடுக்கும்படி யுத்தரவு செய்யவேணுமென்றார்கள். உடனே யந்தப்பிரகாரம் கடுதாசி யனுப்பியவர்களுக்குடைய ஹக்கையுடனே கொடுக்கக் கட்டளைசெய்து போட்டார், பின்னர் இமாம் சொந்தத்துக்காய் ஐம்பதினாயிரம் வெள்ளிக்காசு கொடுக்கக் கட்டளைசெய்து அந்தப்பணத்தை மனுடர் தலையிற் சுமத்திக்கொண்டுபோய் இமாமிருக்கப்பட்ட மஜ்லிசில் வைக்கப்பட்டவுடன் அதில்நின்றும் ஒவ்வொரு பிடியாக அள்ளி யள்ளி அவ்விடமுள்ள புக்கறு, மசாக்கீன்களுக்குக் கொடுத்துவிட்டார்கள், அதில்நின்றும் மிஞ்சினஒருபிடியைப் பணங்கொண்டுபோய் ஒப்பிவித்த ஸிறுஜு என்கிற இராஜாவின் காதிமானவனைப் பார்த்து உனக்கு ஹாஜத்துண்டாகியிருந்தா லிதையெடுத்துக் கொள்ளென்று, கொடுத்துவிட்டு தங்கள் வீடுதிக்கி யதில் நின்றும் ஒருசல்லியளவிலாவது கொண்டுபோகவில்லை, பின்னர்





குறித்த சிறுஜு என்கிறவர் ஹாறூனிடம்போய் நடந்த வரலாற்றைத் தெரியப் படுத்தினபோது, புதுமையாகிச் சொன்னார் இந்த முத்தலிபுடைய மக்கள் சிறப்பிலும், கொடையிலும் நபிசல்லல்லாஹு அலைஹிவசல்லத்தைப் பிரியமாட்டார்களென்று. (பாயிதா) ஹாறூனுர் றஷீதுடைய காவற்காரராயிருந்த (புலைறுபுனுறபீஉ) சொல்லுகிறார். நான் இமாம் ஷாபிஇய்யுடைய அக்குலுக்கும், நாகரீகத்துக்கும் அவர்களை மிகவும் உவந்திருந்தேன், அவர்கள்பேரில் ஹாறூனுர் றஷீது மிகவுங் கோபமாகக்கொண்டு வரும்படி கட்டளை செய்து அரண்மனையிற் கொண்டுபோகும்போது, அவர்களுதடு உசும்பிக்கொண் டிருந்தது, பின்னர், அஃதென்ன சபபென்று கேட்டேன், அவர்கள் சொன்னார்கள், இந்த ஹாறூனுர் றஷீதுடைய தங்கடத்தைப் பயந்து சிலஓதல் ஓதினேன், அதனால் அல்லாஹுத்தஆலா அவர் கோபத்தை ஆற்றி அவர் ஷர்றென்னும் தீங்கைக் காத்தானென்று பின்னர் அதை எனக்குப் படித்துத் தரும்படி கேட்டேன் படித்துத் தந்தார்கள், அந்த ஓதலாகிறது, அறபு வாக்கியமா யிருப்பதால் இப்பாஷையில் எழுதினால் உச்சரிப்புச் சரிவராதென்று விடப்பட்டன அவ்வோதலை அறிய வேண்டில் இப்புத்தகத்திற்கு அசுலாகிய அறபுத் தமிழால் கீளக்கரையில் வாசஞ்செய்யும் (செய்குனா வவுஸ்தாதுனா வமுறுஷிதுனா) வாகிய மாப்பிள்ளை லெப்பை ஆலிம் என்னும் இயற் பெயருடைய செய்யிது முகம்மது லெப்பை ஆலிமுல் ஹாஜ்ஜில் ஹறமைனிஷ் ஷரீபைன் அவர்கள் அச்சிட்ட, (மஃறிபுல் மாவாஹிபு பீமனாகிபி வுலில் மதாஹிபு) என்கிற கித்தாபிற் இருநூற்றி இருபத்திரண்டாம் பக்கத்தில் ஹாஷியாவிற் பார்த்துக்கொள்ள வேண்டியது.

பகுறுத்தினூர் றுசீ றஹிமஹுல்லா சொல்லுகிறார்கள், இந்த துஆவை ஹதீதிலும் பேசிவரப்பட்டிருக்கிறதென்று ஹசன் றஹிமஹுல்லா சொல்லுகிறார்கள் நான் ஒரு சபரிலிருந்தேன் அதில் கள்ளரிற் பாதைவெட்டி முறிக்கும் கள்ளரால் கடினமான பயங்கரமுண்டாகியிருந்தது அப்போது நான் இந்த துஆவை ஓதினேன் அல்லாஹுத்தஆலா என்னை அவர்களுடைய தங்கடத்தைவிட்டும் காப்பாத்தினானென்று இன்னும் நசுஹத்துல் மஜாலிசு

என்குற கித்தாபிற் சொல்லுகிறார்கள் இமாம் ஷாபிஇய்யி றலியல்லாகு அன்கு திருவுளமானதாக ஒருவனுக்கு ஏதுமொரு வியாகம் அல்லது வியாதி உண்டாகியிருந்தால் உறங்கி விழித்தவுடன் (வபில் ஹக்கி அன்சல்னகு வபில்ஹக்கி நசல்) என்று நான்கு விடுத்தம் ஓதினால் அந்த இரண்டு துன்பத்தையும் அல்லாஹுத்தஆலா நீக்குவானென்று.

## ஒன்பதாம் பிரிவாகிறது.

இமாமுக்கும்,காலீ முகம்மதுபுனுல் ஹசனுக்கும் இடையில் நடந்த தற்கங்களிற் பேசுகிறதா யிருக்கும், அதில், மிகுந்த, ஹிக்காயத்துகளுண்டும், அதில், நின்றும் சிலதைப் பேசுகிறதா யிருக்கும்.

## முதலாம் ஹிக்காயத்தாகிறது.

இமாம் ஷாபிஇய்யி றஹிமஹுல்லா சொல்லுகிறார்கள்,நான் ஜெயில் வீட்டி லிருக்கும்போது மன திடைஞ்சலாலே யாராகிலு மோர் மனுடருண்டாகி யிருந்தால் அவர்களைக்கொண்டு மருவுதல் பெறலாமென் றிருக்கும்போது, (காலீ) முகம்மதுபுனுல் ஹசன் றஹிமஹுல்லா வரத்துப்போக்காயிருந்தார்கள், நானும் அவர்களுடைய இல்முக்காக அவர்களளவிற் சார்ந்தவனா யிருப்பதுடன் சுல்தான் ஹாறானிடம் எனக்குச் சிபாரிசுசொல்லி விடுதல் செய்யவும் போதுமென்றே நம்பி யிருந்தேன், அவ்விதம் நடந்துவருங் காலம், ஒருநாளையில்: என்னிடம் வந்து மதீனத்தைப் பழித்து அதிலிருக்கிற வர்களைத் தாழ்த்திப் பேசுகிறார், தம்முடைய அசுஹாபிகளையுயர்த்துகிறார்,இன்னமும்,தான் மதீனததாரைத் தாழ்த்தி யொரு கித்தாபு கோர்வை செய்திருக்குறதாயும்,அந்தக் கித்தாபில் ஒரு ஹறுபிலாவது ஒருவர் பிழை சொன்னாற் சொன்னவர்களெவ்வளவு தூரத்திலிருந்தபோதிலும் ஒட்டகையிலேறி யவர்களிடம் போய்த் தற்கிப்பேனென்று சொல்லுகிறதாயும், இதனால், (முஹாஜிரீன், அன்சாரீன்களுடைய)மக்களின் முகமெல்லாம் வாடிப் போய்த் தம்முடைய அசுஹாபியுடைய முகமெல்லாம் சமாளமலா ந் திருக்கிறதென்றும் கேள்வி யாகிறேன், என்னுடைய



கருத்தில் இரண்டு எண்ணமுண்டாகிறது, அதாவது, மதீனத்தாருக்கு வர்த்துப்பேசி யிவருடன் தற்கித்து, அதனால் ராஜாவுடைய கோபத்தை இன்னமும்அதிகமாகும்படி செய்துக்கொள்ளுகிறதா அல்லதுமதீனத்தாரை யுவந்துபேசியதினால், அல்லாஹுத்தஆலாவுடைய பொருததத்தைத் தேடுகிறதாயென்று மனதில் யோசித்து, அல்லாவுடைய பொருத்தம்தான் வேணுமென்றுறுதிப் படுத்திக்கொண்டு, அவருக்கெதிர்ப்பிலிருந்துகொண்டேன். பின்னர்,

அபூஅப்தில்லாவே யென்று கூப்பிட்டுச் சொன்னேன், நீங்கள் மதீனத்தை வைது அதிலிருப்பவர்களைப் பழித்தீர்களே யதாவது நபியுல்லாவுடைய ஹறமாகவும் ஹிஜுறத்துடையவீடாகவும், வஹியிறங்கும்தலமாகவும், நபியுடைய சிறப்புப்பொருந்தியமேனியைப் பொதிந்ததாகவும் (தைபா)வென்றும் பேர்தங்கினதாகவும், இருக்கிறதுடனே. அதிலே சொர்க்கத்துப் பூங்காவனங்களில் நின்றும் ஒரு பூங்காவனமிருக்கிறதென்றும், ஹதீதில் வருகிறது. (தஜ்ஜாலும், தாஊன்) என்னும் வியாதியும், அதிற் புகுதாதென்றும், அதின் பொதும்புகளில் நின்றும் எல்லா வொவ்வொரு பொதும்பிலும் ஒவ்வொரு மலக்குகையில் வாட் பிடித்துக்கொண்டிருப்பாரென்றும், வருகிறதே, இவ்விதமான பட்டணத்தை யெவ்விதம் நீர் பழிககிறது, இன்னும் அந்தப் பட்டணத்தைக் கொண்டும், அதிலிருக்கிற மனுடரை நாடினதாய்ச் சொல்வீராகில் அவர்களில் நபியுடையமக்கள், பிச்சளத்தாரும், சம்மந்தத்திலுள்ள பிச்சளத்தாரும், முஹாஜிரீன, அன்சாரீன்கள் பிச்சளத்தாரும் அவர்கள் எவ்விதமானவர்களாகில் நபிக்கிவரப்பட்ட (வஹியைப்) பாடமிட்டு ஹதீதுகளை ஹிபுலாக்கி ஈமானை அடிவாரமாக்கிறவர்கள், அவர்களை யெவ்விதம் பழிக்கிறது. இன்னும், அவர்களில் நின்றும் ஒருவரை யாரையாவது நாடினீராகில், அது யாரென்று.

அப்போது சொன்னார்,நான் மாலிக்குபுனு அனஸைத்தானுடினேன்,வேறில்லையென்றார், உடனேயந்தக்கித்தாபைவாங்கிப்பார்த்துச்சொன்னேன். இந்தக்கித்தாபில்எழுபது தலத்தில்*(கத்தா)யிரு

* கத்தா-பிழை.

க்குதென்று அதில், மாலிக்கு றலியல்லாகு அன்கு சொன்னாரென்று
சொல்லாமல், மதீனத்தார் சொன்னார்களென்று சொல்லி மாலிக்கு
றலியல்லாகு அன்குவுக்குத்தானே தீர்ப்புச்செய்கிறசங்கதியிலொரு
சாட்சியும், ஒருசத்தியமுங் கொண்டுசெய்யலாமென்று சொன்ன
தை, அல்லாஹுத்தஆலா இரண்டு ஆண்பிள்ளைசாட்சியாகத்தேடச்
சொன்னதற்கு மாற்றமாய்ச் சொன்னாரென்று பழித்திருக்கிறது,
அப்போது இமாம் கேட்டார்கள் உம்முடைய பெண்பிள்ளை பிள்
ளைப்பெறுகிற சங்கதியில் மருத்துவச்சி யொருத்தியுடைய சாட்சி
போதுமென்றும், ஒரு சுவரில் இரண்டுபேர் வழக்கடித்து இரண்
டுபேரிடமும் சாட்சியில்லாதிருந்தால் அந்த மதில்கட்டுச் செங்
கல் எவருடைய மனையை அடுத்திருக்குதோ அவருக்குடையது
தான், அந்தச்சுவரென்றும், வீட்டுத் தட்டுமுட்டுச் சாமான்களிற்
புருஷன் பெண்சாதி யிருவரும் என்னுடையது, உன்னுடைய
தென்று பிணங்கினால் ஒருவருக்கும் சாட்சி யில்லாது போனாற்
பெண்பிள்ளைகளுக் கிணங்கிய சாமானைப் பெண்சாதிக்கும், ஆண்
பிள்ளைகளுக்கிணங்கிய சாமான்களைப் புருடனுக்கும் கொடுக்கப்
படுமென்றும், வீட்டிற் பதிக்கப்படும் சாமான்போற் கொத்ததிற்
கடையுடையானும், அதிற் குடியிருப்பவனும் பிணங்கி யொரு
வருக்கும் சாட்சி யில்லாவிட்டால், அது ஆணிபோட்டுத் தறைந்
து பதித்திருந்தாற் கடை யுடையக்காரனுக்கும், தறையா திருந்
தாற் குடியிருப்பவனுக்கும் கொடுக்கப்படுமென்றும், இவ்விதஞ்
சொல்லி யிருக்கிறீர்களே எங்களுடைய சாகிபு மாலிக்கு றஹிம
ஹுல்லா ஒருஷாகிதும், ஒரு சத்தியமும்கொண்டு தீர்ப்புச்செய்யப்
படுமென்று நபிசல்லல்லாஹு அலைஹிவசல்லமுடைய ஹதீதையும்
அலியுன்கர்றமல்லாஹு வஜ்கஹுவுடையசொல்லையும்பிடித்துச்
சொன்னதைப் பிழையாகச் சொன்னாரென்றும், அதனாலேதான்
அவர்களைத் தாழ்த்திப் பேசினேனென்றுஞ் சொன்னது மிகவும்
புதுமையாயிருப்பதுடன், பிழையாகவுமிருக்கிறது.

மேலும், உம்முடைய இந்தக்கித்தாயில் மதீனத்துடையவர்
சொன்னாரென்று மதீனத்தாரடங்கலையும் நாடுவீரானாலும், பிழை
யாகத்தானிருக்கும். ஏனென்றால் அவர்களடங்கலும் சொல்ல



வில்லை, அல்லது, மாலிக்கை மட்டும் நாடுவீராகில் அந்தச் சொல்
அவர்களை மட்டும் அறிவிய்யாது என்றும், இன்னும், அல்லாகுத்
தஆலா இரண்டு சாட்சியைத் தேடிக் கொள்ளச் சொன்ன ஏவல்
(பறுது) என்று சொல்வீராகில் நீர் எனத்துக்கு முந்திய ஹுக்
கும்கள் சகலதிலும் சாட்சி யில்லாமற் றீர்ப்பெழுதினீரென்று
கேட்டதில்.

முகம்மதுபுனுல் ஹசன் றஹிமஹுல்லா யாதொருஜவாபும்
சொல்லா திருந்து விட்டார்கள், இவ்விதம் நடந்து தீர்மான மான
வுடன் முகம்மது புனுல் ஹசன் றஹிமஹுல்லாவுடன் சேர்ந்த
வொரு மனுடன் அந்த மஜ்லிசிற்றானே யென்னிடம் கேட்டார்,
ஓர் மனுடன் இன்னொருமனுடன் வீட்டுக்குப் போய் அவன் தாரு
வைக் கல்லாலெறிந்து அதன் கண்ணைப் பழுதாக்கிப்போட்டால்
அவன்பேரில் விதித்ததென்ன வென்றார், நான்சொன்னேன் அது
பழுதில்லாதிருந்தபோதுள்ள விலையையும், பழுதாக்கின போது
பெறும் விலையையும் உத்தேசித்துக் கண்டயீவிற் பாதி யவன்பே
ரில் விதிக்குமென்றேன் ஒத்துக்கொண்டார், பின்னர், நான்கேட்
டேன், நீரும், உம்முடைய சாகிபாகிய முகம்மது புனுல்ஹசனும்
எனக்கு ஒருமஸ் அலாவில் ஜவாபு தரவேணுமென்று, அதாவது,
ஹஜ்ஜுக்கு இஹ்றாம் கட்டிய வொருவன், ஓர்பெண்பிள்ளையுடைய
அல்குலைப் பார்த்ததில், அவனுக்கு (மனீ) இறங்கி விட்டால் நடக்
கவேண்டியதென்ன வென்று கேட்டேன், உடனே, யந்த மனுட
னை முகம்மது புனுல் ஹசன் றஹமஹுல்லா கூப்பிட்டு அவரிடம்
ஒன்றும் கேளாதே யென்று நான் சொன்னதைத் தான் மறந்து
விட்டியா வென்றார்கள்.

இந்தத் தக்றாறுடைய மஜ்லிசில் நடந்த வரலாறு முழுதும்
ஹாறூன் இறாஜா இடம்போய்ப் பிறந்தது, அவருடனே சொன்
னார் முகம்மது புனுல் ஹசன் நபிசல்லல்லாஹு அலைகிவ சல்லம்
சொன்ன ஹதீதை யறியமாட்டார். அதாவது குறைஷியில் நின்
றும் ஒரு மனுடனுடைய புத்தியாகிறது மற்றவரில் இரண்டு பேரு
டைய புத்திக்கிச் சரியாகுமென்று சொல்லி ஒரு ஆட்பிடித்து
அனுப்பிச் சொல்லிவிட்டார், நாம் உம்மைத் தொட்டும் பொருந்

திக்கொள்வோம் எமன் ராச்சியத்துக்குத் தாம் காலியாயிருக்கப் பிறியப் படுகிறீரா வென்றுகேட்டனுப்பினர், இமாம் றலியல்லாஹு அன்கு எனக்குப் பிறியமில்லை என்று சொல்லிப் போட்டார்கள்.

பின்னர், சில ஹதியாக்க ளனுப்பினர், அவைகளை ஒப்புக்கொண்டு உடனே அடங்கலையும் நன்கொடை செய்து போட்டார்கள், பின்னர், ஹாறூனுர் றஷீது இமாமைச் சந்தித்தபோது, அல்லாஹுத் தஆலா என்னுடையகுடும்பத்தில்உம்மைப்போற்கொத்தவரைப் பலிக்கி வைப்பானாகவுமென்றார், மேற் கூறிய சஆலுக்குஜவாபு ஹஜ்ஜுமுறியாது.

## இரண்டாம் ஹிக்காயத் தாகிறது.

இமாறக் தபுனு ஸைதுசொல்லுகிறார், முந்தின மஜ்லிசில் நடந்த சங்கதியல்லாமல் இமாம் சொல்லுகிறார்கள், இன்னும்ஒருபோது, முகம்மது புனுல் ஹசன் றஹிமஹுல்லா வந்து இமாமைப்பார்த்து ஷாபிஇய்யே நான் (சஸ்புடைப) பாடத்திற் வம்பறியா யெடுத்த பொருளை யுடையக் காரன் தேடியபோதுகொடுப்பது வாஜிபென்று சொல்லியிருப்பதில் நீர் கிலாபு சொல்லுகிறீராமல்லோவென்று கேட்டு, வொரு மஸ்அலாக் கேட்டார், அதாவது, ஒரு மனுடன் ஒரு மனுடனிடம் வம்பறியாக வொரு தேக்குத் தடியைப் பறித்துத தன்வீட்டில் வைத்துக் கட்டியிருந்தான் பின்னர், உடையக் காரன் இரண்டு சாட்சிகொண்டு தன்னுடையதென்று ருஜுவாக்கினாற் தீர்ப்பென்ன சொல்வீரென்றார், நான் சொன்னேன் உடையக்காரனிடம் அதின் விலையைப் பொறுமதி போல் வாங்கிக்கொள்ளென்று சொல்வேன், அவன் சம்மதியாவிட்டால் அவன் கட்டிய வீட்டை யிடித்துஅந்தத்தடியைத்தானே யொப்பிவிக்கச சொல்வேனென்றேன் உடனே முகம்மது புனுல் ஹசன்கேட்டார்கள், றசூல் சல்லல்லாஹு அலைகிவசல்லம்(தீனில்) தங்கடமும் இல்லைத் தங்கடப் படுத்துகிறது மில்லை யென்றுதிருவுளமா யிருக்குறார்களே யென்று.



அப்போது, நான் சொன்னேன், இந்த வம்பறிக்காரன் தன்னைத் தான் தங்கடப் படுத்திக்கொண்டானென்று, பின்னர், கேட்டார், ஒருவன் ஒருவனிடம் பட்டு நூலை வம்பறியாய் எடுத்துக் கொண்டுபோனவன், பின்னாலே தன் வயிற்றில் ஓர் காயத்துக்காக வேண்டி அந்தப் பட்டு நூலினு லிளைபிடித்து மேவினபிறகு, அந்நூலை யுடையவன் வந்து தன்னுடைய நூலைத் தான் தரவேணுமென்றான், அப்போ தென்ன சொல்வீரென்றபோது, விலையைத் தான் கொடுக்கச் சொல்வேன் அல்லது, வேறில்லையென்றேன் உடனே யவரும், அவருடைய அசுஹாபியும் சொன்னார்கள், உம்முடைய முந்தினசொல்லை விட்டுவிட்டீரென்று, நான்சொன்னேன் தத்திரப் படாதையுங்களென்று. பின்னர், கேட்டார் ஷாபிஇய்யே யொரு மனுடன் ஒரு மனுடனிடம் ஒரு பலகையை வம்பறியா யெடுத்துத் தன்னுடைய கப்பலுள்ளடியில் வைத்துமுடித்துப்பின்னர், அந்தக் கப்பலி லெல்லாரும் ஏறி நடுக்கடலிலானபோது, பலகை யுடையான் தேடினாற் பலகையைத் தானே அந்நேரத்திற் கொடுக்கச் சொல்வீரோ வென்று கேட்டார், நானவ்விதஞ்சொல்லமாட்டேனென்றேன், உடனே (அல்லாஹு அக்குபர்) என்று தக்குபீறு சொல்லி யும்முடைய முந்தினசொல்லை விட்டுப்போட்டீரென்றார்.

பின்னர், நான கேட்டேன், அந்தநூல் தன்னுடைய சொந்தமானதாக இருந்தாற் றன்தன்னே யவன் வயிற்றை விட்டுநீக்கித் தன்னை நோவிக்கிறது ஆகுமோ, ஆகாதோ வென்றேன். ஆகாதென்றார், கப்பலிற் பலகையைத் தனக்குச் சொந்த மானதாக இருந்தால் அந்த நோத்தி லாகுமோ ஆகாதோவென்றேன், ஆகாதென்றார், அந்த வீட்டில் வைத்துக் கட்டிய தேக்குத் தடி தன்னுடைய சொந்த மாக விருந்தால், அந்த வீட்டை யிடித்து அந்தத் தடியை யெடுப்பது தனக்காகுமோ ஆகாதோவென்றேன், உடனே ஆகுமென்றார், அப்போது நான் சொன்னேன் அல்லா வுமக்கு றஹுமத்துச் செய்வானாகவும், ஆகுமா யிருப்பதை ஆகாதிருப்பதைக்கொண்டு எவ்விதம் ஒழுங்குபிடித்துச் சொல்வீரென்றேன் அதனை ஏர்த்துக் கொண்டார்கள்.

பின்னர் கேட்டார்கள் அந்தக் கப்பற் காரனுக்குத் தீர்ப்பென்ன சொல்வீரென்றார்கள் நான் சொன்னேன் கப்பல் ஓடிவந்ததானும் அதி லேறியவர்களும் ஹலாக்காகமாட்டார்களென்கிற துறையை யெத்தினபிறகு பலகையைக் களட்டிக்கொடுக்கத்தீர்ப்புச் செய்வேனென்றேன். பின்னர் நான் கேட்டேன் (அஷ்றபென்னும்) சிறப்பாகிய மேன்குலத்தினின்றுமோர் மனுடன் ஓர் கீழ்மையான (ஸன்ஜா) வென்னும் இழிகுலத்தோனில் நின்று மோர் மனுடனுடைய வெள்ளாட்டியை விம்பறியாக வெடுத்து அவளுடன் (ஜமாஉ) செய்து பத்து ஆண்பிள்ளையைப் பெற்று அந்தப் பத்துபேரும் (காலீக) ளாகவும் (கத்தீபுக) ளாகவும் இருக்கும் நாளில் அந்த வெள்ளாட்டியை யுடையக் காரன்வந்து தன் வெள்ளாட்டி யென்று சாட்சி ரூபித்தால் என்ன (ஹறாக்கும்) சொல்வீரென்றுகேட்டேன் அவர்சொன்னார் அந்தப்பத்துப்பேரும் அந்த மனுடனுக்கு அடிமைகளென்று ஹறாக்கும் சொல்வேனென்றார். அப்போது நான்கேட்டேன அந்தக் கேக்கந் தடியை விட்டை பிடித்துக் கொடுப்பதிலே தங்கட மிருகமோ, அல்லது இந்தப் பத்துப்பேரையும் அடிமையென்று ஹறாக்கும் செய்வதிலே தங்கட மிருகமோ வென்றேன், இன்னும் இந்தப் பத்துப் பேரிற் சொன்ன ஹறாக்குமை அந்தக் கடியில் நீர்சொல்லாதபுதுனமென்னவென்றேன், உடனே முகம்மதுப்னுல் ஹஸன் ஒப்புக்கொண்டு (கஸ்புடைய) பாடத்தில் இமாம் ஷாபிஇய்யி யுடையசொல்லளவில் மீண்டார்கள்.

## மூன்றாம் ஹிக்காயத்தாகிறது.

மக்காமாத்துல் ஹறாக்கமா வென்கிறகித்தாபுக்காரரும், இஸ்மாஈலுல் பூசன்ஜிய்யி றஹிமஹுல்லாவும்பேசிவருகிறார்கள் (காலி) அபூ யூசுபும், முகம்மதுப்னுல் ஹஸன் றஹிமஹுல்லாவும்இருபது மஸ்அலாவை யெடுத்து ஓர் துண்டிலெழுதி யோர் வாலிபன் கையில் எழுதியவரின்னாரென்று சுட்டாமற் கொடுத்து இமாம் ஷாபிஇய்யி றலியல்லாஹு அன்குஇடம் கொண்டுபோய்க் கொடுத்து ஜவாபை யறிந்து கொண்டு வரும்படி சட்டங் கட்டினார்கள். அந்



தப் பிரகாரம் அந்த வாலிபன் கொண்டுபோய்க் கொடுத்ததில் இதைத் தந்தது யாரென்று கேட்டார்கள். அப்போதிவனதையேன் விசாரிக்கிறீர்கள் அதையறிந்து கொள்ளப் பிரியங் கொண்டவர்கள்தானென்றான், உடனே, கேட்டார்கள், ஆளைச்சோதித்துப் பெலனை யறிந்து கொள்ளவோ, அல்லது படித்தறிந்து கொள்ளவோ வென்று அந்த வாலிபன் யாதொரு ஜவாபும் சொல்லாமல் வாய்மூடி நின்றான், உடனே, இமாம் தானே சொன்னார்கள், இது முகம்மதுப்னுல் ஹஸன் (காலீ) அபூயூசுபுமென்கிற இருவர்களுடைய முறண்டுதானென்றார்கள் பின்னர் அந்த வாலிபன் மெய்தானென்று வொத்துக்கொண்டு போய்விட்டான்.

பின்னர் அந்த மஸ்அலாக்களுடைய சொற்களை நோட்டமிட்டுக்கொண்டு ஹாறூனுர் றஷீதிடம் சென்று அந்த மஸ்அலா வந்த வறலாற்றைச் சொல்லக்கேட்டு அவர் புதுமைபாகித் தன்னுடைய (குலாம்) சிறுஜென்கிறவரை அனுப்பி அவர்களிருவரையும் முன்னிலையாக்கி இந்த மஸ்அலாக்கள் நீங்கள் தானோ அனுப்பியதென்று கேட்டார், அதற்கவர்கள் மெய்தானென்றார்கள் பின்னர் ஹாறூனுர் றஷீது இமாம் ஷாபிஇய்யி றலியல்லாஹு அன்ஹுவைப்பார்த்து அந்த இருபது மஸ்அலாவுக்கும் ஜவாபு கொடும் உமக்கு வரிசையுண்டாகுமென்றார்.

## முந்தின மஸ்அலாவாகிறது.

ஒரு மனுடன் தன் வீட்டிலொரு ஆட்டை யறுத்துப் பின்னர், வெளியிற் போய்வந்து தன் பெண்சாதி பிள்ளைகுட்டிகளைப் பார்த்துச் சொன்னான் எனக்கு அந்த ஆடுஹறாமாயிருக்கும் நீங்கள் தின்னுங்களென்றான், அவர்கள் எங்களுக்கும் அது ஹறாமாகி விட்டதென்று சொன்னார்கள் (ஜவாபு) அந்த மனுடன் முஷ்ரிக்கானவனாயிருந்து வெளியிற் புறப்பட்டபோது, அல்லாஹுத் தஆலா அவனை, தீனுல் இஸ்லாமில் ஆக்கினான், பின்னா வீட்டிலுள்ளவர்களு மிதை யறிந்தவுடன் இஸ்லாமாகிவிட்டார்கள், ஆகையால் முஷ்ரிக்கா யிருக்கும்போது அவன் ஆட்டை

யழுததால் அதை முஸ்லிமானவர்களுக்கு ஹறாமாக்கப்பட்ட தென்றார்கள்.

## இரண்டா மஸ்அலாவாகிறது.

ஒரு மனுடனுடைய பயல் ஒளித்தோடிப் போய் விட்டான் அந்தப் பயலை யுடைய நாயன் சொல்லுகிறான் நானவனைக் காணாமல வஜீபனித்தேனாகில் அவனுருமை யென்று அவன் வஜீபனிக்கவும் வேணும் அந்த அடிமையும உரிமையாகா திருக்கவும் வேணும் (ஜவாபு) அந்த நாயன் தன் மக்களி லொருவருக்கு அந்தப் பயலை நன்கொடையாகக் கொடுத்துப் போட்டு வஜீபனிப்பான், பின்னர் பிரியம்போலே நன்கொடையை மீட்டிக் கொள்ளலாம்.

## மூன்றா மஸ்அலாவாகிறது.

இரண்டு பெண்பிள்ளை இரண்டு ஆண்பிள்ளைகளைக்கொண்டு சோபனஞ் சொல்லுகிறார்கள், எங்கள் மக்களுக்கும் எங்கள் புருஷன்மார் மக்களுக்கும் சோபனமென்று அப்படிச் சொல்வதில் அவர்களிருவரும் இவர்களிருவருக்கும் புருஷராக விருக்கிறார்கள் (ஜவாபு) அந்த ஆண்பிள்ளைகளிருவரும் இந்தப் பெண்பிள்ளைகளிருவருக்கும் புருஷமார்களாயிருக்கிறார்கள், எல்லா ஒவ்வொருத்தியும் தன் தோழியுடைய மகனுக்கு வாக்கப்பட்டவர்கள், ஆனபோதே மொத்தத்திலே தங்கள் மக்களாகவும், முந்தின புருடர் மக்களாகவும் புருடராகவும் இருக்கிறார்கள்.

## நாலா மஸ்அலாவாகிறது.

முஸ்லிமான, ஆக்கிலான நாட்டான் மகனான இரண்டுபேர் கள்ளைக் குடித்தார்கள், ஒருவனுக்கு ஹத்து விதித்தது ஒருவனுக்கு ஹத்து விதிக்கவில்லை (ஜவாபு) அவ்விருவரிலொருவன் பாலிக்கானவன் அவனுக்கு ஹத்து விதித்தது, மற்றொருவன் சிறுபிள்ளையவனுக்கு ஹத்து விதிக்காது.



## ஐந்தா மஸ்அலாவாகிறது.

ஒருவன் தன்மகனைப் பார்த்துச் சொல்லுகிறான் நான் மவுத்தாகிப் போனால் என்னுடைய ஆஸ்தியில் உனக்கு இரண்டாயிரம் கிடைக்கும் நீ எனக்கு முறையிற் சித்தப்பன் மகனாயிருப்பாயானால் உனக்குப் பதினாயிரங்கிடைக்குமென்று (ஜவாபு) அந்த மனுடனுடைய முதல் முப்பதினாயிரம், அவனுக்கு இருபத்தெட்டுப் பெண்பிள்ளைகளும் இந்தவொருமகனும் உண்டும் அந்த விருபத்தெட்டுப் பெண்பிள்ளைப் பிள்ளைகளில் ஒவ்வொருத்திக்கி ஆயிரம், ஆயிரமாகவும் ஒரு ஆண்பிள்ளை மகனுக்கு இரண்டாயிரமாகவும் கொடுக்கப்படும் அந்த மகன் இல்லாமற் சித்தப்பனுடைய மகனாயிருந்தால் அந்தப் பெண்பிள்ளைகளுக்கு மூன்றிலிருபங்குக்கு இருபதினாயிரமும் மீதிபதினாயிரமும் சித்தப்பனுடைய மகனுக்காயிருக்கும்.

## ஆறா மஸ்அலாவாகிறது.

ஒருமனுடன் ஒரு கலயத்திற் றண்ணீர்வார்த்துக் குடிக்க வாயில் வைத்துக் குடித்தான் கொஞ்சம் குடிக்கையில் அது ஹலாலாகி யிருந்தது, மற்றச் சொச்சநீர் ஹறாமாகி விட்டது (ஜவாபு) அவன் தண்ணீர் குடிக்கும்போது அவன் பொன்னிமூச் குடைந்து வந்த இரத்தம் அந்தச் சொச்சநீரில்விழுந்து கலந்ததால் அந்தத்தண்ணீர் நஜீஸாகி ஹறாமாகி விட்டது.

## ஏழா மஸ்அலாவாகிறது.

ஒருபெண்பிள்ளை, தான், வாழ்க்கைப்பட்டநாள் முதற்புருஷன் தன்னிட முடுகவில்லையென்றும், கன்னியழியாதிருப்பதாயும், வழக்கடிக்கிறாள். (ஜவாபு) மருத்துவச்சியை யழைத்து அவள் பறுஜில் ஒரு கோழிமுட்டையைப் புகுத்திப் பார்க்கப்படும், அஃதுள்ளே மறையாதிருந்தால், அவள் மெய்சொன்னாள், மறைந்துவிட்டாற் பொய்சொன்னாள்.

### எட்டா மஸ்அலாவாகிறது.

ஒருமனுடன் தன் பெண்சாதியிடம் ஒரு பையை பொருவஸ்தைக்கொண்டு நிரப்பிக் கட்டி முத்திரை வைத்துக்கொடுத்து இந்தப் பையைத் திறந்தையே யானாலும,கிழித்தையேயானாலும், என் முத்திரையை யுடைத்தையே யானாலும் நீ தலாக்கு அந்தப் பையிலுள்ளதை வெளியிலெடுத்து வெறும்பை யாக்காவிட்டாலும், நீத் தலாக்குளென்றான், (ஜவாபு) அந்தப் பையில் உப்பு, அல்லது, சீனி போற்கரைந்துபோகும் வஸ்துக்கொண்டு நிறப்பிக்கொடுத்தான், அதைச்சூடான தண்ணீரில் முக்கினால் அதெல்லாம் உருகிப்போகும். அந்தப் பையை அவன் வைத்த முத்திரைப்படியே வொழிப்பிவித்து ஒப்பிவித்துப் போடுவாள்.

### ஒன்பதா மஸ்அலாவாகிறது.

ஐந்துபேர்,ஒருபெண்பிள்ளையை வினைச்செய்தார்கள்,ஒருவனைக் கொல்லும்படி விதித்தது, இரண்டாவதானவனை நாட்டிவைத்துக் கல்லெறியும்படி விதித்தது,மூன்றாவதானவனை, நூறு அடி அடிக்க விதித்தது, நாலாவ தானவனை, அன்பது அடி அடிக்க விதித்தது, ஐந்தாவதானவனை, சும்மாவிடப்பட்டது (ஜவாபு) வினைச்செய்கிறதை ஹலாலென்று கண்டவன், இரண்டாவதானவன், கல்யாணமுடித்து ஹலாலில் ஜிமாஉ செய்தவன், மூன்றாவதானவன், கல்யாணமுடியாதவன், நாலாவதானவன், அடிமையானவன்,ஐந்தாவதானவன், பயித்தியகாரன்,

### பத்தா மஸ்அலாவாகிறது.

ஒரு பெண்பிள்ளை தன்னுடைய பயலை வம்பித்துத் தன்னை வினைச்செய்யும்படி வருந்தினாள், அதனால், அவன் பொருத்தக் கேடாய்ச்செய்தான் (ஜவாபு) அந்தப்பயல் வினைச் செய்யாதிருந்தால், அவனைக் கொன்றுபோடுவாள், அல்லது, மிகுதி யடித்து நோவினை செய்வாள். என்பதை பயந்து செய்தால் அவனுக்கு ஹத்தில்லை, இல்லாவிட்டால் அரை ஹத்துப் பூணும், அவள் வாழ்க்கைப்பட்டு ஹலாலில் ஜிமாஉ நடந்த வளாக விருந்தால், நாட்டி



வைத்துக் கல்லெறிந்து கொல்லப்படும், இல்லாதிருந்தால், நூறு அடி யடிக்கப்படும்.

### பதினோராமஸ்அலா வாகிறது.

ஒருமனுடன் சில மனுடர்களுக்குத் தொழுவித்தான். வலது பாகம் சலாம் கொடுத்தவுடன் அவன் பெண்சாதி தலாக்காகிறாள் இடதுபாகம் சலாம் வாங்கின வுடன் தொழுகை பாத்திலாச்சுது, பின்னர் வானத்தைப் பார்த்தான், அந்நேரத்திற்றானே ஆயிரம் வெள்ளிக்காசு அவன்கொடுக்க வேண்டியதாய் விதித்தது.(ஜவாபு) அந்த மனுடன் வலதுபாகம் சலாம் கொடுத்தவுடன் இவன்பெண்சாதியுடைய புருடன், மறைவுதலாய்ப் போயிருந் ததுக்காக அவளைப் பிசகுதலாக * (பசுகு) யென்று (ஹுக்கும்) செய்து இவன் நிக்காஹு நடத்தியிருந்தான் அந்தமறைவுதலான புருடனையிவன் கண்டவுடன் இவளை விட்டும் தலாக் காகினாள். இடதுபாகம் சலாம் கொடுத்த வுடன்தன் ஹுடுமானத்தில் மிகுதி இரத்தத்தைக் கண்டான் தொழுகைபாத்திலாயினது, வானத்தைப்பார்த்தவுடன் இவன் பிறயைக்கண்டான்,அதனால்,முன்,இவன், கொடுக்க வேண்டிய கடனுக்குத் தவணை வந்துவிட்டது,ஆனதினாற்கொடுப்பதுவிதித்தது.

### பனிரண்டா மஸ்அலாவாகிறது.

ஒருமனுடன் ஒரு பள்ளியில் நாலு பேருக்குத் தொழுவித்தான் அவ்விதம் தொழும்போது ஒருமனுடன் அந்தப் பள்ளியிற் புகுந்து இமாமுடைய வலதுபாகம் நின்று கூடத்துயர்ந்து தொழுதான் இமாம் வலதுபாகம்சலாம் கொடுத்வுடன் பின் வந்து கூடிய மனுடனைக் கண்டார், அவர் பேரில் (கத்தில்) என்னும்பழி வாங்குகிறது விதியாயினது, மற்ற நாலுபேர்களில் ஒவ்வொருவர் பேரிலும் எண்பது, எண்பது அடி விதியாயினது, அந்த இமாமுடைய பெண்சாதியைப் பின்னாலே வந்து கூடிய மனுடனுக்கு ஒப்புக் கொடுப்பது விதியாயினது, அந்தப் பள்ளியை அடித்தளத்தி

லிருந்து இடித்து வீடாக ஆக்கிப் போடுதல்விதித்தது (ஜவாபு) அந்த ஜமாஅத்திற் பின்னாலே வந்துகூடின மனுடன் தன்பெண் சாதியைத் தன்னுடற் பிறந்தானிடம் வைத்துப்போட்டு சபரிற் போயிருந்தான் இப்போது தொழுவித்த மனுடன் அந்தவுடற்பிறந்தானை வெட்டிப் போட்டு அவனிடமிருந்த பெண் பிள்ளையைத் தன்னுடைய பெண்சாதியென்று வழக்குப்பேசி யெடுத்துக் கொண்டு அந்த நாலுபேரும் கள்ளச் சாட்சி சொல்லி யவன் வீட்டைப் பள்ளியாகக் கட்டிக் கொண்டு தொழுதான். ஆக இவ்வளவு அந்த ஊரு ராஜா அறிந்து அந்த இமாமை (கத்தில்) செய்து அவர்கள் நாலுபேரையும் பொய்ச்சாட்சி சொன்னதற்காய் ஹத்தடித்து அந்தப் பெண்பிள்ளையை யவளுடைய மாப்பிள்ளைக்கி யொப்புக் கொடுத்து அந்தப் பள்ளியை யிடித்து முன்னிருந்த மாதிரிபோல் வீடாக்குதல் வாஜிபாயினது.

## பதின்மூன்றுமஸ் அலாவாகிறது.

ஒரு ஆண்பிள்ளையும், ஒருபெண்பிள்ளையும் வழி நடக்கும் போது, இரண்டு சிறுபிள்ளையைக் கண்டார்கள், உடனே யவர்களிருவரும் அவர்கள் இரண்டுபேரையு முத்தமிட்டுக் கொண்டார்கள், பின்னர் அந்த ஆண்பிள்ளை சொன்னான் என் தகப்பனை அவர்களிருவர் பாட்டனுக்கும், என்னுடற்பிறந்தானை அவர்கள் சிறிய தகப்பனுக்கும் (பிதியா) வாக்கினேனென்று, அந்தப் பெண்பிள்ளை சொன்னாள், என் தாயை அவர்கள் பாட்டிக்கும், என்னுடற் பிறந்தானை அவர்களுடைய சாச்சிக்கும் (பிதியா) வாக்கினேன்; என் புருடனை அவர்களிருவர்களுடைய தாய்க்கிப் புருடனாக்கினேனென்று (ஜவாபு) அந்த ஆண்பிள்ளை அந்தப் பிள்ளைகளிருவர்களுக்கும் தகப்பனாகவும், அந்தப் பெண்பிள்ளை தாயாகவுமிருக்குமென்று.

## பதினாலாமஸ் அலாவாகிறது.

ஒரு பெண்பிள்ளை மூன்று பிள்ளைப் பெற்றாள், அதில், ஒரு பிள்ளை அடிமையாயினது ஒருபிள்ளை ஹறாங் குட்டி யாயினது ஒரு



பிள்ளை ராஜாவாயினது, அந்தராஜாவுடைய பேரைத் தான்மின்பறுகளில் குத்துபாவில்வைத் தோதப்படும், அம்மூவருக்கும் தாயும் தகப்பனு மொன்றே (ஜவாபு) அந்தப் பெண்பிள்ளையோர் வெள்ளாட்டி, அவளை (ஹாஷிமிய்யி) வங்கிஷத்தி லுள்ளவர்நிக்காஹு செய்து அவருக்கு ஒருபிள்ளை பிறந்தது, அந்தப்பிள்ளையாகிறது அவளுடைய நாயனுக்கு அடிமையாயினது, பின்னர், அந்த ஹாஷிமிய்யி வங்கிஷத்திலுள்ளவர் அவளைத் தலாக்குச் சொல்லிப் பின்னாலே அவளை ஸினாச் செய்தார், அதிலொரு பிள்ளைப் பிறந்தது அது ஹறாங்குட்டியாயினது. பின்னர், அவளை விலைக்கி வாங்கி அவளைச் சேர்ந்து ஒரு பிள்ளைப் பிறந்தது, அது தான் ராஜாங்கமாயினது.

## பதினைந்தா மஸ்அலாவாகிறது.

ஒரு மனுடன், ஒரு மனுடனுடைய தலையில் ஒரு கம்பினால், ஒரு அடியடித்தான், பின்னர், அடிபட்டவன் அந்த அடியினால் ஒரு கண் பார்வை போயினதென்றும், மூக்கில் வாசம் போயினதென்றும் நாவுபேச யேலாமற் போயினதென்றும், சைக்கினையைக்கொண்டு, விளங்கிக் கொள்ளுகிறதே யல்லாமலென்றும் சொன்னால், நடக்கவேண்டியதென்ன (ஜவாபு) அந்த மனுடனைப் பொழுதுக் கெதிரே நிறுத்திப் பார்த்தாற் கண்ணைச் சிமிட்டாதிருந்தானாகில் அவனுண்மை சொன்னான், உறைப்பான, வஸ்துவின புகையை நாசியில் உறுஞ்சச் சொல்லி நாசியினாற் றண்ணீர் வாராதிருந்தால் உண்மை சொன்னான். நாவில் ஊசியைக் குத்திப் பார்த்து அதிற் கறுப்பான இரத்தம் வந்தால் உண்மை சொன்னான்.

## பதினாறாம் மஸ்அலாவாகிறது.

இரண்டு ஆண்பிள்ளை ஒருமெத்தை வீட்டிலிருந்தபோது ஒருவன் கால்சருகிக் கீழேவிழுந்து மவுத்தானான் உடனே மற்றவனுடைய பெண்சாதி யவனுக்கு ஹறாமாகிப்போனாள் (ஜவாபு) மவுத்தான மனுடன் தன்மகளைத் தன்பயலுக்குக் கல்யாணமுடித்துக் கொடுத்து இருந்தான், தான் மவுத்தாகவும், அந்தப் பயலான புருடன் அவளுக்கு அடிமையாய்ப்போனான் அவனுக்கு அவள் ஹறாமாகினாள்.

## பதினேழா மஸ்அலாவாகிறது.

இரண்டு மனுடன், ஒரு பெண்பிள்ளையைக் கல்யாணம் பேசிப் போனார்கள், அவள் ஒருவனுக்கு ஹலாலானாள், ஒருவனுக்கு ஹறுமானாள் (ஜவாபு) அந்த இரண்டு மனுடனி லொருவனுக்கு முன்னர் நாலு பெண்ணுண்டாயிருக்கிறது, அதனாலேதான் அவனுக்கு ஐந்தாவது பெண் ஹறுமாயினது.

## பதினெட்டா மஸ்அலாவாகிறது.

ஒரு பெண்பிள்ளை ஒருமாஸ்தையில் மூன்று மாப்பிள்ளைக்கி வாழ்க்கைப்பட்டாள். அந்தமூன்று நிக்காஹும் ஹலாலாகவிருந்தது, (ஜவாபு) அந்தப் பெண்பிள்ளையுடைய முந்தின புருடன் இவள் ஹமிலாக இருக்கையில் தலாக்குச் சொன்னான் பத்துநாளையில் அவள் பிள்ளைப்பெற்றாள். அதுகொண்டு தலாக்குடைய இத்தா முடிவாயினது, பின்னர் மறுமாப்பிள்ளைக்கி வாழ்க்கைப்பட்டு அவனுடன் பொருந்தாமல் (ஜிமாஉ) செய்யமுதல் (கல்உ) என்னும் சண்டிவளம் செய்துபோட்டான், அவளுக்கு(இத்தாக்)கிடையாது, பின்னர் ஒரு மாப்பிள்ளைக்கி வாழ்க்கைப் பட்டாள், ஆனபோதே யொருமாஸ்தையில் மூன்று மாப்பிள்ளை யாயினது.

## பத்தொன்பதா மஸ்அலாவாகிறது.

ஒரு மனிதனுக்குத் தன் பெண்சாதி ஒருவருடம் ஹறுமாக இருந்து பின்னர் (ஹலாலானாள்) இடையில் தலாக்கும் நடக்கவில்லை சத்தியமுறித்தலுமில்லை, இத்தாவுமில்லை (ஜவாபு) அந்த மனுடனும் அவன் பெண்சாதியும் (ஹஜ்ஜுக்கு) இஹ்றாம் கட்டியிருந்தார்கள், அந்த வருடத்தில் அவர்களுக்கு (ஹஜ்ஜு) தப்பிப்போய்விட்டது, ஆனபோதே மறுவருடம் வரையிலும் (ஜமாஉ) அவர்களிருவருக்கும் ஹறுமாகும்.

## இருபதா மஸ்அலாவாகிறது.

சிறிதுபடைப்புகள் அல்லாஹுத்தஆலாவைத் தவிரவுள்ளதுக்குச்சுஜூது செய்தார்கள், அவர்கள் சுஜூதில் அல்லாஹுத்தஆலா



வுக்கு வழிபட்டவர்களாகவே இருக்கிறார்கள் (ஜவாபு) அவர்களாகிறது ஆதம் அலைஹிஸ்ஸலாமுக்கு சுஜூது செய்வதுகொண்டு ஏவப்பட்டு சுஜூது செய்த மலாயிக்கத்துகளாக இருக்குமென்றார்கள்.

இந்த இருபது மஸ்அலாவுக்கும் இமாம் ஷாபிஇய்யி றலியல்லாஹு அன்ஹு கொடுத்தஜவாபை ஹாறூன்றஷீது கேட்டு மிக்கவும் புதுமையாகி இவர்களின் இல்முடைய ஆழ்நிலத்தையும் அகுலுடைய கூர்மையையும் அறிந்தவுடன் (சுபுஹானல்லாஹ்) என்று அல்லாஹுத் தஆலாவைத் (தஸ்பீஹு) செய்து இமாமைக் கூப்பிட்டு இதிரீசுடைய குமாரரே அல்லாவினாலே, திடனாக விபரித்தீர் அழகாக்கினீரென்று வாழ்த்தினார்.

பின்னர்ஷாபிஇய்யி றலியல்லாஹு அன்ஹு சொன்னார்கள். நான் அவர்கள் இரண்டுபேரிடத்திலும் இரண்டு மஸ்அலாக்கேட்க நாடுகிறேன். அவர்கள் அதற்குச்சவாபு சொல்வார்களாகில் அல்லாஹுத்தஆலாவுக்கே எல்லாப்புகழ்ச்சியும், எல்லோருக்கும் அவன் (றஹ்மத்து) உண்டாவதாகவும் அவர்களதற்குச் சவாபு தராதிருந்தார்களாகில் ராஜாவே உங்களிடம் கேட்டுக்கொள்கிறேன். அவர்களிருவரும் எனக்கு ஒரு தங்கடம் வருத்தாமல் என் சோலியில் வாரமலிருக்கவேண்டும். அஃதேனென்றால் நான் உம்மத்துகள் தீனிலுள்ள காரியங்களை குறுஆன் ஹதீதிலுள்ளபடி யெடுத்து நடந்து பலன்பெற்றுப் போகவேண்டிப் பிக்குஹுடைய இல்மைப் பரத்துதல்கொண்டு ப்ராக்காயிருக்கிறேனென்றார்கள்.

உடனே ராஜாவுத்தரவுசெய்தார். இதிரீசுடைய குமாரரேயும் மிடம் கேட்கப்பட்டதுபோல் நீரும் கேளுமென்றார். உடனே இமாம்ஷாபிஇய்யி றலியல்லாஹு அன்ஹாகிறவாகள் (காலீ) அபூயூசுபு றஹிமஹுல்லாயிடம் ஒருமஸ்அலாவும், காலீமுஹம்மதுபுனுல் ஹசனிஷ் ஷைபானிய்யி றஹிமஹுல்லாயிடம் ஒருமஸ்அலாவும் கேட்கஆரம்பித்துக்(காலீ)அபூயூசுபு றஹிமஹுல்லாவைப்பார்த்து இமாம் ஷாபிஇய்யி றலியல்லாஹு அன்ஹு கேட்டார்கள். ஒருமனுடன் மவுத்தானான் அவனுடைய ஆஸ்தியானது அருநூறு

(திருகம்) இருக்கிறது சில அனந்திரகாரரும் இருக்கிறார்கள். ஒரு உடற்பிறந்தாளும் இருக்கிறாள்: அவளுக்கு ஒரு திருகமட்டும் கிடைத்தது. இதைப் பங்கிடும் விதம் (காஸீ) யேதுசொல்லுகிறார்களென்றும் (காஸீ) முஹம்மதுபுனுல் ஹசனிஷ் ஷைபானிய்யைப் பார்த்து இமாம், ஷாபிஇய்யி றலியல்லாஹு அன்ஹு கேட்டார்கள். ஒருமனுடன் ஒரு பெண்பிள்ளையைக் கலியாணஞ்செய்தான். அவன் மகன் அந்தப் பெண்பிள்ளையுடைய தாயைமுடித்தான், அந்த இரண்டுபேருமே இரண்டு ஆண்பிள்ளையைப் பெற்றார்கள். அவர்களுக்கு முறை யெப்படிச் சொல்வதென்று (காஸீ) யேதுசொல்கிறார்களென்றுங்கேட்டார்கள் அவர்களிருவரும் தலையைக் கவிழ்ந்துகொண்டு யோசித்துக்கொண்டே யிருந்தார்கள். (ஜவாபு) சொல்லவில்லை.

அப்போது ஹாறூனுர்றஷீது சொல்வார், ஷாபிஇய்யே இந்தஇரண்டு மஸ்அலாவுக்கும் நீர்தான(ஜவாபு) சொல்லவேணுமென்றார். உடனேஷாபிஇய்யிறலியல்லாஹுஅன்ஹு சொல்லுகிறார்கள் மூத்தின மஸ்அலாவாகிறது எனக்கொரு ஹதீது வந்தெற்றியிருக்கிறது. இமாம்அலிய்யின் கர்றமல்லாஹு வஜ்கஹு அவர்கள்சவாரி போகிறதற்காய் ஒரு கோவேறு கழுதையின் அங்கவடியிற் கால்வைத்திருக்கும்போது ஒரு பெண்பிள்ளை வந்து அமீறுல் மூமினீனே என்னுடன் பிறந்தான் மவுத்தாகி யவருடைய ஆஸ்தி அறுநூறு திருகம் இருக்க எனக்கு வொரு திருகம்தானா, அல்லாவுடைய ஹக்கும்படி கிடைத்தது என்றாள். உடனே சொன்னார்கள் உன்னுடற்பிறந்தான் அறுநூறு திருகத்தையும் வைத்துப் போட்டு இரண்டுமகளும் தாயும் பெண்சாதியும் பனிரண்டு உடற்பிறந்தான்மார்களையும் உன்னையும்விட்டுப் போனான். அந்த அறுநூற்றில் இரண்டுமகளுக்கும் அல்லா சொன்ன பிரகாரம் நானூறு திருகம் தாய்க்கி நூறுதிருகம் பெண்சாதிக்கி எழுபத்தைந்து திருகம் உடற்பிறந்தான்மார் பனிரண்டுபேருக்கும் இருபத்திநாலு திருகம் உனக்கு ஒரு திருகமென்று வந்திருக்கிறதைக் கண்டேனென்றார்கள்.



இரண்டாம் மஸ்அலாவாகிறது உம்மாவுடைய மகனாகிறது மகளுடைய மகனுக்கு மாமாவாயினது, மகளுடைய மகனாகிறது உம்மாவுடைய மகனுக்குச் சித்தப்பனாயினது என்று சொல்லக் கேட்டு ஹாறூனுர் றஷீது அவர்கள் இருவரையும் திரும்பிப்பார்த்து நீங்கள் இவருக்குச் சரியாகமாட்டீர்கள், அல்லாஹுத்தஆலா தானே அவரில் றசூலுக்கு முடுகுதலாயிருக்குத லென்கிற (ஹக்கையும்) குறஆனுடைய ஹக்கையும், இல்முடைய ஹக்கையும் வைத்திருப்பதால் அவருடனே நீங்களினிப் போராட வேண்டாம் அவ்விதம் போராடுவீர்களாகில் நானுங்களுக்கு வழக்காளியென்றார், அப்போது அவர்கள் (நஊதுபில்லாஹி மின்தாலிக்க) என்று சொல்லி அவர் பிரியம்போல் நடத்தட்டுமென்றார்கள். இந்த ஹிக்காய்த்தைப் பேசிவருகிறவர் சொல்லுகிறார்கள், இதற்குப் பின்னாலே ஷாபிஇய்யி இமாமிட முஹம்மதுபுனுல் ஹசன் றஹிமஹுல்லா மிகுந்த (மஹப்பத்தாக) வரத்துப்போக்காயிருந்தார்களென்று.

மூத்தின சுஆல் (ஜவாபு) முடிந்தவுடன் ஹாறூன்றஷீது,ஷாபிஇய்யி இமாமின்பேரில்ஒருபரிவட்டமும்போட்டு, இரண்டாயிரம், தங்கக் காசும் நன்கொடைசெய்தார், அதையெடுத்துப் பரிவட்டத்தையும், தங்கக்காசையும் அரண்மனையைவிட்டும் வெளிக்கிட முன்பாக ஒரு துட்டளவில் வைக்காமற் பங்குவைத்து விட்டார்கள், இன்னம், ஒரு றிவாயத்தில் வருகிறது, ஷாபிஇய்யி இமாமிடத்தில் முகம்மதுபுனில் ஹசன் றஹிமஹுல்லாவை ஒரு மனுடன் (ஐபு) பேசி யிவர் கொழுத்தவரென்று சொன்னதில், இமாமுக் கந்தச் சொற் பொருந்தாமல் இராஜாவைக் கூப்பிட்டுச் சொன்னார்கள், மிகுந்துகண்டிப்பாய்ப்பருத்திருப்பதுடன் பிக்குகில்தெண்டித்துமிகுந்த பிக்குகாளி, இந்த முகம்மதுபுனுல் ஹசனைப்போல் நான் காணவில்லையென்று, இந்தச் சொற் கேட்டவுடன் ராஜாவானவர், இமாமுக்கும் முகம்மதுபுனுல் ஹசனுக்கும் பரிவட்டம் போர்த்தினார்கள்.

(பாயிதாக்கள்) இமாம் ஷாபிஇய்யி றலியல்லாஹு அன்ஹுடைய வங்கிஷத்தின் சிறப்பையும், இல்முடைய பாரதூரத் தனத்தையும்: பொழுதைக் காணத் துலாம்பரமாக அறிந்து அவர்களு

டைய (வஃலால்) கற்போற்கொத்த கருத்தெல்லாம் கலங்கி யூழை யிட்டுச் சத்தமிட்டழுத ஹாரூனுர் றஷீது தாம் நடக்கவேண்டிய ஹக்காகிறது, உடனே தம்முடைய ராஜாங்கத்துக்குப் பாத்திரம் நீர்தானென்று இவர்களைச் சிம்மாசனத்தில் இருத்தாட்டவேணும், அப்படி யிருத்தாட்டினாலும், ஒருக்காலும் அதற்குக்கனவிலும்பிரி யங்கொள்ளார்கள் இந்த வாழ்வு அழிந்துபோகுமென்னத்தக்க கூளங்களானதால், இந்தக் கூளங்களைப் பெரிதாகக்காணுகிறதெல் லாம் துன்யாவுடைய வுலமாக்கள் தான், இந்த ஹாறூன் அந்த இரண்டாயிரம் தங்கக்காசையும் பெரிதாய்க் கண்டதாலே தான் அதையொரு நன்கொடைபோற் கொடுத்தார், அந்த இமாமு டைய கண்ணில் அது மிகவும் தூசணிப்பானதாலே தங்களுக்கு அதில் நின்றும் நாலு தங்கக்காசையாவது வைத்துக்கொள்ள வில்லை, தங்க ரீகமாக நாட்டவுமில்லை, இன்னும்.

இவர்கள் பேரில் அந்த இரண்டு இமாம்களும் விரோதமாயி ருந்ததாகக் கேள்வியானதில் மனதில் அவர்களைத்தொட்டும் ஒரு (ஹசதும்) வையாதிருந்தபடியாலேதான் (மஸ்அலாக்களில்) ஞாயத் திற்குத் தலைசாய்க்கவும், மஹப்பத்தாக இணங்கி நடக்கவும் வந்தது, ஆகையால், அல்லாகுத்தஆலா நம்மனைவர்களுக்கும் அவர்கள டங்களுடைய பறக்கத்துகளைக் கொண்டு பிரயோசனந் தருவானாக வும்.

(றபீஉ றஹிமஹுல்லா) பேசிவருகிறார்கள், இமாம்ஷாபிஇய்யி றலியல்லாஹு அன்ஹுவும், முஹம்மதுபுனுல் ஹசன் றஹிம ஹுல்லாவும் கிணற்றின் தண்ணீரில் (தக்றாறு) செய்ததில் இமாம் கேட்டார்கள் கிணற்றில் எலிபோற் சொத்தது விழுந்து செத்துப் போனால் இருபது, முப்பது பட்டைத்தண்ணீரிறைத்தாற்போதும், அதிலும் பெரிதான வஸ்துவு விழுந்து செத்துப்போனால் நாற்பது அறுபதுபட்டை அல்லது, அந்தக்கணக்காய்த்தோண்டித் தண்ணீ ரிறைத்துப் போட்டாற்போது, அந்தத்தண்ணீர் துப்புரவாகிவிடு மென்றும் இன்னும், ஒரு கிணற்றில் உளுவை நாடிக்கையை யுள் ளே புகுத்திவைத்தால் அந்தக்கிணறு முழுதும் நஜீசாகிவிட்டது, அ தடங்கலையும் இறைத்தேயல்லாது துப்புரவாகாதென்றும்சொன்ன



துண்டாவென்று, அதற்கு மெய்தானென்றார்கள், ஆனால், நஜீசான தண்ணீரிற்சிலதைப்போக்கினால் மற்ற தடங்கலும் துப்புரவாகிப் போமென்றும், துப்புரவானகையையுளுவுடைய நாட்டங்கொண்டு புகுத்தியித்ததுநஜீசாகிப் போய்விட்டது அஃதடங்கலையும்இறைத் துப்போடவேணுமென்றும் சொன்னது சகலறாவிகளும்ஒத்துமை யாகாதவொரு செய்தியைப் பற்றிப் பிடித்துச சகலரும் ஒத்துமை யானவெட்டவெளிரங்கமான கியாசென்னு மொழுங்கைவிட்டது, மிகுந்த புதுமை யென்றார்கள், இதுபோற் கொத்தசொல்லைவேறே யாரும் சொன்னால் நீங்கள் தான் சொல்வீர்கள் சிறுபிள்ளை பயித் தியகாரனென்று.

(புவைத்திய்யுறஹிமஹுல்லா) பேசிவருகிறார்கள், இமாம் றலியல்லாஹு அன்ஹு சொன்னதாக, அஃதென்னவென்றால் என்னிடம் பலுஹுபுனுர் றபீஉ சொன்னார் (ஹசனுபுனு சியாதி ல்லுஉலுஇய்யி) யென்கிறவருடன் தாங்கள் தகுறாறுசெய்கிறதை நான் கேட்க ஆசையாகிறேனென்று. அப்போது, அவர் அந்தமட் டிலும் எத்தினவரல்லவேயென்று சொல்லிக் கூபாவிலுள்ள ஒரு மனுடன் முன் அபூஹனீபா றலியல்லாஹு அன்ஹு வுடைய மஜ்கபி லிருந்தான் அவனுடையசொல்லளவிலே திரும்பியமனுடனைத் தருவித்து வைத்துக்கொண்டு அந்த லுஉலுஇய்யைக் கூட்டி வரும் படி செய்து அவர் காலிறானார், உடனே கூபாவிலுள்ள மனுடன் கேட்டார், லுவுலுஇய்யே ஒருமனுடன் தொழும்போதொருபத்தி னியைப் படுறு சொன்னால் அவன் தொழுகை யெப்படியென்றார், உடனே பாத்திலாய்ப் போச்சுதென்றார் அவன், உளு வெப்படி யென்றார் அதுமுறியாதென்றார்.

மறுபடிகேட்டார், ஒருவன்தொழுகை யிற்கெக்கட்டம்போட் டுச் சிரித்தாலெப்படியென்றார், உடனே தொழுகையும், உளுவு முறிந்து போயிற்றென்றார், கூபாவிலுள்ள மனுடன்கேட்டார், தொழுகை நேரத்திற் படுறு சொல்வது சிரிப்பதைக்காணலேசாக வாயிருக்கிறதென்று, அதற்குடனே, லுவுலுஇய்யிதன் செரு ப்பை யெடுத்துக் கொண்டுபோய்விட்டார், பின்னர், நான் புலு

லைப்) பார்த்துச்சொன்னேன். ஷாபிஇய்யி அந்த மட்டிலுள்ள ஆளல்லவென்று, நான் சொல்லவில்லையாவென்று.

பதுறுத்தீனர் றூசிய்யி றஹிமஹுல்லா சொல்லுகிறார்கள், இமாம் றலியல்லாகு அன்ஹு சொன்னார்கள்: அந்த ஷாபிஇய்யி ஒட்டமலிருந்து இந்த (கியாசை) பிடிக்காமல் ஹதீது கொண்டு தான் சொல்வோமென்று சொல்வாராகில் அவரிடம் கேட்போம் சிரிப்புடைய சங்கதியிற் பிறந்த ஹதீது பெலக்கேடாயிருக்க, இந்த வெளிரங்கமான கியாசைக் காணமுற்படுத்தி மடுவிற் பாலைக கட்டியடிப்பாய் விற்கப்பட்ட ஹயவானுடைய சங்கதியிற் பிறந்த ஹதீது சரியாயிருக்க அதிற் கியாசை முற்படுத்திவிட்டீர்களென்று.

இஸ்ஹாக்குபுனு றுகவைகி சொல்லுகிறார்கள், நானும்ஷாபிஇய்யும் அஹ்மதுபுனு ஹன்பலு, மக்கத்திலிருக்கும்போது, அஹ்மதுபுனு ஹன்பல்இமாம் ஷாபிஇய்யியிடமேயிருப்பார்கள், என்னையும், அவருடன் அழைத்தார் நான் சொன்னேன், சுபியானுபுனு உயைனாவையும், மற்றும் உலமாக்களையும் விட்டுப் போட்டு யெவ்விதம் போவேனென்று உடனே அஹ்மதுபுனு ஹன்பல் சொல்வார்கள் அதுகளெல்லாம் தப்பாதேயிது தப்பிப்போகுமே யென்றார்கள்.

பின்னர்நான் ஷாபிஇய்யியிடம்போயிருந்து மக்கத்திலுள்ள வீடுகளைக் கூலிக்குக் கொடுக்கிறது வாங்குகிறது ஜாஇஸா ஜாஇஸல்லவென்கிறத்தில தர்க்கம்போட்டு அதுஜாஇஸல்லவென்கிறேன் ஷாபிஇய்யி வாய்மூடிக் கொண்டிருந்தார் நான மிகுதமெல்லாம் அதைத் தரிபடுத்தினேன். அவர் யாதொரு ஜவாபும் சொன்னாரில்லை என்பழக்கத்தை விட்டும் நான் பராக்கொளிந்தவுடன்என்னுடன்பாரிஸாத் தேசத்துமனுடனொருவருண்டாகியிருந்தார், அவரைப் பார்த்து (மறத் கேலாக்கமாலே ஆஸ்து) இவரில் கமாலிப்பதில்லை யென்று அவரையறியாமற பாரிஸாப்பாஷையிற் சொன்னேன்.

ஷாபிஇய்யி யதையறிந்து தறகத்துக்காக வந்தீரென்றார், நான் சொன்னேன் அதற்காகத்தால் வந்தேனென்றேன், உடனேஷாபிஇய்யி சொன்னார்கள், நீர் மக்காப் பள்ளியிற் அல்லாஹுத்தஆலா



டித்துக்கொண்டு மக்கத்திலுள்ள வீடுகளுக்கெல்லாம் எவ்விதஞ் சால்வீர். அல்லாஹுத்தஆலா குறுஆனில் (லில்புகுறாஇல்முஹாஜிரீனல்லதீன வுக்ரிஜூமின் தியாரிஹிம்) என்றுமக்கத்து (புகழாக்களுடைய) வீடென்றசொல்லி வீட்டை அவர்களுக்குடையதாய்ப் பேசினான் அல்லவா, றசூலுல்லா அனேகம்வீடுகளை அந்தந்த வீட்டுக்காரரைச் சொந்தமாக்கிப் பேசினார்களா, அல்லவா, உமறுபுனுல் கத்தாபு றலியல்லாஹு அன்ஹு சிறைச்சாலைக்காய் ஒரு வீட்டையுடையவரிடத்தில் விலைகொடுத்து வாங்கினார்களா, அல்லவா, இவையெல்லாமிருக்கவெவ்விதம்சொல்வீரென்றார்.

(இஸ்ஹாக்கு) சொல்லுகிறார், பின்னர் (தாபிஈன்களிற் சிலருடைய சொல்லைப்பிடித்துச் சொன்னேனென்றேன், அப்போதங்கிருப்பவர்களிடம் இமாம்ஷாபிஇய்யிகேட்டார்கள் இந்ததர்க்கக்காரமனுடனாரென்று உடனே சொல்லப்பட்டது, இஸ்ஹாக்குபுனு இபுறாஹீமில் ஹன்லலிய்யியென்று அப்போது இமாம் என்னைப்பார்த்து நீர்கானா (குறுசான்) தேசத்து பிக்குஹாளியென்று அவர்கள் பிரசித்தமாயெண்ணிக்கொள்வதும், சொல்வதும் நீரல்லாமல்வேறேயொருவர்இந்த தர்க்கத்திற்குவந்தால்இரண்டுகாதையும்பிடித்து முறுக்கிவிடுவேனென்றுசொல்லிப்பின்னருஞ், சொன்னார்கள். நான் றசூலுல்லாசொன்னார்களென்று சொல்ல அதற்கு எதிரியாக(அதா)சொன்னார்(தாவூசு)சொன்னாரென்று (தாபிஈன்களைச்)சொல்லுகிறது,இவர்களிலாருக்காவது,றசூலுல்லாவுடன்ஹுஜ்ஜத்துஉண்டோவென்றார்கள் இஸ்ஹாக்குசொல்லுகிறார்கள், நான் அதில் தலத்தாரும், லாத்தாரும், சரிதான் என்று ஒருவருக்கும் சொந்தமில்லையென்று குறுஆன் ஆயத்து வருகிறதே யென்றேன். உடனே அவ்வாயத்திற்கு முந்தின ஆயத்தை மறந்துவிட்டீரென்று சொன்னார்கள்.

அபுல்ஹசன்சொல்லுகிறார்கள் இந்தசமாச்சாரமுழுதும்நடந்தபிறகு, இஸ்ஹாக்குபுனுறுகவைகி தங்கள் கையினாற்றங்கள் தாடியைப்பிடித்துக்கொண்டு இந்தஇதிரீசுடைய குமாரரான ஷாபிஇய்யி முகம்மதென்பவரானெனக்குவந்த வெட்கத்துக்கு நானென்ன சொல்வேனென்றார், அபூஅப்திர்றஹ்மான்றஹிமஹுல்லாசொல

லுகிறார். பிஷ்றுல்மரீசீ யென்கிறவர், இமாம் ஷாபிஇய்யி றலியல்
லாஹு அன்ஹு யிடம் அவர்கள்வியாதியா யிருக்கும்நேரம் வந்தி
ருந்தார், அவ்விடத்தில்மதீனத்திலுள்ள வோர்மனுடனும் உண்டா
யிருந்தார். பிஷ்றல் மரீசீயென்கிறவர் அந்த மதீனத்து மனுடனு
டன் தற்கம்போட்டார் அஃதென்னெனில் (இக்காமத்துச்)சொல்
லுவதைரண்டிரண்டுசொல்லைகச்சொன்னல்லல்லா(மதுஹபிலும்)
இக்காமத்துண்டாகத்தானேசெய்யும், அதையொத்தைதயாகச்சொ
ன்னல்லாங்களிடத்தில் இக்காமததாகாதேயென்றார். ஆகையால்ஒத்
துமையானதை யெடுத்துக்கொண்டு விகற்பமானதை விட்டுவிடு
கிறது வேணுமா யிருக்குமென்றார் அந்த மதீனத்திலுள்ள மனு
டன் ஜவாபுசொல்லவேலாமல் தத்தளித்தார். உடனே இமாம்றலி
யல்லாஹு அன்ஹு எழும்பியிருந்துகொண்டுவியாதியின்வருத்தத்
துடன்சொல்லுகிறார்கள். பிஷ்றேநீர்சொல்வதுசரியான சொல்லா
கவிருந்தால் நானும்மை (வாங்கு) சொல்வதினுள் (வாங்கு) சொல்
வதைவிகியாக்கிவிடுவேன்,ஏனென்றால், உள் (வாங்கு) சொன்னதி
னல் உங்களிடத்தில் வாங்குண்டாகித்தானே போகும். உள் (வாங்
கு) சொல்லாவிட்டால் அதில் நான் ஹதீதைப் பிடித்து கிலாபு
சொல்லி யிருப்பதாலென்று. பிஷ்று வாய்மூடிவிட்டார், இமாம்
படுத்துக்கொண்டார்கள்.

இன்னமொரு ரிவாயத்திற் பேசிவரப்படுகிறது: முஹம்மதுபு
னுல்ஹசன் றஹிமஹுல்லா இமாம்ஷாபிஇய்யிறஹிமஹுல்லாயிட
ம் (சலாத்துல் கவ்பு) என்ற பயங்கரங் கடுசான நேரத்திற்றொழுந்
தொழுகையை முஹம்மதே நீரவர்களிலுண்டாயிருந்து பயங்கர
முண்டாயிருந்த நேரத்தில் அவர்களுக்காய் அந்தத் தொழுகை
யை நிறுத்தாட்ட நாடுவீராகில் அவர்களில்நின்று மொருகூட்டத்
தார், உம்முடனே தொழவும், மறுகூட்டத்தார் காவலாக நிற்க
வும் என்றுவந்தஆயத்தின் அத்தாட்சியால்மாற்றப்பட்டுப்போச்சு
தென்றுதற்கித்துபேசினார், இமாம்றலியல்லாஹு அன்ஹுசொன்
னார்கள் றசூலுல்லா அவர்களுடனேயிருந்தால் விதியென்றும், இல்
லாதிருந்தால் விதியல்லவென்றும், அந்தத் தொழுகை மாற்றப்
பட்டுப்போச்சுதென்றும், சொல்லுகிறீரே, முஹம்மதே யவர்களு



டைய முதல்களில் நின்றும் (சக்காத்தை) யெடுமென்று வந்ததால்
றசூலுல்லா அவர்களுடன் இருந்து எடுத்தாற் றான் சக்காத்துக்
கொடுக்கவேணும், இல்லாவிட்டால் விதியில்லையென்று வந்துவிடு
மென்று சொன்னபோதவர் வாய்மூடிவிட்டார்.

யூனுஸ்பினு அப்தில் அஃலா சொல்லுகிறார்கள், இமாம்
ஷாபிஇய்யி றலியல்லாஹு அன்ஹு சொல்லக்கேட்டேன், முக
ம்மதுபுனுல் ஹசனுடனே நான் சில மஸ்அலாக்களிலே தற்க வுத்
தரிப்புச் செய்யும்போது. அவர் மேலில் பிருதுவான வுடைகளு
ண்டாயிருந்தன, தற்கத்துடைய கொடூரத்தால் அந்த வுடுமானம்
கண்டங்கண்டமாகத் தறிபட்டு அவர் கழுத்தின் பக்கநரம்புகளு
திப் போறதாற் சட்டையிலிட்ட தெறிப்பும், அற்றுப்போச்சுது,
அவரும்பருத்தவராயிருந்தாரென்று.

இன்னுஞ் சொல்லப்பட்டிருக்கிறது, முஹம்மதுபுனுல்ஹசன்
றஹிமஹுல்லாவுக்கும், இமாம் ஷாபிஇய்யி றஹிமஹுல்லாவுக்
கும் சிறுபிள்ளை முதல் ஸக்காத்து விதித்த சங்கதியிலும், (அனா
மூவுமினுன் இன்ஷா அல்லா) என்கிற சங்கதியிலும் இரவுடைமை
யுடைய(மஸ்அலாவிலும்)இன்னும்,அனேகம் (ஹக்கும்)களிலும்
நடந்த வரலாறெல்லாம் எழுதினுல் கித்தாபு நீளமாகிவிடும், அத
னாலேதான் சுருக்கப்பட்டது.

(றபீஉ) றஹிமஹுல்லா பேசிவருகிறார்கள், நான் இமாம்
ஷாபிஇய்யி றலியல்லாஹு அன்ஹு சொல்லக்கேட்டேன், நான்
இல்முடைய காரியத்தில் ஒரு வருடனுவது, மிகைத்துக்கொள்ள
வேணுமென்கிற கருத்தை வைத்தும் எல்லோரும் என்னுடைய
கித்தாபைப் படித்துக்கொள்ளட்டுமென்கிறதை நினைத்தும், நான்
தற்கம் செய்யவில்லையென்று.

கறுபீசி றஹிமஹுல்லா சொல்லுகிறார்கள்; இமாம் றலியல்
லாஹு அன்ஹு சொல்லக்கேட்டேன், நானொருவருடனுவது
(இல்மில்) ஒரு பேச்சையும் (நசீஹத்துடைய) முகத்தில் வெளி
யாக்குதலல்லால், அதில் அல்லாஹுத் தஆலாவகிறவன் ஹக்காகிய

(சவாபு) என்னும் நேர்மை என்கிறதை என்னுடைய நாவின் பேரிலே தான் வெளியாக்குவானென்கிறதை நான் ஆசைவைக்கிறதாயில்லை (சுபுஹானல்லா) அவர்கள் மனதில் கொஞ்சமாவது இல்மைக் கொண்டு துன்யாவை நாடினவர்களாயிருந்தால் இருக்கி ராச்சியத்தில் அவர்களிடம் இருபது மஸ்அலாவைக் கேட்கப்பட்டபொழுது பதினெட்டு மஸ்அலாவில் எனக்குத் தெரியாதென்று சொல்லமனஞ் சம்மதிக்காது கஸ்ஸாலிய்யி றஹிமஹுல்லாவும் இதைப் பேசிவந்திருக்கிறார்கள்.

## பத்தாம் பிரிவாகிறது.

மஉமூப்னு ஹாரூன் ராஜாவுடைய நாளில் (இருக்கி) ராச்சியத்திற்குப்போய் (மதுரசா) வென்னும் பள்ளிக்கூடம் போட்டு வோதிக் கொடுத்ததையும், சகல முஸ்லிமானவர்களும் அவர்களுடைய (இல்மினால்) பிரயோசனம் பெற்றதையும் பேசுகிறதாயிருக்கும்.

ஸஃபறானிய்யி றஹிமஹுல்லா பேசிவருகிறார்கள், இமாம் ஷாபிஇய்யி றஹிமஹுல்லா பகுதாதுக்கு ஹிஜ்றத்து ஒருநூற்றித் தொண்ணூற்றைந்தாம வருடம் முன்னேக்கி வந்து பின்னால் அவ்விடம் விட்டு மக்கத்துக்குப்போய், ஒருமாதம் நின்று பின்னர், மிசுறளவில் வந்து அவ்விடத்திற்றானே யிருந்து ஹிஜறத்து இருநூற்று நாலாம் வருடம் வபாத்தானார்கள், இன்னம் ஒரு ரிவாயத்தில் இறக்கி ராச்சியத்தில் இரண்டு வருடமிருந்து (கதீம்) என்னும் (ஹுஜ்ஜத்து) என்னும் பெயருள்ள கித்தாபைக் கோர்வை செய்தார்கள், பின்னர், மக்கத்துக்குப் போய், மறுபடியும், இறக்குக்குத்தானே வந்து சில மாதங்களங்கு தரிபட்டுப் பின்னர், மிசுறளவிற்போய், அவ்விடத்தில் (ஜதீது) என்னும் (உம்மு) என்னும் பெயருள்ள இரண்டு கித்தாபுகள் கோர்வை செய்து அவ்விடத்திற்றானே வபாத்தாகினார்கள் (றளியல்லாஹு அன்ஹு) இபுறாஹீமுல் ஹறுபிய்யி றஹிமஹுல்லா சொல்லுகிறார், இமாம் ஷாபிஇய்யி றளியல்லாஹு அன்ஹு பகுதாதுக்கு முன்னேக்கி வரும்போது (ஜாமிஉல் கறுபிய்யி) என்கிற பள்ளியில் இருபது மதுரசா வுண்டாயிருந்தது, ஒரு கிழமையில் மதுரசாக்கள் குறைந்து நாலு மதுரசாவாகி விட்டது, சகலர்களும், இமாமிடம் வந்து கூடிப் போனார்கள்.



அபூஹாமிதுல் முறுவறுதிய்யி சொல்லுகிறார்கள், இமாம் ஷாபிஇய்யி றளியல்லாஹு அன்ஹு பகுதாதுக்கு வந்தபோது ஸஃபறானிய்யி றஹிமஹுல்லாவுடைய தெருவில் இறங்கியிருந்தார்கள், அவர் (மதுகபு) ஷாபிஇய்யாகவும், சுல்தானுக்கு நேசமானவராகவும், ஈமானகவும் இல்முடையவராகவுமிருந்தார்.

இன்னும் பைகக்கிய்யி றஹிமஹுல்லா பேசிவருகிறார்கள் முன்னர் (றஷீதுடைய) இராஜாங்கவேளையில் இறக்கி ராச்சியத்துக்கு இமாம் றளியல்லாஹு அன்ஹு வந்திருந்ததில், அவர் மகன் மஉமூன் ராஜாவானவர் பிஷ்றுல் மரீசிய்யி போற்கொத்த பிதுஅத்துக்காரரை முடுகுதலாக்கிவைத்ததைக் கண்டிருந்தார்கள், பின்னர் இறக்குக்கு வந்ததில், அந்த பிதுஅத்து ஒழியாதிருந்ததைக் கண்டு அவ்விடம்விட்டு மிசுறுக்குத்தானே மடங்கிவிட்டார்கள்.

ஹறன்பலிய்யி இமாம் றளியல்லாஹு அன்ஹு சொல்லுகிறார்கள். நான் ஷாபிஇய்யி றளியல்லாஹு அன்ஹுவை இறக்கிலே சந்தித்து நீங்களெங்கே நாடிப் போகிறீர்களென்றேன். அப்போது, அவர்கள், இரண்டு பைத்துச்சொன்னார்கள். அதின் பொருள் என் நபுசு மிசுறளவிலாசையானதாய்க் கண்டேன், அதற்கிடையில் காடு வனாந்திரம் எல்லாத்தையும் தாலைப்பதாண்டும், அல்லாவினுணை நானறியேன், சுகத்துக்கும் வாழ்வுக்கும் வேண்டியா அந்த மிசுறளவில் என்னையிழுக்கப்படுகிறது அல்லது கபுறளவிலிழுக்கப்படுகிறதென்று.

(றபீஉ) றஹிமஹுல்லா சொல்லுகிறார்கள், அல்லாவினுணை அவர்கள் இந்தபைத்தில் சொன்னபடி யந்த இரண்டளவிலேயுமே யவர்களையிழுக்கப்பட்டதென்று ஹறமலத்து றஹிமஹுல்லா சொல்லுகிறார்கள், ஷாபிஇய்யி றஹிமஹுல்லா மிசுறுக்குவந்தது, ஹிஜ்றத்தொருநூற்றித்தொண்ணூற்றொன்பதாம்வருடம் இருநூற்று நாலாம், வருடம் அவ்விடத்தில் வபாத்தானார்களென்று.

அப்துல்லா கிஸ்ஸஜ்ஜாஜு றபீஉத்தொட்டும் பேசிவருகிறார்கள் இமாம் றளியல்லாஹு அன்ஹு மிசுறுக்குப்போய்ச்சேரமுன் நபீ

பின் என்கிறவூரில் அவர்களைக்கண்டேன்; பகலையில் வஜீபனிக்கவும், இரவில் உறங்கவும்காணேன். இரவில் அவர்களுக்கு (கிதுமத்துச்) செய்கிறவோர் கறுத்தவெள்ளாட்டி யுண்டாயிருந்தாள் அவளைக்கூப்பிட்டு நெருப்புக்கடைந்து விளக்கேற்றச் சொல்லி அந்த வெளிச்சத்தில் இல்மில்நின்றும்ஒருபாடமெழுதுவார்கள். பின்னர் விளககை யமர்த்திவிடுவார்கள். மறுபடி கொஞ்சநேரம் விட்டு விளக்கேற்றச்சொல்வார்கள். இவ்விதம் நடந்து வரும் நேரம் நான் சொன்னேன், இமாமே விளக்கை நூற்காகிருந்தால் இந்த வெள்ளாட்டி சடையாமற் படுத்துக்கொள்வாளே யென்றேன். அப்போது சொன்னார்கள் இந்த விளக்குடைய வெளிச்சம் என்கல்பைப் பராக்காக்கி வைத்துப்போட்டு தென்றார்கள்.

பின்னர் ஒருநாள் என்னிடம் கேட்டார்கள் மிசுறுடையவர்களை என்ன விதமாய் நடக்கக்கண்டீரென்று நான்சொன்னேன். சிலர் அபூஹனீபாறலியல்லாஹு அன்ஹுவுடையமதுகபின்பேரிலும் சிலர்மாலிக்குறலியல்லாஹு அன்ஹுவுடைய மதுகபின்பேரிலும் நடக்கக்கண்டேனென்று. அப்போது சொன்னார்கள் நான்மிசுறுக்குப்போக நாடியிருக்கிறேன் (இன்ஷாஅல்லா) அந்த இரண்டு மதுஹபையும்விட்டு நம்முடைய மதுகபளவிலாகிவிடுவார்களென்று (சுபுஹானல்லா)அந்தவாக்கின்படியே அல்லாஹுத்தஆலா நடத்திவிட்டான், மிசுறிலுள்ளோர்களடங்கலும் நாளிதுவரையும், ஷாபிஇய்யி மதுகபேயல்லாது வேறொரு மதுகபுக்காரருடையவோர்வீட்டையும் காணப்படவில்லையென்று.

இமாம்ஹசன் றஹிமஹுல்லாசொல்லுகிறார்கள்யாசீனுபுனுஅப்தில் அஹதைத்தொட்டும், இமாம்சாஜீறஹிமஹுல்லாபேசிவருகிறார், இமாம்ஷாபிஇய்யிறலியல்லாஹு அன்ஹுமிசுறுக்குவந்தவுடன், நானும்என்பாட்டனாரும்போய் எதிர்கண்டுஎங்கள்வீட்டில் விடுதி யிறங்கக்கேட்டதில் விலகிக்கொண்டு சொன்னார்கள், நான் என்னுடைய மாமாமார்களான அஸ்துக்கிளையாரிடந்தா னிறங்குவேனென்று. அவ்விதமே யிறங்கினார்கள்.

ஹசன்பசிய்யிறலியல்லாஹு அன்ஹுசொன்னார்கள்,இமாம்றலியல்லாஹு அன்ஹுஇவ்விதம்தாய் வங்கிஷத்தாரில்விடுதிவிட்டதெ



ல்லாம் அதுகொண்டு சுன்னத்தை நாடினார்கள் ஏனென்றால் புறாஉபுனு ஆசிபின் அபூபக்ரிஸ்ஸித்தீக்கு றலியல்லாஹு அன்ஹுமாவைத் தொட்டும் பேசி வந்ததிற் சொல்லுகிறார்கள் நபிசல்லல்லாஹு அலைஹிவசல்லமவர்களும்,நானும்,மதீனத்துக்குமுன்னேக்கு கிஜுறத்து வந்தபோது, மதீனத்தார் எங்களிடம் உங்களிடம் விடுதி விடவேணுமென்று மிகவும் வேண்டுதலாய் அன்சாரீன்கள் வருடிய பொழுது, நபிசல்லல்லாஹு அலைஹிவசல்லம்திருவுளமானார்கள். அப்துல் முத்தலிபுடைய மகளின் மாமாமார்களான பனின்னஜ்ஜாரிடத்தில் நானிறங்குவேனென்றார்கள் அவர்களேறிய வொட்டகையும் ஒரு தரு மோட்டாமற் றனகத்தானே அவ்விடம்போய் கால்மடித்ததென்று.

அபூமுகம்மதிபுனிஷ்ஷாபிஇய்யி றலியல்லாஹு அன்ஹுவைத் தொட்டும் ஹாபிஸு அபூஅப்தில்லா பேசிவருகிறார்கள், மக்கத்தில் ஒருகுறைஷிக்காவது அவருடைய சிறப்பும், காரியமும் வெளியானதில்லை, மக்கத்தை விட்டும் அவர்பிறப்பட்டாலொழிய. பைகக்கிய்யி றஹிமஹுல்லா சொல்லுகிறார்கள், இமாம்றலியல்லாஹு அன்ஹு மிசுறுக்குவந்தபோது,மாலிக்கு றலியல்லாஹு அன்ஹுவுடைய அசுஹாபிகள் வந்துவந்து கண்டுகொண்டு சந்தோஷமாயிருந்தார்கள், பின்னர், சிலமஸ் அலாக்களில் இவர்களால் (கிலாபு) வெளியானவுடன் வரத்துப் போக்கையும் விட்டு ஹசது வைக்கத் தொடுத்தார்கள், அப்போது, இமாம் றலியல்லாஹு அன்ஹு இரண்டு பைத்துச் சொன்னார்கள்,அதின்பொருளாகிறது.

காடேறி மேயு மிருகங்களுக் கிடையில் முத்தை யதிர்த்தவனோ, ஆடுமேய்க்கும் இடையருக்குபைத்துகளைச்சொல்லிப் பரத்துவனோ, அதாவது, அறிவின் கன மறியாரிடத்தில் லென்றது, இன்னும், திங்குடைய வூரிலெல்லனைப் பழுதாக்கி வைக்கப் பட்டாலும நீங்குடையவர்களுக் கிடையில் ஒளிவு தங்கிய நவமான, அருமையான சொற்களை நான் பழுதாக்கேனென்று, இன்னும், அனேக பைத்தைச் சொன்னார்கள் (றலியல்லாஹு அன்ஹு).

## பதினோராம் பிரிவாகிறது.

இமாம் ஷாபிஇய்யி றலியல்லாஹு அன்ஹு கோர்வை செய்த கித்தாபுகளும், அதின் பெயர்களும், அதனாலெந்தக்காலத்திலு மனுடர்கள் பிரயோசனம்பெறுகிறத்திலேயும்போகிறதாயிருக்கும் (இஃலம்).

நீயறிந்துகொள், இமாம் றலியல்லாஹு அன்ஹு (உசூலுல் பிக்ஹுகில்) மிகுந்த கித்தாபுகளும் புறூஉல் பிக்ஹுகில் மிகுந்த கித்தாபுகளும் கோர்வைசெய்திருக்கிறார்கள் (ரிசாலத்துல் கதீமத்து, ரிசாலத்துல்ஜதீத்தது) என்று இரண்டுகித்தாபு (பிக்ஹுகிலும், உசூலிலும்) கோர்வைசெய்தார்கள், இல்முடையவர்களுக்கு அவ்விரண்டு கித்தாபையும் விட்டுத்தேவையற்றிருக்கமுடியாது.

(கித்தாபு இக்திலாபுல் அஹாதீது, ஜிமாஉல்இல்மு, இஞ்யாஉ-இபுத்தாலுல் இஸ்திஹ்சான், அஹ்க்காமுல் குர்ஆன் பயானுபுறாவில்லா, சிபத்துல் அம்ரிவந்நஹ்யி, கித்தாபு சனன், இக்திலாபு மாலிக்கின் வஷ்ஷாபிஇய்யி, இக்திலாபுல் இறாக்கிய்யீன், கித்தாபுர் றத்தி அலாமுகம்மதிபுனுல் ஹசன், பலாயிலுகுறைஷின்) இவ்விதம் அனேகம் கித்தாபுகள் கோர்வை செய்தார்கள் ஆனால் புறூஉல் பிக்ஹுகில் நூற்றைம்பதுகித்தாபுகள்கோர்வைசெய்து அதைத் தான் (உம்மு) என்று பேர்சொன்னார்கள்.

பைகக்கிய்யி றஹிமஹுல்லா சொன்னார்கள், உசூலுல் பிக்ஹுகில் தாவர்க்கமாய் கித்தாபு கோர்வையாக்கினதாகிறது, இமாம் ஷாபிஇய்யி றலியல்லாஹு அன்ஹுதானென்று, அபுல்ஹசனில் ஆசிமிய்யி றஹிமஹுல்லா (றபீஇத்)தொட்டும்பேசிவருகிறார்கள். இமாம் றலியல்லாஹு அன்ஹு மிசுறில் நாலு வருடம்தரிபாடாயிருந்ததில், மூலவியாதி கடோமாகவே யிருந்தார்கள், சிலநேரம் வாகனத்திலேறினார்களாகில் மூலத்தால் விழுகிற இரத்தம் காற்சட்டை மேற்சட்டை நனைந்துதலைந்துவிடும் குதிரையின் கல்லணை, அங்கவடியெல்லாம் நனைந்துவிடும் அவ்விதமிருப்பதுடன் உம்முவென்கிற கித்தாபு இரண்டாயிரம் தாளையும், சனன் என்கிற கித்தாபையும் இன்னுமிகுந்த கோர்வைகளையு முடித்தார்கள்.



(றபீஉ றஹிமஹுல்லா) சொல்லுகிறார்கள்: நான் இமாம் றலியல்லாஹு அன்ஹு சொல்லக்கேட்டேன இந்தக்கித்தாபுகளை நான் கோர்வை செய்து என் தெண்டிப்பை யதிற் செலவழித்தேன், மனுடர்களைப், படித்து (அமல்) செய்து பிரயோசனம் பெறுவதை யுவக்கிருக்கிறே னென்றும், அதில் நின்றுமொரு (ஹறுபையாவது) என்னளவிற் சேர்க்காதிருப்பதையு மென்றார்கள். இந்தச்சமாசாரம், மவுத்துக்குநாலுநாளைக்கு முன்சொன்னார்கள் முஹம்மதுபுனு இஸ்ஹாக்கபுனி ருகவைகி சொல்லுகிறார்கள் என்னுடைய தகப்பனாரிடம் கேட்டேன், இமாம் ஷாபிஇய்யி றலியல்லாஹு அன்ஹு இந்தக் கித்தாபுகளையெல்லாம் எனனவிதமாய்த் தன் கையினாற் கோர்வையாக்கினார்கள். அவர்கள் வயதும் சொற்பமாகத்தானே யிருக்கிறதென்று, அப்போதுசொன்னார்கள் அல்லாஹுத் தஆலா அவர்கள் வயதைக்குறைத்து (அக்லை) விரைவாக வாங்கினனென்று.

(றபீஉ றஹிமஹுல்லா) சொல்லுகிறார்கள், நான் இமாம் றலியல்லாஹு அன்ஹு சொல்லக்கேட்டேன், கனவில் ஒரு மனுடன் என்னிடம்வந்து என் கித்தாபுகளையெடுத்துச் சுமந்துகொண்டுபோய். ஆகாசம்வரையில் அவர்பறந்து அந்தக்கித்தாபுகளைப் பிரித்துப் பரத்திவிட்டுவிட்டார். பின்னர்விழித்து கனவுக்குத் தஃபீறு சொல்லுகிறவோர் மனுடனிடம் கேட்டேன், அவர் சொன்னார் உம்முடைய கித்தாபுகள் இஸ்லாமுடைய பட்டணங்களடங்கலும் பரந்துவிடுமென்று.

ஜஃபறுபுனு அகீ அபீ தவுறு சொல்லுகிறார்கள். பசுறாவிலுள்ள அப்துர்றஹ்மானிபுனில் மகுதிய்யி றஹிமஹுல்லா இமாம்ஷாபிஇய்யி றலியல்லாஹு அன்ஹு அளவில் ஒரு கடிதாசி யெழுதினார்கள்; அதில்குர்ஆனுடைய நுட்பங்களையும் (ஹதீதுடைய வகைகளையும் (இஜ்மாவுடைய) ஹுஜ்ஜத்தையும், நாசிகுமன்சூகு உடைய விபரங்களையும் (பயான்) செய்து ஒருகித்தாபு கோர்வைசெய்து தரவேணுமென்றுகேட்டுக் கொண்டதற்காய் (கித்தாபுர் றிசாலா), வென்கிற கித்தாபைக் கோர்வையாக்கினார்கள், பின்னரவருடைய நாட்டப்படியே யவருக்கனுப்பினார்கள்.

ஹசனுபுனுசுபியானி ஸவுரிய்யி றலியல்லாஹு அன்ஹு சொல்லுகிறார்கள், ஹாரிதுபுனுஷுறைஹில் கப்பால்எனக்குச்சொன்னார்கள். அந்த அப்துர்றஹ்மானிபுனில் மஹுதிய்யில் பசரிய்யி அளவில் அந்தக்கித்தாபு சேர்ந்தமாத்திரம், மிருந்து புதுமையாகி அதிலுள்ளதை நன்றாகவிளங்கி (ஹதீதுடைய) இல்மிற் பொறுப்பான. இமாம்களில் நின்றும் எண்ணப்பட்டவர்களாகிவிட்டாரென்று.

அப்துர் றஹ்மானிபுனில்மகுதிய்யி றஹிமஹுல்லா சொல்லுகிறார்கள். நான் ஒருதொழுகையிலாவது, இமாம் ஷாபிஇய்யி றலியல்லாஹு அன்ஹுவுக்கு (துஆச்)செய்யாமலிருக்கிறதில்லையென்று. அலிய்யிபுனு அப்தில்லாஹில்மதனிய்யி றஹிமஹுல்லா சொல்லுகிறார்கள், என்னைப் பிடித்து (கஃபாவில் மக்காம் இபுறாஹீமுக்கும், றுக்குனுல்யமானீக்கும்) இடையில் நிறுத்தி சத்தியமாகச் சொல்லென்று கேட்கப்படுமாகில் நான் அல்லாவினாணை அந்த அப்துர்றஹ்மானிபுனில் மகுதிய்யில் பசரிய்யைப்போல் ஹதீதுடைய இல்மில் ஒருவரையும்காணேனென்று சொல்வேனென்றார் அந்த அப்துர்றஹ்மானிபுனில்மகுதிய்யியென்கிறவரும்இன்னும், இமாம் ஷாபிஇய்யிறலியல்லாஹு அன்ஹுவுடையகித்தாபால்கடப்பாகிய அல்லாமத்தான அபூசஈதுல் கத்தானும்இமாம்றலியல்லாஹு அன்ஹுவுக்கு யிரண்டுவருடத்துக்கு முதலேவபாத்தானார்கள்.

(றலியல்லாஹு அன்ஹுமா) ஸக்கரிய்யா வுஸ்ஸாஜிய்யி றஹிமஹுல்லா மூசபுனு அப்திர்றஹ்மானிபுனில் மகுதிய்யைத் தொட்டும் பேசிவருகிறார்கள், பசுறாவில் மாலிக்கு றலியல்லாஹு அன்ஹுவுடைய மதுகபை வெளியாக்கினதில்முந்தினவராகிறவர்கள் என் தகப்பனாவர்களாயிருக்கும். அதாவது அவர் (உளுவுடன்) இருந்துகொண்டு கொம்புவைத்து இரத்தத்தைத் துடைத்துப்போட்டுப் பள்ளியிற் புகுந்து (உளூச்) செய்யாமற், தொழுதார். இது மற்றவர்களுக்குத் தெரிந்து இதென்ன புதுமையாயிருக்கிறதென்று (ஹனபி) மதுகபைப்பற்றி வுளூ பாத்திலாய்ப் போச்சுதென்று பேசினார்கள். பின்னர், என் தகப்பனருக்கு



இமாம் ஷாபிஇய்யி றலியல்லாஹு அன்ஹு பகுதாதிலிருக்கும் சமாசாரம் எத்தி அவர்களுக்கு இது காரியத்தைத்தொட்டும் கடிதாசி யெழுதினார்கள், உடனே கித்தாபுர் றிசாலாவென்கிற கித்தாபைக் கோர்வைசெய்து, என் தகப்பனாருக் கனுப்பிவைத்தார்கள், அதில் வுளூ முறியாதென்று வருகிறது, அதைப்பார்த்துச் சகலரும் சந்தோஷமாகினார்கள்.

ஸஃபறானிய்யி றஹிமகுல்லா சொன்னார்கள், குறித்த கித்தாபானது அப்துர்றஹ்மானிபுனுல் மகுதிய்யி யிடம் வந்து கித்தாபைப் பார்த்து உடனே சொன்னார்கள், இந்த வும்மத்தில் இந்த ஷாபிஇய்யைப்போலொருவருண்டாவாரென்றுநானெண்ணவில்லையென்று.

மஷாரிக்குல் அன்வாறு என்கிற கித்தாபில் றபீஉபுனு சுலைமான் றஹிமஹுல்லா சொல்லுகிறார்கள், நான் இமாம் ஷாபிஇய்யி றலியல்லாஹு அன்ஹுவுடைய வீட்டின் வாசலடியில் எழுநூறு வாகனத்தைக் கண்டேன், அவைகள் ஆருடைய வாகனங்களென்று விசாரித்ததிற் பலபல தேசங்களிலிருந்து அவர்களுடைய கித்தாபுகளை யோதிக்கொண்டுபோக வந்தவர்களுடைய வாகனமென்று சொல்லப்பட்டது. (சுபுஹானல்லா) அவர்களுடைய பாரதூர மிவ்வித மிருக்க, அவர்கள் சொல்லுகிறது, றசூலுல்லாவுடைய ஹதீதுக்குச் சரியா யிருந்ததுதானென் மதுகபு என்று.

ஹன்பலிய்யி றலியல்லாஹு அன்ஹு சொல்லுகிறார்கள், இமாம் ஷாபிஇய்யி றலியல்லாஹு அன்ஹு, மிசுறுக்கு வந்த பிறகு, அந்தக் கித்தாபுர் றிசாலாவென்கிற கித்தாபை வேறே விதமாகக் கோர்வையாக்கினார்களென்று, றபீஉ றஹிமஹுல்லா சொல்லுகிறார்கள். நான் இமாமிடத்தில் அந்தக் கித்தாபை முப்பதே சில்வானம் விடுத்தம் ஓதினேன், ஒவ்வொருதரம் ஓதுந்தோறெல்லாம் அவர்களுக்கு அதைத் திருத்துதல் செய்வதுதான் வேலையாக விருந்தது, பின்னர், இமாம் றலியல்லாஹு அன்ஹு சொன்னார்கள், அல்லாஹுத் தஆலாவுடைய கித்தாபு ஒன்றுதான்

சரியானதென்று சொல்லியோர் (ஆயத்தை) யோதிக் காட்டினார்கள், அதின் கருத்தாகிறது அந்த (குறுஆன்) அல்லாஹுத்தஆலாவல்லாதவனில் நின்றுமுள்ளதாக யிருக்குமேயானால், அதிலே யநேக (யகூதிகள்) பொருட்களில் விகற்பத்தையும், கோர்வையில் வித்தியாசத்தையும் காண்பார்களென்றது.

முஹம்மதுபுனு மஸ்அலத்து றஹிமஹுல்லா சொன்னார்கள், ஹன்பலிய்யி இமாமிடம் நானும் அவர்கள் மகனார், சாலிஹும், அப்துல்லாவும், அவர்களுடைய கித்தாபை யோதினோம், அது ஷாபிஇய்யி இமாமுடைய இருக்களிற் சேர்க்கப்பட்டரிசாலாவும் மிஸ்றளிற் சேர்க்கப்பட்டரிசாலாவுமாகத்தானிருக்கின்றது.

அபுல் வலீது தம்முடைய வுஸ்தாதுகளிலொருவரைத் தொட்டும் இமாம் முஸ்னீ சொன்னதாகப் பேசிவருகிறார், நான் கித்தாபுர் றிசாலாவை ஐந்நூறுதரம் ஓதினேன், ஒருதடவையிலாவது புதிது புதிதான விளக்கமும், பாயிதாவும் பெற்றுக்கொண்டேனேயல்லாது வேறில்லையென்று.

அபுல்காசிமுல் அன்மாதிய்யி றஹிமஹுல்லா முஸ்னீ றஹிமஹுல்லாவைத்தொட்டும் பேசிவருகிறார், குறித்த கித்தாபை ஐம்பதுவருடம்கோட்டமிட்டேன், ஒவ்வொருதரம் நோட்டமிடுந்தோறெல்லாம் முன் விளங்கின விளக்கத்துடன் அதிகமான விளக்கத்தைப் பெற்றுக்கொள்வேனென்று.

மஹ்மூதுடைய மகனாராகிய இபுறாகீம் சொல்லுகிறார் றபீஉ றஹிமஹுல்லா சொல்லக் கேட்டேன், இமாம் ஷாபிஇய்யி றலியல்லாஹு அன்ஹு, மபுசூத்து என்கிற கித்தாபைக் கோர்வை செய்யும்போது, அவர்களுடன் யாதொரு கித்தாபும் கிடையாது, அதை மனப் பாடமாகத்தான் கோர்வை செய்தார்களென்று.

அப்போதவர்கள் இது செய்தியை அப்துல் அஃலாவுடைய மகன் யூனுசிடம் கேட்டதில், அது நிசம்தானென்றார்கள், றபீஉ றஹிமஹுல்லா சொன்னார்கள், நான் ஷாபிஇய்யி யிடம் யிருந்த



நாள் இராத்தங்கினேன், அப்போதவர்கள் தொழுகையைவிட்டும் திரும்பினார்களாகிற் பிடவையைக்கொண்டு இடுப்புக்கட்டித் தலையணையிற் சாய்ந்து இரண்டு பக்கத்தில் இரண்டு வட்டக்கோடு, அதாவது வட்டத்தலையணை போடப்பட்டிருக்கும் நீங்காமலெழுதிக்கொண்டேயிருப்பார்கள்.

ஹுமைதீ றஹிமஹுல்லா சொல்லுகிறார்கள். நான் இமாம் ஷாபிஇய்யியுடன் மிசுறுக்கு வந்தேன். அவர்கள் மேல்வீட்டிலும் நான் கீழ்வீட்டிலும் குடியிருந்தோம். சிலஇரவில் நான் வெளியே வந்தால் அவர்கள் வீட்டில் வெளிச்சம் தெரியும் நான் அவர்கள் பயலைக் கூப்பிடுவேன், என் சத்தங்கேட்டால் என்னைக் கூப்பிடுவார்கள், நான் அவர்கள் மெத்தையிலேறிப்பார்ப்பேன் (சுபுஹானல்லா) அப்போது அவர்கள் கித்தாபு எழுதுகிறதும், கடுதாசியும், அவர்கள் முன்பாகவைத்திருக்கும், அப்போது நான் இரக்கமாக அபா அப்தில்லாவேயென்று கூப்பிட்டுக் கொஞ்சம் உறங்குறுஹத்துப் பெறுங்களென்று சொல்வேன். அதற்கு ஒரு மஸஅலாவில் ஒருஹதீதுடைய மஃனாவில் யோசித்தேன். அது அயர்ந்துபோகமுன்பாக எழுதிப்போட நாடுகிறேனென்று சொல்வார்கள்.

மிசுறுடைய காலியாகிய (அபூஅப்தில்லாஹில் கஸ்வீனிய்யி) றபீஉ றஹிமஹுல்லா சொல்லக் கேட்டதாய்ச் சொல்லுகிறார்கள்: இமாம் ஷாபிஇய்யி றலியல்லாஹு அன்ஹு (அஹ்காமுல் குறுஆனென்னும்) கித்தாபைக் கோர்வைசெய்ய நாடியபோது அவர்கள் நேமமாகக் (குறுஆன்) ஓதிவருகிற கணக்கல்லாமல் நூறுதரம் கத்தம்காமாமாக்கினார்களென்று.

முஹம்மதிபுனு அப்துல் மலிக்குல் மிசுரிய்யி சொல்லுகிறார், ஒருமனுடன் கிழக்குவெளுக்க முதல் இமாம்ஷாபிஇய்யி றலியல்லாஹு அன்ஹுவினிடம்வந்தார், அப்பொழுதுஇமாம்றலியல்லாஹு அன்ஹு(முஸ்கபு)வைத்து நோட்டமிட்டுக்கொண்டிருக்கிறார்கள், அப்போதவர் கேட்டார். இமாமேஇந்தநேரத்திலே தொடுத்துப் பார்க்கவேணுமாவென்றார், அதற்கு இஷாத் தொழுகநே

ரந் தொடுத்துக் குறுஆனுடைய ஹுக்கும்களை நோட்டமிட்டுக் கொண்டிருக்கிறேனென்று சொன்னார்கள்.

முஸ்னீறஹிமஹுல்லாசொன்னார்கள். இமாம்றலியல்லாஹு அன்ஹு றமலான்மாத மிரவெல்லாம்இருளில் குறுஆன்ஒதித்தொழுதுகொண்டே நிற்பார்கள். அந்நேரம் பிக்குருக்கு நேர்பாடான ஆயத்து வந்ததாகில், அதில் நிறுத்திச் சலாம்கொடுத்து விளக்கேற்றி அந்த ஆயத்தின் ஹுக்குமை யெழுதின பின்னர் விளக்கை நூற்றுப்போட்டுத் தொழுகையளவில் மீண்டிடுவார்கள், பலவிடுத்தமும் இவ்விதமாகவேசெய்துக்கொள்வார்கள்.

நஸ்றுப்நு பஹ்று சொல்லுகிறார் இமாம் ஷாபிஇய்யி றலியல்லாஹு அன்ஹு மிசுறில்நான் குவருடம்தரிபட்டிருந்தார்கள் இந்த கித்தாபுகளில் மிகுதமும் அந்நாளிலேயே கோர்வை செய்தார்கள். ஒருகித்தாபு கோர்வைசெய்துமுடிந்தால் அவர்கள்கூட்டாளி (இபுனுஹறம்) என்கிறவர் எழுதிக்கொள்வார், அந்த கித்தாபை வைத்துப் புவைத்திஇமாமும் மற்றும் ஹாஸிறானவர்களும் ஒதிக்கொண்டு பின்னர் அதைப் பார்த்துப் பிரதி யெழுதிக்கொள்வார்கள்.

இன்னும்இமாம்றஹிமஹுல்லாவிடம்ஒதும்(றபீஉ)என்பவர் தமது ஹாஜத்துக்காய்ப் போய்ப் பிந்தி வந்தாலும் அவருக்குத் தப்பிப்போனதெல்லாம் ஒதிக்கொடுப்பார்கள். இன்னும் அஹ்மதுப்நு ஹன்பல்றலியல்லாஹு அன்ஹுசொன்னார்கள் அஷ்ஹபுப்நு அப்துல்உஸ்ஸாவுடைய கித்தாபைஷாபிஇய்யிறலியல்லாஹு அன்ஹு எடுத்துவைத்துக்கொண்டதெல்லாம் அதில்இமாமலிக்கு றலியல்லாஹு அன்ஹுடைய அசுஹாபிகளுடைய சொல்லில் அருபதுருபமாய் இவர்களுக்குத் தட்டுப்படாதிருப்பதில் ஹதீதுக்கு விகற்பமாய் வருவதை றத்துச் செய்வதற்கு இடம்பாடு கிடைக்கவேயல்லாது வேறில்லை.

அபூஅம்றுபுனுகாஸிது சொல்லுகிறார், இமாம்றலியல்லாஹு அன்ஹு என்னிடத்தில்மூசபுனி அப்திர்றஹ்மான்கோர்வைசெய்



திருக்கிற (இக்திலாபுன் நுபஊஅபீ ஹனீபாவல் அவ்சாஈ றஹிமஹுல்லா) என்னுங் கித்தாபை எடுத்துக் கொண்டுபோனார்களென்று.

இமாம் அஹ்மது றலியல்லாஹு அன்ஹு சொல்லுகிறார்கள் இந்த கித்தாபுக்குப்பெயர் (சியர்) என்று சொல்லப்படும்இதை இமாம் அபூஹனீபா றலியல்லாஹு அன்ஹு கோர்வை செய்தார்கள். அதிலுள்ள கிலாபுக்கு அவுசாஈ றஹிமஹுல்லா றத்துச்செய்து (சியறுல் அவ்சாஈ) என்றொரு கித்தாபுகோர்வை யாக்கினார்கள், பின்னர்; அதற்கு றத்தாக அபூயூசுபு றஹிமஹுல்லா ஒரு கித்தாபு கோர்வை செய்தார்கள்.

ஹாபிலு அபூ அப்தில்லா சொல்லுகிறார்கள் இந்த இமாம்களெல்லாம் கோர்வைசெய்த கித்தாபுகளை யெல்லாம் பார்வையிட்டேன் கோர்வையாலும்; பெலவந்ததாலும்; அழகான கித்தாபு இந்த முத்தலிபுக் கிளையிலுள்ள முகம்மதிபுனு இதிரீ சிஷ்ஷாபிஇய்யி றலியல்லாஹு அன்ஹுடைய கித்தாபைப்போல் நான் காணவில்லை யென்றும், அதில் ஹுக்கும்கள் இருக்கிறவிதம் எப்படிப் போலானால், உதிர்ந்த ஆணிமுத்துகளை புரைபோட்டு ஒரு தாவடத்திற் கோர்த்து மாலையாக்கினது போலிருக்கிற தென்றார்கள்.

றபீஉ றஹிமஹுல்லா சொல்லுகிறார்கள், மனுடரே நீங்கள் இமாம் ஷாபிஇய்யி றலியல்லாஹு அன்ஹுடையசுயபேச்சுடைய நாகரீகத்தைக் கேட்டீர்களே யாகில் மிகுந்த புதுமையாவீர்கள், அவர்கள் இந்தக் கித்தாபுகளைக்கோர்வை செய்யும்போதெல்லாம் தங்கள் நாகரீகத்தைவிட்டுப்போட்டு வழங்குகிறபேச்சாகவும்யாவருக்கும் தீபரமாய் விளங்கிக்கொள்ளும்படியாயும்கோர்வையாக்கினார்களல்லாது வேறில்லைத் தங்கள் சுயப்பேசினாற் கோர்வைசெய்தார்களாகில் அதை விளங்கிக் கொள்வது அரிதாயிருக்கு மென்று.

இபுனு அபில்ஜாறுறஹிம்ஹுல்லாசொன்னார்கள், கித்தாபுக் கோர்வை செய்கிறவர்களை நான்கண்டேன், அவர்கள்சுயப்பேச்சை

க்காண கித்தாபுடையவர்க்கு அழகாயிருக்கும், இந்த இமாம் ஷாபிஇய்யி றலியல்லாஹு அன்ஹு தம்முடைய சபையாகிறது தங்கள் கித்தாபைக் காணக் கருகலாகவும், நாகரீகமாகவும் கண்டேனென்று.

முகம்மதுபுனு பின்திபன் ஐனைத்து சொன்னார். நான் ஹன்பலீயிமாம் சொல்லக் கேட்டேன்; கித்தாபுக்கோர்வை செய்ததிற் பாடம்பாடமாகப் போட்டு (ஜிஸ்யா) வுடைய பாடம் வரையில் முடிவாக்கி வொழுங்காக்கினதில் இமாம் ஷாபி இய்யையொருவருமுந்தவில்லை.

(இஸ்ஹாக்குபுனு இபுருகீ முபுனு காஹி) சொல்லுகிறார், ஹனபலீ இமாமிடம் கேட்டேன். இமாமாலிக்கு, இமாம் ஷாபிஇய்யியுடைய கித்தாபுகளுக்கு மிகுந்த வுவந்ததோ அல்லது இமாம் அபூஹனீபா, காலீ அபூயூசுபு இவ்விருவர்களுடைய கித்தாபுமிகுந்த வுவந்ததோவென்று. அப்போது, இமாம் ஷாபிஇய்யியுடைய கித்தாபுதான் எனக்கு மிகுந்த வுவந்ததென்று சொன்னார்கள், ஏனென்றால், அவர்களொவ்வொரும் தங்கள் யோசனை கொண்டிருந்த(ஹூக்கும்) நடத்தாட்டினார்கள், இவர்களோ மிகுந்த ஹூக்குகளும் ஹதீது கொண்டு நடத்தாட்டினார்கள், ஆனதினால், ஹதீதுக்கும் யோசனைக்கு மிடையில் வித்தியாசமில்லையா.

முஹம்மதுபுனு முஸ்லிம் சொல்லுகிறார்கள். நான் மிசுறிலிருந்து அஹ்மதுபுனு ஹன்பல் இடம் வந்தேன் அவர்கள் கேட்டார்கள், முகம்மதே மிசுறில் இமாம் றலியல்லாஹு அன்குவுடைய கித்தாபுகளை யெழுதிக்கொண்டுவந்தீரோவென்று, நானெழுதவில்லையென்றேன். உடனே சொன்னார்கள். கேட்டதில்லையா ஹதீதில் நாசிகு, மன்சூகு; காஸ்ஸு, ஆம்மு இவைகளையும், இன்னும், சகலதையும் விபரமாய் நாமறியவில்லை. இந்த இமாம் ஷாபிஇய்யியிடம் கால் மடித்திருந்ததின் பின்னலேயல்லாதென்றார்கள்.

பின்னர்; மிகுந்த சமாசாரத்தின் பிறகு கேட்டேன், இமாம் ஷாபிஇய்யிறலியல்லாஹு அன்ஹுவுடைய கித்தாபில்இருக்கிராக்கி

Q7ய N1



யத்திற் கோர்வைசெய்து அவ்விடமிருக்கிறதேயந்தக்கித்தாபா அல்லது, மிசுறிற் கோர்வைசெய்திருக்கிறதேயந்தக் கித்தாபா என்றேன். அதற்குச்சொன்னார்கள். இருக்கிராக்சியத்திற் கோர்வை செய்த கித்தாபைத்தான் மிசுறில்வந்து கெட்டியாக்கினார்களென்றார்கள்.

இந்தச்சமாச்சாரத்தை ஹன்பலீயிமாமிடம் கேட்டமாத்திரமென் ஊருக்குப்போகாமல் மிசுறுக்குத் தான் போகக் கருத்து வைத்திட்டேனென்றார்கள். பின்னர் ஹன்பலீறலியல்லாஹு அன்ஹு இடம்வந்துமிசுறுக்குப்புறப்பட்டபயணம் சொல்லவந்தபோதும் சொன்னார்கள்; ஷாபிஇய்யியுடையகித்தாபையெழுதும்.யெழுதுமென் றுறுதியாகவுஞ் சொன்னார்களென்று.

ஸியாதுபுனுல்கலீலுத் தாஸ்தரிய்யி றஹிமஹுல்லா சொல்லுகிறார்கள், நான் மிசுறிலிருந்து இமாம்ஷாபிஇய்யி றலியல்லாஹு அன்ஹுவுடைய கித்தாபை யெழுதிக்கொண்டிருந்தேன், அவ்விதமெழுதுங் காலமெல்லாம, இரவிற் படுத்துறங்கும் நேரமெல்லாம் எல்லா வொவ்வொருயிரவிலு மனமில் எனக்கு ஒவ்வொருமுத்துத் தரப்பட்டுக்கொண்டேயிருந்தது. எழுதி முடிந்தபிறகு அந்தமனமில்லையென்றார்கள்.

120871

முஹம்மதுபுனு நஸ்ரிக்கிர்மகிய்யிறஹிமஹுல்லாசொன்னார்கள், நான் இருபத்தேழுவருடமாக ஹதீதையெழுதினேன், மாலிக்கு இமாமுடைய சொல்லையும், அவருடைய ஹூக்கும்களையும் கேட்டேன். எனக்கு ஷாபிஇய்யிறலியல்லாஹு அன்ஹு அவர்களிலுள்ளயோசனை மதுகபின் அழகுபோல் ஒன்றும்அழகாகவில்லையென்றும்,இன்னும்சொன்னார் நான்மதீனத்தில்நபிசல்லல்லாஹு அலைஹிவசல்லமுடைய பள்ளியிலிருக்கும் போது, கண்தூக்கம் வந்துறங்கினேன். அப்போதுநபிசல்லல்லாஹு அலைஹிவசல்லமை மனமிற்கண்டுஅவர்களிடங்கேட்டேன் அல்லாவுடையறசூலேநான் இன்னஇமாமுடையமதுகபின்கித்தாபையெழுதவாவென்று, அவர்கள்வேண்டாமென்றார்கள். பின்பு, இன்னஇமாமுடையமதுகபின்

கித்தாபையெழுதவாவென்றுகேட்டேன் அதற்குமவர்கள்வேண்டாமென்றார்கள். பின்புஷாபிஇய்யியுடையமதுகபையெழுதட்டாவென்றுகேட்டேன். உடனே தங்கள்தலையைக் கோபத்தினாலேதாழ்த்தினமாதிரியாகவிருந்துபின் புதலையையுயர்த்திச்சொன்னார்கள், இதை அந்த ஷாபிஇய்யியுடைய மதுஹபு அவருடைய யோசனை யென்று எவ்விதம்சொல்வீர் என்கிலும், அந்தஷாபிஇய்யியுடைய சொல்லாகிறது என்னுடைய ஹதீதுக்கு கிலாபு சொல்லுகிறவர்கள்பேரில் றத்தாயிருக்குமென்றார்கள். பின்பு விழித்தவுடன் மிசுறு ராச்சியத்தை நாடிப்போய் ஷாபிஇய்யி றலியல்லாஹு அன்ஹுவுடைய கித்தாபுகளைத்தானெழுதிக்கொண்டிருந்தேன். இதற்குமுன்மிசுறுக்கு மூன்றுதடவை போயிருந்தேன். அப்போதெல்லாம் அவர்கள் கித்தாபை எழுதாதிருந்துவிட்டேனென்று சொன்னார்.

(அபூஜஃபறுத் திருமதிய்யி) சொல்லுகிறார்கள், நான் மதீனத்திலிருக்கும்போது, என் ஹாலுடைய கிட்டுமைக்காய்த் தூக்கித்து ஹறத்தில் வந்து இரண்டுதூணுக் கிடையிற் படுத்துறங்கினேன். அப்போது, நபிசல்லல்லாஹு அலைஹிவசல்லம் அவர்களை மனாமிற் கண்டு அவர்களிடம் என் ஹாலை முறையிட்டேன், உடனே யவர்கள் (உம்முசல்மா) றலியல்லாஹு அன்ஹாவுடையவீட்டிற் புகுந்தார்கள், நானும் அவர்களுடன் புகுந்தேன். அப்போதென்னைப் பார்த்துச் சைக்கினைசெய்தார்கள். அவர்கள்வீடும் அவ்விதமாகத் தான் யாதொரு வஸ்துவுமில்லாமற் கிட்டுமையாயிருக்கிறதென்ற சைக்கினையாயிருக்கிறது. அப்போது நான் எழுத்து வேலைக்காரனாயிருப்பதாற் கேட்டேன். (யாறசூலல்லா) இன்னாருடைய மதுகபை யெழுதவாவென்று, கடைசியில் முஹம்மதுபுனு நசுரித்திர்மதிய்யியுடைய மனாமில் நடந்த வுத்தரவுபோலேதானுத்தாரஞ்செய்தார்களென்று பேசிவந்தார்கள்.

பைகக்கிய்யி றஹிமஹுல்லா சொன்னார்கள். இந்த மனாமைமிகுந்த ஜமாஅத்துகள் பேசி வந்தார்கள். அவர்களில் நின்றும் உள்ளவர்கள் தான அபுல் அப்பாசிபுனு ஷுறைஹு இன்னும்



(அஸிய்யுத் தக்கபீ) றஹிமஹுமுல்லா(அபூஜஃபறு)என்கிறவர்கள் பாரதூரமான உலமாவில்நின்றுமுள்ளவர்கள்.

(அபுல்யஹுனுபுனி அபீனசுறு) சொல்லுகிறார், நான் (அபுல் காசிமில்கஸ்வீனிய்யி) யுடைய கித்தாபிற்கண்டேன், அவர் சொல்லுகிறார். பகுதாதில் எங்களுடன் மகுரிபுக்கட்டிலுள்ள ஓர் மனுடனுண்டாயிருந்தார், அவருடைய வழக்கமாகிறது இமாம் ஷாபிஇய்யி றலியல்லாஹு அன்ஹுபேரில் குற்றப்பாடு பேசுகிறதும், இமாமாலிக்கு றலியல்லாஹு அன்ஹுவுடைய சொல்லளவிற்சார்ந்து பேசுகிறதுமாயிருந்தார். ஒருநாள் சுபுஹில் வந்து நான் மிசுறுக்குப் போறேனென்றுபயணம்சொல்லுகிறார். அப்போதுநான் யாது காரியத்துக்கென்றேன். அவர் சொன்னார். இமாம் ஷாபிஇய்யி றலியல்லாஹு அன்ஹுவுடைய (கித்தாபு)களையெழுதப்போறேனென்றார். நான் கேட்டேன் நீர் ஷாபிஇய்யி பேரில் குற்றப்பாடு பேசுகிறவரல்லவா, அது யாது (சபபுனால்) இவ்விதம் வந்ததென்று கேட்கவும் சொல்லுகிறார். இன்றிரவையில் நானொரு மனாம் கண்டேன். அதாவது பசிந்த பட்சிகளானது, கூட்டங்கூட்டமாய்ப்பறந்து பறந்துபோகிறது. அதில் மனுடர்கள் தாங்கள் நாடினமட்டிற் பிடித்து வைத்துக்கொள்ளுகிறார்கள். அதைக்கண்டு நானும் ஆசையாகி அதில்நின்றும் பிடித்துக்கொள்ளவுமென்று போனேன். என்னைத் தடைசெய்யப்படுகிறது, அப்போது நான்கேட்டேன், மனுடர்களே நீங்களெல்லாரும் தேவையான மட்டில் அந்தப் பட்சிகளைப் பிடித்துக் கொள்ளுகிறீர்களே, என்னைமட்டும் அதைப் பிடிக்கவிடாமற் றடுக்குகிறீர்களே யென்று, அப்போ தவர்கள் சொன்னார்கள். நீர் இமாம் ஷாபிஇய்யி றலியல்லாஹு அன்ஹுவைக்குற்றப்பாடுபேசுகிற மனுடனாயிருப்பதாலென்றார்கள். உடனே நான் சொன்னேன், இனிமேல் நான் குற்றப்பாடு பேசுகிறதில்லையென்று. அதை யொப்புக்கொண்டவர்களென்னைத் தடுக்கவில்லை, நான் எனக்குத்தேவையான மட்டிற் பிடித்துச் சந்தோஷமடைந்தேன். பின்பு விழித்துவிட்டேன் அந்தச் (சபபினாற்றான்) நான் மிசுறுக்குப்போய் அவர்கள் கித்தாபை யெழுதப்போறேனென்று சொன்னார்.

(உமறுபுனுஸ்ஸாறுஜீ) றஹிமஹுல்லா சொல்லுகிறார், இமாம் ஷாபிஇய்யி றலியல்லாஹு அன்ஹு என்னைப்பார்த்து நீரேதுக்கு என்னுடைய கித்தாபுகளை யெழுதிக்கொள்ளுகிறீரில்லையென்று கேட்டார்கள். அப்போது நான் மறுமொழிசொல்லாதிருந்தேன், அவ்விடத்தில் இன்னோர் மனுடன் சொன்னார். அவரேன் எழுதாமலிருக்கிறாரென்றால், நீங்கள் (கித்தாபு) கோர்வை செய்து பின்பு ஒருஹதீதைப் பார்த்துக்கொண்டு முந்தினதைப் பேதகமாக்கிப்போடுகிறீர்களே யதனாலேதானென்று சொல்லியிருக்கிறாரென்றார். அப்போது இமாம் றலியல்லாஹு அன்ஹு திருவுளமானார்கள். நானவ்விதந்தான் செய்வேன். அடுப்பிற் கூடிருக்குமளவுமென்றார்கள் (அதின்கருத்தாவது) முன் எத்தின இல்மில் நின்றும் அதிகமாக விளக்கங்கள் வெளியாகுந்தோறெல்லாம் (தலீலுக்குக்) தகுந்தபடி செய்யப்படுமென்றாகிறது.

இதில் ஹசன் றஹியஹுல்லா சொல்லுகிறார்கள் (சுபுஹானல்லா) இமாமுடைய ஈதமும் (ஈமானின்) பெலனும் இல்லைக்கொண்டு அல்லாஹுத்தஆலாவுடைய முகத்தையே நாடினார்களென்றும், பழிக்கிறவர்களுடைய பழிப்பைப் பயப்படவில்லையென்றும், வெளியாகிறது மேலும் மூன இருக்கி ராச்சியத்தைச் சேர்ந்த பகுதாதிலிருந்து பகைஞர், ஹசதுக்காரர் இவர்களுடைய (பித்னா வால்) கல்பு இடஞ்சலாயிருந்த நேரத்திற் கோர்வையாக்கிய (கித்தாபுல் கத்தமை) அந்த பித்னாவெல்லாம் நீங்கி கல்பு சந்தோஷமாக மிசுறுக்கு வந்தபிறகு, அனேகம் ஹதீதுகள் முன்கண்ட ஹதீதுகளை மாற்றினதாய்க் கண்டு அவர்கள் * (இஃத்திகாதைப் புதிப்பித்து (கித்தாபில்ஜதீதைக்) கோர்வையாக்கினார்கள் (குறுஆனிலே) நாசிகு மன்சூகு உண்டாயிருக்குதல்லவா ஆனதாலே தான் முந்தினதை மாற்றிச்சொன்னார்கள் (ஆலிமுன் றப்பானிய்யூன்) ஆக இருப்பவருக்குத்தான் இந்தக்கருத்தும், நேரானதைப் பொருத்தலும் வரும் (ஆலிமுன் துன்யாவிய்யி) ஆனவருக்கு இட்டது சட்டமென்கிறதும், நேரானதற்குத் தலை சாய்க்காததும்

* இஃதிகாது என்பது - தெண்டிப்பு.



வரும், இப்படிக்கொத்தவர்களை விட்டும் அல்லாஹுத் தஆலா நம்மனைவர்களையும் காத்து அந்தச் சிதேவித் தனம்பெற்ற (உலமாவுன் றப்பானிய்யூன்) உடைய துயர்ச்சையைத் தந்தருள்வானாகவும்.

(சல்மத்துபுனு அப்தில்லா கின்னைசாபூரிய்யி) சொல்லுகிறார், இஸ்ஹாக்குபுனு ருகவைகி றஹிமஹுல்லா மிசுறுக்குவந்து ஒரு பெண் கல்யாணமுடித்தார்கள். அதின் சபபாகிறது, அந்தப் பெண்பிள்ளை முன் ஒரு புருஷனுக்கு வாழ்க்கைப்பட்டிருந்தார்கள். அவரிடத்தில் இமாம் ஷாபிஇய்யி றலியல்லாஹு அன்ஹுவினுடைய கித்தாபுகள் இருந்தது, அந்தக் கித்தாபுகளானது, அந்தப் பெண்பிள்ளையுடைய பங்கிற் சேர்ந்து அவர்கள் வசமிருந்தது ஆனதால், அவர்களை (நிக்காஹு) செய்து தங்கள் மனதுபோல் அந்தக் கித்தாபுகளை யெடுத்துப் புழங்கிப் பிரயோசனங்கள் பெற்றுக்கொண்டார்கள்.

(பைகக்கிய்யி) றஹிமஹுல்லா சொல்லுகிறார்கள், குறித்த இஸ்ஹாக்கு றஹிமஹுல்லாவாகிறவர்கள், தாங்களும், கடப்பான (அல்லாமத்தாக) விருந்தும், தங்களுக்கு விளங்காததெல்லாம் அந்தக் கித்தாபுகளால் விளங்கிக்கொண்டார்கள், மிசுறிலுள்ள (பைத்துல் மாலுக்குக்) காரிய கர்த்தரான அபூ பக்ரிபினி அபீ ஹாமிது சொல்லுகிறார்கள், நாங்கள் இபுனுல் புறுததென்கிற மந்திரியுடைய (மஜ்லிசில்) இருந்தோம் அவ்விடத்தில் யோசனையுடைய வுலமாக்களுக்கு ஷைகான அபூமூசா றஹிமஹுல்லா இருக்கிறார். அப்போது, மந்திரி கேட்டார், அபூமூசாவே நானும்மிடம் இரண்டுபேருடைய இல்மைத்தொட்டும் அவர்களில் ஆர் திறமென்று கேட்பேன், அதற்கு நீர் ஜவாபுதரவேணுமென்றார். அவருடைய நாட்டம் இமாம் ஷாபிஇய்யும் (யஹ்யபுனுஅக்தம்) என்கிறவருமாயிருக்கும்.

அப்போது, அபூமூசா சொல்லுவார், மந்திரியே நீங்கள் தான் சொல்லவேணுமென்று உடனே மந்திரி சொல்வார் (யஹ்யபுனு அக்தமாகிறவர்) ராஜசபைமெச்சமனுடன் (மஉமூன்) என்கிறவர்

சரியிருப்புக் கொடுத்தார், அவருடைய நாகரீகமும் (இல்மும்) எவருமறிவார்கள், புதிதாய் இராக்கிராச்சியத்துக்கு வந்த இந்தச் ஷாபிஇய்பிக்கு ராஜாவிடம் சரியிருப்பில்லை; யென்கிலும், அவர் கித்தாபுகளைக் கோர்வைசெய்து அவருடைய இல்மை வெளியாக்குகிறார், அதனாலவருடைய கீர்த்தி மேலாகி யவருடைய சொல்லைச் சகலரும் ஏற்றுக்கொள்கிறார்களென்று சொன்னார். அப்போது, அபூமுசா கொஞ்சநேரம் தலை கவிழ்ந்திருந்து பின்பு தலையை யுயர்த்திச் சொல்லுகிறார்கள், மந்திரியே நீரறிந்துகொள்ளும் திடனாக ஷாபிஇய்யாகிறவர் தன்னுடைய இல்மைக்கொண்டு அல்லாஹுத்தஆலாவை நாடினதால் அல்லாஹுத்தஆலா அவரை யுயர்த்தியாக்கினான் (யஹ்யபுனு அக்தம்) தன்னுடைய இல்மைக் கொண்டு அல்லாஹுத்தஆலாவை நாடாதபடியால் அவரை யுயர்த்தியாக்கவில்லையென்று.

(இபுனு அபீஹாமிது) சொல்லுகிறார், நான் மிகுந்த புதுமையாகிறேன். இந்த அபூமுசா என்கிறவர் இமாம் ஷாபிஇய்பேரில் வம்பு பேசுகிறவராயிருந்தும், ஹக்கான பேச்சைப் பேசினாரென்று, (முஸ்னீ) றஹிமஹுல்லா சொல்லுகிறார்கள், நானொருபோது இமாம் ஷாபிஇய்பி றலியல்லாஹு அன்ஹு இடம் போனேன், அவர்கள் கித்தாபு கோர்வை செய்துகொண்டிருக்கிறார்கள், நானவர்களைப் பார்த்து அல்லாஹுத் தஆலா வுங்களுக்கு (றஹ்மத்துச்) செய்வானாகவும், அபூஹனிபா, இமாமாலிக்கு இமாமுடைய அசுஹாபிகளுங்களுக்கான மிகுதமாய்த் தெண்டித்து கித்தாபுகள் கோர்வையாக்குகிறார்களே யென்றேன். உடனே யென்னைப்பார்த்து இபுறாகீமே எனக்கிருக்கிற வியாதி (அதாவது) மூலவியாதியின் வேதனை யுமக்குத் தெரியாதா, அவ்விதமிருக்க நானும் கித்தாபுகள் கோர்வை செய்கிறேன், அவர்களும் கோர்வை செய்கிறார்கள், எந்நாளும் தரிபாடாயிருக்கும் இல்மைத் தானென்றார்கள்.

(ஹசன்) றஹிஹுல்லா சொல்லுகிறார்கள் (சுபுஹானல்லா) இமாம்ஷாபிஇய்பி றலியல்லாஹு அன்ஹுவுடைய கித்தாபுகளை மனுடர்கள் எழுதிக்கொள்வதுபோலென்று, இன்னும் (மஷ்ரிக்குதொடுத்து, மக்ரிபு) வரையிலுள்ள முஸ்லீமானவர்களுடையபட்டணங்களில் ஒரு வீட்டிலாவது ஷாபிஇய்பி இமாமுடைய இல்மில் நின்றும் கொஞ்சமாவது இருக்குமேயல்லாமல் வேறில்லையென்று. இன்னும், நபிசல்லல்லாஹு அலைஹிவசல்லம் குறைஷியில் வரும் ஆலிமாகிறவர் பூமியின் தட்டங்களை இல்மால் நிரப்பி விடுவாரென்றுந்திருவுளமானது, இந்தஷாபிஇய்யைத்தான் குறித்துச்சொன்னதுபோலாகிறது என்று. அல்லாஹுத் தஆலா அவர்களுடைய இல்மின் பறக்கத்துகளைக் கொண்டு நம் மனைவோர்களுக்கும் பிரயோசனஞ் செய்வானாகவும் (ஆமீன்)



## பனிரண்டாம்பிரிவாகிறது.

மற்றும் உலமாக்கள், இமாம் ஷாபிஇய்பி றலியல்லாஹு அன்ஹுவை பைத்தாகவும் போற்றிப் புகழ்ந்ததைப்பேசுகிறதாக விருக்கும், இன்னு முஸ்லீமானவர்களுக்கு இமாம்களாய்வந்தவர்கள் சாட்சி சொன்னதாவது, இமாம்றலியல்லாஹு அன்ஹு எல்லா இல்மிலு மேலானவர்களென்றும், அமலால், அதிகமானவர்களென்றும் சொன்னதிற் பேசுகிறதாக இருக்குமென்பதாம்.

(நபுக்தவைகி) என்று பிரசித்தமான (அதீபுன் னஹ்விய்யுன்) றஹிமஹுல்லா பைத்துச் சொல்லுகிறார்கள், அதின்பொருளாகிறது உலமாக்களில் ஷாபிஇய்பி றலியல்லாஹு அன்ஹுவுக்குவமையாகிறது, வானத்தினட்சத்திரங்களில் பிறைபோலாயிருக்கும், அல்லாவினுடைய மனுடரில் நாயகத்தனமுள்ளவராயும், வேதாந்திகளில், அதிக விளக்க முடையவராயும், சகல கலைக்கியானங்கள் விளையும் தானமாயு மிருந்தார், சொல்லி லழகுதங்கும் (ஹதீதுகளில்) நபியைத் துயர்ந்தார் அறிவில்லாமடையருக்கும் (ஹலாக்கைக்) தரிபடுத்தினாரென்றதாயிருக்கும் (அபுல்பத்ஹில்புஸ்திய்யி) றஹிமஹுல்லா பைத்துச் சொல்லுகிறார் அதன்பொருளாகிறது.

இமாம் ஷாபிஇய்யி றஹிமஹுல்லாவாகிறது, தகுதியாய்மனுடரில் வலுப்பமானவர், தீனுல் இஸ்லாத்திற் குணபாடு செய்கிறதால் வலுப்பமுடையவர், அவருடைய பாதையோ நீதமாயும், அவருடைய குணமோ வுண்மையாயும், அவர்மொழியும்பைத்தோவெலைரைபு மயக்குகிறதாயும், அவருடைய வுயர்ந்த விடுசொல்லோ முத்தாயு மிருக்கின்றன, ஆகையால், மனுடரே, நீயொருவனுக்குச் சொல் அவன் அவருடைய சொல்லை (அதாவது) அவர்களுடைய (மதுகபை) விட்டு அதற்கு பதலாய் அவருடைய எதிரிகளுடைய சொல்லை விலையாய் வாங்கிக் கொண்டானே அந்த ஒருவனுக்குச் சொல், ஈத்தமரத்தின் பழத்தை விற்று அதின் ஓலையை வாங்கிக் கொண்டாயென்று. அபூமன்சூறு றஹிமஹுல்லாவும், அலிய்யுபுனு முகம்மதிபுனின் னசுரி றஹிமஹுல்லாவும், இன்னும் அனேக உலமாக்களும் பலபல விதமான ராகங்களாய்ப்பலபல விதமான புகழ்ச்சிகொண்டு இமாம்ஷாபிஇய்யி றலியல்லாஹு அன்ஹுவைப் புகழ்ந்திருக்கிறார்கள் அவைகளை யெல்லாம்இதிலெழுதினுற் கித்தாபு நீளமாகி விடுமென்று விடப் பட்டன.

(யாபிஈ) றஹிமஹுல்லா இறுஷாதிற் சொல்லுகிறார்கள், ஹாபிலுபுனு அசாக்கிறும், இன்னும், சிறிது உலமாக்களும், நபிசல்லல்லாஹு அலைஹிவசல்லத்தைத் தொட்டும் பேசிவரப்பட்ட இந்த ஹதீதிற் சொல்லுகிறார்கள், ஹிஜ்றத்கு ஒருநாற்றில் உமறுபுனு அப்திலஸீஸ் றலியல்லாஹு அன்ஹுதாமென்றும், இருநாற்றில் இமாம்ஷாபிஇய்யி றலியல்லாஹு அன்ஹும் மூந்நாற்றில் அபுல்ஹசனில்அஷ்அரிய்யி றலியல்லாஹு அன்ஹும், நானூற்றில் அபூபகுரில் பாக்கிலானிய்யி றலியல்லாஹு அன்ஹும், ஐந்நாற்றில் அபூஹாமிதில் கஸ்ஸாலிய்யி றலியல்லாஹு அன்ஹுவென்றார்கள்.

(சுபுகீ) றஹிமஹுல்லா தபாக்காத்தில் புக்ககளிற்சொல்லுகிறார்கள், ஆறாம் நூற்றில் இமாம் பகுறுத்தீன் றலியல்லாஹு அன்ஹு, ஏழாம் நூற்றில மூந்தின ஹதீதை ரிலாயத்துச் செய்யும் அப்துல்லாகிபுனு அஸ்அதபுனி அலிய்யில்யாபிஇய்யி றலியல்லாஹு



அன்ஹுதானென்று, நம்புகிறேனென்றும், சில கித்தாபில் அவர்களை (குத்துபு) என்றுஞ் சொல்லக் கண்டேனென்றும் சொன்னார்கள், இதில் நூறுகளின் துவக்கத்திலென்று சொன்னதால், இடைகளிலுள்ள காலிற் பற்றுதலென்று சொல்வதற்கிடமில்லை, யேனென்றால் அவ்விதமான (வைகுல்இஸ்லாமுடைய தில்மீதுகள்) உண்டாயிருந்து அவர்களுக்குப்பகரமாய்தீனை நடத்தவும்போதும் (வல்லாகு அஃலம்)

பைகக்கிய்யி றஹிமஹுல்லா சொல்லுகிறார்கள், ஹன்பலீ இமாமிடம் ஒருஹதீக்குவைக் கேட்கப்படுமாகில், அதில் ஒரு ஹதீதைத் தாங்கள் கண்டிருக்கவில்லையாகில், இமாம் ஷாபிஇய்யி றலியல்லாஹு அன்ஹுவுடைய சொல்லைப்பிடித்து (பத்துவாச்) செய்வார்கள். அவர்ளிடத்தில் நீங்கள் இமாமாக விருக்க யாராவதொருவர் இன்னமொருவருடைய சொல்லைப்பிடித்து (பத்துவா) ஏன் செய்கிறீர்களென்று கேட்டால், அவர்கள் சொல்வார்கள், நானிந்த ஷாபிஇய்யி இமாமுடைய சொல்லைப்பிடித்ததெல்லாம் அவர்கள் தான் நபிஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் (ஆலிமுகுறைஷின்) என்று சொன்ன ஹதீதின் முறாதாக்கப் பட்டவர்களாயிருக்குமென்று.

அலிய்யுபுனு அஹ்மத்தைனாரிய்யி றஹிமஹுல்லா சொல்லுகிறார்கள், நான் மக்கத்திலிருக்கும்போது கனவில் றசூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லத்தைக்கண்டு அல்லாவுடைய றசூலே நான் ஆருடைய சொல்லைப்பிடித்து அமல் செய்கிறதென்று கேட்டேன் அவ்விடத்தில், இமாம் அலிய்யுன் கர்றமல்லாகு வஜ்ககு இருந்தார்கள், அவர்களைச் சைக்கினைசெய்து அலியே இந்த மனுடனை நம்முடைய சிறிய தகப்பனார் பேரான ஷாபிஇய்யி யிடங் கொண்டுபோய்விடும், அவர் மதுகபையிவர் பற்றிப்பிடித்து அமல்ச்செய்து இவரைச் சொர்க்கத்தின் வாசலை யெத்தி விக்கட்டுமென்று சொன்னார்கள், நானதனை யொப்புக்கொண்டேன். பின்பு, விழித்துவிட்டேனென்று இவ்விதஞ் சொன்னார்கள்.

அப்துர்றஹ்மானில் மகுதிய்யி றஹிமஹுல்லா மாலிக்கு இமாம் சொன்னதாகச் சொன்னார். இந்த ஷாபிஇய்யைக் காண

விளக்கமுள்ள ஓர் குறைஷி யென்னிடம் வரவில்லையென்று, உம றுபுனு ஸுபுயானிபுனி முகம்மதித் தவ்ரிய்யி றஹிமஹுல்லா சொன்னார், என் தகப்பனார் சொல்லக்கேட்டேன், நான் ஷாபி இய்யை ஸுபுயானுபுனு உயைனாவிடமிருக்கக் கண்டேன். அப் போது, ஒரு மனுடன் இபுனு உயைனாவிடம் சொன்னார், இவ்வி டத்திற் சிலரிருக்கிறார்கள், அவர்கள் தங்கள் யோசனையால்இன்ன தின்னதைச் சரியென்றும், இன்னதின்னதைச் சரியல்லவென்றுஞ் சொல்லுகிறார்களென்று, மாலிக்கு இமாம்,ஷாபிஇய்யி இமாமைக் கொண்டும் சாடை பண்ணினார். அப்போது, இபுனு உயைனா சொன்னார் இந்த விதம் தன் யோசனைப்படி சொல்லுகிறவர்கள் என்னிடம் வந்திருப்பதை நானுவக்க மாட்டேனென்றார்கள். அப் போது ஷாபிஇய்யி றலியல்லாஹு அன்ஹு இப்னு உயைனாவுக் குச் சொன்னார்கள். அபாமுஹம்மதே இது வுங்கள் வேலையில் நின்றுமுள்ளதல்ல, வுங்கள் வேலையெல்லாம் (ஹதீதைப்) பேசி வருகிறதுதான், அந்த யோசனையெல்லாம் கோட்டமிடுகிறவர்க ளுக்குச சொந்தமாயிருக்குமென்று சொன்னபோது, இபுனு உயைனா வாய்மூடித் தலையைக் கவிழ்ந்துவிட்டார்கள்,அந்த(ருவீ) சொல்லுகிறார், இந்தச் சொல் நடந்ததின் பின்னால், இமாம் ஷாபி இய்யி றலியல்லாஹு அன்ஹுவை இபுனு உயைனா கண்டநேர மெல்லாமிருந்து மரியாதைசெய்யக்கண்டேனென்றார்.

ஸக்கரிய்யா வுஸ்ஸாஜீ றஹிமஹுல்லா ஷாபிஇய்யி இமாமு டைய மகள் பிள்ளையாகிய அஹ்மதுப்னு முஹம்மதைத்தொட்டும் பேசி வருகிறார், என்னுடைய தகப்பனாரும், சிறிய தகப்பனாரும், சொல்லக்கேட்டேன், இபுனு உயைனா றலியல்லாஹு அன்ஹு விடத்தில் ஏதாவது குறுஆனில், ஹதீதில், பிக்குஹில் யாராகுதல் ஓர் சமாசாரத்தை, யோர் ஹுக்மைக் கேட்டு வருவார்களாகில், இமாம் ஷாபிஇய்யி றலியல்லாஹு அன்ஹு அளவிலே திரும்பிப் பார்த்துச் சைக்கினைசெய்து இவரிடம்கேட்டுக்கொள்ளுங்களென் பார்களென்று.

ஹுமைதிய்யி றஹிமஹுல்லாசொல்லுகிறார்கள்,ஷாபிஇய்யி றலியல்லாஹு அன்ஹு வியாதியாக வீட்டிலிருக்கும்போது நசல்மின



வேவேண்டிமூன்றுதரம், இபுனுஉயைனாறலியல்லாஹு அன்ஹுவந் தார்களென்று, சுவைதுபுனுசஈதுறஹிமகுல்லாசொல்லுகிறார், மக் கத்தில் சுபியானுபுனு உயைனாயிடம் நாங்களிருக்கும்போது இ மாம் ஷாபிஇய்யி றலியல்லாஹு அன்ஹுவந்து சலாம்சொல்லி யிருந்தார்கள். அப்போது இபுனு உயைனா றஹிமஹுல்லா ஒரு சிறிய ஹதீஸைத ரிவாயத்துச் செய்தார்கள். பின்பு

இமாம்ஷாபிஇய்யிறலியல்லாஹு அன்ஹுபேரில்வதோவொ ருவிதத்தாற் போதக்கேடு வந்து நினைவில்லாமற் படுத்திருந்தார் கள். அதனால் இபுனு உயைனாவிடம் ஒருமனுடன் வந்து முகம்ம துபுனு இதிரீஸு மவுத்தாகிவிட்டாரென்று சொன்னார். உடனே இபுனுஉயைனாசொன்னார்கள், முஹம்மதுபுனு இதிரீசு மவுத்தாகி விட்டாரென்று வருமாகில் இந்தக் காலத்துடையவர்கள், அடங்க லைக்காண மிகவும் அவரேற்றமானவராகவே மவுத்தாகிவிட்டா ரென்று, இந்த ஹிக்காயத்து அவர்களுடைய வரிசையைப்பற்றி அந்த இபுனுஉயைனா சொன்னதை வருவித்துச் சொன்னதல்லால் மவுத்தைப்பற்றிப் பேசினதல்ல.

றபீஉறஹிமஹுல்லா சொல்லுகிறார்கள், மக்கத்தில் முபுத்தி யாயிருந்த முஸ்லிமுபுனு காலிதிஸ்ஸன்ஜிய்யி றஹிமஹுல்லாஇமா முக்குப் பதினைந்து பராயமெத்தின நேரம் இமாமின் இருபுயத் துக் கிடையில் ஒரு தட்டுத்தட்டி அல்லாவினணை யுமக்கு (பத்து வாக்) கொடுக்கத்தகுந்த இல்மும் பருவமும் முடுகிவிட்டதென்றார் கள். யஹ்யபுனுசஈதின் றஹிமகுல்லாசொல்லுகிறார்கள், நான்என் னுடையதொழுகையில்இமாம் ஷாபிஇய்யிறலியல்லாஹு அன்குவு க்கு நாற்பது வருடக்காலம் (துஆச்) செய்கிறேனென்று, முகம்ம துபுனுல்ஹசனிஷ்ஷைபானிய்யி றஹிமஹுல்லா சொல்லுகிறார்கள் நம்முடைய பத்துவாக்களுக்கு மாற்றம் சொல்ல யேதுமாயிருக்கி றவர்ஷாபிஇய்யிதானென்று, இப்படிச்சொன்னவுடன் அதேதினால் இந்தவிதஞ் சொன்னீர்களென்று கேட்கப்பட்டது. அப்போது சொன்னார்கள். அவர் ஹதீதுகள் மிகுதிகேட்டுக், கேள்வியிலே

தரிபட்டு யாரும்தள்ளக்கூடாத தரிபடான விளக்கத்தையும் தாமதத்தையுமுடையவரா யிருப்பதாலென்று.

ஸஃபறானிய்யி றஹிமஹுல்லா சொன்னார், நான் யஹ்யப்னு முஈன் றலியல்லாஹு அன்ஹுவுடன் ஒருஜனாசாவில்ஹாலிருந்திருக்கும்நேரம் நான் கேட்டேன், ஷாபிஇய்யியுடைய ஹாலில் அபா ஸக்கரிய்யாவே, நீங்கள் என்னசொல்லுகிறீர்களென்று, உடனே சொன்னார்கள் (ஸுப்ஹானல்லா) அவருடைய சிறப்பை யென்னத்தி லடக்கிப் பேசுவோம். ஒரு தலைவெட்டுகிற காரியத்திற் பொய்சொல்வது ஹலாலென்று வருமாகில், அந்த ஷாபிஇய்யியுடைய ரோசமானது, அவரைப் பொய் சொல்லவிடாமல் விலக்கிப் போடுமென்றார்கள், இன்னும் அவர் மிகுந்த வுண்மை யுடையவரென்றார்கள்.

குதைத்துப்னு ஸஈது றஹிமஹுல்லா சொல்லுகிறார். சுப்யானுத் தவுரிய்யி றலியல்லாஹு அன்ஹு மவுத்தான்போதே (வறகு) மவுத்தாகிப்போச்சுது. இமாம்ஷாபிஇய்யி றலியல்லாகு அன்கு மவுத்தானபோதே ஹதீதுடைய இல்மு மவுத்தாகிப்போச்சுது. ஹன்பலியிமா மவுத்தாகிவிடுவாராகில் பல (பித்அத்துகளும்) வெளியாகுமென்று இஸ்ஹாக்குப்னு ருகவைகி றஹிமஹுல்லா சொல்லுகிறார்கள், என்னை இமாம் அஹ்மது றலியல்லாஹு அன்ஹு மக்காவில் கண்டு, என்னுடன் வாரும் உமக்கு ஒருமனுடரைக் காட்டுகிறேன். உம்முடைய இரண்டுகண்ணும் அவர்போற் கொத்தவரை யொருக்காலும் கண்டிருக்கமாட்டாதே யப்படிக்கொத்தவரைக் காட்டுகிறேனென்று கூப்பிட்டார். உடனே நானும் அவருடன் போனேன். அப்போது

இமாம் ஷாபிஇய்யி றலியல்லாஹு அன்ஹுவிடம் கொண்டு போய்விட்டு இவர்தானென்றார். பின்பு நான் போய்ப்பார்க்கும்போது (ஸுப்ஹானல்லா) அவர் வன்னித்த வன்னிப்புக்குமேலாலே தான் கண்டேனென்றார், என்கிலும் அந்த இமாம் ஷாபிஇய்யி றலியல்லாஹு அன்ஹு இருநூறு (பத்துவாக்) கொடுத்ததில் அ



ஞ்சு பத்துவா மட்டும் கத்தா வென்றார், அப்போது, இமாம் ஹன்பலி சொன்னார்கள் நீர் அல்லாவை ஷுக்குறு செய்யவில்லையா. யிருநூற்றில் அஞ்சு பிழையிருக்கிறதென் றுமக்குத் தோணுவதெல்லாம் நீர் இறுக்களவிற் சேர்க்கப்பட்ட ருவியைப் பிடித்தால், அவர்கள் ஹிஜாசளவிற் சேர்க்கப்பட்ட மனுடனிடத்திற்கண்ட தலைப் பிடித்துச் சொல்வதினாலுள்ள விதற்பமாருக்குமல்லாது கத்தாவாயிராதென்றார்கள், மெய்தானென்றேன்.

சாலிஹுப்னு அஹ்மது றஹிமகுல்லா சொல்லுகிறார்கள், எங்கள் தகப்பனார் இமாம் அஹ்மது றலியல்லாகு அன்குவுக்குக் கொஞ்சம் ருஹத்துக் குறைவாக விருந்தபோது, இமாம் ஷாபிஇய்யி றலியல்லாகு அன்கு நசல்மினவுகிற தற்காய்வந்தார்கள், உடனே எங்கள் தகப்பனார் இமாமைக் கண்டவுடன் துள்ளித் துடித தெழும்பித் தங்களிருப்பிடத்தில் அவர்களையிருத்தாட்டி யவர்களிரண்டு கண்ணுக்கிடையில் முத்தமிட்டுக்கொண்டு இல்முடைய பேச்சாகத்தானே பேசிக்கொண்டு வெளிக்கிட்டு அவர்களேறிவந்த கோவேறு கழுதையிலேறினார்கள். அப்போது, எங்கள் தகப்பனார் வாகனத்தின் ஒரு பாரிசம் நின்றுதொடுத்து மிகுந்ததூரம் பேசிப் பேசிப் போய்ப் பயணமனுப்பிக்கொண்டு வந்து விட்டார்கள், பின்பு.

இமாம் யஹ்யபுனுமுஈன் றலியல்லாகு அன்கு ஒரு ஆளைப் பிடித்துத் தகப்பனாரிடம் சொல்லி யனுப்பினார்கள், நீங்கள் கொஞ்சம் ருஹத்துக் குறைவாக இருப்பதுடன் தாங்களும் மதுகப்புடைய இமாமாக இருந்துகொண்டு ஷாபிஇய்யி யுடைய கழுதையைத் தொடுத்து இத்தனை தூரம் ஓடவேண்டிய முட்டுப்பாடென்னவென்று கேட்டனுப்பினார்கள், உடனே அந்த ஆளிடமாகத் தானே மறுமொழிசொல்லி யனுப்பினார்கள்; நீங்களும்வந்து அந்தக் கழுதையின் மறுபாகத்தில் நின்று யென்னைப்போலே தொடுத் தோடுவீர்களாகிற் கனபிரயோசனம்பெற்றுப்போவீர்கள், அது தப்பிவிட்டதென்றும், இன்னுஞ் சொன்னார்கள், ஆராகிலும் பிக்குகுடைய

இல்மு வேணுமென்று நாடுவாராகில் இமாம் ஷாபிஇய்யி றலியல் லாகு அன்கு எறும் கோவேறு கழுதையின் வாலை முகர்ந்தாலும், அந்த பறக்கத்தால் பிக்குகுடைய இல்முண்டாகிப் போமென்றார் கள்.

புலைலுபுனு வியாது றஹிமகுல்லா சொல்லுகிறார்கள், நான் ஒருபோது இமாம் அகுமதுபுனு ஹன்பல்றலியல்லாகுஅன்குவுடை ய இல்மின் பாரதூரத்தைப் பார்த்துப் புதுமையாகி யவர்களிடங் கேட்டேன், இவையெல்லாம் எவ்விடத்தில் நின்றும் பெற்றுக் கொண்டீர்களென்று, அப்போது சொன்னார்கள் என்னிடம் நீர்கா ணும் இல்மடங்கலும் அல்லாகுத் தஆலா எனக்குஇமாம் ஷாபிஇய் யி றலியல்லாகு அன்குவின்னின்றுத் தந்தாரென்று (ஹமீதுபுனுர்ற பீஉ) சொல்லுகிறார். ஹன்பலீ இமாம்சொல்லுகிறார்கள், இமாம்ஷா பிஇய்யி றலியல்லாகு அன்குவுடைய காலத்தில் அவர்களைக் காண வேற்றமானவர்களை நானறிய வில்லையென்று.

இபுனுவியாது றஹிமகுல்லா சொல்லுகிறார், இமாம் ஹன்பலீ றலியல்லாகு அன்கு சொல்லக் கேட்டேன்: மைக்கூட்டிலே கலம் தொட்டுக் கையினலெழுதுகிறவர்களில் யாருமில்லை அவர்கள் கழுத்தில் இமாம் ஷாபிஇய்யி றலியல்லாகு அன்குவுடைய வுபகார மென்னும் கடன்விதியாகியே யல்லாது வேறில்லை யென்றார்கள். அபூஸஃபமு சொல்லுகிறார், இமாம் ஹன்பலீ றலியல்லாகுஅன்கு சொன்னதாக நன்னிடத்தில் இமாம்ஹாமைதீவந்து அபா அப்து ல்லாவே நீங்கள் எந்த நேரமும் இமாம்ஷாபிஇய்யி யிடயாகவே போயிருக்கிறீர்களேயென்றார், நான்சொன்னேன், நானவர்களி டம்போயிராமல் என்னசெய்வேனென்றேன். அவர்சொன்னார் நீங்கள்போகிறது அழகல்லவென்றார், நான்சொன்னேன் நீர் ஒரு நாளைக்கி அந்தஷாபிஇய்யி யிடம்போய் அவர்கள் பேச்சை யறிந்து கொள்ளும் பின்னலே பேசிகொள்ளலாமென்றேன், அவ்விதமவர் ஒருநாட்போய் அவர்களிடமிருந்து பின்னரென்னிடம் வந்துசொ ல்லுகிறார், அபா அப்தில்லாவே நம்முடைய நாளைவிணுகத் தொலை



த்துவிட்டோம், இவரிடம்போய் வந்திருந்தோ மில்லையேயென்று கைசேதப் பட்டார்.

முஹம்மதுபுனுல் பலுலில் பஸ்ஸாஸு சொல்லுகிறார், என் தகப்பனார் சொல்லும்படி கேட்டேன், அஃதென்னெனில், நான் ஹன்பலீ றலியல்லாஹு அன்ஹுவுடன் ஹஜ்ஜுக்குப் போய் மக்கதில் ஒரு தலத்தில் இறங்கி யிருந்து ஒருநாள் நானும், அவர் களுமாய் (ஸுபுஹு) தொழப்போய்த் தொழுதபின்னர் ஹறத் தில் சுற்றித்திரிந்து பார்த்ததில், ஸுபுயானுபுனு உயைனா றஹி மஹுல்லாவுடைய மஜ்லிசிற் கொஞ்சமிருந்து பின்னர் ஒவ்வொரு மஜ்லிசாய்ப் போய்த் திரிந்ததில், இமாம் ஹன்பலீ றலியல்லாஹு அன்ஹுவைத் தப்பவிட்டேன், பின்பு அவர்களைத் தேடியே யலை ந்து பார்த்ததில், ஒரு வாலிபனா ரிருக்கிறார், அவர்மேலிலே சாயங் காச்சப்பட்ட வுடுப்பும், தலைமுடியடர்ந்த முடியுமாயிருந்தது, அவரிடம் சிலரெல்லாமிருக்குறார்கள். அவ்விடத்தில் ஹன்பலீ றலியல்லாஹு அன்ஹுவைக் கண்டேன், அப்போது.

நான் சொன்னேன் அபூஅப்தில்லாவே இபுனு உயைனாவை விட்டுப்போட்டீர்களே, அவர்களிடம் நான் போயிருந்தேன், அவ ர்கள் என்ன என்ன ஹதீதுகளெல்லாம் பேசிவருகிறார்கள், அல் லாஹுத் தஆலாதான் அவர்கள் இல்மை யறிவானென்று அகங் களித்துப் பேசினேன், அப்போது இமாம் ஹன்பலீ றலியல்லா ஹு அன்ஹு என்னைப்பார்த்து வாய்மூடும் உமக்கு நான் சொல் லுகிறேன் இந்த வாலிபக்காரனாருடைய விளக்கம் உமக்குத்தப்பி விடுமாகில் கியாமத்து நாள்வரையும் அதைக்கண்டுகொள்ள மாட் டீரென்பதைப் பயந்திருக்கிறேன், அல்லாஹுத் தஆலாவுடைய கித்தாபை விளங்குகிறதில் இந்த வாலிபரைக்காண விளக்கமுள்ள வரை நான் காணவில்லையென்றார்கள், அப்போது இவர் ஆரென்று கேட்டேன், இவர் முஹம்மதுபுனு இதிரீசிஷ் ஷாபிஇய்யிறலியல் லாஹு அன்ஹு என்றார்கள்.

இபுனு மனீஉ றஹிமஹுல்லா சொன்னார், நான் அஹமது புனு ஹன்பல் றலியல்லாஹு அன்ஹு சொல்லக்கேட்டேன்;

பிக்குகுடைய இல்மென்பது மூட்டைகப் பூட்டுபோட்டுப் பூட்டப்பட்டதாகத்தான் இருந்தது, அல்லாஹுத்தஆலா அதை இந்த ஷாபிஇய்யி றலியல்லாஹு அன்ஹுவைக்கொண்டு திறக்கும்படி செய்தான், அலிய்யுபுனு அஃமதல் அஸ்திய்யி றஹிமஹுல்லா சொல்லுகிறார்கள், ஒருபோது இமாம் அஃமதுபுனு ஹன்பல் றலியல்லாஹு அன்ஹு இடம் இமாம் ஷாபிஇய்யி றலியல்லாஹு அன்ஹுவைத்தொட்டும் கேட்கப்பட்டது, அப்போது சொன்னார்கள், அல்லாஹுத்தஆலாவின்னுணை (ஷறகுடைய) உலமாக்களுடைய கித்தாபுகளை ஓதி அவர்களுடைய (கலாமென்னும்) பேச்சுகளையும் அறிந்திருந்தோம், அவர்களைத்தான் மிகவும் சடப்பாக நினைத்தோம் இமாம் ஷாபிஇய்யி வருமளவும்.

இமாம் ஷாபிஇய்யி வந்தபோது அவர்களுடங்கலிலும் இவர்களைச் சடப்பாகக் கண்டோம், அவர்களிடம் இரவுகளிலும், பகற்களிலுமிருந்து பார்த்தோம், எப்போதுமவர்களில்நின்றும் சகலநன்மைகளையுங் கண்டோமென்றுசொன்னார்கள். அப்போது, ஒருமனுடன்கேட்டார். அபூஅப்தில்லாவே யஹ்யபுனு முஈனென்கிறவரும் அபூவுபைது என்கிறவரும் இமாம் ஷாபிஇய்யையோர்த்துக்கொள்ளாமற் குறைவாகப் பேசுகிறார்களேயென்று அப்போது, இமாம் அஹ்மது சொன்னார்கள் அவ்விருவரும் இமாம் ஷாபிஇய்யைக் குறைவாகச் சாணுவது இன்னவிதமென்று எனக்குத் தெரியாது, அல்லாவின்னுணை நான் அந்த ஷாபிஇய்யில் நின்றும் நலவையேயொழியக் காணவுமில்லை, நலவையேயொழியக் கேட்கவுமில்லையென்று சத்தியம் செய்து பின்பு ஹாலிறாயிருந்தவர்களைப் பார்த்துச் சொன்னார்கள், நீங்கள் அறிந்துகொள்ளுங்கள், அல்லாஹுத்தஆலா வுங்களுக்கு றஹ்மத்துச் செய்வானாகவும், ஒரு மனுடனுக்கு அல்லாஹுத்தஆலா தன்னுடற்பிறந்தான்மார்களைக்காண இல்மைக்கொண்டு வரிசை நன்கொடையதிகமாக்கியிருந்தானானால் அவரை யெல்லாரும் (ஹசது) வைத்து அவரில்லாத கெடுதல்களைச் சமைத்துக் கட்டிப் படுதூறு தான் சொல்லுகிறது மனுடர்களுடைய ஆதத்து, இல்முடையவர்களில் இது கெட்ட குடிவாழ்க்கையென்றார்கள்.



அப்துல்லாஹிபுனு அஹ்மதிபுனி ஹன்பல் றலியல்லாஹு அன்ஹு சொல்லுகிறார்கள். நான் எங்கள் தகப்பனார் ஹன்பலீ இமாமிடம் கேட்டேன்: நீங்கள் மிகுந்தநேரமும் இமாம் ஷாபிஇய்யி றலியல்லாஹு அன்ஹுவுக்கு துஆச்செய்வதை மிகுதமாக்கும்படி கேட்டிருக்கிறேன், அவர்களெவ்விதமான மனுடராயிருந்தார்களென்று. உடனே சொன்னார்கள் என் அருமை மகனே ஷாபிஇய்யாகிறவர் பூலோகத்துக்குப்பொழுதுபோலும் மனுடர்களுக்கு(ஆபியத்துப்) போலுமென்றுசொல்லி மகனே இஃதிரண்டிற்கும் பகரமாகவொருவஸ்து வுண்டோவென்றார்கள்.

இபுனுமுஜாகிது சொல்லுகிறார். நான் அஹ்மதுபுனல் லைதி சொல்லும்படி கேட்டிருக்கிறேன். அஃதென்னெனில்நான் ஹன்பலீ இமாமைச்சொல்லும்படி கேட்டேன் நாற்பது வருடக்காலம்நான் தொழுதபித்தடியில், இமாம்ஷாபிஇய்யி றலியல்லாஹு அன்ஹுவுக்கு துஆச் செய்துகொண்டிருக்கிறேன். என்னுடைய துஆவில் (அல்லாகும் மஃபிறலீ வலி வாலிதய்ய வலி முஹம்மதிபுனி இதிரீஸிஷ் ஷாபிஇய்யி) யென்றோதி வருகிறேனென்று.

இமாம்ஹசன் றஹிமஹுல்லா சொல்லுகிறார்கள். நான்பராயமெத்தின நாள்முதற் றொழுதவுடன்கையிலும், சிறப்பான வகுத்துகளிலும் (அல்லாகும் மஃபிறலீவலி ஆபாஈ வலி உம்மகாத்தீ வலில் அ-இம்மத்தில் அறுபஅத்தி வஅத்பாஇகிம் மினல் புக்கஹா இ வல் உலமாயி) யென்றோதிவருகிறேனென்றார்கள் அதின் (மஃனா) நாயனே எனக்கும், என் தாய்தகப்பன்மாருக்கும், நான்கு இமாம்களுக்கும், அவர்களைத்தொடர்ந்த உலமாக்கள் யாவர்கட்கும் பிழைபொறுத்தருள்வாயாக வென்றது ஏனென்றால் நம்முடைய தாய்தகப்பன்மார்பேரில் எம்மாத்திரம் உவப்பாகத் துஆச்செய்வது விதியாயிருக்குதோ, அவ்விதமாக இந்த இமாம்களுக்கு மிகுந்து வுவப்பாக துஆச்செய்வது வேண்டுமாயிருக்கும் என்கிலும், அதிகமாக துஆச்செய்யவும் வேணும், ஏனென்றால்,

இவர்கள் நமக்குச்செய்த நன்கொடையானது ஹயாத்திலும் மவுத்திலும்' கபுறிலும், மஹ்ஷறிலும் எக்காலமும் ஈடு மீட்சியாக்குகிறதா யிருப்பதாலென்று ஓர் பைத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. அதின்பொருள் நான்சாலிஹானவனல்லாதிருக்கச்சாலிஹானவர்களை யுவந்திருக்கிறேன். ஏனென்றால், அந்த உவப்புடைய ஸபபால் எனக்கும் ஸாலிஹுத்தனத்தைத் தந்து ஈடேற்றத்தையும், சீதேவித் தனத்தையும் நம்மனைவர்கட்கும் தந்து அவர்களுடன் நம்மையும் ஆகிறத்தில் அல்லாஹுத்தஆலா கூட்டுறவாக்கி வைப்பானென்பதை ஆசைவைத்ததற்காகவேண்டி (அதயு) என்னும் கித்தாபில் வந்திருப்பதுபோல், ஒருமனுடன் துன்யாவில் ஆரைப் பிரியம் வைத்திருந்தானோ அவர்களோடுந்தான் ஆகிறத்திலும் இருப்பானென்று, அஃதெதுபோலெனில்; பூவையொட்டிய நாரு மணம்பெறு மென்பதுபோல்.

இன்னும் பேசிவரப்படுகிறது. ஹன்பலீ இமாமைத்தேடி இமாம் ஷாபிஇய்யி நடந்துபோகிறது மிருதமாயிருந்தபோது, சிலர்கள் இமாம்ஷாபிஇய்யை வம்பித்து உங்களுடைய சிஷப்பிள்ளையாகத்தானே இமாம்அஹ்மதுபுனு ஹன்பலிருக்கிறார்கள் அவர்களை நீங்களேன் தேடியலைகிறீர்களென்று, அப்போது பைத்துச் சொன்னார்கள். அதின்கருத்தாகிறது, இமாம் அஹ்மது உங்களை வந்து (ஸியாறத்துச்செய்கிறார்கள் நீங்களதற்குப் பகரமாக அவர்களை ஸியாறத்துச்செய்யப்போகிறீர்கள் இரண்டுஞ் சரியாகிப் போச்சுதென்று சொல்லி வம்பித்தப்பழிக்கிறார்கள். நானதற்குச் சொன்னேன், அவரென்னை வந்து கண்டாலும், நானவரைப்போய்க்கண்டாலும் இந்த இரண்டு ஹாலிலும் வரிசைப்பாடு அவருக்குத்தானென்றேன். இதுசமாசாரம் ஹன்பலீ யிமாமுக் கெத்தியவுடன் அவர்களதற்கு பைத்து ஜவாபாகவும் உஸ்தாதைச் சங்கித்தும் கோபக்காரரை வரவுசெலவில் எண்ணாமல் உண்மை வாக்காய்ச் சொல்லுகிறார்கள். அதின்பொருளாகிறது.

நீங்கள் நம்மை ஸியாறத்துச்செய்வீர்களாகில், அஃதுங்களில் நின்றும்எங்களுக்குநன்கொடையையருளுகிறீர்கள் உங்கள்வரிசை



கொண்டு நாங்களுங்களை ஸியாறத்துச் செய்தோமானால்உங்களின் வரிசையென்னும் நன்கொடையை நாங்கள் பெறுவதற்கல்லால் வேறில்லை. ஆகையால், அந்த இரண்டு ஹாலையும் நாங்கள் இழந்து போகாமலிருக்கக்கடவது உங்களைக் கோபமானவன் உங்களில் நின்றும் நாடியதைப் பெற்றுக்கொள்ளாமல் இருக்கக் கடவதென்றும்.

இபுனு புலாலத்து என்கிறவர், அப்துர்றஹ்மானில்புஸ்திய்யி றஹிமஹுல்லா, இஸ்ஹாக்குபுனு றுகவைகி சொல்லக்கேட்டதாகச் சொல்லுகிறார், இமாம் ஷாபிஇய்யாகிறவர், இமாம்கள், உலமாக்களடங்கலுக்கும் கத்தீபாயிருக்குமென்று அபூதவுறு றஹிமஹுல்லா சொல்லுகிறார், நானும், இஸ்ஹாக் குபுனுறுகவைகியும், ஹுசைனுல் கறுயிசிய்யும், இன்னும் இருக்கு தேசத்திலுள்ள மிகுந்த வுலமாக்களும் பிதுஅத்தான வெண்ணத்தைவிட்டது, இமாம் ஷாபிஇய்யைக்கண்டு அவருடைய இல்மைக் கேட்டதின் பின்னாலேதானென்று ஆனபோதே, இமாம் ஷாபிஇய்யைப் போலொருவரையும் நான் காணவில்லை, இமாம் ஷாபிஇய்யி தாமும் தம்மைப் போலொருவரையும் காணவில்லையென்று.

ஹுமைதிய்யி றஹிமஹுல்லா சொல்லுகிறார், ஆராவது தன் கியாசுகொண்டு ஒரு ஹுக்கும் சொல்லுகிறவர்களைத் தட்டிச் சொல்வதற்கு மிகுந்த ஆசை யுள்ளவர்களாயிருந்தோம், என்கிலும், அதற்கு அடைகொடுத்து மடக்கிப் பேச இல்மில்லாதவர்களாயிருந்தோம், பின்பு செய்யிதுல் புக்ககாவான ஷாபிஇய்யியிடமிருந்து இல்மின் பூட்டுகளை யெல்லாம் நமக்குத் திறந்து தந்த பிறகு தான், அவைகளை றத்துச் செய்ய வேணுமாகினோமென்று.

றபீஉ றஹிமஹுல்லா சொல்லுகிறார், நான் புவைத்தி றஹ்மஹுல்லா சொல்லக்கேட்டேன், ஷாபிஇய்யி றலியல்லாஹு-அன்ஹுடைய இல்மின் பாரதூரத்தை நாமிருத மறிந்திருந்தலும் நாமவர்களைப் புகழ்வதைக் காண இருக்குடைய வுலமாக்

கள், இமாம் ஷாபிஇய்யை மிகுதமாய்ப் புகழுகிறார்கள், அந்தப் புகழ்ச்சி யவர்களிலுண்டாயிருப்பதை நாமறிந்ததில்லை.

ஹுமைதிய்யி றஹிமஹுல்லா சொல்லுகிறார்கள் ஸுபுயானுபுனு உயைனாவும், முஸ்லிமுபுனு காலிதிஸ் ஸன்ஜீயும், அப்துல் மஜீதும், இன்னு மக்கத்திலுள்ள உலமாக்களடங்கலும் இமாம் ஷாபிஇய்யி றலியல்லாஹுஅன்ஹுவை வன்னிப்பதில் அவர்கள் சிறுபிள்ளையாயிருந்த நாள்முதற் பெரிய வயதாய் இமாமாக வெளியான நாள்வரையும் புகழ்ந்த விதங்கள் கணக்கிலடங்காமற் சொல்லிப் பின்பு சொல்லுகிறார்கள். அந்த ஷாபிஇய்யி றலியல்லாஹுஅன்ஹு சிறுபிள்ளையாயிருக்கும்போது எவருக்கும் ஆத்தாய்ச் சிறுபிள்ளைத்தனம், விளையாட்டுப் பராக்கு என்கிறதைச் சுத்தமாக வைத்துப் படைக்கவேயில்லை, அவர்களிற்சிறுபிள்ளைத் தனமென்கிறது ஒருவரும் அறியவேயில்லையென்று.

பூனுசுபுனு அப்தில் அஃலா றஹிமஹுல்லா சொல்லுகிறார்கள். (அறபுப்) பாஷையில (காபியாக்க) ளென்கிற படைப்புகளானது இமாம் ஷாபிஇய்யியுடைய அக்குலென்னும் புத்தியை விளங்கியறியுமாகில் அந்தப் படைப்புகளடங்கலும் அவருடைய புத்தியென்னுஞ் சமுத்திரத்தில் முங்கித் தாழ்ந்துபோகுமென்றும் எந்த இல்மிற்றெடுத்து அவர்கள் பேசினாலும், அந்த இல்மிலுள்ள ஆள நீளத்தை யெத்திக் கேட்கிறவர்களுடைய கண்கள் குளிர்ந்து கல்புகள் மகிழ்ந்து அதின அடிவாரத்தைக் காட்டிக் கொடுப்பதால் அதைக் கேட்பவர்கள் எண்ணிக் கொள்வார்கள் இவருக்குக் காலமெல்லாம் இந்த இல்மிலேதான் புழங்கி இதையே (ஹிபுளாக்கி) வைத்திருக்கிறாரென்றெண்ணுவார்கள், பின்பு இந்த இல்மைவிட்டு மறு இல்மிற்றெடுத்தால் அதிலும் அவ்விதமாகத்தானிருப்பார்களென்றுஞ் சொன்னார்கள்.

இபுனு அப்தில் ஹக்கம் சொல்லுகிறார்கள் அபூஉபைதனென்கிறவர் பலபல இமாம்களுடைய சொற்களையெல்லாம் சேகரித்து



வைத்துக்கொண்டுதான் அவைகளையெல்லாம் விட்டுப் போட்டு இடையிற்றான் ஒரு கிலாமென்னும் விதற்பத்தை யுண்டுபண்ணிப் பேசுவதால் அவரை (பக்கீகு) என்று சொல்லக்கூடாதென்கிலும் (பக்கீகாகிறது) யாரானால் (குறுஆன்) அல்லது (ஹதீது) இவைகளிற்றனக்குமுன் ஒருவரையும் அதில்விளங்கிச் சொன்னதாய்க் காணப்படவில்லையே யவ்விதமான விளக்கத்தை யூறல் தேடி யெடுக்கு அந்த (அசலில்) நின்றும் நூறுபணைப் பிளந் தெடுப்பாரோ அவர்தான் (பக்கீகுஎன்றார்) அப்போது சொல்லப்பட்டது இவ்விதமான காரியத்தின் பேரில் ஆர் தத்துவம் பெறுவார்களென்று உடனேஜவாபு சொன்னார் முகம்மதுபுனுஇதிரீசுஷ்ஷாபிஇய்யிதான் தத்துவம்பெறுவார் அவர்சொல்வதெல்லாம்அவ்விதந்தானென்று.

முஸ்னீ றஹிமஹுல்லா சொல்லுகிறார்கள், எங்களூராகிய மிசுறில் அப்துல் மலிக்குபுனு ஹாஷிமின் என்கிற (மகாவீ) யென்னும் கித்தாபை யுடையவர் அறபிலுள்ள பழங்கதைகள், வங்கிஷங்கள் திகதிமால கணக்குகள், பைத்துகள், பாடல்கள் சகலதிலும் பேர் வாங்கினவராக இருந்தார், அப்போது, இமாம் ஷாபிஇய்யி றலியல்லாகு அன்கு மிசுறுக்கு வந்து விட்டார்களென்று பிரசித்தமாகிச் சகலர்களும் வந்து வந்து இமாமைக் கண்டு சோபனஞ் சொல்லிக்கொண்டார்கள், அப்போது, அந்த அப்துல் மலிக்கு என்கிறவர் தன்னிட மிருக்கும் வித்தாண்மையின் சங்கையை யெண்ணிவராதிருந்துவிட்டார்.

பின்னர், சிலரெல்லாம் அவருக்கு (நசீஹத்து) என்னுமுபதேசஞ் சொல்லி, இமாமைவந்து கண்டுகொண்டு அறபிகள் வங்கிஷங்களில் ஆண்பிள்ளைகள் வங்கிஷத்தையெடுத்துப்பேசிவந்தார், இமாமவர்களதை யொத்துக்கொண்டார்கள் பின்னர், இமாமவர்கள் எடுத்துப் பேசினதை யவரொத்துக் கொண்டார், பின்பு, இமாம் சொன்னார்கள், ஆண்பிள்ளைகள் வங்கிஷத்தைப் பேசுகிறதும், அதின் விவரம் சொல்வதும், நமக்கும் தப்பாது, உமக்கும்

தப்பாது, அதைவிட்டு விடும், பெண்பிள்ளைகள் வங்கிஷத்தை யெடுத்துப் பேசுமென்றார்கள், அவ்விதமே தொடுத்து அவர் சொல்ல இவர்கள், கேட்க, இவர்கள் சொல்ல அவர்கேட்க, இவ்விதமாய் நடந்ததில் அவராலே ஜவாபு கொடுத்துக் கொள்ள வலாமல் வைறுணுகினார்.

பின்பு சொன்னார் அல்லாகுத் தஆலா இவர்யோலொருவரை படைத்திருக்குறனென்று நானெண்ணவில்லையென்றார்' அந்த அப்துல் மலிக் கிபுனு ஹாஷிம் என்கிறவர் மிசுறில் எவ்விதம் பேராக இருந்தாரென்றால்; இறுக்கி ராச்சியத்தில் அசுமஈ என்கிற ஷாஇறு எவ்விதம் பிரசித்தமா யிருந்தாரோ அவ்விதமென்று.

(சன்ஆனீ) றஹிமகுல்லா சொல்லுகிறார்கள், நான் (குதைல்) கிளையாருடைய பைத்துகளை மக்கத்தில் ஒருவாலிபக்காரனிடம் ஓதினேன், அவரை முகம்மதுபுனு இதிரீ சிஷ் ஷாபிஇய்யியென்று சொல்லப்படும், ஷாபிஇய்யி றலியல்லாகு அன்குவுக்கு (குதைல்) கிளையாருடைய பைத்துகளிற் பதினாயிரம் பைத்தும், அதன் ஷறஹூமனனமாக விருந்தனவென்று பகுறுத்தீனுர் றூஸீ றஹிமகுல்லா ரிவாயத்துக் செய்திருக்கிறார்கள்,

இபுனு ஷூறைறஹூ சொல்லுகிறார், என் தகப்பனார் அசுமஇய்யைத் தொட்டு முந்தினரிவாயத்தைப் போலே தான் சொல்லக் கேட்டேனென்று (தாவூதுபுனுஅலிய்யு) றஹிமகுல்லா சொல்லுகிறார், நாமொரு போது (அபீதவுறு) றஹிமகுல்லா விடத்தில் இருந்தேன், அப்போது ஒரு மனுடன் வந்து அபாதவுறே இந்தமனுடரில் வந்திறங்கிய முசீபத்தைப் பார்க்க வில்லையா யென்றார், அப்போது, அபூதவ்று அதேது முஸீபத்தென்று கேட்டார்கள், அப்போது சொன்னார் தவுரிய்யாகிறவர் ஷாபிஇய்யைக் காண பிக்குகாளியென்று சொல்லுகிறார்களென்று, உடனேயவர்கள் புதுமையாகி (சுபுஹானல்லா) அவ்விதம் சொல்லவா செய்கிறார்களென்று சொல்லிப், பின்பு சொன்னார்கள், நாங்கள் சொல்லுகிறோம் திடனுகஷாபிஇய்யாகிறவர் இபுறுகீமுன் னுகசு-தவுரீ-அவர்கள் கூட்டாளிமார், சகல புக்ககாக்களிலு மேற்றமானவர்களா யிருக்குமென்று. அப்படிப் பேச்சு நடந்துகொண்டிருக்கும்போது, அந்த தவ்ரீ றஹிமஹூல்லா வந்துவிட்டார்கள். அவர்கள் இந்தச்சமாசாரத்தை அறிந்தவுடன் சொன்னார்கள்.

அல்லாகுத் தஆலா என்பேரில் இந்த ஷாபிஇய்யையக்கொண்டுபகாரஞ்செய்யாவிட்டால் வழிதப்பினவனுகத்தான் அல்லாஹூத தஆலாவைச் சந்திப்பேன், அல்லாஹூத் தஆலா இந்த ஷாபிஇய்யைக்கொண்டு நம்மைக் கண்திறக்கும்படி செய்தான். ஷாபிஇய்யி நம்மிடம்வந்த துவர்க்கத்திற்சொன்னார். அல்லாஹூத்தஆலாகுறுஆனிற் பொதுவாகச் சிலவிடங்களிலும், சொந்தமாகச் சிலவிடங்களிலும்சொல்லியிருக்கிறனென்றார். அப்போதுநான்சொன்னேன் இவைகளையெல்லாம் நானறிந்ததில்லையேயென்று உடனே அதற்கு தாரணம்சொல்லும்படிகேடினேன் உடனேஇன்னன்னுசகத்ஜமஉலக்குமென்கிறஆயதைச்சொற்பொதுவர்கவும், கருத்துச்சொந்தமாகவும்அதுகொண்டு(அபுஸூபுயானை) நாடப்பட்டதென்றும்(யாஅய்யுஹன்னபிய்யு இதாதல்லக்த்தும்) என்கிற ஆயத்தைச் சொற்சொந்தமாகவும், கருத்துப் பொதுவாகவும் சொல்லியிருக்கிறனென்று சொல்லித்தந்தாரென்றும்

இன்னும்(அபூதவ்று)றஹிமஹூல்லாசொன்னார் அவருடைய கலாமானது மற்றவர்களின் கலாமுடைய பாதையி விராதென்றும், இமாமுல்ஹறமைன்சொல்லுகிறார்கள். எங்கும்பிரசித்தமாகப்பட்ட சொல்லிலுள்ளதாயிருக்கும். மக்கா ஹறத்தில்பத்துவாவுடைய மஜ்லிசாகிறது, துவர்க்கத்தில் அப்துல்லாஹிபுனு அப்பாசு றலியல்லாகுஅன்கு அவர்களுக்காயிருந்ததுபின்னர் (அத்தாவுபுனு அபீறபாஹூ) றலியல்லாகு அன்குவுக்காயிருந்தது. பின்னர் (இபுனுஜூறைஹூ) றலியல்லாகுஅன்குவுக்காயிருந்தது. பின்னர் முஸ்லிமிபுனு காலிதுறலியல்லாகு அன்குவுக்காயிருந்தது. பின்னர் (சஈதுபுனு சாலிமில்-கித்தாஹ்) றலியல்லாஹூஅன்ஹூவுக்காயி

ருந்தது. பின்னர் இமாம்ஷாபிஇய்யி றலியல்லாஹு அன்ஹுவுக்காயிருந்தது ெயங்குதலென்று.

இன்னுமவர்கள்தான் சொல்லுகிறார்கள், இமாம் ஷாபிஇய்யி றலியல்லாஹு அன்ஹு ஹறத்தில் இருபதேகில் வானம்-வயதுடையவர்களாக இருக்கும்போதே பத்துவாச் செய்கிறவர்களாயிருந்தார்களென்று (இபுனு குல்லக்கான்) அவருடைய (தஃரீபு) என்கிற கித்தாபில் ஸஃபறுனிய்யைத்தொட்டும் பேசி வருகிறார் அவர்சொன்னார் ஹதீதுடைய உலமாக்களெல்லாரு முறங்கினார்கள் இமாம் ஷாபிஇய்யி வருமளவும், அவர் வந்தபிறகுதான் அவர்களை முழிப்பு வருத்தினர், அதனால் முழிப்பானார்களென்று.

றபீஉறஹிமகுல்லா சொல்லுகிறார் இமாம்ஷாபிஇய்யியுடைய ஆதத்தாகிறது சுபுஹு தொழுதபிறகு அவர்கள் மஜ்லிசில் வந்திருப்பார்கள். அப்போதுகுறு ஆனுடையபேர்கள்வருவார்கள் அவர்களுக்கு அதை விவரித்துச் சொல்லிக் கொடுத்துக்கொண்டிருப்பார்கள். பொழுதகிழம்புகிறவரையும், பின்பு ஹதீதுடையவர்கள் வருவார்கள் அவர்களுக்குப் பொழுதுயர்ந்து கொஞ்சம் நேரஞ் செல்லும் வரையும் ஹதீதை விழப்பம் செய்து கொடுப்பார்கள். (லுஹறா) நேரமாகவும்(லுகத்துசறுபு, நஹ்வு அறாலு) இந்தஇல்மை யோதுகிறவர்கள் வருவார்கள் அவர்களுக்கு இளமத்தியானம் வரையும் ஓதிக்கொடுப்பார்கள். பின்னர் இளமதியானமானவுடன் வீட்டுக்குப் போய்விடுவார்கள்.

(ஷைகு அப்தில்லாகில்யாபிஇய்யி) தபக்காத்தில் புக்ககாவில் இமாம் அபுல்ஹசன் அலிய்யிஷ்ஷாதிலிய்யி றலியல்லாஹு அனகு அளவிற்சேரும் சஹீஹாகிய ஸனதுகொண்டு சொல்லுகிறார்கள். அவர்கள்சொன்னார்கள். இமாம் ஷாபிஇய்யி றலியல்லாகு அன்கு (குத்புத்) தனத்துடைய மக்காமை யெத்தினபிறகுதான் வயாத்தானார்களென்று, ஷைகுஆரிபுபில்லாகிஷிஹாபுத்தீனிபுனுல்மலீக்கி றஹிமகுல்லாசொல்லுகிறார்கள். ஒருபோது நாகிமாலிக்கு மது



கபிலுள்ள இமாம் தாஜுத்தீ னிபுனி அத்தா இல்லாகிஷ்ஷாதிலிய்யிரலியல்லாஹு அன்கு இடம்போய் என்செய்யிதே யுங்களிடம் யான்சேர்ந்து பறக்கத்துப் பெற்றுக்கொள்ள நாடியிருக்கிறேன் என்கிலும்.

என்னுடைய மதுகபுஷாபிஇய்யாகவிருக்கிறது, அதைத்தான் நானுவந்திருககிறேன், ஆகையால், அந்தமதுகபின் பேரிலேதான் என்னைத்தாங்கள் வைத்து விடவேணும், இதுதான் என்னுடைய ஷறுத்தாயிருக்குமென்றார். உடனேயவர்கள் சம்மதியாகி பின்னமு மேல்திகமான வோர் பிரயோசனமும் அந்த மதுகபிலிருதிப்பாடும் சொல்லுகிறே னென்றார்கள் அதாவது, இமாம் ஷாபிஇய்யி றலியல்லாஹு அன்கு வபாத்தாகவில்லை இமாம்களுக்கு அவர்கள் குத்துபாகியே யல்லாதென்று.

ஷைகு அப்துல்லா ஹிபுனு அஸ் அதல்யாபி இய்யிறஹிமஹுல்லா சொல்லுகிறார்கள் இமாம் ஷாபிஇய்யி யுடைய (குத்துபுத்) தனத்துக்கு இரண்டு (மஃனு) இடங் கொடுக்கிறது, அதில் ஒன்றாவது ஒருவரில் நின்றும்இன்னொருவ ரளவிலே திரும்பித்திரும்பி வருமே அந்த குத்துபுத்தனத்துக்கும் இடமாகிறது, இரண்டாவது (அவுலியாக்களுக்) கொரு குத்துபும் (உலமாக்களுக்)கொருகுத்துபும் உண்டாவார்களே அந்த குத்துபுத் தனத்துக்கு மிடமாகிறது (அல்லாஹு அஃலம்:)

(ரிஸாலத்துல் குஷைரிய்யி) யென்கிற கித்தாபில் (ஷைகுன் ஆரிபுன் பில்லாகி அஷ்ஷஹீது பிலாறுல் கவ்ஷி) றலியல்லாஹு அன்குவைத் தொட்டும் பேசி வந்திருக்கிறார்கள் அவர்கள்(கிலுறு) அலைகிஸ்ஸாமிடத்தில் இமாம் ஷாபிஇய்யி யுடைய (தறஜாவைத்) தொட்டும் கேட்டதாயும், ஜவாபு சொன்னதில் அவர்கள்) அவுத்தாது உடைய மக்காமில் நின்றுமா யிருக்குமென்று சொன்னதாயும் பேசிவந்ததைச் சொன்னார்கள், அந்தச் சொல் நடந்தது அவர்கள்குத்துபுத்தனத்துடைய (மக்காமை) எத்தமுன்பாகவென்றுஞ் சொல்லியாபிஈ) றஹிமஹுல்லா அவர்கள் இமாம்ஷாபியிய்யி றலி

யல்லாஹு அன்குவை மட்டிடக்கூடாத வன்னிப்பெல்லாம் வன்
னித்தார்கள் (இன்னும் அசுமஈ யாகிறவர் பைத்துச்சொல்லும்
வித்துவான்களில் மிகவும் பார தூரமானவரா யிருப்பதுடன், தன
க்கு இமாம ஷாபிஇப்பி றலியல்லாஹு அன்கு பைத்துச்சொல்வ
தற்குள்ள அஆலுபதிஉ என்ற யாப்பு அணியுடைய இல்மில் உஸ்
தாதென்றும் விண்ணம்பஞ் செய்திருக்கிறார்.

இன்னும் (ஸமஃஷரி) இமாம் தாம் (சுன்னத்துஜமாஅத்திற்
சேரமுதலே (முஃதஸிலாக்களுக்கு) இமாமா யிருக்கும்போது
தானே ஷாபிஇப்பி இமாமைக் கணக்கில்லாத புகழ்ச்சியாகப் புக
ழ்ந்து தம்முடைய (கஷ்ஷாபென்கிற தப்ஸீறில்) (தாஸிக்கஅத்ற
அல்லாதஊனு) என்கிற ஆயத்தின் கருத்தை வெளிப்படுத்தி யவர்
களில் இமாம் ஷாபிஇப்பி றலியல்லாஹு அன்குடையசொல்லைப்
பிடித்து விழப்பஞ்செய்து அதைத்தான் (சஹீஹாக்கி) ஷாபிஇ
ய்பி இமாமை மிகவு மேலாக்கிப் பேசினார், இன்னுஞ்சொன்னார்,
இமாம் ஷாபிஇப்பி றலியல்லாஹு அன்கு (அறபுஷகத்தில்) மிக
வும் ஆழத்தையும், விரிவையும் உடையவரென்பதற்குச் சாட்சியாற்
போதும், மற்றும்பேர்களிடம் இதுபோலொற்றவிளக்க மறைந்
துபோ யிருக்கிற தென்றுஞ் சொன்னார்கள்.

இமாம் ஹசன் றஹிமஹுல்லா சொல்லுகிறார்கள், இது
போற்சொத்த (ஹிக்காயத்துகள்) அனேகமிருப்பதில் அதில்நூற்
றிலொருபங்காவது விபரிப்பதற்கு இந்தச்சிறிய கித்தாபு இடங்
கொள்ளா திருப்பதால் இந்தமட்டிற் சுருக்கப்பட்டன.

## பதிமூன்றும் பிரிவாகிறது.

ஷாபிஇப்பி றலியல்லாஹு அன்குவுடைய கீர்த்தி மேலாம்
பரமாயிருப்பதிலும், அவர்கள், பதவி வளர்ந்திருப்பதிலும் சில
(ஹிக்காயத்துகளைப்) பேசுகிறதாயிருக்கும்.

அதில், முந்தின ஹிக்காயத் தாகிறது, அபூ நசுறில் முகத்
தஸ் தம்முடைய (தாரீகு) என்கிற கித்தாபிற் பேசிவருகிறார்கள்



ஹாரூனா றஷீது பாத்துஷா தம்முடைய குமாரர் (அமீன், மஃ
மூன்) என்கிற இருவருடன் (ஹஜ்ஜுக்குவந்து) ஹஜ்ஜுசெய்து,
பின்பு, ராஜாங்கப் பட்டத்தின் விர்த்தித்தனத்துக்குப் பின் அந்
தப் பட்டம் (அமீனுக்கென்றும்) பின்பு (மஃமூனுக்கென்றும்)
எழுதி யதிற் சாட்சிகளையும் ஒப்பமிடுவித்து, அந்த விர்த்தியை
(கஃபுபாவிலே) கட்டித் தூக்கிவிட்டார். இந்தக் காரியம் நடந்தது
ஹிஜ்றத்து ஒரு நூற்றெழுபத்தைந்தாம் வருடம், அப்போது,
இமாம் ஷாபிஇப்பி றலியல்லாஹு அன்ஹுவுக்கு வயது இருபத்
தைந்தாயிருந்தன.

(இபுனு அலிய்யுல் பக்கிரு றஹிமஹுல்லா சொல்லுகிறார்கள்
ஹாறூன் றஷீது தனகுமாரரிருவருக்கும் இந்தச் சோபனம்
நடப்பிவிக்கவேண்டி யந்நேர மக்கத்திலிருக்கும் தலத்தார், வரத்
தார் சகலமகா ஜனங்களையும், அழைத்துச் சகலரும் ஒப்பினதா
ய்ப் பிறதிஷ்டவாக் கெடுத்துக்கொள்ளக் கருதிக்கொண்டு, அந்
தச் சபைச் சங்கத்தில (ஹறத்தில்) மிம்பறிலேறி, அல்லாவைப்
புகழ்ந்து (குத்துபாவோதிச்) சபையிலுள்ள சகலரிலும் சங்கை
கூர்ந்தவர் யாரோ அவர்களிடம் விண்ணப்பம் தேடினார், அந்நே
ரம் இமாம் சிறிய வயதாயிருந்தும் அறிவிலும், நடத்தையிலும்,
குணத்திலும் குலத்திலும், சகலதிலும் சங்கை கூர்ந்திருந்தபடி
யால், அவர்கள் தான் முன்னேறி இராஜாவை யடுத்து இரண்டு
குமாரருடைய தலையில் அவர்களிரு கையையும் வைத்து வாழ்த்
துதலுடைய பாங்காய் ஓர் பைத்துச் சொன்னார்கள். அதின் கரு
த்தாகிறது.

இவர்களிருவரும் அந்த ராஜாங்க வொப்பந்தத்தைப் பெற்
றுக்கொள்வதை விட்டும் திறக்கேடு செய்யாதிருக்கக் கடவார்க
ளாகவும், இன்னும், உம்மிடத்திலே தரிபாடாயிருக்கும் நாளெல்
லாம் அதின் நீளம் நீண்டிருக்கும் வரையில் அதை யெத்தினிக்கா
திருக்கக் கடவாராகவுமென்று சொல்லித் தாங்களும் அழுது, மற்
று மனுடரையும் அழும்படி செய்வித்தார்கள், மனுடரெல்லாரும்
இந்த பைத்தினாற் புதுமையாகி, யிந்த வாலிபர் யாராயிருக்குமோ
சோபனத்தையும், சலிப்பற்று தலையும், இரண்டையும் ஒரு பைத்
தில் அடக்கிச் சொல்லிவிட்டாரென் றொருவருக்கொருவர் விசாரி

கத்தேடியபொழுது, இமாம் றலியல்லாஹு அன்ஹுவுடைய பேரைச் சொல்லப்பட்டது. அன்றைய தினந்தான் இமாமுடைய நாயகத்தனம் சகலரும் அறியும்படியானது.

## இரண்டாம் ஹிக்காயத்தாகிறது.

இமாறத்துபுனு ஸைது பேசிவருகிறார். ஹாறூனுர் றஷீது பாத்துஷாவானவர், ஒருபோது (யமன் ராச்சியத்திலுள்ள) வரும்படிகளைச் சேகரித்து அவ்விடம் (பைத்துல்மாலில்) இட்டுவைக்க வேண்டி நம்பிக்கையுள்ள மனுடர் வேணுமென்று தேடியபொழுது இமா முகம்மதுபுனுல் ஹசன் றலிம் ஹுல்லா சொன்னார்கள். இராஜாவே யதற்குத் தகுந்தவர்கள் இமாம் ஷாபிஇய்யிதான் நல்ல ஆலிமான பக்கிரானவர், நம்பிக்கையுடையவர், அவர் தலைமுறையுங்குள் தலைமுறையில் (அப்துமனாபு) இடம் சேர்ந்திருக்கிறதென்று சொன்னார்கள். இதற்குமுன்னும் ஒரு வலதியில் ராஜாயிடத்தில் கைப்பட்டு இமாம் ஷாபிஇய்யி றலியல்லாஹு அன்ஹு மன்னிப்புப் பெற்றுவந்திருக்கிறார்கள். பின்னர் ஹாறூனுர் றஷீது ஆறு பேரைச்சேகரித்து வைத்துக்கொண்டார்.

இமாம்றலியல்லாஹு அன்ஹு சொல்லுகிறார்கள். பின்புஎன்னையும் அழைத்து அவர்களுடன் சேர்த்து அனுப்பினார், அவர்களெல்லாரிலும் வயதால் நானிளமையாகவிருந்தேன். அவர் கற்பித்தபடி (யமன்ராச்சியத்துக்குப்) போய், அவ்விடமுள்ளசீமான்களிடம் (ஸக்காத்து) முதலையறவாக்கி (புக்கருக்களுக்கு) அல்லாஹுத்தஆலா திருவுள்ளமானபடி பங்கிட்டுக்கொண்டேயிருந்தோம். (பைத்துல்மாலில்) ஒன்றும் சேர்க்கவில்லை. இதுசமாசாரத்தைக் கோளர்கள்போய் நாங்கள் செய்தவேலையை யென்னவிதமாகவோ மூட்டி (பைத்துல்மாலில்) ஒன்றும் போடவில்லையென்று சொன்னார்கள். அதைக்கேட்டு ஹாறூனுர் றஷீது எங்கள்பேரிற் கோபமாகி யெங்களை யவரிடம் வருவித்துக் கேள்விகேட்கத் தொடுத்தார். அஃதெவ்விதமெனில்.



ஒவ்வொருவரையும் பார்த்து நீங்கள் என் பைதுல் மாலிற் பணம்போடவில்லையென்று. இவ்விதம் அவர் கேட்குந்தோறெல்லாம், அவர்கள் ஜவாபுசொன்னது சீமான்களிடம் வாங்கிமிஸ்கீன்களுக்குக் கொடுத்துப்போட்டோமென்றே சொல்ல, அவருக்குக் கோப மதிகமாகிக்கொண்டே வருகிறதாயிருந்தது, அப்போது, நான் இதுதான் முடிவுகாலம். நம்மையெல்லாம் * (கத்லு) செய்து போடுவாரென்றெண்ணிக்கொண்டிருக்கும்போது, அவர்களையெல்லாங் கேட்டு முடிவாகிப் பின்னரென்னை நிறுத்தாட்டிக் கேள்விகேட்டார், உடனே நான் சொன்னேன், றசூல்சல்லல்லாகு அலைகிவசல்லம், மகுதுபுனுஜபல் றலியல்லாகு அன்குவை யெமனுக்கனுப்பி அவர்கள் யமனில் (ஸக்காத்துமுதலை) யெவ்விதம் நடத்தினார்களோ அவ்விதம் நடத்திவைத்தோமென்றேன் மறுபடியும் கேள்வி கேட்டார் அப்போதும்முந்தின ஜவாபின் கருத்தைப் பொதிந்த ஜவாபுகொண்டு வேறேசொல்லாய்ச் சொன்னேன், உடனே இராஜா தன்கையிலிருந்த பிரம்பையெடுத்து பூமியிற் குத்திக்கொண்டே யேதோவோர்யோசனை செய்கிறவர்போலிருந்தார்.

இவ்விதமிருக்கும்போது காலீ அபூயூசுபு றஹிமகுல்லா வந்துபுகுந்தார், அப்போது, அவர் சொன்னார் அமீறுல் மூமினீனே நான்முன் னுங்களிடம், புகழ்ச்சியாய்த் தெரியப் படுத்தியிருந்தேனே யந்த வாலிபர் இவர்தானுங்கள் * (சொக்காரரென்று) (உடனே, ஹாறூனுர் றஷீது (காலியூசுபைப்)பார்த்து நீர்வாய்மூடும் அல்லாவினுணை இந்த வாலிபருடைய நாவில் நின்றும் பிறப்படும் சொல்லுடைய மதுரம்போல் நானொருமதுரத்தையும் காணவில்லையென்று சொன்னார், பின்புஎன்னையும்.மற்றவர்களையுமன்னித்துப் போகும்படி யுத்தரவு செய்தார்.

அப்போதுடனே கூட்டிலடைபட்ட பறவை வெளிக்கிடுவது போல் அவ்விடத்தைவிட்டும் நாங்கள் வெளியாகி யின்ன மாளி

* கத்லு வெட்டுதல்
* சொக்காரர் அனந்திரங்கொள்பவர்

கையை யடுக்க வரும்போது, ராஜாவிடத்திலிருந்து சில தூதர்கள் விரைந்து வரக்கண்டு(இன்னலில்லாஹி, வஇன்னா இலைஹி ராஜிஊன்) என்றோதிக்கொண்டு(ஆ,ஆ)ஏதோ ராஜாவுக்கும், காலி அபூயூசுபுக்கும் ஏதோ வோர்விசேஷமான கருத்து வந்ததுபோலிருக்கிறதென்றெண்ணிப் பதறி யிருக்கும்போது, அவர்கள் வந்தடுத்துச் சலாம் சொல்லி ராஜா சிலமுதல் உங்களுக்கின்னும் செய்திருக்கிறாரென்று தந்தார்கள், அதைபபற்றி அல்லாகுத் தஆலாவைச்(சக்குறு) செய்துகொண்டு மறுபடியுஞ் சிலதூரம் நடந்து வரும்போது வேறே சிலர்கள் வந்து சலாம்சொல்லி இன்னஞ் சிலமுதல் வெகுமதி செய்தாரென்றும், இன்னமாளிகையில் விடுதி தங்கி யிருக்கும்படி இராஜாசொன்னதாயும் (காலி)அபூயூசுபு சலாம்சொல்லி அந்தமாளிகையிறங்கியிருந்து கித்தாபுகள் கோவையாக்கச் சொன்னாரென்றும் நீர் கித்தாபுகோர்வை செய்கிறவர்களில் மிகவும் ஏற்றமானவரென்று சொன்னாரென்றுஞ் சொன்னார்கள்,இமாம் ஷாபிஇய்யி றலியல்லாகு அன்குசொல்லுகிறார்கள் ஹாறூனுர்றஷீதிடம் என்னைக் கூட்டிக்கொண்டுபோய் நிறபாட்டிய நேரத்தில் என்னுடைய பேச்சுடைய வொடுக்கம் (லாஇலாக இல்லல்லாகு) வாகவா யிருப்பதே வேண்டுதலா யிருந்தது.

## மூன்றும் ஹிக்காயத் தாகிறது.

அலிய்யுபுனு முகம்மதிபுனி அபீஹஸ்ஸான் றஹிமகுல்லா பேசி வருகிறார்கள், இமாம்ஷாபிஇய்யி றலியல்லாகு அன்கு இருக்கி ராச்சியதுக்கு வந்தபோது யாரிடம் விடுதி தங்கலாமென்று யோசித்தநேரம் அபீஹஸ்ஸானிடம் தங்கிறதுநல்லதென்றுசொல்லப்பட்டது, அவர் மிகவும்ஸாலிஹானவரென்று சொல்நடக்கிறபடியால் அவரிடம் ஒரு வருஷமிருந்து அவ்விடத்தில் அவர்களால் இல்முடைய பிரயோசனம் சகலருக்கும் அடைய வந்து அவ்விடத்தாற் பிரயாணத்தை நாடியபோது தாமுந்தம்முடற்பிறந்தார்களான ஆறுபேருக்கும் சீட்டெழுப்பி யெல்லாவெவ்வொருசீட்டுக்கும் ஆயிரம் ஆயிரம் தங்கக்காசாக ஆறாயிரம் தங்கக்காசும் வந்தது.



இமாமிடம் அதைக்கொண்டுவந்து பாதகாணிக்கையாய்வைத்துப் பின்னரழுதார், அப்போது இமாம் கேட்டார்கள் நீரேனழுகிறீரென்று, அப்போதவர் சொன்னார், தங்களுடைய சிறப்பிலும் பர்த்தாரத் தன்மையிலும் நான் தகுந்த (கிதுமத்துச)செய்யத் தவணிபெருதிருப்பதை நினைத்து அழுகிறதல்லாமல் வேறில்லை, நான் இன்னமொருவருக்கெழுதி அவர்கள் இவ்விதம் நடப்பிவிக்கநான் தருணிபெறவில்லையென்றார், இமாம்றலியல்லாஹு அன்குஅதைக் கபூல்செய்துகொண்டுஅவ்விடமிருந்து மதீனத்துக்குமுகச்சீர்மையாகினார்கள்.

(றபீஉ)றஹிமஹுல்லா சொல்லுகிறார்கள், இமாம்ஷாபிஇய்யி றலியல்லாஹு அன்கு சொன்னதாக, அஃதென்னெனில்நான்பகுதாதுக்கு முன்னேக்கிப் போய்ச் சேர்ந்தபோது (பிஷ்றுல்மரீசி)யென்கிறவரிடம் நானிறங்க வேணுமென்றுவருந்தினதற்காய்அவரிடம் இறங்கினேன், என்னை யவருடையமெத்தைவீட்டின்மேலே சங்கையாக இருக்கவைத்துத் தாம் கீழ்வீட்டிலிருந்துகொண்டார் சொற்ப நாட்சென்றபோது ஒருநாள் அந்த (பிஷ்றுடைய) தாயார் என்னிடத்தில்வந்து ஷாபிஇய்யே நீர் ஏன் இந்த (ஸிந்தீக்கு) இடத்தில் இருக்கிறீரென்றார்கள், உடனே யவ்விடம் விட்டு நீங்கிவிட்டேனென்றார்கள். (ஸின்தீக்கு) என்பதற்கு அர்த்தமாகிறது (பர்தின்பேரில்) ஊன்றுதற் பிடித்து (லாகிறை) விட்டுவிடுகிறது, அதுகுப்பிரிலும் கொடியதாகும், அவர்தாய் இவ்விதம்சொன்னதெல்லாம் அவர் (முஃத்தஸிலிய்யா வாக) இருந்ததாலே(அல்லாஹு அஃலம்) என்றார்கள்.

(பைகக்கிய்யி) றஹிமஹுல்லா சொல்லுகிறார்கள், இமாம் ஷாபி இய்யி றலியல்லாஹு அன்கு பகுதாதுக்குப்பலதடவையும் போயிருக்கிறார்கள், அதில் (பிஷ்றுல் மரீசி)யிடம் இறங்கினதும (அபீஹஸ்ஸானிடம்) இறங்கினதும் (ஸஃபறானீ) யிடம் இறங்கினதும், இன்னதடவையென்று விவரந் தெரியவில்லை யென்றார்கள்.

## நாலாம் ஹிக்காயத் தாகிறது.

அலிய்யுபுனு அஹ்மதல் புறுகஇய்யி பேசிவருகிறார், இஸ்ஹாக்குபுனு ருகவைகியும் அஹ்மதுபுனு ஹன்பலும், யஹ்யபுனுமுஈனும், மக்கத்துக்கு வந்துஷைகு அப்துர்றஸ்ஸாக்கைத் தேடினார்கள், அதற்காக ஹறத்திலேபுகுந்து பார்க்கும்போது, ஒருவாலிபக்காரனார் நாற்காலியின் பேரி லிருக்கிறார், மனுடரெல்லாம் அவரைச் சூழ்ந் திருக்குகிறார்கள், அவர்சொல்லுகிறார், ஷாம் ராச்சியத் துடையவர்களே யென்னிடத்தில் நபியுல்லா வுடைய ஹதீதில் விளங்காதிருப்பதைக் கேட்டுக் கொள்ளுங்க ளென்று, அப்போது இந்த வாலிபக்காரனாரரென்று கேட்டோம்இவர்தான் (ஷாபிஇய்யுன் முத்தலிபிய்யுன்) என்று சொல்லப்பட்டது.

இபுனு ருகவைகி சொல்லுகிறார், நான் ஹன்பலீ றஹிமஹுல்லாவுக்குச் சொன்னேன், இவரிடம்போய் ஏதாகிலும் ஹதீதிற் கேட்போமென்று இன்னமும் சொன்னேன் (அம்கினுத் தைநபிஹுல் மத்தில்லிலி பீ அவ்காரிஹா) என்று ஹதீதில்வருகிறதின் கருத்தைக் கேட்போமென்றேன், அதற்கு ஹன்பலீ சொன்னார், இதற்கு முறுதுதான் இரவையிற் பட்சிகளை அதின்கூடுகளில்விட்டு வையுங்கள், அதை விரட்டாதையுங்க ளென்றுதான் மஃனாத் துலக்கமாயிருக்க இதைத்தொட்டும் கேட்டாலென்ன பாயிதாவென்றார் நான் சொன்னேன், இதைத்தான் கேட்பேன், அவரென்ன சொல்லுகிறாரென் றறிய வேணுமென்று சொல்லிப்பின்பு கேட்டேன்.

முத்தலிபிய்யே, அதாவது, ஷாபிஇய்யே, இந்த ஹதீதுக்கு மஃனாவென்னவென்று, அப்போது, என்னைப்பார்த்துப் பாரிவிய்யே உம்முட னிருக்கிறவர்தானோ இருக்கிராச்சியத்தில் இந்த ஹதீதில் பத்துவாக் கொடுத்திருக்கும்அஹ்மதுபுனு ஹன்பலென்கிறவரென்று எனக்குச் சமாசாரம் எத்தி யிருக்கிறவ ரென்று சொல்லிக்கொண்டார்.

பின்பு, முத்தலிபிய்யே இந்த ஹதீதுக்கு (மஃனாச்) சொல்லுமென்றேன் அப்போது சொன்னார்கள், இந்த ஹதீதையெனக்கறி



வித்தது, ஸுபுயானுபுனு உயைனா றஹிமஹுல்லாதான் அவர்களிடம் இதின (மஃனாவைக்) கேட்டதில்லெனக்குத்தெரியாதென்று சொல்லிப்போட்டு என்கையைப் பிடித்துக் கொண்டு முகம்மதே அல்லாஹுத் தஆலாவும்மில்பறக்கததுச்செய்வானாகவும், நீர்தான் சொல்லுமென்றார்கள் உடனே சொன்னேன் ஜாகிலிய் யாக்களுடைய (ஸமானில்) ஒருசபறென்னும் பயணத்தை நாடுவார்களாகில் பறவைகளை யெழுப்பி விடுவார்கள்; அது வலதுபாகம் பறந்தால்நல்ல சகுனமென்று சொல்லிக்கொண்டு புறப்படுவார்கள், இடதுபாகம் பறந்தால் துற்சகுன மென்று சொல்லிக்கொண்டு புறப்பட்டால் மீண்டு விடுவார்கள் அவ்விதம் நடந்துவருங்காலம்.

நபி சல்லல்லாகு அலைகிவசல்லத்தை நபியாக அனுப்பப்பட்டது அதைவிலக்கி யிந்தஹதீதைச் சொன்னார்களென்று சொல்லவும் (ஸுபுஹானல்லா) மிகுந்து சந்தோஷமாய் ஒப்புக் கொண்டு (இஸ்ஹாக்குபுனு ருகவைகி) அஹ்மதுபுனு ஹன்பலைப்பார்த்துச் சொன்னார்கள், நாம் இருக்கி ராச்சியத்திலிருந்து இவ்வளவுதூரம் வந்தது இந்த வொரு ஹதீதின் விளக்கத்தையறியவேயல்லாது வேறில்லையென் றிருந்தபோதிலும், இந்தச்சபறில் நமக்குக்கொள்ளை வாழ்வு வாய்த்துக்கொண்டதென்றார்கள், அப்போதுஇமாம் அஹ்மதுபுனு ஹன்பல் சொன்னார்கள், அல்லாஹுத் தஆலா வுண்மைசொன்னான், அறிவுடையவ னடங்கலுக்கும் மேலாலே அறிவுடையவ னாண்டுமென்று.

## அஞ்சாம் ஹிக்காயத்தாகிறது.

முகம்மதுபுனு அப்துல் ஹக்கம் பேசிவருகிறார், நாங்களொருபோது (ஸாகிதீன்கள், ஆபிதீன்களுடைய)நடத்தையையும், அவர்கள் (வறஉறையும்) அவர்கள் தெய்வீகரமாய் வாக்குரைக்கும்நாகரீகத்தையு மெடுத்துபேசி அவர்களில் (துன்னூனில் மிசுரிய்யி) றலியல்லாஹு அன்கு வுடைய புகழ்ச்சியு மெடுத்துப் பேசிக் கொண்டிருக்கும் நேரம் (கத்தீபுபுனு நுபாத்தா) வுடைய மகன் (உமறு) றஹிமஹுல்லா வந்தாரெனப் பேசிக்கொண் டிருக்கிறீர்களென்று கேட்டார், நடந்ததைச் சொன்னோம், அப்போது,

சொன்னார், அல்லாவினுணை, நாகரீகத்திலும் (வறகிலும் ஸுகுதிலும்) இமா முகம்மதுபுனி இதிரீசிஷ் ஷாபிஇய்யைப்போல் ஒருவரையும நான் காணவில்லையென்று.

இவ்விதம், சொல்லிப் பின்புஞ் சொன்னார், நானும், ஹாரிதுபுனுபிஷ்றும் ஒருநாள் (சபாமறுவா) வுக்குப் போனோம் அந்த ஹாரிதும் சிறுபிள்ளையா யிருந்தார், அப்போது (சாலிகுல் முஸ்னி யிடம் (குறுஆன்) ஓதத் துடங்கி (பிஸ்மில்லா கிர்றகுமானிர்றகீம் காதாயவ்முல் பசுலி ஜமஃஅக்கும் வல் அவ்வலீன்) தொடுத்து (லிம்முகத்தி பீன்) வரைக்கு மோதினார், அவ்விடத்தில் இமாம் ஷாபிஇய்யி றலியல்லாஹு அன்கு இருந்து இதைக்கேட்டவுடன் சரீரம் துளும்பி நடுநடுங்கிக் கடினமாகிய அழுகையாய் அழுது ஓர் (துஆ) வோதினார்கள், அந்த (துஆவை) மேற்கூறிய அறபுத் தமிழ் கித்தாபில் மூந் நூற்றிப் பதினைந்தாம் பக்கத்திற் பார்த்துக் கொள்ளவும் (ஸுபுஹானல்லா) அந்த ஆயத்தைக்கேள்கவும் சமானுடைய கமாலிய்யத்தானது அவர்களை யிவ்விதம் உள்ளச்சமாகும்படி வருவித்திட்டது.

(உமறுபுனு) றுபாத்தா) றஹிமஹுல்லா சொல்லுகிறார், இமாம் றலியல்லாஹு அன்கு இருக்கி லிருக்கும்போது, அவர்களிடம் எதாவது (இல்மு) கேட்டுக்கொள்ள வேணுமென்று நாடியிருந்தேன், அவர்களை யொருக்காலும் நான் கண்டிருப்பதில்லை, யப்படி யிருக்கும்நாளில் நான் ஆற்றருகில் (உளுச்)செய்வதற்காக வேண்டியிருந்தேன்.

அப்போது, ஒருமனுடன் என்னருகில் நடந்துபோறவர் என்னைப்பார்த்து. (உளுவை) யழகாக்கிவை, அல்லாஹுத் தஆலா வுன்னை யழகாக்குவா னென்றுசொல்லிப் பின்னர்நடந்துபோனார் நானும் அவரைத்துயர்ந்துபோனேன், அவரென்னைத்திரும்பிப்பார்த்து எடா பிள்ளையே யுனக்கேதாவது ஹாஜத்துண்டோ வென்றார், நான் சொன்னேன் எதாவது (இல்மு) சொல்லித் தரவேணுமென்றேன், ஸுபுஹானல்லா எனக்குச் சில (வஃலுகள்) சொன்



னார். அதினுடைய நாகரீகமும், வட்டுவறுக்கமும். நானென்ன சொல்வேனென்று சொல்லிப், பின்னரிவர்களாரென்று கேட்டேன். இவர்கள்தான் முஹம்மதுபுனு இதிரீஸிஷ்ஷாபிஇய்யி றலியல்லாஹு அன்ஹு என்று சொல்லப்பட்டது.

(அபூநசம்) றஹிமஹுல்லா தம்முடைய கித்தாபில் (ஜுனைதுல்பகுதாதிய்யி) றலியல்லாஹு அன்ஹுவைத்தொட்டும் (ஜஃபறுல் முத்த சவ்விபு றஹிமஹுல்லா பேசிவந்ததாகச் சொல்லுகிறார், ஜுனைதுறலியலலாஹு அன்ஹுசொன்னார்கள். இமாம்ஷாபிஇய்யாகிறவர்கள் (தீனுடைய) காரியத்தில் உண்மை வாக்குக்கொண்டு பலங்கொடுக்கப்பட்டு, அதனால்மொழிகிறவர்களில்நின்றுமாயிருந்தார்களென்று சொல்லி, அவர்கள் சொல்லியிருக்கிற (வஃலிற்) சிறிதையெல்லாமெடுத்துக் காட்டினார்களென்று.

## ஆறும் ஹிக்காயத்தாகிறது.

றவுலுல்பாயிக்பில் மவாஇலி வத்தக்காயிக்கென்கிற கித்தாபையுடையவர் பேசுகிறார். ஹன்பலீ யிமாமாகிறவர்கள், இமாம் ஷாபிஇய்யை யெந்தநேரமும் துதிசெய்துகொண்டிருப்பது ஆதத்தாக இருந்தது. ஹன்பலீஇமாமுக்கொரு மகளுண்டும்.

அந்தப் பிள்ளையானது இரவெல்லாம் வணங்குகிறதும், பகலெல்லாம் நோன்புபிடிக்கிறதும், அவுலியாக்களுடைய சமாசாரத்தை மிகுந்து உவப்பாய்ப் பேசுகிறதும் தீர்மானமான (வறகுடைய) பிள்ளையாகவிருந்தது. தன்தகப்பனார், இமாம் ஷாபிஇய்யை மிகுதமுவந்திருப்பதாற் றூனுமிகுதியுவந் தெப்போதாகிலும் அவர்கள் இல்மைக்காதில் விழுததாட்டிக் கொள்ளவேணுமென்று நாட்டம் கொண்டிருக்கும் காலம்.

ஒருநாள் ஹன்பலீஇமாம்வீட்டில் இமாம்ஷாபிஇய்யி றலியல்லாஹு அன்ஹு இராத்தங்கவேண்டியதா யொத்துக்கொண்டது குறித்தமகளாரிதையறிந்து மிகுந்த சந்தோஷமாகிச் சங்கையான விருந்துசெய்து (ஆகத்துப்) படியுறங்கும்நேரம் வந்தவுடன் இமாம் அஹ்மது தம்முடைய ஆதத்துப்படி . தொழுகையிலா

ஞர்கள். இமாம் ஷாபிஇய்யி மல்லார்ந்துபடுத்தே யிருந்தார்கள்.
மகளார் பஜ்றுவரையிலும் ஆட்போட்டு இமாம் ஷாபிஇய்யை
யென்ன அமல்கொண்டு இரவை ஹயாத்தாக்கி வைக்கிறார்களென்
று நோட்டமிட்டுக்கொண்டே யிருந்தார்கள். யாதொரு தொழு
கையும் நிலையும் காணவில்லை, (பஜ்றுன) பிறகு எழும்பித்தொழப்
போய்விட்டார்கள். பின்பு தகப்பனரிடம் இமாமுடைய ஹால்
இவ்விதமல்லவா யிருக்கிறது நீங்கள் அவர்களை மெத்தவும் வலுப்ப
மாக்கிவைக்கிறீர்களே யென்றார்கள்.

உடனே, இமாம் அஹ்மது றலியல்லாஹு அன்ஹு எழும்பி
இமாம்ஷாபிஇய்யி றலியல்லாஹு அன்ஹு விடம்வந்து உஸ்தாதே
இன்றிரவு தங்களுக் கெப்படியிருந்ததென்று கேட்கவும், இமாம்
றலியல்லாஹு அன்ஹு சொன்ஞர்கள். இன்றிரவைக்காண மண
மான, பறக்கத்தான, லாபமான இரவை நான் காணவேயில்லை
யென்றார்கள். இமாம் அஹ்மது அஃதெப்படி யென்றார்கள். அப்
போது இமாம்றலியல்லாஹு அன்ஹு சொன்ஞர்கள், இன்றிரவை
யில் நூறு (மஸ்அலாவும்) அதின் (ஜவாபும்) உம்முடைய வீட்
டில் என்னுடைய படுக்கையிற்றுனே சரிக்கட்டினேன். சக
ல மூஸ்லிமானவர்களும் அதையெடுத்து நடந்து பிரயோசனம்
பெறவேண்டி அதாவது இன்ன இன்ன (மஸ்அலா) வென்று வெ
ளியாக்கியிருப்பார்கள். பின்பு பயணஞ் சொல்லிக்கொண்டு போய்
விட்டார்கள்.

பின்பு. இமாம் அஹ்மது தங்கள் மகளிடம் வந்து மகளே
கேட்கவில்லையா, நான் இன்றிரவெல்லாம் தொழுததைப் பார்க்கி
லும், அந்த இமாம் படுத்திருந்து இந்த (ஹாக்குமெல்லாம்) சரிக்
கட்டினது (கவாபால்) எழுபது மடங்கு அதிகமாயிருக்
கும். மேலும் அந்த ஹாக்கும்கள் கொண்டு) கியாமத்து வரையி
லும் எத்தனை கல்க்குகள் அமல்செய்து பிரயோசனம் பெறுவார்
களோ, அவ்வளவு (அமலுடைய தவாபும்) அவர்களுக்கும் கி
டைக்குமென்று எடுத்துக்காட்டினர்கள். அவர்களுடைய உசும்
புதல், ஒடுங்குதல் சகலதும் அல்லாவுக்காக வேண்டியாயிருக்கும்.



அவர்களுடைய வுறக்கமும், வணக்கமாயிருக்கும், அவர்களுடை
ய இருத்திலாபும்) உம்மத்துக்கு றஹ்மத்தா யிருக்கும், இவைக
ளைக் கேட்டவுடன் மகளார் மிகவும் புதுமையாகி (இஸ்திக்பாறு)
செய்துகொண்டார்கள்.

## ஏழாம் ஹிக்காயத்தாகிறது.

(இபுனுசகுலுல் கிந்திய்யி) றஹிமகுல்லா சொல்லுகிறார்கள்
நான் ஷாபிஇய்யி றலியல்லாகு அன்கு சொல்லக் கேட்டேன், மக்
கத்தி லிருக்கும்போது, கையில் யாதொன்றும் இல்லாமல் முட்
டுப்பாடா யிருந்தகாற் குறைஷிகளில் நின்றும் ஆரைக்கொண்டு
ஒத்தாசை பெறலாமென்று யோசித்ததில்,யாரும் தட்டுப்படாத்த
தால் எமனென்கிற வூருக்கே போகக் கருத்து வைத்துச் (சன்ஆ)
வுக்கு வந்து (எமனில்) இருக்கப்பட்டவர்களிற் சங்கை யு
டையவர்களை விசாரித்ததில், ஒரு மனுடனை யெனக்குச் சொல்லப்
பட்டது, அவ்விதமாய் எமனென்கிற வூர்போய்ச் சேர்ந்தவுடன்
அவருடைய வீட்டுக்குப் போனேன், அப்போது, ஒரு மனு
டன் இருக்கிறார், அவரைச் சூழமனுடர்கள் மிகுதிபேர்கள் இ
ருக்கிறார்கள், உடனே சகலர்களையும் விருந்து வீட்டுக்கு அ
ழைத்துக் கொண்டு போறத்துடன் என்னையும் அழைத்துக்
கொண்டு போனர், சகலரும் விருந்து தின்று போய் விட்டார்
கள்.

பின்பு, என்னிட மோராளனுப்பி நீரார், எந்தவூர், எதுகுல
மென்று விசாரித்தார், அப்பொழுது,நான்என்னுடைய பேர் ஊர்
குலம், இவைகளைச் சொன்னேன், உடனே யென்னை அந்த இடத்
தில் நின்று மேலான வொருதலத்தி லாக்கித் தானும் வந்து எ
னக்குச் சலாம் சொல்லிப் போய்விட்டார், இவ்வித மூனுநாளும்
வந்து வந்து சலாம் சொல்லிக் கொண்டே போய் விட்டு, நா
லாம் நாளானவுடன் வந்து கேட்டார், நீங்கள் விருந்தாடி வந்தீர்
களோ, அல்லது, நம்மைக் கண்டுகொண்டு போக வந்தீர்களோ
வென்ன, நானுங்களைக் கண்டு கொண்டு போகத்தான் வந்தே

னென்று, சொன்னேன், உடனே அவ்விடத்தையும் விட்டு நீங்கி அதைக்காணச் சிறப்பான வேர்தலத்தில் என்னை வைத்து எப்போதும், என்னிடம் வந்து பழக்கங்கள் (ஹதீதுகள்) மருகுசலாய்ப் பேசிக்கொண்டே யிருப்பார், இப்படிச் சிலநாட்சென்றதின் பிறகுநான்ஊருக்குப்போக நாடி யிருக்கிறேனென்று சொன்னேன், அவரைப் பார்த்தால் என்னைப் பிரியப் பிறியங் கொள்ளாதிருந்து மிகுந்த மனமடியின் பேரிற் சம்மதித்தார், பின்புநான்பிறயாணமாகும்போது சமதியான தடயம் கொண்டுவந்து தான் வெகுதாரமெல்லாம் துயர்ந்துவந்துபயணம்அனுப்பிக்கொண்டு போய் விட்டார்.

பின்பு மக்கத்தில் வந்து சிலகாலமாய் அவரைமக்கத்திற்கண்டுகொள்ளவேண்டு மென்கிற நாட்டமாய் விசாரித்துக் கொண்டிருக்கும்போது, ஒருவரிடம் அவர் வந்தார், உடனே அவருக்காக என்வீட்டைச் சிங்காரித்து அலங்கார மாக்கிக்கொண்டு, பின்னரவரைப் போய்க் கண்டு சலாம் சொல்லி மிகவும் உபசரித்து என் வீட்டுக் குழைத்ததில் என்னை மிஸ்கீனென் றெண்ணிக்கொண்டுசெல விழுத்து விடப்படாதென்று கிருபையாகப் பின் தாங்கினார், நான் எவ்விதமும் நீங்கள் என்வீட்டுக்கு வரத்தான் வேணுமென்று அழைத்துக்கொண்டு போய் வீட்டில், அல்லாகுத் தஆலாதந்தமட்டில் விருந்து கொடுத்துப் பசியாறித் தீர்ந்தது

பிறகு, என்னைத் திரும்பிப்பார்த்துச் சொல்லுகிறார் அருமையான வுடற்பிறந்தார் மகனே. இப்பேர்ப்பட்ட வுபசாரம் உங்கள் போற்கொத்த கனவான்களுக்குச் செய்வீர்களாகில் உங்களுடைய தகுதி வலுப்பமாயும் கீர்த்திப் பிரகாசமாயுமிருக்குமென்று (சுபுஹானல்லா) இல்லாமைகொண்டு, உள்ளான்மைபாவிக்கிதலும்உள்ளதைக்கொண்டு போதுமாக்குதலும் ஒருவர் செய்யும்நன்றியைக் கடனைப்போற் கண்டு அதைவிட அதிகமாய்ப், பகரம் செய்வதும், புகழப்பட்ட குணத்தில் நின்று முள்ளது.



## எட்டாம் ஹிக்காயத்தாகிறது.

அஹ்மதபுனு முஹம்மதித் தின்னீசிய்யி தம் ஷைகு மார்களைத்தொட்டும் பேசி வருகிறார்கள். இமாம் ஷாபிஇய்யி றலியல்லாஹு அன்ஹு தின்னீசு என்கிற ஊருக்குவந்தபோது (யஹ்யபுனு ஹஸ்ஸான்) இடம் விடுதியிறங்கியிருந்தார்கள். அவர் மிகுந்த சீமானுகவும், சங்கையாளியாகவும் கொடையாளியாகவுமிருந்தார். அவருடைய வீட்டில் வழமையாய் நடக்கிறது. எட்டெட்டுநாளைக்கு ஒரேமாதிரியானவிருந்து நடக்கிறது. அவைமுடிந்தபிறகு மறுவிதம், இவ்விதமாய் நடந்துவரும்போது இமாம்றலியல்லாஹு அன்ஹு அவருடைய பொங்கற்காரனையழைத்துத் தங்கட்குப்பிடித்த மாதிரியாய்ச் சொல்லிக்கொடுத்து அவ்விதம் ஆக்கச்சொன்னார்கள். இது யஹ்யபுனு ஹஸ்ஸானுக்குத்தெரியாது. பின்பு வஜ்பனம் வழங்கும்போது வஜ்பனத்தைமறுவிதமான கோப்பாகக்கண்டவுடன் யஹ்யபுனு ஹஸ்ஸானுடைய முகம்பேதலித்துப் பொங்கற்காரனிடம் அதைத்தொட்டும் கேள்விகேட்க நாடியபோது, இமாம் றலியல்லாஹு அன்ஹுதானே முந்திச் சொன்னார்கள். நானதான் அவனை யிவ்விதமாய் ஆக்கச்சொன்னேனென்று.

உடனேயஹ்யபுனுஹஸ்ஸான் பொங்கலாண்டிபேரிற் சந்தோஷமாகி யவனைப்பார்த்துச்சொன்னார். நீ இமாம்ஷாபிஇய்யி றலியல்லாஹு அன்ஹுவுடையமனதைச்சந்தோஷமாக்கியவர்களெவியது போற் சமைத்தபடியால் நீயுரிமைபெற்றாய் என்றுசொல்லியுரிமை விட்டுவிட்டார். இன்னமும் இஃதுபோ லொரு ஹிக்காயத்து நஷ்அர்லறஹான் என்னுங்கித்தாபில்யாபிஈ றஹிமஹுல்லா பேசி வந்திருக்கிறார்கள். அதாவது பகுதாதில் ஸஃபறானி என்குகிறவருடைய வெள்ளாட்டியானவள் இமாம்றலியல்லாஹு அன்ஹு அவர்களுக்கு சந்தோஷம்போல் ஆக்கிக்கொடுத்தசங்கதியில், ஆகையால் நம்மளுடைய இமாம்களின் பரக்கத்துகளைக் கொண்டு, நரகத்தைவிட்டும் அல்லாஹுத்தஆலா நம்மளை உரிமையாக்கினென்று என்றுந் தரிபாடானவீட்டில் குடி இருத்தாட்டிவைப்பானுகவும்,

## பதினாலாம் பிரிவாகிறது.

இமாம்ஷாபிஇய்யி றலியல்லாஹு அன்ஹுவுடைய (அக்கீதாவைச்) சுருக்கமாய் விவரிக்கப்படுகிறது. இன்னும்அவர்கள்சொல்லில் வரப்பட்ட வுசூலுத்தின் அதாவது தீனுக் கடிமூடானதினுடைய (ஹுக்கும்களும்) சுன்னத்து ஜமாஅத்து இமாம்கள்எந்தவிண்ணயத்தின்பேரிலிருந்தார்களோ அதிலும சிலதைவிவரிக்கப்படுகிறது, முகம்மதுபுனு இஸ்மாஈல் தம்முடைய தகப்பனார்சொன்னதாகப் பேசிவருகிறார், முகம்மதுபுனு இதரீசிஷ் ஷாபிஇய்யி றலியல்லாகு அன்குவுடைய வரலாற்றை விவரமாய்ப்பேசிவந்து ஹாறூன் றஷீதுடைய மஜ்லிசில் முகம்மதுபுனுல் ஹசன் உடைய (சுஆல் ஜவாபு) நடத்தின நேரத்தில் (பிஷ்றுல் மரீசி) யென்கிறவர் கேட்டார், ஷாபிஇய்யே அல்லாகுத்த ஆலா ஒருவனென்கிறத்தில் அத்தாட்சி யென்னவென்று.

அப்போது, இமாம் றலியல்லாஹு அன்ஹு சொன்னார்கள், பிஷ்றே (காஸ்லான ஆரிபீன்களுடைய) நாவின்பேரில் உமக்கு ஜவாபு சொன்னால் நீர் ஏர்த்துக் கொள்வதுண்டா இருந்தாலும் உம்முடைய சரீரம் தான் அல்லாகுத்த ஆலா ஒருவனென்கிறதாயறிவிக்குமேயந்த அத்தாட்சியைச் சொல்லுகிறேனென்றார்கள்.

(முந்தின) அத்தாட்சியாகிறது சத்தம்போடுகிற ஒருவஸ்துவில் நின்றுமுள்ள சத்தங்கள் பலவிதமாயிருபபதுதான், அவனொருவனென்கிறதின் பேரிலத்தாட்சி யாகும் (இரண்டாவது) அத்தாட்சியாகிறது ஒருஜடலத்திற் பேதகமாகிய நாலு நெருப்பாகிறதுபடைகோலம் செவ்வுற்றுநிற்பதில், அஃதொழுங்கிட்டுஇருப்பதின் பேரில் ஒத்துமையாயிருப்பதுதான், அவனொருவனென்கிறதின் பேரில் அத்தாட்சி யென்றார்கள் (மூன்றாவது) அத்தாட்சியாகிறது (மஷ்ரிக்கிலும், மகுரிபிலும்) பேதகமாயிருக்கும நாலுகுணாகுணங்கள் ஒன்றுக்கொன்று விரோதியாயிருந்துகொண்டு ஹால்கள் இணக்கமா யிருககிறதின்பேரிற சேர்வையாக்கப் பட்டவைகளாகக் கோலங்களில்லாமல் இருப்பதுதான், அவனொருவனென்கிறதின்



பேரி லறிவிக்கிறதென்றும் (நாலாவது) அத்தாட்சியாகிறது, குறுஆனில் (வஇலாகுக்கும் இலாகுன் வாஹிதுன்) என்கிற ஆயத்துத் துவர்க்கமாய் (யஃக்கிலூன்) வரையிலும்சொல்லப்பட்டதே அந்த வஸ்துகள் அடங்கலும் அவனொருவனென்கிறதின் பேரி லறிவிக்குமென்றார்கள், இந்தநாலுஅத்தாட்சியுடையவிளக்கம்கடந்தபேர்களுக்குத்தான் எத்துமல்லாமல் எல்லாருக்கு மெத்தமாட்டாது, அதற்காகத்தான் இமாம் (பகுறுத்தீனுர் றாஸிய்யி) றஹிமகுல்லா (மனாக்கிபுஷ் ஷாபிஇய்யி என்கிற கித்தாபில் விவரிக்கிறார்கள்.

(முந்தினதாகிறது) சத்தங்களுடைய செய்தி (இஃலம்) அறி, உடற் பிறந்தானே சத்தங்களையும் (ஹறுபு)களையும் உண்டுபண்ணுகிறது தனதாக்கப்பட்ட சில வுறுப்புகளா யிருக்கும், அதாவது தொண்டையும்,நாவும்,உதடும்,பற்களுமாயிருக்கும், இந்த வுறுப்புகளிற் சகலரும் கூட்டாகிச் சத்தங்களில்விதற்பமானவர்களாகவே காணப்படுகிறது துன்யா வடங்கலிலும் இரண்டு மனிதனைச் சகலவன்னிப்புகளிலும் ஒற்றுமை யானதாய்க் காணப்படவில்லை, பூராயத்துடைய(காதிறான)நாயன் எல்லா ஒவ்வொரு மனுடனுடைய தொண்டையை நாவை யதுக்குத் தனதாக்கப்பட்டிருக்கும் பாங்கைக்கொண்டு தனதாக்கி வைக்காதிருந்தால், அவன் தான் தானே குறிக்கப்பட்ட அந்தச் சத்தங்கொண்டு தனது பெற்றவனாகிவிடுவான், அவ்வித மில்லாவிட்டால் அந்தத் தனதுண்டாகாது

இன்னும், அந்தத் தனதுபெற்ற அந்தச்சொந்தங்களை (நுத்துபா)கெர்ப்பம்குணாகுணங்கள்,மண்டலங்கள்,நட்சத்திரக்கிரேகங்களிவைகளளவிற்சேர்க்கவும்இடமில்லையேயென்றால் அடங்கலையும் அடங்க லளவிற் சேர்ப்பது பதவியிற் சரியாகத்தா னிருக்கும் ஆகையால் இவைகளை இருத்தியாறுடைய (பாஇல்ஜல்லஜலாலுஹு) அளவிற் சேர்த்து அவன் ஒன்றென்று சரீரம் அத்தாட்சி கொடுக்கிறது. ஆலத்திற்குச் சத்தங்கள் ஒன்றுக்கொன்று விதற்பமாயிருப்பது போல், (சூறத்தென்னும்) ரூபங்களும் ஒத்துமையாகாது

மேற்கூறிய ரெண்டாவதான நாலுநெருப்புக்கும்விவரமாவது ஜமாஉடையஷகுவத்தை நிறைவேற்று மிடத்திற் சரீரத்திலுண்டாகும்ஆசையின்உஷ்டணமும்,கோபம்அடர்ந்தேறிவரும்போது கொதித் தெழும்பும் உஷ்டணமும் வஜீபனங்களை ஜீரண மாக்கிவைப்பதிற் குணபாடு செய்யும் உஷ்டணமும் ஹயாத்தின் கருமம் அதுகொண்டு நிறம்புமே யவ்விதமான நாடிகளின் உஷ்டணமும் ஆக இந்த நாலு உஷ்டணமும் அததின்அந்தரங்கமொன்றுக்கொன்று ஒவ்வா வண்ணமான நெருப்பாக இருக்கிறது பின்பு இந்த நாலும் இன்சானுடைய திரேகத்தில் மறைந்து அததின் தேள்வை நேரத்தில் வெளிக்கிட்டு அவன் காரியத்தையிணக்கமாக வருத்துகிறது.

இன்னும் அறி, இந்த நாலும் ஒன்றுக்கொன்று மாற்றமாயிருப்பதுடன் இன்சானுடைய *)மசுலஹத்தை உண்டுபண்ணுகிறத்தின் பேரில் ஒன்றுக்கொன்று ஆதரவாயிருக்கிறது, இதுவும் அத்தாட்சியாயிருக்கிறதுஅதையுண்டுபண்ணினவன் ஒருவனென்கிறதின்பேரில்.அறிவிக்கிறதுமூன்றும் அத்தாட்சியின்விவரமாகிறது ஹக்கமாக்கள் சொற்படி யுயிருள்ளதுண்டாகிறது மண் தண்ணீர் காற்று நெருப்பு இந்த நாலிணுலும் பித்தம் வாதம் சிலேற்பனம் அய்யம் இவைகளாலும்,பின்னர் இவைகளின் அந்தரங்கம்ஒன்றுக்கொன்று மாற்றமாயிருக்க இவைகளிலொன்று ஊர்ச்சிதங் குறைந்தால் அவனுடைய(மசுலஹத்தும்)குறைந்துபோகிறது.இவைகளும் அதையுண்டு பண்ணினவன் ஒருவனு யிருக்கிறதின் பேரிலறிவிக்கிறது,நாலாம் அத்தாட்சியின் விவரமாகிறது (வஇலாகுக்கும்இலாகுன்வாஹிதுன்)எனகிறஆயத்தின் துவர்க்கம்தொடுத்து (லிகவ்மின யஃகிலூன்) என்கிற வரையும் சொல்லியிருப்ப தடங்கலும் அவனொருவ னென்கிறதின் பேரி லறிவிக்கிற தென்றார்கள்.

இன்னும்,இமாம் றலியல்லாகு அன்கு சொன்னார்கள், (பிஷ்றே) யறிந்துகொள்ளும் இன்சானென்னும் படைப்பில் எப்போதும் நிரப்பத்தில் மாற்றம் (இழந்திருப்பதும், அவன் ஒருவனென்

* (மசுலஹத்து) யென்பது இணக்கம்.



கிறதின் பேரில் அத்தாட்சி யாயிருக்குமென்றார்கள், அதின்விவரமாகிறது (பகுறுத் தீனுர் ருவலிய்யி) றஹிமஹுல்லா சொல்லுகிறாகள், இன்சானுடைய சரீரம்ஒருஹாலில்நின்றும்,மறுஹாலளவிற் றிரும்பிக்கொண்டே வருகிறது, அஃதெதுபோலானால்.

சிறுபிள்ளையா யிருந்தால், பின்பு வாலிபனானான், பின்பு நடுவயதானான் பின்பு கிழவனானான் இன்னும் பருத்திருந்தான், பின்புமெலிந்தான். இன்னுமெலிந்திருந்தான், பின்பு, பருத்தான்,இன்னும் வாதனாடிக் காரனா யிருந்தான், பின்புபித்தநாடிக்காரனானான் இதின்மாற்றமு மாகினான், இவ்விதம் அவன் ஹால்க ளெல்லாம் பேதகமாகிக் கொண்டே வருவதுடன் அவன் சத்தத்திலும், சூறத்திலும், முந்தின கோர்வைப்படிதா னிருக்கிறான் இந்தப்பேதலிப்புகள் அவனிலுள்ள குண குணங்களால் நடக்குதென்று வருமாகில அததின் குணகுணங்கள், நாடிகள் பேதலித்தபோதே,ஹாலுகளுக்கும் பேதலிப்பு வந்துவிடவேண்டும், அவ்விதம் காணப்படவில்லை, அவன் சத்தமும், சூறத்தும் அந்தக் குண குணங்கள்பேதலித்ததுபோற் பேதலிக்கா திருந்த படியால் இதைக் கெட்டி பத்திரமாய் உண்டு பண்ணுகிற (பாஇல் ஹக்கீம்) ஒருவனுயிருக்கிறானென்று இவைகள் தானே யறிவிக்கிற தென்றார்கள். ஆனபோதே குறித்த அத் தாட்சிகளால் அவனொருவனென்கிறது திட்டமாகிறது, ஒருவ னல்லாம லிருந்தால் ஒருவஸ்துவும் உண்டாகாது. இந்தத் துறையில் (பத்துஹைதயான்) ஒன்று அறபுத் தமிழால் அச்சிட்டிருக்கும் கித்தாபில் விவரமாய்ப் பேசி யிருப்பதைச் சோடித்த ஜவாபாகச் சொன்னார்கள்.

(பிஷ்று) என்கிறவர் கேட்டார் முகம்மதா கிறவர் அல்லாவுடைய றசூலென்கிற தற்கும், குறு ஆனை அல்லா இறக்கிய தென்கிற தற்கும் அத்தாட்சி யென்னவென்று கேட்டார், அதற்கெல்லாம் ஜவாபு சொன்னார்கள் (பைகக்கிய்யி) றஹிமஹுல்லா சொன்னார்கள், இமாம் றலியல்லாஹு அன்ஹு (ரிசாலா) வென்கிற கித்தாபின் முகவுரையின் துவாக்கத்தி லேயே சொல்லி யிருப்பதைக் கண்டு அல்லாஹுத் தஆலாவை யறிந்துகொள்ளக் கூடுமென்றார்கள்.

(ஹபுசுல்பறுது) என்கின்ற பெரும் பேச்சுக் கார மனுடன் இமாம் றலியல்லாஹு அன்குவிடத்தில் இருந்துகொண்டு (குறுஆன்) அல்லாஹுத் தஆலாவுடைய படைப்பென்றார், அப்போது. இமாம் றலியல்லாஹு அன்கு அவரைப் பார்த்து நீர் காபிறாகிவிட்டீரென்று சொன்னார்கள், குறுஆன்படைப்பல்லவென்பதற்கு அவர்கள் சொன்ன அத்தாட்சியால் அவர் தத்தளிவாகினார் (அபூஷுஐபுல்மி சுரிய்யி) றஹிமஹுல்லா சொன்னார், 'நான் இமாம் ஷாபிஇய்யி றலியல்லாஹு அன்ஹு சொல்லக் கேட்டேன் (குறுஆன்) ஆகிறது அல்லாவுடைய படைப்பல்லவென்று.

அபூமுகம்ம திஸ்ஸுபைரிய்யி றஹிமஹுல்லா சொல்லுகிறார். ஒருமனுடன் இமாம் றலியல்லாஹு அன்குவிடம்கேட்டார் குறுஆனாகிறது (காலிக்கா) யிருக்குமோவென்று, அவர்கள் இல்லையென்றார்கள், பின்னர் (மகுலூக்கா) யிருக்குமோவென்றார்கள், அதற்கு, மில்லையென்றார்கள், பின்பு, இமாமவர்களைக்கேட்டார், மகுலூக்கல்லவென்பதற்கத்தாட்சி யென்னவென்று, உடனே, தலையையுயர்த்திகுறுஆனை அல்லாகுத்தஆலாவுடைய கலாமென்று சொல்வோமல்லாது, காலிக்கென்றும் கல்க்கென்றும் சொல்லமாட்டோமென்றுசொல்லி அவரிடம்கேட்டார்கள் ஓய்மனுடனே அல்லாஹுத்தஆலா பூர்வீகமா யிருக்கும்போது கலாமென்கிற சிபத்து அவனில் இருந்ததா யிருக்க வில்லையா வென்று: உடனே யிருந்ததென்றார். அப்போது, இமாம் ஷாபிஇய்யி றலியல்லாஹு அன்கு புன்சிரிப்புக் கொண்டு கூபிய்யூன்களே யென்று கூப்பிட்டு (ஹத்தாயஸ்மயூன கலாமல்லாகி) அல்லாஹுத் தஆலாவுடைய கலாமை யவர்கள் கேட்கிறவரைக்குமென்ற இந்த அருத்தமுள்ள ஆயத்தை ஓதிக் கொண்டு அதுக்கு மாத்தமான (சிபத்து) எவ்விதம் சொல்லுகிறதென்று கேட்டார்கள், அதற்கவர் வாய்பேசாமற் போய்விட்டார்.

முகம்ம துபுனு யஹ்யாகாகிமுல் முஸ்னிய்யி றஹிமஹுல்லாவாகிறவர், யஹ்யபுனில்அமனிய்யி றஹிமஹுல்லாவைத்தொட்டும் இமாம் ஷாபிஇய்பி றலியல்லாஹு அன்கு சொன்னதாகப் பேசிவருகிறார், பசறாவில் ஒரு காலீ யிருந்தார், அவர் (குறுஆனை) மகுலூக்கென்று சொல்வார், அவரிடம் ஒருமுஸ்லிமும் ஒரு யகூதிக்கா



பிறும்வியாச்சியவிபகாரமாய்வந்தார்கள், அந்தவிபகாரத்தில்அந்த முஸ்லிமானவன் சத்தியம்செய்யவேண்டியதாய்வந்தது, அப்போது மேற்படிகாலியார் அந்தமனுடனுக்குச்சத்தியம் செய்யும்படி அவனைத்தவிர வேறொரு நாயனில்லையே அப்பேர்ப்பட்டவன்பேரில்சத்தியமாக வென்றுசொல என்கிறதாய் ஏவினார், உடனே யகூதி சொல்வான், காலியாரே நீர், தான் உம்முடைய (குறுஆன்) படைப்பென்று சொல்லுகிறீரே? இப்போதவருக்குச் சத்தியத்துக்குச் சொல்லிக் கொடுக்கிற வாசகமானது, படைப்பிலுள்ளதா யிருக்கிற படியாற் படைப்பைக் கொண்டு சத்தியம் செய்வதையொப்ப மாட்டேன், படைத்தவனைக் கொண்டு சத்தியம் செய்யவேணுமென்றான், உடனே யந்த காலீயாகிய ஈசபுனு இப்பான் யென்கிறவர் பொல்லா முழி முழித்துத் தடுமாறி நீங்கள் இரண்டு பேரும் எழும்புங்கள் யோசனை செய்து சொல்லலாமென்றார்.

ஜாறு வறுதியும், பைகக்கிய்யும், இமாம் றலியல்லாகு அன்குவைத் தொட்டும் பேசிவருகிறார்கள், இமாம் றலியல்லாகு அன்கு திருவுளமானார்கள், நானாகிறது, இபுறுமுபுனு உலையா வென்கிறவர் சொல்லும் காரியத்துக்கெல்லாம் நான் கிலாபு சொல்லுவேன் லாஇலாக இல்லல்லாகு என்கிற கலிமா வுள்பட, ஏனென்றால், அவர் (லாஇலாக இல்லல்லா குல்லதீ கலக்க கலாமன் அஸ்மஅகு மூசா மின்வறாஇஹிஜாபின்) கலாமைப் படைத்து அதை (மூசா நபிக்கி) திரைக்கப் புறத்தில் நின்றும் கேட்பித்த நாயனென்று கலிமாச் சொல்வார், நான், லாஇலாக இல்லல்லா குல்லதீ கல்லம மூசாமின் வறாஇஹிஜாபின், திரைக்கப்புறத்தில்நின்றும்மூசாவைப் பேசிவைத்துக் கொண்ட நாயனென்று கலிமாச் சொல்வேனென்றார்கள். (ஆகிறத்தில்) அல்லாகுத்த ஆலா வைக்காணப் படுமோவென்று கேட்கப்பட்டது. அப்போது இமாம் றலியல்லாகு அன்ஹு மூமினான பேர்களுக்குக் காட்சியுண்டுமெனச் சொன்னார்கள் அதற்கத் தாட்சி கேட்கப்பட்டபோது, (கல்லாஇன்னக்கும் அன்றப்பிகிம் யவ்மஇதின் லமஹ்ஜூபூன்,) என்கிற ஆயத்தை யோதி இதின்படி கியாமத்தில் காபிர்களாகிறவர்கள் அல்லாகுத்த ஆலா

வைக் காண்கிறத்தைவிட்டும் தடுக்கப்பட்டவர்களா யிருக்குமென்று வருவதால், மூமினானவர்களுக்குக் காட்சியுண்டுமெனத் தரிபடுத்தினார்கள்.

(றபீஉ) றஹிமகுல்லாசொல்லுகிறார்கள், இமாம் றலியல்லாகு அன்கு திருவுளமானார்கள், அல்லாகுத்த ஆலாவுடைய நாட்டப்படியே, அல்லாது ஒருவருக்கும் நாட்டம் வருகிறதில்லை (வமா தஷா ஊன இல்லா அன்யஷா அல்லாகு) என்கிற ஆயத்தாகிறது அறிவிக்கிறது அடியானைத்தொட்டும் செயலுண்டாகிறது ஆண்டவன் அதை நாநாடியிருந்தால்தானென்றும் இன்னும்இமாமிடத்திற் கட்டளையைத்தொட்டுங் கேட்கப்பட்டபோது சிலபைத்துகள் சொன்னார்கள் அதின் பொருளாகிறது நாயனே நீ நாடியதுண்டாகும் அந்நாநாடாதிருக்கினுஞ்சரிநானாடியதைநீநாடாதிருக்கிலுண்டாகாது நான் மட்டும் நாடுவேன், அஃதுண்டாகாதென்கிறதும், உன்நாட்டத்திலுள்ளதுதான், உன்னுடைய இல்மிலுள்ளபடி அடியாரைப் படைக்கிறாய், அந்த இல்மிலுள்ளபடி நயமும், நட்டமும் வருத்தமும், உபகாரமும் நடக்கும், ஒருவன்பேரில் உபகாரம் செய்கிறாய் ஒருவனுக்கு உபகாரத்தைநாட்டவில்லை, இவனுக்குதவிசெய்கிறாய் அவனுக்குத்தவி செய்யவில்லை, சீதேவியென்பதும், மூதேவியென்பதும் நல்லவனென்பதும், கெட்டவனென்பதும், அவர்களில் நின்றும் தானிருக்கும், இந்த பைத்துக்கு இமாமம் பகுறுத்தீனார் றூஸிய்யிமிகவும் விரிவாய் ஷறஹு செய்திருக்கிறார்கள்.

1. முகம்மதுபுனுஹாறூனுல்வஸீறு இமாம் ஷாபிஇய்யி றலியல்லாகு அன்ஹுவைத்தொட்டும்பேசி வருகிறார்கள், அவர்கள் சொன்னார்கள், அலிய்யுபுனு அபீத்தாலிபு றலியல்லாகு அன்ஹுஇடம் ஒரு மனுடன்வந்து அமீறுல் முமினீனே அல்லாவுடைய கட்டளையைத்தொட்டும் சமாசாரம் அறிவிக்கவேணுமென்றார், அப்போது சொன்னார்கள், அது ஆளியகடலா யிருக்கும், அதில் முங்காதேயுமென்று, மறுபடியும் வந்து அவ்விதம் கேட்டார், அப்போது, சொன்னார்கள், அது யிருட்டுவீடாயிருக்கும் அதிற்புகுதாதையுமென்று மறுபடியுமவந்து அவ்விதங்கேட்டார் அப்போது சொன்னார்கள் அதுஅல்லாவுடைய (சிர்று) யிருக்கும், அதைத்தொட்டும் கிண்டாதையுமென்று சொன்னார்கள்.



பின்பு, நாலாம் விடுத்தமும் அவ்விதம்கேட்டார். அப்போது அலிய்யுன் கர்றமல்லாகுவஜ்ககு சொன்னார்கள். நானதைத் திறந்து சொல்வேனேயானால், அது இரண்டு கருமத்துக் கிடையிலுள்ள ஒரு கருமமாயிருக்கிறது. அதிற்பொருத்துதலும் காட்டுதலும் கிடையாதென்றுசொன்னார்கள் அப்போதுஅவர்சொன்னார் அமீறுல்மூமினீனே ஒருமனுடன்சொல்லுகிறான் நான்சகலத்திலும் திறாணியுடையவனென்று, அவனும் இவ்விடம் இருக்கத்தான் செய்கிறானென்றார். உடனே யவனை யென்னிடங் கொண்டு வாருங்களென்றார். அவ்விதம் அவனைக் கொண்டுவரப்பட்டு அவர்கள் சமுகத்தில் நிறுத்தாட்டப் பட்டபொழுது, அவனைப்பார்த்துக் கோபமாய்த் தங்களிடமிருந்த வாளை நாலு விரற்கிடைமட்டும் உறையைவிட்டும் உருவியவனைப் பார்த்துக் கேட்டார்கள். நீ சகலத்திலும் திறாணியுடையவனென்று சொல்லுகிறதாய்க் கேள்வியாகிறோம். அந்தத் திறாணியை அல்லாஹுத் தஆலாவுடன் உடந்தையாகிறது கொண்டுடைய தாகிறாயோ, அல்லது அவனன்றியேயுடந்தையாகிறாயோ இந்த இரண்டுசொல்லில்நீ யெதைச்சொன்னையேயானாலும் (முறுத்தத்தாகி) விட்டாய், இந்தக் கத்தி கொண்டுன் கழுத்தையறுப்பது கொண்டு கொல்லப்படும் பத்திரமாய்ப் பார்த்துப் பேசென்றார்கள். உடனே யவன் யாதொரு யோசனையும் வாராதவனாய் விழித்து நின்று சொன்னான். அமீறுல் மூமினீனே நான் சொல்வேன் எனக்குச் சொல்லித் தாருங்களென்றான். உடனே சொல்லிக்கொடுத்தார்கள். நீ சொல் அல்லாவைக்கொண்டு நான் திராணியையுடைய தானேனென்று, அவன்நாடுவானேயானால் எனக்கு அதையுடையதாக்கித்தருவானென்று.

(றபீஉ)றஹிமஹுல்லா இமாம்றலியல்லாஹுஅன்ஹுவைத்தொட்டும்சொல்லுகிறார். இமாம் றலியல்லாஹுஅன்ஹுசொல்லுகிறார்கள். மனுடர்களாகிறவர்கள் அவர்களுடைய(அமல்களை)அவர்கள் படைக்கவில்லையென்கிலும் அவைகள் அல்லாவுடைய படைப்பாகவும், அடியானுடைய செயலாகவும் இருக்கிறது. அது இரண்டுக்கும் அத்தாட்சியாகிறது (வமாறமைத்த கல்க்கன் இது

றமைத்த கஸ்பன்) யஃனீ-நீர் செயலால் எறிந்தநேரத்திற் படைப்பால் எறியவில்லை யென்று திருவுளமானார். இன்னும் (சமா அக்றஜக்த றப்புக்த) என்று படைப்பாற் பிறத்திப் படுத்திவிக்குதலைத் தன்னளவிற் சேர்த்தும் (இது அக்றஜகுல்லதின கபறா) என்று செயலாலுள்ள பிறத்திப்படுத்தி வைக்குதலை யடிமையளவிலும் சேர்த்தானென்று.

ஜுறுஜானிய்யி றஹிமகுல்லா (றபீஉ) றஹிமகுல்லாவைத் தொட்டும் அவர் சொன்னதாகப் பேசிவருகிறார். நானொருபோது இமாம் றலியல்லாகு அன்குவிடமிருந்தேன். அந்நேரம் (சஈது) என்கிற வூரிலிருந்தும் ஒரு காகிதம்வந்தது. அதில் (கல்லா இன்னகும் அன்றப்பிகிம் யவ்மயிதின் லமஹ்ஜூபூன்) என்கிற ஆயத்தின் முறைக்கேட் டெழுதியிருந்தது. அந்தக் கடிதத்திற்றானே ஜவாபெழுதினார்கள். அல்லாகுத் தஆலா அவன்கோபத்தினாற் காபிர்களுக்கு (லிக்காவைத்) தடுத்தபடியால், மூமினானவர்களுக்கு அவனுடைய சந்தோஷ மெனனும் பொருத்தத்தினால் (லிக்காவைக்) கொடுப்பானென்று.

அப்போது, நான் கேட்டேன், நாயகமே இதுகொண்டு பிசகறச் சொல்வீர்களாவென்று. உடனே சொன்னார்கள், அல்லாவினாலே இந்த (மூகம்மதுபுனு இதிரீசு) கியாமத்தினாளிலேதன்னுடைய நாயனைச் சந்தித்துக் கொள்வாரென்பதை நிட்சயிக்காவிட்டால், அவனை துன்யாவில் வணங்கமாட்டானென்று.

(தீன்) என்கிறதும் (ஈமான்) என்கிறதும் (இஸ்லாம்) என்கிறதும், இன்ன தின்னதென விபரித்து அடங்கலுக்கும் (குறு ஆனுடைய அத்தாட்சி கொடுத்துத் தொகையிற் சொல்லப்பட்டது. அமலாகிறது, தீனிலுள்ளதாயிருக்கும். தீனாகிறது இஸ்லாமாயிருக்கும். இஸ்லாமாகிறது ஈமானாயிருக்கும் ஈமானில் கூடுதலும் குறைதலுமுண்டும். இதற்கெல்லாம்; அவர்கள் சொன்ன (கவீலை( யெழுதினால், கித்தாபு நீண்டுவிடும்.



அபூமுகம்மது கிஸ்ஸ பைரிய்யி றஹிமகுல்லா சொல்லுகிறார்கள், ஒரு மனுஷன் இமாமிடம் எந்த (அமல்) ஏற்றமாயிருக்குமென்று கேட்டார். அப்போது சொன்னார்கள், அதாவது, எதுவொரு அமலை அதுகொண்டேயல்லாது (கபூல் செய்யப்படாதே யதுதான் ஏற்றமான அமலென்றார்கள்.) அப்போது, அஃதேது அமலென்றுகேட்டார், உடனே ஈமானாக இருக்குமென்று சொன்னார்கள்.

பின்னர், அவர் கேட்டார் ஈமானென்கிறது சொல்லும்,செயலுமா, அல்லது செயலில்லாமற் சொல்மட்டுமாவென்றார், அப்போது சொன்னார்கள், ஈமானாகிறது, அல்லாவுக்காக அமல்செய்கிறது, சொல்லாகிறது, அந்த அமலில் நின்றும் சிலதாயிருக்குமென்று. இன்னும், ஈமானாகிறது, கல்பிலுண்டாயிருப்பதுபோற் கண்ணிலும், காதிலும், வாயிலும், கையிலும் காலிலும், பறுஜிலும், உண்டும். இவைகொண் டெல்லாம் ஏவப்பட்டதை யெடுத்து, விலக்கப்பட்டதை விட்டிருப்பது கொண்டல்லால் ஈமானிரம்பாது.

(றபீவு) றஹிமகுல்லா சொல்லுகிறார்கள், இமாம் ஷாபிஇய்யி றலியல்லாகு அன்கு (நுபுவ்வத் தென்னும்) நபிப்பட்டத்தைத் தொட்டும், முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமுடைய வரிசையைத் தொட்டும் கேட்கப்பட்டபோது, சொன்னார்கள், முகம்மதாகிறவர்கள் றப்புல் ஆலமீன் படைத்த படைப்புகள் சகலதிலும் கைறானவர்களென்று.

அம்றுபுனு சவாது சொல்லுகிறார், நான் இமாம் ஷாபிஇய்யி றலியல்லாகு அன்கு சொல்லக் கேட்டேன், அல்லாகுத் தஆலா வொரு நபிக்காவது ஒருவஸ்துவைக் கொடுக்கவில்லை, அந்த வஸ்துவைக் காணச் சிறப்பாலும், புதுமையாலும், அதிகமானதை முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமுக்குக் கொடுத்ததே யல்லாமலென்று.

(அம்று) சொல்லுகிறார், இமாமிடம் கேட்டேன், ஈசா அலைகிஸ் ஸலாத்துக்கு மவுத்தானவர்களை ஹயாத் தாக்கி வைக்கும் காரணத்தைக் கொடுத்தானே, இவர்களுக் கெதை ஹயாத்தாக்கி வைக்கும்படி செய்தானென்று. உடனே சொன்னார்கள், நபியுல்லா (குத்துபா) ஓது மிடத்துக் கடுந்தாமையாக விருந்த வொரு பட்ட ஈந்தின் குத்தியானது நபியுல்லாவின் பேரில் ஆசையாகி ஹயாத்தாயிருக்கு மனுடர்கள் காதல்கொண்டெவ்வித முனங்குவார்களோ அவ்விதம் யாவரும் கேட்கும்படி சத்தமிட்டு முனங்கியது, அதிலும், வனுப்பமானதாயிருக்கும்.

இன்னும், முசா அலைகிஸ் ஸலாத்துக்கு (மிசுறுக்கட்டல்) பிளந்தது கல்லில் நின்றும் பனிரெண்டு ஊற்றுக்கண் ணுண்டாகி தண்ணீ ரோடின தென்று சொல்லப்படுமாகில்நம்முடைய நபினார் முகம்மதுசல்லல்லாகு அலைகிவசல்லத்துக்குப் பிறை பிளந்தது. தங்களுடைய விரல்களில் நின்றும் அமுதமாகிய தண்ணீர் ஆறுக வோடினது, இவையல்லோ அவைகளுக்கும் புதுமையானது.

சுலைமான் அலைகிஸ் ஸலாத்துக்குக் காற்றை வசப் படுத்திக் கொடுக்கப் பட்டிருந்ததே யென்றால், அல்லாகுத் தஆலா இவர்களுக்கு (புறக்கை) வசப்படுத்திக் கொடுத்தான், இதனால் எத்தனையோ தொலை தூரமெல்லாம் ஓரிரவிற் றொலைத்தார்கள். சுலைமான் அலைகிஸ் ஸலாத்துடைய(காற்றுக்குக் காலைநேரம் ஒருமாஸத்தைத் தூரமும், மாலைநேரம் ஒரு மாஸத்தைத் தூரமும் பறக்குற தல்லா லதிக மில்லை யென்றார்கள்.

இமாம் றலியல்லாகு அன்கு சொன்னார்கள், றசூலுல்லாவுக்குப் பின் மனுடரில் ஏற்றமானவர் அபூபக்குறு, பின்னர் உமறு, பின்னர் உதுமான், பின்னர் அலிய்யு றலியல்லாகு அன்கும் என்றும் றசூலுல்லா வுடைய வுத்தரவின்படி அபூபக்ரிஸ் ஸித்தீக் குறலியல்லாகு அன்குவுடைய (கிலாபத்தின்) பேரிற் சகல அசுஹாபிகளும் ஒத்துமை யாகினார்கள், பின்பு அபூபக்று றலியல்லாகு அன்கு உமறு றலிறலியல்லாகு அன்குவைக் (கலீபா) வாக்



கினார்கள் பின்பு உமறு றலியல்லாகு அன்கு ஆறுபேரைக் கொண்டு (கிலாபத்துடைய) கருமத்தில் யோசித்து அதிகமானவர்கள் சொல்லியபடி யொருவரை நியமித்துக் கொள்ளும்படி சொல்லி, அதுபோல் உதுமான் றலியல்லாகு அன்கு (கலீபா) வாகினார்கள்

முகம்மதுபுனு அப்தில் அஃலா றஹிமஹுல்லா தம்முடைய தகப்பனாரைத் தொட்டும் பேசிவருகிறார்கள், இமாம் ஷாபிஇய்யி றலியல்லாகு அன்குவிடம் இமாம் அலிய்யு றலியல்லாகு அன்குவுடைய கீர்த்தியைப்பேசப்பட்டது, அவ்விடத்தில் ஒருமனுடன் சொன்னார் அலிய்யு றலியல்லாஹு அன்குவைக் கண்டால் மனுடர்கள் மிகுந்த நெருங்கா திருப்பதற்குச் (சபபாகிறது)அவர்கள் ஒருவரையும், பாராட்டமாட்டார்கள், ஆகையாலேதா னென்றார், அப்போது, இமாம்றலியல்லாஹு அன்கு சொன்னார்கள், மெய்தான் அவர்களில் நாலு சிறப்புண்டாயிருந்தது, அந்த நாலில்,ஒன்றுவது, ஒருவரிலிருந்தால் துன்யாவையும், துன்யாவுடை யவர்களையும் பாராட்டர்களென்று. அதாவது, துன்யாவை வெறுக்குதலும் (இல்மும்) சுத்த வீரத் தன்மையும், சிறப்பு மென்றார்கள்.

(றபீஉ) றஹிமஹுல்லா சொல்லுகிறார்கள், நான் இமாம் ஷாபி இய்யிறலியல்லாஹு அன்குசொல்லக்கேட்டேன், அதாவது (கலீபாக்களாகிறது) ஐந்துபேரென்று சொல்லும்படி குறித்த நாலு(யார்) களுக்குப் பிறகு உமறுபுனு அப்தில் அஸீஸு றலியல்லாஹு அன்குவையும், அவர்களுடன் சேர்த்து(கலீபா) வென்றெண்ணி ஐந்தென்று சொன்னார்கள்.

(இஃலம்) அறி-உமறுபுனு அப்தில் அஸீஸு றலியல்லாகு அன்குடைய நீதமும் (ஸுகுதும், வறஉம்) இவ்வளவென்று இதிலடக்க முடியாது, ஆனதினால், அவைகளில் நின்றும்இரண்டொரு செய்திகளை யெழுதுகின்றனம், அதாவது, றசூல் சல்லல்லாஹு அலைகிவசல்லத்துடைய காலத்தில் (பனீஉமையாக்) கிளையில் (மறுவான்) பிறந்தபோது அவர் தகப்பனா ரவரை நபியுல்லா இடம் கொண்டுவந்து (துஆச்) செய்வதைத் தேடியபோது துஆச் செய்

தார்கள், அதாவது, அவர்பேரிலும், அவர் பிச்சளத்தார் பேரிலும். அல்லாஹுத்தஆலாவுடைய முனி வுண்டாகட்டும், அவர்களில் நிலைமூன் கொஞ்சப் பேர்களைத் தவிரவென்று, இதிற்கொஞ்சப் பேர்களைத தவிரவென்று நபியுல்லா நீக்கிப்பேசினதிலுள்ள நாட்டத்தி லுள்ளதா யிருக்கும் இந்த உமறுபுனு அப்தில் அவலீஸு றலியல்லாஹு அன்குவாகிறவர்கள், அவர்கள் தாயாராகிறவர்கள் உமறுபுனுல் கத்தாபு றலியல்லாஹு அன்குடையமகளின் மகளாயிருக்கும.

(சுபுஹானல்லா) அவர்களுடைய நீதத்தின், தீர்மானமிகவும் புதுமையா யிருக்கும் அவர்களுக்குப் பட்டப்பேராகிறது (உமறுதானீ) யென்று, உமறுபுனுல் கத்தாபுக்கு இரண்டாவதானவமறென்பார்கள், அவர்கள் இரண்டுவருடமும், ஐந்துமாதமும் பட்டங் கட்டியாண்டதில் (பைத்துல்மாலுடைய) ரிஸ்கில் ஒருவித்தாவது அனுபவித்ததில்லை, இராஜாங்கம் வரும்போது அணிந்த வுடுமான மல்லாது, மவுத்தவரையுமறு வுடுமானம் அணையவில்லை இதினிடையயில் பறுலான முஹக்கு அவர்களுக்குவிதியாகவு மில்லை, இரவடங்கலும் விழித்து வணங்கிறதும், பகலடங்கலும், தொழுகுற நேரந் தவிர மற்ற நேரங்களில் நீதி செலுத்துகிறதுமாக நடத்தினார்கள், அவர்கள் ராஜாங்கத்தில் மானும், புலியும், நாயும் முசலும் ஒருதலத்தில் மருவியிருந்தது. சீமைகள் ஒரே செழிப்பாகவிருந்தது.

அவர்கள் பெண்சாதியாகிறது, அப்துல் மலிக் குபுனு மறுவான் என்கிற இராஜாவின் குமாரத்தியாகிய (பாத்திமா)வாகவிருக்கும், அவர்களுக்கு மரண வியாதி வந்தபோது, நுசல் மினவ வருகிற பெரியோர்களி லொருவர், அவர்களின் பெண்சாதியை (யாத்திமாவே) யென்று கூப்பிட்டு இந்த அமீறுல் மூமினீனுக்கு ஒரு குப்பாயம் கொண்டுவந்து அவர்களணைந் திருக்கும் குப்பாயத்தை மாற்றி வையுங்க ளென்று சொன்ன போது, அவர்கள் அல்லாவினாணை அமீறுல் மூமினீனுக்கு அவர்களணைந்திருக்கிற



குப்பாயம் ஒன்றேதவிர வண்ணான் மாற்றுகென்றாலு மறுகுப்பாயம் தங்கரிக்கவில்லையென்று சத்தியஞ்செய்தார்கள்.

(சுபுஹானல்லா) அவர்கள் வபாத்தாகிக் குளுப்பாட்டிக் கபனிடும்போது, ஆகாயத்திலிருந்து ஒரு கடுதாசியானது எல்லோரும் பார்த்துக்கொண் டிருக்கும்போது தன்னாலே பறந்துவந்து (ஜனாஸா) வுடைய நெஞ்சிலே தரித்தது, அதையெடுத்து வாசிக்கும்போது முறிந்த (கல்புகளைப்) பொருத்தி வம்பர்களை யடக்கியாளும் சிறப்புடைய நாயனில் நின்றும். உமறுபுனு அப்துல் அலீசை நரகத்தைவிட்டும் உரிமையிட்டதற்காய் அனுப்பப்பட்ட வுரிமைச் சீட்டாயிருக்குமென்று எழுதியிருந்தது. அதைப்பபார்த்துச் சகலரும் ஆச்சரியமுற்று, அச்சீட்டைக் கபனில் வைத்து அடக்கஞ்செய்தார்கள், றலியல்லாஹு அன் ஹு வனபஅஞுபிகி) அவர்கள் கீர்த்தியை யறியவேணுமென்று நாடினால் (சியறுல் உமறைன்) என்னும் பெயருள்ள கமாலுத்தீனுத்தமீரீ றஹிமஹுல்லாவுக்குடைய கித்தாபிற் பார்த்துக்கொள்ளவும்.

இபுறாஹீமுபுனு அப்தில்லாஹில் ஹஜலிய்யி சொல்லுகிறார், நான் ஷாபிஇய்யி இமாமைப் பார்த்துச்சொன்னேன். அபூபக்று உமறு, உதுமான், இந்த மூவரையும் அலியாரைக்காண முற்படுத்திவைக்கிற ஹாஷிமிக் கிளையாரிலொருவரையும் நான் காணவில்லை யும்மைத் தவிரவென்றேன். அப்போது இமாம் றலியல்லாஹு அன்ஹு சொன்னார்கள், அலிய்யுபுனு அபீத்தாலிபாகிறதுஎன்னுடைய மாமா மகன், நானாகிறது அப்து மனாபுடைய பிச்சளத்திலுள்ளவன், நீராகிறது அப்துத் தாரியுடைய பிச்சளத்தி லுள்ளவர், ஆனால் வங்குஷத்தைக் கொண் டுயர்த்தி பேசுவது சங்கையென்று வருமாகில், அலியாருடைய சங்கைக்கு யுரித்துப் பாராட்டுவது எனக்குச் சொந்தமல்லாது உமக்கில்லை என்கிலும் காரியமாவது, நீர் நினைத்ததுபோலில்லையென்றார்கள். ஷாபிஇய்யி இமாமுடைய வங்குஷம் முத்தலிபிய்யும், ஹாஷிமிய்யும் ஆகியரண்டும் சேர்ந்திருக்கிறதென்பது முந்திவிட்டது.

முஸ்னிய்யிறஹிமஹுல்லாசொல்லுகிறார்கள். நான்ஷாபிஇய்யிறலியல்லாஹுஅன்ஹு இந்தபைத்துச்சொல்லும்படி கேட்டேனென்று, அதன்பொருள் அலியாருடைய வரிசையை யெடுத்துப் பேசுவோமேயானால் மடத்தனத்தை யுடைய (கவாரிஜுகள்) நம்மை(றாபிலீ)யென்கிறார்கள், அபூபக்று றலியல்லாஹு அன்ஹுடைய வரிசையைச்சொன்னால் (றாபிலிகள்) நம்மைத்தங்கடம் வருத்த நாடுவார்கள். அவர்களிருவரையும் நான் மவுத்தாகித் தரையிலென்னை யடக்கம் செய்யப்படுகிறவரையில் உவந்து வரிசையாக்கிக்கொண்டேயிருப்பேன். அதனால் வரும் தங்கடத்தையும் ஒப்புக்கொண்டே யிருப்பேனென்றது.

(றபீஉ)றஹிமஹுல்லா சொல்லுகிறார்கள். இமாம் ஷாபிஇய்யிறலியல்லாஹுஅன்ஹுஇந்தபைத்தை யெங்களுக்குச்சொல்லிக் காட்டினார்களென்று. அதன் பொருளாகிறது, ஏறுவாகனக்காரனே (மினாபாஸாறிற்) கல்லெறியும் தலத்தில்நின்று சஹறு நேரத்திற் பெரும் வெள்ளங்கள் இரைச்சற்போட்டு அலைகள் ஒன்றுக்கு மேலாலே யொன்று தத்தி தத்தி யோடுகிறது போல் (ஹஜ்ஜாஜிகளெல்லாம் வரும்போது அவ்விடத்தில் நடக்கிறவர் இருக்கிறவர் சகலரிடத்திலும் சத்தம்போட்டு நீசொல் முகம்மது நபியுடைய கிளையாரையுவப்பது றாபிலீயென்று சொல்லுவார்களாகில், மனுஷ, ஜின் இந்தஇரண்டுகூட்டத்தாரும் நான்றாபிலியென்றுசாட்சி சொல்லட்டும்.

பைகக்கிய்யி றஹிமகுல்லாசொல்லுகிறார்கள். இமாம் றலியல்லாகு அன்கு இந்தபைத்தைச்சொன்ன (சபபாகிறது சிலகாரிஜீன்கள் அவர்கள்பேரில் (ஹசது) வைத்து அவர்களை றாபிலீகூட்டத்திற் சேர்த்து இடைகூறு சொன்னதற்காய்ச்சொன்னார்களென்று.

(ஹறமலத்து) றஹிமகுல்லா சொல்லுகிறார்கள். ஷாபிஇய்யிறலியல்லாஹுஅன்ஹுசொல்லக்கேட்டேன். பூலோகத்தில்றாபிலீகளைக் காணப் பொய்ச்சொல்லுகிற கூட்டம் ஒருகூட்டமுமில்லையென்று சாட்சி சொல்லுகிறேனென்றார்கள்.



## பதினைந்தாம் பிரிவாகிறது.

இமாம் ஷாபி இய்யிறலியல்லாகு அன்குவைத் தொட்டும்இல்முடைய வரிசையிலும், அதில் அபேட்சை பூட்டுதலிலும் அவர்களுடைய (ஸுகுதிலும்) சற்குணத்திலும், இபாதத்தித் தெண்டித்ததிலும்,உபதேசம் சொன்னதிலும் பேசிவரப்படுகிறது.

(றபீஉ) றஹிமகுல்லா சொல்லுகிறார்கள், இமாம் றலியல்லாகுஅன்கு சொல்லக்கேட்டேன், இல்மைத் தேடுகிறதாகிறது சுன்னத்தாந தொழுவதைக் காண யேற்றமென்று. இன்னும் வருகிறது பறுலான தொழுகைக்கிப் பிறகு இல்மைத் தேடிப் படிக்கிறதைக் காண யேற்றமான அமலொன்று மில்லையென்று சொன்னார்கள். உடனே கேட்கப்பட்டது (பீஸபீலில்) ஏற்றமில்லையா வென்று அதற்கு ஜவாபுசொன்னார்கள் பீஸபீலும் அதைக்காணஏற்றமில்லையென்றார்கள்.

இன்னும் இமாம் றலியல்லாகு அன்குசொல்லுகிறார்கள்நான் ஸுபுயானுப்னு உயைனா றலியல்லாகுஅன்குசொல்லக்கேட்டேன் அல்லாகுத் தஆலா துன்யாவில் (நுபுவ்வத்தைக்) காண ஏற்றமானவஸ்துவை யொருவருக்கும் கொடுக்கவில்லை அந்த நபித்தனத்துக்குப் பிறகு இல்மைக் காண ஏற்றமான வஸ்துவை யொருவருக்கும் கொடுக்கவில்லை,ஆகிறத்தில் அவனுடைய றஹ்மத்தைக் காண ஏற்றமான ஒரு வஸ்துவைக் கொடுக்கப் போகிறதுமில்லையென்று:

இன்னும். இமாம்சொல்லுகிறார்கள்,ஆராகிலும்ஒருவன் துன்யாவை நாடுவானேயாகில் இல்மைப்படிக்கவும். ஆகிறத்தை நாடுவானேயாகிலும்இல்மைப்படிக்கவுமென்று இந்தச்சொற்கொண்டு மூறுதாகிறது இந்த இல்மினால் துன்யாவைப் பெற்றுக்கொள்வது நாட்டமல்ல,எனகிலும் இல்மைக்கொண்டு நீயைநாடியிருப்பானேயாகில் இவன் தேடாப்புறத்தினால் இவனுக்கு(ரிஸ்க்கு)வரும் என்கிறதுதான், பின்வரும் சொற்களாற் றுலங்கும்.

இன்னும், சொன்னார்கள் ஒரு வூரில் ஒருவராகுதல் இல்மைப் படிக்காமல் விட்டுவிடுவார்களாகில், இராஜாவானவர் அவர்களை வலுக்காரமாய்ப்பிடித்து இல்மைப் படிக்கிறதின்பேரில் வம்பிக்கிறது விதியென்று (முதகப்) வைத்திருக்கிறேனென்று.

ஸஃபறுனிய்யி றஹிமகுல்லா சொல்லுகிறார்கள் இமாம் றலியல்லாகு அன்கு திருவுளமானார்கள், நான் இல்மைப் படிக்கும் நாள்களிற் பதினாறு வருஷம் கோதும்பு காய்ந்தரொட்டியும், ஈத்தம் பழமுமேயல்லாது நெய் இறச்சி மீன் இப்பேர்ப்பட்டவைகளை யறியேன், அதிலும், என்பசியுடைய காந்தி மடக்குறமட்டுமேயல்லாது அதிகமாகவுந் தின்னேனென்றுஞ் சொன்னார்கள்.

ஹறமுயலத்தா றஹிமகுல்லா சொல்லுகிறார்கள் இமாம்றலியல்லாகு அன்கு சொல்லக்கேட்டேன், கைபடிக் கில்லாதவனாக இல்மைத் தேடுகிறவனல்லாமல் ஒருவனும் இல்மிலே ஈடுமீட்சி பெறானென்றும், இனனும், இமாம் றலியல்லாகு அன்கு சொல்லுகிறார்கள், எழுதிக்கொள்ள நாடி கடுதாசி வாங்கநினைத்தால் கடுதாசிக்கும் பணமில்லாமல் முட்டுப் பட்டுக்கொண்டிருந்தேனென்றும்.

றபீவு றஹிமகுல்லா சொல்லுகிறார்கள், இமாம் றலியல்லாகு அன்கு சொல்லக் கேட்டேன்: இந்த இல்மை வாழ்வு கொண்டும், நபுசு இச்சித்ததிலே திரிவது கொண்டும் படித்து ஈடுமீட்சி பெறுகிறதுயாருமில்லை, யெனினும்(நபுசு)தாழ்மைகொண்டும் யாருக்கும் தாட்சிசெய்வது கொண்டும் நிருபாக முட்டுப்பாடு கொண்டும் உலமாக்களுக்கு (கிதுமத்துச்) செய்வதுகொண்டும் படித்து ஈடுமீட்சி பெறுவான்.

யூனுசுபுனு அப்தில் அஃலா சொல்கிறார்கள், இமாம் றலியல்லாகு அன்கு சொல்லக்கேட்டேன், இல்மைப் படிக்கிற காரியத்தில் ஒரு மனுடனுக்கு வேட்டி யிருந்து துப்பட்டியில்லாமலும் துப்பட்டி யிருந்து வேட்டி யில்லாமலும் இருந்தாலல்லாது இணங்கமாட்டானென்று.



(றபீஉ)றஹிமஹுல்லா சொல்லுகிறார், இமாம்றலியல்லாஹு அன்கு சொல்லக் கேட்டேன். இல்மைத் தேடுகிறவனுக்கு மூன்று காரியம் தேவையாயிருக்கும் (ஒன்றாவது) வாணாள் நீளமும், (இரண்டாவது) கைவிஸ்தீரணமும் (மூன்றாவது) கூர்மையுமென்று. இமாம் அஹ்மது றலியல்லாஹு அன்கு சொல்லுகிறார்கள், இந்த ரிவாயத்துக்கும், முந்தின ரிவாயத்துக்கும் இட்டோட்டுவாராது. அஃதேனென்றால் முந்தின ரிவாயத்தைக்கொண்டு சுகண்டிக்காரர் தங்கள் பராக்கினால் இல்மை விட்டுப்போடுகிறது மிகுதமாயிருப்பதால், அவ்விதம்சொன்னார்கள், (இரண்டாவதில்) கைவிஸ்தீரணங் குறைந்திருந்தால் நிருபாகத் துக்குச்சம்பாரிக்க வேண்டி இல்மை விடவேண்டியதாய் வரும். ஆனால், சீமானதனத்தால் இருந்துகொண்டு இல்மைப் படிக்கிறதும், அதிக மிஸ்கீன் தனமாயிருந்துகொண்டு அல்லாவின்பேரில் (தவக்குல்) வைத்தவனாக இல்மைப் படிக்கிறது மிகவும் ஏற்றமாயிருக்கும்.

ஹசன் றஹிமஹுல்லா சொல்லுகிறார்கள். எனக்குண்மையான வோர் விசுவாசிசொன்னார், இந்த இரண்டுபைத்தும், இமாம் றலியல்லாகு அன்கு சொன்னதாக, அந்த பைத்தின் பொருளாகிறது, இரண்டு வஸ்துவை யிழக்குகிறதால் என் (நபுசுடைய) கைசேதத்தை என்ன சொல்லப்போகிறேன், அஃதிரண்டையும் என்னிடம் சேதாரமாக்கப் பட்டிருந்தால், அந்நேர மனுடரிற் சீதேவித் தனத்துடையவரில் நின்றுமாகி விடுவேன். அதாவது (சுவால்) செய்வதென்கிற சிறுமை வராமலென்னைக் காக்கும், நிருபாகத்தின் புகலிடமும், என் வாணாள் பற்றுமளவும் இல்முக்கு ஊழியம் செய்வதுமென்று.

அஹ்மதுபுனுசாலிஹு றஹிமஹுல்லா சொல்லுகிறார், நான் இமாம் றலியல்லாஹு அன்கு சொல்லக் கேட்டேன், நீதலைமைத் தனமெடுக்க முன் (பிக்குகை, இல்மை) யெடுத்துக்கொள், தலைமைத் தனத்தை யெடுத்துவிட்டாயேயானால், பிக்குகுக்குப்பாதை கிடையாதென்று (றபீஉ) றஹிமஹுல்லா சொல்லுகிறார்கள்,

இமாம் சொன்னதாக விச்சித்திரமில்லாமல் இல்மைத்தேடுகிறவன் இருளில் விறகு பிறக்குறவனைப் போல், அவன் விறகின்னது,பாம்பின்னதென்று அறியானென்று.

ஸஃபறானிய்யி றஹிமஹுல்லா சொல்லுகிறார்கள், இமாம் சொல்லக் கேட்டேன். ஆராவது, இல்மைப் படித்தாற் படிக்கும் போதே அதின் முருறையும், நுணுக்கத்தையும் படித்துக் கொள்ளவும், பின்னாலே பார்த்துக் கொள்ளலாமென்று விட்டுவைத்தானாயாகில், அவனுக்கு அது தப்பியே போகுமென்று. முஸ்னிய்யி றஹிமஹுல்லா சொல்லுகிறார்கள், நான் ஷாபிஇய்யி றலியல்லாஹு அன்குவிடங் கேட்டேன், உங்களுக்கு இல்மைக் கேட்கிறதின் பேரிலுள்ள ஆசை யெவ்வித மிருந்ததென்று.

அதற்குச் சொன்னார்கள், அதில் நின்றும் ஒரு (ஹறுபைக்) கேட்கிறதால் நான் கேளாத (ஹறுபு)களையெல்லாம் கேட்பேன் என்னுடைய வுறுப்புகளடங்கலும் தன் தன்னிலே ஒவ்வொரு காது புதிதாக வுண்டாயிருக்குதலை யுவந்ததாயிருக்கும். இந்த இரண்டுகாதும் கேட்டு இன்பம் பெறுவதுபோல், அவைகளும் கேட்டு இன்பம் பெறுமென்று ஆசை கொண்டதாயிருக்கிறதென்று, இல்மின் பேரில் தங்களுடைய அபேட்சை யெவ்விதமிருந்ததென்று கேட்டதற்குச் சொன்னார்கள், துன்யாவின் பொருளின் பேரில் அதிக அபேட்சையுள்ளவன் பணத்தை யெற்றிக் கொள்கிற வின்பத்தின் பேரில் எவ்விதம் அபேட்சை கொள்வானோ அவ்விதமென்றார்கள்: இல்மை நீங்கள் தேடிய விதமெப்படியென்று கேட்டதற்குச் சொன்னார்கள், ஓர் பெண்பிள்ளைக்கியுள்ளது ஒருபிள்ளை, அந்த வொருபிள்ளையும் வழி மார்க்கங்களிலே தப்பவிட்டு எவ்விதம் ஆவலாய்த் தேடியல்லவாளோ அவ்விதம் தேடினேனென்றார்கள்.

முஸ்னிய்யி றஹிமஹுல்லா சொல்லுகிறார்கள், இமாம் றலியல்லாஹு அன்கு சொல்லக் கேட்டேன். இல்மைப் பிரியம்வையாதவனில்லாதொரு(கைறும்) கிடையாதென்றும்,அவனைநேர்தோ



ழமை பிடிக்கவேண்டாமென்றும் அவனுடையபழக்கமும் வேண்டாமென்றும் )றபீஉ) றஹிமகுல்லா, இமாம் றலியல்லாகு அன்கு சொன்னதாகப் பேசிவருகிறார். ஸுபியானுபுனு உயைனா றலியல்லாகு அன்ஹுடைய குணம் கொஞ்சமுன் கோபக்காரர்போலிருந்தபோது, அவர்களுக்குச் சொல்லப்பட்டது (அபாமுஹம்மதே) உங்களிடம் பல பல தேசங்களில் நின்றும் பல் பல (கவுமுகளும்) இல்மைப் படித்துக்கொள்ள வருவதால் இவ்விதமான கோபமெடுத்தீர்களாகில் விரண்டு போய் விடுவார்களேயென்று கேட்கப் பட்டபோது சொன்னார்கள், என்னுடைய கெட்ட குணத்துக்காக வேண்டி அவர்களுக்குப் பிரயோசனம் கொடுக்குகிற இல்மைப்படிக்காமல் விரண்டுவிடுவார்களாகில்,அவர்களும் உன்னைப்போலே மடையராகத்தானிருக்குமென்று. இமாம் அஃமஷு றலியல்லாகு அன்குவும், இவ்விதமாகவே சொன்னார்கள்.

(றபீஉ) றஹிமகுல்லா சொல்லுகிறார்கள், புவைத்திய்யி றஹிமகுல்லாவை ஜெயிலிற் போடப் பட்டபோது. அந்த விடத்திற் சிலரெல்லாம் அவர்களிடம் இல்மைக் கேட்டார்கள், அப்போது, சில நேரம் சடைந்துகொள்வார்கள், அதை யறிந்து அவர்களுக்கு நான் கடுதாதி யெழுதினேன் (புவைத்திய்யே) நீங்கள் உங்களுடனிருக்கும் பரதேசிகளுக்காய் (சபுறு) செய்து கொள்ளுங்கள், உங்களுடைய (ஹல்காவில்) இருப்பவர்களுக்கு உதவியாய், உங்கள் குணத்தையழகாக்கி வைத்துக்கொள்ளுங்கள் ஏனென்றால், இமாம் றலியல்லாகு அன்குமிருந்த நேரமும் இந்த பைத்தைச் சொல்லிக்கொண்டிருக்கும்படி நான் கேட்டிருக்கிறேனென்று. அதன்பொருளாகிறது.

என் (நபுசைத்) தாழ்மையாக்குவேன் அவர்களதைச் சங்கையாக்கி வைப்பதை நாடினதற்காய், ஆனபோதே, தன்னைத்தாழ்மையாக்கி வைக்காத (நபுசைச்) சங்கை செய்யப்படாது (றபீஉ) றஹிமகுல்லா சொல்லுகிறார்கள், நான் இமாம் றலியல்லாகு அன்ஹு சொல்லக்கேட்டேன் (சாலிஹான அமல் செய்வதை நாடிப்படிக்

காக இல்மு அவனுக்குப் பிரயோசனஞ் செய்யாது, அதை நான்
பயந்திருக்கிறேனென்றார்கள், இன்னும், சொன்னார்கள் (உலமாக்க
ளுக்கு அலங்காரமாவது (தக்குவாவாகவிருக்கும்) அவர்களுக்கு,
ஆபரணுதி யாகிறது சற்குணம் அவர்களுக்கு அழகாகிறது, மன
சுடைய சயாளமென்று. இன்னுஞ் சொன்னார்கள், அல்லாகுத்
தஆலா மிகவுந்தேடும்படிஅவேட்சை பூட்டிய ஆஹிறத்தை வெறு
ப்பதும்,வெறுக்கும்படி சொன்ன துன்யாவைத்தேடுவதும், இவை
இரண்டும் (உலமாக்களில்) மகாபாரதூரமாகிய (ஐபாயிருக்கும்)
என்று.

ஹறுமலத்து றஹிமகுல்லா சொல்லுகிறார்கள், நான் இமாம்
றலியல்லாகு அன்கு சொல்லக்கேட்டேன், ஒரு (ஹக்கீம்) இன்
னொரு (ஹக்கீமுக்கு) எழுதியனுப்பினர். என்னுடப் பிறந்தாரேயு
மக்கு இல்மைக் கொடுக்கப்பட்டிருக்கிறது, அந்த இல்மென்னு
மொளியைப் பாவமென்கிற இருளால் ஊத்தையாக்காதிரும். அவ்
விதம், ஊத்தையாக்கினீராகில் இல்முடையவர்கள் தங்களுடைய
இல்மென்னும் ஒளியினல் சடுமீட்சி பெறும் கியாமத்து நாளில் நீர்
பாவமென்னும் இருளிலே தரிபட்டுக் கைசேதம் அடைவீரென்று
இன்னுஞ் சொன்னார்கள்,உலமாக்களுடையமிடுமைத்தனமாகிறது
அதைவேணுமென்றுதெரிந்துகொண்ட மிடுமைத்தனம்மடையரு
டைய மிடுமைத்தனம் தங்கடத்துடைய மிடுமைத்தனமென்று.

இன்னும் யூனுசுபுனு அப்தில் அஃலா றலியல்லாகு அன் ஹ
டைய ரிவாயத்தில் வருகிறது, இமாம் றலியல்லாகு அன்குசொன்
னார்கள் மிடுமைதனத்தை நான் மருந்த லாக்கிக்கொண்டேன்
ஒருகாலங்களில் அது மீண்டு வந்ததாகில் அதனல் நான் விரட்டி
கொள்ளாதிருக்கவேண்டி, நான மூன்றுதடவை மிடுமைத்தனம்பி
டித்துச் சிலநாள் அதிலேதானே தரிபட்டிருந்தேன், மீனும், சந்
தின் பழத்தையும் சிலநாட்டின்று கொண்டிருந்தேன், வேறொரு
வஸ்துவு மில்லாமல்.

இபுனு அப்துல் ஹக்கம் சொல்லுகிறார்கள். இமாம் றலியல்
ஙகு அன்கு சொல்லக்கேட்டேன், இல்மைத் தாழ்மையாக்குகிற



காரியத்தில் நின்று முள்ளதா யிருக்கும், கண்டவருட னெல்லாம்
இல்மைக் கொண்டு கேள்வி போடுகிறது, பேச்சைப் போடுகிறது
மென்று. இன்னும், இல்மாகிறது மடையரிடத்தில் மடத்தனமா
கத்தா னிருக்கும், எவ்விதமென்றால், மடத்தனமாகிறது இல்மு
டையவர்களிடத்தில் மடத்தனமா யிருப்பது போலென்று.

ஹுமைதிய்யி றஹிமஹுல்லா சொல்லுகிறார்கள், இமாம்
றலியல்லாஹு அன்குவை மக்கத்தில் நின்று மிசுறுவரையும்சேர்
ந்து வழிகூடிப் போனேன், அப்போது, நான் அவர்களிடம் பிக்
குகுடைய ஹுக்கும்களைக் கேட்டுப்படித்துக் கொள்வேன்,அவர்
கள் என்னிடத்திற் பாடமாயிருக்கிற ஹதீதுகளை ஓதச் சொல்லிக்
கேட்டுக் கொண்டிருப்பார்கள் (ரபீஉ) றஹிவஹுல்லா சொல்
லுகிறார்கள், நான் இமாம் றலியல்லாஹு அன்கு சொல்லக்கேட்
டேன், மறதியைவருத்தும் சிலேட்டும்வியாதிக்காரரில் மறக்கும்ற
பாடம் பண்ணுகிறவர்களை நான் காணவில்லை இந்த ஹுமைதிப்
யைப் போலென்றார்கள் திடனுக அவர் சுபியானுபுனு உயைனு
றலியல்லாஹு அன்குவில் நின்றும் பதினுயிரம் ஹதீதைப்பாடம்
பண்ணியிருந்தாரென்றும், அப்துல்லா கிபுனு அஹ்மதிபுனி ஹன்
பல் றலியல்லாஹு அன்கு சொல்லுகிறார்கள் என் தகப்பனர்
சொல்லக்கேட்டேன், இமாம் ஷாபிஇய்யி றலியல்லாஹு அன்கு
என்னைப் பார்த்து அஹ்மதே நீங்கள் ஹதீதுடைய இல்மில் நம்
மைக் காண மிகுதம் அறிந் திருக்கிறீர்கள், உங்களிடத்திலுள்ள
ஹதீதுகளிற் றிறமான ரிவாயத்துள்ள ஹதீதுகளை அறிவியுங்கள்,
அதுகொண்டு நாம் ஊணுதல் பிடித்துக் கொள்வோமென்றார்
கள்.

ஹசன் றஹிமஹுல்லா சொல்லுகிறார்கள் (சுபுஹானல்லா)
பார்க்கவில்லையா, ஹுமைதிய்யி றஹிமஹுல்லாவும்ஹன்பலிய்யி
றலியல்லாஹு அன்குவும், இரண்டு பேரும் தங்களுடைய தில்
மீதாயிருந்த அவர்களிடத்தி லிருக்கும் இல்மைக் கேட்கவும்,படிக்
கவும், பின் தாங்கவுமில்லை (உலமாவுத் துன்யாவைப்) போற் பெ
ருமைத் தனமும் (ஜாகிலாக்களைப்போல்) வெட்கமும், அவர்களை
விலக்கவுமில்லை, யேனென்றால், இல்மைக்கொண்டு, அவர்கள் நா

டியதெல்லாம் தீனுடைய வுதவியும், அல்லாவை நாடுவதுமே யல்லாமல் துன்யாவின் கீர்த்தியும், பெருமைத் தனமு மல்லவே, ஆகையால், அல்லாஹுத் தஆலா அவர்களுடைய பறக்கத்துகளைக் கொண்டு நம் மனைவர்கட்கும் பிரயோசனஞ்செய்வாராகவும்.

இபுனு அப்தில் ஹக்கம் சொன்னார், இமாம் றலியல்லாஹு அன்கு சொல்லக்கேட்டேன், அல்லாஹுத் தஆலாவை மிகுந்து பயப்படுகிறது (புக்ககாக்களைக்) காணவொருவரையும் காணவில்லை, யவர்கள்தான் படித்ததின்படி (அமல்ச்) செய்யிறவர்களும் (அவ்லியாக்களும்) அல்லாஹுத் தஆலாவைப் பயப்படுகிறவர்களெல்லாம் அவனுடைய அடியார்களில் நின்றும் உலமாக்கள் தானென்று, அல்லாஹுத் தஆலா குறுஆனிலே திருவுளமா யிருக்கிறான், இன்னும் (றபீஉ) றஹிமஹுல்லா சொல்லுகிறார்கள்இமாம் றலியல்லாஹு அன்கு சொல்லக் கேட்டேன் (புக்ககாக்கள்) அல்லாஹுத் தஆலா வுடைய அவ்லியாக்களா யிராதிடில்அல்லாவுக்கு ஒலிமார் கிடையாதென்று.

யூனுஸுப்னு அப்தில் அஃலா சொல்லுகிறார்கள்; இமாம்றலியல்லாஹு அன்கு சொல்லக் கேட்டேன், சகலதிலும்(இல்மு) வரிசையான தென்பதற்கு அத்தாட்சியாற் போதும், இரண்டுகாரியம். அதாவது, சரியான இல்மு படியாதவனைப் பார்த்து இவர் நல்ல ஆலிமென்று சொன்னவுடன் அவன் சந்தோஷமாகிறான், அவனில் இல்மில்லா திருந்தாலும் சரி, சகலதிலு மடமைத்தனங்கெட்டதென்பதற்கு அத்தாட்சியாற் போதும் மடையன் தான் தன்னை மடயனென்று சொல்லப் பொருந்தா திருப்பதுமல்லால், யாரும் இவனை மடத் தனத்தளவிற் சேர்த்துப் பேசினால், அவனைக்கோபமாகிறது மென்று, அவனில் மடத்தனம் குடிகொண்டிருந்தாலு மொக்கும்.

(றபீஉ) றஹிமஹுல்லா சொல்லுகிறார்கள்: நான் மிகுந்த விரவுகளில், இமாம் றலியல்லாஹு அன்கு விடம் இராத்தரித்து அவர்களைப் பார்த்தேன், அவர்கள் கொஞ்சம்நேரமல்லாது உறங்க



வில்லை, இரவை மூணுகப் பங்கிட்டு ஒருபங்கு உறக்கமும்,மறு பங்கு கித்தாபு கோர்வை செய்கிறதும், மற்றொரு பங்கு தொழுகையும், இவ்விதமாகவே யிருந்தார்கள். ஒருமாத்தையில் குறுஆனை முப்பது தரம் ஓதி (கத்மும்) தமாமாக்குவார்கள்.(றமலானில்) அறுபது தரம் தமாமாக்குவாகள். இஃதல்லாமல் அனேகம் (குறத்துகள்) ஓதுவார்கள். இன்னுஞ் சொல்லுகிறார்கள். (மிஸ்றாத்து) என்கிற ஊரில்நின்றும் (இஸ்கந்தரிய்யா) வென்கிற ஊருக்கு இமாமுடனே யாத்திரைபோயிருந்தேன், அவ்வூரிலோர் (ஆதத்துச்) செய்துகொண்டார்கள். அதாவது, ஐந்து வக்துக்கும் (ஜாமிஉ) பள்ளியில் ஜமாஅத்துக்கு ஹாலிருகிறதும், விடுதியில் வந்து கடலைப் பார்த்துக்கொண்டு இரவிலும், பகலிலும் குறுஆன் ஓதுகிறதும், இவ்விதமாகவே இருந்தார்களென்பதாய். குறுஆன் ஓதுகிறதில் குரலுடைய வோசை மிகவு மழகானவர்களா யிருந்தார்கள், ஒரு (ஹதீது - வஃலு) சொல்லத் தொடுத்தார்களாகில் குறுஆனில் நின்றும் ஒரு சூறத்தை யோதிக் கொள்வார்கள் வியாதியாற் சோதிக்கப் பட்டவர்களாக இருந்தார்கள், குறுஆன் ஓதும்போதெல்லா மூலவியாதியின் கொடூரத்தால் ஒருபடிக்கம் அவர்களுக்குக் கீழாலேவைத்து அதில் இரத்தம்வடிந்துகொண்டிருக்கும்.

இதுசமாசாரம் (இதிரீசுல் கவுலானிய்யி) றஹிமதுல்லாவுக்குத் தெரியப்பட்டு அவர்களோ ராளனுப்பி அபூ அப்தில்லாவே நீர அல்லாகுத் தஆலா இடம் ஆபியத்தைக் கேட்கப்படாதா என்று சொல்லி யனுப்பவும், அந்த ஆளிடமாகத் தானே அபூஅம்றே நீங்கள்தான் எனக்கு (துஆச்) செய்யுங்களென்று சொல்லி யனுப்பிவிட்டார்கள், ஜஃபறுப்னு அபீஉதுமானத்தயாலிசிய்யி சொல்லுகிறார்கள்;மிஸ்றிலுள்ள பிக்குகுடைய வுலமாக்களிலொருவர்இமாமிடம் வந்தார், இமாம் பள்ளியி லிருந்து குறுஆன் வைத்து ஓதிக்கொண்டிருக்குறார்கள், அப்போது, அவுரை நோக்கிஇமாம்சொன்னார்கள், நீங்கள் பிக்குகுடைய புளக்கத்தாற் குறுஆனை விட்டுவிட்டீர்கள், நான் இந்த (இஷாவைத்) தொழுது போட்டு(முஸ்ஹபை) யென் முன்பாக வைத்தோதப் போகிறேனென்றார்கள்.

பின்பு (ருவீ) சொல்லுகிறார், அவ்வேளை தொடுத்துக்கிழக்கு
வெளுக்கும் வரையும் திறந்த குறுஆனை மூடாமல் ஓதிக்கொண்டே
யிருந்தார்களென்று. ஹாறூனைல் கருபி சிய்யி றஹிமகுல்லா
சொல்லுகிறார்கள் நான் ஷாபிஇய்யி றலியல்லாகு அன்குவுடன்
என்பதுநாளிராத் தங்கியிருந்தேன், இரவில் மூன்றிலொருபங்
குநேரந் தொழுவார்கள், தொழுகையில் ஐம்பது ஆயத்துமுதல்
நூறு ஆயத்து வரையும் ஓதுவார்கள், அதில் (றஹ்மத்துடைய)
ஆயத்துவந்தால் அல்லாவுடைய றஹ்மத்தைத்தனக்கும், மூமினை
வர்களட்ங்கலுக்கும் கேட்பார்கள் (அதாபுடைய) ஆயத்துவந்தாற்
றனக்கும், மூமினைவர்களட்ங்கலுக்கும் அதைவிட்டும் அல்லா
இடத்திற் காவல் தேடுவார்கள், அவர்களில் ஆசையும் பயங்கர
மும், இரண்டும் சமனாகவே யிருந்தது.

அப்துர் றஹ்மானில் ஸஜஸ்தானிய்யி றஹிமகுல்லா, ஹாரிது
புனு மிஸ்கீன் றஹிமகுல்லாவைத் தொட்டும் பேசிவருகிறார், இ
மாம் றலியல்லாகு அன்கு மக்கத்துக்குப் போகநாடியபோது தங்
களிடமிருந்த பிடவைகளை, அதாவது (பகுதாது) ராச்சியத்தின்
விலையுயர்ந்த வுடுமானங்களையெல்லாம் வண்ணானிடம் வெளுக்
கப் போட்டார்கள்: அந்த வண்ணான் வீட்டில் நெருப்புப் பிடித்
தது அந்த வுடுமானங்களெல்லாம் வெந்து போய்விட்டது அந்த
வண்ணானைச் சிலர் போய் அதன் விலையை வாங்கும்படி இமாம்
றலியல்லாகு அன்குவிடம் கூட்டிவந்து விட்டபோது, இமாம்
திருவுளமானார்கள்: உலமாக்கள் வண்ணானைப் பொறுப்பாக்கி
வைக்கிறதில் (கிலாபு)சொல்லியிருக்கிறார்கள், நானொன்றுந் திறந்
துசொல்ல வில்லையென்று சொல்லிப்பின்பு, வண்ணானைப் பார்த்து
உன்பேரிற் பொறுப்புவராதென்று போகச்சொல்லி விட்டார்கள்
சாஜிய்யி றஹிமகுல்லா சொல்லுகிறார்கள், எனக்குஇமாமுடைய
மகள் பிள்ளை பேரன் சொன்னார், இமாம்றலியல்லாகு அன்குவாலி
பமா யிருக்கும்போது (யமனில்) கொஞ்சநாள் ராஜாங்கவேலைக்
காய் நியமிக்கப் பட்டிருந்ததிற் சில (ஹூக்கும்கள்) நடத்தினார்
கள் சில (கைருத்துகளைச்) செய்தார்கள் அது அந்நாள் முதல்



இந்நாள் வரையும் நடந்து வருகிறது, அதற்குச் (சுன்னத்துஷ்
ஷாபிஇய்யி) யென்றுஞ் சொல்லிக்கொள்ளுகிறார்கள்.

ஹறுமலத்து றஹிமஹுல்லா சொல்லுகிறார்கள், இமாம் றலி
யல்லாஹு அன்ஹு சொல்லக்கேட்டேன், நான் அல்லாவைக்
கொண்டு பொய்யாகவும், மெய்யாகவும் ஒருக்காலும் சத்தியம்
செய்யவில்லை, வெள்ளிக்கிழமை ஜும்ஆக்குளியை ஊரிலும், சபறி
லும், கோடையிலும், மாரியிலும், கூதலிலும், அஃதல்லாத நேரத்
திலும் நான் விட்டதில்லையென்றும், அல்லாவுக்காக இருக்கும்
எல்லாப் புகழ்ச்சியும் அவனிடம் நல்லுதவிப் பாட்டையும், கூலி
யையும் கேட்கிறேனென்றும், ஷாபிஇய்யி றலியல்லாஹு அன்கு
முகம்மதுபுனு பிஷ்றைத்தொட்டும், அவர் புலையுபுனு இயாலைத்
தொட்டும், அவர் ஹிஷாமுபுனு ஹஸ்ஸானைத்தொட்டும் பேசி
வந்தார்கள், ஹஜ்ஜாஜுபுனு யூசுபுத் தக்கபீ (பசறு) ராச்சியத்து
க்கு வந்தபோது, ஹசனுல்பிசுரிய்யி றலியல்லாஹு அன்ஹுவை
ப்பார்த்து, அபாசயீதே நீரேன் நம்மிடம் வரவில்லை யென்றாகள்.

அப்போது அவர்கள் சொன்னார்கள், நான் உம்மிடம் வந்து
மூடுகி நல்ல வுபதேசங்களைப் போதித்தால் நம்மைத்கொன்று
போடுவீர். (காஸீ) வேலைக்கு நம்மைவம்பாகப்பிடித்து நிற்பா
ட்டினைவைப் பீராகில் துலையாத துக்கத்திலாக்கி வைப்பீர், ஆகிறத்
துச்குத்த் தேவையாகத்தேடுவானே யப்படித்கொத்த கருமம்உம்
மிடத்திற் கிடையாதுஎன்னிடத்திற் பணங்காசு கிடையாது, அதை
ப்பேணுவதற்காக வாகிலும், உம்மைப் பயப்பட்டுவருவேன் ஒரு
விதத்திலும் நான் உம்முடைய அழைக்குதலுக்கு ஜவாபு, சொல்வ
தும், உம்மிடம் ஹாலிருகிறது விதிக்கவில்லையென்று சொன்னார்க
ளென்று.

இன்னும், ஸுப்யானுத் தவ்ரிய்யை (காஸீ) வேலை பார்க்க
வம்பிக்கப் பட்டதில் அவர்கள் பயித்தியம்போற்பாவனைசெய்து
கொண்டதையும் பேசிவந்தார்கள், அதுசெய்தி அபூஹனீபா றலி
யல்லாஹு அன்ஹுவுடைய (மனாக்கிபில்) முந்திவிட்டது (றபிஉ)
றஹிமஹுல்லா சொல்லுகிறார்கள், இமாம் ஷாபிஇய்யி றலியல்
லாஹு அன்ஹுசொன்னதாக, நான் இருபதுவருடக்காலம்ஒரு

போதாவதுவயிறு நிரம்ப வஜீபனிக்க வில்லை, ஒருதடவைமட்டும் வயிறு நிரம்பவஜீபனித்துப், பின்பு கையை விட்டு சுத்தியெடுத்து விட்டேனென்று. இதில் பைசக்கிய்யி றலிமஹுல்லா சொல்லுகிறார்கள் வயிறு நிரம்பத் தின்பதால் (கல்பை) வன்னெஞ்சமாக்கும் (அக்லை) யடைக்கும் (இபாதத்திற்) சோம்பலையுண்டாகும், அது (சூபிய்யாக்) களிடப்புகழப் படாததாயிருக்குமே ஆகையாலென்று. இன்னும், சொல்லப்பட்டிருக்கிறது வயிறு நிரம்பத் தின்னுகிறதாகிறது (கல்பை) வன்னெஞ்சமாக்கும், மிருகத்தன்மையை உண்டாக்கும், மறதியை வருத்திவைக்குமென்று.

ஸக்கரியா வுஸ்ஸா ஜிய்யி றஹிமஹுல்லா. முகம்மதுபுனு வலீது சொன்னதாகச் சொல்லுகிறார், இமாம்றலியல்லாஹு அன்ஹு சொன்னார்கள், ஒரு நாளாவது ஒருகூலில் இரண்டு விடுத்தப் தண்ணீர் குடிக்கவுமில்லை, ஒருநாளாவது இரண்டுவிடுத்தம் ஹலாலுடன் சேரவுமில்லை, ஏனென்றால். துன்யாவின் இன்பங்களிற கொஞ்சங்கொண்டு போதுமாக்கின தற்காகவென்று இன்னும், ஸாஜிய்யி றஹிமஹுல்லா என்கிறவர் இமாமுடைய பேரன்முகம்மதைத் தொட்டும்.பேசிவருகிறார்கள் இமாம றலியல்லாஹு அன்ஹு தங்கள் மேனியில் வாடையேடுதமான தற்காய், அதை மணமாக்குகிற தைநாடிப்பன்னீர்போற் கொத்தவாசத்தைக் கொண்டு ஒருக்காலும் பூசினதில்லையென்று, அதிகாரியத்தைத் தொட்டும் கேட்கப்படுமாகில், அந்தமணமாகிறது மஸ்தாக்கிற வஸ்துவுக்கு வொப்பாகுமென்று சொல்வார்கள்.

இபுனு அப்துல் ஹக்கீம் றஹிமஹுல்லா இமாம்ஷாபிஇய்யி றலியல்லாஹு அன்ஹுவுக்குச் சொன்னார்கள், இமாமே யுங்களுக்கு மிசிறிற்குடியிருக்கநாட்டமிருந்தால்மிகுதிவிஸ்தாரணமில்லாதிருந்தாலும், ஒருவருஷத்துக்குப் போதுமென்னத் தக்கவஜீபனமும், சுல்தானிடம் சரியிருப்புப் பெறுகிறதும், இவை இரண்டுமுங்களுக்கு வேணுமாயிருக்குமென்றார், அப்போது, இமாம்றலியல்லாஹு அன்ஹு சொன்னார்கள், அபாமுகம்மதே.நான்(குஸ்ஸா) என்கிற ஊரிற் பிறந்து (ஹிஜாஸ) என்கிற ஊரில் வளர்ந்தேன், எங்கள் வீட்டில் ஒரு இரவுக்குக், காணும் வஜீபனமாகிறது எங்களிடமிஞ்சியிருக்கவுமில்லை நாங்கள் பட்டினியாக இராத்தரிக்கவு



மில்லை அறிந்துகொள்ளும், அல்லாகுத்த ஆலாவைத் (தக்றுவாச்) செய்வது ஒருவனைச் சிறப்பாக்கவில்லையாகில், அவனுக்குச் சிறப்புக் கிடையாதென்றார்கள்.

அபுல் அப்பா சின்னை றாசிய்யி சொல்லுகிறார்கள், நான்ஷாபிஇய்யி றலியல்லாகு அன்கு சொல்லக்கேட்டேன். துன்யாவின் (நிஃமத்தில்) மேல் மிச்சமாய்த் தேடுகிறதாகிறது. வேதனையாயிருக்கும் அதுகொண்டு (தவ்ஹீ) துடையவர்களை வேதனைசெய்வானென்று. முஸ்னிய்யி றஹிமகுல்லா சொன்னார்கள், நான் இமாம் றலியல்லாகு அன்கு சொல்லக்கேட்டேன். துன்யா வடங்கலையும் ஒரு வஸ்துவாக்கி அந்தவஸ்துவைக்கடைபாஸாறிற் கூறி விற்கப்படுமாகில் நான் ஒரு ரொட்டித் துண்டுக்காவது வாங்கமாட்டேன் ஏனென்றால், அதிலுள்ள (ஆபத்துகளை) நான்றிவேனே யாகையாலென்றார்கள். இன்னுஞ் சொன்னார்கள், ஒருவனுக்கு துன்யாவின் பேரில் உவப்பும், அவேட்சையு மிகைப்பாயிருந்ததாகில் அவன் அந்த துன்யாவுடையவர்களுக்கு அருமைப்பணிவிடைசெய்வதை விதியாக்கிக் கொண்டானென்றும் உள்ளதைக்கொண்டு போதுமாக்குத லென்னும் (கனாஅத்தைப்) பொருந்திக் கொண்டானாகில் ஆருக்கும் அஞ்சாம லிருப்பானென்றும்.

இபுறாகீ முபுனு முகம்மது சொல்லுகிறார் நான் இமாம் றலியல்லாகு அன்கு சொல்லக்கேட்டேன் நீ துன்யாவிலிருக்குமளவுஞ் சீமானாகவேயிருக்க நாடுவாயாகிலஉன்னைக்காணஎழுமையாக இருப்பவர்களுடைய (ஹாலைப்) பொருந்தினவனாக இருவென்று. புவைத்திய்யி றஹிமகுல்லா சொல்லுகிறார்கள், இமாம் றலியல்லாகு அன்கு திருவுளமானார்கள். ஆரானாலும் தன் (நபுசில்) கின்றும் எப்போதும் பெலக்கேட்டைத் தெரிசித்துக்கொண்டிருந்தால் அவன் செவ்வொற்ற பாதையிலாயிருப்பானென்று.

முஸ்னிய்யி றஹிமகுல்லா சொல்லுகிறார்கள், நான் இமாம் றலியல்லாகு அன்கு இடங்கேட்டேன், நீங்கள் சரீரத்திற் பெலக்கேடில்லாதிருக்க எப்போதும் (அசா) வூண்டி நடப்பதேனென்று, அவர்கள் சொன்னார்கள், நான் துன்யாவைவிட்டும் (ஸபறுளி) யாக விருக்கிறேன், ஸபறுளி (அசாவை) விட்டும் ஒளியானென்று.

ஹறமலத்து றஹிமகுல்லா சொல்லுகிறார், நான் இமாம் றலியல்லாகு அன்கு சொல்லக்கேட்டேன், ஆனாகிலும் தன்னுடைய கடையை "அல்லாகுத்த ஆலா திறந்து வெளிவாக்குதலை யுவந்திருந்தால் வேண்டாக் கருமத்திற் பேச்சையும், பாவங்களையும் விட்டுவிடவும், அதனால் இவனுக்குச் சில இல்முகளைத் திறபிடியாக்கிக் கொடுப்பான், அதுகொண்டு மற்ற தடங்கலையும் விட்டுப் பிறக்கணித்திடுவானென்றும், இன்னுமொரு (ரிவாயத்தில்) வஞ்சனத்தைக் குறைத்துமடையர் சாவுகசேத்தை விட்டும்நீங்கித்தனித்திருக்கவுமென்றும், நீதமும் (அதபும்) இல்லாத துன்யாவின் (உலமாக்களுடைய) புழக்கத்தையும் விடச்சொன்னார்கள்.

யூனுசபுனு அப்தில் அஃலா சொல்லுகிறார்கள், எனக்கு இமாம் றலியல்லாகு அன்கு சொன்னார்கள், அபாமூஸாவே மனுடாங்களும் உம்மைப்பொருந்திக்கொண்டுநல்ல மனுடனென்று பேர்வாங்கிக்கொள்ள நாடிக் காலமெல்லாந் தெண்டித்து நடந்தீராகில் அதற்குப் பாதைகிடையாது, என்கிலும், அவ்விதமாகிப் போகவேணுமென்று நாட்டங்கொண்டீராகில் உம்முடைய (அமலையும்) நாட்டத்தையும் அல்லாவுக்கென்றே கலப்பறுதலாக ஒருவிதத்திலும் யாதொரு வஸ்துவையும் அந்த (அமலிற்) கூட்டாக்காதே நடந்தீராகில் அல்லாகுத்த ஆலா இடத்திலும் வானலோகத்தார், பூலோகத்தாரிடத்திலும் பொருந்தப் பட்டவராகி விடுவீரென்று.

(றபீஉ) றஹிமகுல்லா சொல்லுகிறார்கள், மிஸ்றில் இமாம்றலியல்லாகு அன்கு வியாதியாய் வீடடங்கி யிருக்கும்போது, ஒரு தலைமைக்காரனார், நசல் மினவவந்தார், அவர் சொன்னார் அபா அப்தில்லாவே நசலில் எது (ருஹத்து) உண்டும். மினவ வருகிறபேர்கள் மிகுதமாகியிருப்பதே யல்லாதென்றார், அப்போது, இமாம் சொன்னார்கள், நசலில் எது ருஹத்துண்டும், அந்த நசலாலும். அதின்பேரில் (சபுறுலும்) கிடைக்கிற (தவாபுடைய) (ருஹத்துமே) யல்லாது என்றும், நசலாகிறது பாவத்துக்குத் தெண்டகுத்தமாயிருக்குமென்றும்.



முகம்மதுபுனுக்குத்தறு. ஆகிறவர்கள் இமாம் றலியல்லாகு அன்கு சொன்னார்களென்று பேசிவருகிறார், புலைபுனு இயாது றலியல்லாகு அன்கு நசலாயிருக்கும் வேளை, சுபியானுத் தவரிய்யி றலியல்லாகு அன்கு நசல் மினவப் போயிருக்கையில், புலைலு கேட்டார்கள், அபா முகம்மதே நசலில் எது (நிஃமத்து) இருக்குதென்று, அப்போது, சொன்னார்கள், மினவ வருகிற பேர்களென்கிற (நிஃமத்துத்தா)னென்று. அப்போது, சுபியான் கேட்டார்கள், அவர்களால்எது (மக்குறாகு) உண்டுமென, அப்போதுசொன்னார்கள், அவர்களிட்ம் நசலைக்கொண்டு முறைபிடுகுறதுதானென்று.

இமாம் றலியல்லாகுஅன்கு துன்யாவானது, ஆருக்கும் இன்பத்தைக் கொடுக்காதென்கிறதில் அத்தாட்சியாய்ச் சில சமாசாரம் சொல்லுகிறார்கள், அதாவது, தாவூது அலைகிஸ்ஸலாம் நாயனிடத்தில் (முனாஜாத்துச்) செய்ததில் நாயனே நீ எனக்கு உதவியாயிருந்ததுபோல் என்மகன் சுலைமானுக்கும் உதவியாயிருக்கவேணுமென்று (துஆக்) கேட்கவும் (வஹ்யு) வந்தது நீர் உம்முடைய மகன் சுலைமானுக்குச் சொல்லும் நீரெனக்குப் பணிவிடை செய்ததுபோல் அவரும் செய்வாராகில் நானுமக்கா யிருந்ததுபோல் அவருக்கும், ஆயிருப்பேனென்று சொல்லுமென அறிவித்தானென்று இன்னும், அப்துல் மலிக்கிபுனு மறுவான் என்கிற ராஜாவானவர் (பகுதாதில்-றுசாபா) என்கிற அறணிப்பாகிய கோட்டைக் கட்டடத்தைத் தீர்மானமாக்கிய பொழுது சொல்லிக்கொண்டார், நானொரு நாளாவது இந்த ராஜாங்கத்தின் துக்கம்வராமல் அதைவிட்டும் ஒழிந்திருப்பதை நாடியு வந்திருக்குறேனென்று ஓரிடத்தில் தானும் தன்னுடைய சங்காத்தி, தானாதிபதிமார்களுமாய்க் கவனமற்றவர்கள்போல் மகிழ்ச்சியடைந்திருக்கும் நேரம் அன்றுமத்தியானத்தில் அவருக்கடங்கிய கோட்டைகளில் நின்றும் ஒரு கோட்டையில் எதிரியானவன் வந்துசண்டைசெய்து இரத்தக்களரியாயிருக்கிறதென்று ஓர் தபாலோடி வந்தது, அதை யறிந்தவுடன் சொன்னார், ஒருநாளாவது கவனமடையாமலிருக்கவில்லையே யென்று மிகவும் தலையிலடித்துக் கொண்டதுபோற் சொன்னார்.

இன்னும் இமாம் றலியல்லாகு அன்கு சொன்னார்கள் அந்த அப்துல் மலிக்குடைய மகன் (கிஷாம்) என்கிற ராஜாதன்னுடைய

சந்தோஷம் பொங்கியிருக்கும்போது ஒரு மனிதனுக்குச் சொன்னார், உமக்குத் தேவையான கருமத்தை நம்மிடம் தெரியப்படுத்தும், அதை நிறைவேற்றிக் கொடுப்போமென்று உடனே யவர் சொன்னார், என்னுடைய (ஹாஜத்தை) ஊசாட்டத்துக்குமுன்னறிந்து கொடுக்கும ஒருகாலுமழியாத இராஜாக்களுக்கெல்லாம் இராஜாவாகிய கொடையாளியாகிய சங்கையாகிய ராஜாவிட மறியப்படுத்திப்போட்டேனென்று சொல்லிப்போட்டார்.

இபுனு அப்தில் ஹக்கம் சொல்லுகிறார்கள், இமாம் றலியல்லாகு அன்கு விடங்கேட்கப்பட்டது, ஒருமனுடன் தன் முதலிற் சிலதை ஊரில் மிகுந்து (அகலுள்ள) புத்திவானாயிருக்கப் பட்டவருக்குக் கொடுங்களென (வசிய்யத்துச்) செய்து மவுத்தாகி விட்டால் அதையாருக்குக் கொடுக்கப்படுமென்று, அப்போது சொன்னார்கள், துன்யாவை வெறுத்திருக்கிறவர்களுக்குக் கொடுக்கப்படுமென்றார்கள், ஏனென்றால், அல்லாகுத்தஆலாவுக்குக்கோபம் வருத்தும், துன்யாவுடைய வுவப்பைப் புத்தியுள்ளவன் தேடமாட்டானென்று சொன்னார்கள்.

முஸ்னிய்யி றஹிமகுல்லா சொல்லுகிறார்கள், நான் இமாம் றலியல்லாகு அன்கு சொல்லக்கேட்டேன், எனக்கு உலமாக்களிலொருவர் சொன்னார், மேலைக்கொரு காலம்வரும் அந்தக் காலத்தில் பூமியின்மீது தங்கக்காசைப்பரப்பி அந்தக் காசின் அச்சுக் கலிமா யெழுதப்பட்டு அதினடுக்க இந்தக்காசை யெடுத்தவன் நரகம் புகுதுவானென்றும், எழுதப்பட்டிருக்கிறது, அதை யாவருமறிந் திருக்குறார்கள். அப்போது, அக்காலத்திலுள்ள மனுடர்கள் ஒருவரறியாமல் ஒருவர் எனக்கு முந்தி யுனக்கு முந்தியென்று நெருங்கிச் சென்று ஒருநொடியில் அந்தக் காசு முழுமையும் கொள்ளையாக்கிக் கொள்வார்களே யப்படிக்கொத்த காலம் வருமென்றார்கள். இதின் (முறாது) எந்தவிதம் கொண்டாவது காசு கிடைத்தாற் போதுமென்ற எண்ணம்கொண்டதால் நரகமடையும் அதாபு கொஞ்சமாவது (கல்பில்) ஊசாடவில்லையென்று.

இன்னும்இமாம் றலியல்லாஹு அன்ஹுவைத்தொட்டும்பேசிவரப்பட்டதாகச் சிலகித்தாபிற் காணப்படுகிறது, எந்நேரமும்



ஒரு மனுடனுடைய நாட்டம் தன்வயற்றிற்குள்ளே செல்லுமே அந்த வஸ்துவின்பேரில் ஆயிருக்குமாகில் அவன் பெறுமதி யில்லை யாகிறது அவனுடைய வயிற்றில் நின்றும் பிறப்படுமே யந்தவொரு வஸ்துவாயிருக்கும். அதாவது; மலம், ஜலமாயிருக்குமென்று. இன்னும், ஷாபிஇய்யி றலியல்லாஹு அன்ஹு தங்களுக்குத் தலையில் ஒரு முடி நரைக்கக்கண்டவுடன் கண்ணாடியில் அந்த முடியைப்பார்த்து ஓர்பைத்துச் சொல்லியிருக்கிறார்களென்று, அதின் பொருளாகிறது.

ஆந்தையை யொப்பிடப்பட்ட வென்னுடைய தலைக்குமேலாலே கூடுவைத்தகூகையே, அதாவது; நரையே, அதில்காகத்துக்குச்சமானம்பொருந்திய கறுப்புமுடி பார்த்திட்ட நேரத்தில்என்னை முகபங்கமாக்குகிறத்தின்பேரில் என்பது. இதின் கருத்தாவது, கூகையும் ஆந்தையும் குடியிருப்பது பாழான தலங்களிலேதான், காகம் குடியிருப்பதுபரிபாலனமான தலங்களிலேதான், ஆகையால்துன்யாவிலுள்ள வுவப்பை (மவுத்துக்)கொண்டுதன் (நபுசுக்கு)அச்சம்பூட்டுகிறதில் இதுமிகவும் தீர்மானமான (வஃலாயிருக்கும்) இவைகளிற் பொளிப்பாகிறது (நபுசே)ஏய், சரீரமேநீதுன்யாவைக்கொண்டு பரிபாரிக்கும் காலமெல்லாம் உன்னிற் காகநிறம்பொருந்திய கறுத்த முடியிருந்தது பாழாகிப்போறதென்கிற (மவுத்தை) நீ யடுத்தபடியாற் கூகைநிறம்பொருந்திய நரைவந்தது வென்றதாம்.

இன்னும், பைத்துச் சொல்லியிருக்கிறார்கள். அதின் பொருளாகிறது, துன்யாவுக்கு உவமையாகிறது பேதகமாகிய விடக்கைப்போல் அதின்பேரிற் சிலநாய்கள் கூடிக்கொண்டு அந்த விடக்கைப்பற்றியிழுக்கக் கருத்துக்கொண்டிருக்கிறது ஓய்மனுடனே நீயந்த துன்யாவென்னும் விடக்கைத் தவிர்ந்தியானால் துன்யாவுடைய மனுடருக்கெல்லாம் நல்லமனுடனாக இருப்பாய் அந்த விடக்கைப்பற்றி யிழுப்பியானால் அந்த மனுடனென்னும் நாய்களும் நீயும் பிணங்கிக்கொள்வீர்கள். அப்போது நீயும் ஒருநாயாவாய்.

இன்னும் ஒருகித்தாபில்இமாம் றலிறல்லாஹு அன்ஹுளவிற்றுசேர்த்து அவர்கள் சொன்னதென்கிறதாய்ச்சொல்லுகிறார்கள்;—அ

தன் பொருளாகிறது, என்னுடைய (இல்மிலே) தனக்குத் தேவையானதை யெடுத்துக்கொள். அஃதுனக்கும் பிரயோசனம் செய்யும், என்னுடைய (அமலளவில்) நோட்டமிடாதே. நான் செய்யுங் குற்றங்களானது உன்னைக்கனப்பிவைத்துப் போடாது, இன்னும், இல்முகளாகிறது. பழம் உண்டாயிருக்கும் கொம்புகள் போலே அதிற் பழங்களை யெடுத்துக்கொள், அப்பால், கொம்புகளை யடுப்புக்காகுமென்று விட்டுவை, இக்முடைய பழமானது அமற்றுன், அல்லது, இல்முகளிற்றுனே பிரயோசனம். செய்கிறது பழத்தைப்போலும, மற்றவைகள், கொப்பைப் போலுமென்றும், முறுது வைக்கப்பட்டது. இந்தப் பிரிவில் இமாம் றழியல்லாஹு அன்ஹுசொல்லிய அருமையான சொற்களில் ஆயிரத்திலொருபங்காவது அடங்கவில்லை. ஆகிலும், இந்நேரம் வாய்த்த சாவகாசத்தின் மட்டுக்கு உரை செய்யப்பட்டது.

## பதினாறும் பிரிவாகிறது.

இமாம்ஷாபிஇய்யி றழியல்லாஹு அன்ஹுவை தித்யத்துடைய இல்மையும், நட்சத்திரக்கணிதத்தையும் படித்து, மற்ற இல்மிலே தீர்மானமாயிருந்ததுபோல், இஃதிரண்டு இல்மிலும் அவர்கள் மாகிருயிருந்ததிலும், பேசுகிறதாயிருக்கும்.

(றபீஉ) றழிமஹுல்லா சொல்லுகிறார், நான் இமாம் றழியல்லாஹு அன்ஹு சொல்லக் கேட்டேன், இல்மாகிறது இரண்டு இல்மாயிருக்கும் (இல்முல் அப்தானி- வஇல்முல்அதியானி) சரீரங்களுடைய இல்மு ஒன்று, தீன்களுடைய இல்மு ஒன்று என்று இன்னுமொரு தடவை சசான்னார்கள், சரீரங்களுடைய. இல்மாகிறது,(சரீ அத்) துடைய வெளிரங்கமான வணக்கங்களை யறிகிறது, தீன்களுடைய இல்மாகிறது, கல்பிலுண்டான வியாதிகளையும், அதின் மருந்துகளையும் கல்பளவிற் சேர்க்கப் பட்ட அமல்களையும் அறிகிறதென்று இன்னும், அவர்கள் சொன்னார்கள், மனிதனே நீயொரு வூரிற் புகுந்து அவ்வூரில் ஒருநீதிவானையும், ஒருகிருபையான வைத்தியனையும். ஓடுமென்னத் தக்க தண்ணீரையும் காணவிட்டால், அந்தவூரிற் குடியிராதேயென்று.



ஹசன் றழிமஹுல்லா சொல்லுகிறார்கள், நம்முடைய (மஷாஇகு) மாரிலொருவர் இமாம் ஷாபிஇய்யி றழியல்லாஹு அன்ஹுவைத் தொட்டும் பேசி வருகிறார்கள், இமாம் றழியல்லாஹு அன்ஹு திருவுளமானார்கள், (தீனை) யறிவிக்கும் ஆலிமும், பிணியை யறிவிக்கும் வயித்தியனுமில்லாத வூரிற் குடியிருக்கிறது (நாயமல்ல) வென்று, ஹறுமலத்து றழிமஹுல்லா சொல்லுகிறார்கள், இமாம் றழியல்லாஹு அன்ஹு திருவுளமானார்கள் மனுடர்கள். இரண்டு இல்மைப் படியாமற் பொடுபோக்காயிருந்து விடுகிறார்கள், அதாவது, வைத்தியமும். அறபளவிற் சேர்கப்பட்ட முதற்மொழிகளும், அதின் கிளை கோத்திரத்தின் வரலாறுமென்று இன்னும், இமாம் றழியல்லாஹு அன்ஹு மிகுந்து கைசேதமாஞர்கள மனுடர்கள் வைத்தியத் தொழிலைப் பழுதாக்கி விட்டுப்போட்டு அதை (யகூதிகள்நசாறுக்) களிடம் ஒப்பிவித்துப் போட்டார்களென்று.

இந்தவிஷயத்தை அன்மாத்தீபேசி வந்தார்கள், யூனுசுபுனு. அப்தில் அஃலா சொன்னார்கள், இமாம் றழியல்லாஹு அன்ஹு அவர்கள் சொல்லும்படி கேட்டேன், இந்த (யகூதி நசாறு) விடம் வயித்தியர்களிட மருந்து பரிமாறுகிறது சரியல்ல, அந்தமருந்து அறியப்பட்டிருந்தா லொழிய வென்றும், ஹறுமலத்து. றழிமஹுல்லா சொன்னார்கள், இமாம் றழியல்லாஹு அன்ஹு திருவுளமானதாகச் சுபியானுபுனு உயைனா றழிமஹுல்லா ஒரு போது (இபுனுல்ஹறாபி) யுடைய முகத்தளவில் நோட்டமிட்டுப் பார்த்து முகம். மஞ்சளிப்பாகக் கண்டு தேனையும் வெந்தயத்தையும் தின்னச் சொன்னார்களென்று.

(றபீஉ) றழிமஹுல்லா சொல்லுகிறார்கள் இமாம் றழியல்லாஹு அன்ஹு திருவுளமானார்கள், மொச்சைக்கொட்டையைத் தின்பது மூளையை மிகுதமாக்கும் மூளைபுத்தியை மிகுதமாக்குமென்றுமொச்சைக் கொட்டைத் தின்பது மறதியைவருத்துமென்று நோட்டமிடக்கூடாது யூனுஸுபுனு அப்தில் அஃலா சொல்லுகிறார் இமாம் றழியல்லாஹு அன்ஹு சொல்லக் கேட்டேன். (வபா)வென்னும் பேதிக்குப்பிரயோசனங்கொடுக்கிற மருந்து * (பனபுஸஜைக்) கானும். ஒரு வஸ்துவும் கிடையாது, அதை சிலர் சொல்வதை

* பனபுஸஜு- ஓர்வகைப்பூ

யைத்துப் பூசவும், குடிக்கவும், கொடுக்க வேணும் ஹிர்துஸ் தானில் (பனபுஷா) என்று அதற்குப்பொருட்சொல்வார்கள்.

அபூஉது மானிபுனிமுகம்மதி புனிஇதிரீஸிஷ் ஷாபிஇய்யி சொல்லுகிறார்கள், எங்கள் தகப்பனார் இமாம் ஷாபிஇய்யி றலியல்லாஹு அன்ஹுவுக்கு காச்சல், கண்டால், கொம்மட்டி மாதுளம் பழத்தைப் பிளிந்து அதின் சாரத்தைக் குடிப்பார்களென்று முகம்மதுபுனு அப்தில் ஹக்கம் றஹிமஹுல்லா இமாம் றலியல்லாஹு அன்ஹு சொல்லக் கேட்டதாய்ச் சொல்லுகிறார்கள், பசியாயிருந்து குளித்துப் பின்னும் பசியாறுமலிருப்பவனும் சரீரத்தில்கொம்புவைத்து, இரத்தம் எடுத்தவுடன் பசியாறுமலிருப்பவனும் இந்த இரண்டுபேருமே. உடனே மவுத்தாகாமலிருப்பதுபுதுமையென்று.

(றபீஉ)றஹிமகுல்லாசொல்லுகிறார், கொளுப்படசிய சரீரத்தில் அக்குலதிக மிராதென ஷாபிஇப்யி றலியல்லாகு அன்கு சொன்னார்களென்று. ஹனைனுபுனு இதிரீசல் ஹலவானிய்யி றஹிமகுல்லா சொல்லுகிறார்கள். இமாம் றலியல்லாகு அன்கு திருவுளமானார்கள், கொளுத்தவர்கள் ஈடு மீடசியாகிறதில்லை, முகம்மதுபுனு ஹசனே யொழியவென்று உடனே யவர்களை நீக்கிய சபபென்னவென்று கேட்கப்பட்டது, அதற்கு ஜவாபு சொன்னார்கள், புத்திசாலியானவன் இரண்டாலொரு கவனத்தைவிட்டும் நீங்கமாட்டான், அதாவது, துன்யாவின், கவனம் அல்லது, ஆகிறத்தின் கவனம் இந்த இரண்டாலொருகவன மிருந்தாற் கொழுப்பு ஊறஆற வுரிகிக்கொண்டேயிருக்கும், இந்த இரண்டு கவனமும் இல்லாதவனுடைய கொழுப்பு ஊற ஆற வுறைந்துகொண்டேவரும், அவன் மிருக ஜாதியுடைய குணமுடைப்பதில, ஷக்கில்லை யென்றார்கள்.

இன்னும், இதற்கு உதாரணஞ்சொன்னார்கள், முன்னாளையில் ஒரு ராஜா வுண்டாயிருந்தான், அவனுடைய சரீரம், மிகுந்து கொழுப்படசியதனால் மிகுந்து தொந்தரையுண்டாகி. மிகுந்த வைத்தியர்களை வரவழைத்து என் சரீரமெலியும்படி செய்யுங்களென்று சொல்லி லோச்சுகள்செய்து பார்த்ததிற்கொழுப்பு அதிகமாகிக்



கொண்டு வந்தேயல்லாமற் குறைய வில்லை, பின்பு, ஒருவூரில் மிகுந்து கெட்டியான பரிகாரி யொருவரிருக்கிறாரென்று கேள்வியாகியவரை வரவழைத்துத் தன்னுடைய (ஹாலை) முறையிட்டு நீர் எவ்விதமும் என் சரீரமெலியும்படி செய்தால், இன்ன தின்னது உமக்குத் தியாகம் தருவோமென்று சொன்னவுடன் அவர் சொன்னார், எனக்குச் சாஸ்திரமும், வைத்தியமும் இரண்டும்தெரியும் ஆனதால், இன்றிரவைக்கி (நுஜூம்) கணக்கைப் பார்த்து உம்முடைய கிரேகத்தைக் கணித்து நேர்போலே நாளை மற்றநாள் மருந்து செய்யலாமென்று சொன்னார். இராஜாநல்லதுதானென்று போய்வரும்படி சொன்னார், மற்றநாள் நோத்தோடு ராஜாவிடம் ஹக்கீம்முகம் வாடினவராய்ப்போய் இராஜாவை நோக்கி ஆண்டவன் காக்கட்டுமென்று பதறிப் பதறிச் சொன்னார், அப்போது, ராஜாவானவர் ஏங்கி-ஏங்கி அஃதென்ன அஃதென்னவென்றார்.

அப்போது, ஹக்கீம் சொல்லுகிறார் இராஜாவே யுங்களுக்கு மருந்து செய்து பலனைக்காணேம், உங்கள், (மவுதனுக்கு) இன்னம் ஒரு மாதமிருக்கிறது என்கினு மருந்து செய்யவேதான்பிறியமிருந்தாற் சொல்லுங்கள் செய்கிறேன் நான் சொல்வதிற் சந்தேகமிருந்தால் என்னைத் தடுத்துவைத்து ஜயிற்படுததிக் கொள்ளும் அந்தத் தவணைபோல் நீர் மவுத்தாக வில்லையாகில். என்னைக் கொன்றுபோடும் மவுத்தாய்ப் போவீராகில் என்னை விடுதலையாக்கும்படி யிப்போதே கட்டளை செய்து போடுமென்றார், அதுபோலே யந்த ஹக்கீமை ஜயிலாக்கிப் போட்டுத் தான்தனியவொரு தலத்திலாகிக் கவனமடைந்து ஊண், தீன் குறைத்து நாளுக்குநாட் கவனமும், ஈனமும் அதிகப்பட்டு மனுடருடன் சமாளமாய் முகம் கொடுத்து யாதொரு பேச்சும் பேசாமல் நாளுக்குநாள் மெலிந்து போனார், இருபத்தெட்டு நாட்சென்ற பிறகு அந்த ஹக்கீமை ஹாஜிறுக்கி ராஜா கேட்டார், நீர்வைத்த தவணை நெருங்கிக்கொண்டது என் கவன மதிகப்படுகிறதால் நான் நாடியபடி சரீரமெலிந்து போய் விட்டது, என்கிலும், நீர் கணித்துச் சொன்ன சங்கதியைப் பயப்படுகிறேனென்றார்.

அப்போது ஹக்கீம் சொன்னார் ராஜாவே என்னுடைய மவுத்தையே நானறிய மாட்டேனேயப்படி யிருக்கவும்முடைய மவுத்

தை நானெப்படி யறிவேன் உம்முடைய கொழுப்பையுருக்கும்படியான. எனம் வருத்திவிக்க நாடித்தான் நானிந்தப்படி சொன்னதெல்லா மென்றார். உடனே ராஜா மிகவுஞ் சந்தோஷமாகி யனேக நன்கொடை செய்து அனுப்பிவிட்டாரென்று.

(றபீஉ) றஹிமகுல்லா சொல்லுகிறார், நான் இமாம் றலியல்லாகு அன்கு சுகக்குறைத்தலாக விருக்கும்போது போனேன், அபா அப்தில்லாவே யெப்படிவிடிவேறுநீர்களென்றேன். அவர்கள் சொன்னார்கள் பிலக்கேடானவனாக விடிவேறுனேனென்று, நான் சொன்னேன் அல்லாகுத்த ஆலா. வுங்களிற் பெலக்கேடனதைப் பெலப்பாக்குவானாகுவமென்று. அப்போது சொன்னார்கள் (றபீஉ) உமக்கு அல்லாகுத்த ஆலா (றஹ்மத்துச் செய்வானாக்வும் பெலக்கேடானதைப் பெலப்பாக்குவானேயாகில் அதுதான் என்னைக் கொன்றுபோடுமென்றார்கள், அப்போது, நான் கேட்டேன், எவ்விதமாக. நான் (துஆக்) கேட்கட்டுமென்று, உடனே படித்துத் தந்தார்கள், பெலக்கேடானதைப் பெலக்கேடாக்கிப் பெலமானதைப் பெலமானதாகவே யாக்குவானாகவு மென்று சொல்லு மென்றார்கள்.

அதாவது. ஐயநாடி யெந்தநாளும் பிலக்கேடாகத்தானிருக்கும், மவுத்துடைய வக்தில்தான் பெலனானதாய் நடக்குமென்று சொல்லப்படுகிறது, இமாம் றலியல்லாகு அன்கு. (றபீஐப்) பார்த்துச் சொன்னார்கள். அல்லாகுத்த ஆலா சில வுறுப்பை யொடுங்கினதாயும், சிலதை யுசும்பினதாயும் வைத்தான், அதது அந்தந்தத் தானத்தில் இருந்தாலேதான் சுகம். ஒடுங்கினதை யுசும்பினதாயும் உசும்பினதை யொடுக்கினதாயும் செய்வானேயாகில், அது, மனுடனை நோவினை செய்யுமென்று.

இமாம் றலியல்லாகு அன்கு மவுத்துடைய வியாதியிற் கைபிடித்துப் பார்க்கவந்த வைத்தியன் கையை யிவர்கள் பிடித்துப்பார்த்து இவனுக்கு (ஹால்) முடிகியிருக்குமென்று சொல்லி யவ்விதமே. யந்த வைத்தியன் இமாமுடைய வபாதுக்கு முன்னாலே வபாத்தாகிப்போனானென்றும், அவன் நசுறானிய்யி வைத்தியனாயிருந்தானென்றும் முஸ்னி றஹிமகுல்லாவுடைய, ரிவாயத்தில் இருபத்தோராம் பிரிவில்வரும். (இன்ஷா அல்லா)



இபுனு அப்தில் ஹக்கம் பேசிவருகிறார்கள், இமாம் றலியல்லாகு அன்கு சொல்லக்கேட்டேன். மூன்று வியாதியில் வைத்தியர்களுக்கு மருந்து கிடையாது, அதாவது, மடத்தனமும், பேதியும், கிழடுபாகமும், இந்த மூன்றையு மாற்றமுடியாது.

(றபீஉ) றஹிமகுல்லா சொல்லுகிறார்கள், நான் இமாம் றலியல்லாகு அன்கு சொல்லக்கேட்டேன், மூன்று வஸ்துவாகிறது, மருந்தில்லாத நசனுக்கெல்லா மருந்தாயிருக்கும் வைத்தியர்களெல்லாம் அதுபோல் மருந்து செய்துகொள்ள வேலாதவர்களாகிப் போவார்கள், அதாவது கொடி முந்திரிகைப் பழமும், பசுவின் பாலும், கரும்பும், என்றார்கள். அந்தப் பால் ஒட்டகைப் பாலென்பதற்கும் இடமாகிறது.

இன்னுஞ் சொன்னார்கள், கரும்பே வுங்களூரில்லா விட்டால் நானதிலே தரிபாடா யிருக்கமாட்டேனென்று, இன்னுஞ் சொன்னார்கள், என்னுடைய பயல் பார்வைக்குக்குறைததலானவனாக இருந்தான், நானவனுக்கு ஆட்டின். ஈரலையுலர்த்திப் பொடிசெய்து சுறு மாப்போட்டேன், அவன் நல்ல பார்வையுள்ளவனாகிவிட்டானென்று.

யூனுஸுப்னு அப்தில் அஃலா சொல்லுகிறார்கள், என்னிடம் இமாம் றலியல்லாகு அன்கு சொன்னார்கள், நான் (ஜனபத்து, முழுக்கைக் கோடையிலாவது, மாரியிலாவது, வென்னீர்கொண்டேயல்லாது, முழுகவில்லையென்று. (றபீஉ) றஹிமகுல்லா சொன்னார்கள், நான் இமாம் றலியல்லாகு அன்கு சொல்லக்கேட்டேன், ஹாறூன் றஷீது என்னிடங் கேட்டார் முகம்மதே நீர் காலைவஞ்ஜீபனத்தை நேரத்தோடே பசியாறுகிறதாய்க் கேள்வியாயிருக்கிறேன் (சபமென்ன) வென்று, அப்போது, நான் சொன்னேன் நாலுகாரியத்துக்காக வேண்டியென்று, அஃதென்னகாரிய மென்றார், நான்சொன்னேன், தண்ணீர் குளிர்ந்து ஆகாயமனைமாயிருந்து ஈக்கள் குறைந்திருப்பதாலென்றும், இன்னும், என்னுடைய (நபுசைப்) பிறருடைய வஜீபனத்தைவிட்டும் ஆசைமுறித்ததற்காக வேண்டியு மென்றேன், அப்போது, றஷீது. இதுநல்ல கருத்தென்றார்.

அபூஹசினில் மிசுரிய்யி சொல்லுகிறார், மிசுறுலே திறமான பரிகாரியாய் ஒரு மனுடன் இருந்தார், அவர் சொல்லக்கேட்டேன் என்னிடம் ஷாபிஇய்யி றலியல்லாகு அன்கு வந்திருந்து வைத்திய முறைகளை யெடுத்துப் பேசிக்கொண்டிருந்தார்கள், அப்போது, நினைத்தேன் இருக்கிராச்சியத்து ஹக்கீம் வந்துவிட்டாரென்று, உடனே யவர்களிடம் சொன்னேன் (புக்குறாத்துல் ஹக்கீம்)உடைய. வாகடக் கித்தாபை யுங்களிடம் ஓதநாடி யிருக்கிறேனென்று, அப்போது, சொன்னார்கள். இந்த ஜாமி உல் அஸ்கறு) என்கிற பள்ளியிலுள்ள வோதுகிற பிள்ளைகள் உமக்கு ஓதித்தர என்னை விடமாட்டார்களென்று.

இபுனு அபீஷாறைஹு சொல்லுகிறார்கள், நான் ஷாபிஇய்யி றலியல்லாஹு அன்ஹு சொல்லக்கேட்டேன், ஆராகிலும் வஜீபனித்தாற் றன்னுடைய பல்லுகளுக் கிடையிலுள்ள வஜீபனம், இறச்சியை விரலால் எடுத்தாலும், அல்லது நாக்கினால் நுனைவியெடுத்தாலும் தின்றுபோடவும், குச்சியாலே குத்தியெடுத்தால், துப்பிப் போடவுமென்று, இதற்கு பைகக்கிய்யு றஹிமஹுல்லா அபூகுறைறு றலியல்லாஹு அன்ஹுவைத் தொட்டும் ஒரு ஹதீதையும் பேசிவந்தார்கள். (றபீஉ) றஹிமஹுல்லா சொல்லுகிறார்கள், இமாம்ஷாபிஇய்யி றலியல்லாஹு அன்ஹு நட்சத்திரத்தின் இல்மிற் சொல்லுகிறார்கள். (வகுல்லஹு ஐஅல லக்குமுன் னுஜூம) வென்கிற ஆயதையும் (வ அலாமத்தின் வபின்னஜ்மி. கும். யஃத. தூன்) என்கிற ஆயத்தையும் ஓதி முறுதைத் தபுசீறுசெய்து, பின்பு சொல்லுகிறார்கள், இந்த ஆயதில் அடையாளங்களென்றுசொன்னது மலைகளும், இரவும் பகலும், பேறியப்பட்ட காற்றுகளும், பிறையும், பொழுதும, நட்சத்திரங்களும், அதனாற் றிசைகளையறிவதும் (கிபுலா) வையறிவதும், நேரங்களை யறிவதுமுண்டாகுமென்று.

அஹ்மதுபுனு முகப்மதினி பிந்திஷ்ஷாபிஇய்யி றஹிமஹுல்லா சொல்லுகிறார்கள், என் தகப்பனார்.சொல்லக்கேட்டேன், ஷாபிஇய்யி றலியல்லாஹு அன்ஹு வாலிபமா யிருக்கும் போது நட்சத்திரக் கணிதம் பார்க்கிறவர்களா யிருந்தார்கள், ஏதொருவஸ்துவைக் காதாற்கேட்டாலும், கண்ணாற்கண்டாலும், அதை மனன



மாக்கித் திட்டித்துப்போடுகிறவர்களாயிருந்தார்கள் ஒருநாள் ஒரு பெண்பிள்ளை பிள்ளைப்பேறு காலத்திற் கருமாரிதொடுத்தபோது அவர்கள் கணித்துச் சொன்னார்கள், இந்தப் பெண்பிள்ளை பெறும் பிள்ளையானது ஒருகண் குருடாயிருக்கும், அதின் அபத்திற் கறுத்த மறுவுண்டும், அதுபெண்பிள்ளை அதுபிறந்து இன்னநாளையில் மவுத்தாகிவிடுமென்று சகல அடையாளங்களும். அவர்கள்சொற்படியே யிருந்தது பின்பு. தங்கள் (நபுசிலே) யோராறுதிமானம்போற்சொல்லிக்கொண்டு இனிமேல் ஒருக்காலும் இந்தக்கணிதம்பார்க்கிறதில்லையென்று அவர்களிடமெழுதி யிருந்த சாஸ்திரங்கள் சகலத்தையும் ஒருகிடங்கிற் புதைத்துப் போட்டார்கள்.

ஹறுமலத்து றஹிமஹுல்லாவும் இவ்விதம் ஒருபெண்பிள்ளையில் நடந்ததாகவும்; அஃது இருபத் தேழு நாளைக்குப் பிறகு பெறுவாள் என்றும் பிறந்து இருபத்துநாலாம் நாளமவுத்தாகுமென்றும் சொல்லியவ்விதமே நடந்தது என்றும், அதற்குப் பின்னாலேயொருக்காலும் அந்தச் சாஸ்திரம் பார்க்கவில்லையென்றும்சொன்னார்கள், அல்லாஹுத் தஆலா அவர்களைத் தொட்டும் பொருந்தி அவர்களுடைய இல்முகளைக் கொண்டு நமக்கு இருபதியிலும் பிரயோசனஞ் செய்வாளுகவும், ஆமீன்.

## பதினேழாம் பிரிவாகிறது.

இமாம் ஷாபிஇய்யி றலியல்லாஹு அன்ஹுஉடையமுகக்குறியாற் சரியொத்துச் சமைந்ததிலும் கிடுகூறுய் ஜவாபு கொடுத்ததிலும்பேசுகிறதாயிருக்கும்.

ஹுமைதிய்யி றஹிமஹுல்லா சொல்லுகிறார்கள், நானும் இமாம் றலியல்லாஹு அன்ஹுவுமக்காவில் நின்றும்புறப்பட்டு (அபுத்தஹு) என்னும் தலத்துக்கு வந்தோம் அவ்விடத்தில் நாங்களறியாதவோர் மனுடனைச் சந்தித்தோம், அப்போது, இமாமிடம் கேட்டேன் இவரேது தொழிலுடையவரா யிருப்பாரென்று, அப்போது, சொன்னார்கள் தச்சனாகவும், தையற்காரனாகவு மிருப்பாரென்று பின்பு, அவரிடம் உம்முடைய தொழிலென்ன வென்று கேட்டேன், அப்போதுசொன்னார் முன்தச்சனாகவிருந்தே இப்போது தய்யல், காரனாக விருக்குகிறேனென்று.

(றபீஉ) றஹிமஹுல்லா சொல்லுகிறார்கள், இமாம்றலியல்லாஹு அன்ஹுவிட மிருந்தேன், அப்போது, ஒருமனுடன் ஒருக்கூனும் அவர்கள் காணாதவர் முன்னோக்கி வந்தார், அவரைக்கண்டவுடன் நீர் (சன்ஆ) ராச்சியத்திலுள்ளவரோ வென்றார்கள், அப்போது மெய்தானென்றார், பின்னர்நீர் கொல்வேலைக் காரனோரோவென்று கேட்டார்கள், அவர் மெய்தானென்றார்.

(றபீஉ) றஹிமஹுல்லா சொல்லுகிறார்கள், ஒருபோது, இமாம்றலியல்லாஹு அன்ஹுவிடமிருந்தோம் அப்போது, ஒருமனுடன் தன்பாக்கில் நடந்துபோனார் அவரைக்கண்டவுடன் இமாம் றலியல்லாஹு அன்ஹுசொன்னார்கள் இந்தமனுடன் தச்சனாக, அல்லது, நெய்யக்காரனாக இருப்பானென்று உடனே. நாங்கள் அவரையழைத்து உம்முடைய தொழிலென்ன வெனக் கேட்டோம், அவர் தச்சுவேலை யென்றார், வேறே வேலைகள் யேதாவதுண்டா வெனக்கேட்டோம், அப்போது சொன்னார், என்னிடத்திற் பிள்ளைகளுண்டும் அதுகள்நிசவுவேலைசெய்துகொண்டிருக்குங்களென்றார்.

(றபீஉ) றஹிமஹுல்லா சொல்லுகிறார்கள், ஒருபோதுஜாமிஉப்பள்ளியின் தளத்தில் என்தம்பி ஒருதர் நடந்துபோனார், அப்போது இமாம் றலியல்லாஹு அன்ஹு என்னைக் கூப்பிட்டு இதோ போறாரே இவர்உம்முடையதம்பியா யிருக்குமோ வென்றார்கள் நான் மெய்தானென்றேன், இதற்குமுன்னொருபோதும், என் தம்பியை அவர்கள் கண்டதேயில்லை யென்றார்கள்.

ஹறமலத்து றஹிமஹுல்லா சொல்லுகிறார்கள், இமாம் ஷாபிஇய்யி றலியல்லாஹு அன்ஹு சொன்னார்கள், மகனே நீ ஒத்தைக் கண்ணன், மாறுகண்ணன், நொண்டி, கூனன், செம்பட்டயன பல்குறைந்தவன், இன்னம் சரீரங்களில் ஏதுகுறையாயுள்ளவன், இவர்களுடன் சாவகாசம் செய்யாதே, அவர்களை நம்பாதே யென்றார்களென்று.

பதுறுத்தீனிர் ருஷிய்யி றஹிமஹுல்லா சொல்லுகிறார்கள், குறித்த சொல்லை இமாம்ஷாபிஇய்யி றலியல்லாஹு அன்ஹு சொன்னது, இந்த (பறுஸத்து) வென்னும் முகக்குறியுடைய இல்மிற் பாரதூரமான அடிவாரமாயிருக்கும், ஏனென்றால் வெளிரங்



கமான உறுப்பிற் பிறவியிலே யொரு குறைபாடுண்டா யிருப்பது அவனுடைய வுள்ரங்கமான வுறுப்பில் ஒருகுறைபாட்டின் பேரிலறிவிக்கும், அதனாற் குணகுணம் வேற்றுமை யாகவே தானிருக்கும் அதனாலே தான் குறித்தவர்களைச் சினேகிக்க வேண்டாமென விலக்கினார்கள்.

ஹறமலத்து றஹிமகுல்லா சொல்லுகிறார்கள், ஒருபோது, இமாமிட மிருந்தேன், அப்போது, அவர்களுக்காய், ஒரு மனுடன் கொஞ்சம் பலமணம் வாங்கிக்கொண்டு வந்தார். இமாமிடம் அந்த மணத்தை வைக்கவும், அதிற் பலபேச்சு நடந்து. இமாம் கேட்டார்கள், இந்த மணம்யாரிடம் வாங்கப்பட்டது அவருடைய வன்னிப்பென்ன வென்று. உடனே சொல்லப்பட்டது, இந்த மணத்தை விற்றமனுடன் செம்பட்டயனென்று, உடனே யதைக் கொண்டுபோய்க் கொடுத்து விடும்படிச் சொல்லிச் செம்பட்டயனால் எனக்கு ஒருநாளும் ஒருகைறும் வரவில்லை யென்றும் சொன்னார்கள்.

(றபீஉ) றஹிமகுல்லா சொன்னார்கள், இமாம் றலியல்லாகு அன்ஹு கொடி முந்திரிகைப் பழத்திற் பிறியங்கொண்டு என்னையொரு * (திருஹத்துக்கு) வாங்கி வரும்படி சொன்னார்கள், உடனேவாங்கி வந்து கொடுத்தேன், அவர்கள் கேட்டார்கள், இதையுமக்குவிற்றமனுடனாரென்று நான்சொன்னேன். இன்னமனுடரென்று, உடனே யந்தப் பழத்தைத் தூரத்தள்ளி விட்டுமறுபேரிடம் வாங்கிவாருமென்று சொன்னார்கள் பின்னுஞ் சொன்னார்கள், செம்படையன் பொட்டயன் சாவகாசம் செய்யவேண்டாமென்றுஉம்மை விலக்கி யிருக்குறேனல்லவா, நானெவ்விதம் அவனிடம்வாங்கி வந்ததைத் தின்பேனென்று. பினபு.

(றபீஉ) றஹிமஹுல்லா சொல்லுகிறார்கள் அந்தப்பழத்தை அந்தப் பொட்டையனாரிடம் கொண்டுபோய் நல்வார்த்தைசொல்லிக் கொடுத்துப்போட்டு மறுபேரிடம் வாங்கிக் கொண்டுபோய்க் கொடுத்தேனென்று. ஹுமைதிய்யி றஹிமஹுல்லா சொல்லுகிறார்கள் இமாம்ஷாபிஇய்யிறலியல்லாஹு அன்ஹு சொன்னார்கள் நால் யமன் ராச்சியத்துக்குப் போய், பறுசத்தென்னு முகக்குறி

* திருஹம்-என்பது வெள்ளிக்காசு.

யின் சமாசார முள்ளகித்தாபுகளை யெழுதிச்சேகரித்துக் கொண்டு திரும்பி வரும்போது நானும் ஓர்குதிரையில் ஏறிக் கொண்டுஎன்னுடைய பணிவிடை காரனை (காதிமும்) விடுதி தேடினதில் வழியில் ஒருமனுடன் நெற்றியுயர்ந்து கண் செங்கமங்கலானலெட்சணமுள்ளவனாய் ஒருவிடுதியில் நிற்கிறான் அவனிடத்திற் கேட்டேன் இவ்விடத்தில் எங்களுக்கு விடுதிகிடைக்குமாவென்று உடனேயவன் சங்கை சமானமாய் நல்லதென்றுசொன்னான், அப்போது, என்மனதில் வந்தது இந்த மனுடனில் அவலெட்சணம் இருக்கிறதேயென்று நினைத்துப் பின்னு முட்டுப் பாட்டுககாய்த் தங்கியிருந்து அதிக சாவகாசத்துக் கிடம் வையாமல் விடிந்தும் விடியாமலும் இருக்கும்போது நடந்துவிடலாமென்றுயோசித்துக்கொண்டேன்.

அப்படியிருக்கும்போது, அவன் சங்கையாக வஜீபனமும், குதிரைக்கிப் புல்லும் படுக்கப்பாயுப்போர்த்திக்கொள்ளத்துப்பட்டியும், பூசிக்கொள்ள மணமும் இவையெல்லாந் தந்துமிருந்து முஎண்ணமாகவிருந்ததுஇந்தமனுடனில் உள்ள அவலெட்சணமானது அவர்மோசக்காரனென்று அறிவிக்கிறது, அவர் ஹாலில் நாம்கலவேயல்லாதுகாணவில்லையே ஆகையால்இந்தபருசத்துடையஇல்மு) தண்ணீரிலே கரைத்துப்போடவேணுமென்று நற்கருத்தும்வைத்துப் போட்டேன், இந்த இல்மு வீணானதல்லாமல் வேறில்லையென்றும் எண்ணிக்கொண்டேன், பின்னர்,

விடிவேறான மாத்திரம் காதிமைக் கூப்பிட்டுக் குதிரைக்கி ஜீனிவைத்துக் குதிரையில் ஏறிக்கொண்டு அவரிடம் பயணம்சொல்லும்போது சொன்னேன் நீர் மக்காவுக்கு வந்தீராகில்(வாதீதுவா) என்கிற தலத்தில் வந்து முகம்மதுபுனு இதிரீஸிஷ்ஷாபி இய்யியென்று என்னுடைய பேரைச் சொல்லி விசாரித்தால் ஆரும்சொல்லித் தருவார்களென்று. மனதுக்குள் மிகுதமெல்லாம் இவர் செய்தநன்றியைப் பெரிதாக வெண்ணியதற் கதிகமான நன்றி செய்யவேணுமென்று பேரெல்லாம் சொல்லிக்கொடுத்தேன், அதற்கந்த மனுடன் மறுமொழி சொல்லாமற், பின்பு வாய்திறந்து சொல்லுகிறான்,



ஒய்மனுடனே நீர்என்னை யும்முடைய வாப்பா வாங்கின பயலென்று நினைத்தீரோ வென்றான், நானில்லை யென்றேன், பின்பு கேட்டான், முன்பின் நம்மிடத்தில் நீர் தந்துவைத்த பணங்காசுண்டுமோ வென்று, இல்லையென்றேன், பின்பு சொன்னான், இன்றுராத்திரி செலவான பணமெல்லாம் கீழே வைத்துப்போட்டுப் போமென்றான், நான்வெட்கித்து அதின் செலவென்ன சொல்லுமென்றேன், உடனேசொன்னான், வஜீபனம் இரண்டு திருகம், கறியித்தனை திருகம், அத்தர்விலை மூணு திருகம்குதிரைக்கிப் போட்ட புல்லுக்கு விலைஇரண்டு திருகம் பாய்க்கும், துப்பட்டிக்கும் வாடகை இரண்டு திருகமென்று இவ்வளவு கணக்குப்போட்டுச் சொன்னான், உடனே காதிமைக் கொடுக்கச் சொன்னேன், அவன்கொடுத்துவிட்டான்,

பின்பு, ஏதாவது பாக்கி யென்பேரிலுண்டோ வென்று கேட்டேன் உண்டுமென்றான், அஃதென்ன வென்றேன் விடுதி தங்கின வாடகை யுண்டும். நானுமக்கு என் தலத்தைத் தந்துபோட்டு முட்டுப்பாடான தலத்திற் படுத்தேனென்றான், அதற்கும் வாடகை கேட்டதுபோற் கொடுத்தேன், பின்னர் ஏதாவதுபாக்கியுண்டோ வென்றேன் அப்போது, நீர்பேம் உம்மில் நின்றும் யாதொருதீங்கும் நான் காணவில்லையென்று சொல்லிப் பயணமனுப்பி விட்டான், பின்னர்ஷாபிஇய்யி றலியல்லாஹு அன்ஹு சொல்லுகிறார்கள் இந்த பருசத்துடைய இல்மு (ஹக்கானது) என்றுநினைத்துஅந்தக் கித்தாபுகளைத் தரிபாடாக்கி விட்டேனென்று.

முஸ்னிய்யி றஹிமஹுல்லா சொல்லுகிறார்கள், நான்இமாம் றலியல்லாஹு அன்ஹுவுடன்ஓரிரவில்ஜாமிஉப்பள்ளியில் ராத்தங்கியிருந்தேன், அப்போது ஓர்மனுடன் இருட்டில்வந்து உறங்குகிறவர்களுக் கிடையிற் சுற்றிச் சுற்றித் திரிகிறார், அப்போது, என்னை இமாம் கூப்பிட்டு அந்தமனுடனிடம்போய், உம்முடைய கறுத்தப்பயல் ஒருகண் பொட்டையானவன் ஒளித்தோடி விட்டானோ அவனைத் தேடுகிறீரோவென்று கேளுமென்றார்கள், அவ்விதம்போயவரிடங் கேட்டேன், அவர் மெய்தானென்று சொன்னார், பின்னர்கேட்டார், அவனிருக்கும். லெக்கெல்லாம்சொல்லுகிறீரேயவனெங்கே யிருப்பானென்று கேட்டார்-உடனே யிமாமிடம்கேட்

டேன், அவர்களவனை (ஹபசி) களிற் போய்த் தேடிப்பார்க்கச்
சொன்னார்கள், அவ்விதம் பார்த்தபோ தவனைக்கண்டு பிடித்துக்
கொண்டார்.

முஸ்னிய்யி றஹ்மஹுல்லா சொல்லுகிறார், நான் இமாமிடம்
எவ்விதமாயறிந்தீர்களென்று கேட்டேன், அப்போது சொன்னார்
கள், அந்தயனுடன் உறங்குகிறவர்களிற் கறுப்பனை நிறமுள்ளது
டுமைசளுறங்கும் தலத்தில் அவனவன் கண்களை யுற்றுற்றுப் பார்த்
தார் அதனாலும், நபிசல்லல்லாஹு அலைஹிவசல்லமுடைய ஹதீ
ஸைக் கொண்டும் அறிந்தேனென்றும் அதாவது, ஹபஷிகளில் நல
வில்லைப் பசியாயிருந்தாற் களவுசெய்வார்கள், வயிறு நிறைந்தால்
விபசாரஞ்செய்வார்கள், கள்ளுங் குடிப்பார்களென்று வருவதால், இந்
தஅத்தாட்சினாலும் சொன்னேனென்றார்கள் (சுப்ஹானல்லா) பழ
மொழிபிற (குலவிருது கல்லாமற்பாதி) யெனகிறது மெய்யாகவே
யிருக்கின்றது (குறைஷி) வங்குஷத்தாரில், இந்தபாருசத்துடைய
இல்மு தரிபட்டே வருகிறது, என்கிலும், சிலரில் மிகுதமாயிருக்கி
ன்றன.

இமாம் றலியல்லாஹு அன்ஹுபோல், முற்காலத்திலும் அ
வர்களில் பாருசத்துடைய இல்மு உண்டாகியே யிருந்தது (நிஸாறு
டைய) மக்களான (முலறு-றபீஅத்து-அயாது- அன்மாறு) இந்நால்
வருடைய சமாசாரம்போல், அதை, ஹயாத்தல் ஹயவா னென்கி
றகித்தாபில் (அபுஆ) என்கிற (லபுலிலே) பார்த்துக் கொள்ளவும்.

(றபீஉ) றஹிமஹுல்லா சொல்லுகிறார்கள், இமாம் ஷாபிஇ
ய்யைக்காணப்பாருசத்துடைய இல்மில்மேலிட்டவர்களைநான் காண
வில்லை, அநேகம் உலமாக்களில் அவர்கள் ஒவ்வொருகருமம்சொ
ன்னார்கள், அவர்கள் அந்தச்சொற்படியே நடந்தது இமாம்புவைத்
தியும் இமாம் முஸ்னிய்யும், முகம்மதுபுனு அப்தில் ஹக்கமும், இ
மாம் றபீஉம் இந்நால்வரும், இமாம் றலியல்லாஹு அன்ஹுவு
டைய வபாத்துநேரத்தில் ஹாலிருக்க இவர்களைப் பார்த்தொவ்வொ
ருசொற்சொன்னது, அவர்களில் அவ்விதமே முடிந்ததெனபது,
ஆரம்பசுலில்முந்திவிட்டது.



(றபீஉ) றஹிமஹுல்லா சொல்லுகிறார்கள், ஒருநாள் ஷாபி
இய்யி றலியல்லாஹு அன்ஹுவிடமிருந்தேன். அப்போது, ஒரு
அறபி தன்கையிலொரு கடுதாசி வைத்துக்கொண்டு வந்து மனுட
ர்களை யிடித்துச் சவட்டிக்கொண்டு இமாமையடுத்து அந்தக்கடுதா
சியைக் கொடுத்தார், அதையவர்கள் பார்த்துக்கொண்டு, மையும்,
கலமும் கொண்டு வரச்சொல்லி, அந்தக்கடுதாசியிற்றானே, ஏதோ
யெழுதிக் கொடுத்துவிட்டார்கள், அதுயாருக்கும் விளங்காது. உட
னே நானந்த அறபியைத் தொடர்ந்துபோய் அந்தக் கடுதாசியை வா
ங்கிப் பார்த்தேன், அதிலே துவக்கத்தில், அந்த அறபியோர்பை
த் தெழுதி யிருக்கிறார், அதையடுக்க இமாம் அதற்கு ஜவாபாக
வோர்பைத் தெழுதி யிருக்கிறது.

(றபீஉ) றஹிமஹுல்லா சொல்லுகிறார்கள்நான்இமாம்ஷாபி
இய்யின்பேரிற் கொஞ்சம் பொருத்தக் குறைத்தலாக நினைத்தேன்,
ஏனென்றால் இவ்விதமான (பத்துவாவை) இப்படிக்கொத்த வாலி
பகாரனுக்குக் கொடுத்தார்களே யென்று, அப்போது, இமாம்
சொன்னார்கள் (றபீஉ) இந்தமனுட்னுகிறது ஹாஷிமிக் கிளையிலுள்
ளவர், இந்த (றமலான்) மாஸ்தையிற்றான் கல்யாணஞ் செய்தார்,
அவரும் வாலிபக்காரமனுடன் ஆகையாலே, தன்னுடைய ஆசை
யின் கொடூரத்தாலே தன்பெண்சாதியை றமலான் பகலையில் (ஜமா
இல்லாத) சேர்மானமாய்ச் சட்டியணைத்து முகந்து கொண்டார்,
அல்லது அணைத்துங் கொண்டார், அதனால் நோன்பு முறியுமோ
வென்று கேட்டதற்காகத்தான் இந்த (பத்துவாச்) செய்தேனென்
றார்கள்,

மேற்சொன்னபைத்தின்பொருள் (சுஆல்) மனதாசைகொண்
டவன் கட்டியணைகிறதாலும்(ஜமாஇ) நாடிவருடுவதாலும்நோன்புக்
குத் தங்கடமுண்டோவென, மக்காவிலுள்ள முபுத்தியிடங் கேளு
ங்களென்றது, (ஜவாபு) மனதில் ஆசையென்னும், புண்பாடுண்டா
யிருக்கும் ஈரலொன்றேடொன்று ஒட்டுகிறதால் வாலிபன் தன்
னோன்பைப் போக்கி விக்கிறதைவிட்டும், அல்லா இடம் காவற்
றேடுகிறேமென்றது. (றபீஉ) றஹிமகுல்லா சொல்லுகிறார், நானெ
ந்த வாலிபனைத் தேடிப்பிடித்துச் சமாசாரத்தை விசாரித்தேன்,
இமா முரைத்தபடியே சொன்னார்.

குறுக்கிட்டசமாசாரம் ஹாறானுர் றஷீது அமீறுல் மூமினீன்
அபூஜஃபறுல்மன்சூருடையமகன், தன்பெண்சாதியாகிய (ஸுபை
தா) வொருநாள் சுன்னத்துத்தொழப்போறபோது சொன்னுர், நீ
சுன்னத்துத் தொழுதியானுல் நீ (முத்தலாக்கு) என்று அந்தப்பெ
ண்பிள்ளையைதப்பாராட்டாமற் ரொழுதுவிட்டார்கள், றஷீது மிகுந்
துசலித்து இருக்கிலுள்ள உலமாக்களிடம் இதைத் தொட்டும்
பத்துவாத் தேடிய போதுசகலரும் தலாக்காகிப் போச்சுதென்று
பத்துவாக் கொடுத்துவிட்டார்கள், பின்னர், மிகவும் ஹாறூன்
விசாரமாயிருந்தபோது, சிலர் சொன்னுர், இந்தச் சங்கடம்,முத்த
லியுக் கிளையிற் சேர்க்கப்பட்டவோர் வாலிபக்காரர் முகம்மதுபுனு
இதிரிசென்று பேர்நாமந் தங்கியவ ரொருவ ரிருக்கிருர், அவ
ரைக் கொண்டல்லால் நீங்காதென்று, அவர்கள்தான்,இமாம்ஷாபி
இய்யி றலியல்லாகு அன்கு

பின்னர், இமாமையழைத்து இதை முறையிட்டார், உடனே
இமாம் ஓர்திரைகட்டி அந்தப் பெண்பிள்ளையை இரண்டு றக்க
த்து (பாத்திஹாவைச்) சத்தமிட்டோதித்தொழச் சொன்னதில்,
ஒருபிழை விட்டோதினுர்கள், மறுபடியும் ஓதச் சொன்னுர்கள்,
அப்போதும், பிழைவிட்டோதினுர்கள், பின்னர், அந்தப் பெண்
பிள்ளைக்குச் சரியாகவோத வராதபடியால், அவள் தொழுகை சரி
யல்லவென்றும, அதனுல், தலாக்காகாதென்றும், பத்துவாக்கொ
டுத்தார்கள், குறுக்கிட்ட செய்தி முற்றிற்று இன்னம் (றபீவு)
சொன்னுர்,இமாம் றலியல்லாகு அன்கு சொன்ன முகக்குறியில்,
அவர்களைத் தொட்டும் (அபூநசம்) பேசிவந்தாரே அந்த முகக்குறி
யைக்காண அழகானதை நான் காணவில்லையென்று, அதாவது.

(மக்ரிபுபுனுஷபீபு) சொல்லுகிருர், நான் மவுமூன் ராஜாவான
வர், இமாம் றலியல்லாகு அன்கு இடம், அல்லாகுத்த ஆலா இந்த
ஈயை யேன்படைத்தானென்று கேட்கும்படியாகக் கேட்டேன்,
உடனே இமாம் தங்கள் தலையைக்கவிழ்ந்து, பின்பு, தலையையுயர்த்
திச் சொன்னுர்கள், இராஜாக்களைத் தாழ்மையாக்கி வைக்கிறதற்
காகவேண்டிப் படைத்தானென்று. உடனே இராஜா சிரித்துவிட்
டார், பின்பு, சொன்னுர் முகம்மதே'யென்கன்னத்தில் ஒரு ஈவந்
தொட்டினது, அதற்காகத்தான் கேட்டேனென்று, அப்போது,



இமாம் சொன்னுர்கள் இராஜாவே நீரிதைக்கேட்டவுடன் எனக்கு
ப்பயங்கரத்தினுலொரு திடுக்கம் வந்தது, அதாவது, அல்லாவைப்
பயப்படுகிறது, ஏனென்ருல், உம்முடைய கன்னத்தைப் பதினுயி
ரம் வாட்கட்டிய சுத்தவீரரும், பதினுயிரம் வல்லயம், ஈட்டிபிடித்த
தளகர்த்தரும் தொடக்கூடாததாயிருக்க, அதிற் கடுகளவு ஈயை
வந்து விழும்படிசெய்து தாழ்மையாக்கும் நாயகனுல் எனக்குப்
பயங்கரமும், திடுக்கமும் வந்ததென்ருர்கள், உடனே மவுமூன்
சொன்னுர், முகம்மதேயும்முடைய ஆனிய கருத்தை நானென்ன
தான் சொல்வேனென்று,

முஸ்னிய்யி றஹிமகுல்லா சொல்லுகிருர், இமாம் றலியல்
லாகு அன்குவிடம் கேட்கப்பட்டது, ஒருவனுடைய தீவிழுங்கிப்
பட்சியானது இன்னொருவனுடைய இரத்தினத்தைக் கொத்திவிழுங்
கிக்கொண்டால், அதற்கென்ன சொல்கிறீர்களென்று, அதற்குச்
சொன்னுர்கள், நான் அதில் யாதொன்றும் சொல்லமாட்டேன்,
ஆகிலும், இரத்தினத் துடையான், புத்திசாலியாக விருந்தானுகில்,
அந்தத் தீவிழுங்கிப் பட்சியைப் பிடித்துத் தக்குபீறுசெய்து இரத்
தினத்தை யெடுத்துக்கொள்வான், பின்பு, அதையுடையானுக்கு
விலைகொடுப்ப தெப்படியானுல், அஃதுயிரா யிருக்கும்போது பெ
றுமதியான விலையையும்,அதுதக்குபீறுற் செத்திருக்கும்போது
பெறுமதி விலையையும் சேர்த்துக் கூட்டிக்கூடிய தாகையிற்பாதி
யையுடையக்காரனுக்குக்கொடுக்கச்சொல்வேனென்ருர்கள்.

## பதினெட்டாம் பிரிவாகிறது.

இமாம், ஷாபிஇய்யி றலியல்லாஹு அன்ஹு கணக்கி லடா
ததாயிருப்பதிற் சிலசொற்களைச் சுருக்கமாய், அதைப்பேசி வருகி
ற, இமாம்களின் பேர்களை விடப்பட்டதாய்ச் சொல்லப்படுகிறது.

இமாம் றலியல்லாஹு அன் ஹு திருவுளமானுர்கள், பேச்சா
கிறது அக்குலுடைய விழிப்பாயிருக்கும் உறக்கத்திலும் ரீயதைப்
பேணுவதில் கோட்டமிட்டுக்கொள், மனுடனை யடக்குகிறது,மிரு
கத்தை யடக்குகிறதிலும் வருத்தம், பார்வைக்குத் தீர்பிடியானமட்
டிருப்பதுபோல், அக்குலுக்கும், தீர்மானமானவோர்மட்டுண்டும்
புத்திசாலியென்பது தன்னைச் சகல பழிப்பைவிட்டும் காக்குகிற
வன்தான், ரோசமென்னு மேலான வன்னிப்புக்கு நாஇ:தானுண்

டும் சற்குணமும். சொடையும், தாழ்மையும், வணக்கமும் இன்னும, ஓர்மனுடன் நாலு காரியங்கொண்டேயொழிய திரப்பமாகிறதில்லை, அதாவது, வழிபாடு நம்பிக்கை கார்மானம் கனதிப்பாடு. இன்னும் ஓர்மனுடன் ஓர்வேலையைத் தத்திரப்பட்டுச் செய்யும்படி கண்டவுடன்மெதுவாகச்செய், மெதுவாகச்செய் யென்றார்கள், தத்திரமாகிறது, பேறுகேட்டை வருத்தும், தாமதமாய்ச் செய்வது பேறைவருத்துமென்று.

இன்னுஞ் சொன்னார்கள், ஒருவனை யவனுடைய தகுதிக்கு மேலாலேசங்கையாக்கினல்உன்னுடைய தகுதியில்உன்னைத் தாழ்த்தியாக்குவான் நீயவனை யுயர்த்திச் சங்கையாக்கின மட்டுக்கென்று மூன்றுபேரைச் சங்கையாக்கி வைத்தியாகில், உன்னைத் தாழத்தியாக்குவார்கள் அவர்களைத் தாழ்த்தியாக்கிவைத்தியாகில் உன்னையுயர்த்தி யாக்குவார்கள். அவர்களாகிறது பெண்சாதியும் அடிமையும், சின்னமனுடனும், ஆகிய இவர்களாயிருக்கும், அல்லாஹுத்தஆலா(கியாமத்தில்)நாலுகாரியத்தை மிகுந்துபாராட்டமாட்டான் அதாவது, உத்தியோகஞ் செய்கிறவனுடைய (தக்குவா) வையும், கொசறுவுடைய (ஸாதுகையும்) பெண்பிள்ளையுடைய நம்பிக்கையையும், குழந்தையுடைய (இபாதத்தையும்) ரோசமாகிறது உறுப்புகளுடையபத்தினிதனமாயிருக்கும்.நாளின்றையதினம்பைத்துச் சொல்லுகிறதாயிருந்தால் ரோசமென்கிறது மவுத்தாகிவிட்டதே யென்று, அதின்பேரிலே கவனமாக. (மறுதிய்யாச்) சொல்லிப் போடுவேனென்றார்கள்.

ஒரு மனுடன் மற்றவனுடைய தப்பிதத்தின்பேரிற சிரிக்கவேண்டியதாய் வராது. அவனுடைய நேரானது (கல்பிலே) தரிப்பட்டாலல்லாது.ஷாபிஇய்யிறலியல்லாகுஅன்குஒருஆகமஞ்சொல்லுகிறார்கள், ஒருமனுடனுக்குஒருபாமாத்தமானமடப்பிள்ளையுண்டாயிருந்தான், அவனை யொருநாட்கடையிற்போய்க் கயிறு விலைக்கிவாங்கி வரும்படி சொன்னான், அதினீளம் எத்தனை முழம்இருக்கவேணுமென்றுமகன்கேட்டான்,தகப்பன்முப்பதுமுழமென்றான் பிறகுஅகலமெத்தனை முழமென்றான், அப்போது,தகப்பன்சொன்னான, உன்னை பெற்றதிலுள்ள (முசீபத்) துடைய, அகலத்துக்கென்றான்.



ஒருமனுடன், தன்னுடைய வயதைத் திறந்து சொல்வதுரோசத்திலுள்ளதல்ல, அதின் முகாந்தரத்தைக் கேட்கப்படவும் சொன்னார்கள், சிலர்கள் வாலிபத்தை யாசை வைத்தற்காய் வயதைக் குறைத்துச் சொல்லுகிறார்கள், பெரியமனுடனாகிறதை அபேட்சை வைத்ததற்காய் வயதைக் கூட்டிச் சொல்லுகிறார்கள், ஆகையால் மறைப்பது உத்தமமென்று தாழ்மையில் நின்றுமாயிருக்கும, சில கருமங்கள் அதாவது, ஓடமில்லாமல் ஆற்றைக்கடப்பதும், இல்முடைய மஜ்லிசிற கித்தாபில்லாமல் (ஹாசிறுவதும்) வெள்ளிப்புரையில், அதாவது குளிக்கிற விடங்களில் உடுத்தாடையின்றிப் புகுதுகிறதும், சின்னமனுடன் கொடையைத் தேடிப் பெரியமனுடன் தாழ்மைசெய்வதும், பெண்சாதியின் பொருத்தத்தைத்தேடியவளுக்குத தாழ்ந்து நடப்பதுமாம்.

மனுடனில் மூன்றுகாரியம் விலைமதிக்கபடாத இரத்தினமாயிருக்கும, (முதலாவது) மிடுமைத்தனத்தை மறைக்கிறது, மனுடரெல்லாம் இவனைச் சீமானென் றெண்ணும் வரையில் (இரண்டாவது) கோபத்தை மறைக்கிறது. சகலர்களும் இவனைப் பொறுத்தமுடையானென் றெண்ணும் வரையில் (மூன்றாவது) (முசீபத்தை) மறைக்கிறது. சகலர்களும் இவனை வியாரமற்றவனென்றெண்ணும் வரையில் யாராகிலும்தனக்குஒடுக்கத்தில் நல்ல முத்திரைபோடப்படவேணுமென்று நாடுவானேயாகில் அல்லாஹுத்தஆலாவைக் கொண்டும்,மனுடரைக்கொண்டும் தன்னுடைய வெண்ணத்தையழகாககவும கல்யாண முடித்தபேர்கள் என்னிடம் வருந்தோறெல்லாம் நாற்பதுவருடக்காலம் அவர்களுக்கு கல்யாணததால் வந்த (கைறு)என்னும் நலவைத்தொட்டும்கேட்டதில்அதனல்,ஒருவரும் நலவைக் காணவில்லை யென்றார்கள்.

இன்னுஞ் சொன்னார்கள் எனக்குறுதியான வேருருடற்பிறந்தானசொன்னார், நான்கல்யாணஞ் செய்தால் என்தீனை யதுகாத்துக் கொள்ளுமென்று நாடிக்கல்யாணஞ் செய்தேன் இப்போது என்னுடைய தீனைப்போக்குகிறதா யிருக்கிறதென்று. இன்னுஞ் சொல்லப்படுகிறது. கல்யாணஞ்செய்வது இல்முக்கு ஆபத்தென்றும், இன்னும், அதற்கு ஆபத்தாகிறது மாதர்களின் துடைநடுவிலுள்ள தென்னவம இன்னும், பைதுச்சொலப்பட்டிருக்கிறது

அதின்கருத்தாகிறது, நான்தெரியாமற் கல்யாணஞ்செய்தேன், தப்பிதஞ்செய்தேன், நேர்செய்ய வில்லை. நான்கல்யாணஞ்செய்யமுதல்மவுத்தாக வேண்டினதே, அல்லாஹ்வுணை, முன் மவுத்தாகிப் பூமியி னுள்ளாலே குடியிருக்கிறவர்களை நினைத்து நானழவில்லை, என்கிலும், கல்யாணமுடிக்க நாடுகிறானே அவன்பேரிலேதான் அழுகிறேனென்றும், ஒருவன் கல்யாண முடித்து விட்டானேயாகில் அவன் மவுத்தானவன்தான், ஆகையால். அவன்பேரில்(நாலுதக்குபீறையும்) முடித்துப்போடு, அதாவது (ஜனாஸாத்) தொழுவித்துப் போடென்று.

(இஃலம்) அறிஉடற் பிறந்தானே ஹலாலான (நபக்கா)இழந்தவனாக இருக்க அல்லது (பறாவுஐனை) இல்லைப் படிக்கிறதை விட்டு நிக்காஹு செய்கிறவனுக்கும் தானொன்றுமுறுதுவைக்கப்படும் (அல்லாஹு அஃலம்) பழிப்பைப் பயப்படாதவனைச்சினேகிக்கிறது பழிப்பாயிருக்கும். சங்கைவான்களைச் சினேகித்திரு நீயும் சங்கைவானாவாய். லுத்தர்களைச் சினேகிக்கவேண்டாம், அவ்விதம் சினேகித்தியானால் உன்னையும் லுத்தத்தனத்திற் சேர்க்கப்படும், அன்யாய காரரிற் பெரிய அன்யாய காரனாகிறது, தன்னை அன்யாயஞ் செய்கிறவனை யிருக்கும், உண்மைத் தோழனாகிறது, தன்னுடற பிறந்தானுடைய குற்றத்தை மன்னித்து அவன் கண்ணழிவை யொப்புக்கொள்வானேயவன் தான்உன்னிடம்ஒருவன்வந்து ஒருவனைத் தொட்டும் கோட்சொல்வானே யாகிற் றிடனாக வுன்னைத்தொட்டும் அவன் கோட்சொல்வான் மற்றவன் சமாசாரத்தை யுன்னளவிற் கொண்டு வருகிறவன் யாதொரு சக்கில்லாமல் உன் சமாசாரத்தை இன்ன மொருவனளவில் எத்திவிக்கவே செய்வான்,

ஒருவன் தன்னுடற்பிறந்தானுக்கு ரகசியமாயுபதேசித்தாற் றிடனாக அவன்செய்த வுபதேசம் பலன் கொடுக்கும், பரசியத்தில் உபதேசித்தால் அந்த வுபதேசத்தால் அவனை மானபங்கமாக்கினான் வீணான கருமங்கொண்டு அலங்கிர்தம் தேடுவானாகில் அவன் மானங் குலைந்தவனாவான், மனுடரிற் றகுதி யுயர்ந்தவனாகிறவன், தன்னுடைய தகுதியை நினையாதவனாயிருக்கும், ஒருவனுடைய அமானிதத்தை யொப்புக்கொள்ளுகிறவன் மோசக்காரனாயிருப்



பான், அல்லது, மடையனாயிருப்பான் (ஹாஜத்துகள்) மிகுதமாயிருந்தால், அதில் வேணுமானதைத் தீபரமாய்த் துவர்க்கம் செய், காலீவேலைக்கி யேர்ப்பட்டவன் மிடுமைதானத்திலாக வில்லையாகில் அவன் கள்ளனாக விருப்பான்.

இருபதியிலுள்ள நலவடங்கலுமாகிறது, ஐந்து காரியத்திலாயிருக்கும். உள்ளதைக்கொண்டு போதுமாக்கலும், நோவினையை விடுவதும், ஹலாலான சம்பாத்தியமும், தக்குவாவென்னும் உடுமானமும், அல்லாவைக்கொண்டு யெந்தவேளையிலும் விசுவாசமும், வக்குத்தென்கிறது கத்தியாயிருக்கும் நீ யதைக் கார்க்கவில்லையாகில், உன்னை ஹலாக்காக்கிப்போடும், ஒருவனைக் கோபம் வருத்திவிக்கப்பட்டு, அவன் கோபமாக வில்லையாகில், அவன் கழுதையாயிருக்கும், ஒருவனைப் பொருத்தம் தேடப்பட்டு அவன் பொருந்திக்கொள்ள வில்லையாகில் அவன் வம்பனாயிருக்கும், உனக்கொருவன் நன்றி செய்வானாகில உன்னை யவன் தழையிலாக்கிக் கொண்டான், உன்னை வெறுத்திருந்தானே யானால், உன்னைத் தழையமிழ்த்து விட்டான், பூராயமென்னும் வாசலைத்திறக்க நாடுவானாகில், வஜீபனாங் குறைத்துத் தனித்திருந்து மடயர் கலந்துறவாடுவதை விட்டுவிடவும், ஒருமனுடன் தன்னுடைய (நபுசை) மிகுந்து அலங்காரித்தானேயாகில், அவனை (ஐபு) சொல்ல மிகுதிபேருண்டும், இவ்விதமான பூராயச் சொற்கள் அநேக முண்டும், அதை யெல்லாம் எழுதி முடியாது, ஆகையால், இம்மட்டுடன் சுருக்கப்பட்டன

## பத்தொன்பதாம் பிரிவாகிறது.

இமாம் ஷாபிஇய்யி றலியல்லாகு அன்குவுடைய கொடையிலும், திகாயத்திலும், பேசுகிறதாயிருக்கும்.

உமறுபுனு சவாது றஹிமகுல்லா சொல்லுகிறார்கள், இமாம் றலியல்லாகு அன்கு மிகவு மேலான நன்கொடை செய்கிறவர்களாயிருந்தார்கள், வெள்ளி பொன் நாணயத்திலும், உடுமானங்களிலும், வஜீபனங்களிலும், தாராளமுடையவர்களாயிருந்தார்களென்று. ஹுமைதிய்யி றஹிமகுல்லா சொல்லுகிறார்கள், இமாம் றலியல்லாகு அன்கு (சன்ஆராச்சியததில) னின்றும், மக்கத்துக்குவந்த

போது, தங்களிடத்தில் ஒரு பையிற்றங்கக் காசாகப் பதினாயிரம் காசு கட்டிவைததிருந்தார்கள், மக்கத்துக்கு வெளியில் ஒரு கூடார மடித்திருந்தார்கள், சகல மனுடர்களும் அதை யறிந்து வரத்துப் போக்காயிருந்தார்கள், அங்கு வந்த மிஸ்கீன், பக்கிறு உமாக்கள் சகலர்களுக்கும், அதனால் அள்ளியள்ளிக் கொடுத்து ஒருதீனாறும் வைக்காமற் கொடுத்துவிட்டார்கள்.

(றபீஉ) றஹிமகுல்லா சொல்லுகிறார்கள், இமாம் றலியல்லாகு அன்குவுடைய குதிரையின் அங்கவடியை யொருமிஸ்கீன் வந்து தொட்டார், உடனே யவருக்கு நாலு தங்கக்காசு கொடுத்துப்பொறுமை தேடும்படி யென்னைபேவினார்கள், அவ்விதமேசெய்தேனென்று, இன்னும் (றபீஉ) றஹிமகுல்லா சொல்லுகிறார்கள் ஒருநாள் இமாம்றலியல்லாகுஅன்கு ஒருகழுதையில் ஏறிக்கொண்டு கொல்லர் தெருவீதி போகும்போது, அவர்கள் கையிலிருந்த சாட்டை விழுந்துவிட்டது, அதை யோர் கொல்லப்பய்யன் கண்டெடுத்து தன் சட்டைக் கையாற்றுடைத்து இமாமிடம் கொடுத்தான், உடனே இமாம் தங்களுடைய பயலைக்கூப்பிட்டு உன்னிடமிருக்கிற தங்கக்காசை அந்தப் பய்யனுக்குக் கொடுத்துப்போடென்றார்கள், அவ்விதங் கொடுத்துப் போட்டான்.

(றபீஉ) றஹிமகுல்லா சொல்லுகிறார்கள், அந்தத் தங்கக்காசு ஒன்பதாக, அல்லது, அதைக்காண மிகுதமாக யிருந்ததென்று, அகுமதுபுனு வறுதான் றஹிமகுல்லா, றபீஉ றஹிமகுல்லாவைத் தொட்டும் பேசிவருடுறா. இமாம் றலியல்லாகு அன்குவுடைய செருப்புவார் அறுந்திருந்தது, அதை யொரு மனுடனெடுத்துச் சரிபடுத்திக் கொடுத்தார். உடனே, யென்னை யவர்கள் (றபீஎ) யென்று கூப்பிட்டு உம்மிடம் நம்முடைய சிலவுப் பணத்தில் என்ன மிச்ச மிருக்கிறதென்று கேட்டார்கள், நான் ஏழுதங்கக்காசிருக்கிறதென்றேன், அதையிந்த மனுடனுக்குக்கொடுத்துப்போடுமென்றார்கள், அவ்விதமே கொடுத்துப் போட்டேனென்று.

றவுலுல் பாயிக்கு என்கிற கித்தாபில் வருகிறது, இமாம்ஷாபிஇய்யி றலியல்லாகு அன்கு ஒரு தையற்காரனிடம் சட்டைதைக்கும்படியாய்த் துண்டு கொடுத்தார்கள், அந்தத் தையற்காரன் மிகுந்த கேலியுடையவனாயிருந்தான், இமாமை யின்னாரென்றறியமாட்



டான், அவன் சட்டையின் வலதுகையைக் கட்டையாகவும் இடதுகையை நெட்டையாகவும் வைத்துத் தைத்து இமாமிடம் கொண்டுவந்துகொடுத்தான், அப்போது, இமாம் றலியல்லாகு அன்ஹு அதை யெடுத்துப் பார்த்து மிகுந்து சந்தோஷமாகிச் சொன்னார்கள் என்னுடைய கருத்துப்போல் நீ தைத்தாய் வலதுகையைக் கட்டையாக்கினது, வுலுவுக்கு உதவியாகவும், இடதுகையை விஸ்தீரணமாக்கினது எழுத்துக்குதவியாகவுஞ் செய்தாயென்று சொல்லிக் கொண்டிருக்கும்போது, ராஜாவிடமிருந்து ஒரு தூதன் பதினாயிரம் வெள்ளிக்காசு (ஹதியா)வாகக்கொண்டுவந்து கொடுத்தான், உடனே அவர்களதை யெடுத்து இந்தத் தையற்காரனைப் பார்த்து நீ யிந்தச் சட்டையை யிவ்விதமானவரிசைப்பாடாகத் தைக்கவேண்டி யோசித்ததற்குக் கூலியாகவும், தையலுக்குக் கூலியாகவும், எடுத்துக் கொள்ளென்று கொடுத்துப் போட்டார்கள் அவன் அதை யெடுத்துக்கொண்டு போறபோது, இவர்களாரென்று விசாரித்தான், இவர்கள் தான் இமாம்ஷாபிஇய்யி றலியல்லாகு அன்குவென்று சொல்லப்பட்டது, பின்னரவன் மடங்கிவந்து இமாமுடைய காலை முத்திசெய்து கண்ணழிவு தேடிப் பின்பு எந்நாளும் இமாமவர்களுக்கும், அவர்களுடைய அசுஹாபிகளுக்கும் (கிதுமத்துச்) செய்து கொண்டேயிருந்தான்.

முகம்மதுபுனு அப்தில்லா கிபுனி அப்தில் ஹக்கம் சொல்லுகிறார், இமாம் றலியல்லாகு அன்கு மனுடரில் மிகுந்த கொடையையுடையவர்களாக எது கிடைத்ததோ அதைக் கொண்டதெல்லாம் கொடை செய்வார்கள், சிலநேரம். எங்களிடம் வந்து எங்களையழைத்துக்கொண்டுபோய்க் கூடவைத்துப் பசியாறுவார்கள், எங்களைக்காணாதபோனால் வந்தவுடன் வரும்படியாய்வீட்டிற்சொல்லிப்போட்டுப் போய்விடுவார்கள், பின்பு, நான் போய்ச் சேர்ந்தால் வெள்ளாட்டியை யழைத்து வட்டிலப்பம் கொண்டுவந்து வைத்து, அதுவரையும், பசியாறுதிருந்து கூடவே பசியாறுவார்களென்று.

அபூதவூறு றஹிமகுல்லா சொல்லுகிறார்கள், இமாம் றலியல்லாகு அன்கு மனுடரில் மிகுந்த கொடையாளியாயிருந்ததில், நல்ல வஜீபனம்தீனகளையழகாய்ப்பரிமாறிக் கொடுக்கவென்றே நாடிக்கெட்டியாகச் சமயல்வேலை படித்தவொரு வெள்ளாட்டியை பிலை

க்கி வாங்கிக்கொண்டு அவளாலே பலகாரங்கள், பாலூதா. ஹரீதா, ஹல்வா, ஜுலாபீ, திரட்டுப்பால், வட்டிலப்பம் இவை முதலிய பலபல நவமான தீன்கள் பரிமாறி விருந்தாளிகளுக்கு ஊட்டிச் சங்கையாக்கி வைப்பார்கள், இன்னும், அந்த வெள்ளாட்டியை அடுக்காமலிருப்பதையும் தங்கள் (நபுசின்) பேரில் (ஷறுத்) திட்டுக் கொண்டார்கள், தங்களிலிருக்கு மூலவியாதிக்காக வேண்டி இன்னும் சொல்லிக்கொள்வார்கள், என்னுடைய, சிநேகிதர்களே யுங்களுக் குவந்த தீனைச் சொல்லுங்கள் நீங்கள் நாடிய தீனைச்செய்து தருவதற்காக வேண்டித்தான் கெட்டியான வெள்ளாட்டியை வாங்கியிருக்கிற தென்பார்கள்.

முகம்மதுபுனு அப்தில் ஹக்கம்சொல்லுகிறார்கள், இமாம்றலியல்லாகு அன்கு ஒரு குதிரையிலேறி யென்வீட்டுக்கு வந்து என்னையழைத்து முகம்மதே இந்தக் குதிரையை யேறிநடத்தும் பார்க்கலாமென்று சொன்னார்கள், நான் அவ்விதம் ஏறி நடத்தினேன் உடனே சொன்னார்கள் முகம்மதே இந்தக்குதிரை யுமக்குத்தான் (லாயிக்கானது) எடுத்துக்கொள்ளுமென்று தந்து விட்டுப் போய் விட்டார்கள், இன்னும் சொல்லுகிறார் நானும், இமாம் றலியல்லாகு அன்குவுமாக வோர் பெட்டியில் வாழைப்பழம் வைத்துத்தின்றுகொண்டிருக்கும்போது, ஓர் மனுடன் தானேவந்து எங்களுடன் பழத்தைத்தின்றார், தின்று முடிந்த பிறகு, அந்த மனுடன் இமாமைப் பார்த்து, இமாமே யொருவன் சதிமுட்டாக அழையாமல் வந்து தின்றால் அந்தத் தீனுடைய (ஹுக்கும்) என்னவென்று கேட்டார், உடனே இமாம் என்னளவிலே தங்கள் கழுத்தைச் சாய்த்துக்கொண்டு இந்தக் கேள்வி கேள்கிறது, தின்ன முன்றானல்லோ கேட்கவேணுமென்றார்கள்.

அம்றுபுனு சவாது சொல்லுகிறார், இமாம் றலியல்லாகு அன்கு சொல்லுகிறதாய் நான் மூன்றுதரமிருந்து வறுமையாயிருந்தேன், அதில், என்னுடைய வஸ்துகளிற் சிறிதானது பெரிதானது, என் மகளுடைய வுடமை, பெண்சாதியின் உடமை யாவையும் விற்றுப்போட்டேன், நானொருநாளும், ஒரு உடமையையும் ஈடுவைக்கவில்லை (றபீஉ) றஹிமகுல்லா சொல்லுகிறார்கள், நான் புதிதாக வோர் கல்யாணஞ் செய்தேன், பின்னர், இமாம் றலியல்லாகு அன்குவிடம் போனேன், அவர்கள் என்னிடங் கேட்டார்



கள், அந்தப் பெண்ணுக்கு (மஹர்) எத்தனை வைத்தீர், எவ்வளவு கொடுத்தீரென்றார்கள், அப்போது, நான் சொன்னேன், முப்பது தங்கக்காசு (மஹர்) வைத்தெழுதி ஆறு தங்கக்காசு கொடுத்து விட்டேனென்று, உடனே அவர்கள் தங்கள் வீட்டு மெத்தையிலேறி யொரு முடிச்சை யனுப்பினார்கள், அதை நான் வாங்கி யவிழ்த்து எண்ணிப் பார்த்தேன், இருபத்தினாலு தங்கக்காசு யிருந்தது, அதைக் கொண்டுபோய் மீதிமஹரையும் கொடுத்துப் போட்டேனென்று.

அபூதவ்று றஹிமகுல்லா பேசிவருகிறார்கள், ஷாபிஇய்யி இமாம் றலியல்லாகு அன்குவிடம் கொஞ்ச முதலுண்டாகி யிருந்தது, அநேர மக்கத்துக்குத் திரும்பவும், போகவேண்டிப் புறப்படுகிறபோது நான் சொன்னேன் உங்களுக்குப்பிற்காலம் உங்கள் பிள்ளை குட்டிகளுக்கு உதவும்படி யோர் தோட்டம் வாங்கிப்போடுங்களென்றேன் அதற்கவர்கள் யாதொரு ஜவாபும் சொல்லாமற் புறப்பட்டுப் போய்விட்டார்கள், பின்னர். மக்கத்திலிருந்து வந்தபோது நான் போய்க்கண்டு கேட்டேன், இமாமே நீங்கள் வைத்திருந்த பணத்தை யென்ன செய்தீர்களென்று, அதற்கு ஜவாபு சொல்லுகிறார்கள் (மக்கத்தில்) விலைக்கி வாங்கவென்றொரு தோட்டமும், நிலமும் கிடையாது. ஏனென்றால், அதில் மிகுந்த நிலமும் (வக்பாகிப்) போயிருப்பதால், என்கிலும் (மினா) வென்கிற தலத்தில் ஓர் விடுதி கட்டி (வக்பாக்கிப்) போட்டேன், நம்முடைய அசுஹாபிகள்யாவர்களும் (ஹஜ்ஜுக்குப்) போகுந்தோறெல்லாம் அதில் விடுதி தங்கவேண்டியென்றார்கள்.

ஷாபிஇய்யி றலியல்லாகு அன்குவுடைய, மகளுடைய, மகனுடையமகன் முகம்மது சொல்லுகிறார்கள், என் தகப்பனார், அவருடைய சிறியதகப்பனைத் தொட்டும்பேசிவருகிறார்கள், இமாம் றலியல்லாகு அன்கு ஒரு தோட்டம் லெட்சம் தங்கக்காசுக்கு விற்று அவையடங்கலையு மக்கத்தில் (கைறு) கொடுத்துப் போட்டார்கள், அவர்கள் கையில் யாதொன்று மிச்சமில்லா திருக்கும்போது ஒரு (அறபி)வந்து இமாமே யுங்களுக்கும் எனக்கும்பிலப்பான வொரு சங்கை யிருக்கிறதென்றார், அஃதென்ன வென்று இமாம் கேட்டபோது, உங்களை முன்னாலே நான் கண்டிருக்கிறேன்

பெருநாளில் மிகுந்த (உலுஹிய்யா) அறுத்துக் கொடுக்கும்படியா யென்றார், அப்போது, இமாம் சொன்னார்கள், இது பெலப்பான சங்கைதான், ஆகையால் வீட்டிற்புகுந்து அதோ இருக்குந்தோலையும் அதன்பேரிலிருக்கும் வஸ்துகளெல்லாத்தையு மெடுத்துக் கொண்டு போய்விடு மென்றார்கள், அவரவ்விதமே யெடுத்துக் கொண்டு போய்விட்டார்.

(றபீவு) சொல்லுகிறார்கள். இமாம் றலியல்லாகு அன்குவிடம் ஒரு மிஸ்கீன்வந்து (சுஆல்ச்) செய்தார், அந்நேரம் ஒரு தங்கக்காசுமட்டு மிருந்தது அதை யெடுத்துக் கொடுத்து விட்டார்கள், அப்போது, ஒருமனுடர் கேட்டார் இமாமே யுங்களிடம் அந்தவொரு தங்கக்காசு மட்டுந்தா னிருந்தது, அதைமாற்றி இந்தமிஸ்கீனுக்கு இரண்டு வெள்ளிக்காசைக் கொடுத்துப் போட்டு மற்றதைச் செலவுக்கு வைத்துக் கொள்ளலாமே யென்று. உடனே யிமாம் சொன்னார்கள், என்னிடம் ஒருமனுடன் ஒருவஸ்துவைத்தேடி யவன் தேடிய மட்டில் என்னிலுண்டா யிருக்க, அதை நான்கொடாதிருப்பது எனக்கு மிகுந்த நாணமா யிருக்கிறதென்றார்கள், இபுறுகீமுபுனு மகுலூது சொல்லுகிறார்கள், நான் அகுமதுபுனு யூசுபுதஃலபிய்யி யுடைய (மஜலிசில்) இருந்தேன், அவ்விடம், இமாம் ஷாபிஇப்பி றலியல்லாஹு அன்ஹுவுடையஇல்முங்கொடையும், கீர்த்தியும், பிரசித்தமாச்சுது அப்போது, தஃலபிய்யி சொன்னார்கள், இந்தஷாபிஇய்யி யுடைய கொடைக்கி யொப்புச்சொல்வதற்கு முடியாது, ஆகிலும், ஹபுசுபுனு உமறல் அஸ்திய்யி, சொன்னாரே அந்த பைத்திலுள்ள புகழ்ச்சி யடங்கலும் அவர்களிலிருந்ததென்று சொன்னார்.

ஸுபைறுபுனு ஸுலைமானல் குறைஷிய்யி றஹிமஹுல்லா சொல்லுகிறார்கள், ஒரு போது (ஹரீமா) என்கிறவர், ஹாறூன் றஷீதிட மிருந்து. ஐயாயிரம் தங்கக்காசு கொண்டுவந்து இமாம் ஷாபிஇய்பி றலியல்லாஹு அன்ஹு இடம் சலாம் சொல்லிக் கொடுத்தார், அப்போது, ஒரு நாவிதன் இமாமவர்களுக்குத் தலைமுடி யிறக்கிக்கொண்டிருந்தார், அவருக்குஅன்பது தங்கக்காசு கொடுத்துப்போட்டு மற்றதை யந்நேரம் ஹாலிறுயிருந்த குறைஷிகளுக்குப் பங்கிட்டுக் கொடுத்துப்போட்டுத் தங்கள் வீட்டுக்கு வரு



ம்போது நூறு தங்கக் காசுக்கும் குறையக் கொண்டு போனார்களென்று.

முஸ்னிய்யி றஹிமஹுல்லா சொல்லுகிறார்கள், இமாம் றலியல்லாஹு அன்ஹு சொல்லக் கேட்டேன், கொடையாகிறது (துன்யா ஆகிறத்து) இந்த இரண்டிடத்திலும் (ஐபுகளை) மறைக்குமென்று (றபீஉ) றஹிமஹுல்லா சொல்லுகிறார்கள், நான்இமாம் றலியல்லாஹு அன்ஹு சொல்லக் கேட்டேன், கொடையாகிறது. (யமன்) ராச்சியத்திலா யிருக்குமென்று, இபுனு அப்துல்ஹக்கம் றஹிமஹுல்லா சொல்லுகிறார்கள், இமாம்றலியல்லாஹு அன்ஹு சொன்னார்கள், யமன் ராச்சியத்தில் ஒரு பெண்பிள்ளை வீட்டில் விடுதி தங்கினோம். அப்போது, ஒரு பெண்பிள்ளை கொஞ்சங் கொஞ்சமாகத் தங்கள் அறையிலிருந்து எங்களுக்குப் பசியாறவேண்டி வஜீபனங்கொண்டுவந்தார்கள், அப்போது நானெண்ணிக் கொண்டேன், அந்தப் பெண்பிள்ளை மிஸ்கீனத்தென்று, அதனாற் சொன்னேன், அம்மாநீங்கள் சும்மா இருங்கள், எங்களிடம் வஜீபன மிருக்குகிற தென்றேன், உடனே, யந்தப் பெண்பிள்ளை சம்மதியாமல், தான்தானே சகலதுங்கொண்டுவந்து முன்னிலையாக்குகிறார்கள், மறுபடியும் முன்சொன்ன பிறகாரம் சொன்னேன், அப்போது, அந்த அம்மா சொன்னார்கள், என்வீட்டிலிருந் துங்களுடைய வஜீபனமா தின்ன நினைத் திருக்கிறீர்களென்று கோபமாய்ச் சொல்லி, இன்னமும்நீங்களே தாவ திங்கேயிருந்து சரிக்கட்டித் தின்ன நினைப்பீர்களாகில். உங்கள் பைபறி முதலிய. சாமான்களெல்லாம் வெளியிலெடுத் தெறியப் பட்டதாய்க் காண்பீர்களென்று சடைவாகச் சொன்னதாற் சும்மா இருந்து விட்டோம், பின்னர் எங்களை மிகவும் ஆதரித்தார்களென்று சொன்னார்கள்.

இபுனு ஈசா றஹிமஹுல்லா பேசிவருகிறார்கள், றபீஉ றஹிமஹுல்லாவைத் தொட்டும், அவர்கள் இமாம் றலியல்லாஹு அன்ஹு சொன்னதாகச் சொன்னார்கள், ஒருபோது, பெருநாள் வந்தது, அப்போது, என்னிடத்தில் யாதொரு வஸ்துவு மில்லாதிருந்தேன், அந்நேரம், என்வீட்டுப் பெண்பிள்ளை சொன்னார்கள் யாரிடமாகிலும் கடன் வாங்கினீர்களாகிற் பின்னாலே யிறுத்து

விடலாமென்று, ஏனென்றால்,நீங்கள் உங்களுடைய(கவுமுகளை-, பெருநாளில் நம்முடைய வீட்டில் வந்து போகும்படியாய் வழக்கப் படுத்தி அவர்களை யாதரிப்பதையும், ஆதத் தாக்கிக் கொண்டீர்களே, ஆகையாலேதான் சொல்லுகிறே னென்றார்கள். உடனே யவர்கள் ஒருவரிடத்தில் எழுபது தங்கக் காசு கடனாக வாங்கி அன்பது தங்கக்காசைச் செலவாக்கிப்போட்டு இருபது தங்கக்காசையும் செலவாக்காமல் வைத்திருந்தேன், அப்போது, ஒருகுறைஷிய்யாகிய மிஸ்கீன் என்னிடம் வந்து தன்னுடைய ஹாஜத்தை முறையிட்டார், உடனே யென்னுடைய ஹாலை யவருக் கறிவித்து அந்த இருபது தங்கக் காசையும் அவர் முன்பாக வைத்து இதில் உமக்குத் தேவையானதை யெடுத்துக் கொள்ளு மென்றேன், அப்போதவர்சொன்னார், இந்த இருபது தங்கக்காசும் என்னுடைய (ஹாஜத்துக்குப்) போதாததா யிருக்க, இதிலே குறைய எவ்வித மெடுப்பேனென்றார், உடனே யந்த இருபதையும் கொண்டுபோகச்சொல்லிக், கொடுத்துப்போட்டு யாதொன்று மில்லாதவனாய் ராத்தரித்தேன்.

அப்போது, வெகுநேரம் சென்ற பிறகு (ஜஃபறுபுனு யஃறயல் பறுமகிய்யி) யென்கிற பிரசித்தமான சீமானாகிய கொடையாளியில் நின்றும், ஒரு தூதன் வந்து என்னை யழைத்துவரச் சொன்னதாகக் கூப்பிட்டான், உடனே போனேன், அவர் என்னைக் கண்டவுடனே, ஆசாரஞ் செய்துகொண்டு சலாம் சொல்லிப் பின்பு ஷாபிஇய்யே வும்முடைய ஹாலென்ன இன்றைய இராவையி லென்றார், நான் படுத்துக் கொஞ்சம் தூக்கம் வருந்தோ றெல்லாம் ஷாபிஇய்யைக்கண்டுகொள்ளும், ஷாபிஇய்யைக் கண்டுகொள்ளு மென்றே யாதொரு வுருத் தோற்ற மில்லாமல், சப்தங் கேட்டேன், அதின் (சபபைச்) சொல்லுமென்றார், உடனே என்னுடைய சமாசாரத்தைத்துவர்க்கம் தொடுத்துச் சொன்னேன் (சுபுஹானல்லா) உடனே ஐந்நூறு தங்கக்காசு தந்தார், அதைக் (கபூல்ச்) செய்து நான் வெளியிற் புறப்பட்டு வரநாடி யிருக்கும்போது, மறுபடியும், ஐந்நூறு தங்கக்காசு தந்தார், இவ்விதம் இரண்டாயிரம் தங்கக்காசு தந்தாரென்று சொன்னார்கள்.



(றபீஉ) றஹிமஹுல்லா சொன்னார்கள். இமாம் றலியல்லாஹு அன்ஹுவிடம் யாராவது ஒரு மிஸ்கீன் வந்து (சுஆல்ச்) செய்திட்டால்; உடனே கொடைகொண்டு விரைவார்கள், சிலநேரங்களில் முட்டுப்பாடாயிருந்தால் அந்த மிஸ்கீனைச் சும்மா யெவ்விதம் போகச் சொல்லுகிற மதென்றெண்ணி முகமெல்லாஞ்செவந்து உடனேயந்த மிஸ்கீனுக்கு ஏதாகிலும் புகலிடஞ்செய்துபோட்டுத்தான் மறு அலுவற் பார்ப்பார்களென்று ஒருபோது, இமாமவர்கள்வாகனமேறிப் போகும்போது, ஒருமனுடன் அவர்களிடம் (சுஆல்ச்) செய்தான், அந்நேரம் தங்கள் கைவசம் யாதொருவஸ்துவும் இல்லாத சங்கதியால் விசனித்து அவரிருக்குமிடம் விசாரித்துக் கொண்டு, பின்னர், தங்கள் வீட்டுக்குப்போய், அவருக்கு அவர் கேட்டதுபோல், அனுப்பிப்போட்டு மறுவேலை பார்த்தார்களென்றும், இன்னுஞ் சொல்லுகிறார்கள், நாங்கள் மிசுறிலேயும் மற்று மூர்களிலேயும் கொடையாளிகளைக் கேள்விப்பட்டும், கண்டு மிருக்கிறோம், எங்கிலும் இந்த இமாமைபோற் கொடை, கொடுக்க வொருவரையும காணவில்லை யென்றும்.

இன்னுஞ் சொல்லுகிறார்கள். இமாம் றலியல்லாஹு அன்ஹு சொல்லுகிறார்கள், யமன்கட்டுக்காரர் நல்ல கொடையாளிகளென்று, ஹுமைதீ றஹிமஹுல்லா சொல்லுகிறார்கள் அந்த யமன்ராச்சியத்தி லுள்ளவர்களில், இமாம் றலியல்லாஹு அன்ஹுவைப் போல் கொடையில் நாம் காணவில்லை, யேனென்றால், அவர்கள் கொடை யெல்லாம் தங்களுக்குக் கண்டு மிஞ்சினதைத்தான் கொடுப்பார்கள். இந்த இமாம் எத்தனையோ தடவைகளிற் றங்களைக்காணப் பிறரைத் தெரிந்து தமக்கென்று யாதொன்றும் வைக்காமற் கொடுத்துப் போட்டார்கள்.

புவைத்திய்யி றஹிமஹுல்லா சொல்லுகிறார்கள், ஷாபிஇய்யி றலியல்லாஹு அன்ஹு தங்களாவில் முன்னேக்கிமிசுறுக்குவந்தவுடன் (ஸையிதா) பீவிஅவர்கள் அனேக வகை வகையான பிடைவைகள் சிப்பம் சிப்பமாக வனுப்பினார்கள் அவைகள் யாவையுமவர்களொப்புக்கொண்டு சகலருக்கும் பங்குவைத்துப் போட்டார்கள், மேற்கூறிய (ஸையிதா) வாகிறது அபூஜஃபறுல்மன்சூருடைய மகளாகவும், ஹாறூனுடைய மனைவியாகவுமிருக்கும்.

அகுமதுபுனு அப்திர் றகுமானி புனிவகபு றலியல்லாஹு சொல்லுகிறார்கள், இமாம் றலியல்லாஹு அன்ஹுவிடம் சிறுபிள்ளைகள் கிழவர்கள் சின்னமனுஷர்கள் யாரும் நெருங்கி (சுஆல்க்) கேட்பதற்குப் பின் தாங்கமாட்டார்கள், ஏனை கோணலாய்ப்பேசினாலும், அதைகொண்டு குற்றம் பிடிக்கமாட்டார்கள். என்னிலும் புஞ்சிரிப்புச் சிரித்துக் கொள்வார்கள், ஒருபோது, இமாம்றலியல்லாஹு அன்ஹு நடந்து போறபோது, ஒரு கறுத்தப் பயல் தலையில் ஒருபித்தக்கம் தடியைவிறகிறதற்காகச் சுமந்துகொண்டுபோகக் கண்டவனைக் கூப்பிட்டு நீயேன் இந்தத் தடியைச் சுமந்துகொண்டு போறாய் உன்னுடைய காட்டமென்னவென்று (தக்றாறய்த்) கேட்டார்கள், அப்போதவன் சொன்னான், என் (செய்யிதே) நீங்கள் மனுடருக்கு ஒருவஸ்து கொண்டு(பத்துவாக்)கொடுக்கிறீர்கள் அந்த வஸ்துவை நீங்கள் ஏன் பிடிக்கிறீர்களில்லையென்றும், நீங்கள்சாட்சியாகிறது வாதியின பேரிலாயிருக்கும் சத்தியமாகிறது பிரதிவாதியின் பேரிலாயிருக்குமென்று சொல்லவில்லையா, இந்தத்தடியின் பேரினுங்களுக்கு வழக்கிருந்தாற் சாட்சிவிட்டெடுத்துக்கொள்ளுங்களென்றான் உடனே யிமாம் சிரித்துக்கொண்டு நீ நாடின விடத்துக்குப் போய்விடென்றார்கள்.

## இருபதாம் பிரிவாகிறது.

இமாம் ஷாபிஇய்பிறலியல்லாஹு அன்ஹு அவர்கள்சொன்னபைத்துகளிற் பேச்கிறதாயிருக்கும், அந்த பைத்துகளை யிப்பாஷையா லெழுதினால் உச்சரிப்புச் சரியாகாததலால், இந்த இருபதாம் பிரிவை விடப்பட்டது, ஆனதாலிதை யறிய விருப்பமுள்ளவர்களிதற் கசுலாகிய அறபுத் தமிளி லச்சிட்ட (மஜுகிபுல் மவாகிபு-பீமனாக்கிபி-மதாகிபு) என்கிற கித்தாபில்,406-ம் பக்கமுதல்415-ம் பக்க மீறாய்ப் பார்த்துக் கொள்ளவும்.

## இருபத்தோராம் பிரிவாகிறது.

இமாம் ஷாபிஇய்யி றலியல்லாஹு அன்ஹுவுடைய வபாத்தின் வியாதியிலும்,நொம்பலத்தின் வேளையிலும்,அவர்கள் செய்த (வசிய்யத்தை) விபரிப்பதிலும், பேசுகிறதாக விருக்கும்.

(றபீஉ) றஹிமஹுல்லா பேசிவருகிறார்கள், இமாம் றலியல்லாஹு அன்ஹு எழுதிவைத்த வசிய்யத்து நாமாவின் தொகையிலுள்ளதா யிருக்கும், பின்னாலெழுதி வருகிறது, அதாவது, கிஜ்றத்து இருநூற்றி நாலாம் வருடம் றஜபுமாதம், முகம்மதுபுனு இதிரீசிஷ் ஷாபிஇய்யி யெழுதி வைக்கும் வசிய்யத்தாவது, ரகசியமும், பிரகாசியமும் அறிந்த நாயனை (ஷாகிது) வைக்கிறேன், நான் இந்த தீனுல் இஸ்லாமை,எனக்குத் தீனாக்கிக் கொண்டேன், இந்ததீனின பேரிலே யென்னை மவுத்தாக்கி யதின்பேரிலே யே யென்னையெழுப்புவானாகவும், (ஆமீன், இன்ஷா அல்லாஹ்)

கிஜ்றத்து,' இருநூற்றி மூன்றும் வருடம், ஷஃபான் மாதமென்றும், அதற்கு மறுவருடம் வபாத்தென்றும் சொல்லவவும் இடமாகிறது, பின்பு, எனக்கும், என் வசிய்யததைக் கேட்பவர்களுக்கும் வசிய்யத்துச் செய்கிறேனென்று செய்ததாவது, அல்லாகுத்தஆலா குறுஆனிலும், றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லம் ஹதீதிலும், ஹலாலாக்கியதை ஹலாலாக்கி, ஹறுமாக்கினதை ஹறுமாக்கியதின் ஹத்தைக் கடக்காமல் நடக்கவும், அஃதிரண்டிக்கு மாற்றமானதை விட்டுவிடவும், சொல்லிலும், செயலிலும், பறுலான அமலை யிறுத்துவரவும், ஹறுமான காரியத்தைத் தவிழ்க்கவும் கிறாமத்தில் அல்லாஹுத்தஆலாவுடையசமுகத்திற் சகலரும்ஹாசிறாகிறப்பதை யெப்போதும் யாதுசெய்து கொண்டேயிருக்கவும் துன்யாவினுவப்பை வெறுக்கவு மென்று. இவ்விதம் அனேகம் கைருத்துகளைக் கொண்டு அபேட்சை பூட்டித் தீங்குகளை விட்டும், அச்சம்பூட்டிக் கடைசியிற் சொல்லுகிறார்கள், முகம்மதுபுனு இத்ரீசாகியநான் அல்லாஹுத்தஆலா விடங்கேட்கிறேன்என்னுடைய இந்த வசிய்யத்தை யாரும் பேதலிக்கா திருக்கவும், என்பிள்ளைகுட்டிகள், ஆளடிமைகள் பேணுதலாக நடப்பிவிக்கவும், நபிசல்லல்லாஹு அலைகிவ சல்லமவர்கள் பேரில் என் (சலவாத்துத், தஸ்லீமாத்தை) யெத்திவைக்கவும், அவன் றஹ்மத்தில் என்னையாக்கிக் கொண்டு நரகத்தைவிட்டும் காத்து மூமினானவர்களி லொருவருக்குப் பகரமாய் நிற்பானே அந்த வொன்றடங்கலில் நின்றும் ஏற்றமானதைக்கொண்டு அவர்களில் எனக்குப் பகரமாக யிருக்கவும், அவர்களுக்கு, அவனொருவனே போதுமா யிருக்கவும் கேட்குகிறேன்.

பகுறுத்தீனிர்றூசிய்யி றஹிமஹுல்லா சொல்லுகிறார்கள், இமாம் ஷாபிஇய்யி றலியல்லாஹு அன்ஹுவுக்கு நெடுகிலுமிரு

ந்த மூலவியாதி மிகவுமதிகமாகி, யிருந்ததால், ரெத்தம் ரெத்தமாக வடிந்ததிற் கட்டிலுக்கும் கீழாலேவைக்கும் படிக்கம், நிறைந்து கொண்டும், பதற்படிக்கம்வைத்துக்கொண்டுமே யிருப்பார்கள். அவ்விதமிருக்கும்போதெல்லாம்தங்களுடைய தச்செயற்குணமான சற்குணங் குடிகொண்டே யிருந்தது, என்கிலும், பத்தியமாயிருக்குகிறகாரியத்தில் ஒருவரையும், பார்க்கமாட்டார்கள், தமக்குத் தேவையான வஸ்துவைப் புழங்கிவிடுவார்கள்.

யூனுஸ—புனு அப்தில்அஃலா றஹிமஹு—ல்லா சொல்லுகிறார்கள்வியாதியில் வருத்தப்பட்டவர்களில், இமாம் ஷாபிஇய்யி றலியல்லாஹு— அன்ஹு— வைக்காண அதிகமானவர்களை நான் காணவில்லையென்றும், நான் ஒருநாள் அவர்களிடம் போனதில், அவர்களை அடுத்திருந்தேன், அப்போதவர்க ளென்னை, அபாமூசாவேயென்று கூப்பிட்டு, (சூறத்துஆலஇம்றானில்) நின்றும் நூற்றிருபது, ஆயத்துக்குப் பின்னாலே யுள்ளதைமெள்ள வோதுமென்றார்கள், ஒதினேன், நான் எழும்ப நாடியபோது, என்னைமறந்திடாதையும் நான்வருத்தக்காரனென்றார்கள்.

யூனுசு, சொல்லுகிறார்கள், என்னைமேற்படிநூற்றிருபது ஆயத்துக்குப் பின்னு முள்ளதை யோதச்சொன்ன (சபபாவது) அதில் நபிசல்லல்லாஹு— அலைகிவசல்லம் அவர்களைத்தொட்டும் பேசிவரப்படுகிறதென்று (றபீஉ) றஹிமஹு—ல்லா சொல்லுகிறார்கள், இமாம்றலியல்லாகு அன்குஎன்னிடஞ்சொன்னார்கள் (உலமாக்கள்)மற்றும்(கவுமுகள்) எவர்வந்தாலும் வாசலுக்குவெளியிலே நின்றுசலாம்சொல்லிக்கொண்டு போய்விடும்படி சொல்லி யென்னுடைய (சலாத்தையும் அவர்களுக்குஎத்திவைத்துஎன்னுடையகண்ணழிவுஉதறையும்) சடைந்துகொள்ளவேண்டாமென்று சொல்லி யறிவிக்கச்சொன்னார்கள், அவ்விதமேநானிருந்துசொல்லிக்கொண்டிருந்தேன் அவ்விதம்சொன்னதெல்லாம்அவர்களிலிருக்கும் வருத்தமும் இரதத்தின்கொரோமும், உண்டாயிருப்பதுதா னென்றார்கள், இன்னும்.

(றபீஉ) றஹிமகுல்லா சொல்லுகிறார்கள், நான்தான் மிகுதி காலமாய், அவர்கள வபாத்துவரையிலும அவர்கள்சொத்துப்பணங்காசு சகலதிலும் காறுவாறுபார்க்கிறவனாயிருந்தேன், என்னை ய



வர்கள் எதிரிலாக்கி எனக்காகமிருந்து (துஆ) வெல்லம் செய்ததுடன் மூன்றுதடவை அவர்கள் முதலைவிட்டும் என்னை ஹலாலாக்கினேனென்றார்கள்.

முஷ்னிய்யி வஹிமஹு—ல்லா சொல்லுகிறார்கள், நான்இமாம் றலியல்லாஹு— அன்ஹு—விடம் மரணவியாதிநேரம்போய் எப்படிவிடிவேறுனீர்களென்றேன், அவர்கள் சொன்னார்கள், ஏவல்விலகல் இவைஇரண்டுக்கிடையில் விடிவேறுகிச், சொச்ச(ரிஸ்க்கைத்)தின்று கொண்டு (அஜலை) வழிநோக்கினவனாயிருக்குகிறேனென்று. அப்போது, நான்சொன்னேன், இந்தமிஸ்ரில்மிகவும்பேரான வைத்தியன் ஒருவனிருக்குகிறான் அவனைக் கூட்டிவந்துகைபார்ப்போமென்று. அந்த நசாறுவைத்தியனை யழைத்துவைத்து இமாம் றலியல்லாஹு— அன்ஹு—வுடைய கையைப்பிடிக்கும்போது அவனுடைய கையைத்தாங்கள் பிடித்துப் பார்த்துப் பைத்துச் சொல்லுகிறார் அதின்கருத்தாகிறது

என்கையைப் பிடித்துப்பார்க்க வைத்தியன் வந்தான், நானவனகையைப் பிடித்துப் பார்த்தேன், அப்போது, அவனிலே தரிபட்டிருக்கிற ஹாலவிலா யிருக்குகிறான், அவன்வியாதி நீளங்கொண்டிருப்பதுடன் என்வியாதிக்கி இலாச்சுசெய்கிறவனாகி விட்டான், புதுமைகளிலுள்ளதாயிருக்கும் கண்வியாதியால் அழுந்தி நீரோட்டமாயிருக்குகிறவன்கண்ணுக்குமருந்துசெய்யவந்ததுபுதுமையாயிருக்கிறதென்று,

முஸ்னிய்யி றஹிமஹு—ல்லாசொல்லுகிறார்கள், இந்தபைத்தை இமாமவர்கள் சொல்லிச்சொற்பநாட்செல்வதுக் குள்ளாக அந்த வைத்தியன் செத்துப்போனான், அதுசமாசாரத்தை இமாம் றலியல்லாஹு— அன்ஹு—விடம்வந்துசொன்னபோது பின்புமோர்பைத்துச் சொன்னார்கள், அதன்கருத்துத் திடனாக வைத்தியனாகிறவன் தன்னுடைய மருந்தாலும் வைத்தியத்தொழிலாலும் அல்லாஹுத்தஆலாவுடைய கட்டளையைத் தட்டுவதற்குத் தாரணிபெறமாட்டானென்றது.

முஸ்னிய்யி றஹிமஹு—ல்லா சொல்லுகிறார்கள் நான்இமாம் றலியல்லாஹு— அன்ஹு—வுடைய வபாத்து வியாதிநேரம் போய்

உஸ்தாதே யெவ்விதம் விடிவேறினீர்களென்று கேட்டேன், அப்போது சொன்னார்கள் நான் துன்யாவைவிட்டும் பயணம் போறவனாகவும் உடற்பிறந்தான் மார்களைப் பிரிகிறவனாகவும், மவுத்தென்னும் குடிப்பைக் குடிப்பதற்குஆயத்தமானவனாகவும், என்னுடைய பாவங்களைச் சந்திக்கிறவனாகவும் விடிவேறினேன் நானறியேன், என்னுடைய நபுசு சொர்க்கத்திலாகி விடுமென்று அதற்குச்சோபனம் சொல்வேனோவென்றும், அல்லது, நரகத் தீயிலாகி விடுமென்று, அதற்குச்சலிப்பாறுதல்சொல்வேனோவென்றும், அறியேனென்றுஞ்சொன்னார்கள்.

பின்பு, நான்சொன்னேன், அபூஅப்தில்லாவே, அல்லாஹுத்தஆலா வுங்களுக்கு றஹ்மத்துச் செய்வானாகவும், எனக்கு(வஃலு) சொல்லுங்களென்றேன் அப்போது, முந்தின வசிய்யத்திலுள்ள (வஃலு) களெல்லாம்சொல்லி மேலதிகமாகவுஞ்சொன்னார்கள், அதாவது, மகனே, நீதம் எந்தவிடத்திலிருக்கிறதோ அந்தவிடத்திலிரும், உம்முடைய வாய்மூடுதலானது அல்லாவுடைய (திஃமத்திலும், தீனிலும்) யோசிக்கிறதாயும் உம்முடையபேச்சு (திக்றாகவும்) உம்முடையபார்வை யுறுதிப்பாடாகவும், உம்முடைய கேள்வி(இல்மாகவும்) உமக்கு அன்யாயஞ் செய்தவர்களைத் தொட்டும் பொறுத்துவிடும் உம்மை முறித்து நடப்பாரைச் சார்ந்துநடவும், உம்மைப் பேறுகெடுத்தவர்களுக்கு நீர் கொடும். பலாய்முசீபத்துகளுக்குச் (சபுறு) செய்துகொள்ளும், நரகத்தைவிட்டும் (தக்வா)வைக்கொண்டு காவல்தேடிக் கொள்ளுமென்றார்கள்.

பின்புஞ்சொன்னேன், அபூஅப்தில்லாவே, உஸ்தாதே, இன்னுஞ்சொல்லுங்களென்றேன், அப்போது சொன்னார்கள், உண்மையானது உம்முடைய நாக்காகவும், வாக்குநிறைவேற்றுதல் உமக்கு ஆதாரமாகவும் (ஷுக்று) உமக்குக் குளிமுழுக்காகவும் (குர்ஆன்) உமக்கு அறிவுசொல்லுகிறவராகவும் (அல்லாஹுஜல்லஜலாலுகு) உமக்கு மருகுதலாகவும், பயங்கரம் உமக்குமுகமுடியாகவும் (ஹக்கும்) என்னும்நீதம் உமக்குமந்திரியாகவும் (தவக்குல்) உமக்குஜீராவாகவும் (துன்யா) வுமக்குச் சிறைசாலையாகவும்



மீடுமைத்தனம் உமக்குஉடலோடே யொட்டினதாயும் (ஹக்குத்தாலே)யுமக்குக் கைச்சவடமாகவும் இருக்கட்டும், இப்போதுசொன்னவை யெல்லாம்ஒருவனுடைய வன்னிப்பாகவிருந்தால் அவன் விடுதிவீடும தலமாகிறது சொர்க்கமாயிருக்குமென்றார்கள்.

இன்னும், முஸ்னிய்யி றஹிமஹுல்லாசொல்லுகிறாகள்,பின்பு, இமாம் றலியல்லாஹு அன்ஹு வானத்தவிற் பார்த்துக் கொண்டேயிருந்து கண்ணாலே தண்ணீர் வடித்துக்கொண்டேயிருந்து சிலபைத்துகள் சொன்னார்கள், அதின் பொருளாகிறது, சகலருக்கும் நாயனே யென்னுடைய அபேட்சையையும், நாட்டத்தையும் குற்றவாளியா யிருக்கிலும்சரி, நீயுபகாரத்தையும், கொடையையு முடையநாயன். ஆனபடியாலென்னுடைய நாட்டத்தை யுன்னுடைய வுபகாரத்தால் நிறைவேற்றி யருள்.

இன்னும், எனக்குப் போக்கிடங்கள்கிட்டுமையாகி யென்னுடைய (கல்பு) ஊறுதகிணியனை போது உன்னுடைய பொறுக்குதலளவில் என்னுடைய ஆசையை ஏணியாக வாக்கிக்கொண்டேன் இன்னும், என்னுடைய பாவமெனக்கு வலுப்பமாய்த் தோற்றுகிறது, அந்தப்பாவத்தை யுன்னுடைய பொறுக்குதலளவிற் சேர்த்துப் பார்த்தேன், நாயனே யுன்னுடைய பொறுக்குதல் தான் அந்தப் பாவத்தைக்காண மிகவும் வலுப்பமானதாய்த் தெரிகிறது, இன்னும்,நீ நீங்காமற் சகல குற்றத்தைவிட்டு மன்னிக்குதலுடையவனாகவே யிருக்கிறாய், உன்னுடைய வுபகாரத்தாலும், சங்கையாலும் கேளாமற் கொடை கொடுப்பவனாகவே யிருக்கிறாய். இன்னும், நாயனே யுன்னுடைய வுபகாரமே யில்லாவிடில் (இபுலீஸுடைய) கலைவில் அகப்படாமல் ஒரு (ஆபிதாவது) தராணிபெறான், நாயனே யுன்னுடைய தோழனார் (ஆதம் அலைகிஸ்ஸலாத்தைக்) கலைத்தது இபுலீசாயிருக்கும்போது அவனுடையகலைப்பைவிட்டும் எப்படித தட்டிக்கொள்ள வேலும், உன்னுடைய வனுமதியே யில்லாவிடில், இன்னும், என்னைத்தொட்டும் பொறுத்து விடுவையேயானால், உனக்கு அஃதொரு காரியமல்ல, நீயெத்தனையோ அனியாயக் காரன் ,மாறுபாட்டுக்காரன், வம்பன் இவர்கள்,பாவத்தை நீங்காமற்செய்துகொண்டே யிருப்பவர்களுடையகுற்றங்களையெல்லாம் பொறுத்தவனாக விருக்குகிறாய்.

இன்னும், நாயனே நீயென்னை வேதனைசெய்ய நாடியென்னுடைய நபுசைநரகத்திற் புகுத்திவிக்கப்பட்டாலும். நான் ஒருக்காலுமுன்னுடைய (றஹ்மத்தை)விட்டும் ஆசைமுறிந்தவனாகவிருக்கமாட்டேன், இன்னும், என்னுடைய பாவமானது பழயதும்,புதியதுமாய்ச் சேர்ந்து மிகுந்ததாய், வலுப்பமானதா யிருக்கிறது, நாயனேயுன்னுடைய பொறுக்குதலாகிறது மிகவும்வலுப்பமானதாய்ப் பாரதூரமானதா யிருக்கிறது, ஆகையால், என்பாவுங்க ளடங்கலையும் பொறுத்தருள்வாயாக.

(றபீஉ) றஹிமகுல்லா சொல்லுகிறார்கள், நான் ஷாபிஇய்யி றலியல்லாகு அன்கு வபாத்தாக நாலுநாளைக்கிமுன், அவர்களிடம்போ யிருந்தேன, அப்போது, அவர்களுடைய (அசுஹாபி)களைத் தொட்டும் என்னிடம் கேட்டார்கள். அப்போதெனக்குத் தெரிந்ததை யான் சொன்னேன், உடனே யவர்கள் சொன்னார்கள், நான் ஒருவநுடனும் பேசுகிறதில் அவர்களைப்பேச்சில் மிகைத்துக் கொள்வதை நாடிப் பேசுகிறதில்லை, யெல்கிலும், ஹக்கின்னது, பாதகிலின்னதென்று எவருடையநாவினாலவது வெளிக்கிட்டு அதைக்கொண்டு உம்மத்துகளுடைய நேர்வழி சரிபட்டுமென்று ஆதரவு வைத்தவனாகத்தான் பேசுவேனென்றார்கள்.

இன்னும (றபீஉ) றஹிமகுல்லா சொல்லுகிறார்கள். இமாம் ஷாபிஇய்யி றலியல்லாகு அன்கு வபாத்தாகிற இரவின் (மகுரிபில்) அவர்களுடைய சிறிய தகப்பனார் மகன் (யஃக்கூபு) இடஞ்சொன்னார்கள், (மகுரிபுத்) தொழுதபின் வந்து என்னுடைய (றாஹறு) பிறப்படுவதை வழிபார்த் திருங்களென்றார்கள், அப்போது, இபுனு யஃக்கூபு இமாமைப்பார்த்து நீங்கள் தொழுதுவிட்டீர்களோவென்றார்கள், உடனே இமாம் றலியல்லாகு அன்கு தொழுதுகொண்டே னென்றார்கள், பினபு, தண்ணீர் கேட்டார்கள், தண்ணீருங் குடித்துக் கொண்டார்கள், என்கிலும், குளவஞ்சிப் பழத்தின் சாற்றுடன் கலக்கப்பட்டதாய்த் தெரிகிறது, பின்னர், றஜபு மாதம் கடைசிநாள் வெள்ளிக்கிழமை பிந்தின (இஷா) நேரத்தில் அல்லாகுத்தஆலாவின் நாட்டத்தின்படி ஹிஜ்றத்து இருநூற்றுநாலாம் வருடம் ஐம்பத்தாறு வயதில் வபாத்தானார்கள் (றலியல்லாகுஅன்கு).



முஸ்னீ றஹிமகுல்லா சொன்னார்கள், இமாம் ஷாபிஇய்யி றலியல்லாகு அன்கு வபாத்தான இரவையில் (ஜின்கள்) சலித்து முனங்கினதாய்க் கேட்டோமென்று, இதை, பைகக்கிய்யி,றஹிமகுல்லா பேசிவந்தார்கள் (றபீஉ) றஹிமகுல்லா சொல்லுகிறார்கள் இமாம் றலியல்லாகு அன்கு வபாத்தாகக் கொஞ்ச நாளைக்குமுன் நான் ஓர் மனாம் கண்டேன், அதாவது. ஆதம் அலைகிஸ்ஸலா மவுத்தாகிப் போனார்களென்று சொல்லப்பட்டுச் சகலரும் ஓடிப்போனார்கள், இவ்விதம், கனவுகண்டு விழித்துப், பின்னரோர் (தஃபீறு)டைய ஆலிமிடம் அதைச் சொல்லித் (தஃபீறு) கேட்டேன், அவர்சொன்னார். இந்தமனாமாகிறது சகலஇல்மும் கற்றவோர் ஆலிமவுத்தாகிறத்தின்பேரில் அறிவிக்கிறதென்று.

அபுல்லைதில் கப்பாகு என்கிற பிரசித்தமான வுண்மைவாக்குடையவர். அவலீவலிய்யு றஹிமகுல்லாவைத் தொட்டும் பேசிவருகிறார்கள். நான் ஷாபிஇய்யி றலியல்லாகு அன்கு வபாத்தாகிற இரவில் றசூல்சல்லல்லாகு அலைகிவ சல்லம் வபாத்தாகிவிட்டார்களென்று சொல்லும்படி மனாமிற்கண்டேன், இன்னும், அவர்களை (ஜாமிஉல் அஸ்கறு) என்கிற பள்ளியில் வைத்துத்தான் குளுட்பாட்டப்படுமென்றும். வெள்ளிக்கிழமை அசறுக்குப் பிறகுதான் அடக்கப்படுமென்று மனாமிற் சொல்லும்படியாயும் கேட்டேன், பின்பு, விழித்தவுடன் இமாம் ஷாபிஇய்யி றலியல்லாகு அன்கு வபாத்தாகிப் போனார்களென்று சொன்னார்கள், மிசுறில், அப்போதிருந்த ராஜாவானவர் விளம்பரஞ் செய்தார், இமாமவர்களுடைய (பறக்கத்தைச் சகலரும் பெற்றுக்கொள்ள வேண்டியதற்காய்க் கொஞ்சம் தூரமான விடங்களி லுள்ளவர்களெல்லாரும் வந்துகூடி அசறுக்குப்பிறகு நல்லடக்கம் காணும்படி. அவலீவலிய்யி றஹிமகுல்லாதாங்களும் சொல்லுகிறார்கள், நானும் போய்க் கூடிக்கொண்டேனென்று, இந்த அவலீவலிய்யி றஹிமகுல்லா வுடைய வீடுகொஞ்சம் தூரமா யிருக்குமென் றறிவிக்கிறது

அபூஅலிய்யில் ஹஸைனிபுனி ஹரீறு றஹிமகுல்லா,முந்தின அபீஅப்திர் றஹ்மானில் அவலீவலிய்யி றஹிமகுல்லாவைத் தொட்டும் பேசிவருகிறார்கள், இமாம் றலியல்லாகு அன்கு வபாத்தான

இரவில் நான் மனாமில் ஓர் ஜனாசாவைக் கண்டேன் (கபன்) அடைய வளைந்தவோர் மனுடனுண்டா யிருக்கிறார், அழகானவோர் போர்வையும் போர்த்தப் பட்டதா யிருக்கிறது, அந்த மனாமிற்றானே நபிசல்லல்லாகு அலைஹிவசல்லம் வபாத்தாகினார்களென்றும் சொல்லப்படுகின்றது, பின்னர், விழித்து விட்டேன், அன்றையில் இமாம் றலியல்லாஹு அன்கு வபாத்தாகினார்கள், நான் மனாமிற் கண்டேனே அந்த ஜனாஸாவில், அந்தப் போர்வை கொண்டு அந்த இடத்தில் அவர்களைக் கொண்டு வந்து வைக்கப் பட்டதாக என்றுசொன்னார்கள்.

முகம்மதுபுனு அப்தில்லாகிபுனில் முன்திறு றஹிமகுல்லா சொல்லுகிறார்கள், நான் (றபீஉ) றஹிமகுல்லா சொல்லக் கேட்டேன், நாங்கள் இமாம் ஷாபியிய்யி றலியல்லாகு அன்குவை நல்லடக்கம் கண்டு மீண்டவுடன், சஃபான் மாதத்திற் பிறையைக்கண்டோமென்று, அபுல்பனுலிபுனி அபீநசறு றஹிமகுல்லா சொல்லுகிறார், நான் இமாம் ஷாபிஇய்யி றலியல்லாகு அன்குவுடைய (கபுறை) வியாறத்துச் செய்யநாடிப் போனேன். அவர்களுடைய கபுறு முகத்தமென்கிற மலையருகில் மிசுறிற் குறைஷிகளுடைய கபுறுகளின் நடுவில் இருக்கிறது, பூமியில் நின்றும் இரண்டு ஜாண் உயரத்துக்கு உயர்த்தப் பட்டதாகவும், பளிங்கினாற் றலைமாட்டில் ஒரு மீசானும், கால்மாட்டில் ஒரு மீசானும் நட்டப்பட்டிருக்கிறது தலைமாட்டின் மீசானில் எழுதியிருக்கிறது, இந்த மீசானுடைய கபுறுடையவர் முகம்மதுபுனு இதிரீஸென்றும்.

அதன் பின்னர் (வகுவ அஷ்கது அன் லாஇலாகா இல்லல்லாகு வஹ்தகு லாஷரீக்லகு, வ அன்னமுகம்மதன் அப்துகு வறசூலுகு; அறுசலகு பில்குதா, வதீனுல ஹக்கி பஷீறன் வநதீறன் வதாஇயன் இலல்லாகி பிஇதினிகி வசிறாஜன் முனீறன் வஅஷ்ஹது அன்னல் ஜன்னத ஹக்குன், வஅன்னன்னாற ஹக்குன், வ அன்னல் மவுத்த ஹக்குன், வ அன்னல்லாக யபுஅது மன் பில் குபூரி அலா தாலிக்க ஹய்ய, வ அலைகி மாத்த, வ அலைகி யுபுஅது ஹய்யன் இன்ஷா அல்லாகு அல்லாகும் மக் பிர்லகு, வ னஃபிஉ கபுறகு, வஹ்ஷுறுகு மஅ நபிய்யிகி முகம்மதின் சல்லல்லாகு அலைகி வசல்லம் வஜ்அல்கு மின் றுபக்கா இகி ஆமீன் யாறப்பல் ஆலமீன்)



என்றும் கால்மாட்டின் மீசானில் (இபுறுகீமுல் கலீலு கலீலுர் றஹ்மான் சலவாத்துல்லாகி அலைகி) என்றும் அறபு வார்த்தையா லெழுதப்பட்டிருக்கிறது.

அப்துல்லாகில் யாபிஈ (தபக்காத்துல் புக்ககா)வென்கிற கிதாபிற் சொல்லுகிறார்கள், இமாம் ஷாபிஇய்யி றலியல்லாகு அன்குவை மிசுறில் முகத்தம் என்கிறமலையருகில் (கறாபத்துஸ்ஸுகுறாவில்) அடக்கப்பட்டுப், பிற்மாண்டமான வோர் குப்பாவும் கட்டப்பட்டதா யிருக்குகிறது, அவர்கள் மக்பறாவினருகே தாஜுல் உஷ்ஷாக்கு உமறுபுனுல் பாரிலு றலியல்லாகு அன்கு அவர்களையும், அடக்கப்பட் டிருக்கிறது.

முகம்மதுபுனு முஸ்லிம் சொல்லுகிறார்கள், அபூஸர் அத்திர்றுலிய்யி, வபாத்தானபோது, அவரை மனாமிற்கண்டு அல்லாகுத்தஆலாவும்மைக்கொண்டியாதுஉபகாரஞ்செய்தானென்றுகேட்டேன், அப்போ தவர் சொன்னார், அல்லாகுத் தஆலா மலக்குகளுக்குச் சொன்னான் என்னை அபீஅப்தில்லாவுடன், அபீஅப்தில்லா வுடன் அபீஅப்தில்லாவுடன் சேர்க்கச் சொன்னான், அவ்விதமே என்னைச் சேர்த்தார்கள், அதனால், மணம்பெற்றேனென்றார்கள் (முந்தினது) இமாம் மாலிக்கு, (இரண்டாவது) இமாம் ஷாபி இய்யி (மூன்றாவது) இமாம ஹன்பலிய்யி றலியல்லாகு அன்கும் என்று வியாஞ் சொன்னார்கள்.

உதுமானுபுனு அன்தாகிய்யி றஹிமகுல்லா சொன்னார்கள், நானோர் மனாம் கண்டேன், கியாமத்துநா ளாகி அல்லாகுத்தஆலா கல்க்குகளைக் கேள்வி கணக்குக் கேட்கிற தற்காய் மஹ்ஷர் கூட்டப்பட் டிருக்கிறதுபோ லிருக்கிறது. அப்போது, அறுஷி லிருந்தோர் சத்தம் வந்தது. அதாவது, அபா அப்தில்லாவைச் சொர்க்கத்திற புகுத்தி வையுங்களென்று, நான்கு தடவை சொல்லப்பட்டது. (முந்தினது) மாலிக்குபுனு அனசு (இரண்டாவது) சுபியானுத்தவ்ரிய்யி (மூன்றாவது) ஷாபிஇய்யி (நான்காவது) அஹ்மதுபுனு ஹன்பல் றலியல்லாகு அன்கும்.

அபூ அப்தில்லாகித் தைனூரிய்யி சொல்லுகிறார்கள, நான் மனாமில் றசூல் சல்லல்லாகு அலைகிவ சல்லத்தைக் கண்டு கேட்டேன் அல்லாவுடைய றசூலே இமாம் ஷாபிஇய்யி *கோர்வை செய்த (ரிசாலா) என்கிற கித்தாபில் (வசல்லல்லாகு வசல்லம் அலாமுஹம்மதின் வஆலிகி குல்லமா தக்கற குதாக்கிறான் வகபல அன் திக்ரிகில் காபிலூன்) என்ற உங்கள் பேரில் சலவாத்துச் சொல்லி யிருந்தார்களே, அதற்கு அல்லாகுத் தஆலா என்னகூலி கொடுத்தானென்று அப்போது, நபிசல்லல்லாகு அலைகிவசல்லம் சொன்னார்கள், அந்த ஷாபிஇய்யை அல்லாகுத் தஆலா கேள்வி கணக்குக் கேட்பதற்காய் நிறுத்தாட்ட மாட்டா னென்றார்கள், பின்னர், விழித்து விட்டேனென்று.

அகுமதுல் பறுகானிய்யி றவுலத்துல் உலமா வென்குற கித்தாபிற் சொல்லுகிறார்கள், நான் அபாஅப்தில்லாகில் முதவ்வி இய்யி சொல்லக்கேட்டேன். இமாம் ஷாபிஇய்யி றலியல்லாகு அன்கு வபாத்தான போது, மனாமில் அவர்களைக்கண்டு கேட்கப் பட்டது, அல்லாகுத் தஆல வுங்களைக் கொண் டென்ன வுபகாரஞ் செய்தானென்று, அப்போது, அவர்கள் என்பிழையைப் பொறுத் தா னென்றார்கள், அஃதென்ன, அமலினா லென்று கேட்கப்பட்டது அப்போது, சொன்னார்கள், இந்தசலவாத்து ஓதிவந்தேன், அந்த பறக்கத்தினா லென்றார்கள், அஃதென்ன சலவாத்தா யிருக்கு மென்று கேட்கப்பட்டது, அப்போது, சொன்னார்கள், அதாவது.

அல்லாகும்ம சல்லி அலா முகம்மதின பிஅததி மன் சல்லா அலைகி வசல்லி அலா முகம்மதின் பிஅததி மன்லம் யுசல்லி அலைகி வசல்லி அலா முகம்மதின் கமா துஹிப்புவ ததறுலா அன் துசல்லிய அலைகிவசல்லி அலாமுகம்மதின் கமா அமற்த்த பிஸ்ஸலாத்தி அலைகி வசல்லி அலாமுகம்மதின் கமா யன்பகிஸ்ஸலாத்து அலைகி வசல்லிம் அலைகி வஆலிகி வசஹ்பிகி அஜ்மஈன்.) என்றதா யிருக்கும்.

இன்னும், பேசிவரப் படுகிறது,இமாம் ஷாபிஇய்யி றலியல்லாகு அன்குவை மனாமிற்கண்டு அல்லாகுத் தஆலா வுங்களுக்



கென்ன (தறஜாத்தைத்) தந்தானென்று கேட்கப்பட்டபோது, சொன்னார்கள், அவன் தந்த (நிஃமத்தை) யெனைவித மட்டிட்டுச் சொல்வேன், அதிற் பசித்தாருக்கு வஜீபனமும், தாகித்தாருக்குத் தண்ணீருங் கொடுப்பதிலுமுள்ள (தவாப்) மிகவும் பாரதூரமா யிருக்கும் ஒருகாட்டில் நான் போகும்போது, ஓர் கிணற்றின் வாயில் ஒருநாயானது தாகத்தினால் கிணற்றைச் சுற்றிச்சுற்றி நாக்கை நீட்டிக்கொண்டே யிருப்பதை நான் கண்டேன், அப்போ தென் (கல்பு) இரங்கி யதற்குத் தண்ணீர் புகட்டுவதற் கோர் பட்டைக் கயிறு பார்த்தேன். அவ்விடத்திற் கிடைக்கவில்லைப், பின்னர், என் தலைப்பாகையைக் கழட்டி யோர் தலைப்பைக் கிணற்றி லிறக்கித் தண்ணீரை நனைத்து அதை யெடுத்துப் புளிந்ததின் வாயி லூற்றினேன், அதின் தாகந் தீரும் வரையும், இவ்விதமாய்ப், பின்னர், அல்லாகுத் தஆல அந்த இரக்கத்துடைய (தவாபை இப்போ தறிவித்துத் தந்தானென்றும் சொன்னார்கள்.

இஃலம்) நீயறி, இவ்விதமான ஒவ்வொரு அமலுடைய தவாபுகளைத் தனித்தனியே யெடுத்துகாட்டுவ தெல்லாம் அததினை வரிசைப்பாட்டை யெடுத்து திறந்து காட்டுவதல்லாமல் மற்ற அமல்கள் பிரயோசனஞ் செய்யவில்லையென்று. எவ்வளவும் நினைக்கக்கூடாது.

ஹாசைனுபுனு ஜஃபறல் வர்றாக்கில் பருதாதிப்யி றஹிமகுல்லா சொல்லுகிறார்கள், நான் மிசுறுக்குப்போய் இமாம் ஷாபிஇய்யி றலியல்லாகு அன்குவுடைய (கப்றை) சியாறத்துச் செய்தேன், அவர்கள் தலையாட்டின் மீசான் கல்லில் இரண்டு பைத்துக் கொத்தி யெழுதி வைத்திருக்கிறது அதின் பொருளாகிறது, இதிரீசுடைய மகனே, நாம் இறாக்கு ராச்சியத்தை விட்டுவந் துங்களையும் சியாறத்துச் செய்து திடனாக நாம் நம்முடைய நேர்ச்சையையும் நிறைவேற்றினோம், இன்னும், உங்கள் பேரில் அல்லாகுத் தஆலா வுடைய கலாமாகிய குறுஆன் ஷரீபில் நின்றும் நாம் பாடமிட்டிருக்குறோமே அந்த வொன்றையும் ஓதினோமென்றதா யிருக்கும், பின்னர், அதின்சபபைத் தொட்டும் கேட்டேன், எனக்குச் சொல்லப்பட்டது: இறாக்கி ராச்சியத்தி லுள்ள இமாம்களில்

மகா வல்லபந்தங்கிய ஒருஇமாமானவர்கள் தங்கள் இருக்காகிய ஊரைவிட்டும் மிசுறுக்கு வந்து இமாம் ஷாபிஇய்யி றலியல்லாகு அன்குவுடைய கபுறை வியாறத்துச் செய்து அவர்கள்பேரில் குறு ஆன் னார்ப்பது (கதமு) தமாமாக்கி ஹதியாய்ச்) செய்கிறதாக நேர்ச்சை செய்து அவ்விதமே நடத்தி விடடுப் போனார்களென்று சொல்லப்பட்டது.

இமாம் ஹசன் றஹிமகுல்லாசொல்லுகிறார்கள், இமாம் ஷாபிஇய்யி றலியல்லாகுஅன்கு பேரில் (மறதிய்யா) வாகவும் (மதுஹபாகவும்) அனேகம் உலமாக்களும், நாகரீகர்களும் கவிதாக்கவென்னும் பைத்துகள் கட்டியிருப்பதை யெழுதப்போனால், இதிலடங்காதென்று தன்னுடைய (மஃதினுல் யவாக்கித்து) என்கிற கித்தாபிற் சொல்லியவர்கள் தானுதச் சொன்ன (மறதிய்யா) வையும் (மதுஹபும்) அறபாக எழுதி அதின் உரையை யெழுதலாமென்று நாடினால் கித்தாபு நீளமாகி விடுமென்று விடப்பட்டன, இதற்கசிலாகிய கித்தாபிற் சொல்லப்படுகிறது, ஆனதால், இதிலும் விடப்பட்டன.

ஷாபிஇய்யி இமாமவர்களின் பிரபந்தம்.

முற்றிற்று.

பிசுமில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்.

# ஹன்பலிய்யி இமாமுடைய

## பிரபந்தம்

### கலிவிருத்தம்

இன்புறு நலமு மெனிலு மறையா
மிறைச்க லாமதி னுளபயனே
நன்புறும் படியே விபரிக்கு மறையோர்
நாலிமாங் களிற் கடைசியதாய்த்
துன்புறும்பவங்கள் துபிர்ஷிறுக்கிவைக
டுலைந்து நன் றுற முறையி யற்றும்
ஹன்பலி யெனும்பே ரணிந்த இமாமின்
அதிஜெ யப்பிர பந்த மருள்வாம்.

நான்காம் பாடமாகிறது ஹதீதுடைய வுலமாக்களுக்கெல்லாம், இமாமாகிய முஹக்கிக்கீன்களான, மஷாஇகுமார்களுக்கெல்லாம் முன்னிலையான, வரிசையான, வள்ளலான, இமாமாகிய ஹன்பல் றஹிகுமல்லாவின் குமாரரான, இமாம் அஹ்மது றலியல்லாகு அன்குவுடைய கீர்த்தி யென்னும் பிரபந்தத்திற் கொஞ்சம் பேசுகிறதாயிருக்கும்.

இதில், எட்டுப் பிரிவுண்டும், அதில், (முந்தின) பிரிவாகிறது, அவர்கள் பிறந்ததிலும், வயதிலும், வபாத்திலும் பேசுகிறது (இரண்டாம்) பிரிவாகிறது, அவர்கள் வங்கிஷத்திற் பேசுகிறது (மூன்றும்) பிரிவாகிறது, அவர்களுடைய வுஸ்தாதுகளிலும், சீடர்களிலும் பேசுகிறது. (நான்காம்) பிரிவாகிறது, அவர்களை மற்றும் உலமாக்கள் புகழ்ந்ததிற் பேசுகிறது (ஐந்தாம்) பிரிவாகிறது, அவர்கள் கனு அத்திலும், ஸுகுதிலும், வறஇலும் பேசுகிறது (ஆறும்) பிரிவாகிறது. மேலான பதவியின்பேரி லரிவிக்கும் ஹிக்காயாத்துகளை பேசுகிறது, (ஏழாம்) பிரிவாகிறது, அந்நாளிலிருந்த ராஜாக்கள் குறுஆனை அல்லாகுத் தஆலாவுடைய படைப்பென்று சொல்லும்படி யவர்களை வம்பித்து அவ்விதஞ் சொல்லா திருந்த சங்கதி

யால் அவர்களனுபவித்த துன்பங்களைப் பேசுகிறது (எட்டாம்)பி
ரிவாகிறது, தாங்கள் மனுமிற்பெற்ற சுப சோபனமும், வபாத்தி
டத்தில் நடந்த சிறப்பிலும் பேசுகிறதாக விருக்கும்.

## மூந்தின பிரிவாகிறது.

இமாம் அஹ்மதுபுனு முகம்மதிபுனி ஹன்பல் றலியல்லாகு
அன்குவுடைய பிரபந்தத்திலும், பிறந்ததிலும், வயதுடைய கணக்
கிலும். வபாத்துடைய திகதியிலும் பேசுகிறதா யிருக்கும்

சுபுகி றஹிமதுல்லா தபக்காத்துல் புக்ககா வென்கிற கித்தா
பிலும், ஜமாலுத்தீன் றஹிமகுல்லா தகுதீபுல்க் கமாலென்கிற கித்
தாபிலும், இபுனு குல்லக்கான் தாரீகு என்கிற கித்தாபிலும் பேசி
வருகிறார்கள், ஹன்பலீ றலியல்லாகு அன்கு பகுதாதில் ஹிஜுறத்
து ஒருநூற்றறுபத்துநாலாம் வருடம்பிறந்து. அவ்விடத்திற்றானே
யிருந்து வளர்ந்து, எழுபத்தேழு வயதில் இருநூற்று நாற்பத்தோ
ராம்வருடம் றபீஉல்அவ்வல் மாதம் பனிரண்டாம் இரவு வெள்ளிக்
கிழமை ராத்திரி வபாத்தாகி (பாபுஹறுபின்) என்கிற கபுறஸ்தா
னில் அடக்கப்பட்டுப், பாரதூரயான வோர் (குப்பாவும்) கட்டப்
பட்டு, அதில் அவர்களை பெந்தக்காலமும் ஸியாறத்துச் செய்யப்
பட்டுக் கொண்டே யிருக்கிறது.

முகம்மதுபுனுல் அப்பாசின் னஹ்விய்பிறஹிமகுல்லா தர்மு
டைய தகப்பனுரைத் தொட்டும் பேசிவருகிறார், நான் இமாம் றலி
யல்லாகு அன்குவைமுகவஜீஹமான தன்டியொத்தஆண்பிள்ளையாக
வும், தாடிநரையைமருதோன்றிகொண்டுசாயம் காச்சினவர்களாக
வும், பருவெட்டான வெள்ளை யுடுமான மணைந்தவர்க ளாகவும், த
லைப்பாகை கட்டிக் கய்லி யணைந்தவர்களாகவும் கண்டேனென்
றும் அபூஜஃபரில் கஃபரிய்யி யுடைய ரிவாயத்தில் நல்ல செவந்த
நிறமானவர்களாகவும் கொஞ்சம் உயர்ந்தவர்களாகவும் இருந்
தார்களென்றுஞ் சொல்லப்படுகிறது.

இபுனுகுல்லக்கான் தாரீகு என்கிற கித்தாபிற் சொல்லுகி
றார் அவர்களுக்கு ஆண்பிள்ளை மக்கள் இரண்டு பேருண்டும் ஒரு
வர்பேர் சாலிஹு றஹிமகுல்லா மற்றவர்பேர் அப்துல்லாஹி றஹி
மகுல்லா இவர்களைக் கொண்டுதான் சைக்கினைப் போராய் இமாமை



அபூஅப்தில்லா வென்று சொல்லப்படுகிறது அவர்க ளிருவரும்
அல்லாமத்தா யிருந்தார்கள், சாலிஹு என்கிறவர்கள் ஹிஜ்றத்து
இருநூற்று மூன்றும் வருடம் பிறந்து, இசிபகான் என்கிற வூரில்
இவர்களைக் காலியாகக் கற்பிக்கப்பட்டு, இருநூற்றி அறுபத்தா
றும் வருடம் றமலான் மாதம் வபாத்தாகினுர்கள், அப்துல்லாகி
யென்கிற குமாரர் ஹிஜுறத்து இருநூற்றுத் தொண்ணூறும் வருடம்
வரையும் இருந்து எழுபத்தேழுவயதில் ஜமாதுல் அவ்வல் மாதம்
எட்டில் ஞாயிற்றுக் கிழமை வபாத்தாகினுர்கள் அவர்களுக்குச்
சைக்கினைப் பேராகிறது அபூஅப்திர் றஹ்மான் றஹிமகுல்லா
வென்று சொல்லப்படும்.

சாலிஹுபுனு அஹ்மதபுனி ஹன்பல் றலியல்லாகு அன்கு
சொல்லுகிறார்கள் என் தகப்பனுராகிய இமாம்றலியல்லாகு அன்கு
குழந்தையாயிருக்கும்போது அவர்கள் தகப்பனுராகிய முகம்மது
புனு ஹன்பல் றஹிமகுல்லா அவர்களுக்கு வயது முப்பது நடந்த
போது வபாத்தாகிப் போனுர்கள் (றஹ்மத்துல்லாகி அலைகி)
பின்ன ரவர்கள் தாயாரிடமிருந்து வளர்ந்தார்கள் இன்னும் பேசி
வரப்பட்டிருக்கிறது இமாம் றலியல்லாகு அன்குவுக்கு ஒருபெண்
பிள்ளைப் பிள்ளையுண்டும் அதின் இபாதத்தும் தக்குவாவும் பத்தி
னித்தனமு மிகுந்து பிரசித்தமாக பிஷ்றுல் ஹாபீ றலியல்லாகு
அன்குவுடைய சகோதரியான பெண்பிள்ளை வலிய்யத்துல்லா
வைக் கொண்டு மொப்புச் சொல்லப்பட்டவர்களா யிருந்தார்க
ளென்று றஹிமகுல்லாகு.

## இரண்டாம் பிரிவாகிறது.

இமாம் றலியல்லாகு அன்குவுடைய வங்கிஷத்திற் பேசுகிற
தா யிருக்கும்.

ஜமாலுத்தீன் றஹிமகுல்லா தகுதீபுல் கமால் என்கிற கித்தா
பில் அஹ்மதுஎன்கிற பேர்நாமம் யாரார் தங்கி யிருப்பார்களோ
அவர்வளுடைய தலை முறைகளை விவரிப்பதில் ஹன்பலீ இமாமின்
தலைமுறையைச் சொல்லுகிறார் அவர்களாகிறது அபூ அப்தில்லா
வென்று குன்யத்துப் பேர்சொல்லப்படும் மறுவசியென்கிற வூரில்
ஷைபானிக் கிளையிலுள்ள் அசதுடைய மகன் கிலால் அவருடைய
மகன் ஹன்பல், அவருடையமகன் முகம்மது அவருடையமகன

இமாம் அஹ்மதுறலியல்லாகுஅன்குஎன்றும் இதுதான் திறமான சொல்லென்றும், பாஸின் கிளையிலுள்ளவர்களென்கிறது பிலக்கேடான சொல்லென்றும் சொல்லுகிறார், மறுவசி என்கிற வூரில் அவர்கள் தாயார் ஹம்லாகி பகுதாதில்வந்து பெற்றார்களென்றும் குல்லக்கானுடைய தாரீகு என்ற கித்தாபில்வருகிறது.

அப்பாசுபுனு முகம்மதுத் தூரிய்யி றஹிமகுல்லா சொல்லுகிறார்கள், இமாம் அஹ்மதாகிறவர்கள் அறபுக்கிளையில் பகுதுபுனு ஷைபானிக் கிளையிலுள்ளவரென்று சொல்லுகிறார், யஹ்யபுனு முஈன் றஹிமகுல்லா சொல்லிகிறார்கள் நான் அஹமதுபுனு ஹன்பலைக்காண நலவான மனுடரைக் காணவில்லையென்றும், தாங்கள் அறபுக் கிளையிலாயிருப்பதை யொருநாளுஞ் சொல்லவுமில்லை, யதைப்பற்றிப் பெரியதனம் பேசவுமில்லையென்று ஸவுரிய்யு றஹிமகுல்லா சொல்லுகிறார் இமாம் றலியல்லாகு அன்கு தங்கள்வீட்டுச்செலவுக்காய்ச் சொற்பமுதலை யென்னிடந்தந்து வைத்து அன்றன்றுடி வாஙகிக் கொண்டுபோக வருவார்கள் அப்போது நான் சொன்னேன் அபாஅப்தில்லாவே நீங்கள் அறபி வங்கிஷமென்று கேள்வியாயிருக்கிறேனென்று உடனே சொன்னார்கள் அபாறஃமானே நாங்கள் மிஸ்கீன்களான கவுமுகளென்று சொல்லிப் பேச்சைத்தட்டிவிட்டு ஒன்றுஞ்சொல்லாமற் போய்விட்டார்களென்று.

## மூன்றாம் பிரிவாகிறது

இமாம் ஹன்பலீ றலியல்லாகு அன்குவுடைய உஸ்தாதுமார்களையும் ஷீடர்களையும் விவரிப்பதாயிருக்கும்.

தகுதீபுல் கமால் என்கிற கித்தாபிற் சொல்லுகிறார்கள் இமாம் றலியல்லாகு அன்கு இல்மைப்படிக்க வேண்டிக் கூபா பசறா மக்கா, மதீனா யமன் ஷாம் ஜசீறா இந்தச் சீமைகளுக்கெல்லாம் சபர்போய் இபுறாகீம்புன காலிதிஸ்ஸன் ஆனிய்யி றஹிமகுல்லா இபுறாகிம்புனசஃதிஸ் ஸுகுரிய்யி றஹிமகுல்லா இபுறாகீம்புன சமாஉஸ் ஸமர் கந்திய்யி றஹிமகுல்லா தாவுதபுன மகுறான் றஹிமகுல்லா ஹைஹானபுனசஈதிஷ் ஷாமிய்யி சபுயானபுன உயைனா றஹிமகுல்லா இன்னும் அநேகம் உஸ்தாதுமார்களிடத்திலு மோதியிருக்கிறார்கள்.



யாபிஇய்யி றஹிமகுல்லா தபக்காத்துல் புக்ககாவென்கிற கித்தாபிற் சொல்லுகிறார்கள் இமாம் றலியல்லாகு அன்கு அனேகம் பேர்களிடம் ஓதியிருந்ததிற் சன்ஆஉல் யமனில் ஹாபிது அப்திர்றஸ்ஸாக்கு றஹிமகுல்தாவிடத்திலும் அதனில் இபுறாஹீமுல் ஹிக்கம் றமஹிதுலாவிடத்திலும், ஓதியிருக்கிறார்கள் சுபுக்கீ றஹிமகுல்லா தபக்காத்துல் புக்ககா வென்கிற கித்தாபிலும், இபுனு குல்லக்கான் றஹிமகுல்லா தாரீகு என்கிற கித்தாபிலும் பேசி வருகிறார்கள், இமாம் அஹ்மது றலியல்லாகு அன்கு ஆகிறவர்கள், இமாம் ஷாபிஇய்யி றலியல்லாகு அன்குவுடைய தில்மீதுகளில் ரொம்பவும்சேர்ந்த மானவர்களாயும், உஸ்தாதை மிகுதம் சங்கையாக்கி, வலுப்பப்படுத்திவைக்கிறவர்களாயும், அவர்களைச்சந்தித்த, பிறகு இமாம் ஷாபிஇய்பி றலியல்லாகு அன்கு மிசுறுக்குப்போகும்வரையும் அவர்களைப்பிரியாதவர்களாயுமிருந்தார்கள், இமாம் ஷாபிஇய்யி றலியல்லாகு அன்கு மிசுறுக்கு வந்தபிறகு சொன்னார்கள் பகுதாதை விட்டும் நான் பிரியும்போது, அவ்விடத்தில் அஹ்மதுபுனு ஹன்பல் றலியல்லாகு அன்குவைக் காணத் தக்குவாவுடையவரையும். பிக்குதையுடையவரையும் விட்டுப்போட்டு நான் வரவில்லையென்று.

இன்னும் இமாம் சுபுகிய்யும், இபுனு குல்லக்கானும் தபக்காத்திலும், தாரீகிலும் சொல்லுகிறாகள், இமாம் ஹன்பலீ றலியல்லாகு அன்குஇடம் ஓதியிருக்குற வுலமாக்கள் அநேகம் பேர்களுண்டாயிருப்பதில், எல்லா ஒவ்வொருவருடைய சிறப்பும். இல்முமட்டிடக் கூடாததாயிருப்பதில் ஹதீதுடைய இல்மில் உஸ்தாதாகவும், இமாமாகவும் இருக்கும் முகம்மதுபுனு இஸ்மாஈலல் புகாரிய்யி றலியல்லாகு அன்குவும், முஸ்லிமுபுனு ஹஜ்ஜாஜின்னை சாபூரிய்யி றலியல்லாகு அன்குவும், அபூதாவுது றலியல்லாகு அன்குவும், இன்னும் அவர்களுடைய குமாரர் அப்துல்லாகிபுனு அஹமது றலியல்லாகு அன்குவும் ஆக, இந்த நாலுபேரும், மிகுந்து கடப்பானவர்கள், ஹன்பலுபுனு இஸ்ஹாக்கு றஹிமகுல்லா சொல்லுகிறார்கள், நான் ஹன்பலீ இமாம் றலியல்லாகு அன்கு சொல்லக்கேட்டேன், நான் பதினாறு வயது முதல் ஹதீதுடைய இல்மைப் படிக்கத் தொடுத்தேனென்று.

## நான்காம் பிரிவாகிறது.

இமாம் ஹன்பலீ றலியல்லாகு அன்குவை மற்றும் உலமாக்கள் துதித்ததிலும், புகழ்ந்ததிலும் பேசுகிறதா யிருக்கும்.

அப்துல்லா கிபுனுல் முபாறக்கு றஹிமகுல்லா சொல்லுகிறார்கள், நான் இஸ்மாஈலுபுனு அலிய்யாவிட மிருக்கும்போது, ஒருமனுடன் சிரிப்பு வருத்துகிற பழக்கமொன்று பேசினேன், அதனால் எங்களிற் சிலர் சிரித்துவிட்டார்கள், அந்த மஜலிசில் இமாம் ஹன்பலீ றலியல்லாகு அன்குவு மிருக்குகிறார்கள், உடனே அந்த இஸ்மாஈலுபுனு அலிய்யா றஹிமகுல்லா மிகுந்த கோபமாகி யென்னிடம் இமாம் அஹ்மது றலியல்லாகு அன்கு இருக்கும்படியாக அவருக்குக் கொஞ்சமாகிலும் அதபு செய்யாமற் சிறிக்கிறீர்களே யென்றார்களென்று.

இன்னுஞ், சொல்லுகிறார்கள், இமாம் றலியல்லாகு அன்குவுடன் ஹதீது ஓதுகிறவோர் கூட்டாளி சொல்லுகிறார் நான் இஸ்மாஈலுபுனு அலிய்யாவிட மிருக்கும்போது இமாம் அஹ்மது றலியல்லாகு அன்கு வந்து புகுந்தார்கள் அவர்களைக்கண்டவுடன் அவ்வீட்டிலுள்ள சகலர்களும் அவர்களைச் சங்கித்து இவ்விடம் இவ்விடம் இருங்களென்று உஸ்தாதும் சங்கித்தார்கள் அந்நேரம் இமாமுக்கு வயது முப்பதுக்குள்ளே யிருக்கும் இபுறாஹீமுபுனு ஷிமாசின் றஹிமகுலலா சொல்லுகிறார்கள் வக்கீஉபுனுல் ஜர்றாஹு றஹிமகுல்லா ஹபுசுபுனு அப்பாசு றஹிமகுல்லா இந்த இருவரும் சொல்லக்கேட்டேன் இந்த அஹ்மதுப்னு ஹன்பலைப்போலேகூபாவுக்கு முன்னேறுக்கி வந்த வுலமாவி லொருவரையும் காணவில்லை யென்று.

ஹாபிலு அபூனுஈம் சொல்லுகிறார், இமாம் றலியல்லாஹு அன்ஹு பசறாவுக்கு வந்து அவர்கள் கீர்த்திப்பிரசித்த மானபோது அவ்விடத்தி லிருந்த சுலைமானபுன சாது என்கிறவர் கொஞ்சம் ஹசதாக எண்ணி யஹ்யபுனு சஈதில் கத்தான் றஹிமஹுல்லா விடம் சிலசமாசாரஞ் சொன்னார், உடனே யவர்கள் அவரைப்பார்த்து உமக்கென்ன கேடுநீர் இந்தவும்மத்துக்குக்கண்ணாயிருக்கிற வுலமாக்களுக்கு அரசா யிருக்கிறவரைப் புறம்பேசிப் பாவத்



தைச் சுமக்கிறீர், என்னிடத்தில் வந்தபேர்களில் அஹ்மதுபுனு ஹன்பலைப்போ லொருவரையும் நான் காணவில்லை யென்றார்கள், இமாம் றலியல்லாஹு அன்ஹுவுடையகுமாரர் அப்துல்லா சொல்லுகிறார்கள், என் தகப்பனாரவர்கள் யஹ்யபுன சஈதில் கத்தான் றஹிமஹுல்லா விடம் தரிபாடாக ஓதியிருந்தார்கள் அப்போதையில் (வாசித்து) என்கிற ஊருக்குப் புறப்பட்டுப் போனார்கள், அவ்விடத்தில் யசீதபுனு, ஹாறான் றஹிமஹுல்லா விடம்ஓதவேண்டியென்கிற சமாசார்த்தைக் குறித்த யஹ்யா றஹிமஹுல்லாவிடஞ் சொல்லவும், அவர்கள் சொன்னார்கள், இந்தஹன்பலீ, அந்தஇபுனு ஹாறானைக் காண இல்மில் மிகைத்தவராக விருக்க அவரிடம் என்னசெய்யப் போறாரென்று சொன்னார்கள் அஹ்மதுபுனு சினான் சொன்னார், நான் இபுனு ஹாறான் றஹிமஹுல்லாவை ஹன்பலீ இமாமுக்குச் செய்கிற மரியாதைபோல் ஒருவருக்கு மரியாதை செய்யக் காணவில்லை யென்றும, இமாம்றலியல்லாஹு அன்ஹு வியாதியாயிருந்தபோது வாகனத்தி லேறிப்போய்மினவிவந்தார்களென்றும்.

முகம்மதுபுனு யூனுசு சொல்லுகிறார், அபாஆசிம்றஹிமஹுல்லா பிக்குகைப் புகழ்ச்சியாய்ப்பேசி வந்ததில்பகுதாதில்அஹ்மதுபுனு ஹன்பலைத் தவிர பிக்குகாளியாருண்டு மென்றார்கள் இஸ்ஹாக்குபுனு ருகவைகி சொல்லுகிறார்கள் யஹ்யா றஹிமஹுல்லாவாகிறவர்கள் இமாமா யிருக்குமென்று ஹசனுபுனுர் றபீஉ சொல்லுகிறார் அஹ்மதுபுனு ஹன்பல் றலியல்லாஹு அன்ஹுவுககுக் கோலத்திலும், நடையிலும், அப்துல்லாகிபுனுல் முபாறக்கு றலியல்லாஹு அன்கு என்கிறவரைக் கொண்டேயொழிய வொப்புச்சொல்ல மாட்டோமென்று.

குத்தைபா றஹிமகுல்லா சொன்னார்கள், சுபியானுத் தவ்ரிய்யி றலியல்லாகு அன்கு உண்டாக வில்லையாகில் (வறஉ) மவுத்தாகிப்போகும் ஹன்பலீ இமாம் உண்டாக வில்லையாகில் மார்க்கத்திற்பலபல (பிதுஅத்தையும்) மோசமான சொற்களையும் உண்டாக்கப்பட்டுப் போகுமென்று, இபுனு சிபவைகி சொலுகிறார். நான் குத்தைபா றஹிமகுல்லா விடம் கேட்டேன், அஹமதுபுனு ஹன்பலைத்தாபிஈன் களி லுள்ள சுபியானுத தவ்ரிய்யி றலியல்லாகு

அன்று வுக்குச்சரியாகப் பேசுகிறீர்களே யென்று. உடனே சொன்னார்கள் தாபிஈனிலும், பெரியோர்களா யிருப்பவரிலுள்ளவர்களா யிருக்குமென்று, அஹ்மதுபுனு சல்மா றஹிமஹுல்லா சொல்லுகிறார், நான் குத்தைபா றலியல்லாஹு அன்குசொல்லக் கேட்டேன், அஹ்மதுபுனு ஹன்பலாகிறது துன்யா அடக்கலுக்கும் இமாமாயிருக்குமென்று.

அப்பாசுபுனு அப்தில் அலீமில் அன்பரிய்யி சொல்லுகிறார் நான் மூன்று பேரை எனக் கத்தாட்சியாக்கிக்கொண்டேன், அவர்களைக் கொண்டு அல்லாவிடத்தில் உதவி பெற்றுக் கொள்ளும்படியாய். அவர்கள் யாரெனில். அஹ்மதுபுனு ஹன்பல், 1, ஸய்தபுனுல் முபாறக், 2, சதுகத்துபுனு பலுலு, 3, இவர்களா யிருக்கும் முகம்மதுபுனுல் ஹுசைனில் அன்மாத்திய்யி சொல்லுகிறார்கள், யஹ்யபுனு முஈன் றஹிமஹுல்லா வுடைய மஜ்லிசில் இருந்தோம் அவ்விடத்தில் அபூஹைதமா றஹிமஹுல்லாவும், இன்னும் உலமாக்களிற் பாரதூரமானவர்களும் ஒரு கூட்டமாயிருக்கும்போது, ஹன்பலீ இமாமுடைய புகழ்ச்சியை மிகவும் அல்லிபமாய்ப் பேசினார்கள், அவ்விடத்தில் ஒருமனுடன் அதைக்கொஞ்சம் பொருந்தாததுபோலே யொரு செய்திசொன்னான், உடனே யஹ்யபுனு முஈன் அவனைப்பார்த்துச் சொன்னார்கள். நம்முடைய மஜ்லிசுக்குமக்கு வரப் பிறிய மிருந்தால் இவ்விதம் பொருத்தக்கேடான பேச்சுகள் பேசவேண்டா மென்றார்கள், அந்த இமாம் அஹ்மதுடைய புகழ்ச்சியை நிரப்பமாகப் பேசிவர நம்மாலே முடியாதென்றும் சொன்னார்கள்.

யஹ்யபுனு முஈன் சொல்லுகிறார்கள், அஹ்மதுபுனு ஹன்பலைப்போ லொருவ ருண்டாகார்களென்று மனுடார்தரவு செய்கிறார்கள், அல்லாவினுனை யவர் தராணிபெற்ற (வறஉ-இபாதத்தின்) பேரில்நாம்தராணிபெறமாட்டோமென்று. அபூபக்ரில்முஹானிய்யி சொன்னார்கள், நான இமாம் அபூதவூது றஹிமஹுல்லா விடமிருந்தேன். அவர்களிடம் ஒரு (மஸ் அலா)வந்தது, அதற்கு ஜவாபு சொன்னதில் நம்முடைய வைஷகு, நம்முடைய இமாம் அஹ்மதுபுனு ஹன்பல் சொன்னார்களென்றும் கனமாகச் சொன்னார்கள் யஹ்யபுனு ஷாமிய்யி சொல்லுகிறார்கள் எல்லா (கைறையும்)



ஒருமனுடன் சேர்த்துக் கொண்டதாய்க் காணப்படுவதில்லை இமாம் அஹ்மதுபுனு ஹன்பலைப்போ லென்று.

இன்னும், அவர்தான்சொல்லுகிறார். நான் சுபுயானபுனு உயைனு - வக்கீஉ - அப்துர்றஸ்ஸாக்கு - தக்கியத்துபுனுல்வலீது - சம்றத்துபுனு றபீஅத்து இவர்களையும், இன்னும் அனேகம் உலமாக்களையும் கண்டேன், அவர்களி லொருவரையாவது இந்த அஹ்மதுபுனு ஹன்பலுடைய (பிக்குகிலும்வறகிலும்ஸீதுகிலும்) நான் காணவில்லையென்று ஹாரிதுபுனு அப்பாசு றஹிமஹுல்லா சொல்லுகிறார்கள், நான் அபூமுஸ்ஹிறு றஹிமஹுல்லா இடம் கேட்டேன், இந்தவும்மத்துக்கு அவர்கள் காரியத்தில்(தீனைக்) காப்பாத்துகிறவர் யாரையும் கண்டாகளோவென்றேன், உடனே சொன்னார்கள், நான் அவ்விதமான வொருமனுடரை அறியேன், இந்த (மஷ்ரிக்குத்) திசையென்னும் காடுவானில் ஒருவாலிபக்காரரையேயொழிய, அதாவது, ஹன்பலிய்யி இமாமே யொழியவென்று.

ஷாறைக்குபுனு அப்தில்லா சொன்னார்கள், அந்தந்த ஸமானிலுள்ளவர்களுக்கு அவர்களில் ஒரு ஆலிமை அல்லாகுத்தஆலா ஹுஜ்ஜத்தாக்குவான். புலைலுபுனி இயாலாகிறவர், அவர்ஸமானிலுள்ளவர்களுக்கு ஹுஜ்ஜத்தாகத்தா னிருக்குமென்று சொல்லிக்கொண்டிருக்கும்போது, அந்த(ஹைதம்) றலியல்லாஹு அன்குஉடைய மஜ்லிசில் நின்றும் ஒரு வாலிபக்காரனார் எழும்பி வெளிக்கிட்டார், உடனே யவர்கள் சொன்னார். இந்த வாலிபக்காரராகிய அஹ்மதுபுனு ஹன்பல் அவருடைய ஸமானுடையவர்களுக்கு ஹுஜ்ஜத்தா யிருக்குமென்று

அபூபக்ரில் அதுறம், சொல்லுகிறார். நான் ஒரு நாள் அபூஉபைதிடம இருக்கும்போது, ஒரு மஸ்அலாவைப் பேசப்பட்டது, அப்போது, அந்த இடத்தி லிருப்பவரி லொருவர் இந்தமனுடர் யாரென்று ஹன்பலிய்யி இமாமைச் சைக்கினையாக்கி கேட்டார், அப்போது, அபூஉபைது றலியல்லாஹு அன்கு சொன்னார்கள் இவருக்கு - மஷ்ரிக்கிலேயும் மகுரிபிலேயும் சரிசமானமிடையாதென்று. அதுகேட்டு; அபூஉபைது - உண்மைசொன்னாரென்று சொன்னார்கள், பிஷ்றுபுனுல் ஹாரிது றலியல்லாஹு அன்கு

இடத்தில், இமாம் அஹ்மது றலியல்லாஹு அன்குடைய ஹாலை அவர்கள் சிறைச்சாலையால் வெளிக்கிட்ட பிறகு கேட்கப் பட்டதிற் சொன்னார்கள், அஹ்மதாகிறவர் முன்பொன்னாக விருந்தார், இப்போது புடம்போட்ட தங்கம்போ லாகிவிட்டார்களென்று.

ஹஜ்ஜா ஜுபுனுஸ் ஷெஇறு சொன்னார், உடலிற் புகுந்த வுயிரில் இந்த ஹன்பலியைப்போல நான் ஏற்றமானவரைக் காணவில்லையென்று, அஹ்மதுபுனு சாதித்தா றமிய்யி சொல்லுகிறார்கள், கறுத்த தல்மயி நுடையவரில் ஹதீதையும், பிக்குஹையு மிருந்து பாடமாக்கியவரில், அஹ்மதுபுனு ஹன்பலைப்போற்காணவில்லையென்று (அபூஸறு அக்தாறு சிய்யி) சொல்லுகிறார்கள். அஹ்மது புனு ஹன்பல றலியல்லாஹு அன்கு பத்துலட்சம ஹதீது பாடமாக்கி யிருந்தார்களென்றும் நான் அவர்களுடனிருந்து அந்த ஹதீதுகளைப் பேசியிருந்து அதற்குப்பிரிவுகள் போடுவதை யென்னிபெடுத்தேனென்று. இபுநு அபீஹாத்தம், தம தகப்பனார் சொல்லக் கேட்டதாய்ச்சொல்லுகிறார்கள், அஃதாவது, மனுடரே நீங்கள் அஹ்மதுபுனு ஹன்பல் றலியல்லாஹு அன்குவையுவந்த மனுடனைக் கண்டீர்களேயாகில், அவனை யார்க்கமுடையவனென்று அறிந்து கொள்ளுங்களென்று,

அஹ்மதுபுனு இபுறாஹீம் மக்தாறமிய்யி சொன்னார்கள். யாராகிலுமொருவன் இமாம் அஹ்மதுபுனு ஹன்பலைக் கெடுதி கொண்டு சொல்லக் கேட்டீர்களேயாகில் அவன் இஸ்லாத்தின்பேரில் இருக்கிறானென்பதைச் சந்தாபமாய் எண்ணப்படுமென்று (நூஹுபுனு ஹபீபில் கௌசிய்யி) சொல்லுகிறார்கள நான் ஹன்பலி இமாமை நூற்றுத் தொண்ணூற் றெட்டாம் வருடம் மக்கத்தின் மஸ்ஜிதில் கைபென்ற பள்ளியில் மனாறு விளக்கிற் சாய்ந்தவர்களாய் மனுடர்களுக்கு பிக்குஹையும ஹதீதையும் ஓதிக் கொடுக்கவும் பதுவாக்கள் செய்யும்படியாயும் கண்டேனென்று.

அப்துல்லாகிபுனு அஹ்மதுபுனு ஹன்பல் றலியல்லாகு அன்கு சொல்லுகிறார்கள், அபூ ஆசிம் றஹிமகுல்லாவுடைய மஜ்லிசில் ஹதீதுடைய இல்மு ஓதுகிறவர்கள் கூடி இருந்தார்கள், அப்போது அவர்களைப் பார்த்து நீங்கள் பிக்குஹைப் படிக்கிறீர்களில்லையே யென்று. அவர்களை அபூஆசிம் பழித்தார்கள், அப்போதவர்கள்



சொன்னார்கள், எங்களில் ஒரு பிக்குகாரி இருக்கிறார், அவரிப்போது வருவாரென்று சொல்லிக்கொண்டிருக்கும்போது, இமாம் வந்துவிட்டார்கள். உடனே அவர்களுக்குச் சகலரும், அபூஆசிம் றலியல்லாகு அன்குவும் சங்கைசெய்து வுபகார வைத்து மூன்று மஸ்அலாக் கேட்டார்கள். அதற்கவர்கள் மூன்று மஸ்அலாவுக்கும் யாதொரு தடை முடையின்றியே ஜவாபுசொன்னார்கள், அதைப் பார்த்த அபூஆசிம் சொன்னார்கள், இவர் இல்மில் விரைவுதல்ன ஜவாபு கொடுக்கத் தகுந்தவர்கள், கரைக் குதிரையல்லக், கடற்குதிரையென்றும், இல்மென்னுங் கடலுக்கு வையாளி போடுகிறவர்களென்றும் புகழ்ச்சி செய்தார்கள்.

(அபூஇஸ்ஹாக்குல் பைறாசா பாதிய்யி) தபக்காததுல் புக்கஹா வென்கிற கித்தாப்பிற் சொல்லுகிறார்கள் (இமாம் சுபியானுத்தௌரிய்யி) இமாம் (அவசாக) இமாம் லைதுபுனுசஃது) இமாம் (மாலிக்) இவர்களுடைய ஜமானில், ஹன்பலி றலியல்லாகுஅன்கு இருந்தார்களேயானால், அவர்களெல்லோர்களிலும் இவர்களை முன்னிலையாக்கப் படுமென்று (ஷெய்கு அத்தாறு) றலியல்லாகு அன்கு. ததிக்கிறத்துல் அவுலியா வென்குகிற கித்தாபிற் சொல்லுகிறார்கள், இமாம் (ஹன்பலீ)யாகிறவர்கள் சுன்னத்து ஜமாஅத் தானவர்களுக்கெல்லாம் இமாமாகவும், ஹதீதுடையவர் களுக்கு ஷெய்காகவும், இருந்ததுடன் (வறஇலும்) சுகுதிலும், தக்குவாவிலும், ரியாலாத்திலும் நிகரில்லாதவர்களாக யிருந்தார்களென்றும்.

இன்னும், பருசத்தெகன்னும், முகக்குறியில் துஆக் கபூலாகிற லெட்சணமும், கருமத்துடைய அடையாளத்தையு முடையவர்களா யிருந்தார்கள், இன்னு முசப்பிஹத்தென்கிற அல்லாவுக்கு ஒப்புச்சொல்லிக் கெட்டுப்போன கூட்டக்காரருடைய சொற்களை விட்டும் நீங்கப்பட்டவர்களாயும், நீக்கிவைக்கிறவர்களாயு மிருந்தார்கள்.

ஒருபோது தங்களுடைய மகனார் (ஆசும்) அலைகிஸ்ஸலாத்தை அல்லாகுத்தஆலா, தன்கையால் மண்குழைத்துப் படைத்தானென்று வரும் ஹதீதுபோற் கோத்ததிற், பழக்கம் பேசிய பொழுது சொன்னார்கள், மகனே, இப்பேர்ப்பெற்ற ஹதீதிற் கண்டிப்பான

வுறுப்பைக்கொண்டு சைக்கினையாயும், பேசாதையும், கையென்றும் காலென்றும், அறுஷென்றும், குறுசிய்யி என்னும் சொல்வதுக்கெல்லா முருது வேறையா யிருக்குமென்றார்கள்.

(அரசன் றஹிமகுல்லா சொல்லுகிறார்கள். இமாம் அஹ்மது றலியல்லாகு அன்கு யிருந்து பாரதூரமான மசாயிருகளையெல்லாம் தெரிசித்து அவர்கள் பறக்கத்தை நிறைபூரணமாய்ப் பெற்றிருக்குகிறார்கள், தின்னூனில் மிஸ்ரிய்யி, பிஷறுல்ஹாபி மஃறூபுல் கறுகிய்பி, சரிய்யிஸ் ஸிக்திய்யி றஹிமகுல்லா போற கொத்தவர்களுடைய முஹப்பத்தைப் பெற்றிருக்குகிறார்களென்று.

## ஐந்தாம் பிரிவாகிறது.

இமாம் ஹன்பலீ றலியல்லாகு அன்குடைய சுகுதிலும், வறுமையிலும், மனுஷருடைய கையிலுள்ளதை வாழ்விலும், தாழ்விலும் வெறுத்திருந்ததிலும் பேசுகிறதாக விருக்கும்.

(தாரிகுபுனி குல்லக்கான்) என்னுங் கித்தாபில் வருகிறது சாலிஹறுபுனு அஹ்மதுபுனிஹன்பல் பேசிவருகிறார்கள், நானென் தகப்பனாரிடம் கேட்டேன். நீங்கள் எந்த வருடம் மக்கத்துக்குப் போனீர்களென்று, உடனே சொன்னார்கள், ஒருநூற்றெண்பத்தேழாம் வருடமென்றும் அந்த வருடத்திற்றான் (புலைலுபுனு இயாலு றலியல்லாஹு அன்கு) வபாத்தானார்களென்றும் இன்னும் ஐந்து ஹஜ்ஜுசெய்தேன் அதில் மூன்று ஹஜ்ஜு கால்நடையாகவும், இரண்டு ஹஜ்ஜு வாகனத்திலுமென்றும், இந்தஹஜ்ஜுகளில் ஒரு ஹஜ்ஜுக்கு முப்பது திருகமட்டுந்தான் செலவுசெய்ய வேலுமாயிருந்து செலவுசெய்தேனென்றும்.

இன்னும், அவர்கள்தகப்பனார் சொன்னதாகச்சொல்லுகிறார்கள், நான் கூபாவுக்கு வந்தேன், என் வீட்டில் என் தலைக்குங் கீழாலே செங்கற் கட்டியைத் தலையணையாக்கி வைத்துத் தான் படுத்திருந்தேனென்றும், இன்னும் சொன்னார்கள் (ஜரீறுபுனு) அப்துல் ஹமீதனவில் உங்களுடைய கூட்டாளிமார்கள் பயணம் போகும் நேரம் என்கையில் முப்பது திருகம் உண்டாகி யிருந்தால் நானும் கூடப் போய்விடுவே னென்றார்கள், நான் புதுமையாக இந்தச்சொற்பமான முப்பது திருக மிருந்தாற் போதுமான



தாக விருந்ததோவென்று கேட்டேன் அதற்கவர்கள் மகனே நாம் ஹஜ்ஜு செய்ததில் முப்பது திருகத்திற் குள்ளாலேதான் எழுமைக்குத் தக்கது செலவுசெய்து கொள்வோமென்று சொன்னார்கள்.

இன்னும், சொல்லுகிறார்கள் என்னுடைய தகப்பனாராகிய இமாம் றலியல்லாஹு அன்கு இராஜா வுடைய பாளையத்திற் பதினாறுநாள், தரிபட் டிருந்து தின்னக் கால்மன் கோதும்புக் கூளேயல்லாமல்வேறில்லை என்றும், குடிக்க ஒரு மிடறு தண்ணீரேயல்லாமல் வேறில்லை. இராஜா வுடைய வில்லங்கத்தி லிருக்கும்போது மூன்றுநாளைக் கொருதடவை இரவையில் மேற்படி கூழைக்குடிப்பார்கள், ராஜாவிடமிருந்து வந்து ஆறு மாதத்திற்குப் பிறகுதான் சரீர முன்னிருந்த நிதானத்திற்கு வந்தது, மேற்சொன்ன ஒருமன் என்பது இந்த ஹிந்து ராச்சியத்தில் இரண்டு ருத்தல், ஒரு திருகம்மென்பது கால்ரூபாயக்கிக் கொஞ்சம் கூடுதலாயிருக்கும்.

இன்னும்(சாலிஹறுபுனு அஹ்மதிபுனி ஹன்பல்)றலியல்லாகு அன்கு சொல்லுகிறார்கள் எங்கள் தகப்பனார் இராஜாவால்கழன்று வரும்போது இரண்டு கண்ணுமுட்குழிந்து கடைக்குழிகள் உள்ளோடினதாக விருந்ததென்று, அப்துர்றஸ்ஸாக்கு, அஹ்மது புனு ஹன்பல் இவர்களும் எங்களிடம் வந்து, சற்றேஏறக் குறைய இரண்டுவருட மிருந்து போகும்போது நான்கொஞ்சம் தங்கக்காசுகள் கொண்டுபோய் அபா அப்துல்லாவே நீங்க ளிதைக் கபூல்ச் செய்து கொள்ளுங்களென்று சொன்னதற்குத் தங்களுக்கியாதொரு குறைவு மில்லையென்றும், அவைகள்வேண்டாமென்றுஞ் சொல்லிப்போட்டார்கள்.

முகம்மதுபுனிசஈதித் திருமதிய்யி றஹிமஹுல்லா சொன்னார்கள், குறுசான் ராச்சியத்தில்நின்று நம்முடைய தோழன் முன்னோக்கிவந்து என்னிடஞ் சொன்னார், அதாவது நான் கொஞ்சம் சரக்குவாங்கி விற்று அதன் லாபத்தை இமாம்அஹ்மது புனு ஹன்பலுக்குக் கொடுத்துப்போட வேணுமென்று நாடிச் சரக்குவாங்கி விற்றதில், லாபம் பதினாயிரம் வெள்ளிக்காசு கண்டது, அந்தப் பதினாயிரம் இதோஇருக்கிறது, கொண்டுபோய்

அவர்களிடம் கொடுமென்று தந்தார், அவ்விதம் நான் கொண்டுபோய் இன்னார் தெரியுமாவென்றேன். ஆம், தெரியுமென்றார்கள், இந்தப்பதினாயிரம வெள்ளிக்காசுடைய செய்தியைச்சொல்லவும், அல்லாகுத்தஆலா அவருக்குறஹ்மத்துச் செய்வாராகவுமென்று துஆச்செய்து காசை கபூல்ச்செய்யமாட்டேனென்று சொல்லித் திருப்பி விட்டார்கள்.

(இப்னுஇஸ்ஹாக்கபுனிமூசல் அன்ஸாரிய்யி) சொல்லுகிறார்கள், என்னிடத்தில் மஃமூன் ராஜா சில முதலைத் தந்து ஹதீதுடைய உலமாக்களுக்குக் கொடுக்க வேவினார், அதுபோற் கொடுத்தேன், இமாம் அஹ்மதுபுனு ஹன்பலைத்தவிர மற்றச் சகல உலமாக்களும் கபூல்ச் செய்து கொண்டார்கள் (இபுனு ஹம்மாதில் பரீதிய்யி) றஹிமஹுல்லா சொல்லுகிறார்கள், (ஹசனுபுனு அப்தில் அஸீஸ்) என்கிறவருக்கு மிசுறில்நின்றும் ஒரு அனந்திரப்பங்கில லெட்சம் தங்கக் காசு வந்ததில், இமாம் அஹ்மதுபுனு ஹன்பல் றலியல்லாஹு அன்ஹுவுக்குமூன்றுபைய்யி மூவாயிரம் தங்கக்காசு போட்டுக் கட்டிக்கொண்டுவந்து கொடுத்ததற்கவர்கள் அவைகளை வேண்டாமென்று சொல்லி விட்டார்கள், இஃது, ஹலாலான அனந்திரத்தில் நின்று முள்ளதென்று சொல்லியும் கபூல்ச் செய்யவில்லை,

இமாம் (கஸ்ஸூலிய்யி) றஹிமஹுல்லா இறயாவிற் சொல்லுகிறார்கள் (சரிய்யுஸ் ஸிக்திய்யி) றலியல்லாஹு அன்ஹு கொஞ்சம் ஹதியாவை அஹ்மதுபுனு ஹன்பல் றலியல்லாஹு அன்ஹுபேரில் அனுப்பினார்கள், அதைக் கபூல்ச்செய்யா திருந்தார்கள், அப்போது, சரிய்யுஸ் ஸிக்திய்யி றலியல்லாஹு அன்ஹு சொல்லியனுப்பினார்கள், வேண்டாமென்று தட்டுகிறத்தால் வரும் ஆபத்துவேணுமென்று எடுக்குறதிலுள்ள ஆபத்தைக்காண மிகவும் கடுமையாயிருக்குமென்று சொன்னார், உடனே இமாம் அஹ்மதுபுனு ஹன்பல் றலியல்லாஹு அன்ஹு மடக்கியும்சொல்லச் சொல்லி கல்லவிளப்பம் செய்துகொண்டு சொல்வார்கள், ஸிக்தியே, என்னிடம் ஒருமாதத்தின் சாப்பாட்டுக்கு இருப்பதால்லும், முஸ்தஹிக்கா யிருந்து அனுப்பினுவெடுத்துக் கொள்வேன், இன்ஷா அல்லா வென்றார்கள்.



(ஷைகுல் அக்தாறு) தத்கிறத்துல் அவுலியா வென்னுங்கித்தாபிற் சொல்லுகிறார்கள், இமாம் அஹ்மதுபுனு ஹன்பல் றலியல்லாஹு அன்ஹு பகுதாதிலே தான் முடியிருந்தார்கள், என்கிலும், பகுதாதின் உள்ளூரில் விளைவாகிற தானியத்தைத் தின்னமாட்டார்கள். இனனும், சொல்லிக் கொள்வார்கள், இந்தப் பூமி உதுமான் றலியல்லாஹு அன்ஹுவுக் குடையதாயிருந்து, அதைப் பிஸமிற் காரர்பேரில் வக்பாக்கினார்கள், ஆகையாலேதானென்பார்கள்.

இமாம், றலியல்லாஹு அன்ஹு, மவுசில் என்குற ஊருக்குப் பணமனுப்பி அவ்விடமிருந்து மாவை வருத்தி ரொட்டி சுட்டுத் தின்பார்களென்று. இன்னம், அந்தக்கித்தாபிற்றான் சொல்லுகிறார்கள், இமாம் றலியல்லாஹு அன்ஹுடைய மகனார் சாலிஹென்கிறவர் பகலெல்லாம் நோன்பாகவும், இரவெல்லாம் விழித்து வணங்குகிறவராகவும், இரவில் இரண்டு சாஅத்துக்கு அதிகம் உறங்காதவராகவுமிருந்தார். (இஸ்பஹானென்கிற) ஊரில், காஸீ வேலை பார்த்தார், அப்போதும் முந்தின வணக்கத்தை விடாதிருந்து அவர்வீட்டு முற்றவெளியில் ஒரு வீடு கட்டி அதற்குவாசல் கதவுமில்லை வையாமல் அதிலேயேயிருந்து இபாதத்துச் செய்துகொண்டிருந்தார், கதவுபோடாத சபபாகிறது, ஒரு ஹக்கும் கேட்கவேண்டிய ஹாஜத்துள்ளவர் வந்தால் தடைமுடையின்றியே ஹாஜத்தை நிறைவேற்றிக்கொண்டு போவதற்கல்லாமல் வேறில்லை,

அப்படி இருக்கும் காலம் ஒருநாளிமாம அஹ்மதுபுனு ஹன்பல் றலியல்லாஹு அன்ஹுவுடைய வீட்டுக்காரர் ரொட்டிசுட்டு இமாம றலியல்லாஹு அன்ஹுவுக்குக் கொண்டுவந்து பசியாற வைத்தார்கள், உடனே, இமாம் றலியல்லாஹு அன்ஹு அதிற் பார்வையை நன்றாகப் பார்த்து வீட்டுக்காரரிடம் கேட்டார்கள் ஏய், பெண்பிள்ளையே இந்த ரொட்டியைத் தின்ன என்மனமுந்தவில்லையே அதின் சபபென்னவென்றார்கள், உடனே, அந்த பீவியவர்கள் சொன்னார்கள், ரொட்டி சுட்டது நான்தான், எங்கிலும் அதின் மாவங்கது நமமுடைய மகனார் சாலிஹென்கிற பிள்ளையின் வீட்டிலிருந்து வந்ததென்றார்கள், சுப்ஹானல்லா உடனே.

சொன்னார்கள், மெய்தானவர் காலீ வேலை பார்க்கிறவராயிருப்பதாலேதான் அந்த ரிஸ்கு எனக்கு இறங்கவில்லையென்றுசொல்லிப். பின்பு ஒருவருடம் அந்தரொட்டியைத் தின்னாமல் வைத்திருந்து, பின்பு, சொன்னார்கள், வாயலில், சஆல் செய்யும் மிஸ்கீன் வந்தால் இந்த ரொட்டி இன்ன வள்ளிப்புடையதா யிருக்கிறதென்று, அதிலுள்ள ஐபைத் திறந்து சொல்லுங்கள் சம்மதித்துக் கொண்டால் ரொட்டியைக் கொடுங்க ளென்றார்கள்.

பின்பு, அன்றுமுதல் நாற்பது நாள் வரையிலும், அவர்கள் வீட்டுக்கு ஒரு மிஸ்கீனும் வரவில்லைப், பின்பு, இந்த ரொட்டி இவ்விதமாக விருக்கிறதே இதை யென்ன செய்வோமென்றதில், அதை திஜ்லாமென்கிற ஆற்றிலெறிந்து விடுங்க ளென்றார்கள் உடனே, அவ்விதம் எறிந்து விட்டார்கள். அந்த ரொட்டியை ஆற்றிலெறிந்த நாள்முதல் அந்த ஆற்றிற் பிடித்து வருமீன்களை அவர்கள் ஹயாத்திருக்குமளவும் தின்னாதிருந்து விட்டார்கள், ததுக்கிறதுல் அவுலியாவிற சொல்லுகிறார்கள், இன்னு மஹ்மதுபுனு ஹன்பல் றலியல்லாகு அன்கு சொல்லுகிறார்கள், இமாம் அஹ்மக்கத்தி லிருக்கும்போது (சுபியானுபுனு உயையனா) றலியல்லாகு அன்குளிடம் போய் வந்து ஹதீதுடைய இல்மை லோதிக்கொண்டிருப்பேன், ஒருநாள் உடுமான மில்லாததாற் போகாதிருந்தேன்; அவர்களென்னை யோராளனுப்பிக் கூப்பிட விட்டார்கள், வந்தமனுடன் என்னை லாயிக்கான வுடுமானமில்லாதவனாய்க் கண்டவுடன் தன்னுடைய வுடுமானத்தை எனக்கு இரவலாய்த் தருகிறதாய்த் தொந்தறிந்தார், நானொப்பவில்லை. என்கிலும், உஜ்றக்குக் காக எழுதப்பொருந்தி எழுதுகிறேன் அந்தக்கூலி வருமாகிற் பிடவை ஊசிநூல் வாங்கிக் காற் சட்டை. கைசட்டை தைத்துக் கொண்டு தான் உஸ்தாதிடம் போகவேணுமெனறார்கள்.

(ஆதாறுல்பிலாதி, வஅக்பாறுல் இபாதி) என்னுங் கித்தாபிற் வருகிறது. இமாம் அஹ்மதுபுனு ஹன்பல் றலியல்லாஹு அன்கு விடம் ஒரு போது வறவுடைய ஹக்குமில் ஒரு மஸ்அலாவைக் கேட்கப்பட்டது, அதற்காக அவர்கள் சொன்னார்கள், நான் வறஇற் பேசிவருகிறது எனக்கு ஹலாலல்ல, யேனென்றால், நான் பகுதாதிலே விளைகிற தானியந் தின்றிருப்பதாலென்று சொல்லிப் பின்பு, பிஷ்றுபுனுல் ஹாரிது ஹாலிருயிருந்தால், ஜவாபு சொல்



வார்களென்று சொன்னார்கள் ஏனென்றால், அவர்கள் பகுதாதிலும், அதைச்சார்ந்த அடுத்த தலங்களிலும் விளைவானதை ஒருக்காலும் தின்றதில்லையே, ஆனதாலேதான் சொல்லுகிறேனென்றார்கள்.

கஸ்ஸாலிய்யி றஹிமஹுல்லா சொல்லுகிறார்கள், பிஷ்றுபுனுல் ஹாரிது றலியல்லாஹு அன்கு சொன்னதாக. இமாம் அஹ்மதுபுனுஹன்பல் றலியல்லாஹு அன்கு வாகிறவர்கள், என்னைக் காண மூன்று பதவியில் உயர்ந்தவரென்று, அதேதானால், அவர் தனக்கும், தம்மல்லா தவருக்கும் ஹலாலான ரிஸ்கைத் தேடுவதாலேதானென்றும், இன்னும், இஹ்யாவென்னுங் கித்தாபிற்றான் சொல்லுகிறார்கள், ஒருவீட்டில் இரண்டு உடற்பிறந்தானுண்டாயிருந்ததில்ஒரு பிள்ளை மிகுந்த அழகாகவும், ஒருபிள்ளை பங்கறையாகவும் ஒத்தைக்கண் குருடாகவு மிருந்ததை இரண்டாலொன்றை நிக்காகு முடிக்க வேண்டியதா யிருக்கும் போது இமாம் றலியல்லாஹு அன்கு இருவரில் அக்கு லுள்ளவர்களாரென்று விசாரித்ததில், அந்த ஒத்தைக்கண்ணுள்ளதைததான் ரொம்ப அக்குலுள்ளதென்று சொல்லப்பட்டது, உடனே அதைத் தாணிக்காஹு செய்துகொண்டார்கள்.

கஸ்ஸாலிய்யி றஹிமஹுல்லாசொல்லுகிறார்கள், துன்யாவிற் சுகண்டியை நாடாதவர்களுடைய அதபும் ஆதத்தும் இவ்விதமாகத்தா ளிருக்குமென்றார்கள் ததுக்கிரத்துல் அவுலியாவென்னுங் கித்தாபில் வருகிறது இமாம் அஹ்மதுபுனு ஹன்பல் றலியல்லாகு அன்கு விடம் லாஹிறத்தாகிய ஹக்குகளைக் கேட்கப்பட்டால் ஜவாபு சொல்லுவார்கள் பாத்தினாகிய ஹக்குகளைக் கேட்கப்பட்டால் பிஷ்றுல் ஹாபீ றலியல்லாகு அன்குவிடம் கேட்டுக் கொள்ளச் சொல்வார்கள் இவ்விதமாக விருக்கிற நாட்களில் நின்றும் ஒரு நாளையத்தினம் இமாமிடம் இச்லாசென்கிறதென்னவென்று கேட்கப்பட்டது அப்போது சொன்னார்கள் அமலுக்கு ஆபத்தாயிருக்கும் கருமங்கள் எஃதுண்டோ அஃதடங்கலையும் விட்டும் மீட்சியாகிறதை நீ பெற்றுக் கொள்ளுகிறதுதானென்றார்கள் பின்னர் (தாக்குல்) என்கிறது என்னவென்று கேட்கப்பட்டது.

அப்போது சொன்னார்கள் (ரிஸாக்கு) உடையகாரியத்தில் அல்லாகுத் தஆலாவின் பேரில் ஊன்றுதலா யிருக்கிறது பின்பு

மஹப்பத் தென்கிறது ஏதென்று கேட்கப்பட்டது அப்போது சொன்னார்கள் அதை பிஷ்று றஹிமஹுல்லா விடம் கேட்டுக் கொள்ளுங்க ளென்று. அவர் ஹயாத்தா யிருக்கிற வரையிலும் நானுங்களுக்கு அதைத்தொட்டும் ஜவாபு சொல்லேனென்று சொல்லிப் போட்டார்கள்.

(ஸுகுது.) என்கிறது என்னவென்று கேட்கப் பட்டவுடன் சொன்னார்கள், அதில் (அவாம்முக்) குடைய ஸுகுதாகிறது ஹறாமானதினை விட்டு விடுகிறது (கவாஸ்ஸுக்குடைய) ஸுகுதாகிறது ஹலாலானதில் அதிகத்தைக் குறைக்கிறது ஆரிபீனுடைய ஸுகுதாகிறது ஹக்கை விட்டும் பாரக்காக்கும் காரியத்தை விடுகிறதென்று. கிஸானத்துல் பவா இதில் ஜலாலிய்யா வென்கிற கித்தாபில் இமாம் அஹ்மது றலியல்லாஹு அன்ஹுவைத் தொட்டும் வந்திருக்கிறது இமாம் சொல்லுகிறார்கள் நானொருபோது குளிக்கிறவிடத்திற் சில மனுடருடனிருந்தேன் அவர்கள் நிருவாணியாகத் தண்ணீரி லிறங்கிக் குளித்தார்கள் அப்போது நானவர்களைப் பார்த்து நபி சல்லல்லாஹு அலைஹிவ சல்லமுடைய ஹதீதை அதாவது அல்லாஹுத் தஆலாவைக்கொண்டும் ஒடுக்கத்து நாளைக்கொண்டும் ஈமான் கொண்டவனாக இருந்தானே யாகில் வெந்நீர்ப்புதையில் அதாவது குளிக்கிற தலத்தில் உடுத்தாடையில்லாமற் குளிக்கவேண்டா மென்று வருவதைச் சொல்லிக் காட்டி நானுடுமானத்தை யுரியாமற் குளித்தேன்.

பின்னர் அன்றிரவில் மனுமில் ஒருமனுடன் வந்து அஹ்மதே நல்மாராயம் பெற்றுக் கொள்ளும் அல்லாஹுத் தஆலா வும்முடைய பிழையைப் பொறுத்தான் நீர் மார்க்கத்தை யெடுத்து நடந்தபடியால் இன்னும் உம்மைச் சகலரும் துயரும் படியான இமாமாக்கினனென்றும் சொன்னார் உடனே நீராரென்று கேட்டேன் அவர் நான்தான் ஜிபுரீலென்றார் அலைஹிஸ்ஸலாம் றலியல்லாஹு அனில் இமாம்.

## ஆறும் பிரிவாகிறது

இமாம் ஹன்பலிய்யி றலியல்லாஹு அன்ஹுவுடையதகுதியின் வலுப்பத்திலும், காரியத்தின் வலுப்தத்திலும் பேசுகிறதாயிருக்கும்.



இபுனு குல்க்கான் தாரீகு என்கிற கித்தாபிற் பேசி வருகிறார் இமாம் ஹன்பலிய்யி றலியல்லாஹு அன்ஹுவுடைய மகனார் அப்துல்லாஹி றஹிமஹுல்லா சொன்னதாக அதாவது என் தகப்பனார், இமாம் அஹ்மது றலியல்லாஹு அன்ஹு (தறத்தூசு) என்கிற வூருக்குக் கால் நடையாகவே போனார்கள், ஐந்து (ஹஜ்ஜு) செய்ததில், மூன்று ஹஜ்ஜு கால் நடையாகவே நடந்து போய்ச் செய்தார்கள், இந்த வூர்களில் இன்ன கோணத்தில் இமாமைக் கண்டோமென்று யாருஞ் சொல்லிக் கொள்ளக் கூடாது, இந்த (சபர்) களில் ஜும்ஆவுக்குஹாலிறுகிறதைத் தவிர மனுடரை விட்டுத் தனிக்கிறதில் மிகுந்த ஆசாவென்னும் பொறுமையை யுடையவர்கள், இன்னுஞ் சொல்லுகிறார்கள், என்னுடைய தகப்பனார் றலியல்லாஹு அன்ஹு ஓரிரவும், பகலும், முந்நூறு (றக்அத்து) ஆதத்தாய்த் தொழுவார்கள், பின்னர், வயதாளியாய் எண்பது வயதுக் கடுக்க ஆகிற காலத்தில் நூற்றைம்பது (றக்அத்துத்) தொழுவார்கள், ஏழுநாளைக் கொருதரம் இரவுகாலத்தின் தொழுகையிலேயே ஒரு (கத்மு)தமா மாக்குவார்கள், பகலையில் ஓதுகிறதைத் தவிர (இஷாவைப்) பிந்தின இஷாவாகத் தொழுது பின்பு, சொற்பநேரம் உறங்கி விழித்து (சுபுஹு) வரையிலும் தொழுகையும், துஆவு மாகவே யிருப்பார்கள்.

இன்னும், அப்துல்லாஹி றஹிமஹுல்லா சொல்லுகிறார்கள், நாங்கள் மக்கத்தில் ஒருவீட்டிலிறங்கி யிருந்தோம், அதில், அபீபக்ரிபுனி சம்மாஇன் என்று சொல்லப்பட்ட மக்காவிலுள்ளவோர் ஷைகுண்டா யிருந்தார், அவர் சொன்னார், முன் அஹ்மதிப்னு ஹன்பல் றலியல்லாஹு அன்ஹு இவ்விடம் வந்து விடுதி தங்கிய போது நான் சிறுபிள்ளையாக விருந்தேன், அப்போது, என் தாயார் என்னை யவர்களுக்கு கிதுமத்துச் செய்து கொள்ளும்படி, அப்படியே செய்து அவர்கள் ஹதீதுடைய இல்மு ஓதப்போயிருந்தபோது. வீட்டில் இருந்த அவர்களுடுபிடவை சகலத்தையும் கள்ளன் கொண்டு போய் விட்டான், அதையறிந்து என் தாயார் போய் வியாரம் தீர்க்கவேண்டிப் பராபரித்ததில் யாதொரு கவனமும் வையாமல் உங்கள் பிள்ளை யோதுகிற பலகையை யெங்கே

யென்று இமாம் கேட்டார்கள், அப்போதென் தாயார் சொன்னார்கள், அதுபள்ளியி லிருக்கிறதென்று. பின்னர், யாதொன்று மவர்கள் கேட்கவில்லை.

ஹயாத்துல் ஹயவானென்கிற கித்தாபில் வருகிறது (மாவருன்னஹரில்) ஒரு மனுடனிட மூன்று ஹதீது கண்டாயிருக்கிறதென்கிற செய்தியை இமாம் றலியல்லாகு அன்கு அறிந்தவுடன் தங்கள் ஊரில் நின்று சபர் புறப்பட்டு அந்தமனுடனிடம் போய்ச் சேர்ந்து அவரைப் பார்க்கும்போது அவர்பெரிய மனுடனாகவும். நாய்க்கு வஜீபனங் கொடுத்துக்கொண் டிருக்கிறார் இமாம் றலியல்லாஹு அன்கு அவர்பேரில் சலாம் சொன்னார்கள் அவர் ஜவாபு சொல்லிப்போட்டு நாய்க்கு வஜீபனம் ஊட்டுகிறத்தின் பேரிலேதான் பராக்கா யிருக்கிறார் இமாமிடம் யாதும் பேசவில்லை அதனால் மனதிற் சடைவாயிருக்கும்போது அந்தவைகு தானே இமாமிடம் நீங்களென்னைச் சடைந்துகொள்ளவேண்டாம் ஏனென்றால் றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லத்தைத் தொட்டும், அபூ குறைறா றலியல்லாகு அன்கு அவரைத் தொட்டும் அஃறஜ் அவரைத்தொட்டும் அபுஸ்ஸனாது பேசிவந்து என்னிடம் வந்திருக்கிறது நாடிவந்தவனுட்டத்தை நிறைவேற்றிக் கொடுக்கவேணுமாயிருந்து நிறைவேற்றிக் கொடுக்கவில்லையாகில் அல்லாகுத் தஆலா அவனுடைய நாட்டத்தைக் கியமநாளில் முறித்துப் போடுவான், அவன் சொர்க்கத்திலும் புகுதானென்றிருப்பதில், இந்த நாய் நம்முடைய இந்த வூரிலுள்ள தல்ல என்கிலும் நம்மை நாடி வெகு தூரமிருந்து வருவதால் அதை முறித்துப் போடுகிறதெப்படியென்றுதான் பேசாதிருந்தேனென்றார், உடனே இமாம் றலியல்லாகு அன்கு சொன்னார்கள், எனக்கு இந்தவொரு ஹதீதுமட்டும் போதுமென்று சொல்லி மற்ற ஹதீதை நினைத்தபடி கேளாமல் மீண்டு விட்டார்கள் (மாவருன்னஹர்) என்பது ஒரூர், அல்லது (திஜ்லா)வென்னுமாற்றுக் கப்புறமுள்ள தலம்

ததுக்கிறத்துல் அவ்லியா வென்கிற கித்தாபிற் சொல்லுகிறார் இமாம் றலியல்லாகு அன்கு (திஜ்லா) வென்கிற ஆற்றில் (உளூச்) செய்யப்போனநேரம் அவ்விடத்தில் இமாம் தரிபட்டிருக்கிறவிடத்தைக்காண வுயரமான தலத்தில் இருந்தவொருமனுடன் இமாமை



மரியாதை செய்ததற்காய்த்தான் கொஞ்சம் இறங்கித்தள்ளியிருந்து உளூச்செய்துகொண்டார். பின்னுமந்த மனுடன் மவுத்தானவுடன் இன்னுமொருவர் அவரை மனாமிற் கண்டு அல்லாகுத் தஆலா வுமக்கேதுசெய்தா னென்று கேட்டதற்கவர் சொன்னார், ஒருபோது, நான் உளூச் செய்யும்நேரம் இமாம் அஹ்மது றலியல்லாகு அன்குவுக்கு மரியாதை செய்தேனே, அதனால் எனக்கு அல்லாகுத் தஆலா றஹ்மத்துச் செய்தானென்றார்.

இன்னும், அதில் வருகிறது, ஒருவாலிபக்காரனுக்கு ஓர் சப்பாணியாகிய தாயுண்டும் அந்தத் தாயானவள் மகனிடஞ்சொன்னாள், மகனே, நீஹன்பலீ யிமாமிடம்போய் எனக்குத் துஆச் செய்யச் சொல்; இல்லாவிட்டால் இந்த வியாதியால் நான் ஹலாக்காகிவிடுவேனென்றும். நீ யவ்விதஞ் செய்தாற்றான் என்னுடைய பொருத்தமுடையானென்றாள், உடனே யவன் இமாமுடைய வீட்டின் வாயிலில் வந்து தட்டினான், நீயாரென்று கேட்கப்பட்டது, அவன் சொன்னான், நானோர் ஹாஜத்துடையானாய் வந்திருக்கிறேன், அதாவது, என்னுடைய தாய் சப்பாணியாகித் தங்கள் துஆவை ஆதரவு வைத்தவளா யிருக்கிறாளென்றுசொல்லவும், இமாமுடைய முகம் கொஞ்சம் வாட்டமாகி விட்டது ஏனென்றால், அவர்களை யனேகர்களும் அறியாமற் போய்விட வேணுமென்றே நாட்டமிருக்கச்சே யவ்விதம பிறஸ்தாபத்துக்குள்ள காரியங்கள் நடப்பது பொருந்தார்கள், ஆனதாலேதான்,

பின்பு, இமாம் றலியல்லாஹு அன்கு அந்தவாலிபக்காரனைப் பார்த்து, நீபோய்விடென்று சொல்லியவன் போனபிறகு, இமாம் றலியல்லாகு அன்கு குளித்து (உளூச்) செய்து தொழுது (துஆச்) செய்தார்கள், வாலிபக்காரன் தாய் வீட்டிற்போய்க் கதவு தட்டிய போது, தாய்தான் எழுந்து நடந்துவந்து கதவு திறந்தாள், கிப்பமான சுகம் உடனே கிடைத்ததென்று தாயும், மகனும் இமாமுடைய (முஸ்தஜாபான) துஆவைக்கொண்டு (ஷுக்குறு) செய்துகொண்டார்கள் இன்னும் அந்தததுக்கிறத்துல் அவுலியா வென்கிற கித்தாபில்வருகிறது இமாம்றலியல்லாகு அன்குதிருவுளமானார்கள், நானொருபோது ஓர்காட்டிற் பாதை தப்பியோர் அறபியைவொரு

கோணத்தில் இருக்கக் கண்டு இவரிடம் போய்ப் பாதையைக் கேட்
டுக் கொள்வோமென்று நினைத்துக் கேட்டதற் கவர் அழுதார்,
அப்போது நானெண்ணிக்கொண்டேன், பசியினு லழுகிறுரென்று
நினைத்து என்னுடனிருந்த ரொட்டியைக் கொடுத்தேன், அப்போ
தவர் கோபமாய் என்னைப்பார்த்து, அஹ்மதே நீர்தானு அல்லாவு
டைய (பைத்தை) நாடி யவனுடைய ரிஸ்கு கொடுப்பது கொண்டு
பொருந்தாதவர், ஆனதாற்றுன் பாதைதப்பி விட்டீரென்று
சொன்னர்.

இமாம் சொல்லுகிறுர்கள் இவர் இவ்வளவு சமாசாரஞ் சொன்
னபோது என் (கல்பில்) ஓர் காய்மகாரம் வந்து நான் சொன்னேன்
(இலாகி) நாயனே யிப்போர்ப்பட்ட காட்டில் உனக்குச் சில அடி
யார்க ளிருக்குகிறுர்கள், அவர்களை நீதா னறிவாயென்று நினைத்
தேன், அப்போது, அந்த மனுடனுர் என்னைப்பார்த்து அஹ்மதே
யென்றுகூப்பிட்டு, அல்லாவுக்குச் சில அடியார்க ளுண்டும், அவர்
கள் அல்லாவிடத்தில் இந்தப் பூமியின் மலைகளை யெல்லாம் பொன்
னுக்கும்படி கேட்பார்களாகில் அவ்விதமாக்கிப் போடுவான்,
அஹ்மதே, அவர்களி லெதை யோசிக்கிறீ ரென்று சொன்னர்.
இமாம், அஹ்மது பார்த்தார்கள். அவ்விடமுள்ள மலைகளெல்லாம்
பொன்னுகி விட்டது, அஃதொரேயிலங்குதலாய்ப் பத்திப்பாய்கின்
றது அதைக்கண்டு இமாம் மிகுதிபுதுமையாகி நினைவுமாறி நின்று
தெளிவானவுடன் யாதேனு மொருத்தோற்றமில்லாமலோர் சத்தம்
ராக, இந்த அடிமையானவர். இந்த வானத்தைப் பூமியேனும், பூமி
யை வானத்தின் மேலும் அடித்துப் போடவேணு மென்று நம்மை
நாடிக் கேட்பாராகில் அவ்விதம் செய்துபோடு வோமென்று.

(கூத்துல் குலூபு) என்கிற கித்தாபிற் சொல்லுகிறுர், இமாம்
ஹன்பலீ றலியல்லாகு அன்கு சடைந்தவர்களாகச் சொல்லிக் கொ
ள்வார்கள், இந்தக் கவுமுகள் இல்முகளைவிட்டுப் போட்டு அருப்பு
ரூபமான நவமான கருமங்கள் (மஸ்அலாக்கள்) பேரில் முன்னே
க்கிவிட்டார்கள், மார்க்க விளக்கங்களை யவர்கள் குறைத்கலாக்கிய
முசாந்தரமென்ன வென்று ஆச்சரியமாகினொன்று, இஹ்யாவுலூ



மூத்தீ னென்கிற கித்தாபிற் சொல்லுகிறுர்கள், இமாம்றலியல்லாகு
அன்கு சொன்னுர்கள், நான் மனதில் அல்லாகுத் தஆலாவைக்
கண்டு நாயனே யுன்னளவில் முடுகுதல் பெறுகிறதை நாடியவர்
கள் யாது வணக்கம்கொண்டு முடுகுவார்களென்று கேட்டேன்,
அப்போது அல்லாகுத் தஆல சொன்னுன் அஹ்மதே யென்னு
டைய கலாமைக் கொண்டுமுடுகுதல் பெறுவதுபோல் ஒருவஸ்து
வைக் கொண்டு முடுகுதல் பெறமாட்டார்களென்று, அப்போது,
நான் நாயனே, யுன்னுடைய கலாமை அதாவது குறுஆனை அதின்
(மஃனு) விளங்கி யோதினுற்றுன் அவ்விதமோ வென்று கேட்
டேன் அப்போது அல்லாகுத் தஆலா சொன்னுன் மஃனு விளங்கி
யோதினுலும், விளங்காம லோதினுலும் முடுகுதல் பெறுவா
னென்று,

கவாஸ்ஸு யென்னற கித்தாபில் கஸ்ஸாலிய்யி றஹிமகுல்லா
சொல்லுகிறுர்கள், இமாம் அஹ்மதுபுனு ஹன்பல் றலியல்லாஹு
அன்கு ஹறத்தி லிருக்கும்போது ஒருமனுடன் (ஹுக்கும்கள்,
மஸ்அலாக்களில்) தற்கக்காரனு ரென்று பிரசித்தமானவர் வந்து
இமா மிடம் நுழைந்தார், அவரைக் கண்டவுடன் இமாம் றலியல்
லாகு அன்கு (றப்பி அஊதுபிக்க மின் ஹமஸாத்திஷ் ஷயாத்தீனி வ
அஊது பிக்க றப்பி, அன் யஹ்லுறூன்) என்றோதி யந்த மனுடனை
விட்டும் அல்லாகுத் தஆலா விடம் காவற்றேடினுர்கள்; ததுக்
கிறத்துல் அவுலியாவென்கிற கிததாபில் வருகிறது, இமாம் றலி
யல்லாகு அன்கு விடம் அவர்களுடைய ஷேகு ஒருவர் வந்தார் அவ
ருக்கு இமாம் றலியல்லாகு அன்கு விருந்துக்குச் சொல்லியழைத்து
விருந்து தின்றபின் பிறகு அவர்கள் வீட்டின் கூடத்திலேயே, இரா
த்தங்க வேண்டியதாய் நேரிட்டது, அப்போது இமாம் அஹ்மது
றலியல்லாஹு அன்ஹு தண்ணீரைக் கூசாவைக் கொண்டு வந்து
அந்த மனுடன் கிட்ட வைத்துவிட்டுப் போய்விட்டார்கள்.

விடிந்துவந்து அந்தக் கூஜாவில்வைத்த தண்ணீர் அவ்விதமாகத்
தானே குறையா திருக்கக் கண்டவுடன், இமாம் றலியல்லாஹு
அன்கு அந்த இல்மீதென்னு மாணுக்கரைப் பார்த்து, ஏன், இரவில்
விழித்துத் தொழா திருந்தீ ரென்றுர்கள்; அவர் என்னுலே யேலா

தென்று.சொன்னார், அதாவது, தனக்கு வலிமை யில்லையென்பது போற் சொன்னார், உடனே, இமாம் றலியல்லாஹு அன்ஹு அவரைப் பார்த்து நீரிவ்விதம் (தஹஜ்ஜுதுத்) தொழா திருப்பவன் இந்த இல்லைமயேன் படிக்கிறாயென் றாறுக்கினார்கள், இன்னும், அந்தக்,கித்தாபில் வருகிறது, இமாம் றலியல்லாஹு அன்ஹு தங்களுக்கு நெடுநாளாக மாணுக்கரா யிருந்த வொருவரை யொரு போது அவன்தன் வீட்டிலுள்ள கூழத்தை மனுடர்,நடக்கும் பாதை யிற் கொண்டுவந்து தட்டும்படியாகக் கண்டு சொன்னார்கள், நீமுஸ் லிமானவர்கள் நடக்கும் பாதையில் நின்றுங் கோஞ்சத்தை யெடுத் துக் கொண்டாய் ஆனதால், உனக்கு இல்மைப் படிந்துத் தருவது எனக்கு (ஜாயிஸல்ல) வென்றார்கள், அதாவது, அவன் கூழமா னது பாதையில் எவ்வளவு நிலத்தைச் சிறுக்குதோ அவ்வளவு மட் டில் அதை யெடுத்துக் கொண்டதுபோ லாச்சதென்று, இமாம் சொன்னார்கள், பொதுவான பாதைகளில் ஒரு நக மத்த னைமட்டு எடுப்பது (ஜாயிஸல்ல) வென்று

இன்னும் அந்தக் கித்தாபில்வருகிறது, இமாம் அஹ்மது றலியல்லாஹு அன்ஹு ஒருகடைக்காரனிடம் ஒரு படிக்கத்தை யீடு வைத்துப் பணம் வாங்கியிருந்தார்கள், பின்னர், பணங் கொண்டு வந்து கொடுத்துப் படிக்கத்தைக் கேட்டதில் அவன் இரண்டு படிக் கம் கொண்டுவந்து இந்தஇரண்டிலொன்றை யுங்களுடைமையைப் பார்த் தெடுத்துக் கொள்ளுங்க ளென்றான், அப்போது இமாம் றலியல்லாஹு அன்ஹு அதைப்பார்த்ததில், அந்த இரண்டுபடிக் கமு மாதிரி யொன்றுபோ லிருந்ததாலே தங்களுக்குத் திட்டம் வராத்ததால் தங்களுக்குப் படிக்கம் வேண்டாமென்று சொல்லிப் போய் விட்டார்கள்.

முஸ்னிய்பி றஹிமஹுல்லா சொன்னார்கள், இமாம் ஷாபி இய்யி றலியல்லாஹு அன்ஹு சொல்லக் கேட்டேன், அவர்கள் சொல்லுகிறார்கள் நான் யமன் ராச்சியத்தி லிருந்து பகுதா துக்குப் போய் ஹாறானுர் றஷீதிடம் புகுந்து பல சமாசாரங்களும் பேசிக் கொண்ட பிறகு யமன்தேசம் தகுந்த (காலீ) இல்லா திருக்கிறது, அதற்கு நீதி செலுத்த வேண்டி ஹுக்கும்களை யறிந்த வொரு (காலீ) நியமிக்கச் சொன்னேன், அப்போது, ஹாறானுர் றஷீது



இமாம் ஷாபிஇய்யி றலியல்லாஹு அன்ஹுவைப் பார்த்துச் சொன்னார், நீர்தானே யந்த வேலைக்கி யோக்கியமான வொரு ஆலி மைத் தெரிந்துகொண்டு வாருமென்றார், நல்லதென்று சொல்லிப் போட்டு (மஜ்லிஸுக்கு) வந்தேன், அவ்விடத்தில், ஓதுகிறபிள்ளைக ளடங்கலிலும், இமாம் அஹ்மது றலியல்லாஹு அன்ஹுவை மேலாய்க் கண்டதற்காய் அவரைக் கூப்பிட்டு அஹ்மதே இன்ன இன்னவிதம் அமீறுல் மூமினீன் சொல்லியிருக்குகிறார் அந்த வேலைக்கு (லாயிக்காக) உம்மைக் கண்டிருக்குகிறே னென்றேன், ஆகையால், உம்மை யவரிடம் கூட்டிக்கொண்டு போய் உத்தரவு வாங்கித் தரட்டோவென்று கேட்டேன் உடனே, இமாம் அஹ்மது என்னைப்பார்த்துச் சொல்லுகிறார், நானுங்களிடம் வந்ததெல்லாம் இல்மைப் படிக்க வல்லாது (காலீ) வேலை வாங்கித் தரக் கேட் டல்லத், தாங்கள் என்னைக் கொண்டு அவ்விதமான நாட்டங் கொள் ளப் படாது, தங்களுக்குத் தகாத காரியம், எனக்கும் உதவா தென்று என்னை யுறுக்கி யுறுக்கிச் சடைவாகச் சொல்லி விட்டா ரென்றார்கள்.

(றாவீ) சொல்லுகிறார், உடனே ஷாபிஇய்யி றலியல்லாஹு அன்ஹு இமாம் அஹ்மது றலியல்லாஹு அன்கு சொல்லக் கேட்டவுடன் நாணப்பட்டார்கள், இதை, பைகக்கிய்யி றஹிம ஹுல்லா பேசி வந்தார்கள். (இல்லம்) அறி, இமாம் ஷாபிஇய்யி றலியல்லாஹு அன்ஹு வாகிறவர்கள் ஹன்பலிய்யி றலியல் லாஹு அன்ஹுவுக்கு உஸ்தாதாயிருக்க ஹாறானுர் றஷீதிடம் (காலீ) வேலைக்காக நியமிக்கச் சொல்ல அவர்களிடம் சம்மதி கேட்டதெல்லாம் அவர்களுடைய நாட்டமாவது, முஸ்லிமான ராஜாவுக்கு வழிபடுவது வாஜிபானதால், அவரேவினதற்கு வழிப் பட்டதாக ஹனபலிய்யி றலியல்லாஹு அன்ஹு விடம் இமாம் ஷாபிஇய்யி றலியல்லாஹு அன்ஹு கேட்டதல்லால் வேறில்லைத் திடனாக அவர்களுக்குத் தெரியும் ஹன்பலிய்யிறலியல்லாகுஅன்கு வழிபட மாட்டார்களென்று, காரியத்தில் (காலீ) வேலைக்கி விலகுதல் செய்துகொண்டதால் அவர்கள் பேரிற் குற்றமுண்டாகுக் கிற தெனகிறதற் கிடம்பாயில்லை, ஏனென்றால் தங்களை யந்தவே லைக்கிப பாத்திர மல்லாதவர்களாய்க் கண்டதால், ஆனபோதே, இதில் இமாம் ஷாபிஇய்யி றலியல்லாகு அன்குஇரண்டுகாரியத்தை

நயப்படுத்திக்கொண்டார்கள் அதாவது யமன் ராச்சியத்தில் (காலீ) இல்லா திருப்பதையறிந்து அமீறுல் மூமினீனுக்குத் தெரியப் படுத்தாதிருந்தால், அதனால் வரும் குற்றமும், ஒரு ஆலா காலீ, வேலைக்காக (லாயிக்கானவரை) விசாரிக்கச் சொன்னதில் விசாரிக்கா திருந்துவிட்டால் வரும் குற்றமும் நீங்கி விட்டார்கள், இமாம் ஹன்பலிய்யி றலியல்லாகு அன்கு தங்களைப் பாத்திர மல்லவென்று கண்டபடியால் உஸ்தாதுடைய சொல்லுக்கு வழிபடவில்லையென்கிற குற்றமும் அமீறுல் மூமினீனுடைய சொல்லுக்கு விகற்பமாயிருந்த குற்றமும் விட்டு நீங்கி விட்டார்கள.

## ஏழாம் பிரிவாகிறது.

(குறு ஆனைப்) படைப்பென்று சொல்லும்படி யந்நாளி லிருந்த ராஜாக்களால் வம்பிக்குதலின்பேரில் இமாம் அஹ்மது றலியல்லாகு அன்கு விலகிக் கொண்டதால் வந்த சங்கதியில் சுருக்கமாய்ச் சொல்லப் படுகின்றன.

ஹசன் றஹிமகுல்லா சொல்லுகிறார்கள். ஹாறூனுர் றஷீது மவுத்தாகி யவர் மகன் (மஉமூனுக்கு) ராஜாங்கம் வந்தபோது, முன்தலைகவிழ்ந்த (முஃத்தஸிலாக்கள்) தலையைக் கிழப்பத் தொடுத்து மஉமூனிடம் போக்குவரத்தாகி யிருந்து அவரிடத்தில் அவர்களுக்கு மரியாதையும் செல்வாக்கும் நடந்து வரும்போது, தங்களுடைய பொல்லா (மதுகபை) வெளியாக்கி மஉமூனுடைய (இஃதிக்காதைக்) கெடுத்து அவரை யிருதலை மணியனா யிருக்கும்படி செய்து போட்டார்கள். அந்நாளில் பகுதாது ராச்சியத்திலிருந்த வுலமாக்க ளடங்கலும் அவர்களுடைய சொல்லுக்கு நேர்பாடாக (சுன்னத்து ஜமா அத்துடைய அக்கீதாவை) விரோதித்து (குறு ஆனைப்) படைக்கப்பட்டதென்று சொல்லிப்போட்டார்கள் இமாம் அஹ்மது றலியல்லாஹு அன்குமட்டும் அவர்கள் பொல்லா (அக்கீதாவுக்கு) மாற்றமாக (மகுலூக்குமல்ல காலிக்குமல்ல) வென்று சொல்லிக்கொண் டிருக்குகிறார்கள்.

அவ்வித மிருக்கும்போது அந்த (முஃத்தஸிலாக்கள்) இந்த இமாம் அஹ்மது றலியல்லாகு அன்குவை இவ்விதம் ஒத்துமையாய்ச் சொல்லும்படி செய்யவேணுமென்று கள்ளக் கருத்தெ



டுத்து அந்த ராஜாவிடம் கெண்டுமூட்டியவரைத் தருவித்துச் சமுகத்திற் கேட்டால் ராஜாவுக்கு விரோதமாய்ப் பேசுவாரென்று போதித்ததில், அந்த ராஜன் இமாம் அஹ்மது றலியல்லாகு அன்கு பேரிற் கோபமாகி அவரை முன்னிலையாக்கும்படி கட்டளை செய்திருப்பதை இமாம் றலியல்லாகு அன்கு அறிந்து அல்லாகுத் தஆலாவிடம் (துஆக்) கேட்டார்கள், நாயனே யென்னுடைய முகத்தை மஉமூன் காணாமலும் மஉமூனுடைய முகத்தை நான் காணாமலும் ஒரு (சபபை), அணுப்பென்று.

அப்போது, இமாம் அஹ்மது றலியல்லாகு அன்கு பகுதாதுக்கு வெளியிற் போயிருந்தார்கள் ராஜாவுடைய கட்டளை கொண்டு வருகிற சிப்பாய் மார்கள் இமாமைத்தேடித் திரிந்து கண்டுக் கொண்டதில் அமீறுல் மூமினீன் உங்களை யழைக்கிறா ரென்று சொன்னார்கள் அப்போது இமாம் றலியல்லாகு அன்கு (பிஸ்மில்லாகித்தவக்குலன் அலைகி) யென்று சொல்லி நடந்தார்கள், பகுதாதுக்கு வந்து சேரமுதல் அந்தமஉமூன் மவுத்தாகிப் போனார் பின்னர் இமாம் றலியல்லாகு அன்குவைக் கொண்டுபோய்ச் சிறைச்சாலையி லாக்கினார்கள் ராஜாங்கத்தின் காரியம் சரியாகிற வரையில் ஜெயிலி லிருக்கட்டுமென்று பதினெட்டுமாசம் போட்டிருந்தார்கள் அவ்வித மிருக்கும் நாளில் இமாம் ஷாபிஇய்யி றலியல்லாகு அன்கு மிசுறில் இருக்குகிறார்கள்.

றபீஉ றஹிமகுல்லா சொல்லுகிறார்கள் இமாம் ஷாபிஇய்யி றலியல்லாகு அன்குவுடன் நானிருக்கும்போது என்னைக்கூப்பிட்டு வோர் கடுதாசி யெழுதித்தந்து இதைப் பகுதாதில் அஹ்மதுபுனு ஹன்பலிடம் கொண்டுபோய்க் கொடுத்து ஜவாபு வாங்கி வாருமென்றார்கள், நானந்தக் கடுதாசியைக் கொண்டு புறப்பட்டு பகுதாதுபோய்ச் சேர்ந்து அவர்களைச் சுபுஹு நேரத்திற் றொழுகையிற் கண்டு நானும் அவர்களுடன் (சுபுஹைத) தொழுது முடிந்தபிறகு நான் சொன்னேன் இமாம் அஹ்மதே யுங்களுடற் பிறந்தார் ஷாபிஇய்யி றலியல்லாகு அன்கு மிசுறிலிருந்து இந்தக் கடுதாசியை யுங்களிடம் தரும்படி செய்தார்களென்று சொல்லிக் கடுதாசியைக் கொடுத்தேன் உடனே யதை யுடைத்துப் பார்த்தார்கள் அவர்களிருகண்ணும் கண்ணீராகச் சொரிந்தது அப்போது நான் அந்தக்

கடுதாசியில் யாது சமாசார மெழுதி யிருந்ததென்று கேட்டதற்கு அவர்கள் அதில் றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லத்தை மனுமிற் கண்டதாகவும் அபீஅப்தில்லாகி அஹ்மதுபுனு ஹன்பலுக்கு என்சலாமெழுதி யவருக்கு எழுதும் (குனுஆனை) மகுலூக்கென்று சொல்ல வேண்டியதற்காய் உம்மை யழைக்கப்படும் உம்மைத் தொந்தறை செய்யப்படும் நீர அவர்களுக்கு (கியாமத்து) நாள், வரையிலும் ஜவாபு சொல்லாதேயுமென்று எழுதுமென்கிற தாய் நபியுல்லா வுத்தரவு கொடுத்த தற்காக எழுதினதாகவும் எழுதி யிருக்கிறார்களென்று சொன்னார்கள்.

(றபீஉ) றஹிமகுல்லா சொல்லுகிறார்கள் இமாமே நானுங்களுக்குச் சுப சோபனங் கொண்டு வந்தது.ச்சுதே அதற்கென்ன கிராய மென்றேன் உடனே தாங்க ளணிந்திருந்த ச்சட்டையிற் சரீரத்தைத் தொட்டிருந்த சட்டையைக் களைந்து என்கையிற் றந்தார்கள் கடுதாசிக்கும் ஜவாபுந் தந்தார்கள் வாங்கிக்கொண்டு மிசுறு வந்து இமாம் ஷாபிஇய்யி றலியல்லாகு அன்குவிடம் கடுதாசியைக் கொடுத்து நடந்த காரியங்களையும் சொன்னேன் அப்போது இமாம் ஷாபிஇய்யி றலியல்லாகு அன்கு சொன்னார்கள் அந்தச் சட்டையையுமக்கு மட்டும் சொந்தமாக்கிக்கொள்ளச் சம்மதிக்க மாட்டோம் என்கிலும் அந்தச் சட்டையைத் தண்ணீரிலே துவைத்து அதைப் பிழிந்த தண்ணீரை எனக்குத் தாரும் அதில் நானும் உம்முடன் கூட்டா யிருப்பே னென்றார்கள் அதுபோலே செய்தே னென்றார்கள்.

இதை (மனாக்கி புஷ்ஷாபிஇய்யி) யென்கிற கித்தாபிற் பைககிய்யி றஹிமகுல்லா பேசிவருகிறார்கள் சல்மத்துபுனு அஷ்யபு சொல்லுகிறார்கள் மஃமூன் இறந்த பிறகு (முஃதசிம்) எங்கிறவர் இராஜாங்கத்தி லிருக்கும் நாளில் இமாம் அஹ்மதுபுனு ஹன்பல் றலியல்லாகு அன்கு என்கிறவர்கள் யாராயிருக்குமென்றார் அப்போது நாங்கள் சகலரும் வாய்மூடி யிருந்தோம் இமாம் தாமாகத்தானே நான்தான் அஹ்மதுபுனு ஹன்பல் என்கிறவன் உம்முடைய (ஹாஜத்) தென்ன சொல்லுமென்றார்கள் அப்போதவர் சொன்னார் நான் நானூறு காதவழிக் கப்புற முள்ள இன்ன ஊரிலுள்ளவன் நான்கரையிலும் காட்டிலும் (சபர்) செய்து வந்து சேர்ந்தி



ருக்கிறேன் இங்கே நான்வந்த (ஸபபாகிறது) இன்ன வெள்ளிக்கிழமை யிரவில் நான் படுத்துறங்கும்போது மனுமில் ஒருவர் என்னிடம் வந்து பகுதாதி லுள்ள அஹ்மதிபுனு ஹன்பலை யறிவீரோ வென்றார் நானறியேனென்றேன்.

அப்போதவர் சொல்லுவார் நீரிப்பதானே புறப்பட்டு பகுதாதுக்குப் போய் அவரிருக்குமிடம் விசாரித்து அவரைக் கண்டு கொண்டவுடனே (கிலுறு) உமக்குச் சலாம் சொன்னாரென்று சொல்லி நான் சொன்னதாகச் சொல்லும் வானத்தை யுயர்த்தியாக்கின நாயன் உம்மைத்தொட்டும் பொருந்தி யிருக்கிறான் அவனுடைய மலக்குக ளடங்கலும் உமக்கு (ரிலுவான்) என்னும் பொருத்தம் (அதாவது) அல்லாகுத் தஆலா வும்மைத்தொட்டும் பொருந்திக் கொண்டானென்று கூறுகிறார்கள் உம்முடைய (நபுஸைச்) சபுறுவருத்திக் கொண்டசபபினாலென்று இம்மாத்திரம் சமாசாரமும் இமாம் அஹ்மது றலியல்லாஹு அன்ஹு கேட்டவுடன் (மாஷா அல்லாகு லாக்குவத்த இல்லா பில்லாகி) யென்று சொல்லிக் கொண்டு வேறே யாதேனும் உமக்கு ஹாஜத்துண்டா வென்று கேட்டார்கள் அப்போதவர் சொன்னார் எனக்கிந்த வொரு ஹாஜத்துமே தவிர வேறொரு ஹாஜத்தும் கிடையாதென்று சொல்லிப் போய் விட்டார்.

(நதுக்கிறத்துல் மஷாயிகு) என்கிற கித்தாபில் வருகிறது, ஒரு அறபி வந்து இமாமறலியல்லாஹு அனஹு விடம்சிலசமாசாரம சொல்லுகிறார்கள் அதாவது நான் (மதீனத்தில்) றசூல் சல்லல்லாஹு அலைஹிவசல்லமுடைய பள்ளியில் உறங்கினேன் நானும் (றவ்லாவை) ஸியாறத்துச் செய்வதற்காகத் தான்போயிருந்தேன். அப்போது மனுமில் ஒருமனுடன் வந்து என்னையுசுப்பி யெழுப்பி (றவுலாவின்) மதிலுக் கடுத்தாமையாய்க்கூட்டிகொண்டுபோய்நிறுத்தினார், அப்போது (றவுலா)வுக்குள் ளிருந்து நபிசல்லல்லாஹு அலைஹிவசல்லத்துடையசத்தத்தை மூன்றுதடவை தொடராய்க்கேட்டேன் அதாவது ஓய்மனுடரே நீரிப்போதானே புறப்பட்டு (பகுதாதுக்குப்போய் (அஹ்மதுபுனு ஹன்பலுக்கு என்னுடைய சலாத்தை யெத்தி வைத்து இன்னம் நீர் என்னுடைய தூதர். என்றும் சொல்லி அல்லாஹுத்தஆலா வும்மைச் சோதிக்க வேண்டியோர்.

(முசீபத்தைக்) கற்பித்திருக்கிறான். அதற்குச் (சபுறு) செய்து கொள்ளு மென்று நான் சொன்னதாகவுஞ் சொல்லுமென்று சொன்ன வுத்தரவை யெத்திவைக்க வேண்டியதாய் வந்தேனென்று சொல்லிப்போய்விட்டார், இந்தச் சொல்லைக் கேட்டபோது இமாம் றலியல்லாஹு அன்ஹுவுடைய கல்பாகிறது (சபுறின்) பேரிலே மிகுந்த ஆசையுடையதாய்க் (கல்வைப்) பொருந்தினதாயிருந்தது.

(றாவீ) சொலலுகிறார்கள் முந்தின (மஉமூன்) என்னும் ராஜா விறந்த பிறகு சிலநாட்சென்று, அவருடைய சொக்காரன் முஃதசிம் என்கிறவரவிற் கிலாபத் தென்னும் ராஜாங்கம் வந்தது, அவர் முஃதவிலீன்களில் ஹோட்டா யிருந்த அஹ்மதுபுனு அபீதாவுதுல் முஃதவிலிய்யி யென்கிற மனுடனை பகுதாதில் காலியாய் நியமித்தார் அந்த (காலீ) அந்த ராஜனை யவேட்கை மூட்டிக்கொண்டிருந்தார் இமாம் அஹ்மதுபுனு ஹன்பல் றலியல்லாகு அன்குவை ஜெயில்கானவில் நின்றும் ஹாலிறுக்கி ராஜன் சமூகத்திலேயே நிறுத்தாட்டி முந்தின கேள்வியைக் கேட்கவும், முந்தின சொல்லை விட்டும் மீள்விக்கும்படி செய்யவும், மீளாவிட்டால் அவர் நியமித்த ஆக்கினை செய்யவும் கூட்டினதை மேற்படியார் ஒப்புக்கொண்டு நம்முடைய நாயகம் அஹ்மதுபுனு ஹன்பல் றலியல்லாகு அன்குவைக் கொண்டு வரும்படி யேவினார் அதாவது மதீனத்தால் (அஃறுபீ) வந்து நபியுல்லாவுடைய சோபனத்தை இமாமுக்கு அறிவித்திட்டுப் போன இருபத்தைந்தாம் நாள்.

அஹ்மதுபுனுல் பறஜூ றஹிமகுல்லா சொல்லுகிறார் இமாம் றலியல்லாகு அன்குவை முஃதசிமுடைய அரண்மனையில் ஹாலிறுக்கப் பட்டபோது நான் கூடவே யிருந்தேனென்று சொல்லிச் சகலதும் பேசிவருகிறார், அதாவது, அஹ்மதுபுனு ஹன்பல் றலியல்லாகு அன்குவை ஹாலிறுக்கும்போது, மேற்படி ராஜா வோர் பொன்னாற்காலி மேலிருந்து கேட்டார் அல்லாகுத் தஆலா வுறுப்புகளுடன் பேசிக் கொள்வாரென்று இளைப்பானபேச்சைப்பேசினதாரென்று, அதட்டிக் கேட்டவுடன், இமாமை ஹாலிறுக்கப் பட்டது, அப்போது, அவர்கள்மேலே யோர் குப்பாயமும், ஒரு மங்கின நிறமுள்ள போர்வையும் தலைவளியப் போர்த்திக் காலில்



காலுவிலங்கும் பூட்டப்பட் டிருந்தது, அப்போது நானவர்களைக் கண்டவுடன் (லா ஹவ்ல வலாக் குவ்வத்த இல்லா பில்லாகில் அலிய்யில் அலீம்),என்று சொல்லிச் சலித்திருந்தேன், அப்போது, இமாமைப் பார்த்து ராஜா கேட்டார், நீர்தானு அஹ்மதுபுனு ஹன்பலென்கிறவரென்று, அப்போது, இமாம் சொன்னார்கள். நான் அஹ்மதுபுனு முகம்மதிபுனு ஹன்பலா யிருக்குமென்று.

பின்னர், ராஜாகேட்டார் (குறுஆனிறது) அல்லாவுடைய (கலாமா) யிருக்கும் அவனுடைய படைப்பல்லவென்று நீர்சொன்னதாக நமக்கெற்றியிருக்கிறது அது நிசந்தானுவென்று, அப்போது இமாம் றலியல்லாகு அன்கு மெய்தான் நான்தான் சொன்னேன் சகலதும் அவனிடத்தில் நின்றுந்தான் வந்து அவனிடத்திலேதான் மீண்டு விடுமென்றார்கள் ராஜா கேட்டார் இந்தச் சொல் எங்கேயிருந்தெடுத்துச் சொன்னீரென்று. அப்போது இமாம் றலியல்லாகு (அன்கு குறுஆன் (ஹதீதில்) நின்றுமென்றார்கள். குறுஆனிலுள்ளதை விவரிக்கத் தேடாமல் (ஹதீதில்) என்னாவந்திருக்கிறதென்றார் அப்போது, இமாம் றலியல்லாஹு அன்ஹு சொன்னார்கள் அப்துர்றஸ்ஸாக்கு என்கிறவர் மஃமறைத் தொட்டும் அவர் ஸுஹுறையைத் தொட்டும் அவர் சாலிமைத் தொட்டும் அவர் அவருடைய தகப்பனாரைத் தொட்டும் அவர் நபிசல்லல்லாஹு அலைகிவசல்லமைத்தொட்டும் பேசி வருகிறார்.

நபிசல்லல்லாஹு அலைகிவசல்லம் திருவுளமானார்கள் அல்லாஹுத் தஆலா வாகிறவன் மூசா அலைகிஸ்ஸலாத்தை ஒரு லெட்சத் திருபத்து மூவாயிரத்து பதின்மூன்று (கலிமாக்) களென்னும் வார்த்தைகளைக் கொண்டுபேசி வைத்துக் கொண்டானென்று சொன்னார்கள் ஆனதினுல் அல்லாஹுத் தஆலாவில் நின்று முள்ளதா யிருக்கும் (கலாம்) என்னும் பேச்சாகிறது மூசா அலைகிஸ்ஸலாத்தில் நின்று முள்ளதா யிருக்கும் கேள்வியாகிறதென்றுஞ் சொல்லி யின்னுஞ் சொல்லுகிறார்கள் மூசா அலைகிஸ்ஸலாம் அல்லாஹுத் தஆலாவிடம் கேட்டார்கள் நாயனே நீதானோ வல்லது, வேறையாருமோ வென்னைப் பேசி வைத்துக் கொண்டதென்று அதற்கு அல்லாஹுத்தஆலாவுடனே ஜவாபு சொன்னான் பேசி வைத்துக் கொண்டது நான்தானென்றும் உமக்கும் நமக்கு

மிடையி லிப்போது தாதரில்லையென்றும் இம்மாத்திரமுஞ் சொன்னபோது ராஜா இமாமைப் பார்த்து நீர் பொய் சொல்லுகிறீரென்றார் அப்போது, இமாம் ரலியல்லாஹு அன்ஹு சொன்னார்கள் நான் றசூல் சல்லல்லாஹு அலைஹிவ சல்லம் சொல்லாத வோர் சொல்லை புண்டுபண்ணிச் சொன்னேனே யானால் அல்லாஹுத் தஆலா பொய்சொன்னவர்களை நரகத்தில் (அதாபு) என்னும் வேதனை செய்வானென்று (குர்ஆனிலே) திருவுளமா யிருக்குகிறான், இந்தச் சொற் சொன்னது அல்லா வல்லாதத்தி யிருக்குமானால் அது அவனுடைய படைப்பாச்சு படைப்பானது தருணி பொருக (ஹறக்கத்து) என்னுமுசும்புதலை வழக் காடினதா யிற்றென்று

இவ்விதம் இமாம ரலியல்லாஹு அன்ஹு சொன்னபோது (முஃதசிம்) என்கிற ராஜா அவருடைய (காலீ) யாகிய (முஃதவிலீ) யென்கிறவரையும் மற்றும் படிப்புக்காரரையும் பார்த்து இவருடன் தற்கஞ் செய்யுங்களென்று சொன்னார் உடனே அவர்கள் ராஜனைப் பார்த்து ராஜாவே யிவரைக் கொன்றுபோடும் அவருடைய திரையெங்கள் கழுத்துகளிற் பொறுக்கதா யிருக்குமென்றார்கள்.

(றவீ) சொல்லுகிறார்கள் அன்றுமுதல் மூன்றுநாள்வரையும் அவர்கள்வந்து இமாம்ரலியல்லாஹு அன்ஹுவிடத்தி லிருந்து கொண்டு கோபமாய்க் கடுகடென்று அநேகம் ஆக்கினைகளைச் சொல்லியறிவித்து அச்சம் பூட்டினார்கள் (இல்மு-அக்கு) ஞடைய துறையில் வந்தால அவர்கள் (ஆஜிசு) வென்னும் மாட்டாங்கியாகிப் போறது அவர்கள் அத்தனைபேரும் கூடி இல்மில் இமாம் ரலியல்லாஹு அன்ஹுவை வெல்ல முடியா தயர்களாய் விட்டபோது ராஜன்முஃதசிமிடம் அறிவிக்கப்போட்டார்கள் பின்னர் முஃதசிம்வந்து இமாம் அஹ்மதுபுனு ஹன்பல் ரலியல்லாஹு அன்ஹுவை இருகைகளையும் கட்டிச் சாட்டையால் ஆயிரம் அடியடிக்கும்படி கட்டளை செய்தார் உடனே நூற்றைம்பது பேர் சாட்டைகொண்டு வந்தார்கள் வருகிறவனெல்லாரும் இமாம் ரலியல்லாஹு அன்ஹு அவர்களிலே முன்னோக்கி வந்து யந்தக்குர்ஆன் படைக்கப் பட்டதென்று சொல்லும் சொல்லுமென்றே சொல்லு



வான் அப்போது இமாம் ரலியல்லாஹு அன்ஹு அவ்விதம் அறவே சொல்லவில்லை ஒரு சொல்லாகவே குர்ஆன் படைப்பல்லவென்று சொல்வதின்பேரிலேயே தரிபட்டு போனார்கள். பின்னர் அவன்கள் நியமித்ததுபோலே அடித்தார்கள்.

அலிய்யுபுனு முகம்மதில் குறஷிய்யி றஹிமஹுல்லா சொல்லுகிறார்கள் இமாம ரலியல்லாஹு அன்ஹுவை யடிக்கப் படுகிறநேரம் அவர்கள் உடுத்திருந்த காற்சட்டை கழன்று விழுந்துவிட்டது அப்போது, இமாம் தங்கள் வாயை யசப்பினார்கள் உடனே யாகாசமிருந்து அல்லாஹுத் தஆலாவின் (குதுறத்தின்) புறத்தால் இரண்டு கைவந்து அந்தச் சட்டையை அவர்களுக் குடுத்திவிட்டுப் போய்விட்டது இந்தப் புதுமையைக் கண்ட வுடன் அடிக்கிறவர்கள் அடியைநிறுத்தாட்டி இராஜன் எழும்பி ஜெயிலிலேயே போட்டு வைக்கும்படி சொல்லிவிட்டுப் போய்விட்டார்.

பைகக்கீ றஹிமஹுல்லா சொல்லுகிறார்கள் இந்தச் சங்கதி நடந்ததாகிறது இமாம் ஷாபிஇய்யி ரலியல்லாஹு அன்ஹு (வபாத்தாகிப்) பதினறு வருஷத்தின் பிறகு கிஜ்றத் திருநூற் றிருபதாம் வருடம் றமலான் மாதம் பிந்தின பத்தில் நடந்ததென்றும் இமாம் ரலியல்லாஹு அன்ஹு இதற்குப் பின் சொற்பதினத்தில அந்த ஜயில் வீட்டிலேயே (வபாத்தாகிப்) போனார்களென்றும் வபாத்துடைய திகதிமுன் கூறப்பட்டிருப்பதற்கு இடமாற்றமாக வருடக் கணக்கில் இட்டோட் டிருக்கிறது அது எழுதினவருடைய பிசகென்று சொல்ல இடமாகிறது.

ததிக்கிறத்துல் மஷாயிகு என்கிற கித்தாபில் வருகிறது இமாம் அஹ்மதுபுனு ஹன்பல் ரலியல்லாஹு அன்ஹுவை ஜெயில் வீட்டில் நின்றும் இராஜாவி னரண்மனைக்குக் கேள்வி கேட்கவேண்டிக் கொண்டு வந்துவிடப் பட்டபோது பட்டாளத்திலே தலைவனாக இருக்கிற வோர் மனுடன் இமாம் ரலியல்லாஹு அன்ஹுவிடம் அடுக்கவந்து சொல்லுகிறார் இமாமே நானொரு கருமத்திற் குற்றக்காரனாகி யென்னைப்பிடிக்கப்பட்டு உண்மைகொண்டு விண்ணப்பம் செய்யும்படி ஆயிரம் அடியடிக்கும்படி தீர்ப்பாக்கி யடிக்கப் பட்டதில் நான் பொய்யான காரியத்தி லிருந்து கொண்டு விண்ணப்பம் செய்யாமற் (சபுறு) செய்து கொண்டேன், நீர் (ஹக்

கான) காரியத்தின்பேரி லிருப்பதால் என்னைக் காண மிகவும் (சபுறு) செய்வது கொண்டு பாத்திரமா யிருக்குமென்று சொன்னான் அந்தச் சொல் இமாம் றலியல்லாஹு அன்ஹுவுக் குதவியாக விருந்தது.

இபுனு குல்லக்கானுடைய தாரீகு என்கிற கித்தாபில் அபீஜஃபறில் அன்பாரிய்யைத் தொட்டும் பேசிவரப்படுகிறது, இமாம் அஹ்மதுப்னு ஹனபலை மஃமூனென்கிற ராஜா விடம் கொண்டு போகிற தற்காகக் கட்டளை வந்து (பகுதாதுக்கு) அப்புற மிருந்தவர்களைத் தேடி யழைத்துக்கொண்டு போகிறபோது நானென்னூரி லிருந்து அவர்களைக் கண்டு சலாம் சொன்னேன். இமாம் ஜவாபு சொல்லிச் சொன்னார்கள் அபூஜஃபறே யென்று கூப்பிட்டு நீர் மெத்தவருத்தப்பட்டு வெகுதூரமிருந்து வந்தீர்களென்று. அப்போது நான் இஃதொரு வருத்தமல்ல நீர் இன்றையில் இராஜனைக் காண்பீர் அவரிடத்தில உம்முடைய வாயி லிருந்து சொல் லெவ்விதம் புறப்படுமென்று பார்த்திருந்து உம்மைத் துயர வேண்டி வெகும்பர் காத்திருக்குகிறார்கள், ஆகையால் இன்னும் இந்த ராஜன் உம்மைக் கொல்லாமல் விட்டுவிட்டாலும் எவ்விதமும் மவுத்தாகிறது வேணுமாகத்தா னிருக்கிற தென்று சொன்னேன்.

(றூவீ) சொல்லுகிறார், இந்தச்சொல்லை மறுதடவையுஞ் சொல்லச் சொன்னார்கள் மறுதடவையுஞ் சொன்னேன் உடனே (மாஷா அல்லாஹு) என்று இருதடவை சொன்னார்கள், இன்னும், அந்தக் கித்தாபில் அபீஈசபுனி தாதான் றஹிமஹுல்லாவைத் தொட்டும் பேசிவரப்படுகிறது. அவர் சொன்னார், நான் குறைசானைச் சேர்ந்த பாபில் என்கிற வூரில் ஒரு தலத்தில் இருந்து தொழுதேன் அந்நேரம் சிலரெல்லாம் தொழுகிறார்கள், அவர்களில் இமாம் அஹ்மதுபுனு ஹன்பல் றலியல்லாஹு அன்ஹுவும் இருக்குகிறார்கள் அவர்கள் சில (துஆக்கள்) ஓதுகிறார்கள் அதில் கருத்தாகிறது நாயனே ஒரு தன் தன்னுடைய (ஹவா)வின்பேரில் அல்லது யோசி கொண் டிருப்பவனை (ஹக்களவில்) மீளவைத்திடு இந்தவும்மத்தில் ஒருவரும் வழிகெட்டுப் போகாதிருக்க வேண்டியென்று இவ்விக



மாய் (துஆக்கள்) ஓதும்போது, ஒருமனுடன் இமாம்அளவில் வந்து எங்களுக்கு விளங்காமற் சிலபழக்கங்கள் சொல்லிக் கடைசியில் பொறுமையா யிரும் உதவியாகிறது பொறுமையுடனிருக்கிறதென்றும், சந்தோஷமாகிறது வருத்தத்துடனே யிருக்கும் இன்னும் வருத்தத்துடனே யிருக்கும் லேசாகிற தென்றுஞ் சொன்னார்.

இன்னும், அந்தக்கித்தாபில் வருகிறது அப்துர் றஹ்மானிபுனி முசப்மதில் ஹாஷிமிய்யி சொல்லுகிறார் என் தகப்பனார் சொல்லக் கேட்டேன், இமாம் றலியல்லாஹு அன்ஹுவை யடிக்கிற தற்காய்க் கட்டப்பட்டதே யந்நேரம் நான் வீட்டிலிருந்து ஒருசத்தம் கேட்டேன். அதாவது, ஒருமனுடன் சொல்லுகிறான் ஹன்பலிய்யே நானுகிறவன் (ஹபஸில்) நின்றுமுள்ள காலிதால் ஹத்தாதுடைய. தூதனா யிருக்குமம அவருக்குச் சொல்லச் சொல்லுகிறார், நீரிருக்கிறீரே யதின் பேரிலேயே தரிபடும் அடியுடைய வருத்தத்தாற் படுற வேண்டாம் நானுகிறவன் (ஷைத்தானுடைய) கருமத்தில் அடிபட்டே (சபுறு) செய்துகொண்டேனே நீர் (றஹ்மானுடைய கருமத்தில் அடிபட்டு (சபுறு) செய்வதற் கென்னவென்று

புகாரீ றஹிமஹுல்லா சொல்லுகிறார்கள், அஹ்மதுபுனு ஹன்பல் றலியல்லாகு அன்குவை (பகுதாதில்) அடிக்கப் பட்டபோது நாங்கள் (பசுறவி) லிருந்து அபுல்வலீது றஹிமஹுல்லா சொல்லக் கேட்டோம். இந்த அஹ்மதுபுனு ஹன்பல் றலியல்லாகு அன்கு வாகிறவர் (பனீ இஸ்றாஈல்) கிளையி லுண்டாகி யிருப்பாரே யானால் சிறப்புக்கிணமாகக் கித்தாபுகளி லிவர்பட்டதயாங்களை யேர்ப்பாடாக்கிக் கொள்வார்கள்.

முகம்மதுபுனு அலிய்யிபுனிஷாஇபு சொல்லுகிறார், என்னுடைய தகப்பனார் சொல்லக் கேட்டேன். அஹ்மதுப்னு ஹன்பலாகிறவர் (பனீ-இஸ்றாஈல்) கிளையிலுள்ளோர். ஆகிறுகிய மனுடனை அந்நாளையி லுள்ளராஜன் இஸ்லா மார்க்கத்தை விட்டுநீளும்படி செய்ய வேண்டிச் சர்வாளைக் கொண்டு அந்தமனுடனுடைய உச்சியில் வைத்தும், மீளா திருந்து பின்னர் பிளந்துவிட்டபோது மட்டில்லாத (ஆகிறத்துச்) சிறப்புப் பெற்றுப் போனதாக நபிசல்லல்லாகு அலைகிவசல்லம் சொன்னார்களே யந்த (முபீனான) மனுடனுக் கொப்பாக்கப் பட்டவரா யிருக்கிறாரென்றும், இன்னும்

அஹ்மதபுனு ஹன்பலே யிந்தக் காரியமெடுத்து ஒரே நிலையாக நில்லாதிருந்தால் இந்த (முஃத்தஸிலாக்கள்) அனேக மனுடர்களை வழிகெடுக்கிறதுந் தவிரக் (கியாமத்து) வரையிலும் நமக்குப் பழிப்பாகவு மாகிவிடுமென்று.

இபுனு அவானத்துல் இஸ்பஹானிய்யி றஹிமகுல்லா, அபுல் ஹஸனில் மைமூனிய்யி றஹிமகுல்லாவைத் தொட்டும் பேசி வருகிறார்கள், பசறா ராச்சியத்தில் அலிய்யுபுனுல் மதனிய்யை, இஸ்லாமுடைய காரியத்திலே தண்டித்து மிருந்த (முஃலீபத்துகளை) யனுபவித்து (சபுறு) செய்துகொண்டார்களென்கிறதை ஆலமெல்லாம் புகழ்ச்சியாகப் பேசப்பட்டது, பின்பு, ஹன்பலிய்யி றலியல்லாகு அன்குவுடைய காரியம் வெளியாகவுஞ்சொன்னார்கள் இஸ்லாமார்க்கத்தின் கருமத்திலே தெண்டித்துத் துன்பங்களை யனுபவித்ததில், இந்த அஹ்மதபுனு ஹன்பலைப்போல் யாரும் அனுபவிக்கவில்லை, யென்கிலும், றசூலுல்லாவுடைய (வபாத்தின்) பிறகு சிலரெல்லாம் (ஸக்காத்துக்) கொடுக்க மாட்டோமென்று பகீல்த்) தனமடித்து (முறுத்தத்தாகிப்) போனதற்காக (செய்யிதனா) அபூபக்ரிஸ் ஸித்தீக்கு றலியல்லாகு அன்குதெண்டித்ததும் வருத்தமானதுதான் என்கிலும் அபூபக்ரிஸ் ஸித்தீக்கு றலியல்லாகு அன்குவுக்கு அந்நாளையில் அனேகமுதவி யிருந்தது இமாம் ஹன்பலிய்யி றலியல்லாகு அன்குவுக்கு யாதொரு உதவியுங் கிடையாது.

பைகக்கிய்யி றஹிமகுல்லா சொல்லுகிறார்கள், இபுறாகீமுல் முஸ்னிய்யி றஹிமகுல்லா சொல்லுகிறார், இமாம் ஹன்பலிய்யி றலியல்லாகு அன்கு இஸ்லாமார்க்கத்துக் குதவியா யிருந்து தான் துன்பத்தை யனுபவித்துக் கொண்டது, எவ்விதமாக இருக்கிறதானல் (ரித்தத்) துடைய நாளில் செய்யிதனா ஸித்தீக்கு றலியல்லாகு அன்கு (ஷக்கீக்கத்து) என்னும்தலத்திலே செய்யிதனாஉஸ்மானி றலியல்லாகு அன்கு (ஸிப்பீனில்) செய்யிதனால் முறுத்தலா அபுல் * ஹஸனைனா றலியல்லாஹு அன்ஹுமா ஆகஇந்தநாலுபேரும் தீனுல் இஸ்லாமில் இஸ்லாம்களுக் கிடையில்எவ்விதம் துன்பத்தை யனுபவித்தார்களோ அவ்விதமே யிருக்கிறது என்கிலும் அதிலும்

* ஹஸனைன் - என்பது, இமாம்ஹஸன் - இமாம் ஹுஸைன் இருவர்களுமாம்.



புதுமையாயிருக்கிறது என்னன்றால் (முஃத்தஸிம்) ஆகிறவர் இராஜாவாக விருக்கும் இமாம்ஹன்பலிய் யாகிறவர்கள் ராஜாவல்ல, மேலும் அவர்களுக்கு மனுடர்களுடைய வொத்தாசையும், வாட் கத்தி முதலான வாயுதங்களினொத்தாசையும் யாதொன்றுங்கிடையாது.

அபூபக்ரிஸ்ஸகுற வஜுதிய்யி றஹிமகுல்லா சொல்லுகிறார்கள் (சகுறவறுது) என்னு மூரிலுள்ள வுத்தியகாரமனுடன் ஓர் தலையாரிவந்தான் அவன் குஷ்டவியாதி பிடித்துக் கைகாலெல்லாம் கண்டங் கண்டமாய்த் தறிபட்டிருந்தான், அவனிடம் அதின் முகாந்திரத்தைக் கேட்டதிற் சொன்னான், (முஃத்தஸிம்) என்கிற ராஜாவுக்குத் தலையாரியாக விருந்தவர்கள் நூற்றைம்பதுபேர் களுண்டும், இமாம் அஹ்மதபுனு ஹன்பல் றலியல்லாகு அன்குவை ஆயிரம் அடியடிக்கும்படி கட்டளை யாயிருந்தபோது நானும் தலையாரிகளில் நின்றுமுள்ளவனாக விருந்தேன், அப்போது, நானும், மற்றும் பேர்களடங்கலும் அந்த அடியைக் கணக்குப் போட்டுக் கொண் டொருவனுக்குப் பின்னொருவனாக வடித்தோமென்றான்.

அபூபக்றும், நஜாஹீயும் சொல்லுகிறார்கள் ஹன்பலிய்யி றலியல்லாகு அன்குவை யடிக்கப் பட்டதேயந்தத் திசதியில் நாங்கள் (உப்பாதான்) என்கிற வூரிலிருந்தோம். அந்த வூருடைய பூமி கிடுகிடென் றசைந்ததென்று, கிலாலுபுனு அலாசொல்லுகிறார், அல்லாகுத் தஆலா வாகிறவன் முகம்மதுநபி சல்லல்லாகு அலைகிவசல்லமுடைய (உம்மத்துகள்) பேரில் நாலு (உலமாக்களைக்) கொண்டு, நாலு (முசிபத்தை) விட்டும் காத்துக் கொண்டான், அந்த நால்வருமில்லாதிருக்கில், அனேகம் பேர்களு மோசமாய்ப் போவார்கள், அவர்களாரானால், (குறுஆனைக்)கொண்டுள்ள (அக்கீதாவை) ஹன்பலிய்யைக் கொண்டும் (ஹதீதிலுள்ள பிக்குகை) ஷாபிஇய்யைக் கொண்டும் (ஹதீதில்) நவமானதுகளை அபீஉபைதிபுனி சல்லாமைக் கொண்டும் (ஹதீதிற்)பொய்க்கட்டுச் செய்வதை விட்டும் உண்மையையஹ்யபுனு முஈனைக் கொண்டும் காத்துக் கொண்டானென்று.

சாலிஹுப்னு அஹ்மதபுனி ஹன்பல் றஹிமகுல்லா சொல்லுகிறார், ஒருநாள்என் தகப்பனாரிடத்திற் சொன்னேன் அன்மாத்திய்

யுல் பக்கீரு றஹிமகுல்லா அவர்களிடம் ஒருமனுடன் வந்து நானுங்களுக்குச் செய்த தீங்கை விட்டுப் என்னை (ஹலாலில்) ஆக்கிவிடுமென்றுசொன்னபோது, அவர்கள், ஒருக்காலும ஒருவனையும் நான் (ஹலாலில்) ஆக்கேனென்றார்களென்று சைக்கினையாய்ச்சொல்லவும், புன்கிரிப்பாய்ச் சிரித்துக்கொண்டு சும்மா யிருந்துவிட்டார்கள் இதுமுந்தின தடவைகளிலும் பிந்தின தடவைகளிலுமா யிருக்கவும் போதும், நான் சொல்லிச் சிலநாட் சென்றபிறகு அவர்களென்னைக் கூப்பிட்டு மகனே குறுஆனில் (பமன் அபா வ அஸ்லஹ பஅஜ்றுகு அலல்லாகி) யென்கிற இந்த (ஆயத் துடைய தப்ஸீறை) நான் பார்த்ததில் (கியாமத்துநாள்) வாக்கு விட்டகாரணத்தால் ஒரு (மலக்குச்) சத்தம் போடுவார் யாரார் அல்லாவுடைய கூலி அல்லாவின் பேரிலே தரிபட்டதா யிருக்கிறதே அதுயாரென்று.

அப்போது யாராகிலுமொருவன் ஒருவனுக்குச் செய்திருந்த தீங்கைப் பொறுத்து விட்டானே யந்தவொருவனைத் தவிர யாரும் முன்னேறி வராவென்று வருகிறது ஆகையால் என்னை யாரார் நோவினை செய்திருப்பார்களோ அவர்களெல்லாரையும் (ஹலாலில்) ஆக்கிப் போட்டேன இன்னும் அல்லாகுத் தஆலா விடத்தில் நானேயென்னுடைய (சபபினால்) ஒருவனையும் (அதாபு) செய்யாதிருக்கவென்றும் (துஆக்) கேட்டிருக்குகிறேனென்றார்கள்.

எட்டாம் பிரிவாகிறது.

இமாம அஹ்மதுபுனு ஹன்பல் றலியல்லாகு அன்குவுடைய வபாத்திலும், பின்னும், விழிப்பிலும், மறைவிலும, அவர்கள் சிறப்பில் மற்றும்பேர்கள் கண்டதிலும், பேசுகிறதா யிருக்கும்.

அஹ்மதுபுனு முகம்மதில் கின்திய்யி சொல்லுகிறார் நான் ஹன்பலிய்யி றலியல்லாகு அன்குவுடைய (வபாத்துக்) குப்பிறகு மனமில் அவர்களைக் கண்டு அ. அப்தில்லாவே அல்லாகுத் தஆலா உங்களுக்கு என்னவுபகாரஞ் செய்தான் என்னசெய்தானென்று கேட்டேன அப்போது சொன்னார்கள் அல்லாகுத் தஆலா என்னைப் பார்த்து அஹ்மதே துப்புமை யென்னுடைய காரியத்தில் நீர் நேரான நிலையாக நின்றதைப் பற்றி ரொடிபட்டுச் (சபுறு) செய்து கொண்டீரோவென்றுகேட்டான் நாயனே மெய்தானென்றேனுடனே அல்லாகுத் தஆலா சொன்னான் அஹ்மதே யென்னுடைய லிக்



காவை யிதோ தந்துவிட்டேன் தெரிசித்துக் கொள்ளுமென்றுனென்று சொன்னதாகப் பேசி வரப்பட்டது- இதை, இபுனு குல்லக்கான் தாரிக்கென்கிற கிதாபிற் பேசி வந்தார்கள்.

அபூ, சஈதில் வாஇது றலியல்லாகு அன்கு (கித்தாபுல்-பிஷாறத்தி, வன்னிதாறத்தி, பிஇல்மித்தஃபீரி) யென்கிற கித்தாபில் அஹ்மதுபுனு முகம்மதிபுனில் ஹஜ்ஜாஜு றஹிமகுல்லாவைத் தொட்டும் பேசி வருகிறார், அவர் சொல்லுகிறார், நான் மாலிக்கிய்யி, ஷாபிஇய்யி, ஹன்பலிய்யி இன்னும் (பிக்குகு) டைய(இல்மு)எவர்களளவிற் சேருமோ, அவர்களுடைய (பிக்குகெ) ல்லாம் ஓதி யவர்களுக் கிடையி லிருக்கிற (கிலாபான - மஸ்அலாக்) களையுமறிந்தபின் னிவர்களி லாருடைய சொற் றிறமென் றறிந் ததின்பேரில் நானடக்க வேணுமென்று நாடி அல்லாகுத் தஆலா விடம் (துஆக்) கேட்டேன், நபிசல்லல்லாகு அலைகிவ சல்லத்தை மனமிலெனக்கறிவித்துத் தரவேணுமென்று,

இந்த நாட்டம் ஒருவெள்ளிக் கிழமை வந்தொற்றுக் கொண்டது. அன்றிரவி லென்னுடைய (அவுறாதையும்) விட்டுப் பராக்கொழிந்து ஓதல் களையெல்லா முடித்துப் போட்டு (உளுவின்) பேரிற்றான் படுத்துக் கொண்டேன், பின்னர் (சஹர்) நேரமாகி (முஅத்தின்-வாங்கு) சொல்வதை வழிபார்த் திருக்கும்போது என்னை நித்திரை மிகைத்து றசூல சல்லல்லாகு அலைகிவ சல்லமவர்களை யென்னளவில் முன்னேறி வரும்படி யாகவும், இன்னுமொரு மனுடன் வெள்ளை யுடுமான மணைந்து தலையில் முக்காடும் போட்டுச் சலாம்சொல்லி வந்திருக்கவும் நான் நபிசல்லல்லாகு அலைகி வசல்லமளவில் முந்துதலாகிச் சலாம் சொல்லி யவர்கள் கையை முத்திக் கொள்ளவும, அவர்களுடன் (அசுஹாபி) களுமிருக்கவும், நபியல்லாவும், அசுஹாபிகளு மன மகிழ்ச்சியடைந்திருக்கவும், நானவர்களிடம் சில (மஸ்அலா-ஹறக்குகளை) யென்னுடைய (கல்பில்) இதைப் பற்றி விளக்க வேணுமென்றெண்ணமிருந்ததே யதையெல்லாம் கேட்கவும் மனம்கண்டேன்.

அப்போது, நபிசல்லல்லாகு அலைகிவசல்லம் சொல்லுகிறார்கள். நானிவர் சொன்னதுபோலேதான் சொல்லுவேனென்று அந்த மனுடன் சொல்லுகிறார், நானிவர் சொன்னதுபோலே தான்

சொல்வேனென்று, இவ்விதம், இரண்டு மூன்று தரம் சொன்ன
பிறகு மூன்றாவது, சைக்கினைசெய்யப்பட்டமனுடரி னிடந்தான்
ஜவாபு பொருத் திருக்கிறதென் றெண்ணி, மூன்றாவதைப் பார்க்
கும்போது, அவர்தான் இமாம் அஹ்மதுபுனு ஹன்பல் றலியல்
லாகு அன்குவா யிருக்குகிறார், உடனே றசூல் சல்லல்லாகு அலை
கிவசல்ல மிடத்திற் சொன்னேன், இவராகிறவ ருங்களின் (தீனு
டைய) சங்கதியில் மிகுதி சோவினை பெற்றுச் (சபுறு) செய்திருக்
குகிறாரெனறேன், அதற்கவர்கள், மெய்தானென்றுசொல்லி அல்
லாகுத் தஆலா அவனைக்கொண்டு செய்தசிறப்பைப் பாரென்று
சொன்னார்கள் மட்டில்லாத சிறப்பைக் கொடுக்கப்பட் டிருக்
கிறது.

பின்னை சென்னளவிற் திரும்பிப் பார்த்து நம்முடன் (பஜிறு)
தொழ நாட்ட மிருக்கிறதோ வென்று கேட்டார்கள், அப்போது
அல்லாவுடைய றசூலே யதின்பேரி லெனக் கிருக்குமாசையை நா
னெவ்வளவென்று சொல்லப் போகிறனென்று சொன்னேன்,
பின்னர், தொழுகைக்கு (இக்காமத்துச்) சொல்லப்பட்டது, நபி
சல்லல்லாகு அலைகிவசல்லம் இமாமாய்நின்று தொழுவித்துக் கடை
சியில் (அஸ்ஸலாமு அலைக்கும் வறஹ்மத்துல்லாகி) யென்று சலாம்
கொடுத்தார்கள், நானும் வலதில் சலாம கொடுத்து
விழித்து விட்டேன் விழிக்கும்போது நானும் (கிபுலாவை) முன்
னோக்கி (அத்தஹிய்யாத்துக்)கெவ்விதம் கைகளைத் திருப்பி யிருப்
பேனோ அவ்விதமாகத்தா னிருக்கிறேன். அந்த (வக்தில்) திட்
டமாகத்தொழுதுபோட்டேனென்கிற வெண்ணமுடையவனாகவே
யிருக்கிறேனென்றார்கள்,

இபுனு மஜ்மஉசொல்லுகிறார்கள், நமக்கடுத்த வீட்டில் ஒரு
மனுடனாயிருந்தார், அவரை (கஸ்வீன்) என்கிற வூரில் (கூ
தாகக்) கொல்லப் பட்டுப் போனது, ஒருநாள், அந்த வூரிலானவ
ருடைய வுடற்பிறந்தான் (சபுஹு) நேரத்தில்வந்து நானோர் புது
மையான (மனம்) கண்டேனென்றான், அதாவது, என்னுடற்பிறந்
தானே மிகுந்து அழகானவனாக வொரு குதிரையி லேறிவரக்கண்டு
கேட்டேன், என்னுடற்பிறப்பே, நீர் கொல்லப்பட்டுப் போனீரே
இப்போ தெவ்விதம் ஹயாத்தாகி விட்டீரென்று அப்போதவர்



சொல்லுகிறார், இன்றையதினம் அல்லாகுத் தஆலா விடத்தில்
நின்று முக்தரவ்வந்தவானலோகத்தா ரடங்கலும் பிஸபிஷிஇ
ள்ள ஷூகதாக்க ளடங்கலும், அஹ்மதுபுனு ஹன்பல் றலியல்
லாகு அன்குவுடைய (ஜனாசா) வுக்கு ஹாலிருக்கும்படி (குக்கும்)
வந்தது, நானு மவர்களி லுள்ளவனாக விருப்பதால், அந்த ஜனாசா
வுக்குஹாலிருகப் போகிறனென்று சொல்லி விட்டுப் போய்விட்
டார், நான்விழித்து விட்டேனென்று.

(றாவி) சொல்லுகிறார், அந்த மனுடன் மனம்கண்டு சொன்ன
விரவையும், அஹ்மதுபுனு ஹன்பல் றலியல்லாகு அன்கு (வபாத்
தான) விராவையும் கணக்குப் பார்த்ததில் ஒரே திகதியா யிருந்தது
இபுனு .சபுஹத்தான் என்கிற பிரசித்தமாக்கப் பட்ட பெரியோர்
சொல்லுகிறார், அஹ்மதுபுனுஹன்பல் றலியல்லாகு அன்கு(வபாத்
தான) போது, ஒரு மனுடன் மனமிற்கண்டார், ஒரு (கபுரின்மே
ரில்)ஓர் குளோப்பென்னும் விளக்குச்சோதிப் பிரகாசம் போடப்
பட்டிருக்கிறது, இதின் சபபென்னவென் றிந்த மனுடன் கேட்ட
வுடன்.ஜவாபு சொல்லப்பட்டது,நீயறியவில்லையா,இன்றையதினம்
மவுத்தான மனுடனாகிறவர், கபுராளிக ளடங்கலுக்கும் ஒளிவாயி
ருக்கும், இவர் அவர்களுக் கிடையிற்போய்த் தங்குவதால் அவர்க
ளுடைய கபுறுகளுக் கொளிவை பிறக்கப் பட்டது, இன்னும்
(அதாபு)ப்படுகிறவர்களுக்கும கிருபைசெய்யப் பட்டதென்று.

இபுறாகீ முபுனு ஜஃபரில் மறுவ ஸிய்யி றஹிமகுல்லா சொல்
லுகிறார்,நான்மனமில் அஹ்மதுபுனு ஹன்பல் றலியல்லாகு அன்கு
வைக் கண்டேன், ஒருஅழகான மாதிரி நடையாக நடந்து அதிற்
குசாலாய் நடக்குகிறார்கள், நான்கேட்டேன் அபா அப்தில்லாவே
இந்த நடை யார் நடக்கிற மாதிரியென்றேன். அப்போது, சொன்
னார்கள், இஸ்லாமுடைய வீட்டிற் பணிவிடை செய்தபேர்கள் நடக்
கிற மாதிரியென்று, முகம்மதுபுனு ஹன்பல் றஹிமகுல்லா சொல்
லுகிறார்கள், இமாம் அஹ்மதுபுனு ஹன்பலை மனமிற் கண்டேன்,
குசாலாய் பெருமைத் தனமாக நடந்து கொண்டு போறார்கள்,
அப்போ திந்த நடை யேதுமாதிரி நடையென்றேன், அதற்குச்
சொன்னார்கள் (தாறுஸ் ஸலாம்) என்கிற சொர்க்கத்துக்குப் போற
பேர்க ளிவ்விதந்தா னடந்து போறதென்றார்கள்,

அப்போது, நான் கேட்டேன், அல்லாகுத் தஆலா உங்களுக்கேது செய்தானென்று. அதற்குச்சொன்னார்கள், என் பிழையைப் பொறுத்து எனக்குச் சங்கை யென்னும கிரீடம் போட்டுமுத்தினாலும், இரத்தினத்தினாலும், அழுத்திய இரண்டு பாதரெட்சையும் பூட்டிச் சங்கையாக்கியிருக்குகிறானென்று, பின்பு சொன்னார்கள் நாயன் என்னைப் பார்த்து அஹ்மதே இந்தச் சங்கையாகிறது (குறுஆன்) படைக்கப் பட்ட தல்லவென்று சொன்னீரே அந்தச் (சபபினா லென்றுஞ் சொன்னான், எனவுஞ் சொன்னார்கள்.

ஜைஷஷபுனுல் வறுதுசொன்னார்கள், நபிசல்லல்லாகு அலைகிவசல்லத்தை மனாமிற் கண்டு அல்லாவுடைய நபியே அஹ்மதுபுனு ஹன்பலுடைய (ஹாலென்ன) வென்றுகேட்டேன், உடனேசொன்னார்கள், உம்மிடம் மூசாநபிவருவார்கள் அவர்களிடங்கேளுமென்றார்கள் பின்னாலே மூசா அலைகிஸ்ஸலாம் வந்தார்கள் அவர்களைக் கண்டு அல்லாவுடைய நபியே அஹ்மதுபுனு ஹன்பலுடைய ஹாலென்ன வெனறேன், உடனே சொன்னார்கள், அவரைத் துன்பவேளையிலும், இன்பவேளையிலும் சோதிக்கப் பட்டு அவரை யுண்மை யுடையவராய்க் காணப் பட்டபடியால் (சித்திக்கீன்கள்) கூட்டத்தில் மேலான (தறஜாவில்) ஆக்கப்பட் டிருக்கிறதென்று.

அப்துல்லாகிபுனுஅபீ தாவுது றஹிமகுல்லா வாகிறவர், அலிய்யுபுனு சுகைலீஸ் ஸஜஸ்தானிய்யி யென்கிற (காரிஜிய்யான) மனுடனுக்குச் சொன்னார். ஸஜஸ்தானிய்யே, நீரிந்த (காரிஜிய்யி)னுடைய (இஃத்திக்காதை) விட்டுவிடுமென்று, அப்போது, இபுனு சுகைல் சொன்னார் நானந்த (இஃத்திக்காதை)விடுவதெல்லாம்உம்முடைய சொற் கொண்டல்ல, என்கிலும், அஹ்மதுபுனு ஹன்பலுடைய சொற் கொண்டுதானென்றார், அப்போது, நான் கேட்டேன் நீர் அஹ்மதுபுனு ஹன்பலைக் கண்டிருக்கிறீரா, கண்ட விதத்தைச் சொல்லுமென்று; உடனே சொன்னார். நான் மனாமிற்கண்டேன், திடனாக (கியாமத்து) நாளானதுபோலும், கல்க்குகளெல்லாம் ஒரு பாலத்தடியில் வந்து வந்துநின்று பாலந்தாண்டுகிற தற்கு அவ்விடத்தில் உத்தரவு தேடுகிறதுபோலும், அதற்காக வோர் மனுடன் ஒருமுத்திரைமோதிரம் கொண்டுவந்துகொடுக்கிறார் ஒருமனுடன் அதைவாங்கி மனுடர்களை முத்திரை வைக்கவும் செய்கிறார்



மோதிரங் கொடுக்கவும் செய்கிறார், யாராவு தந்தமோதிரம்பெற்றவர்கள்தான், அந்தப்பாலந்தாண்டிப் போகிறார்கள், அப்போது, நான் கேட்டேன், இந்த மோதிரங்கள கொடுக்கிறவராரென்றுஅப்போதெனக்குச் சொல்லப்பட்டது, இவர்தான் அஹ்மதுபுனு ஹன்பல் றலியல்லாஹு அன்ஹு வென்று.

ததிக்கிறத்துல் அவுலியா வென்கிற கித்தாபிற் சொல்லுகிறார் அஹ்மதுபுனு ஹன்பல் றலியல்லாகு அன்கு அவர்களைக்கட்டியடிக்கப் பட்டிருந்த அடிகளுடைய வருத்தத்தினால் (ஷுஹதாக்க)ளுடைய (தறஜாவை) யெற்றி வபாத்தாக வபாத்து முடிகினபோது, தங்களுடைய (சக்றாத்து) வேளையில் கைகொண்டு சைக்கினை செய்து (லாபஃது) அப்புறங்கிடையாதென்று சொன்னார்கள் அப்போது, அவர்கள் மகனார் கேட்டார், இந்த நேரத்தி லென்னபேச்சுப் பேசுகிறீர்களென்று உடனே சொன்னார்கள் இதுசங்கடத்துடைய நேரமாயிருக்கும் இதிலுமக்கு ஜவாபுசொல்வதிற் பேச்சை மிருதுமாக்கக் கூடாது (ஷைத்தான்)என்முன்பாகவந்து தரிபட்டுநின்றுகொண்டு தன்னுடைய தலையிலே, தன்கையினால் மண்ணையள்ளிப் போட்டுக்கொண்டு என்னைப்பார்த்து அஹ்மதே யென்னைவிட்டும் தப்பி யீடுபீட்சி யானீரென்றான்.

அப்போது நான் சொன்னேன் (லா-பஃது) என்று அதற்குப்பின் உன்னாற் கலைக்கக் கூடாதென்று மகனே யறிந்துகொள்ளும், என்னில் ஒருமூச்சுத் தரிபடா யிருக்குமளவும், அச்சந் தீருகிறது கிடையாதென்றார்கள், அதாவது (ஷைத்தானுடைய) கலைவினால் (ஈமானை) யுரியப்படுமென்பதை விட்டும் அச்சந் தீர்ந்திருக்கக் கூடா தென்பதாம். ததிக்கிறத்துல் அவுலியாவில் வருகிறது இமாம் அஹ்மதுபுனு ஹன்பல் றலியல்லாகு அன்கு வபாத்தாகி (ஜனாசாவைச்) சுமந்து கொண்டு போறபோது பக்கிசாரங்கள் கூட்டங்கூட்டமாய் வந்து (ஜனாசாவில்) விழுந்துகொண்டே யிருந்தது அவைக ளின்ன விடமிருந்து வருகிறதென்று தெரியாது அவைகள் தவனத்தினால் மாய்ந்து மாய்ந்து செட்டைகளினால் அறைந்தறைந்து விழுந்தழுவதுபோ லிருக்கிறது.

அஹ்மதுபுனு அபீ காலிது றஹிமகுல்லா சொல்லுகிறார்கள். அஹ்மதுபுனு ஹன்பல றலியல்லாகு அனகுவுடைய (ஜனாசாவின)

யேரில் வெள்ளிக்கிழமை தொழுவிக்கப் பட்டது நாளும் (ஹாவி
ருகித்) தொழுதே னென்றும், அந்தத் தொழுகையில் இமாமாக
நின்றது முகம்மதுபுனு அப்துல்லாஹிபுனு தாகி றென்கிற இமாம்
தான் தொழுவித்தார்கள் ஜனாசாவை (அபீகிருக்கா) என்கிற முத்த
வெளியில் வைக்கப் பட்டது. ஜமாஅத்துகள் இமாறத்து ஸஃக்கிர்
றக்கீக்கி) யென்கிற தலப் வரையிலே தரிபட்டார்கள் (அபீகிருக்
து) என்கிற முத்தவெளிக்கும் (இமாறத்து ஸஃக்கிர் றக்கீக்கி)
யென்கிற தலத்துக்கு மிடையில் இரண்டு நாழிகை வழிதூரமிருக்
கிறது.

அதாவது உத்தேசம் சற்றேறக்குறைய இரண்டேமுக்கால்
மயிற்றூர முள்ளதா யிருக்கும் (ஜமாஅத்து) களுடைய(சப்பு)என்
னும் அணிவகுத்து நின்றதின் அகலம் இரண்டு நாழிகை வழித்தூ
ரமும் (சப்புகள்) தொடுத்து நின்ற துடைய நீளம் இரண்டு நாழி
கை வழித்தூரமு மிருந்த தென்று முகம்மதுபுனு அப்தில்லாஹி
புனித்தாகிறு என்கிறவர்கள் தன்னுடன் இந்தஜனாசாத்தொழுகை
யில் (ஹாவிருக) விருந்தவர்க ளெத்தனைபேர்கள் காணுமென்று
கேட்டார்கள் உடனே கணக்குப்போடப்பட்டுச் சொல்லப்பட்ட
து, எட்டு லட்சம் ஆண்பிள்ளைகளும் அறுபதினாயிரம் பெண்பிள்
ளைகளுமென்று.

வழுக்கானிய்யி றஹிமகுல்லா சொல்லுகிறார் இமாம் அஹ்ம
துபுனு ஹன்பல் றலியல்லாகு அன்கு வபாத்தாகிய அன்றையதி
னம் நடந்த சிறப்புகள், காரணீகங்கள், புதுமைகள் இவைகளால்
(யகூதிகள் - நசாறுக்கள் - மஜூசிகள்) இந்தமூன்று ஜாதிக்(குப்பா
றுகளில்) நின்றும் இருபதினாயிரம் பேர்கள் இஸ்லாத்தில் வந்து
விட்டார்களென்றும், இன்னும், அவர்களுடைய வபாத்தினால் இஸ்
லாமாகிய ஜமாஅத்தில் இழவுகொண் டாடியது போல் மற்றும்
(நாசாறுக்கள் யகூதிகள்-மஜூசிகள்) இவர்களிலும்இழவுகொண்
டாடினார்கள்

இன்னும்இபுனு குல்லக்கானுடைய, தாரீகிலும், இபுனு தை
மியா- றஹிமஹு ல்லாவுடைய இக்தூல் ஹன்பலிய்யிலும் பேசி
வருகிறார்கள், இமாம்அஹ்மதுபுனு முகம்மதிபுனி ஹன்பல் றஹி
மகுல்லாவுடைய தலைமுறையாகிறது, முஅத்துபுனு அத்னான் கிளை



யிற் சேர்ந்ததாயிருக்குமென்றும் அவர்கள் வபாத்தான அன்றை
யதினம நடந்த புதுமைகளைக் கண்டு யகூதிகளிலும், நசாறுக் களி
லும் மஜூசிகளிலும் அறுபதினாயிரம் பேர்கள் இஸ்லாமாகினார்
களென்றும், அவர்களைப்போலே தன்னுடைய றாவையும், நபு
கையும், தீனின்னு மார்க்கத்துக்காக குறுபானுக்கினவர்கள்
இமாம்களிலொருவருமில்லை யென்றும் றலியல்லாஹு அன்கும்
வறலு அன்கு

கறுவிசுவ் குஹுபு என்கிற கித்தாபையுடைய் யஹ்யல்ஜ
மானீ றஹிம்குல்லா சொல்லுகிறார்கள், நான் கனவில் றசூல்சல
லல்லாகு அலைகிவசல்லத்தைக் கண்டேன், அவர்கள் சொல்லுகிறார்
கள், ஈடேற்ற முடையவர்க ளீடேறினார்கள், ஹலாக்கை யுடைய
வர்கள் ஹலாக்காகினார்களென்று, அப்போது நான், கேட்டேன்
அல்லாவுடைய றசூலே யீடேறினவர்களாரென்று, உடனே றசூல்
சல்லல்லாகு அலைகிவசல்லம் திருவுள மானார்கள். அஹ்மதுபுனு
ஹம்பலும், அவரைச் சேர்ந்த அசுஹாபி மார்களுமென்று.

அலிய்புபுனுல் முவப்பக்கு றஹிமகுல்லா சொல்லுகிறார்கள்
நான் (பைத்துல்லாவிற்) போய் (ஹஜ்ஜு) செய்வதற்காக நாடிப்
புறப்பட்டு ஒருதலத்திலே தங்கிப் படுத் துறங்கத் தலையை வைத்த
போது ஓர் கனவும் கண்டேன் அதாவது (கியாமத்து) நாளாகி(கல்
க்கு) களை யெழுப்பிச் சேகரமாக்கப்பட்டுக் கேள்வி கணக்குக்காய்
நிறுத்தப்பட்டிருக்கும்நேரம் (அலிய்புபுனுல் முவப்பக்கு எங்கே
யென்றொரு கூப்பிடுவார் கூப்பிட்டார், உடனே யென்னளவில்பிர
மாண்டமான இரண்டு (மலக்குகள்) வந்துஎன்கொடுங்கையைப்
பிடித்திழுத்து அல்லாகுத் தஆலா வுடைய சமுகத்திற் கொண்டு
வந்து விட்டார்கள், அல்லாகுத் தஆலா என்னைக் கேள்வி கணக்
குக் கேட்டுக் கொண்டிருக்கும்போது அவன் என்னைக் கேட்கிற
வட்டு வருக்கததால் நானீடேற்சியாகிற தில்லை யென்றெண்ணும்
வரையிற் கேட்டுப்பின்னர் சொர்க்கத்திற் புகுத்தி வைக்கும்படி
யுத்தரவாக்கினான்.

அப்போது, நான் பார்த்தேனஅங்கோர் மனுடனிருக்கிறார்
அவருக்கு முன்பாக வஜீபனத்தின் பாத்திரங்கள் வைக்கப்பட்டி,
ருக்கிறது அவருக்கு வலதில் ஒரு மலக்கிருந்து வஜீபன முட்டுகி

ருர் இடத்தில் ஒரு மலக்கிருந்து தண்ணீர் புகட்டுகிருர் அங்கிருக்
கும் வஜீபனமும் தண்ணீரும் குறையவுமில்லை, அந்த இரண்டு மலை
க்குகள் சடையவுமில்லை, அந்தமனுடன் வயிறு நிரம்பவுமில்லை
யென்கிலும் சுகண்டியாய்த் தின்னுகிருர் அவரை விட்டுப்போட்டு
இன்னுங் கொஞ்சந் தூரம் நடந்து போனேன், அவ்விடத்தில்
ஓர் மனுடன் தன் பார்வையை வுயர்த்தினவராய், ஹக்குத் தஆலா
வைச் சந்தித்துக் கொள்ளுகிறவரைப்போ லிருக்குகிருர், அவரை
விட்டும் கொஞ்சம் தூரமானவுடன் ஒரு மனுடனு ிருக்குகிருர்,
அவர் மேலில் வெள்ளை யுடுமான மணிந்தவராய் இங்கேயிருந் தங்
கும், அங்கேயிருந்திங்கும் புகுதுகிறதாம், புறப்படுகிறதாம், மிகு
சமாய்ப்பிள்ளைகளைச்சாகக்கொடுத்தபெண்பிள்ளைபோலும்,தடுமா
றி யலையும், ஆண்பிள்ளைபோலும் தேடித் தேடியலைகிருர். இவ்வி
தமாக விந்த மூன்று மனுடரையும் கண்ட புதுமையால் (இன்னு
லில்லாகி, வஇன்னுஇலைகி ருஜிஊன்) என்று சொன்னேன்.

அப்போதொரு (மலக்குச்) சொன்னுர், நீர்என் (இன்னுலில்
லாகி) சொன்னீர் இது முசீபத்தல்லவே யென்று அப்போதுநான்
சொன்னேன் இந்தமூன்று மனுடரையும் நான் கண்ட பலபலவிதங்
களையும், பிந்தின மனுடனுர் ஓடியோடித் திரிகிற விதத்துக்காக
வேண்டியும், சொன்னேனென்றேன், பின்னர், அந்த மூன்று மனு
டரையும அறிவீரோ வென்று கேட்டார், அறியே னென்றேன்,
அப்போ தவர்சொன்னுர், (முந்தினவராகிறவர்) பிஷுறுல் ஹாபி
யாயிருக்கும், அவர் மிகுந்த நோன்பாகப் பசியாகவே யிருந்து அல்
லாகுத் தஆலாவைச் சந்தித்தார், அதனுலேதான் அவருக்கு வஜீப
னமும், தண்ணீரு மூட்டப்படுகிறது (இரண்டா மனுடனுகிறவர்)
மஃறூபுல் கருக்கிய்யி றலியல்லாகு அன்குவா யிருக்கும், அவர்,
அல்லாகுத் தஆலாவுக்குச செய்த வணக்கத்தால் நரகத்தைப் பயப்
படவு மில்லைச், சொர்க்கத்தை ஆசை வைக்கவு மில்லை, அவனொரு
வனையே நாடியபடியால் (லிக்கா) "அவனிலேயே முகம் வைத்துக்
கொண்டு (லிக்காவைப்) பெற்றுக்கொள்ளுகிறவரா யிருக்குகிருர்.

(மூன்ருவது மனுடனுகிறவர்) இமாம் அஹ்மதுபுனு ஹன்பல்
றலியல்லாகு அன்குவா யிருக்கும், அவர்கள் புகுதுகிறதும் புறப்
படுகிறதுமா யிருக்குகிறது - தாம் (மதுகபுடைய) இமாமானதால்



(சுன்னத்து-ஜமாஅத்துகள்) சொர்க்கம்போய்ச்சேர்ந்து கொள்வ
தை யவேட்சையாக வோடியோடிக் கோழியானது தன்னுடைய
குஞ்சுகளை யாதரிக்க வேண்டி யெவ்விதம் அவேட்சை கொண்டு
திரியுமோ அவ்விதமிருக்குகிருர்களென்ருர், பின்னர், நான்விழித்
துவிட்டேனென்று சொன்னுர்.

சாலிஹீன்களிலொருவரைத் தொட்டும் பேசி வரப்படுகிறது
அவர் சொல்லுகிருர் நானொரு மனம் கண்டேன், அதாவது (கியா
மத்து) நாளாகி (கல்க்குகளை) யெல்லாம் அல்லாகுத் தஆலா தன்
னுடைய சமூகத்தில் நிறுத்திக்கொண்டு கேள்வி கணக்குக் கேட்
பதற்காக வாரம்பித் திருக்கும்போது, அல்லாகுத் தஆலாவிடத்
தில் நின்றும், நாலு இமாம்களை ஹாலிருக்கி வையுங்களென்று சத்
தமுண்டாகிப், பின்ன ரவர்களை ஹாலிருக்கப்பட்டது, அவர்கள்
மிகவும் பயந்தவர்களாக, அதப்புடையவர்களாக வந்து நின்ருர்கள்,
அப்போது, அல்லாகுத்தஆலா அவர்களில் முந்தினவர்கள இமாம்
அபூ ஹனீபா றலியல்லாகு அன்குவைப், பார்த்து, நாம் அனுப்பிய
(குறுஆன்) ஒன்று (றசூல்) ஒன்று, அவ்வித மிருக்க நீங்கள் நாலு
பேரும் நாலு (மதுகபு) என் றெடுத்து மனுடர்களை யவரவ ருண்
டாக்கிய (மதுகபில்) அவரவரைத் தொடர்ந்து நடந்தபேர்கள் அவர்
களைக் குறித்து (ஹனபிய்யி-ஷாபிஇய்யி) யென்றும் கூப்பிட்டுக்
கொண்ட காரணமென்னவென்று கேட்டான், அதற் கவர்கள் யா
தொரு ஜவாபும் சொல்லா திருந்தார்கள்.

பின்பு இமாம் மாலிக்கு றலியல்லாகு அன்குவைப் பார்த்து
கேட்டான்; அவர்களும் யாதொரு ஜவாபும் சொல்லாம லிருந்து
விட்டார்கள், பின்னர், இமாம் ஷாபிஇய்யி றலியல்லாகு அன்கு
வைப்பார்த்துக் கேட்டதிலும், அவர்களும் யாதொரு ஜவாபும்
சொல்லா திருந்தார்கள், பின்பு, இமாம் ஹன்பலிய்யி றலியல்லாகு
அன்குவைப் பார்த்துக் கேட்டான், அதற் கவர்கள் சொன்னுர்கள்
நாயனே நீ யுன்னுடைய குறுஆனிற் றிருவுளமாயிருக்குகிருய்.
உன்னுடைய திருவுள முண்மையானதா யிருக்கும் (கியாமத்து
நாளில்) அவர்கள்யாதொரு பேச்சும்பேசார்கள், றஹ்மானுனவன்
யாருக் குத்தாரங் கொடுப்பானே வவனே யொழிய வென்று,
ஆகையாலெனக்குப் பேசும்படி யுத்தாரந் தருவியாகில நான்பேசு

கிறேனென்றார்கள், உடனே ஹக்குத் தஆலா அஹ்மதே நீர் பேசுமென்றான், பின்பு அஹ்மதுபுனு ஹன்பல் கேட்டார்கள் நாயனே நாங்கள் நால்வரும் நாலுவிதமாக (மதுகபு) உண்டாக்கிக் கொண்டதற்குச் சாட்சி யாரென்று.

அப்போது, அல்லாகுத் தஆலா சொன்னான், என்னுடைய (மலக்குகள்) சாட்சி சொல்வார்களென்று, உடனே இமாம் சொன்னார்கள், நாயனே நீ குறுஆனிலே திருவுளமாயிருக்கிறாய் உன்னுடைய சொல்லோ ஹக்கானது, அதாவது, எங்கள் தகப்பனார் (ஆதம்) அலைகிஸ்ஸலாத்தைப் படைக்க வெகு காலத்துக்கு முன் உன்னுடைய மலக்குகளிடத்தில் நீ சொன்னாய், ஆதமைப் படைக்கப் போறேனென்று, அப்போ தவர்களுக்கு, ஆதத்தின் குணத்தையும், மக்களுடைய குணத்தையும், அதில் நல்லவையும், இடறையும், தொகுத்துக் காட்டினாய், அப்போ தந்த மலக்குகள் சொன்னார்கள்- நாயனே அந்த பூமியில் ஒருவருக் கொருவர் (பசாதுகள்) செய்து இரத்தங்களை யோட்டி விப்பார்களை யவ்வித மானவர்களையா, யாக்கிவிக்கப் போறாய், நாங்கள் யாதொரு பாவஞ்செய்யாமல் ஒரே (தசுபீஹாக) வுன்னைத் (தசுபீகு செய்து புகழ்ந்துகொண்டிருப்போமென் றுன்னிடத்திற்றானே போலியான பேச்சால் எங்கள் தகப்பனார் ஆதமைப் படைக்கப் பிரியப்படா திருந்த போது எங்களுக்கு விரோதியாச்சுதே, ஆனதால் விரோதிகளுடைய சாட்சிகளை யொப்புக்கொள்ளப் படாதென் றுன்னுடைய நபி சொல்லி யிருக்கிறார்களென்றார்கள்.

பின்பு, அல்லாகுத் தஆலா சொன்னான், உம்முடைய வுறுப்புகள் சாட்சி சொல்லுமென்று, அப்போது இமாம் றலியல்லாகு அன்கு சொன்னார்கள். நாயனே யுன்னுடைய வேதத்திற் சொல்லி யிருக்கிறாய், அதுவோ வுண்மையானது, அதாவது (கியாமத்தில்) நாம் அவர்களின் வாய்களின் பேரில் முத்திரை போடுவோம் அப்போது, நம்முடன் அவர்களின் கைகளும், கால்களும், அவர்கள் செய்த காரியங்கொண்டு சாட்சி சொல்லுமென்று சொல்லியிருக்கிறாய் ஆனால் துன்யாவில் நாயனே யிந்த வுறுப்புகளெல்லாம் பேசாது, இப்போது துன்னுடைய வம்பிக்குதலால் அவைகள் பேசுகிறது, காரியத்தில் அவைகள் தன் சுயபுத்தி யிழந்து வம்பிக்கப்



பட்டதாக வாகிவிட்டது. ஆனதால், வம்பிக்கப்பட்டுத் தெரிவுதவிழந்தவர்களுடைய சாட்சியை யொப்புக்கொள்ளப்படாதென் றுன்னுடைய நபியாகிய வெங்கள் நாயகம் சல்லல்லாஹு அலைஹிவஸல்லம் திருவுளமாயிருக்கிறார்களென்றார்கள்.

பின்பு, அல்லாஹுத் தஆலா சொன்னான். நானுங்கள்பேரிற் சாட்சியா யிருக்குமென்று, அப்போது. இமாம் சொன்னார்கள், நாயனே நீதானே நீதவானும், நீதானே சாட்சியுமோ வென்று, உடனே யிந்தச் சொல்லைச் சகலரும் கேட்கும்படியாயும், இவர்களின் (இல்முடைய) பாரதூரத்தை யறியும்படியாயும், இவர்கள் நாலு (மதுகபு) களாக்கிக் கொண்டது ஹக்கேயல்லாது வேறில்லையென்பதை மற்றும் (நபிமார்கள், மலக்குகள்) சகலரும் அறியும்படியாய்ச் செய்து அல்லா சுபுஹானஹு வத்தஆலா சொல்லுகிறான்.

என்னுடைய அடியார்களாகிய நாலுபேர்களே யென்னுடைய ஹபீபு முஹம்மது சல்லல்லாஹு அலைகிவசல்லமுடைய (சரீஅத்தை) நடத்தி (தீனை) ஹயாத்தாக்கி யென்னுடைய காரியத்தில் உங்களைச் சோதிக்கப் பட்டதுக் கெல்லாம் பொறுமையா யிருந்தவர்களே, யுங்களுடைய பிழைகளையும் உங்களைத் துயர்ந்தவர்களுடைய பிழைகளையும் பொறுத்தேன் நீங்களும் உங்களைத் துயர்ந்தவர்களும், என்னுடைய சொர்க்கத்திற் புகுந்துகொள்ளுங்களென் றுத்தரவு பண்ணினான் என்றிம்மாத்திரம் சமாசாரமும் கண்டு நான் விழித்து விட்டேனென்று சொன்னார்கள். இதைப் பேசிவருகிறார் இந்த மனும் கண்டவர் விழித்தவுடன் இமாம் அஹ்மதுபுனு ஹன்பல் றலியல்லாகு அன்குவுடைய (மகபறுவி) லிருந்து (ஸாஇரீன்) களுக்கு (கிதுமத்து) முதலானதுகள் செய்துகொண்டிருந்து வபாத்தாகி யவ்விடத்திலேயே அடக்கப்பட்டிருக்கிறதென்று. றலியல்லாஹு அன்ஹும்-வறலு அன்ஹு) ஆகையால் அல்லாஹுத் தஆலா அவர்கள் நாலுபேரையும், அவர்கள் அசுஹாபிமார்களையும் தொ

ட்டும், பொருந்திக் கொள்வானாகவும், அவர்களும், அவனைத் தொட்டும் பொருந்திக் கொள்வார்களாகவும், ஆமீன் ஆமீன் யாறப்பல் ஆலமீன்.

# ஹன்பலிய்யி இமாமுடைய,

பிரபந்த முற்றிற்று.

ஆகையால் அல்லாகுத்தஆலா நம்மனைவர்களையும் அந்த இமாம்களைத் துயர்ந்து நடந்து எந்நேரமும் சாலிஹான அமல்களைச் செய்வதின்பேரில் ஆசை யுடையவர்களாயிருந் துள்ளச்சத்துடன் அமல் செய்து ஈடேற்றம் பெற்ற சித்தீகீன்களில் நின்று மாக்குவானாகவும் - ஆமீன்.

## மதுகபுகளைத் துயர்வதின் விபந்தனை.

அறிந்துகொள்.

இந்தக் கித்தாபில், நாலு இமாம்களுடைய கீர்த்தியும் சிறப்பும் அறியப்பட்டிருப்பதில் நாலு பேர்களுஞ் சரிதானென்றெண்ணுவதிலே தன்னுடைய இமாமுடைய சொல்லைவிட்டும், ஹுக்கும்களிற் கடக்காதிருப்பது வாஜிபாயிருக்கும். சிலமஸ் அலாக்களில் முட்டுப் பாட்டுக்காக வேண்டித், தன் மதுகபைத் தவிர வுள்ள மற்ற மூன்று மதுகபில் எதையாவது துயரலாம், இந்த நாலு மதுகபைத் தவிரவுள்ள மற்ற சுபியான் மதுகபு - அவ்ஸாஈ மதுகபு, தாவூது மதுகபு - அத்தா மதுகபு - இப்பேர்ப்பட்ட மதுகபுகளைத் துயரக்கூடாது, அப்படித் துயரக் கூடாதென்கிற ஹுக்கும்களை எல்லா ஒவ்வொரு மதுகபிலுள்ள உலமாக்களும் சொல்லியிருக்கிறார்கள். ஷாபிஇய்யி மதுகபில்-இமாமுல் ஹறமைன் அபுல் மஆலி றஹிமகுல்லா, புறுஹான் என்கிற கித்தாபிலும், அஸ்னவீ றஹிமகுல்லா மின்ஹாஜுடைய ஷறஹிலும், மற்றும் உலமாக்களும் சொல்லுகிறார்கள், மேற்கூறிய மதுகபுகளைத் துயரக்கூடாது. ஏனென்றால், ஹனபீ-மாலிக்கீ-ஷாபிஈ-ஹன்பலீ, இந்த நாலு மதுகபிற் சகலதும் நன்றாந் தொத்துமையாய்ச் சரியென்றொப்பு கொண்டிருப்பதாலும், மற்ற மதுகபில் ஒத்துமை நடக்காதிருப்பதாலும், மென்று.

ஒரு மதுகபிலிருக்கிறவன் இன்னொரு மதுகபிலே திரும்புவதற்குச் சில (ஷறுத்துகள்) உண்டும். அதாவது, தன்னுடைய மதுகபில் ஓர் (மஸ்அலா) ஆகுமென்பதற்கு இடமில்லாததாய், இலேசை நாடாத்ததாய், முட்டுப்பாடுள்ளதாயிருக்கவேண்டும். அந்த முட்டுப்பாடு துன்யாவின் கருமத்துக்காவது, அல்லது, தீனின் கருமத்துக்காவது சரி, தீனின் கருமமாவது, ஹனபிமதுகபிலுள்ளவோர் மனுடன் தன் மதுகபிலுள்ள பறுளுகள், ஷறுத்துகள் விவரமாய்த் தெரியவுமில்லை, அதைக் கேட்டுப் படித்துக்கொள்ளத் தகுந்த ஆலிம்கள், அல்லது, படித்தவர்களுமில்லை, அந்நேரம் தன்பேரில் விதிக்கப்பட்ட அமல் நடத்துவதற்காய் ஷாபிஈ-மாலிக்கு ஹன்பலீ- யிந்த மூன்று மதுகபிலொரு மதுகபிற் படித்துக்கொள்ளத் தீபரமா யேலுமென்றிருந்தால், அந்த மதுகபிலே திரும்புவது போலும், ஒரு காபிர் கையில், அல்லது குப்பை கூழங்களில் குறுஆன் எழுதப்பட்ட கடுதாசிபோலொத்ததைக் கண்டால் உடனே தன்னிடம் உழுவில்லாதிருந்தாலும், ஹனபீ மதுகபைத் துயர்ந்து கொண்டேனென்று நாடித் திரும்பிக்கொண்டு அதை எடுத்துக்

களைத் தொடாமல் எடுக்கிறது ஆகும் - தன் மதுகபில் இன்னொரு மதுகபிலே திரும்புகிறதை நாடிக் கொள்ளாமற் றேடுவது ஆகுமென் றிருந்தாலும், அப்படித் திரும்புவதுதான் ஏற்றமா யிருக்கும். இந்த நாலு மதுகபிலெல்லாம் சரிதானென் றெண்ணிச் சகலத்தையும் எடுத்து நடப்பது ஹறாம், ஆனதால், நிர்ணயங்கொள்வது விதியாகும், தன்னுடைய மதுகபு நேரா யிருக்கும். கத்தாவுக்கும் இடமாகும், மற்ற மதுகபு கத்தாவுக்கும், நேருக்கும் இடமாகுமென்று நிர்ணயஞ் செய்யச்சொல்லி யிருக்கிறதேயென்று யோசிப்பதில் மற்ற மதுகபையும் தன்னுடைய மதுகபுபோ லெண்ணினாற்றான் ஒரு கட்டுப் பாட்டி லில்லாதவனாகி விடுவான் (நஊதுபில் லாகி மின்கா)

ஆகையால், அல்லாகுத் தஆலா இந்த நாலு மதுகபையும், தனித்தனியாய் ஒன்றோடொன்று கலந்து கொள்ளாமல் நடந்து வரும்படி அந்தந்த மதுகபி லுள்ளவர்களுக்கு உதவி கொடுப்பானாகவும் (இல்லம்) அறி. இந்த நாலில் நின்றும் ஒவ்வொரு மதுகபைத் துயர்ந்து நடந்தவர்கள், சகலரும் நேர்வழி யுடையவர்கள், ஒரு மதுக்கபுக்காரரை மற்ற மதுகபுக்காரர் பழித்துப் பேசுவது (ஜாயிஸல்ல) என்கிலும், இமாம்களை யெவ்வளவேனும் பழித்துப் பேசுவானேயாகில் அவன் பேரில் கெட்ட முத்திரையைப் போடப்படும் (நஊது பில்லாகி மின்கா)

12087

(காத்திமா.)

அல்லாகுத் தஆலா நம் மனைவர்களின் பிழைகளைப் பொறுத்து, நமக்கு றஹ்மத்துச் செய்து, தீனுல் இஸ்லாத்திலே நம்மை ஹயாத்தாக்கிமவுத்தாக்கும்போது, ஈமானிலே மவுத்தாக்கி நமது பிழைகளடங்கலையும் பொறுத்துச் சொர்க்கத்தில் நம்மனைவர்களையும் புகுத்திவைத்து அவன் (லிக்காவைத்) தந்தருள்வானாகவும், வசல்லல்லாகு வசல்லம அலா கைரி கலக்கி-கி, செய்யிதினா முகம்மதின் வஆலிகி வசஹ்பிகி, வத்துப்பாஇகி, வதுப்பஇ, துப்பாஇகி அஜ்மஈன், வல்ஹம்து லில்லாகி றப்பில் ஆலமீன்.

நான்கு இமாம்களின் பிரபந்தம்

முற்றிற்று.